ESTIONS & ANSWERS

சீவகசிந்தாமணி

Oriental Title Examination 1976 & 77
Madras University

By
Pulavar PAPPAMMAL VAITHIYALINGAM
&
Pulavar Nellai A. GANAPATHI

(22)
1) சீவகசிந்தாமணி
(குணமாலையார்
இலம்பகம்)
2) கம்பராமாயணம் (பாலகாண்டம்)
3) சிலப்பதிகாரம் (புகார்க்காண்டம்)
4) தேம்பாவணி (நாட்டுப்படலம்)
5) திருக்குறள் (காமத்துப்பால்)

Jobar Gabriel (alias)

புலவர். புதுவைத் தமிழழகன்

எம். ஏ., பி. லிட்., டி. டெக்., (FR)

Vidwan/Pulavar. TAMILALAGAN.

M.A., B.Litt., D.Tech.(Fr)

POET & PLAY-WRIGHT & DYEING CHEMIST

8, CHINNAVAIKAL ST., PONDICHERRY-1.

# QUESTIONS & ANSWERS

FOR

## Pulavar — Final

Prescribed Text-Books in Poetry II - Part I

OF

Oriental Title Examination 1976 & 77

Madras University


By

Pulavar PAPPAMMAL VAITHIYALINGAM,

&

Pulavar Nellai A. GANAPATHI.



**RAJAM & CO.,**

4, Sivaraman Street, Mandaveli,

Raja Annamalaipuram, P. O., Madras-28. (600028)

Phone : 76158


Rights Reserved]

[Price : 6-00

# முன்னுரை

சென்னைப் பல்கலைக் கழகத்தார் தமிழ்ப் புலவர் இறுதிநிலைத் தேர்வுக்கு வெளியிட்டுள்ள செய்யுள் II பாடப் பகுதிகளுக்காக இப்புத்தகம் முதல் பாகமாக (I Part) வெளியிடப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தின் கண் ஷை பாடப்பகுதிகளில் சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், சிலப்பதிகாரம், தேம்பாவணி, திருக்குறள் பொருட்பால், காமத்துப்பால் இவைகள் அடங்கியுள்ளன.

இப்புத்தகத்தில் கண்டுள்ள வினாக்கள் ஆராய்ந்து, தேர்ந்தெடுக்கப்பட்டு எமது சொந்த நடையில் விளக்கப் பட்டுள்ளன. மிக நல்ல முறையில் வெளியிடப்பட்டுள்ள இப்புத்தகம் ஷை தேர்வுக்குச் செல்லும் மாணவர்கட்கு மிகவும் பயன்படும் என்பது எமது எண்ணம்.

ஷை பாடப் பகுதியிலுள்ள பாக்கி பாடங்களுக்குரிய வினாவிடைகள் இரண்டாவது பாகமாக (Part II) வெளி வரும்.

## பொருளடக்கம்


| பாட விஷயம் | பக்க எண் |
|---|---|
| சீவக சிந்தாமணி | |
| கனகமாலையார் இலம்பகம் | 1 |
| கம்பராமாயணம் | |
| பால காண்டம் 5 படலங்கள் | 49 |
| சிலப்பதிகாரம் புகார்க்கண்டம் | 97 |
| தேம்பாவணி—நாட்டுப் படலம் | 161 |
| பல்கலைக் கழக வினாக்கள் | 181 |
| திருக்குறள் காமத்துப்பால் | 1—60 |
| பல்கலைக் கழக வினாக்கள் | 61—64 |
| ஷை — பொருட்பால் | — |

# சீவகசிந்தாமணி

## கனகமாலையார் இலம்பகம்

### By பா. வை.

1. சீவகசிந்தாமணி பற்றிச் சிறு குறிப்பு வரைக.

தமிழ் மொழிக்கு அணியாகத் திகழும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று சீவகசிந்தாமணி. ஏனையவை சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பனவாம். சிந்தையில் நினைத்தவற்றைத் தருவது சிந்தாமணி. புலவர்கட்கு வேண்டும் கல்விப் பொருள்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கொண்டிருப்பதால் சிந்தாமணி என்ற பெயர் இதற்குப் பொருந்தும் என்பர். இந்நூலின் தலைவன் சீவகன். அவன் பிறந்தது முதல் வீடு பெற்றதுவரையில் உள்ள கதையைக் கூறுகிறது இந்நூல். அவன் எட்டு மகளிரை மணந்து கொண்டவன். மணம் பற்றிய செய்தியே நூலெங்கும் இருப்பதால் இதை மண நூல் என்றும் சான்றோர் கூறுவர்.

இதன் ஆசிரியர் திருத்தக்க தேவர். இவர் திருத்தகு முனிவர், திருத்தகு மா முனிவர் என்னும் பெயர்களாலும் வழங்கப்படுவர். இவர் சோழர் குலத்தைச் சார்ந்தவர். இவர் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் ஏழாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரு பகுதியாயிருக்கலாம் என்பர். இவர் சமண சமயத்தைச் சேர்ந்த துறவியாவார்.

சீவகசிந்தாமணியின் உட்பிரிவுகளுக்கு இலம்பகம் என்று பெயர். இதில் பதின்மூன்று இலம்பகங்கள் உள்ளன. அவற்றுள் ஏழாவதாகிய கனகமாலையார் இலம்பகம் நமக்குப் பாடமாகவுள்ளது.

2. கனகமாலையார் இலம்பகம் பற்றிய பாடச் சுருக்கத்தை வரைக.

பாடச் சுருக்கம் : சீவகன் மத்திமதேயத்தி[illegible] ஏமமாபுரம் என்னும் நகரத்தின் பக்க[illegible]

பொய்கையின் கரையிலமர்ந்திருந்தான். அந்நகரத்து வேந்தன் மகன் விசயன் அங்குவந்து சீவகனைக் கண்டான். பொய்கையைச் சார்ந்த பொழிலின் கணுள்ள ஒரு தேமாங்கனியை வீழ்த்தும் பொருட்டுப் பன்முறையும் கணைகளை ஏவினன் விசயன்; அது வீழ்ந்திலது. அது கண்ட சீவகன் அவன் வியப்படையுமாறு ஒரே கணையால் வீழ்த்தித் தன் வில் வண்மையைக் காட்டினன். விசயன் தன் தந்தையிடம் சீவகனை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தான். அவ்வசரன் தன் மக்களாகிய விசயன் முதலிய ஐவர்க்கும் சீவகனை ஆசிரியனாக்கினன். தடமித்தன் என்ற அவ்வரசன் தன் மகளாகிய கனகமாலையைச் சீவகனுக்குத் திருமணம் செய்வித்தான். சீவகன் ஏமமாபுரத்தில் இனிது தங்கியிருந்தான்.

சீவகனுடைய தோழர்கள் அவனிருக்கும் இடத்திற்குச் சென்றனர். வழியில் ஒரு தவப் பள்ளியில் சீவகனின் தாயாகிய விசயை நோன்பு நோற்றுக் கொண்டிருந்தாள். இவர்கள் அங்குச் சென்று அவளைக் கண்டு அவள்தான் சீவகனின் தாய் என்றும், சீவகன் ஓர் அரசன் மகன் என்றும் தெரிந்து கொண்டனர். சீவகனை அவள்பால் அழைத்து வருவதாக உறுதி கூறிச் சென்றனர். சென்றவர்கள் ஏமமாபுரத்தை அடைந்து சீவகனைக் காண்பதற்கு ஒரு சூழ்ச்சி செய்து அதன்படி அந்நகரத்து ஆனிரையைக் கவர்ந்து கொண்டனர். அரசன் சினந்து சீவகன் தலைமையில் ஒரு படையை அனுப்பி ஆனிரையை மீட்டு வரச் செய்தான். அது கண்ட பதுமுகன் நம் சூழ்ச்சி பலித்தது என்று மகிழ்ந்து, ஓர் அம்பில் 'நின்னடியேம் நின் திருவடியில் உறைதல் வேண்டிச் சச்சந்தன் மகனாகிய நின்னைக் காணவே வந்துள்ளோம்' என்று எழுதி அதனைச் சீவகன் அடிகளில் விழும்படி எய்தான். அது கண்டு செய்தியறிந்த சீவகன் அவர்களையழைத்து அளவளாவி மகிழ்ந்திருந்தான்.

சீவகன் தன் தோழர்களை அரசனிடம் அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தான், பின்னர்,

சீவகன் பதுமுகன் வாயிலாகத் தன் தாயின் நிலையைக் கேட்டுக் கவலையுற்றான். தன் தாயின்பால் உடனே செல்லத் துடித்தான். தடமித்தனிடம் விடைபெற்றுக் கனகமாலையை அங்கேயே இருக்குமாறு பணித்துத் தோழரோடும் மறவரோடும் விசயை இருந்த தவப் பள்ளி நோக்கிச் சென்றான்.

2 சீவகன் தான் செல்லும் வழியில் கண்ட குறிஞ்சி முல்லை ஆகிய நிலங்களின் வளத்தைத் தொகுத்துரைக்க.

சீவகன் கேமசரி என்பவளை மணந்து கொண்டு சிறிது காலம் வாழ்ந்தபின் அங்கிருந்து புறப்பட்டான். பரத்தையின் மேல் கொண்ட அன்பினாலே மனைவியைத் துறந்து செல்பவர் போல மருத நிலத்தை விட்டுச் சீவகன் சுரத்தையடையப் புறப்பட்டான். வழியில் மயிலின் கழுத்துப் போலக் காயா மலர்கள் மலர்ந்திருந்தன. பேரரசர் முடி சூடும் நாளில் முடியணிந்து வணங்கும் சிற்றரசர் போல் கோங்க மலர்கள் விரிந்தன. அவ்வரசரின் பின்னே திரியும் சடையணிந்த மிலேச்சரைப் போல மரவங்கள் மலர்ந்தன. மலையாடுகள் கலக்கியதால் உடைந்து சிந்தும் தேன் வரையிலிந்து ஒழுகும் பொழுது தன்னைத் தாங்கிய சந்தன மரம் தளருமாறு தழுவிக் கொண்டு விழுந்தது. அத்தோற்றம், சங்கையும் சக்கரத்தையும் ஏந்தி உலகையளக்கும் திருமாலின் மார்பில் அசையும் பொன்னாரம் போன்று விளங்கியது.

வெண்முகில் தவழும் பெரிய மலையானது பாம்பு தோல் உரிப்பது போல் காணப் பெற்றது. அம்மலையில் வீழும் அருவிகள் முழவுபோல் முழங்கின. அதைக் கேட்ட மயில்கள் வண்டுகள் பாட வளைந்தாடிப் பிறர் ஆடும் நாடகங்களைத் தோல்வியுறச் செய்தன. கேடகமும் தேன் இருலும் போலத் தொங்கும் கதிர்களையுடையனவாகச் சோளமும் தினையும் விளங்கின. யானையின் விலா எலும்புபோல அவரைகள் குலை குலையாய்க் காய்த்திருந்தன. அருவி நீரால் ஐவன நெல் விளைந்

திருந்தது. கரும்பும், வரகும், எள்ளும், பயறும், உளுந்தும் பிறவும் அளவின்றி விளைந்திருந்தன.

சீவகன் செல்ல முற்பட்ட வழியில், யானைக் கொம்பாகிய உலக்கையாலே பாறையாகிய உரலில் ஐவன நெல்லை யிடித்த புதிய அவலைக் குவித்து, இனிய வாழைப் பழத்தையும், புதிய தினை மாவையும் மான் போன்ற கண்ணையுடைய பெண்கள் வைத்துக் கொண்டு வழிதொறும் பசியால் இளைத்தவரை நோக்கி அவர்கட்குக் கொடுக்கும் இயல்பைச் சீவன் கண்டான்.

சீவகன் அத்தகைய குறிஞ்சி நில எல்லையை நீங்க, முல்லைக் கொடி பெண் பேசிச் செல்ல, அதனைக் குரவம் உணர்ந்து, பொன் போன்ற இதழையுடைய புதிய மலர் மாலையையுடைய கொன்றையாகிய செல்வனுக்குத் தன் பாவையைக் கொடுக்கும் பொழுது, செங்காந்தள் அம்மணத்திற்கு அழகிய விளக்கை எடுப்ப, வண்டுகள் அழகிய குருந்தினின்றும் சிந்துகின்ற தேனாகிய நீரை வார்த்து ஆரவாரித்தன.

செம் பஞ்சையுருட்டி மரகத மணியாலாகிய பலகையிலே பரப்பினாற் போல இந்திர கோபப் பூச்சிகள் பயிர்களின்மேல் பரவின. தயிர் பூசப்பெற்ற மெல்லிய மயிரையுடைய கோவலர் ஊதும் குழலோசை பரவியது. ஆனிரைகள் அணிந்த மணிகள் ஒலித்தன. இவற்றையெல்லாம் கண்டவாறு சீவகன் முல்லை நிலத்தையும் கடந்தான்.

4. சீவகன் தங்கிய பொழிலின் அழகையும், வனகிரியின் அழகையும் வருணிக்க.

சீவகன் செல்லும் வழியில் வனகிரி என்ற மலை தோன்றியது. அங்கே வள்ளிக் கிழங்கை அகழ்ந்த குழியில் பொன்னும் வயிரமும் ஒளி வீசின. அம்மலை மராமரத்தின் வேலியினின்றும் தப்பித் துறக்கத்திற்குச் சென்று விடுமென எண்ணி வெள்ளிக் கம்பிகளை அதன் தலையிலே பூட்டி நிலத்திலே தறியைப் புடைத்

துக் கட்டினாற் போல நாற்றிசைகளிலும் அருவிகள் துள்ளி விழுந்தன.

அவ்வனகிரிக்கு முன்னர், அழகிய மலர்களை யுடைய பூம் பொழிலில் பளிங்கைக் கரைத்தாற் போன்ற நீர் நிறைந்து, குளிர்ந்த தாமரையும் கழுநீரும் நீலமும் ஆம்பலும் பிறவுமாகிய பல மலர்களும் நெருங்கி, பல இன வண்டுகள் பாண் சாதிபோல பாட அழகிய சுனை யொன்று இருந்தது.

அத்தகைய வனகிரியைச் சார்ந்த காட்டிலே செல்கின்ற சீவகன், மணமலர்க் காவின் அழகைக் கண்டு அதனையடைந்து ஓர் இடத்திலே அமர்ந்திருந்தான். அப்பொழுது பெண்ணொருத்தி விண்ணினின்றும் இறங்கி வந்த அரம்பையைப் போன்றவள் புழுகும் மலரும் குங்குமச் சாந்தும் மணக்கத் தானே வந்து சீவகன் அருகில் நின்றாள்.

5. பெண்ணொருத்தி வந்து சீவகனை மயக்க முயன்றதை விளக்குக.

சீவகன் தங்கியிருந்த இடத்தில் அவனருகே அரம்பை போன்ற பெண்ணொருத்தி வந்து நின்றாள். குங்குமம் அணிந்த தனங்களையுடைய அவள் தன்னுடைய பொன்னாலியன்ற கலாபம் வெளிப்பட ஒரு கையாலே நீண்ட துகிலின் ஓரத்தைத் தாங்கி, மற்றொரு கையாலே ஆங்கிருந்த ஒரு மலரைக் கிள்ளித் தெறித்துக் கடைக் கணித்துப் பார்த்துக் காற்று வாக்கிலே நின்று நறுமணப் புகையைத் தூது விட்டு ஒளி பொருந்திய முகத்தைச் சாய்த்து நின்றாள்.

சுரபுன்னையுடன் கூடிய மரவமரத்தின் நிழலிலே நாக மரத்தைச் சார்ந்து அம்மெல்லியலாள் நின்றாள். அவளுடைய அணிகலன்களின் ஒலியாலும் அமிழ்தனைய மணத்தாலும், சீவகன் தன் சிங்க நோக்கினாலே திரும்பிப் பார்த்துத் தன் கண்களாலே அவளைக் கண்டான். கண்டவன் காமக் குறிப்பின்றி நோக்குதலின் அவள் உள்ளம் நடுங்கினாள். அவனை மயக்க எண்ணித்

தன் காதில் தொங்கிய குண்டலம் ஒளி வீச அசைந்து மெல்லியஆடையாகிய போர்வை நெகிழ அதன்நடுவே முகில் நுழையும் மின்னல் போல மறைந்து நின்ருள். நிற்கவே, சீவகன் இவளுடன் வந்தாருளரோ என எட்டுத் திசைகளிலும் பார்த்து அவள் தனியே வந்திருப்பதை அறிந்து இவள் ஓர் இயக்கி போலும் என்று எண்ணினன்.

அவன் அவ்வாறு எண்ணியிருக்கப் பேதையாகிய அவள் தன் அழகிய மலர்க் கண்கள் அம்பாகவும், ஒளி பொருந்திய புருவம் வில்லாகவும் கொண்டு பெண்ணுருவத்தின் இயலுக்கு ஏற்றவாறு அழகு முற்றுப் பெற நின்ருள். அரும்பை அலர்த்திஞற் போன்ற கண்களேயும் நெறித்துவிட்ட கூந்தலேயும் உடைய அவள், பலமுறை கொட்டாவி விட்டுக் கொண்டு, மேலே போர்த்த துகிலுடன் உடுத்த ஆடையும் நெகிழ, முறுவலேத் தோற்றுவித்து, நெற்றியில் புருவத்தை ஏற்றுவித்து, அறிஞர்களின் உயிரையும் காமனுடைய ஐந்து அம்புகளேயும் எய்தாள். மாவடு போன்ற கண்ணேயுடையவள், கைவல்லான் எழுதிய ஓவியப் பாவை அழியுமளவும் ஒரு தன்மைத்தாய் நின்று அழிவதைப் போல, இவனேக் கூடுவதாகிய ஒரே கருத்துடன் நின்ருள். அவள் கருத்தை சீவகன் அறிந்து தன் உள்ளத்தே பல எண்ணினன்.

6. சீவகன் பெண்ணேக் கண்டு மயங்காமல் தன் நெஞ்சுக்குக் கூறியன யாவை?

'நெஞ்சே! மலர் மாலேயைச் சூடி, பச்சைக் கருப்பூரங் கலந்த முகவாசந் தின்று, மகளிரின் தோளேத் தழுவியுமைந்தர்கள் இறுதி நாட்களில் அம்மகளிரே தம் கண்களேக் கையால் மூடிக் கொள்ள முதுமையடைந்து செல்லுகின்ற தன்மையையுடையது இவ்வுலகம்'.

'நெஞ்சே! புழுகை மார்பிலே பூசி, அழகிய நெற்றியையுடையவரின் உயிர் தழைப்ப அவர்களுடைய தோளின் மேலே துயின்றவர்கள், முதுமைக்

காலத்தில் கடைமயிர் கழிந்த பறவை போல தோன்றி வருந்துதலாலே அம்மகளிர் தம் காவி மலர் போன்ற கண்களைப் புதைத்து அவ்விடத்தினின்றும் விலகிச் செல்வர்'.

'நெஞ்சே! இனிய அகிற்புகை நிறைந்த வெண்ணெய் போன்ற மென்மையான பள்ளியின்மேல் அன்பினால் உருகும் அம்மங்கையரின் தோள்மேலே துயின்றவர்கள், முதுமையாலே தம்முடைய புலன்கள் குன்றித் தளர்வடைந்ததனால், தம் காதல் மகளிர் தம் அன்பினலுருகிய கண்களைப் புதைத்துக் கொண்டு அவர்களைப் பாராமல் அங்கிருந்தும் நீங்குவர்.'

'உதிரத்தைத் தோய்த்து, நரம்பினாலே என்பினைக் கட்டி, தசையை அப்பி, வெளிப்புறம் மறையத் தோலைப் போர்த்து, அழகுற மயிராலே மூடி ஒன்பது வாயிலைச் செய்து ஊன் பழகிய குடிலை அறிவு மயங்கியவர்கள் மருளுமாறு மிகப் பெரிய தச்சன் இயற்றினான். ஆதலால் அவன் மிகவும் நல்லவன்.

உடம்பின் உண்மையை ஆராயத் தொடங்கினால், எனக்கு ஆதரவாய் இவ்வுடம்பு கிடைத்தது என்று எண்ணும்படி அகக் கண்ணையும் புறக் கண்ணையும் மறைத்து வைக்கின்றான் அவன். ஆராய்ச்சியால் மிக்கோர் என்று எண்ணுமலும், பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர் என்று எண்ணுமலும் யாவருடைய மனத்தையும் தளரும்படி வெட்டும் தன்மையையுடையவன் அவன். அகையால் படைக்கும் தொழிலையுடைய தச்சன் நல்லவனே யாவான். இவ்வாறு சீவகன் அப் பெண்ணைக் கண்டபொழுது தனக்குள் எண்ணினான்.

**7. சீவகன் முன்பு தோன்றிய பெண் அவன் காதிற் படுமாறு என்ன கூறினாள்?**

*சீவகன் தனக்கு முன்னால் தோன்றிய பெண்ணைக் கண்டு மயங்காமல் தன் மனத்தைத் தேற்றியிருந்தான். அப்பொழுது அவள் என்னுடைய வரவைக்*

கூறிலன்றி இவன் சிறிதும் இரங்கி அருளமாட்டான் என்று எண்ணி அவன் காதில் கேட்குமாறு கூறத் தொடங்கினாள்.

'வானத்தில் என் தோழிகளிடையே நான் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது, முகில் கூட்டங்களிடையே செல்லும் ஒரு விஞ்சையன், மயில் கூட்டம் சிதைந்து ஓட ஆங்குள்ள ஓர் இளமயிலை எடுத்துக் கொண்ட இளஞாயிறு போல என்னைக் கொண்டு சென்றான். கற்பிற் சிறந்த அவன் மனைவி கண்டு என்னை விடுத்தாள். கொடுமை பொருந்திய இக் காட்டிலே வீழ்ந்தேன்; என் பெயர் அநங்கமா வீணை என்பதாகும். மூங்கில் போன்ற தோளையுடைய பெண்களின் சிறந்த துணையாகிய கேள்வனே! நின்னைக் காணும்வரை யான் தாயை இழந்த குழவிபோல இறந்து படுதற்குரிய துயரத்தை அடைந்தேன். நின்னைப் பார்த்தவுடன் துறக்கம் பெற்றவள் போல் ஆயினேன். இனி என்னை ஆதரித்து அருளாவிடில் நெருப்பிலே அமிர்தத்தைப் பெய்தாற்போல என் உயிரைக் காமத் தீயிலே பெய்து கெடுப்பேன்' என்று கூறினாள்.

8. **அப்பெண்ணுக்குச் (அநங்கமா வீணைக்கு) சீவகன் கூறிய அறிவுரை என்ன?**

சீவகன் அப்பெண்ணைப் பார்த்து, 'எனக்கு அழகிய எழுமரம் போன்ற தோள்களும், மலைபோலப் பரந்த மார்பும், தாமரை மலர் போன்ற கண்களும், ஞாயிறு போன்ற முகமும் உள்ளன என்று எண்ணித் தளர்ந்து அதனால் காமநோய் தோன்றி வருந்தும் பெண்ணே! நீ இதைக் கேள். மலரினும் புழுகிலும் முழுகி கமழ்ந்து முல்லை மலர் மாலை துயிலும் கூந்தலையுடையவளே! இவ்வுடம்பு வாதமும் பித்தமும் சிலேற்பனமும் பொருந்திய குற்றம் செய்யும் மலங்களும் குருதியும் ஊனும் எலும்பும் ஈரலும் மூளையும் குற்றம் புரியும் குடர்களும் இழிந்த தோலும் நரம்பும் வழும்புமாக இருக்கும். மேலும் விழுக்கும் வெள்ளையான நிணமும்

இவை ஒழிந்த நகமும் மயிரும் கண் உமிழும் பீளையும் பொல்லாத ஊனும் புழுவும் பயில்கின்ற இவ்வுடம்பின் ஊனைப் பிளந்தபோது எவர்தான் கண் விழித்துப் பார்ப்பார்? கரிக் குருவியின் கண்ணுக்குக் காக்கை அருமையான பொன்போல் தோன்றும் கொள்கை யாயிற்று இது.

உள்ளேயுள்ளவை யொழியப் புறத்தின் வடிவு நன்றெனக் கூறினையாயின், முன்பு கூறியவை நிறைந்ததொரு தோல் துருத்திக்கு புருவம் கண் மூக்கு இவற்றை நன்ருக எழுதி வைத்தால் அதை நன்றெனக் கருத முடியுமா? இல்லையே! ஆதலின் ஊன் திரளாகிய இதனைக் காப்பியம் செய்யும் கவிகள் மக்கட்குக் காமத் தீ எழ வேறுபடுத்திக் கூறினர்' என்று அறிவுரை கூறினன்.

9 பவதத்தன் புலம்பிக் கூறிய கூற்றுக்கள் யாவை?

*சீவகன் அநங்கமா வீணைக்கு அறிவுரை சொல்லிக்* கொண்டிருந்த பொழுது பவதத்தன் என்பவன் அங்கு வந்தான். அவன் தன் காதலியைப் பிரிந்த வருத்தத்தினல் புலம்பினன்.

'அன்புறும் மாமனுடைய மகளே! தாமரையிலுள்ள திருமகளைப் போன்றவளே! பூங்கொம்பு போல்வாய்! நின் கரிய கூந்தலின் மேல் வண்டு தங்கினும் துன்பமுற்று இடை ஒடியுமே யென்று நின்னைப் புகழ்பவனுகிய யான், கடலை போல வருந்தி வருந்திக் கெடும்படி நீ மறைந்து நீங்குதல் நன்ருகுமா? இசைபோன்ற இனிய மொழியையுடையவளே! சாயாத தனங்களையுடைய பாவையே! கொடியே! பருகும் தேனே! அமிழ்தே! என் இனிய உயிரே! நீ எங்குள்ளாயோ? அழகிய திங்களும் போற்றும் முகத்திலுள்ளவை வாளோ? கருங் கயல்களோ? உயிரைப் பருகும் கூற்றுவனே? ஒளிதரும் வேலோ? மலரோ? யான் அறியேன். கலவ மயில் போன்றவளே! இலவ மலர் போன்ற அழகிய சிற்றடிகள் நடுங்க அசைந்து பொன்

வேலை செய்பவன் அமைத்த பொற் சிலம்பு ஒலிக்க அழகிய தரைமிசை நீஉலவும் பொழுதும் அந்நிலத்தில் அன்றி என் உயிரே! என் உள்ள மலர்மேல் மிதித்துச் செல்வாய். நின்னிடத்து உள்ள அன்பினின்றும் என்னால் நீங்க முடியவில்லை.

ஏவல் மகளிரோடு பந்தாடும் நின்னைக் கண்டு மயங்கிக் காதல் நோயை யுடையேனாய் நான் அயர்ந்து கிடக்கப் பிறர் வாயிலாக அதனை நீ கேட்டவுடன் துணிவு கொள்க! யாம் உடன் செல்வேம்! என்று கூறி வரவிட்டாய். மேகலையை யுடையாய்! மறுமொழி கூறாமல் மறைந்து போகின்றாயோ!

இவ்வாறு புலம்பிய பவதத்தன் அநங்கமா வீணையைக் கண்டவுடன் அவளை ஓர் இயக்கி என எண்ணிப் பேசினான் : இயக்கியே! நினக்கு அவள் ஒப்பாவாள், என்று கருதி என் காதலியை அவள் நலத்தைக் கெடுத்தற்கு அவள் அறிவைக் கலக்கிக் கொண்டு போய் எங்கோ மறைய வைத்திருக்கிறாய். நீ அவளை என்னிடம் திருப்பித் தருவாயாக. தந்தால் நீ விரும்பிய யாவற்றையும் நல்குவேன்' என்று வணங்கி அழகிய களிறு தன் பிடியை இழந்து மயங்கினாற் போல மயங்கினான்.

மயங்கி, 'வளப்பம் மிகுந்த மத்திம நாட்டிலே பதுமபுரம் என்னும் பேரூரிலே என் தந்தை கீர்த்தி தத்தனுக்கும், அவன் காதல் மனைவியான என் அன்னை சினதத்தைக்கும், என் மாமன் சீமானுக்கும், என் மாமி சித்திரமாலைக்கும், மற்றைய உறவினர்க்கும் யான் துன்பஞ் செய்தேன். யான் அங்கே சென்றால் என்ன சொல்வேன்? யாது செய்வேன்? சாயாத தனங்களையுடைய பாவையே! நீ குடிநீர் விழைந்து இளைத்தேன் என்று கூறியதாலே காட்டிலே பொய்கை யிருக்குமிடம் தேடிக் கண்டுபிடித்து அடைந்து அழகிய தாமரை இலையைக் கோலி அதனுள் நீரை ஏந்தி வந்தேன்; நின்னைக் கண்டிலேன்' என்று கூறிப் பேதையாகிய அவன் அழுது அழுது மனம் வெதும்பி உருகி நைந்தான்.

**10 பவத்தனுக்கும் அநங்கமா வீணைக்கும் சீவகன் கூறிய அறிவுறையையும் அவர்களைக் கூட்டி வைத்த முறையையும் கூறுக.**

தன் காதலியைக் காணமல் வருந்தும் பவதத்தனின் மொழியையும், அநங்கமா வீணையின் காமத்தையும் சீவகன் பார்த்தும் கேட்டும் நகைத்து நீ இங்கேயே இரு என்று அவளுக்குப் பொருந்துமாறு கூறிச் சீவகன் பவதத்தனை நெருங்கினன். நெருங்கி, 'நண்பரே! நீர் என்ன வருத்தமடைந்தீர்? நும்வருத்தத்திற்குக் காரணம் என்ன? நும் பெயர் என்ன?' என்று கேட்ட சீவகனுக்கு அவன், 'அழகிய தோளை யுடைய நம்பியே! ஒரு பொற் கொடி போன்றவளை என் வினையினல் இங்குப் போக்கடித்தேன். யான் பல நூலைக் கேட்ட கேள்வியினை யுடையேன்' என்முன்.

என்றவனுக்குச் சீவகன், 'இடுக்கைக்கு உதவுமாறு கையில் வைத்திருக்கும் பொருளைக் கொடுத்தாயினும் கற்க. அவ்வாறு கற்ற பிறகு அது அகக் கண்ணும் ஆகும். உண்மையான பொருளைத் தரும். உள்ளம் மெலிந்தால் உறுதுணையும் ஆகும். மற்றவை பொய் யான பொருள்களாகும். கல்விப் பொருளே செல்வப் பொருளுமாம்; புகழுமாகும். காதலியையும் உண்டாக்கும் இத்தகைய கல்விப் பொருளை அடைந்திருக்கும் நீர் வருவது ஏன்?' என்றுன்.

மேலும் சீவகன், 'அன்பை நூலாகக் கொண்டு இன் சொல்லாகிய பூ வைத்துக் கட்டிக் காதலியாகிய இன்ப முண்டாக்கும் சாந்திஞலே ஒப்பனை செய்து தகுதியான காம மாலையை நல்ல பகற் பொழுதிலும் அணிவித்து நீங்காமலிருந்தாலும் பெண்களுக்கு மற்றோரிடத்திலே அவர் பின்னரே மனம் போகும். மான் அனையார்க்கு அப் பண்பு அடிப்படையாக உள்ளது.

பெண்களின் இயல்பைக் கேள். மன வலியுடைய அல்ல; குடிப் பிறப்புக் கெடுமென்று பாரா. உள்ளத் திலே நிறையை உடையன அல்ல. ஆயிரம் முகமாக எழும் மனத்தவாம். எண்ணிப் பத்துப் பொன்னை

அகங்கையிலே வைத்து விட்டால் இந்திரன் மகளே யாயினும் பொருள் பெற்ற அங்கேயே வெண்ணெய் மலை எரியினால் தாக்கப் பெற்றாற் போல உருகி அவர் பின்னே நிற்பாள். எனினும், கணவன் சாகிற் சாதலும் நோதலும் உடையராய், கணவன் நீங்கினால் மலரணிதலும் இன்றித் தானும் அழகும் தனித்துத் தங்கி, காமன் என்ற பெயரையும் கூறாதவராய்க் கணவனையே வணங்கி வாழும் மங்கையர் திருமகளைப் போன்றவர்கள். மேலும் தம் கணவனின் துன்பத்தைத் தீர்ப்பார்கள்' என்று கூறினான்.

அது கேட்ட பவதத்தன் சீவகனை நோக்கி, 'ஐயனே! நின் தோழி அத்தகையவளே. அவள் என்னைப் பார்த்த விழியினால் மற்றவரைப் பாராத பெருமை மிக்க இளமங்கை. அவளைப் பிரிந்து யான் வாழும் வகை எங்ஙனம்?' என்று வருந்தினான். சீவகன் அதைக் கேட்டு 'அத்தகையவளோ!' என்று நகைத்தான். நகைத்து, 'நீ வருந்த வேண்டா. யான் கூறும் இம் மந்திரத்தைக் கூறி ஒலி வில்லிலிருந்து அம்பு செல்லும் தூரம் சென்றால் அவ்விடத்தே அவளை இயக்கி கொண்டு வந்து தருவாள். அப்பொழுது நீ உன் காதலியைப் பெறுவாய்' என்று கூறிச் சீவகன் அங்கிருந்து சென்றான். பவதத்தன் அவ்வாறே மந்திரத்தைக் கூறி அவளைக் கண்டு அவள் அடியைத் தழுவி வீழ்ந்து அழுதான். அவன் மந்திரத்தைக் கூறுவதை அவளும் கேட்டாள். கேட்டதனால் பவதத்தன் மேல் அன்புவலியுற்றதனால் சீவகன்பாற் கொண்ட ஆசையை விட்டாள். அவளே அநங்கமா வீணையாவாள்.

11. வனகிரியின் வளத்தையும் சீவகன் அங்கு ஏறிச் சென்று அருகதேவனை வணங்கியதையும் விளக்குக.

முகிலாகிய மெழுகினாற் செய்த முகபடத்தையும், அருவித் திரளாகிய நெற்றிப் பட்டத்தையும், ஏறுவாருடைய காலைச் சூழ்ந்து கிடந்து உராயும் பொன்னாகிய மதத்தினையும் உடைய மலையாகிய யானையைக்

தொழுது, மூங்கில் வேராகிய புரோசைக் கயிற்றைப் பிடித்து அம் மூங்கில் கவையிலே அடி வைத்து ஏறினான். தம் தீவினை கெடுமாறு வணங்க மங்கையர் அம் மலைக்கண் ஏறுவதால் அவரடியில் அணிந்த சிலம்புகள் உரைக்கப்பட்டு மின்னல் இருளின்மேல் கிடப்பதை ஒத்து, அம்மகளிரடி மிதித்தலால் செம்பஞ்சுக் குழம்பு நிறைந்தது ஒரு பக்கத்தில், சந்தனமும் மலர் மாலையும் நறிய சுண்ணப் பொடியும் அகிற் புகையும் அவியும் சுமந்து, உயர்ந்த பொன் விளக்கை எடுத்துக் கொண்டு மலைமேல் ஏறி வரும் மக்களின் ஆரவாரம் ஒரு பக்க மெல்லாம் நிறைந்தது. துறந்த அரசர் துறப்பதற்கு முன் அணிந்திருந்த தூய முடியும் தோள்வளையும் முத்து மாலையும் பூணும் குண்டலமும் ஆகிய இவற்றைக் கழற்றிப் போட்டதால் அவை ஒளி வீசிப் பின்னிக் கிடந்தன ஒரு பக்கத்தில். கைத்தளம் போன்ற தேனடை ஆண் முசுவின் கை உறுதலாலே சேரக் கிழிந்து தேன் விரைந்து பாய்ந்து, பச்சை மிளகை வாரிப் பழங்களைத் தழுவி, யானைகள் அஞ்சிப் பிளிறும்படி ஒரு பக்கம் அருவியாய் நின்று ஒழுகும். சந்தனக் கோட்டு இடையிலே ஞாயிற்றின் தேர் அகப்பட்த் தாவும் அத்தேரில் பூட்டப் பெற்ற குதிரைகள் தம் அடியை ஊன்றி அத் தேரை இழுத்துச் செல்லும்பொழுது குளம்பினாலே குடைந்த பொன்துகள் இருளாகத் திசைகள் எங்கும் நிறைந்தது.

இத்தகைய வளம் நிறைந்த மலையில் சீவகன் ஏறிச் சென்று நீலமலரும், மராமர மலரும், நாகமலரும், கோங்க மலரும், சண்பக மலரும், வேங்கை மலரும் ஆகிய மலர்களை எடுத்துச் சென்று அருக தேவனின் திருவடியில் இட்டு வாழ்த்துக்களைப் பாடி வாழ்த்தினான்.

'முனித் தன்மைக்கு மேலான ஒப்பில்லாத முதன்மை முதல்வனுடையதே என்பர். அவ்வாறு கூறுதலால் அவனை உலகம் தண்மலர் இட்டு நின்று வாழ்த்தாதிருத்தல் என்ன அறியாமை!'

'இந்திரனால் மலர் தூவி வணங்கி மதிக்கப்படுபவன் சிவந்த திருவடிகளையுடைய அருகன் என்பர். உலகத்தார் மலர் இல்லார் எனினும் வாழ்த்தாதிருப்பது அறியாமையே யன்றோ!'

'களிப்பூட்டும் அம்பேந்திய காமனை வென்ற அருள் பொருந்திய அறவாழியையுடைய தலைவன் இவனே என்பர். அத்தகைய பெருமானுடைய பண்புகளைப் போற்றுதலை நாம் பரப்பாதிருப்பது அறியாமையே அன்றோ?'

சீவகன் இவ்வாறு அருகன் அடியைப் போற்றி வணங்கிப் பின்னர் அழகிய அம்மலையிலிருந்து இறங்கி முகிடை மின்போல விரைந்து நடந்து பெருங் காட்டு வழியே சென்றான்.

12. மத்திம நாட்டு வளத்தையும் சீவகன் அங்குச் சென்றதையும் விளக்குக.

ஒளிவிடும் வேல் தோற்றதனால் நீல மலருக்குப் போர் ஓலை செலுத்தும் கண்ணிணையும், கொடி போன்ற இடையினையும், மயிர்ச் சாந்து மணக்கும் கூந்தலையும் உடைய மகளிரைப் போல ஐம்புலன்களுக்கும் விருந்தளிக்கும் ஆலைக் கரும்புகளையுடைய மத்திம நாட்டை அடைந்தான். உழவர் சாடியிலுள்ள கள்ளைப் பருகிக் கரும்பைக் குறுகத் தறித்துக் கொண்டு வந்து கணு பிளக்கும்படி ஆட்டும் ஆலைகளின் ஒலியை முகில் ஒலி யென்று மயில்கள் கூவ, நீண்ட நெல் வயலின் கடைமயிலே நீரை அலைத்து ஆலையில் வடியும் கருப்பஞ் சாறு செல்லும் அழகினது அந்நாடு.

தாமரை மலரைத் தலையணையாகக் கொண்டு, மணங் கமழும் மலராகிய குவளையைக் காலணையாகச் சேர்த்து விருப்பூட்டும் பெடையைத் தழுவித் தோலடிப் பறவையான அன்னம் துயில்கின்ற தேனையுடைய மலர்த் தடங்களைத் தழுவித் திசையெங்கும் நீர் மல்கியது அந்நாடு. இளங் கமுகினுடைய காயை இளமையான மந்தி

கள் எடுத்து எறிதலால் அதற்குத் தோற்று மரக்கிளைகளிலுள்ள கனியை முசுவின் கலைகள் சிந்தும் இனிய பொழிலிலே பெரும்போரைவென்ற சீவகன் களிப்புடன் சென்றான்.

யானையை மறைக்கும் கதிர்களையுடைய செந்நெல் நிறைந்த கழனி சூழ்ந்த நாட்டிலே வேலேந்திய மன்னன் வாழும் தலைநகரமாகிய ஏமமாபுரத்தை இடி போல முரசம் முழங்கும் காலத்தில் சீவகன் விருப்பத்துடன் சென்று அடைந்தான்.

13. 'என்ன பேரவே துறைவளர் நாட்டொடு நகரம் சொல்லென'க் கேட்ட சீவகனுக்கு மணமகன் கூறிய விடை என்ன?

ஏமமாபுரத்தைச் சீவகன் அடைந்தபொழுது புற நகரிடத்தே ஒரு மணமகன் வந்தான். அவனைச் சீவகன் பார்த்துப் பலதுறைகளிலும் மேம்பட்டுள்ள இந்நாடும் நகரமும் என்ன பெயருடையன என்று வினவினான். அதற்கு அந்த மணமகன் தன் வாய்மணக்க, இந்நாடு மத்திமநாடு; இந்நாட்டிலே எத்திக்கிலும் உள்ள செல்வமும் தங்குதலால் வறியவர்க்குக் கொண்டு சென்றும் கொடுப்பவர் இருக்கும் இவ்வூர் ஏமமாபுரம் ஆகும்; ஐயனே! நீ இப்பக்கத்திற்குப் புதியை போலும் என்று உரைத்தான்.

அதற்குச் சீவகன் ஆம் யான் புதியவன் தான் என்றுரைக்க, அவன் இஃது உணவுக்குரிய காலம்; என்னுடனே நீ உரையாடினாய் ஆதலின் இவ்விடத்தே தங்குக என்றுரைத்தான். அதற்குச் சீவகன் யான் அழகிய நகரிலே புகுந்தபின் நின்னைப் பார்ப்பேன்; இப்போது செல்க என்று கூறினான்.

14. 'பொன்னகர்ப்புக்க பின்' அறிவல் போக'—இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

விடை எண் 13ல் காண்க.

15. 'வேட்கையூர் தர விம்முற வெய்திய மாட்சியுள் ளத்தை'யுடைய சீவகனுக்கு வேட்கையூர் தரக் காரணம் என்ன? (அல்லது) தந்தையைப் பிரிந்த பிரிவுக்கு எவ்வாறு வருந்தினன்?

ஏமமாபுரத்திற்குள் சென்ற சீவகன் மண்டபம் போலிருந்த ஒரு பளிக்கறையின் அருகில் ஒரு பொய்கை யின் கரையிலேயிருந்த மாமர நிழலில் அமர்ந்தான். அப்பொய்கையின் காட்சி அவனுக்கு வருத்தத்தை நல் கியது. பவளம்போல் சிவந்த வாயினையுடைய பெட்டை அன்னம் அறியாமை மிகுதலாலே குளிர்ந்த குளத்தின் நீரிலே காணப்பட்ட தன் நிழலை வேறொரு பெடையன் னம் என்று கருதி, தன் சேவலைப் பார்த்துக் கள்வ! நின் காதலியை நீரின் கீழே பார்த்தோம். இனி, முன்போல் தேற்றத்தேறேம். எம்மை அகப்படுத்தல் வேண்டா என்று ஊடியது. ஊடிச் சினந்து பார்த்துச் சேவலை விட்டு நீங்க, அதனை யறிந்த சேவல், என்ன ஐயுறுவது ஏன்? யான் நின்னையன்றி வேறொன்றறியேன். நான் மூக்கினாலே மூச்சுவிடுவதும் உன் ஏவலாலேயாம். ஆதலின் நீ ஊடாதே என்றுரைத்து சிறகினால் பல முறை தழுவி, வணங்கித் தாழ்ந்தது.

கலையுணர்ந்த பெண்களின் உள்ளத்தில் ஆசையி னாலே கனிவுற்ற ஊடலை நீக்கும் முறையறிந்த மைந்தர் கள் நீக்கி நெறியறிந்து கூடியது போல், மலரின்மேல் அமர்ந்த பெடையின் பிணக்கை அன்புடைய சேவல் தணித்துக் குலவிய புணர்ச்சியைச் சீவகன் பார்த்து மலை போன்று சலிப்பற்றவன் நெகிழ்ந்து சிந்திக்கத் தொடங்கினன்.

'யான் அவளுடைய ஊடலை நீக்க அவள் முகத்தை நோக்கினால், எதிர்நோக்கின் ஊடல் நீங்கும் என்று அஞ்சி, அவள் இறைஞ்சி நிற்பாள். பின்னர், யான் ஊடல் தீரப் பலவும் பேசினால், அவள் அவற்றைக் கேளாதவள்போல் வேறொரு மொழியை மெல்லக் கூறு வாள். புத்தணிகள் அணிந்த பொன்போன்ற தேமல் படர்ந்த இளங்கொங்கையையுடைய தத்தை என் முன் னிருப்பவள் போல என் முகத்திலே காட்சியளிக்கிறாள்.

'பெண்கள் அன்புற்றால் ஒரு பயன் இன்றியும் வருத்தம் உற்றார் போல நெட்டுயிர்ப்புக் கொள்வார்கள். அப்பிரிவினால் தோன்றிய மிகுந்த அன்பு என்னும் நெருப்பில் அழுந்தி இறந்து படுவாளோ? அம்பைப் போன்ற பெருங்கண்ணையுடையவளின் அழகு ஒவ்வொரு நாளும் கெட்டு உள்ளம் வெதும்பப் பூமலர் முதலியவற்றால் சமைத்த மெல்லிய அணையின் மேற் புரள்வாளோ?

'யான் வந்த பின்பு எனக்கு யாது நேர்ந்ததோ என்று உருகி வாடித் தன் இரு கண்களிலிருந்து வரும் நீர் கொங்கைகளிடையே வடிந்து வீழ நாரைகள் பொருந்திய குளமாக அழுவாளோ? வண்டு மொய்க்கும்கூந்தலையுடையாள், கூட்டத்திற்கு முன்னே கண்ட அன்று, தன் கண்கள் என்னும் கைகளாலே முகந்து கொண்டு பருகிய பார்வை ஒன்று உண்டு. அப்பார்வை என் உயிரை இப்போதும் உருக்குகின்றது.

'யாங்கள் இருதலைப் பறவைபோல் ஓருயிரையுடையோம் ஆதலின் காதலையுடைய தத்தையின் உயிர் உடலில் நீங்கின், என் உயிரும் நீங்கும். என்னுயிர் நீங்காமையின் அவளும் அழிந்திலள். அல்லாமலும், அவள் விஞ்சையிலும் வல்லவள் அல்லளோ?

'தேனைப் பருகிக் கொண்டு அதில் தங்கிய வண்டை ஒக்கும் தலைவர்க்குக் காதலால் வரும் துன்பம் பெருகக் கூடியதாய் இருந்தது என்று இகழ்ந்து அறிவுடையோர் கூறுமாறு என் நெஞ்சு எண்ணும். இங்ஙனம் எண்ணும்படி காதல் மிக்கவிடத்துக் கற்ற கல்வியும் கைகொடாதன்வாய் நீங்குதல் கண்ணுட்கிடந்த மையானது கண்ணுக்குப் பயன்படாதவாறு போலும்.

'மங்கையரிடமுள்ள காதலினாலும், பாவத் தொழிலாகிய அவரைப் புணரும் காமத்தாலும் வந்து சேர்ந்த தீவினையாகிய பறக்குந் தேரிலே போய் நாகத்திலே பதைக்கும்பொழுது அருகனையல்லாமல் அவ்விடத்திலே புகலாவார் இல்லையே. ஆதலின் ஈண்டு அவனே சரணாவான்.'

இவ்வாறு காமவேட்கை யூர்தலாலே வருத்தமுற்ற மாய்தலைக்கொண்ட உள்ளத்தைத் தடுத்து மலர் செறிந்த இனிய காட்சியையுடைய அப்பொய்கையின் அழகைக் கண்டு களித்தவாறு மீட்டும் அங்கேயே தங்கியிருந்தான் சீவகன்.

16. சீவகனுக்கு விசயனின் நட்பு எவ்வாறு கிடைத்தது? விசயன் சீவகனை எவ்வாறு பாராட்டினான்?

சீவகன் பொய்கைக் கரையில் இருந்த பொழுது, அவ்வூர் அரசனாகிய தடமித்தனுக்கும் அவன் மனைவி நளினைக்கும் தோன்றிய விசயன் என்பவன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் சீவகனைப் பார்த்து, 'இந் நாட்டில் இவ்வூரில் உள்ளவர்கள் இங்குவரமாட்டார்கள். நீ எந்த நாட்டில் எவ்வூரில் எப்பெயருடன் இருக்கிறாய்' என்று கேட்டான். அவ்வாறு கேட்ட விசயனைச் சீவகன் பார்த்துத் தன் நாடும் ஊரும் பெயரும் அல்லாத பெயர்களை உண்மைபோலக் கூறினான். அது கேட்ட விசயன் தனக்குள், 'இந்திரன் எனினும் இவனை ஒவ்வான். இவன் நம்மாற் கொள்ளப்படும் பயன் மிகுந்தவன்' என்று எண்ணி, 'எம் அரசனிடத்திலே இவன் உள்ளத்தைச் செலுத்துவேன்; அது கொண்டு இவன் நெஞ்சு செல்லும் வழியை ஆராய்வேன்' என்று எண்ணினான்.

எண்ணி விசயன் சீவகனைப் பார்த்து, 'பருத்த தோளையும் வெல்லும் புகழையும் உடையாய்! இங்ஙனம் நட்புக் கொண்டதனால் இந்நாடு நினது நாடு, இவ்வூர் நினது ஊர், எம் அரண்மனை நினது அரண்மனை, யாமெல்லாம் நினது உறவினர் என்று கூறினான். சீவகனும் அதை ஒப்புக் கொண்டு இனி இம் முகமனை யெல்லாம் மொழியற்க என்றான்.

பின்பு, அரசன் மகனாகிய விசயன் அச்சோலையிலுள்ள ஒரு மாங்கனியை உண்ண விரும்பி அம்பினாலே பலமுறை குறி தவறுமாறு எய்து மாங்கனி உண்ணும் நினைவை விடுத்து நின்றான். சீவகன் அவ்வில்லை அம்புடன் வாங்கி இனிய பெரிய மாங்கனியை விழுமாறு

எய்தான். சீவகன் விடுத்த அம்பும் அந்த மாங்கனியும் தான் அம்பை விடுத்த அவ்வில்லின் உயரத்தில் பூமிக் கண் அணுகியபொழுது அம்பை ஏவிய அங்கு நின்றே அவற்றைத் தன் பெரிய கையில் வாங்கிக் கொண் டான். அதுகண்ட விசயன் சீவகனை மார்புறத் தழுவிக் கொண்டான்.

சீவகன் வலிய வில்லை ஏந்திய வகையையும், அம்பு தொடுத்த வகையையும், கண்ணுற் குறி பார்த்து அம்பை அமைத்த படியையும், வலிய கணையை விட்டபடியையும், சென்ற அம்பு கனியின் காம்பை அறுத்துத் திரும்பிய படியையும் விசயன் நேரில் பார்த்து வியப்புற்றுச் சீவகனை நோக்கி 'நீ வில்லைப் படைத்த இறைவனே ஆவாய்' என்று பாராட்டினன். 'ஏழு மராமரங்களையும் வீழ்த்திய வலிய வில்லினனாகிய இராமனை வல்லவன் என்று கூறுவது வாய்மொழியால் அல்லது கண்ணால் கண்டது இல்லை. இன்று நேரில் கண்டேன். இவன் நம்மை விட்டு நீங்கிச் செல்லாவாறு இவனுக்கு உவப் பானவற்றைச் செய்வேன்' என்று நினைத்து அங் கிருந்து அரண்மனைக்குச் சீவகனை அழைத்துச் சென் ருன். அரசனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

17. 'மராமரம் ஏழும் எய்த வாங்குவில் தடக்கை வல்வில் இராமனை வல்லன் என்பது இசையலாற் கண்டதில்லை'—இடஞ்சுட்டி விளக்குக.

இடம்: -சீவகன் சோலையிலுள்ள மாமரத்திலிருந்த கனியை ஒரே அம்பால் வீழ்த்தியபொழுது அதைக் கண்டு வியந்த விசயன் தனக்குள் எண்ணியது.

பொருள்: ஏழு மரா மரங்களையும் எய்து வீழ்த்திய வளைந்த வில்லேந்திய பெருங் கையையுடைய வலிய வில்லினனாகிய இராமனை வல்லவன் என்று கூறுவது வாய் மொழியால் அல்லது கண்ணுற் கண்டது இல்லை.

விளக்கம்: சோலையிலுள்ள மாமரத்திலிருந்த கனியை விரும்பிய அரசகுமாரன் விசயன் பலமுறை அம்பெய்தும் அதை வீழ்த்த முடியாது சோர்ந்தான்.

சீவகன் அதை ஒரே அம்பால் வீழ்த்தினான். அவன் விற்பிடித்து, கணை தொடுத்து, இலக்கு வைத்து, கனியை வீழ்த்தியது, தரையில் விழு முன் கனியையும் அம்பையும் கையிற் பிடித்துக் கொண்டது முதலிய வற்றை நேரில் பார்த்த விசயன் வியந்து பாராட்டிய பொழுது இவ்வாறு எண்ணினான்.

18. *சீவகன் ஏமமாபுரத்து அரசன் மக்களுக்கு வில்லாசிரியன் ஆன வரலாற்றை விளக்குக.*

ஏமமாபுரத்து அரசன் மகன் விசயன் என்பவன் சீவகனது வில்லாற்றலை மாம்பழம் வீழ்த்தியதன் வாயிலாகக் கண்டு புகழ்ந்து அவனை அழைத்துச் சென்று வழிநடந்த சோர்வினை நீக்கி, அரசனுக்குச் சீவகன் இயல்பை உரைத்தான். அரசனும் வரவேற்றுச் சீவகனுக்கு மிகப் பெரிய முகமன் கூறிக் காளையே! யாம் நின்மேல் அன்புற்றேம் என்றான். முன்கைச் சந்தைச் சார்ந்து உத்தம இலக்கணமுடைய விரல்கள் ஐந்திற்கு, அருகே மூவிரல் நீளமாக, யானைத் தோலில் சுண்ணும்பு நூற்றை உரைத்தாற் போலவும் சிறு மீனைப் போலவும் வில் தழும்பு இருப்பதைப் பார்த்து இவனே வில்லுக்குத் தலைவன் என்றான்.

வில் வல்லவர்களில் பெரிய ஆசிரியனுக்குப் பின்னர் வெள்ளி மலையிலுள்ள வித்தியாதரர் நாட்டில் அல்லது நிலவுலகில் யாரும் இல்லை என்பாரின் வாய் அடங்க இவ்வேலினான் வந்தான் என்று தடமித்து மன்னன் புகழ்ந்து கூறினான்.

பின்னர் அரசன் சீவகனை நோக்கி, 'என் மகன் விசயன் விற் பயிற்சி அறியாதவன்; இவனை யன்றி வேறு நால்வர் இருக்கின்றனர்; அவர்களும் கல்வி மாட்சியுடன் வளர்ந்ததில்லை. இவர்களுக்குக் கல்வியை நீ அளிக்க வேண்டும், இது என் வேண்டுகோள்' என்றான். அதற்குச் சீவகன் ஒப்பினான். அன்று முதல் அவர்களும் அக்கலையைப் பயிலத் தொடங்கினர். கலை பயிலும் ஐவரும் சீவகனின் அடிகளில் செருப்பைப்

போலப் பொருந்தித் தம் அன்பு மிகுதலாலே நிழல் போல் நீங்காராய் அவன் நினைத்தவற்றை முடித்துத் தீப்போல அணுகாமலும் அகலாமலும் ஒழுகி வந்தனர்.

19. 'யானைத் தோலின் நூற்று உரை சிறுமீன் ஒத்த இலக்கணக் கிடக்கை' — இவ்வுவமையின் பொருளை விளக்குக.

தடமித்த மன்னன் சீவகனை வரவேற்று முகமனுரைத்த பொழுது அவன் கையில் தழும்பு இருத்தலைக் கண்டான். முன்கைச் சந்தைச் சார்ந்து விரல்கள் ஐந்திற்கு அருகே மூவிரல் நீளமாக அத் தழும்பு இருந்தது. அது யானைத் தோலைப் போலக் காழ்ப்பு ஏறியும், அத்தோலில் சுண்ணும்பு நூற்றை (தூளை) உரைத்தாற் போல வெண்மையாகவும், சிறு மீனைப் போன்ற வடிவு பொருந்தியும் இருந்தது. அந்த வில் தழும்பாகிய இலக்கணப் பொருத்தத்தைப் பார்த்து இவனே வில்லுக்குத் தலைவன் என்று பாராட்டினன்.

20. சீவகன் கண்ட மலர்ச் சோலையின் அழகையும், மலர் பறித்து மாலைகட்டிய அழகையும் திருத்தக்க தேவர் எவ்வாறு வருணித்துள்ளார்? விளக்குக.

தடமித்த மன்னனின் மக்கள் ஐவருக்கும் சீவகன் கல்வி கற்பித்துவந்த காலத்தில் ஒருநாள் வெளியில் சென்று சிறந்த ஒரு சோலைக்குள் புகுந்தான். அது பலவகை மணத்தால் மண மகளிரைப் போல் விளங்கியது.

வேங்கை மரங்கள் பச்சைக் கயிற்றில் புதிய பொன்னல் செய்த தாலியை வரிசையாகக் கோத்தாற் போலப் பூத்தன. வெள்ளாடையை நீரில் நனைத்து மேலே போர்த்தாற் போல அழிஞ்சில்கள் மலர்ந்தன. செந்தலையையும் வெண் மறுவையும் உடைய நெற் பொரிபோலப் புன்குகள் பூத்தன. இவை கண் நிறைந்த அழகைக் கொண்டன. தேரின் உருளை போல மகிழ்கள் மலர்ந்தன. உயர்ந்த சண்பகங்கள்

கோழி முள்ளைப் போல அரும்பின. பாதிரி மலர்கள் கோசிகமென்னும் பட்டாடை போல மலர்ந்தன. வெண் கடம்புகள் பந்துபோல மலர்ந்தன. காட்டுப் பூனை சிரிப்பனபோல முல்லை அரும்பின. நாகப்பாம்பு படம் விரித்துக் கொட்டாவி கொண்டன போலச் செங் காந்தள் அரும்பு விரிந்து பிறகு மலர்ந்தன. குறும் பூழ்ப் பறவையின் கால் போலக் குரவம் அரும்புகளைச் சுமந்தன. கூத்தாடும் பெண்களின் சிவந்த கூரிய பற்களைப் போலச் செம் முல்லைகள் அரும்பின.

இத்துணை அழகிய மலர்களையும் பிற மலர்களையும் பலவின் சுளைகளையும் கொண்டு அழகு பொருந்தப் பல மணிகளையும் முத்துக்களையும் பவளங்களையும் பொன்னை யும் தொகுத்தாற் போல வானவரும் மயங்கத் தன் அழகிய பொன் அணிந்த விரல் நுனியினால் ஒருவகை மாலையைக் கட்டினான். ஒரு மாலையையும் பந்தையும் பின்னும் கட்டி இனிமை நிறைந்த புழுகிலே இவற் றைத் தோய்த்தும் சந்தனத்தோடுகூடிய பனி நீரையும் புழுகையும் தெளிந்த பின் அங்குப் பாலைப்போல இனிய மொழியாளாகிய ஒரு பணிப் பெண் வந்து வணங் கினாள்.

வந்தவள் தன் நீண்ட கண்கள் வாயாக் இமைப்பு என்னும் சொல்லாலே எம் கனகமாலைக்கு இம் மாலை களும் பந்தும் பொருந்தின என்றாள். சீவகனும் கொள்க என்று கொடுத்தான். அவள் வாங்கிச் சென்று கனகமாலைக்குக் கொடுக்க அவளும் வாங்கிக் கொண்டாள்.

**21. ஓலைப் பாசுர மாலையிற் கண்ட செய்தி என்ன? விளக்குக.**

சீவகன் சோலையில் பல மலர்களையும் பறித்துக் கட்டி அவற்றின் இடையே பலாச் சுளையையும் வைத்து மாலையாக அமைத்தான். மலர்களாலேயே எழுத்துரு வம் படப் புனைந்த அந்த மாலையைத் தோழிப் பெண் வாங்கிச் சென்று கனகமாலையிடம் கொடுத்தாள். கனக

மாலை அந்த மாலையை வாங்கி அம் மாலையிலிருந்த மலராகிய எழுத்துக்களைப் படித்தாள் : 'மங்கையரின் வளரும் கொங்கைகள் பாய்தலினால் மார்பில் அணிந்த தார் நெகிழ்ந்து தேன் சிந்த, வேல் போன்ற பெரிய கண்கள் பிறழும் நாடகத்தைப் பார்த்து மகிழ்ந்து வாழாதவர்களின் வாழ்க்கை யாவும் வேடருடைய வாழ்க்கையைப் போன்று பயனிலா வாழ்க்கையே யாகும். அல்லி மலர் போன்ற சிவந்த பவழ வாயை யுடையாரும், அமுது போன்றாரும், பாம்பு படம் விரித்தாற் போன்ற பவழ மேகலை யணிந்த அல்குலை யுடையாரும் ஆகிய மகளிர் பலரும் மருட்ட அகில் புகை தவழும் தண்ணிய மலரணையிலே மூங்கில் போன்ற மெல்லிய தோளின் மேல் அழுந்தி வளரத் தங்குதல் கலப்பு என்பார்கள். தன் மார்பு மணிகள் இழைத்த ஒரு பலகையாக, மகளிரின் தனங்கள் சூதாடும் கருவி யாக, இன்பத்திற்குத் தக்க பவழ மேகலை அணிந்த அல்குல் சூதாடும் இடம் ஆக, ஒப்பற்ற இன்பத்தை யுடைய காமச் சூதாடல் கூடாது எனின், இவை யாவும் இனிமேல் உண்டாவதற்காகத் தவம் புரிந்து அடங்கி யிருத்தல் ஆண்மைக்கு அழகு என்று கூறுவர்'.

இவ்வாறு அந்த மாலையிலிருந்த மலராகிய எழுத்துக்களைப் படித்தாள் கனகமாலை.

**22. கனகமாலை காதல் நோயால் வருந்திக் கூறியவற்றை விளக்குக.**

பெண் யானையின் துதிக்கையைப் போன்று திரண்டு கணவன் தீண்டாததனால் தீண்டப்படாதிருந்த துடையினள், குழையும் தோடும் விளங்கக் கழுத்தை இடப் பக்கம் சாய்த்து, இமைக்காமல் சீவகன் அனுப்பிய மாலையின் மணத்தை எண்ணியிருந்தாள் கனகமாலை. அப்பொழுது அவள் ஓர் இயக்கியைப் போல் அழகுற விளங்கினாள். வளைந்த வில்லை நாணேற்றி அம்பை வைத்துக் கொடிய வேடனால் எய்யப்பட்ட பிணை மானைப்போல் அவள் நிலை தவறித் தோள் மெலியக் கொங்கைகளில் பசலை பாய நெடிய மயில்

போன்ற சாயலாள் தன் உள்ளத்திற்குச் சில கூறினாள்.

'ஒரு பெரிய பேய் உலகை விழுங்குதற்கு வாயைத் திறந்து நின்றாற் போல நீண்ட வெண் மதியாகிய பல் விளங்கச் செக்கர் வானமாகிய வாயைத் திறந்து என்னை விழுங்குவதற்கன்றோ இம் மாலைப் பொழுது இப்போது வந்தது. இரங்கத் தக்க என் உயிர் என்னாகுமோ?

அழகிய சோலையிலிருக்கும் கரிய குயிலே! உன் குரல் எனக்கு வருத்த மூட்டும் என்பதையும் நினையாமல், இரங்கத் தக்க இவ்வுயிர் இறந்துபடும் என்றும் எண்ணாமல் முழக்கமிட்டுக் கூவுகின்றாய். இத்தன்மை உனக்கு இருப்பதனால்தான் உன்னை வருந்திப் பெற்ற தாய்க்குயில் உன்னை மறந்துவிட்டது; வளர்த்த செவிலியாகிய காக்கை நின் சொல்லைக் கேட்டவுடனே வீட்டினின்றும் உன்னைத் துரத்திவிட்டது. நீயோ எலும்பளவும் சென்ற மயிரையுடையாய். நின்னை வெறுப்பவர் நின் பிறப்பையோ, வளர்ப்பையோ, வடிவையோ எதை வெறுப்பார்?

பெரிய திங்கள் மயக்கமடைந்த மனமாகிய மலருடன் போரிட்டு அதன் கேடு கண்டு நகைக்கின்றது. அன்றில்கள் தம் குரலாலே வடிவைக் கொண்டன. ஆம்பல் என்னும் பண் சூழ்ந்து இவ்வுயிரின் கேடு கண்டு இதன் மேல் நடக்கின்றது. இவ்வாறு உலகம் முழுவதும் பகையாதற்குப் பற்றுதவாறு ஒரு பெண்பாலேன் யான் ஆகவும், என் உயிரே! நீ தீ மேய்ந்து வேறு வடிவம் பெற்ற இலைச் சாம்பலைப் போல் இருக்கிறாய்.

காமத்தீயால் என் உள்ளம் வேகும். அதனால் உடம்பு வெதும்பும். உயிரும் போகாமல் நெட்டுயிர்ப்புக் கொள்ளும். யானும் மென் கூந்தலாரின் நகைப்புக்குரிய பொல்லாங்கின் வடிவாயினேன். மாலை மார்பன் தொடுத்த மலர் மாலையையே தெப்பமாகக் கொண்டு

இரவாகிய கடலை நீந்திச்செல்வேன்" ஆனால் நீந்துதல் அரிது!

கடப்பமாலை தரித்த முருகனுடைய சிவந்த வேலையும் காமனுடைய மலர்ந்த அம்பையும் வென்ற நீண்ட கண்களையும் திங்களனைய முகத்தையும் உடையவள் இவ்வாறு தேனைச் சிந்தும் ஓர்கொம்பு தீயிடைப்பட்டது போல் துடித்தாள். அவள் வளர்த்த கிளி ஆறுதல் கூற அன்று இரவு ஆற்றியிருந்தாள்.

23. அநங்க விலாசினி தூதாகச் சென்று உதவிய வாற்றை விளக்குக.

கனகமாலை இவ்வாறு வருந்தித் தன் தோழியாகிய அநங்க விலாசினியை அழைத்துத் தன் மணிச் செப்பிலே வைத்திருந்த மாலையை அவள்கையில் கொடுத்து இதைக் கொண்டு போய் அவனிடம் கொடு என்று உரைக்க, அவள் தொழுது அம்மாலையை வாங்கிச் சென்று சீவகனை அடைந்தாள். அடைந்து அவனை வணங்கி மாலையை நீட்டச் சீவகன் அதனை வாங்காமல் அவள் முகத்தைப் பார்த்தான். அவளும் என் தலைவிக்கு மாலை தொடுப்பாயும் நீயே, அவளுடைய மெல்லிய தோளின் மெலிவுக்கு மருந்தும் நீயே, சிறந்த உயிரும் நீயே, ஆதலின் இதனை வாங்கிக் கொள் என்றாள்.

அதற்குச் சீவகன், 'அரசர் கோயிலில் தங்குபவர் ஐம்பொறியையும் அடக்க வேண்டியவர், ஆதலின் இது தகாது' என்றான்.

அநங்க விலாசினி அதைக் கேட்டு 'நீ அஞ்சினாய் போலும்' என்று கூறி இகழ்ந்தாள். சீவகன் அவளை நோக்கி, 'கோதையே! ஆசிரியனாகை இருக்கும் எனக்கு இது பொருந்தாது' என்றான். அதைக்கேட்ட அவள், 'நீ இதனை வாங்காது ஒழியின் அன்ன நடையாளாகிய என் தலைவி வருந்துவாள்' என்றுகூற, அதற்கு, அஞ்சி அவனும் ஒப்பினான். ஒப்பித் தன் கையை நீட்டி அந்த மாலையை வாங்கினான். வாங்கி இது தான் உழுவல்

அன்பினாலே என் உள்ளத்தைச் சுடும் என்றான். பின்னர் அநங்க விலாசினி சென்று சந்தனத்தையும், சந்திரகாந்தக் கல்லையும், கூந்தளம்பாவை என்ற மலரையும், கழுநீர் மலரையும், மற்ற மலர்களையும், நெடிய தாமரை வளையத்தையும், மலையருவி நீரையும் கொண்டு கனகமாலைக்கு அணிவித்தாள். அவை தண்மையாகாமல் கொதித்தன, விலைமதிப்பற்ற அரிய முத்துமாலையை அணிவித்துக் கஞ்சிதோய்த்த கோசிகப் பட்டின் நீர் விழும்படி அதனை மேலே கட்டிக் கீழே செறிந்த பூக்களையுடைய படுக்கையை அமைத்து, நன்னீரைத்துளிக்கும் குளிர்ந்த சாந்தாற்றியையும் ஆலவட்டத்தையும் ஏந்திப் பணிமகளிர்வீசக் குளிர்ந்த சந்தனக் குழம்பை மெய் முழுவதும் பூசினாள்.

மெய்யிற் பூசிய சந்தனம் குளிர்ச்சியுண்டாக்காமல் கொதித்து உயிரைவாட்ட, மேலே கட்டிய அழகியமாலை கருக. கீழநின்ற நீர் கொதித்து எழ வெப்பம் மிகுந்தது. அப்பொழுது கனகமாலைக்குச் சீவகன் அனுப்பிய மாலை ஒன்றே துணையாகிய தெப்பம் ஆயிற்று. கனகமாலைக்கு அநங்க விலாசினி தூதாகவும் சீவகன் மாலை தெப்பமாகவும் நடக்கும் நாட்களிலே விசயன் முதலாயினோர் குற்றம் அற்ற கல்விக் கடலின் கரையைக் கண்டனர்.

**24. விசயன் முதலியோரின் போர்க்கலை அரங்கேற்றம் பற்றி விளக்குக.**

சீவகனிடம் விசயன் முதலியோர் போர்க் கலையைக் கற்றுக் கொண்டனர். கொடியனவாகிய பொருகணையையும் இரும்பு நாராசத்தையும் எய்யும் முறையையும், தம் மேல் வரும் அம்பை அம்பினால் விலக்கும் முறையையும், வாட்போரில் வெல்லும் வகையையும், அம்பு முதலியவற்றைப் பகைவர் எய்தாற் கருவிகளால் தம்மை மறைத்துக் காத்துக் கொள்ளும் நிலையையும், பகைவர் அம்பைப் புறமாக்கித் தம் அம்பைச் செலுத்தும் திறனையும் அவர்கட்கு விரிவாகக் கற்பிக்க அவர்களும் சிறப்புறக் கற்றனர்.

மேலும், யானை தம்மேல் வந்த காலத்தில் அதன் கால் களிடையே புகுந்து மறையும் வகையையும், அது துதிக்கையால் வளைத்த பொழுது அதன் கைக்கு நடுவே உடம்பு பிறழும் திறனையும், அது தன் வாலாலே வீசி னால் அது படாதவாறு அதன் காலிடையே புகும் வகை யையும், அது கொல்லப் புகுந்தால் கொம்புகளிடையே ஆம்படியையும் நூலிற் கூறியவாறே சீவகன் கற்பிக்கக் கற்றுக் கொண்டனர்.

கொடியையுடைய நெடிய தேரூர்ந்து செய்யும் போரும், யானையாற் கருதிய போரும், குதிரைப்போரும் தெளிவாகக் கற்றறிந்து முதிர்ந்து, இவ்வூர்திகளிலி ருந்து வினை செய்யும் இடம் அறிந்து செலுத்தும் பொழுது வாளும் வில்லும் எறிகோலும் என்கிற மூன்றையும் சேர அறிந்து வானோர்க்கும் புகழ்தற்கரிய தகுதியுடையவர் ஆனார்.

படையினுள் அல்லாமல் தாம் தனியே நின்ற இடத்தை ஒற்றிப் பார்த்துப் பகை மன்னரின் படை மேற் சென்ற காலத்தும் வெற்றியில் தளரும் தன்மை யின்றி அப்பகைப் படையைக் கெடுக்கும் கொடிய போர்த் தொழிலில் அவர்கள் உயர்ந்தார் என்று தட மித்த மன்னனுக்குக்' கூறினர். தடமித்த மன்னனும் அவர்களைக் கொணருமாறு ஆணையிட்டான்.

கலை விருப்பங்கொண்ட அரசன் மக்கள் வந்து அம்புகளினால் கூடங்கட்டி மழையையும் அதன் தூளி யையும் வில்லால் விலக்கிக் காட்டி, முகத்திலுள்ள குழையின் நெற்றியைத் தொடுமாறு வில்லிற் கணை யைத் தொடுத்து வளைத்து நூல் பிளக்க நொடியிலே எய்து காட்டி, அவ்வாறே வாளாலும் வேலாலும் நூல் பிளக்க எறிந்து காட்டி, மின் திரியுமாறு போலேசாரியை திரியும் தொழிலில் புக்கு வியக்கத் தக்கார் ஆயினர்.

விற்போரிலே விசயன் அருச்சுனனே, வேற் போரிலே கதம்பன் முருகனே, வாட்போரிலே கனகன் பரசுராமனே, யானைப்போரிலும் தேர்ப்போரிலும் அசல

கீர்த்தி சச்சந்தனின் படைத்தலைவனாகிய அசலனே, குதிரைப் போரிலே சேனன் நகுலனே என்று எல்லோராலும் இவ் வைவரும் புகழப்பட்டனர்.

அரசன் தன் மக்களின் கல்வியைக்கண்டு மகிழ்ந்து இந்த வில்வல்லான் அரசனாகவோ அந்தணனாகவோ இருக்க வேண்டும். மற்றோர்க்கு இத்தகைய கல்வி உண்டாகாது. ஆதலால் அவனை யான் தளையொன்று இட்டுக் காவலில் இடுவேன்; இப்போதே அக் காளையைக் கொண்டு வருக என்றான். அரசன் இச் சீவகனைப் பொருளாய்ச் சிறைப் படுத்துகின்றான். ஆதலால் கல்வியும் தீமைதரும் போலும் என்று கருதிப் பலரும் வருந்தி நின்ற அளவில் சீவகன் வந்தான்.

25 'நூலிடைக் கிடந்தவாறே நுனித்தவன் கொடுப்பக் கொண்டார்' – யார் கொடுக்க யார் கொண்டார்கள்? எப்படி? விளக்குக.

விடை, எண் 24ல் விசயன் முதலியவர்கள் கல்வி கற்ற முறையின் விளக்கத்தைக் காண்க.

26. தடமித்தன் தன்மகள் கனகமாலையைச் சீவகனுக்கு மணஞ் செய்து கொடுத்த முறையை விளக்குக.

சீவகனைத் தடமித்த மன்னன் தனியே அழைத்துச் சென்று 'களிறுபோன்ற தோன்றலே! நிலவுலகும் விண்ணுலகும் வந்து கை கூடுமாறு போர்க்கலையைத் தந்தனை. உடம்பு முழுதிலும் கண் பெற்றேன் ஆயினேன். உனக்கு என்ன கைம்மாறு செய்வேன்? என் மகளாகிய கனகமாலை நினக்குரியள்' என்றான்.

அதற்குச் சீவகன் தன் மனத்தில் வேட்கையை அடக்கி வாயினால் மறுத்தான். அரசன் சீவகனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு என்மகள் எனக்கு மகளாக வந்து பிறந்தவுடனே சோதிடர்கள் கூடி வில்லேந்திய நினக்கே பொருந்தியவள் என்று குறித்தனர்' என்று கூறச் சீவகன் ஒப்பினான், பிறகு மணத்துக்குரிய நல்ல

நாளைக் கூறினர். முரசு ஆரவாரிக்கத் தீயிலே ஆகுதி பண்ணி அழகு பொருந்திய கனகமாலையைச் சீவகன் மணந்து கொண்டு அவளது இன்பந்தரும் இளநலத்தைத் துய்த்தான்.

பெரிய இளங்குரும்பை போன்ற கொங்கைகளாகிய மதகளிறுகள் முத்துக்களாகிய நெற்றிப் பட்டம் பொங்க, நாணமாகிய அங்குசத்தைநீக்கி, பூசிய சந்தனமாகிய முகபடாத்தை விலக்கி, முயக்கமாகிய போரில், மார்பெங்கும் பொருத்திப் புதிய மாலையை மிதித்துக் கீழே போட்டு மகிழ்ந்தன. மணிச்குழை ஒளிவீசப், பொன்னூலை மின்ன, மேகலைகள் ஒலிக்கச், சிலம்பு ஒலிக்க, முத்துமாலை முதலியவை கொங்கையைப் புடைப்ப விருப்பூட்டும் அண்ணலாகிய சீவகனோடு கனகமாலை ஆடினாள்.

சீவகனாகிய களிறு அல்குலாகிய கூடத்திலே, அமுதனைய செவ்வாய் குற்றம் அற்ற கவளமாகக் கொண்டு அகப்பட்டபின், தன் கொங்கைகளாகிய குற்றமற்ற கம்பத்திலே மெல்லிய தோளாகிய மணிகளிழைத்த சங்கிலியாலே பூட்டி, வாளனைய கண்ணாகிய வயிரத் தோட்டியை நுதலில் அணிந்து பிணிக்கப் பட்டது.

சீவகனின் மார்பிலே, தன்னுடைய இணையான அழகிய கொங்கைகள் பொருது புதைந்து சிவக்குமாறு, கற்பகமரத்தைத் தழுவிய காமவல்லியின் தோற்றத்தை ஒத்தாள்.

முருகனையொத்த சீவகன் எரியும் காமத் தீயினால் இரவும் பகலும் கனகமாலையை ஊடலாற் கலங்காதவாறு அவள் அழகைப் புனைந்துரைத்துத் தெளிவித்து ஆற்றியதால் அவள் நீங்காமல் நுகர்ந்தாள். சீவகன் கனக மாலையின் அழகைப் பருகி, அவள் கொங்கையாகிய தடத்திலேதங்கி, தோளினாலே நெருங்கத்தழுவி வாயின் அமுதத்தை நுகர்ந்து அவ்விடத்தே சில நாட்கள் தங்கினான்.

27. 'மண்முழுதன்றி வானும் வந்துகை கூடத் தந்தாய்
கண்முழு துடம்பிற் பெற்றேன் காளை கைமாறு
காணேன்'
—இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

கனகமாலையின் தந்தையாகிய தடமித்த மன்னன் சீவகனது திறமையைக் கண்டு, தன் மைந்தர்களுக்குக் கல்வி கற்பித்த முறையைப் பாராட்டும் பொழுது இவ்வாறு கூறிப் புகழ்ந்தான்.

மேலும் விளக்கத்தை வினு 26ல் காண்க.

28 சீவகனும் நந்தட்டனும் சந்தித்த முறையை விளக்குக.

இராசமாபுரத்தில் சீவகனின் தம்பியாகிய நந்தட்டன் என்பவன் சீவகனிருக்குமிடம் காணுது வருந்தித் தேடிக் காந்தருவதத்தையிடம் சென்று அவளைக் கண்டான். அங்கு அவள் சீவகனைக் காணும் நாள் எந்நாளோ என்று வருந்தி யாழிசைத்துப் பாடியிருந்தாள். அவளைக் கண்டு வினவ, அவள் தன் விஞ்சையால் சீவனிருக்குமிடத்திற்கு ஒரு தெய்வம் கொண்டு போய் விடுமாறு செய்தாள். தெய்வத்தினுல் ஏமமாபுரம் அரண்மனையை யடைந்த நந்தட்டனை விசயன் கண்டு யார் என வினவி விடை பெருமல் சென்று சீவகனிடம் கூறினுன். விசயன் மொழியைக் கேட்ட சீவகன் சிந்தித்து, வந்திருப்பவன் நந்தட்டனே என உணர்ந்து அவனிருக்குமிடத்தை யடைந்து கண்டான். நந்தட்டன் சீவகனை வணங்கச் சீவகன் அவனைத் தழுவிக் கொண்டு தான் பிரிந்திருந்த வருத்தமெல்லாம் தீர்த்துக் கொண்டான்.

நந்தட்டன் சீவகனை நோக்கி, 'ஆக்கமும் கேடும் உற்றவர் நீர் மட்டுமன்று; கருடக் கொடியோனுகிய இராமனுக்கும் நேர்ந்தது. ஆனுல் அவன் தன் தம்பியையும் உடன் கொண்டு சென்ருன். நீரோ, என்னைத் தனியே விட்டுப் பிரிந்தீர். முற்பிறப்பிலே குரவரை வழிபடலின்றி அவர் கருத்தைக் கடந்ததனுல் உண்டாகிய

பாவத்தின் பயனாலே பாவியேன் இத்தாமரையடிகளை நீங்கி மிகவும் வருந்தினேன்' என்று அழுது கூறினான். சீவகன் அவனைத் தேற்றித் தன் காதலி கனகமாலை யிருக்கும் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். நந்தட்டன் கனகமாலையை வணங்கினான். கனகமாலை தன் மைத்துனனாகிய நந்தட்டனுக்கு முறைமைப்படி விருந்திட்டாள்.

29. 'என்னைக் காணாது உற்றதை எவன் கொல் என்று பொருந்தினர் செய்ததெல்லாம் புரைவிடுத்து உரைமோ' என்ற சீவகனுக்கு நந்தட்டன் கூறியவற்றை விளக்குக.

விருந்துண்ட பின்னர், சீவகன் தன் தம்பி நந்தட்டனுடன் தனியே இருந்து, 'என்னைக் காணாமையாற் குரவர் முதலானோர் உற்ற வருத்தம் என்ன? நம் தோழர்கள் என்ன செய்தனர்? வகைப்படுத்திக் கூறுக' என்றான். நந்தட்டன் கூறினான்:

'கதிரவன் மறைந்த மாலை நேரத்தில் மழை மிகுதியால் எல்லோரும் கலைந்து சென்றனர். அப்பொழுது நின்னைக் காணாமையால் நாங்கள் நகர்ப்புறத்தே கூடி ஆராய்ந்த பொழுது பதுமுகன் 'இனி நாம் என்ன செய்யலாம்' என்றான்.

'புத்திசேனன் சீற்றத்துடன், 'சீவகனைக் காணவில்லையாயின் இப்போதே கட்டியங்காரனை வாளினாலே வானுலகிற் செலுத்தி, இவ்வூரையும் அழித்துச் சென்று நம் சீவக சாமியைக் காண்போம்' என்றான்.

'தேவதத்தன், 'மலைமேல் தாக்கிய இடியைப்போல் குமுறிப் பகைவனுயிரை உண்பது நுமக்கு எளிது. நம் குருசில் சிறையில் இருப்பதும் இல்லாததும் ஆராய்ந்து, பின்னரே பகைவரைக் கொல்லத் துணிமின்' என்றான்.

'சீதத்தன், 'கடலிடைத் தோன்றிய கதிரவனைப் போன்ற சீவகனுக்குப் பகைவரால் தீங்கு வராது. இருந்தாலும் புத்திசேனன் கூறியவாறே ஆராய்ந்து

பகைவரைக் கொன்று துன்பத்தை நீக்குவோம்" என்றான்.

பதுமுகன், 'நம்பி! நந்தட்டனே! உலகில் தமக்கு அறிவுறுத்தக் கூடியவர்களுக்குத் தாம் அறிவுரை கூற மாட்டார்கள். அதலின் ஒப்பற்ற நினக்குக் கூறத் தக்கது ஒன்றுமில்லை. எனினும் கூறுகின்றேன். நமக்குக் குரவராயுள்ளவர்களின் உள்ளக் கவலையை மாற்றி, அவர் இருக்கும் வரையில் அவரை வழிபட்டு, அவர் இறந்தால் அவர்க்கு நீர்க் கடனை முறைப்படி செய்வாயாக' என்றான்.

'அதற்கு யான் வருந்தி, உயிருடன் இருப்பவரை நோக்கியல்லவா இவரை ஓம்புக என்று கூறவேண்டும். உயிர் வாழும் நிலை எனக்கு இல்லை. என் கண்ணை கையாக அவற்றின் நீராலே செல்வனுக்குச் செய்ய வேண்டிய நீர்க் கடன்களைச் செய்துவிட்டேன். இனி, மூங்கிலை எரிக்கும் காட்டுத் தீப்போலக் கனன்று எழுங்கள்! என்றேன்.'

'உடனே சிங்கத்தின் ஏதத்தைத் தீர்க்கப் புலித் திரள் எழுந்ததுபோல நமது வாட்படை எழுந்து 'சீவகன் வாழ்க' என்றது. அப்பொழுது எங்கள் பரிவு தீர ஒருவன் பாடினன்.

'அப்பாடலின் பொருள், 'நம் தலைவர் நின் பசலை நீங்க இப்பொழுதே வருவர், நீ வருந்த வேண்டா. இன்னும் அவர் கூறிய பருவம் வராமையால்தான் அவர் வரவில்லை. யானை பிளிறியதை மேகத்தின் முழக்க மென்று எண்ணிக் கார் காலத்தில் மலரும் முல்லை அறியாமையால் பூத்துவிட்டன. கார்ப்பருவம் வந்ததும் அவர் வருவார்' என்பதாகும்.

'இப்பாட்டைக் கேட்டவுடன், 'நம்பியைத் தேடிப் பிடித்த பிறகு சட்டியங்காரனைக் கொல்லலாம். நாம் நாடெங்கும் தேடுவோம்' என்று முடிவு செய்தோம்.

'யான் முகில் தவழும் மலைகளெங்கும் நின்னைத் தேடிச் சென்றேன். பிறகு குணமாலையின் அரண் மனையை யடைந்தேன். அவள் நின்னைப் பிரிந்த துயரம் தாங்கமாட்டாது அழுதரற்றினாள். பிறகு மலைமகளின் அரண்மனையை யடைந்தேன். அவள் தன் விஞ்சையை ஓதி வைகறை இருளிலே இங்கே என்னை அடைவித் தாள். இனி அடிகளே! நீவிர் இங்குவந்த வரலாற்றைக் கூறுக' என்றான்.

30. *'சொல்லுமின் அடிகள் நீரும் போந்தவாறு எனக் கும்' என்று கேட்ட நந்தட்டனுக்குச் சீவகன் உரைத்தவற்றைச் சுருக்கி வரைக. (அல்லது) சுதஞ்சணன் உதவியால் சீவகன் மறைந்துசென்ற பின் நடந்த நிகழ்ச்சிகளைச் சீவகன் எவ்வாறு கூறினான்?*

சீவகன் நந்தட்டனை நோக்கி, 'நம் தந்தையார் உவக்குமாறு யான் கச்சினாற் பிணிப்புண்டு வரும் பொழுது, நம் சுற்றமெல்லாம் கையில் வேலேந்திச் சாதற்கு விரும்பி யெழும் தன்மையைக் கண்டேன். நீ சிங்கம்போலச் சினந்து நிற்கக் கண்டேன். உன்னுடன் நின்ற தோழர்கள் முன்னோக்கிப்பாயப் பின் வாங்கி நிற்கும் புலிக் கூட்டத்தைப் போல இருந்தனர். கட்டி யங்காரனை எதிர்ப்பது நம் தந்தையார் கருத்து அல்லா மையின், நீங்கள் நின்ற நோக்கத்தைத் தடுக்க நோக் கினேன். அப்பொழுது நம் மாடத்தின் உச்சியில் தத்தையானவள் வாளும் கேடகமும் ஏந்தி, 'இந்நகரம் கெடுக' என்று கூறி நின்றதைக் கண்டேன். பெண் ணொருத்தி நம் இடரை நீக்க அதனால் வாழ்தலினும் சாதலே நன்று என எண்ணினேன். அப்பொழுது இறைவனை வாழ்த்தி, இயக்கனை நினைத்தேன். சுதஞ் சணன் அங்குத் தோன்றி என்னை வானில் கொண்டு போனான். பிறகு அவன் மூன்று விஞ்சைகளையும் வழி யையும் கூறி விடுப்ப வந்தேன். கொழுந்து விட்டெரி யும் காட்டுத் தீயின் நடுவே அகப்பட்ட யானைத் திரளைக்

கண்டு இறைவனைச் சிந்தித்தேன். உடனே மழை பெய்து தீயணைந்து யானைகள் உய்ந்தன. காட்டின் வழியே சென்று பல்லவநாட்டை யடைந்தேன்.

பல்லவநாட்டு அரசன் தனபதி என்பவனின் மகள் பதுமையைக் கோழியரவு தீண்டியது. அவளுக்குற்ற நஞ்சினை யான் தீர்த்தேனாதலின், என் உறவை விரும்பிய அரசன் அவளை எனக்கு அளித்தான். இரண்டு திங்கள் சென்றதும் பதுமைக்குத் தெரியாமல் நள்ளிரவில் புறப்பட்டேன்.

தக்க நாட்டின் தலைநகராகிய கேமமாபுரத்தில் தங்கினேன். அங்கே சுபத்திரன் என்னும் வணிகன் என்னுடன் நட்புக்கொண்டு தன் தேரில் என்னை அழைத்துச் சென்று தன் அரண்மனையை யடைந்தான். அங்கு அவன் மகள் கேமசரியை எனக்கு மணம் புரிவித்தான். அங்கும் இரண்டு திங்கள் தங்கியபின் அவளறியாமல் அங்கிருந்து புறப்பட்டேன்.

இங்கு இந்தநாட்டை (மத்திம நாட்டை)க் காண வந்தேன். அரசனைக் கண்டு அவன் சிறுவர்கட்கு விற்றொழில் கற்பித்தேன். அரசனும் தன் மகள் கனகமாலையை மணம் முடித்துக் கொடுத்தான். இங்கு இருக்கிறேன்' என்று கூறினான். அது கேட்ட நந்தட்டன், 'இவற்றையெல்லாம் நம் குரவரும் கேட்டிலரே' என்று கண்ணீர் விட்டான். சீவகன் அவன் கண்ணீரைத் துடைத்து, 'திண்ணிய பொருளை எய்தலாம், பகைவரை வெல்லலாம், நண்பரையும் பெண்டிரையும் மக்களையும் பிறரையும் அடையலாம். அடைய முடியாப் பொருள் உடன் பிறப்பு ஒன்றே. இத்தகைய உடன் பிறப்பை இங்குப் பெற்றேன். இனி எனக்கு அரியதொன்றில்லை' என்று கூறி நந்தட்டனுடன் பல நாட்கள் பேசி மகிழ்திருந்தான்.

31. 'ஒண்பொருள் ஆவதையா உடன் பிறப்பு ஆக்கலாகா
எம்பியை ஈங்குப் பெற்றேன் என் எனக்கரியது?'
—இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

சீவகன் தன் தம்பியாகிய நந்தட்டனிடம் கூறியது. விளக்கம் வினு எண் 30ல் காண்க.

32. சீவகன் இருக்குமிடத்தை அவன் தோழர்கள் எவ்வாறு அறிந்தனர்? அங்கு எவ்வாறு சென்றனர்?

இராசமாபுரத்திலுள்ள சீவகனின் தோழர்கள் சீவகனைக் காணுது கவலையுற்றனர். தோழர்களாகிய பதுமுகனும், புத்திசேனனும், சீதத்தனும், தேவதத்தனும் ஒன்று சேர்ந்து சிந்தித்து, காந்தருவதத்தையிடம் சென்று வினவ, அவள் சீவகனுக்கு உற்றதும், அவன் மறைந்து போனதும் பிறவும் விளங்கக் கூறினள். அவர்கள் அவளை வணங்கிச் சீவகனைக் காண்பதற்கு வழி கூறுமாறு வேண்டினர். அவள் பூவிதழ் ஒன்றின் மீது எழுத்தாணி கொண்டு மையில் தோய்த்து மறைந்த எழுத்தால் எழுதினுள். அதை மடித்து அரக்கிட்டுத் தன் காதின் குழையினுலே இலச்சினை வைத்தாள். 'இது அவனிருக்கும் திசைக்குச் செல்வதாக' எனத் தெய்வத்தைத் தொழுதாள். பிறகு அதை அவர்களிடம் கொடுத்தாள். அவர்களும் புறப்பட்டனர்.

தோழர்கள் புறப்படுவதற்காக இருபதினுயிரம் குதிரைகள் வந்து கூடின. காலாட் படை வீரர்களும் வந்தனர். எருதுகளும், கோவேறு கழுதைகளும், ஒட்டகங்களும் சேர்ந்து பண்டங்களைச் சுமந்துநின்றன. காற்றினும் விரைந்து செல்லும் குதிரைகள் நான்கில் தோழர் நால்வரும் ஏறினர். நாளும் கோளும் ஓரையும் பறவை யொலியும் பிற நிமித்தங்களும் நல்லனவாகப் பார்த்துப் புறப்பட்டனர்.

பறைகள் ஒலிக்க, சங்குகள் ஆர்க்கக் கடலனைய படை கிளம்பியது. குன்றும், மலைச்சரமும், கானமும்,

நாடும் கடந்து மாதவர் உறையும் பள்ளியைப் படை நெருங்கியது.

33. 'மங்கல மடிந்த திருமாமகளை யொப்பீர், இங்கு வரவு என்னை, குலம் யாது அடிகட்கு?' என்று கேட்டவர் யார்? யாரைக் கேட்டனர்? விளக்குக.

சீவகனின் தோழர்கள் நால்வரும் படைகளுடன் சென்று மாதவர் உறையும் தவப் பள்ளிக்கு அருகில் இருந்த பொய்கைக் கரையில் தங்கினர். அப்பொழுது தோழர்கள் முனிவர்கள் உறையும் பள்ளியைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தனர். அங்கு ஓரிடத்தில் மரப் பலகையில் திருவினும் மேம்பட்ட பொலிவுடன் வீற்றிருக்கும் விசையையைக் கண்டனர். அவள் தன் மகன் சீவகனை எண்ணி அழுது சோர்ந்திருந்தாள். கூந்தல், நீரில் முழுகாமையால் சடைபிடித்துத் தாழ, மறைவான இடத்தில் அருகனடியில் மலரிட்டு வாழ்த்துக்களைக்கூறி வணங்கியிருந்தாள்.

இளைஞர் நால்வரும் அவளைக் கண்டு மனம் நெகிழ்ந்து வணங்கி, 'மங்கலம் இழந்த திருமகளைப் போல்வீர்! நீர் தவம்புரிய இங்கு வரவேண்டிய காரணம் என்ன? அடிகளின் குலம் யாது?' என்று கேட்டனர். அதற்கு அவள், 'என் குலமும், என் வரவும் எளிதிற் கூற இயலாது; உங்கள் குலமும் வரவும் உரைமின்' என்றாள்.

34. 'எங்குலமும் எம் வரவும் வேண்டில் எளிதன்றே. நும் குலமும் நும் வரவும் நீர் உரைமின்' என்ற விசையைக்குத் தோழர்கள் உரைத்த விடை என்ன?

சீவகனின் தாய் விசையை தவம் செய்த பள்ளியை யடைந்த தோழர்கள் நால்வரும் அவளைக் கண்டு யாரென வினவினர். அதற்கு அவள் 'என்குலத்தை

யும் என் வரவையும் எளிதிற் கூற இயலாது. உங்கள் குலத்தையும் இங்கு நீங்கள் வந்த விவரத்தையும் உரையுங்கள்' என்றாள்.

அதற்கு விடை தேவதத்தன் கூறினன் : 'எங்கள் இருப்பிடம் இராசமாபுரமாகும். சிங்கம் போன்ற இவன் பெயர் சீதத்தன். இவன் அறிவிற்சிறந்த அமைச்சன் சாகரனுக்கும் குருதத்தைக்கும் மகன். இவன் பெயர் புத்திசேனன். நான்மறை பயின்ற அசலன் என்பவன் மனைவியாகிய திலோத்தமையின் மகன். இவன் பெயர் பதுமுகன். சச்சந்த மன்னனுக்குரிய செட்டி தனபாலனின் மனைவி பவித்திரையின் மகன். விசயதத்தனின் மனைவி பிரீதிமதி என்பாள் பெற்ற மகன் யான்; என் பெயர் தேவதத்தன்.

எங்கள் ஊழ்வினையால் மன்னன் மடிந்தான். அன்றே எங்கள் உயிர்போன்ற நம்பிசீவகனும் நாங்களும் பிறந்தோம். எங்கள் பெற்றோர் எங்களைச் சீவகனுக்குத் தோழராக நல்கினர். நல்வினையாலே நம்பியொடு கூடிய நாங்கள் 'எங்கு எழில் என் ஞாயிறு' —ஞாயிறு எங்குத்தோன்றினலென்ன? என்று கவலையற்று வளர்ந்து வந்தோம். ஓராண்டு கழிந்தபின் நந்தட்டன் என்பவன் நம்பிக்குத் தம்பியாகப் பிறந்தான். அவனுக்குப்பின் நபுலவிபுலர் என்பவர் பிறந்தனர். நாங்கள் எண்மரும் திசையானைகள் போல வளர்ந்தோம்.

நம்பியுடனே விற்பயிற்சி, வாட்பயிற்சி, மற்போர், தேர் செலுத்தல், யானை நடத்தல், குதிரை விடுதல், யாழிசைத்தல் முதலிய பலகலைகளையும் கற்றோம். வேடர் கொண்டுசென்ற ஆநிரைகளை மீட்டு, விஞ்சையர் மன்னன் மகளை யாழாலே வென்று மணந்து, அசனி வேகத்தை அடக்கி, குணமாலையை மணந்து கொண்ட எம் தோழனாகிய நம்பியின் பெயர் சிந்திப்பவரின் துன்பத்தை நீக்கும் சீவகன் என்பதாகும். அவன் அந்நகரின் முதன்மைபெற்ற பழைய வணிகன்

கந்துக்கடன் பெற்ற முதல் மகன். ஒருநாள் அரசனுடைய ஏவலால் அவனுடைய பருத்த தோள்களை கட்டிக்கொண்டு போய்க் கொல்ல' என்று சொன்ன வுடனே அச்சொல்லை அவன் முடிப்பதற்குள் அதைக் கேட்டுக் கொண்டிருந்த விசையை மயங்கி விழுந்தாள். அதைக்கண்ட தோழர்கள் சீவகனுக்காக இப்படி வருந்துகிருளே என்று வியந்து பாராட்டினர். மயக்கம் தெளிந்த விசையை மகனை எண்ணி அழுது புலம்பினுள்.

35. 'இடிகள் தவழ்ந்திட்ட படநாக மென'—உவமையைப் பொருளோடு பொருத்துக.

உவமை : இடிகள் உடம்பு முழுவதும் தவழப்பட்ட படத்தையுடைய நாகம்போல.

பொருளும் விளக்கமும் : தவப்பள்ளிக்கு வந்த தோழர்கள் விசையையிடம் தங்களைப் பற்றியும் தங்கள் தலைவன் சீவகனைப்பற்றியும் கூறினர். சீவகனுக்குக் கட்டியங்காரனுல் நேர்ந்த துயரத்தைச் சொல்லிவந்த பொழுது விசையை துயரம் தாங்கமாட்டாமல் மயங்கி விழுந்தாள். அவனைக் கொல்ல அழைத்துச் சென்றனர் என்பதில 'கொல்ல' என்ற சொல்லைக் கேட்ட வுடனே அவள் மயங்கிவிழுந்த நிலையை விளக்க இந்த உவமையை ஆசிரியர் கையாண்டுள்ளார்.

36. 'யாழ்புரை கிளவி ஆற்ருள் மயங்கி வீழ்ந்து அரற்றி'க் கூறியதென்ன ?

சீவகனுக்கு நேர்ந்த துன்பத்தைக் கேட்ட விசையை மயங்கி விழுந்து அரற்றினுள். அப்பொழுது அவள் கூறியவை :

'கடல்போன்ற படையுடன் போரிட்டு மன்னன் இறக்க, யான் மயிற்பொறி யூர்ந்து சென்று புறங்காட்டிலே வீழ்ந்தேன். மயங்கி விழுந்த எனக்குத்

துணையாக நீ பிறந்தாயே! இப்பொழுது எனக்குத் தோன்றமல் மறைந்தனையோ? நீ பிறந்தவுடன் அங்கு வந்த கந்துக்கடன் உன்னைக்கொண்டு சென்று சுநந்தைக்குக் கொடுத்தான். அவள் உவகையோடு உன்னை வளர்த்தாள். வளர்த்த அவள் துன்புற நீ அகன்றனையே! ஐயா! என் ஐயா! என் ஐயாவோ!

'என் அரசே! வேல்வேந்தன் முன்னர் உரைத்த மூன்று கனவும் புணையாக என் உயிரைச் சுமந்திருந்தேன். எனக்கு உறுதியாகாமலும் என் அரற்றலைக் கேளாமலும் இறந்தனையே! அரசனும் அழகிய செல்வமுமாக இருந்து குடிமக்களை நின்குடைக் கீழ்க் காத்திருந்தாயெனில், அதனைக்கண்டு என் துன்பமெல்லாம் நீங்கும். பிறகு, நீ 'அம்மா! துறந்துபோ' என்று கூறப் போகலாம் என்றிருந்தேன். ஆ ஐயோ! ஐயோ! நீ முன்னே அகன்று போய்விட்டனையே!

'கோமான் மகனே! குருகுலத்தார் போர் ஏறே! ஏமாங்கதத்தாரின் இறைவா! என் இன்னுயிரே! காமா! கடலுள் கலங்கவிழ்த்த என் கண்ணிலிருந்து வடியும் நீரைப்பாராமலே போகின்றயோ? கட்டுத்தறியில் பொருந்தும் மதகளிற்றையுடைய சச்சந்தனுர் வழித்தோன்றலைப் பற்றி இங்கு வந்தோர் கூறிய நலனைக் கேட்டு நோன்பிலே மறைந்திருந்து பலமுறையும் நொந்தேன். அந்நோயுடனே இறக்கின்றேன். அந்தோ! அறனே! இனி ஆற்றேன்! ஆற்றேன்! வானவர்களே! என் மகனை என் கண்குளிர முன்னொரு முறையே கண்டேன். இன்னும் ஒருமுறையேனும் காண்பதற்கியலாமற் செய்த தீவினைதான் என்ன? என்னைப்போன்ற பெண்கள் இவ்வுலகில் இனித் தோன்றற்க' என்று கூறி விசையை வருந்திய மயில் போல் வீழ்ந்தாள்.

**37. 'போ அம்மா என்றுரைப்பப்போவேன் முன் போயினாய்'—இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

சீவகனின் தோழர்கள் விசையையிடம் சீவகனின் வரலாற்றையும் அவனுக்கு நேர இருந்த துன்பத்தையும் கூறினர். துன்பத்தைக் கூறும்பொழுது முழுவதும் கேளாமலே மயங்கிவிழுந்த விசையை அரற்றத் தொடங்கினாள். அவ்வாறு அரற்றும் பொழுது இத் தொடர் வருகிறது.

உலகங்காக்கும் அரசனாகவும் அழகிய செல்வமாகவும் சீவகன் விளங்கி அரசோச்சுங்காலத்தில் விசையை அதைக்கண்டு மகிழலாமென்றும், அவள் துன்பமெல்லாம் நீங்கியிருக்குங் காலத்தில் 'நீ துறந்துபோ அம்மா' என்று அவன் கூற அவள் துறவைமேற்கொள்ளலாமென்றும் நினைத்திருந்தாள். ஆனால் அதற்கு முன்பே சீவகன் கொலை செய்யப்பட்டானே என்று அரற்றினாள். உண்மையில் சீவகன் கொல்லப்படவில்லை. 'அவனைக் கொல்ல அழைத்துச் சென்றபொழுது அவன் தப்பித்துக்கொண்டான். சீரும் சிறப்பும் பெற்று இப்பொழுது இருக்கிறான்' என்றுதோழர்கள் சொல்லியிருப்பர். அவள் அதற்குள் 'கொல்ல' என்ற சொல்லைக் கேட்டதும் மயங்கி அரற்றி இவ்வாறு உரைத்தாள்.

**38. கொண்டாம் கடல்வேலி, கீழ்மகனைக் கூற்றமா உண்டாம் உயிர்—இடஞ்சுட்டிப்பொருள் விளக்கம் தருக.**

சீவகனது நிலையைத் தேவதத்தன் கூறக் கேட்ட விசையை மயங்கி அரற்றினாள். அவள் அரற்றுகையில் அவள் யார் என்றும், சீவகனின் பழைய வரலாறு என்னவென்றும் தெரிந்துகொண்ட தோழர்கள் களிப்பு மிக்க நெஞ்சினராய் ஒருவர் முகத்தை யொருவர்

நோக்கினர். 'காரியம் முடிந்த படியைப்பாரீர்' என்று கூறிக் கையைக் கவிழ்த்து 'இனி அக்கீழ் மகனாகிய கட்டியங்காரன் உயிரை நாம் கூற்றமாகி உண்டு விட்டோம். உலகைக் கைக்கொண்டோம் ,என்று உரைத்து உவகைமிக்கு ஆடினர்.

**39. 'அகன்ற கண்ணுள் புலம்பா எழுந்திருப்பச் சூழ்ந்து தொழுது இறைஞ்சி'ச் சீவகன் திறத்தை எவ்வாறு கூறினர்?**

சீவகனை எண்ணிப் பல கூறி அழுது அரற்றி மயங்கி விழுந்தாள் விசையை. தோழர்கள் பல குளிர்ந்த பொருள்களாலே தெளிவித்தனர். அவள் எழுந்த பின் அவளைச் சூழ்ந்து நின்று வணங்கிக் கூறினர்.

'சீவகனைக் கொல்லக் கொலைக் களம் கொண்டு சென்ற பொழுது ஒரு தெய்வம் அவனைக் காப்பாற்று வதற்காக எடுத்துக் கொண்டு நீங்கியது. நாங்கள் தவமாதாவாகிய நின்னை வணங்க வந்தோம். சீவகன் தன்னை வணிகன் என்று மறைத்த போர்வையைக் கைவிட்டு அரசனுதலைக் கண்டோம்' என்று இவ்வாறு அவர்கள் கூறக் கேட்ட விசையை தன் மகன் உயிரு டன் இருப்பது கேட்டு மகிழ்ந்தாள்.

**40. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

'பரணி நாட்பிறந் தான்பகை யாவையும்
அரணி லானெனன் கண் தங்கிய அன்பினால்
இரணியன் பட்டது எம் இறை எய்தினன்'

'ஏதம் இன்னன இன்னணம் எய்தலால்
பேதையாரொடும் பெண்ணொடும் பேசன்மின்'

**இடம் :** மயக்கம் தெளிந்து எழுந்த விசையை யிடம் சீவகனது தோழர்கள் அவன்து பழைய வர

லாற்றை அவள் உரையால் அறிந்து கொண்டதைக் கூறி அவளை வணங்கினர். விசையை தன் மகன் சீவகன் உயிருடன் இருப்பது அறிந்து மகிழ்ந்தாள். பிறகு அவள் சீவகனின் தோழர்களை நோக்கிக் கூறிய தொடர்களே இவை யாகும்.

பொருள் : சச்சந்த மன்னன் பரணி நாளிலே பிறந்தவன். அந்நாளின் சிறப்பால் தன் பகைவர்களை மதியாதவனாய்ச் சிறப்புடன் வாழ்ந்தான். எனினும் என்னிடம் கொண்ட காதலால் என் இறைவன் உலகையும் காவாமல் இரணியன் பட்ட துன்பத்தைத் தானும் பட்டான்.

இத்தன்மைய வாகிய 'பிழைகள் இவ்வாறு நினைவின்றியும் வருதலின் அறிவில்லாரோடும் பெண்களுடனும் பேசாதீர்கள்.

விளக்கம் : இவ்வாறு விசையை அவர்களிடம் கூறி 'நீங்கள் சென்று என் மகன் சீவகனிடம் அவன் தந்தை என் மேற் கொண்ட காதலால்தான் இவ்வளவு துன்பங்களும் நேர்ந்தன என்பதைப் பொருத்தமுற எடுத்துக் கூறி அவனை என்னிடம் அழைத்து வாருங்கள்' என்ருள்.

**41. சீவகனைக் காண்பதற்கு அவன்தோழர்கள் எவ்வாறு கலந்து ஆலோசித்தனர்? ஆலோசனையின் முடிவென்ன?**

விசையையிடம் விடை பெற்றுச் சென்ற தோழர்கள் தம் பெரும் படையுடன் ஒரு காட்டாற்றின் கரையில் தங்கினர். தங்கிச் சீவகனைக் காணும் வழியை ஆராய்ந்தனர். அப்பொழுது அத்தோழர்கள் நால்வருள் ஒருவனாகிய பதுமுகன் ஏனையோரை நோக்கி, 'தடமித்த மன்னனுடைய ஆநிரைகளை ஒப்புக்குக் கைப் பற்றுவோம். அப்பொழுது நம் அண்ணலைப் போர்க் களத்தில் எதிர்ப்படலாம்; இது உறுதி.

தொலைவிலே நின்று விற்போர் புரிந்தாலும், பிறகு வாட் போர் தொடங்கின் சீவகனை நெருங்கிக் காண்போம். அப்பொழுது நம் படையை மீட்டுக் கொள்ளலாம்' என்றான்.

அது கேட்ட புத்திசேனன், 'நாம் சென்று ஆநிரைகளைக் கொண்ட பிறகு, நம் ஐயன் அந்நகரில் இல்லையானால், நம்மை எதிர்த்த பெரும் படையோடு போரிடாமல் பின்வாங்கி வருதல் பழிதரும் செயலாகும். அன்றி, நம் வீரர்கள் வாளேந்திப் போர் செய்தால் குருதிப் பெருக்கு எழும். எனவே, இதை எண்ணித் துணியுங்கள்' என்றான்.

அதைக் கேட்ட மற்றவர்கள் எவ்வாறாயினும் போர் செய்வதே துணிபு என்றனர். அப்பொழுது இவர்களுடைய ஒற்றர்கள் நகருக்குள் சென்று வந்து சீவகனைக் கண்டதாகக் கூறினர். உடனே ஆநிரைகளைக் கவரக் கிளம்புவது என முடிவு செய்தனர்.

42. 'பைந்துகில் மகளிர் தேன் சோர்
பவள வாய் திகழ நாணிச்
சிந்தித்துக் கூந்தல் வாங்கிச்
செவ்வணம் துடைப்பதே போல்'

—உவமையைப் பொருளுடன் விளக்குக.

பசிய துகில் உடுத்த மங்கையர் தம்முடைய தேன் பொழியும் பவளம் போன்ற வாய் சிவந்து விளங்க அதற்கு நாணி, அது தீரும் வழியை ஆராய்ந்து தம் கூந்தலைக் குலைத்து அச் சிவந்த வண்ணத்தைத் துடைப்பதைப் போல—பசிய தோகையையுடைய மயில்கள் இந்திர கோபம் என்ற பூச்சிகளைப் பற்றிய வாறு தமது இறகைக் கோதின. பின்பு தோழர்கள் சென்ற குதிரைகளின் மணி ஓசை கேட்டு வானிலே பறந்து சென்றன.

**43. 'ஒன்றிமுன் விடுத்தவர் மூவர் ஒற்றுட்கள்' வந்து தோழர்களிடம் கூறியதென்ன?**

சீவகனின் தோழர்கள் சீவகனைக் காண வழி, தடமித்த மன்னனின் ஆநிரைகளைக் கவர்தலேயென்று முடிவு செய்தனர். அந்நேரத்தில் மூன்று ஒற்றர்கள் நகருக்குள் சென்று ஒற்று ஆராய்ந்து மீண்டு வந்து தோழர்களிடம் கூறினர். ஒற்றர்கள் கூறியவை :

'தடமித்த மன்னனின் பட்டத்து யானை—வளைய சுந்தரம் என்னும் பெயருடையது. அது கடுமதங் கொண்டு பிளிறியது. கட்டுத் தறியை முறித்துக் கொண்டு, பின் காற் சங்கிலியை அறுத்துக் கொண்டு பிடியொடும் அணைவின்றிப் பாகரைக் கொல்லத் தொடங்கியது. அந்த யானையை நம் சீவகன் அடக்கினன். அவன் அந்த யானையின் மேல் புரோசைக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு ஏறியதைக் கண்ட மக்கட் குழு கடல்போல் ஆரவாரித்தது. சீவகன் 'அப்புது அப்புது, ஆது ஆது, ஐ ஐ' என்று கூறித் தன் கையால் கொம்மை கொட்டினன். களிறு மகிழ்ந்து அவன் குறிப்பின்படி நடந்தது.

மன்னன் கோட்டை மதிலின்மேல் வந்து நின்று சீவகன் யானைமேல் வருவதைக் கண்டு மகிழ்ந்தான். குயவனுடைய கலம் வனையும் திகிரியும், காலனுடைய ஆழியும் போல வட்டமும் வீதியும் பத்தியும் என்னும் இச் செலவுகளிலே அவ் யானையை நடத்தினன். 'இவனல்லது களிறூர்வதற்கு மற்றொருவன் இலன் என்று அரசவையார் கூறிப் பாராட்டிப் பேசினர். பிறகு சீவகன் யானையினின்று இறங்கி அதைக் கம்பத்தில் கட்டிவிட்டுத் தன் தம்பியுடன் தனக்கென உள்ள மாளிகைக்குச் சென்றான். நாங்கள் இவ்வளவையும் கண்ணால் கண்டோம்'.

மாற்றுருவுடன் நகருக்குள் சென்று வந்த ஒற்றர் மூவரும் தனித் தனியே இவ்வாறு கூறினர். மூன்று

பேர் கூற்றுக்களும் ஒத்திருத்தலின் பதுமுகன் மகிழ்ந்து அவர்கட்குப் பரிசில் கொடுத்தான். பிறகு வீரர்கள் யாவரும் வில், வாள், வேல் போன்ற படைகளை ஏந்தி ஆநிரைகளைக் கவரச் செல்லத் தயாராயினர்.

**44. ஆநிரை கவர்தலும் தோழர்கள் சந்திப்பும் பற்றி விளக்குக.**

தோழர்கள் நால்வரும் ஏராளமான படை வீரர்களுடன் சென்று அரசனுக்குரிய ஆநிரைகளைக் கவரத் தொடங்கினர். ஆநிரைகளைக் காத்து நின்ற கோவலர் 'ஆநிரையின் இடையில் காரிப்புள் எழுந்தன. ஆதலால் காவல் செய்யுங்கள்' என்று கூறி நன்கு காத்தனர். தோழர் படையினர் வில்லை வளைத்துக் கணைகளைச் சிதறினர். சங்குகள் முழங்கின; குதிரைகள் கடுக்கின. வீரர்கள் ஆநிரைகளை வளைத்தனர்; ஆயர்கள் போரிட்டனர்; இயலாமல் அரசனுக்கு உணர்த்த ஓடினர்.

அப்பொழுது மன்னன் தன்பக்கத்தில் நந்தட்டனை இருக்கச் செய்து 'உங்கள் நாடும் நகரும் குலமும் விளங்க உரைப்பாய்' என்று வினவ, நந்தட்டன் இராசமாபுரத்தின் சிறப்பைக் கூறிமுடிப்பதற்குள் குழப்பமான ஆரவாரம் நகரில் எழுந்தது. ஆயர் ஓடி வந்து அரசனிடம் நடந்ததைக் கூறினர். அரசன் ஆணையிடப்படை எழுந்தது. யானைப்படையும், தேர்ப் படையும், குதிரைப்படையும், காலாட்படையும் எழுந்தன.

குதிரைகளைப்பூட்டிய வலிய தேரை நந்தட்டன் செலுத்த அதில் ஏறி வஞ்சினம் கூறினன். வஞ்சினம்: 'அரசனுடைய ஆநிரையைக் கவர்ந்தவர்களை இந்நகரில் கொண்டுவந்து, அரசனின் பொற்கழலில் அவர்களுடைய முடியைப்பணியச் செய்யேன் எனில், புகழ் பெற்ற இவ்வுலகில் என் பெயர் பரவாமற் கன்னியர் உள்ளத்தில் தோன்றிய காமம்போல் மறைக!' என்று உரைத்துத் தேரில் சென்றான்.

இவ்வாறு வந்த சீவகனைக்கண்ட தோழர்களில் பதுமுகன், தன் அம்பை எடுத்து அதில் 'அடியேமாகிய யாம் கொற்ற வேந்தனாகிய சச்சந்த மன்னனின் மகனைக் காணவும், அவன் திருவடி நிழலில் வாழவும் வந்தோம்' என்று எழுதி அதை வில்லில் வைத்து ஏவ, அது வந்து சீவகன் ஏறியிருந்த தேரின்மீது முன் பின்னாக மாறி விழுந்தது, சீவகன் அதைக்கண்டு அதையே வியவன் பதுமுகனேயென்று அறிந்து வெள்ளைத்துகிலை வீசித் தன்படையை மேற்கொண்டு போர் செய்யாமல் தடுத்தான்.

தோழர்கள் அருகில் வந்து சீவகனின் இணையடிகளில் விழுந்து வணங்கினர். சீவகன் அவர்களைத் தோளால் தழுவியும், இன்மொழி கூறியும், முடியசைத்தும், கண்களால் அன்புடன் நோக்கியும் சிறப்புச் செய்தான். அவர்களும் பிரிவுத்துயர் நீங்கினர். சீவகன் அவர்களை ஏமமாபுரத்திற்கு அழைத்துச் சென்றான். அரசனை வணங்கினர்.

### 45 காந்தருவத்தை சீவகனுக்கு விடுத்த ஓலையிற் கண்ட செய்திகள் யாவை ?

சீவகனின் தோழர்கள் கனகமாலையை வணங்கினர். அவளும் அவர்களுக்கு விருந்து செய்தாள். பின்னர், சீவகன் தனிமையில் இருந்தபொழுது புத்திசேனன் ஓர் ஓலையைச் சீவகனிடம் கொடுத்தான். சீவகன் அதை வாங்கிப் பிரித்துப்படித்தான். அது காந்தருவதத்தையால் சீவகனுக்கு அனுப்பப்பட்டதாகும். அதில் கண்ட செய்திகள் :

சிற்றடிச்சியாகிய தத்தை தங்கள் அடியில் வீழ்ந்து வணங்குகிறேன். அடிசிலும் மஞ்சனமும் பிறகாப்புக்களும் அடிகளுக்குத் தகுதியுடையனவாக அமைக என்று வாழ்த்தி அடியிலே வீழ்ந்தேன். எம்மன்னன் கலுழவேகன் வயிரமணிக்கலன், கற்பகமாலை, மதுத்தண்டு, உடை, கலவைச்சாந்து, வில், அம்பு, வேல்,

வாள் ஆகியவற்றை நமக்குத் தரன் மூலமாக அனுப்பினான். வந்த தரனை மறைவாக அழைத்துச் சென்று, 'ஓராண்டிற்கு ஐந்து திங்கள் அளவுகுறைவாக இருக்கத் தமருடன் ஏமமாபுரத்திற்குச் சென்றான். இதனைச் சாமியே அருளிச் செய்தான்' என்று கூறினேன். கட்டியங்காரன் சிறை செய்தான் என்ற பழி வெள்ளி மலையிற் பரவுதலை அஞ்சி வேறே சிலவற்றைக்கூறிப் போகவிட்டேன். இனி அரசவுரிமை எய்திப் புகழைப் பரப்புதல் அல்லது மகளிரை மணஞ் செய்கின்ற அதனால் விளைவதொரு புகழில்லை.

அதுவுமன்றி, என் தங்கையாகிய குணமாலை அமைதியில்லாமல் இரவு பகல் அறியாளாய் நின் பிரிவைத் தாங்கமாட்டாளாய், திங்களைப் பார்த்து வெம்மையினால் 'பகலே! சிறியை' என்கிறாள். ஞாயிற்றை நோக்கித்தண்மையால் 'திங்களே! பெரியை' என்கிறாள். அவள் நிலத்தே வீழ்ந்து முகமும் தோளும் கொங்கையும் வடிவழிந்துகிடக்கிறாள். அவள் பிழைப்பாளோ, இறப்பாளோ? அறியேன்.

அவள் வளர்க்கும் கிளி, 'சீவகன் நாளை வருவான்; நையாதே!' என்று கூறும். அவள் அதை விரும்பிக் கேட்டு 'நீ கூறிய நாளை என்னும் நாள் நெருங்கியுள்ளதோ? மிகவும் தொலைவில் உள்ளதோ?' என்று அக் கிளியைக் கேட்பாள்.

மங்கையரைப் பஞ்சணையிலே கலக்கும் புது மணவாளரா்க இருப்பவர் என் நெஞ்சினுள்ளே நீங்காமல் இருப்பார்; ஆதலின் யான் வருந்தாமல் பொழுது போக்குவேன். இனி, அவர் தம்மைக் காப்பாற்றிக் கொள்வாராக' என்று இவ்வாறு அந்த ஓலையிலிருந்ததைச் சீவகன் படித்தான்.

**46. 'என்னே மற்று என்னே நீர் மொழிந்தது என்னே'**
**—இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

சீவகன் தன் தோழர்களை நோக்கி, 'நீர் என் திறத்தை எங்கே கேட்டறிந்தீர்கள்?' என்றான்,

அதற்கு அவர்கள் 'சச்சந்த மன்னனுடைய தேவியும் நின் தாயுமாகிய விசையை தண்டகாரணியம் என்னும் வனத்தில் தவவுருவத்தைத் தாங்கித்துறவோர் உறை யும் தவப்பள்ளியில் இருந்ததைக் கண்டு அவரால் நின் திறம் அறிந்தோம்' என்றனர்.

அதைக்கேட்ட சீவகன் திகைத்து 'நீர்மொழிந்தது என்னே! என்னே! என விரும்பி மறுமுறையும் கூறு மாறு வேண்டினன். அவர்களும் விளக்கமாகக் கூறினர். சீவகன் தன் செந்தாமரை போன்ற கண் களிலிருந்து நீர்சொரிய வருந்தினன். பின்னர்த் தன் தாய் இருக்கும் இடத்தைக் கேட்டறிந்து அத்திசை நோக்கி வணங்கினன்.

**47. 'கள்ளாவி கொப்புளிக்கும் கமழ்பூங்கோதாய்! என் மனத்தின் உள் ஆவி உள்ளாய்'**

**— இடஞ்சுட்டி விளக்குக.**

சீவகன் தன் தாயைக் காணச்செல்ல விரும்பினன். தடமித்த மன்னன் சீவகனது குலம் குருகுலம் என அறிந்து மகிழ்ந்து அவன் விருப்பம்போல் செல்ல விடை நல்கினன். சீவகன் கனகமாலையின் மாளிகையை யடைந்து அவளைக்கண்டு 'வேந்தன் மடமகளே! தேனின் மணத்தை உமிழும் மணம்கமழும் மாலையை யுடையவளே, நீ என் மனத்திலே உறைகின்ற உயிராய் உள்ளாய். ஆதலின் நீ நீங்கினுயல்லை' என்று தன்பிரிவினைக் குறிப்பால் தெரிவித்தான், கனகமாலை வருந்தினள். சீவகன் அவளைத் தழுவிக் கொண்டு, அங்கிருந்து நீங்கி, மன்னன் மக்களையும் தழுவிக் கொண்டு குதிரைமேல் ஏறினன்; சங்குகள் ஒலித்தன.

# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம் - முதல் 5 படலங்கள்

நூற்குறிப்பு :

இராமாயணம் என்பது இராமனது வரலாற்றைக் கூறும் நூலாகும். இது கம்பரால் இயற்றப்பட்டது. எனவே கம்பராமாயணம் என்று வழங்கப்படுகிறது. ராம+அயனம் என்ற வடமொழிப் புணர்ச்சியால் இராமாயணம் என நின்றது. இராமாயணத்தை முதன் முதலில் வான்மீகி முனிவர் வடமொழியில் இயற்றினார். அதனை முதல் நூலாகக் கொண்டே கம்பர் கம்பராமாயணத்தை இயற்றினார். இது வழி நூலாகும். இந்நூல் பரம்பரையான பழைய வரலாற்றைத் தொகுத்துக் கூறுகின்றமையால் இதிகாசம் என்றும் வழங்கப்படும். கம்பராமாயணம், பாலகாண்டம், அயோத்தியாகாண்டம் ஆரணியகாண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டாம், உத்தரகாண்டம் என்னும் ஏழு பெரும் பிரிவுகளையும் படலம் என்னும் சிறு பிரிவுகளையும் உடையது. உத்தர காண்டத்தை ஒட்டக் கூத்தர் இயற்றினார் என்று கூறுவர். கம்பர் தாம் பாடிய இராமாயணத்திற்கு இராமாவதாரம் என்றே பெயரிட்டார்.

கம்பர் என்பது நூலாசிரியரின் குடிப்பெயர் என்பர். இவர்க்குக் கம்பர் என்னும் பெயர் வந்தமைக்குப் பல காரணங்களைக் கூறுவர். கவிச்சக்கரவர்த்தியார், கம்ப நாடர், கம்பநாட்டாழ்வார். கம்பநாடுடைய வள்ளல் என்பன இவரது சிறப்புப் பெயர்களாகும். இவரது ஊர் சோழ நாட்டிலுள்ள திருவழுந்தூர் அல்லது தேரழுந்தூர் என்பதாகும். இவரது தந்தையின் பெயர் ஆதித்தர் என்றும் உவச்சர் குலத்திலே பிறந்தவர் என்றும், திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த

சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டார் என்றும் கூறுவர். சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி, ஏர் எழுபது, திருக்கை வழக்கம் என்பன கம்பர் இயற்றிய வேறு நூல்களாகும். இவர் வாழ்ந்தகாலம் கி.பி. 12ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி என்று சிலரும், கி.பி. 9ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி என்று சிலரும் கூறுவர். 'கவிச்சக்கரவர்த்தியார்', 'கல்வியில் பெரியவர் கம்பர்', 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்', 'கற்பனைக் குக் கம்பன், 'விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்' என்று போற்றப்படுவதாலும், "புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்று பாரதியார் பாராட்டிக் கூறி யுள்ளமையாலும் கம்பரின் பெருமை இனிது புலப்படும்.

நமக்குப் பாடமாக வந்துள்ளது பாலகாண்டத்தில் முதல் 5 படலங்கள்.

கம்பராமாயணம் பாலகாண்டத்தில் 22 படலங்கள் உள்ளன. அவற்றுள் நமக்கும்பாடமாக வந்துள்ளவை முதல் 5 படலங்கள். அவை : 1. ஆற்றுப்படலம், 2. நாட்டுப்படலம், 3. நகரப்படலம், 4. அரசியற்படலம் 5. திரு அவதாரப்படலம் என்பனவாம்.

பாலகாண்டம் என்பது இராமாயணத்தின் கதைத் தலைவனுகிய இராமபிரானின் இளம் பருவத்தில் நடந்த வரலாற்றை யுணர்த்தும் பகுதி என்பதாகும். பாலனது சம்பந்தமான காண்டம் என விரிவதால் ஆரும் வேற்றுமைத் தொகையாகும்.

ஆற்றுப்படலம் : ஆற்றைப்பற்றிய படலம் என விரியும். சரயுநதியின் வளத்தைக் கூறும் பகுதியாகும்.

**1. சரயு நதியின் நீர்ப்பெருக்கு எவ்வாறு வருணிக்கப் படுகிறது ?**

திருநீற்றையணிந்த சிவபெருமானைப் போன்ற வெண்மேகங்கள் கடலுக்குச் சென்று, நீரைப்பருகித்

திருமாலைப்போல் உடல் கருமைநிறம் பெற்றுத் திரும்பின. சிவபெருமானது மாமனுராகிய இமயமலை மன்னன் கதிரவனுல் வெப்பமடைந்துள்ளான். நீரினுல் அவ்வெப்பத்தைத் தணிப்போம் என்று கருதியன போன்று கருமேகங்கள் இமயமலையின் மேல் பரவின. தம்மிடத்துள்ள பொருளையெல்லாம் மனமுவந்து தருகின்ற வள்ளல்களைப்போல் மழைத்தாரைகளை வழங்கின.

மானத்தைப் பொருந்தி அறத்தை நோக்கி மனு நெறி வழுவாத மன்னனது புகழைப்போலவும், ஞான நெறியை நாடுகின்ற அந்தணர்களின் கையிற் கொடுத்த தானம்போலவும் மழைவெள்ளம் பெருகிற்று. மலையின் உச்சி இடை அடி முதலிய இடங்களைத் தழுவி மலையிலுள்ள பண்டங்களையெல்லாம் வாரிக்கொண்டு செல்லும் வெள்ளம், காமுகரின் உச்சி முதலிய உறுப்புக்களைத் தழுவி அவர்களுடைய பொருளையெல்லாம் கைப்பற்றிக்கொண்டு பிறகு அவர்களை விட்டுச்செல்லும் வேசியரையொத்தது.

அந்த வெள்ளமானது முத்துக்களும், பொன்னும், மயிற்பீலியும், யானைக்கோடும், அகிற்கட்டையும், சந்தனக்கட்டையும் ஆகிய பொருள்களை வாரிக்கொண்டு போவதனுல் வணிகர்களை யொத்தது.

மலர்களை வரிசையாகப் பொருந்தியும், மகரந்தங்களைத் தேனேடு கலந்தும், செம்பொன்னைச் சேர்ந்தும், யானைகளின் மதநீர்ப்பெருக்கோடு சேர்ந்தும் பலநிறங்களைப் பெற்றதனுல் அவ்வெள்ளம் வானவில்லைப் போன்று விளங்கியது.

வேரோடு மலைகளைப் பறித்துக்கொண்டும், மரங்களைப் பறித்துக்கொண்டும் தன்பக்கத்திலேயுள்ள இலை முதலிய பொருள்கள் எல்லாவற்றையும் ஏந்திவருதலால் அந்த வெள்ளம், அலைவீசும் கடலில் இராமபிரான் இலங்கைக்குச் செல்லக் கருதியபொழுது அணைகட்ட வளைத்த வானரவெள்ளமே போன்று விளங்கியது.

அவ்வெள்ளம், ஈக்களும் வண்டுகளும் மொய்க்க எல்லை கடந்து மிகுந்த ஊக்கத்தோடு உள்ளே தெளிவில்லாமல் தேக்கெறிந்து சென்ற தன்மையால் கட்குடியர்களைப் போன்று காணப்பட்டது.

பல விலங்குகளோடு பருத்த முகத்தையுடைய யானைகளையும் ஒழுங்குபட இழுத்துக்கொண்டு ஆரவாரம் செய்தலாலும், அழகிய கொடிகள் வந்து தங்குதலாலும் அவ்வெள்ளம் கடலோடு போர் செய்யப்போவதைப் போன்று விளங்கியது.

சூரிய குலத்தில் தோன்றிய அரசர்களுடைய மிகச் சிறந்த நல்லொழுக்கத்தின் தன்மையை மேற்கொண்டு மழை வெள்ளத்தால் தோன்றிய சரயுநதி, இந்நிலவுலகத்தில் வளர்கின்ற உயிர்களுக்கெல்லாம் குழந்தைக்குத் தாய் முலைபோலப் பயன்படும் தன்மையையுடையதாக விளங்கியது.

அந்த சரயு நதியின் வெள்ளமானது, குறிஞ்சி நிலத்து மகளிர் இடித்துச்செய்த சுண்ணமும்குங்குமமும் கோட்டமென்னும் மணப்பண்டமும், ஏலக்காயும், சந்தனமும், வெட்சிப் பூவும், நரந்தம் புல்லும், சுரபுன்னைப்பூவும், கொன்றைப்பூவும், வேங்கைப்பூவும், கோங்கும், பச்சிலையும், கண்டில் வெண்ணெய் என்னும் பூண்டும், இனியதேன் கூடும், அகில்கட்டையும் ஆகிய இவற்றோடு கூடி மணம் வீசும் தன்மையைப்பெற்றது.

பிறகு அந்த வெள்ளம், வேடர்கள் வாழ்கின்ற சிறிய ஊர்களை நிலைகெடச் செய்தும், தான் போகின்ற இடங்களில் வேடப்பெண்கள் தம் வயிற்றில் அடித்துக்கொண்டு ஓட அவர்களை ஓட்டியும், அம்புகளையும் விற்களையும் தன்னிடம் கொண்டு உலகத்தாரை அலையச் செய்கின்ற தன்மையால் அரசர்களின் சேனையை ஒத்திருந்தது.

உறைந்த தயிரும் பாலும் வெண்ணெயும் தெளிந்த நெய்யும் ஆகிய இவற்றை உறியுடன் வாரியெடுத்து

உட்கொண்டும், குருந்த மரத்தையும் மருதமரத்தையும் முறித்துத்தள்ளியும், மான்குட்டி போல மருண்ட பார்வையுடைய இடைச்சிகள் அணிந்த ஆடையைக் கவர்ந்து செல்லும் தன்மையால் காளியன் என்னும் பாம்பின் மீது ஆடுகின்ற கண்ணனை ஒத்திருந்தது அந்த வெள்ளம்.

பின்னும் அவ்வெள்ளமானது, மனிதன் கதவுகளை முட்டி, உழவர்கள் மகிழ்ச்சியினால் ஆரவாரிக்கப் பொருந்தி, நீர் நிலைகள் நிரம்பி வழியவும், வண்டுகள் குடையவும், மணிகள் சிந்தவும், நீரைத் தள்ளிக் கொண்டு போய் வெள்ளம் கரையையறுத்துக் கொண்டு போகாதபடி அங்கு நாட்டிய முளை முறியும்படி அலை யாகிய கைகளால் வீழ்த்தி மதமழையையுடைய யானை போல மருதநிலத்திலே போய்ச் சேர்ந்தது..

முல்லை நிலத்தைக் குறிஞ்சிநிலமாகச் செய்தும், மருத நிலத்தை முல்லை நிலமாகச் செய்தும், நெய்தல் நிலத்தை மருதநிலமாகச் செய்தும் இங்ஙனம் அந்தந்த நிலத்திலுள்ள பொருள்களையெல்லாம் வேறு வேறு இடத்திற்கு மாறிச்செல்லுமாறு செய்து, உயிர்கள் பிறக்கு மாறு செல்லும் நால்வகைக் கதியில் அவ்வுயிர் களை விடாது பின்பற்றிச் செல்லும் இருவினைகளைப் போல் அவ்வெள்ளம் போயிற்று.

வாய்க்காலில் வெள்ளம் வருதலைக் குறிப்பிக்கும் பறை ஒலிக்க விரைந்து சென்று நீர்த்திவலையும் பொன்னும் முத்தும் ஆகியவற்றை அலைக்கரங்களால் அள்ளி வீசிப் பூமி கிழியும்படி சென்று ஒருகால் வாயி லிருந்து மற்றொரு கால்வாயாகக் குலம் பிரிவது போல் வெள்ளம் பிரிந்து சென்றது.

இமயமலையிற் பிறந்து வந்து கடலில் சேர்ந்த அச்சரயு நதியின் வெள்ளமானது அளவற்ற வேதங் களாலும் சொல்லமுடியாத பரம்பொருள் போன்றது இது என்று சொல்லுமாறு ஆதிகாலத்தில் சரயுநதி என்ற ஒரு பெயருடன் இருந்து ஏரி குளம் முதலிய

இடங்களில் எல்லாம் பரந்த ஆராய்ச்சியையுடைய பல சமயத்தவர் அப்பரம்பொருளைச் சொல்லும் பொருள் பலபடியிருப்பதுபோல பலபடியாகப் பரவியிருந்தது.

சோலைகள் தோறும், பொய்கைகள்தோறும், தடாகங்கள் தோறும், கமுகந் தோட்டந்தோறும், வயல் தோறும், நாற்கதியாகவுள்ள உடம்புதோறும் உயிர் சென்று புகுதல்போல அவ்வெள்ளம் சென்று உலாவிற்று.

2. அடியில் வரும் உவமைகளைப் பொருளோடு பொருத்தி விளக்குக —

'உள்ளி உள்ள எல்லாம் உவந்து ஈயும் அவ் வள்ளியோரின்'

'ஞானம் முன்னிய நான்மறையாளர் கைத்தானம் என்ன'

'விலையின் மாதரை ஒத்தது'

'வணிக மக்களை ஒத்தது'

'வானவில்லை நிகர்த்தது'

'புணரிமேல் பொரப்போவதும் போன்றது'

'தாய்முலை அன்னது, இவ் உரவுநீர் நிலத்து ஓங்கும் உயிர்க்கு எலாம்'

'செயிர்வரும் கொற்றமன்னர் சேனையை மானும்'

'பொறிவரி அரவின் ஆடும்புனிதனும் போலும்'

'செல்லுறு கதியில் செல்லும் வினை என'

'தொலலையில் ஒன்றே ஆகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்பல் பெருஞ்சமயம் சொல்லும் பொருளும்போல்'

'ஓதிய உடம்புதோறும் உயிர் என'

இத்துணை உவமைகளும் சரயுநதியின் வெள்ளப் பெருக்கினையும் அது குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம் ஆகிய நிலங்களில் பாய்ந்த தன்மையினையும் விளக்குதற்கு வந்தனவே. இவற்றின் விளக்கத்தை வினா எண் 1ல் சிறு பத்திகளில் காண்க

3. கோசலமென்னும் கோதிலா நாட்டின் சிறப்புக்களைத் தொகுத்து எழுதுக. M A. 1974 (அல்லது)
கம்பன் காணும் கற்பனை உலகத்தைப் பாலகாண்டத்தின் வழி எடுத்துக் காட்டுக. M A. 1972 (அல்லது)
கோசலமென்னும் கோதிலா நாடு என்று கம்பர் போற்றியுள்ள கோசல நாட்டின் ஏற்றங்களைத் தொகுத்து எழுதுக. M.A. 1970.

கம்பராயணம் பாலகாண்டத்தின் இரண்டாவது படலம் நாட்டுப்படலமாகும். அதில் கோசல நாட்டின் சிறப்பைக்காணலாம். சரயுநதி பாய்வதால் கோசல நாடு வளம் பெற்றது. அந்நாட்டு வயல்களின் வரம்புகளில் எல்லாம் முத்துக்களும், மதகுகளிலெல்லாம் சங்குகளும், வாய்க்கால்களின் கரைகளிலெல்லாம் பொற்கட்டிகளும், எருமை வீழ்ந்து உழக்கும் நீர்க்குழிகளிலெல்லாம் செங்கழுநீர் மலர்க்குவியலும், பரம்படித்த இடங்களிலெல்லாம் பவழங்களும், செந்நெற்பயிருள்ள இடங்களிலெல்லாம் அன்னப்பறவைகளும், கரும்புகளிலெல்லாம் செந்நிறத்தேன் பெருக்கும், அழகிய சோலைகளிலெல்லாம் வண்டுகளின் கூட்டங்களும் உள்ளன.

அந்தக் கோசல நாட்டின் மருதநிலத்து எல்லையில், ஆற்றுநீர் பாய்வதனால் உண்டான ஓசையும், உழவர் கரும்பாலையை ஓட்டுவதனால் உண்டான ஓசையும், கரும்பாலையிலிருந்து கருப்பஞ்சாறு பாய்வதனால் உண்டான ஓசையும், நீர்க்கரைகளிலுள்ள சங்குப்பூச்சிகளின் வாயிலிருந்து தோன்றும் ஓசையும், எருதுகள் ஒன்றின் மீது ஒன்று பாய்ந்து தாக்குதலினால் உண்டாகும் ஓசையும், நீரினிடத்து எருமைகள் விழுதலினால் உண்டாகிய ஓசையும் ஆகிய இவைபோன்ற ஓசைகள் தமக்குள் ஒன்றோடொன்று கலந்திருப்பதற்கு இடனாகும்.

மருதநிலமாகிய அரசன், சோலையாகிய நடன சாலையில் மயில்களாகிய நடனமாதர் நடனஞ்செய்யவும், தாமரைக்கொடிகளாகிய மகளிர் மலர்களாகிய விளக்குகளை ஏந்தி நிற்கவும், மேகங்கள் மத்தளம்

போல் ஒலிக்கவும், தெளிந்த நீரில் தோன்றும் அலைகள் திரைச்சீலைகளின் தன்மையைக் காட்டவும், தேனை யொத்த மகரயாழின் இசைகளையொத்து வண்டுகள் இனிமையாகப் பாடவும், கருங்குவளை மலர்களாகிய தனது கண்களால் மலரவிழித்துப் பார்க்குமாறு பெருஞ் சிறப்போடு தங்கி நிற்பான்.

வண்டும் இலக்குமியும் தாமரை மலர்களில் தங்குவன. மகளிருடைய கண்களும் மன்மதனுடைய அம்புகளும் காமுகரைத் தாக்குவன. கடலில்தோன்றும் பவழங்களும் முத்துக்களும் மேகங்களினுலுண்டாகின்றன. உண்மையும் சாத்திரங்களின் பொருளும் அந்நிலத்தில் வாழும் மக்களின் நாவிலே தங்குவன.

சங்குகள் நீரில் இனிதாகக் கிடக்கும். எருமைகள் மரத்தின் நிழலில் இனிது உறங்கும். வண்டுகள் மகளிரும் ஆடவரும் அணிந்த பூமாலைகளில் இனிதாகக் கிடக்கும். திருமகள் தாமரைமலரில் இனிதாக அமர்ந்திருப்பாள். ஆமைகள் சேறுகளில் இனிது அமர்ந்திருக்கும். முத்துச்சிப்பிகள் நீர்த்துறைகளில் உறங்கும். அன்னப்பறவைகள் நெற்போரில் உறங்கும். மயில்கள் சோலைகளில் இனிது தங்கியிருக்கும்.

கலப்பைகள் உழுதலால் மேல் எழுந்த பொன்னும் சங்குகள் வெளிவிட்ட முத்துக்களும், நிலங்களில் ஒளிரும் இரத்தினங்களின் தொகுதியும், நெற்கதிர்களும் மீனும், கரும்பும், வண்டும், உழத்தியரின் முகமும், தாமரைமலர்களும் கண்மலர்ந்து விளங்கும்.

சிறிய யாழைக்கொண்ட பாணர்கள் வடித்த கள்ளைக் குடித்து முழவம் ஒலிக்கப் பாடும் பாடல்கள், மாடங்களின் மேலிடங்களில் பொற்கட்டிலில் உறங்குகின்ற மகளிரை இனிய உறக்கத்திலிருந்து எழுப்பும்.

கரும்பாலைகளில் சிதைந்த கரும்பிலிருந்து வெளிவந்த சாறும், தெங்கம்பாளையினின்று தோன்றிய கள்ளும், சோலைகளிற் பழுத்த பழங்களின் சாறும், தேன்கூட்டின் தேனும், பூமாலைகளிலிருந்து சிந்திய

தேனும் எல்லையில்லாமற் பெருகிச்சென்று கடலினிடத்துப்போய்ச்சேர அக்கடலில் வாழும் மீன்களெல்லாம் அத்தேன்களை உண்டு களிப்படையும்.

கள் ஒழுகும் வாயையுடைய உழவர் இன்சொற்களைப் பேசும் உழத்தியரின் அகன்று நீண்ட கண் கை கால் முதலிய உறுப்புக்களை ஒத்திருக்கும் கருங்குவளை மலர் தாமரைமலர் செவ்வாம்பல் மலர்களாகிய களை களைத்தவிர வேறு களையில்லாமையால் அவற்றைக் களைய மனமில்லாமல் களைபறிக்க வேண்டிய காலங்களில் உலாவிக்கொண்டிருப்பர்.

கரிய கடலின் அலைகள் புது வெள்ளத்தில் நீராடும் மகளிருடைய மலர்களும் கத்தூரிக்குழம்பும் பொருந்திய கூந்தலில் மிக்கிருக்கும் மணமே நாறும் என்ருல், ஆடவர் விரும்பும் மகளிரின் மிகுதியைச் சொல்ல முடியுமோ?

குண்டலத்தை யணிந்த ஆடவர் மூழ்கின நீரின் மிகுதி சோலைப்பரப்புக்களும் நெற்பயிர்கள் உண்டாகும் இடமும் பொருந்திய மருதநிலம் முழுவதிலும் பச்சைக் கருப்பூரம் முதலிய கலவைப் பொருள்களோடு கூடிய சந்தனக்குழம்பை வண்டலாகப் படியுமாறு செய்து ஓட அவ்வண்டல் படிந்த மண்ணிலும் வண்டுகள் மொய்க்கும்.

வயல்களில் சேல்மீனை யொத்த கண்களையுடைய மகளிரிடத்து நடைகற்க வேண்டித்திரிகின்ற பெண் அன்னப் பறவை, தாமரை மலராகிய படுக்கையில் கிடத்திய இளங்குஞ்சு, எருமைகள் தமது கன்றை நினைத்துக் கனைப்பதனல் அவற்றின் முலையினின்று தானே பெருகிய பாலைக்குடிக்கப் பிறகு இனிது உறங்குமாறு பசுநிறமுள்ள தவளை தாலாட்டும்.

சோலைகளில் சேவலும் பெடையும் ஆகிய குயில்கள் மணஞ்செய்ய, மரக்கிளைகளில் மயில்கள் மகளிர் ஆடும் நடனசாலைகளைவிட அச்சோலைகள் அழகுண்டாகுமாறு ஆட, அரச அன்னப்பறவைகள் தாமரை

மலர்களாகிய படுக்கையினின்றும் துயில்நீங்குமாறு வண்டுகள் காலையில் செவ்வழிப் பண்ணைப்பாடும்.

குறிப்பு :—இதுவரையில் கண்டது கோசலநாட்டின் மருதநிலவளமாகும். இன்னும், மக்களின் பொழுது போக்கு, விருந்தோம்பல், செல்வச்செழிப்பு, நானில வளங்களும் மயங்கிக்கிடத்தல், பல்வகைப்புகை பரவுதல், பலவளங்கள், வறுமை முதலியன இன்மை, விழாவும் வேள்வியும், ஒழுக்கத்தால் அறம் நிலைபெறுதல் ஆகிய தலைப்புக்களிலுள்ள கருத்துக்களும் சேர்ந்தால்தான் மேலேகண்ட வினவுக்கு விடையாகும். மருதநிலவளத்தைச் சுருக்கி ஏனையவற்றையும் (வினு 4முதல் 10வரையுள்ளவற்றை) சேர்த்து அமைத்துக் கொண்டால் போதுமானது. இனி ஒவ்வொரு தலைப்பும் தனித் தனியே காணப்பெறும்.

**4. கோசல நாட்டு மக்கள் எவ்வாறு பொழுது போக்கினர் ?**

மகளிருடன் வதுவைச் சடங்கில் பொருந்தியிருப்பவர்களும், பருந்துடன் செல்லும் அதன் நிழலைப்போல இயலை யொத்துச் செல்லும் இராகத்தின் இனிமையை அனுபவிப்பவரும், அமுதினும் இனிய நூற் கேள்விகளைத் தமது செவியாகிய வாயால் உட்கொள்பவரும், விருந்தினருக்கு அன்னமளித்தலை விரும்புபவர்களும், கோழிச் சேவல்களைப் போரிட விட்டு அவற்றின் வெற்றி தோல்விகளைக் காண்பவர்களும், ஒரு எருமைக் கடாவுடன் மற்றொரு எருமைக் கடா போரிடுதலைக் கண்டு ஆரவாரிப்பவர்களும் இன்பமாகப் பொழுது போக்கினர்.

இன்னும், தாமரையின் முளை ஒடியவும், முத்தும் பொன்னும் தள்ளப்படவும், இரத்தினங்கள் சிதறவும், சலஞ்சலம் என்னும் சங்குகள் வாய்விட்டு அழவும், உழுபடைச்சாலில் மீன்கள் துள்ளித் துடிக்கவும், ஆமைகள் தமது தலையையும் பக்கத்துள்ள நான்கு கால்களையும் தமது உடம்புகளில் அடக்கிக் கொள்ளவும், மதகுகளிற் சென்று வரால் மீன்கள் ஒளித்துக்

கொள்ளவும், உழுகின்ற கடாக்களை அதட்டிச் செலுத்தும் உழவர்கள் தம் உழவுத் தொழிலையே பொழுது போக்காகச் செய்தனர்.

5. **நாட்டு மக்கள் வளம் பல பெருக்கி விருந்தோடு உண்டலை விளக்குக.**

மனுமுறை யறிந்து அவாவை நீக்கிச் சினங் கொள்ள வேண்டிய பொழுது சினங் கொண்டு, கடமைப் பொருள்களை அறிந்து பெற்றுத் தன் குடையின் கீழ் வாழும் உயிர்களிடத்து இரக்கம் கொள்ளும் அரசன் பாதுகாத்தலினால் சுமை நீங்கி இளைப்பாறுகின்ற பூமி தேவியைப் போலக் கப்பல்கள் நிறைந்த பாரத்தை ஏற்றிச் சென்று இறக்கிவிட்டு, நெய்தல் நிலத்தில் ஓய்வு கொள்ளும்.

உழவர்கள் அரிந்த நெல்லரிகளை எடுத்து வானளாவக் குவித்த நெற் போர்களைக் கடாவைக் கொண்டு துவைப்பிப்பர். கீழ் வீழ்ந்த நெற்களைக் குவித்து ஏழைகளுக்குக் கொடுத்து எஞ்சிய தானியத்தை விருந்தோடு உண்ணுமாறு தம் வீடுகளுக்குக் கொண்டு போக வண்டிகளில் ஏற்றி நிலமும் முதுகு நெளியும்படிச் செலுத்துவார்கள்.

கதிராக வயலில் உள்ள தானியங்களையும், சோலையிலுள்ள பலா மரங்களில் இருக்கும் பழங்களையும், துவரை முதலிய பருப்பு வகைகளையும், கொடியிலுண்டாகும் பொருள்களையும், மஞ்சள் இஞ்சி முதலிய கிழங்கு வகைகளையும் உழவர்கள், மலர்களிலிருந்து தேனைக் கொள்ளும் வண்டுகளைப் போல எடுத்துக் கொள்வார்கள்.

அந்நாட்டின் எவ்விடமும் அந்தணரை உணவுண்ணச் செய்து பிறகு தம்முடைய வீட்டில் விருந்தினரோடும் சுற்றத்தினரோடும் தாமும் இருந்து, மா பலா வாழை என்ற முப்பழங்களினாலும், பல வகைப் பருப்புக்களினாலும் நெய்யினாலும் தயிர்க் கட்டிகளினாலும் கண்டு சர்க்கரைகளினாலும் சோற்றினாலும் உண்கின்ற ஆரவாரத்தை யுடையது.

6 கோசல நாட்டின் செல்வச் செழிப்பை விளக்குக.

ஆண் வண்டுகள் இளம் பருவ மங்கைமார்களின் ஒளி பொருந்திய முகத்திலுள்ள கண்ணை அழகிய பெண் வண்டாகுமென்று கருதி அன்போடு நாள் தோறும் மருத நிலத்தில் தங்கின. மருத நிலத்தில் மண்மதனையும் வென்ற மங்கையரின் கொங்கைகள் வேலையாட்களைச் சினந்து வணங்கச் செய்யும் தென்னம் பாளையிலுண்டான கள்ளைக் குடித்து வாளைமீன்கள் மதங்கொள்ளும்.

மேகங்கள் திரிவன போன்ற கருநிறமுள்ள எருமைகள் தமது கன்றுகளை நினைத்தலால் சுரப்பெடுத்த மெல்லிய முலைகள் பாலைத் தாரையாகச் சொரிய அதனால் செந்நெற் பயிர்கள் தழைக்கும்.

குறைபாடில்லாத சமையல் வீட்டிலே கீழே வார்க்கப்பட்ட, உலையில் சேர்ப்பதற்காக அரிசி கழுவிய கழுநீரினுடைய வெள்ளமானது, கமுகஞ் சோலையின் வழியே போய் நடப்பட்ட செந்நெல் நாற்றுக்களை வளர்க்கும்.

கோழிகள் தமது காலிரண்டினாலும் குப்பைகளைச் சீய்த்தலால் குப்பை மேடுகளில் விளங்குகின்ற இரத்தினங்களைக் குருவிக் கூட்டங்கள் மின்மினிப் பூச்சியென்று கருதிக் கூட்டிற் கொண்டு போய் வைக்கும்.

இடைப் பெண்கள் பாறைபோல் தோய்ந்துள்ள வெண்ணிறத் தயிரைக் கடைகின்ற மத்தின் ஓசை விட்டு விட்டு ஒலிக்கவும், தம் கையில் அணிந்துள்ள வெண்ணிறமான சங்கு வளையல்கள் வாய் விட்டுக் கத்துவது போலப் பேரொலி செய்யவும், மெலிந்த தமது இடைகள் முன்னே போய் வளையவும் தமது அழகிய கைகளினால் வருந்திக் கடைவார்கள்.

தினைப்புனங்களில் இளங் கிளிகள் ஒலிப்பன. அரும்புகளில் மிக்கஇளமையுள்ள வண்டுகள் ஒலிப்பன. நீர் நிலைகளில் பறவைகளின் கூட்டமும், கொடையாளி

களின் வீடுகளில் உலக்கைப் பாட்டுகளும் ஒலிப்பன வாகும்.

**7. கோசல நாட்டில் நானில வளமும் பெருகி, மயங்கிக் கிடத்தலை விளக்குக.**

கோசல நாட்டில் பறிக்கப்பட்ட பாக்கைக் கொழிப் பவர் குப்பை என எடுக்கும் பொருள், காமக் குறிப்பைக் கற்காத கரிய கண்களையுடைய நெய்தல் நிலத்துப் பெண்கள் சிறு சுள்கு நிறையக் கடலில் இருந்து வாரி வந்து தமது வீட்டின் முன் புறத்தில் சிறு வீடு கட்டிச் சிந்திய முத்துக்களையே யாகும்.

செம்மறியாட்டின் பேடுகள் பெற்ற கடாக்கள் இடி இடித்தாற் போலப் பேரொலி யுண்டாகுமாறு ஒன்றை யொன்று மோதுதலால் உண்டான பேரொலியினால் அஞ்சி மலைகளில் தங்கியுள்ள மேகம் வாய் திறக்க அதனால் மின்னல் உண்டாகும்.

கன்றுகளையுடைய பெண் யானைகளை நீக்கிவிட்டு ஆண் யானைகளின் கூட்டங்களை வலிய சங்கிலிகளினால் கட்டுகின்ற காடுகளிலுள்ள யானையகப்படுத்தும் இடங் களினால் நிறையப் பெற்ற மலைகளைத் தமது இடமாகக் கொண்ட சிறந்த வீரர்களின் கூட்டங்களிலிருந்து தோன்றும் பேரொலி இனிய பெட்டைகளுடன் கூடிக் களிக்கும் ஆண் அன்னங்களை அச்சத்தினால் நிலைகெட்டு ஓடச் செய்யும்.

வள்ளிக் கிழங்கைத் தோண்டி யெடுப்பவர்கள் கிழங்கை எடுக்கும்பொழுது உடன் எடுப்பனவாகிய சிறந்த இரத்தினங்களை யெறிவதனால் அவை அருகிலுள்ள மாமரங்களில் தொங்குகின்ற மாம்பழங்களின் மேல்பட்டுத் தேன் துளியைச் சிந்துவனவாயின. புன்னை மலர்க் கொத்துக்களில் தாமரை மலரில் தங்கும் அன்னம் படுத்துக் கொள்வனவாகும்.

மருதநிலப் பெண்களின் குரவைக்கூத்து ஆடுகையில் பாடும் பண், கொன்றைக் குழலையும் வேய்ங்குழலையு

முடைய இடையர்களின் முற்றத்தில் இருக்கின்ற கன்றுகளைத் தூங்கச் செய்யும். நெய்தல் நிலத்து மக்களிர் பாடுகின்ற செவ்வழிப்பண் புன்செய்ப் பயிர் விளையும் இடமான புனங்களில் காக்கும் காவல் சோர்வு படும்படிப் போய் ஒலிக்கும்.

மூங்கில்கள் காற்றினால் மோதுவதனால் மலைப் பாறைகளின்மீது கட்டிய தேன் கூடுகள் உடைய, அம் மலைகளிலிருந்து பாம்பு தொங்குவது போன்ற தோற்றத் துடன் பாய்கின்ற புதிய தேனொழுக்கைச் சேம்புகள் தமது மடல் இற்றுப் போம்படிச் செங்கழு நீர்க் கொடி களைக் கொண்ட குளங்களின் மதகுகள் கக்கச் சங்குகள் அத்தேனை உண்ணும்.

8. **கோசல நாட்டில் ஈகையும் விருந்தும் நடைபெறும் சிறப்பைக் கம்பர் எவ்வாறு கூறுகிறார்?**

மிகப் பெருங் கண்களையுடைய பிறை போன்ற நெற்றியைக் கொண்ட மகளிர்க்கெல்லாம் நிலைபெற்ற செல்வமும் கல்வியறிவும் உண்டாயிருத்தலால், வறுமை யால் வருத்தமடைந்து வந்தவர்க்கு அவர் வேண்டிய வற்றைக் கொடுத்தலும், வந்த விருந்தினரை உபசரித் தலும் அல்லாமல் நாள்தோறும் அம்மகளிரிடத்து நேர் கின்ற செயல்கள் ஆகும்.

வஞ்சகமில்லாது யாவர்க்கும் ஒரே வகையாக உண வளிக்கும் அன்னசாலையின் எல்லாவிடங்களிலும் அரி வாளால் அரிந்து குவித்த காய்கறிகளின் திரளும், பருப்புக் குவியலோடு நிறைந்த வெண்மையான அரிசிக் குவியல்களும் கிடைக்கும்.

9 **நல்லதன் நலனும் தீயன பயிலாமையும் பற்றிக் கம்பர் எவ்வாறு விளக்கியுள்ளார்?**

எவரிடத்தும் தீவினைச் செயல் இல்லாமையால் அகால மரணம் கோசல நாட்டில் உண்டாவதில்லை. தமது மனத்தில் அந்நாட்டு மக்களுக்கு நேர்மைக்

குணமே யிருத்தலால் சினம் விளைவதில்லை. அவரிடம் சிறந்த தருமச் செயலே யல்லாமல் தீமைச் செயல் இல்லாமையால் அந்நாட்டவர் நற்கதியிற் சேர்தலன்றித் தீக்கதியிற் சேர்வதில்லை.

செல்ல வேண்டிய வழியை விட்டுப் பரந்து செல்வன வெள்ளங்களே; அந்நாட்டு மக்களல்லர். தமக்குரிய குறியழிந்தன தொய்யிலணிந்த மகளிர் தோள்களே; நெற்கதிர்ப் போர் முதலியன அல்ல. சிறியனவாயிருப்பன மங்கையரின் மெலிந்த இடைகளே; அந்நாட்டிற் சிறுமைபெற்ற பொருள் வேறு எதுவுமில்லை. மணமுள்ளன மடந்தையரின் கூந்தலே; வெறி பிடித்தவர் வேறு இல்லை. (மணம்—வெறி)

**10. மங்கையரால் அழகுற்ற கோசல நாட்டின் சிறப்பையும் அந்நாட்டின் செல்வச் சிறப்பையும் விளக்குக.**

அகில் கட்டையிலிருந்து தோன்றும் புகையும், சமையல் அறையின் புகையும், கரும்பாலையின் புகையும், யாகசாலையின் புகையும் ஒன்று கலந்து மேகங்கள்போல மிகுந்து எங்கும் பரவின. மயில்கள் அந்நாட்டு மகளிரின் சாயலைப் பெற்று இயன்றன. மகளிரின் அணிகலன்களின் ஒளியைப் போல வெயில் வீசியது. அவர்களின் கூந்தலைப் போல மேகங்கள் சோலைகளில் தவழ்ந்தன. அம்மகளிரின் கண்களைப் போலக் கயல் மீன்கள் கழனிகளில் பிறழ்ந்தன.

நீராடுகின்ற மகளிரின் செந்நிற மூட்டிய வாயிதழ்கள் போலக் குமுத மலர்கள் மலர்ந்தன. நீர் மடைகளில் உலவும் அன்னப் பறவை போல மெல்லிய நடையோடு செல்லும் உழத்தியர்களின் முகம்போலத் தாமரை மலர்கள் மலர்ந்தன.

அந்நாட்டு மகளிரின் கூரிய விழிகள் தமக்கு உவமையாக ஏற்பட்டுள்ள பொருளை உவமையாகா என்று சொல்வனபோல் இகழ்ந்தன. அம்மங்கையரின் நடை பெண் யானையின் நடையினை நல்குவன. கொங்கை

கள் தாமரை யரும்புகளை நகுவன. முகங்கள் திங்களை நகுவன.

அந்நாட்டில் எங்கும் பரவிக் கிடக்கும் மணிகள் கதிரவனின் ஒளியோடு மாறுபட்டு ஒளிவிடும். இளநீர்கள் மகளிரின் கொங்கைகளோடு மாறுபடும். பாலின் மேல் தோன்றும் நுரையோடு மகளிர் அணியும் வெண் பட்டுக்கள் மாறுபடும். திருமணத்தில் அடிக்கப்படும் முரசங்கள் மேகத்தோடு மாறுபட்டு ஒலிக்கும்.

மேகங்கள், அந்நாட்டிலுள்ள சோலைகளை ஒக்கும். மேருமலை, கழனியிலிருந்து அரிந்து போட்ட நெற்போர்களோடு நிகர்க்கும். நிறை கடல், அந்நாட்டு நீர் நிலைகளுடன் ஒப்பாகும். தேவலோகங்கள், செல்வம் மிகுந்த அந்தக் கோசல நாட்டுடன் நிகர்க்கும்.

நெற்குவியல் அல்லாதன முத்துக்களும், அம்முத்துக் குவியல் அல்லாதன கடலிலிருந்து உண்டாகிய உப்புக்களும், உப்புக் குவியல் அல்லாதன நதிகளால் கொண்டு வந்து குவிக்கப்பட்ட ~~பொன் முதலிய நதிகளால் கொண்டு வந்து குவிக்கப்பட்ட~~ பொன் முதலிய நிதிகளின் தொகுதிகளும், அந்நிதிகளல்லாதன இரத்தினங்கள் பொருந்திய மணல் மேடுகளுமாகும்.

இளைய மங்கையர் பந்து விளையாடும் இடங்கள் சந்தனச் சோலைகளல்ல; சண்பகச் சோலைகள் போலும். மயில் ஊர்தியையுடைய கந்தனைப் போன்ற ஆடவர் கலைகளை ஆராயும் கழகங்கள் நந்தவனம் அல்ல; தேன் சிந்தும் முல்லைவனம் போலும்.

குயில்கள் இளமங்கையரின் பாகு போன்ற சொற்களைக் கற்றுக் கொள்வன. மயில்கள் அம்மங்கையரின் நடனத்தைப் பார்த்துப் பழகுவன. இளைய பெண் சங்குகள் அம்மங்கையரின் பற்களை யொத்த முத்துக்களைக் கக்குவன.

கள் விற்போரின் வீடுகளில் பழைய கள் உள்ளன. உழவுக் கருவிகள் அந்தக் கள்ளைப் பருகும் உழவரு

டைய வீடுகளில் உள்ளன. மணத்துக்குரிய இசைக் கருவிகளின் ஒலி மணம் புரியும் இளைஞரின் வீடுகளில் உள்ளன. வீணைகள் பாணர்களின் மனைகளிலுள்ளன.

பூமாலைகள் இளந் தேனைச் சொரிவன. மரக் கலங்கள் பருத்த மணிகளையும் பொன்னையும் சொரிவன. காற்றுக்கள் அமுதத்தைச் சொரிவன. கவிஞரின் பாடல்கள் செவிகளால் நுகரப்படும் இனிய சுவைகளைச் சொரிவன.

தோகையையுடைய ஆண் மயில்கள் சோலையில் வந்த மகளிரிடத்துத் தம் பேடைகளின் சாயலைக் கண்டு அவர்களைப் பெண் மயில் என்று மயங்கி, காளைப் பருவமுள்ள ஆடவரின் மனம் போல அம்மகளிருடன் தொடர்ந்து செல்லும்.

**11. கோசல நாட்டில் வறுமை முதலியன இல்லாமையைக் கம்பர் எவ்வாறு விளக்குகிறார்?**

கோசல நாட்டில் சிறிதும் வறுமையில்லாமையால் கொடைச் சிறப்புத் தெரிவதில்லை. போர் செய்பவர் இல்லாமையால் வலிமைச் சிறப்புத் தெரிவதில்லை. பொய் பேசுதல் இல்லாமையால் உண்மையின் சிறப்புத் தெரிவதில்லை. பல பெரியோரை யடுத்துக் கேட்கும் கேள்வி ஞானம் மிக்கிருத்தலால் அறிவுடைமையென்பது அங்குச் சிறந்து தோன்றுவதில்லை.

எள், செந்தினை, சோளம், சாமை, கொள் ஆகியவற்றைக் கொண்டுவரும் வண்டிகளும், உப்பளத்தினின்று உப்பைக் கொண்டுவரும் வண்டிகளும் ஒன்றோடொன்று கலந்துவிடும்.

மோட்சத்தை யடைவதற்குரிய உபாயத்தைப் பெறாத உயிர்கள் தாம் செய்த வினைப் பயனை நுகர நால்வகைக் கதிகளில் பிறத்தலைப் போலக் கண்ட சர்க்கரையும் தேனும் வெல்லப் பாகும் தயிரும் கள்ளும் இடம் பெயர்ந்து செல்லும்.

வாய்ப் பாடலும் வேய்ங் குழலின் இசையும் தனித் தனியே ஒலிப்பதற்கு இடனாகிய வீதிகளில் நதியும் நதியும் வந்து ஒன்றோடொன்று எதிர்ப்பட்டனவென்று சொல்லுமாறு திருவிழாவின் பொருட்டும் வேள்வியின் பொருட்டும் வருகின்ற மக்கள் கூட்டம் கலக்கும்.

சங்குகளின் ஓசையும் பறை யோசையும் மத்தளத்தின் ஓசையும், உழவர்கள் தமது வாயினாலே உழவு மாடுகளை அதட்டுகின்ற ஒலிக்குள்ளே அடங்கிவிடும்.

**12. ‘உயரும் சார்வு இலா உயிர்கள் செய்வினைப்
பெயரும் பல்கதிப் பிறக்குமாறு போல்’**

**—உவமையைப் பொருளோடு பொருத்தி விளக்குக.**

உயர் கதியை யடைவதற்குரிய பற்றுக் கோட்டைப் பெறாத ஆன்மாக்கள் தாம் செய்த வினைப் பயனை நுகர்வதற்கு மாறி மாறி வருகின்ற மக்கள் தேவர் நரகர் விலங்குகள் என்ற நால்வகைக் கதிகளில் பிறக்கின்ற தன்மைபோல என்பது உவமை.

கோசல நாட்டில் தோன்றிய கண்டசருக்கரையும் தேனும் இனிய வெல்லப் பாகும் இடையருடைய ஊரில் உண்டாகின்ற தயிரும் கள்ளும் ஓரிடத்தினின்று மற்றோரிடத்திற்குச் செல்லும்.

ஒரு கதியிற் பிறந்த ஆன்மாக்கள் மற்றைக் கதிகளிற் செல்வதுபோல, ஓரிடத்தில் தோன்றிய பொருள்கள் மற்றையிடங்களுக்குச் செல்லும் என்பது பொருத்தமாகும்.

**13. ஆடவர், மகளிர் ஒழுக்கத்தால் அறம் நிலைபெறுதலை விளக்குக.**

அழகுகள் அவரவர்களுடைய நல்ல குணங்களால் நிலைபெற்றிருந்தன. நியாயங்கள் பொய்மையில்லாத உண்மை நிலையால்நின்றன. மகளிருடைய அன்பினால் அறங்கள் நின்றன. அம்மகளிருடைய கற்பினால் பருவ மழைகள் பெய்தன.

சோலைகளால் சூழப்பட்ட அந்தக் கோசல தேசத்தைத் தேடி அதன் எல்லையைப் பார்த்தறிந்து மீண்டு வருபவர் யாவர்? எவருமில்லை. மிகுந்த பெருக்கையுடைய சரயு நதியும் பல வாய்க்கால்களால் ஓடிச் சென்றும் அந்நாட்டின் எல்லையைக் கண்டதில்லை.

நீரையுடைய கடல் கடுங் காற்றினால் மோதப்பட்டு அந்தப் பூமியினிடையிலே பேர்ந்து வந்தாலும் அழிதலில்லாத தன்மை பொருந்தியது. குற்றமில்லாத சிறப்பை யுடையது அக் கோசல நாடாகும்.

## நகர்ப்படலம்

14. அயோத்தியா நகரின் சிறப்பினைக் கம்பர் எவ்வாறு விளக்குகிறார்.

அயோத்தி என்னும் சிறந்த நகரமானது, அழகிய சுவை பொருந்திய பொருளாற் சிறப்புடைய நுட்பமான இனிய சொற்களைக் கொள்ளை கொண்ட புலவர்கள் அனைவராலும், வடநூல் முனிவராலும் புகழப்பட்டுள்ளது ஆகும். அன்றியும் எல்லா உலகங்களிலுமுள்ளவர்களும் தவம் செய்து பெறுதற்கு விரும்பும் மோட்ச லோகத்திலுள்ளவர்களும் அங்கு நின்றும் இறங்கி வந்து அடைவதற்கு விருப்பத்தைத் தூண்டும் தன்மையை யுடையது.

அந்த நகரமானது, பூமிதேவியின் திருமுகமோ? அம்முகத்திலணியும் திலகமோ? அவளது கண்ணோ? நீண்ட மங்கல நாணோ? மார்பிலணியும் மணிமாலையோ? அவள் உயிர் இருக்கும் இடமோ? இலக்குமி வசித்தற்கு இடமான தாமரை மலரோ? திருமாலின் மார்பில் விளங்கும் கௌத்துப மணி போன்ற இரத்தினங்களை வைத்துள்ள பொன்னாற் செய்த பெட்டியோ? வைகுண்ட லோகமோ? ஊழிக் காலத்தில் எல்லாப் பொருள்களும் தங்குமிடமான திருமாலின் திருவயிறோ? இவற்றுள் எதுவென்று சொல்வோம்?

உமாதேவியை ஒரு பாகத்திற் கொண்ட சிவபெருமானும், திருமகள் நிலமகள் ஆகிய இரண்டு மகளிர்க்கும் கணவனாகிய திருமாலும், பிரம்மதேவனும் இவ்வயோத்

திக்கு உவமையான ஒரு நகரத்தைக் கண்டிலர். இந் நகரத்திற்கு ஒப்பான ஒரு நகரத்தைக் காண வேண்டிக் கதிரவனும் திங்களும் இமை கொட்டாதவராய் இன்னமும் அலைகின்றனர். அதுவல்லாமல் அவர்கள் திரிதற்கு வேறு காரணம் சொல்ல முடியுமோ?

பிரமதேவன் இந்த அழகியஅயோத்தி நகரத்தைப் படைக்கும் பொருட்டு இந்திரனது அமராவதிப் பட்டணமும் குபேரனது அளகாபுரியும் என்ற இரண்டு நகரங்களையும் முன்னர்ப் படைத்தது பயிற்சி செய்தற்கேயாகும். மயன் முதலிய தேவ சிற்பிகளும் இந்நகரத்தின் சிறப்பைக் கண்டு இவ்வாறு தங்களால் படைக்க முடியாமையால் நாணங் கொண்டவர்களாய்ப் படைக்கும் தொழிலையே மறந்து விட்டார்கள். அப்படியானால் இவ்வயோத்தி மாநகரை வருணித்துக் கூற யாரால் முடியும்?

இம்மையில் நல்வினை செய்தவர்கள் மறுமையில் இன்பந் துய்க்கும் இடம் சுவர்க்க லோகமாம் என்னும் செய்தி அரிய வேதங்களில் கூறிய சித்தாந்த லோகமான பொருளேயாகும். அத்தகு சிறப்புடைய அறத்தையும் பெரிய தவத்தையும் இந்த நிலவுலகத்திலே நன்கு செழிக்கச் செய்தவர் இராமபிரானே யன்றி வேறு எவர் இருக்கின்றனர்? அங்ஙனம் அறத்தை நிலைநாட்டிய இராமபிரான் பல காலம் இருந்து ஏழு உலகங்களையும் ஆள்கின்ற இடம் வேறு ஓர் உலகத்தில் உண்டோ?

அருளையும் தருமத்தையும் துணையாகக் கொண்டு ஐம்புலன்களையும் அடக்கித் தவத்தையும் தத்துவ ஞானத்தையும் பெற்றிருப்பவர் யாவர்க்கும் புகலிடமானது அயோத்தி மாநகரம். திருமால் பிறந்து இந் நகரில் அளவற்ற காலம் திருமகளாகிய சீதாபிராட்டியுடன் மிக்க சிறப்புடன் தங்கியிருந்தார் என்றால், அழகிய உலகில் இவ்வயோத்தியை ஒக்கும் பொன் நகரம் தேவலோகத்திலும் உண்டோ?

எந்நகரத்து அரசர்களும் அவ்விடத்திலிருக்கின்றனர். சிறந்த அணிகளெல்லாம் அங்கு இருக்கின்றன. கிடைத்தற்கரிய மணிகளெல்லாம் அங்கு உள்ளன. பெரிய மதயானைகளும் குதிரைகளும் தேர்களும் இந்நிலவுலகத்திலுள்ள மற்றையெல்லாப் பொருள்களும் அங்கு உள்ளன. அன்றியும், முனிவர்களும், தேவர்களும், இயக்கர்களும், வித்தியாதரர்களும் அந்நகரத்தில் வந்து கூடுவார்கள். அவ்வாருயின் அதற்கு ஒப்பானதொரு நகரம் வேறு எங்கும் உண்டோ?

### 15. அயோத்திமா நகருக்கு அணி செய்யும் மதிலின் மாட்சியை விளக்குக

நாற் சதுரமாகச் சிற்பநூல் விதிமுறைப்படி நாட்டப்பட்டு மிக உயர்ந்துள்ளவை பெரிய மலைக் கூட்டத்துள்ளவையும் இல்லை. ஆதலால் அம்மதிலுக்கு அதுவே உவமையாவதன்றி வேறு உவமையாகும் பொருள் இல்லை. ஆயினும், உவமை சொல்லத் தொடங்கினுல், அம்மதிலின் நிலைமை நூல்களின் அளவு எவ்வளவோ அதுவரையில் சென்று பயனுடையதாகி, நூற்கேள்வியுடையவர்களின் பேரறிவைப் போன்று உயர்ந்துள்ள தன்மையை யுடையது. அல்லாமலும், உயர்மான பொருள்கள் எல்லாவற்றையும்விட உயர்ந்துள்ளது என்று சொல்லலாம்.

அந்த மதில், அறிவினுல் முடிவு காணமுடியாதபடியிருத்தலின், வேதத்தையும் ஒத்திருக்கும். மேலுலகத்தை அடைதலால் தேவர்களையும் ஒக்கும். வலிய பல இயந்திரங்களையும் தன்னுள் வைத்திருக்கும் தொழிலால், ஐம் பொறிகளையும் அடக்கிய முனிவரையும் ஒக்கும். காத்தல் தொழிலால் கலைமானை ஊர்தியாகவுடைய துர்க்கையை ஒக்கும். சூலாயுதம் (இடிதாங்கியை) ஏந்துதலால் காளி தேவியை ஒக்கும். பெருந்தன்மையால் பெருந்தன்மையுள்ள எல்லாப் பொருள்களையும் ஒக்கும். எவராலும் எளிதில் அடையக்கூடாத தன்மையால் ஈசனை ஒத்திருக்கும்.

அந்த நகரத்தின் மதில், செம் பஞ்சுக் குழம்பு பூசிய செங் கால்களையும், வஞ்சிக் கொடி போன்ற இடையையும், குரும்பை போன்ற கொங்கைகளையும், மூங்கிலைப் போன்ற தோள்களையும், அழகிய சொற்களையும் உடைய மகளிர் நிரம்பியிருக்கின்ற அயோத்தியென்ற நகரத்தைக் காட்டிலும் தேவர்கள் வாழ்கின்ற சொர்க்க லோகம் அழகுடையதோ? என்று அறியும் பொருட்டு வானில் உயர்ந்து சென்று அந்தச் சொர்க்க லோகத்தைக் காண எழுந்ததை ஒத்திருக்கின்றது.

உலகத்தில் வெளிநாட்டு நகரங்களில் மதிலெடுக்க விரும்பியவர்கள் இம்மதிலினிடம் வந்து அளவையெடுத்துக் கொண்டு போகிறார்கள். அவர்களால் அளவுகோலைக் கொண்டு அளக்கப்படுதலாலும், பகைவர்களின் தலைகளைத் தன்னிடத்துள்ள இயந்திரங்களினால் துணித்தலாலும், சிற்ப நூலின் முறைப்படி கோணாது நேர்மையாயிருத்தலாலும், எவர்க்கும் பார்த்தற்கரிய காவலையுடையதாலும், மிக்க வலிமையுடையதாலும், மிக்க உயர்ச்சியினாலும் அந்நகரத்தின் தலைவர்களைப் போல் மதில் விளங்குகிறது.

வேலும், வாளும், வில்லும், மழுவும், கதையும், சக்கரமும், தோமரமும், உலக்கையும், கவண் கல்லும் ஆகிய இயந்திரங்கள் அந்த மதிலில் அமைந்துள்ளன. பொன்மணிகளாலாகிய அணிகலன்களைக் காட்டிலும் புகழே நமக்குச் சிறந்த அணியாகப் பொருந்தும் என்று நினைத்து, உலக உயிர்களைப் பாதுகாப்பவரான, கதிரவனது குலத்தில் தோன்றிய அரசர்களின் ஆணைச் சக்கரமும் செங்கோலும் ஆகிய இவைகளே மேலுலகத்தையும் எட்டுத் திக்குகளையும் பரவிக் காக்கும்.

16. *அயோத்தி நகரின் அகழியின் அழகினை விளக்குக.*

பெரிய சக்கரவாள கிரியைப் புறக் கடல் சூழ்ந்திருத்தலையொப்ப அயோத்தி நகரின் மதிலை அகழியானது சூழ்ந்து, தமது இன்பத்திற்கு விலைப்பொருளாகப் பொன்னைப் பெறுகின்ற வேசையரது உள்ளம் போல்

மிகக் கீழே போய், நன்கு கற்காதவன் பாடின இழி வாகிய பாடல் போலத் தெளிவில்லாமல், திருமண மாகாத குலப் பெண்களின் அல்குலின் இடம்போல எவர்க்கும் தோய்வதற்கு இயலாத காவலையுடையதாய், சன்மார்க்கத்தில் சொல்லவொட்டாமல் விலக்கித் துன் மார்க்கத்தில் செலுத்துகின்ற இந்திரியங்கள் போலப் பாய்கின்ற முதலைகளையுடையதாய் விளங்குகிறது.

வானத்தில் திரியும் மேகம், பாதாளம் வரையில் ஆழ்ந்துள்ள அகழியைக் கண்டு இது பெரிய கடலாகும் என்று கருதி, அதில் இறங்கி அந்நீரை உட்கொண்டு மேலெழுந்து வந்து, அவ்வகழியால் சூழப்பட்டுள்ள மதிலை மிகவுயர்ந்த மலையென்று கருதி உடம்பு வருந்தி அதன்மேல் ஏறிப் படிந்திருந்து பின்பு மழை நீர்த் துளிகளை அந்த மதிலிடத்துப் பொழியும்.

அந்த அகழியினிடத்துத் தோன்றி மலர்ந்த தாமரை மலர்க்காடு அந்நகரத்து மகளிருடைய முகங் களுக்குத் தோற்றுப்போய் மீண்டும் நம் வலிமையெல் லாம் சேரப்பெற்று மீண்டுவந்து அம்முகங்களுடனே போர் செய்தற்கு அந்தப் பெரிய மதிலை வளைத்திருப் பதைப்போல் மலர்ந்திருக்கும்.

பகைவர் நெருங்க முடியாதபடி நாஞ்சில் என்னும் உறுப்புக்களோடு நகரைச் சூழ்ந்துள்ள மதிலின் சுற்றுப் புறங்களில் அமைக்கப்பட்டுள்ள அகழியில் கிடக்கும் முதலைகள், கடலில் மத மயக்கத்தினால் அமிழ்ந்த யானைகள் உள்ளே அமிழ்ந்து மேலே யெழு வனவற்றை ஒத்திருக்கும்.

வாளாயுதம் போல வாலையசைத்துக் கொண்டு, கோரப் பற்கள் விளங்க வாயைத் திறந்துகொண்டு, ஒளிவிடும் கண்களிலிருந்து தீப்பொறிகள் சிந்தச் சீறு கின்ற முதலைகள் போர்க்களத்திலே வந்து சிதைந்து போர் செய்யும் அரக்கர்களை ஒத்திருக்கும்.

அவ்விடத்திற் பயிலும் அன்னப் பறவைகள் வெண்கொற்றக் குடைகளின்கூட்டங்களாகவும், முதலை

கள் மேருமலையை யொத்த யானைகளாகவும், தாமரை மலர்களையுடைய அலைகள் குதிரைகளாகவும், மீன்கள் வாளும் வேலுமாகவும் அடைய அரசரின் சேனைகளை யொக்கும் அவ்வகழி.

அவ்வகழியின் ஓரத்திலே வெள்ளியினால் திண்ணை யாயமையுமாறு தட்டையாகச் சுவரெழுப்பி, அந்தத் திண்ணையின் சந்திடமெல்லாம் பொன் தகட்டினால் இழைத்துப் பளிங்குக் கற்களைத் தள வரிசையாகப் பதித்திருத்தலால், இது அகழிநீர், இது பளிங்குத் தலம் என்று அறிய முடியாமல் விளங்கிற்று.

17 'அப்பொன்னின் மாநகர்க்கு உடுத்த நீல ஆடை போலும்' உவமையை விளக்குக.

அயோத்தி நகரின் மதிலைச் சுற்றிக் கிடந்த மிகப் பரந்து நீண்ட அகழியாகிய கடலை நெருங்கிக் காடு போன்று சூழ்ந்து கொண்டிருந்த சோலையை, அந்தப் பெரும் புறக் கடலை அடுத்துத் தனியே சூழ்ந்து கொண்டிருக்கின்ற பேரிருளின் தொகுதி என்னலாம். அன்றியும் அச்சோலை, பொன்னாலான பெரிய அம்மதிலுக்கு உடுத்திய நீல ஆடையையும் ஒக்கும். ஆக, அகழியைச் சூழ்ந்திருந்த சோலை, அயோத்திமா நகரின் மதிலுக்கு உடுத்திய நீல ஆடையைப் போன்று தோன்றியது.

18 நான்கு வாயில் தோற்றமும் ஓவியப் பொலிவும் எவ்வாறு விளங்கின?

அயோத்திமா நகரின் கோபுர வாயில்கள் நான்கும் நான்கு திசை யானைகள் போல் நின்றன. அன்றியும் அவை திருமால் முன்பு திரிவிக்கிரமாவதாரத்தில் மேலுலகத்தை அளவிட்ட திருவடியைவிட உயர்ந்தனவாகிப் பல வளங்களும் நிரம்பிய உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் தத்தமக்குரிய ஒழுக்க நெறியில் தவறாமல் நடத்தலால் நல்லொழுக்கங்களை யுபதேசிக்கும் நான்கு வேதங்களையும் ஒத்திருந்தன.

விருப்பத்தோடு பெண் புறா அழைக்கவும் தனது உயிரை யொத்த ஆண் புறவானது அன்போடு வந்து

தன்னைத் தழுவாமல், அவ் வாயிலின் புறத்தில் சித்திரத்திலமைந்துள்ள பெண் புருவின் அருகில் தன் பேடையென்று மயங்கியிருக்க, அது கண்டு ஊடிக் கொண்ட பெண் புருவானது தேவலோகத்தில் உள்ள கற்பகச் சோலையில் போய் மறையும். இவ்வாறு கோபுர வாயிலில் அமைந்துள்ள ஓவியங்கள் உண்மையான புருக்களைப்போல் விளங்கின.

**19. அயோத்திமா நகரத்தின் கோபுர வருணனையைத் தெரிவிக்க.**

மணிக் கற்களை அடுக்கிச் சுவரெழுப்பி, அதன் முன்புறத்தில் பளிங்குக் கற்களை அறுத்துக் கட்டி, மேலே பசும் பொன் தகட்டைப் பதித்துப் பலவகை மணிகளை யிழைத்து, ஒளி வீசும் வெள்ளியினாலாகிய பெரிய கைம் மரங்களை மேலே பொருந்தும்படி வைத்துத் தளம் செய்யப் பெற்றது.

அத்தளத்தின் மேல் வச்சிரத் தூண்களை நாட்டி மரகதத்தாலாகிய போதிகைக் கட்டைகளில் வைரக் கற்களை ஒன்றன்மேல் ஒன்று வைத்து, அதன்மேலே பொன் தகட்டை வைத்து அவற்றின் மேல் இரத்தினங்களால் ஆகிய நீண்ட சிங்க வடிவத்தின் வரிசைமேல் கைம்மரமாகக் கோமேதகம் வைக்கப்பட்டது.

மேலேழு உலகத்தவர் யாவர்க்கும் ஏழு பரந்த இடங்களை ஏற்படுத்தியதுபோல் ஏழு நிலைகள் அமைய, சிற்ப நூல் விதிப்படிக் கட்டிய கோபுரங்கள் பொன் தகட்டால் மூடப்பட்டுச் சிகரத்தில் மாணிக்கத்தாலாகிய கலசம் விளங்கப் பெறுதலால் நிலமகளாகிய பெண்ணை முடி சூட்டி அலங்கரித்தாற்போல் விளங்கியது.

**20. 'வாழ்நிலக் குலக்கொழுந்தை மௌலி சூட்டியன்ன' —உவமையைப் பொருளோடு விளக்குக.**

விடை எண் 19ல் காண்க.

**21. அயோத்திமா நகரத்தில் அமைந்துள்ள மாளிகைகளின் அழகை விளக்குக.**

அயோத்திமா நகரத்தில் ஓங்கியுயர்ந்த வெண்ணிற மாளிகைகள், பெருங் காற்று வீசுதலால் மேலே பொங்கியெழுந்த பெரிய பாற்கடலின் அலைகளை ஒத்திருக்கும்.

பொற்றகடுகள் வேயப்பட்ட, மாடப்புருக்கள் தங்குதற்குரிய இடத்துடன் பொருந்தப் பெற்ற மாளிகைகள், வெள்ளி மலைமேல் கதிரவனின் இளங்கதிர்கள் பரவி விழுந்திருத்தலை ஒக்கும்.

வயிரத் தூண்களின்மேல் மரகத உத்தரத்தைப் போதிகைக் கட்டையின்மேல் பொருத்தி, உயிர் பெற்றிருப்பனபோலத் தோன்றும் சித்திரங்கள் இயற்றியனவும், தேவலோகத்தவரும் தமது விமானமோ? என்று ஐயங்கொள்ளுமாறு விளங்குவனவுமாகிய மாளிகைகள் பல கோடிக்கணக்கில் இருந்தன.

சந்திரகாந்தக் கற்கள் படுத்த தரையையுடையனவும், சந்தன மரங்களினால் செய்து வரிசையாக நிறுத்திய தூண்களின்மேலே பவழத்தாலாகிய போதிகைக் கட்டையில் மாணிக்கத்தாலாகிய உத்தரம் பொருந்தியனவும், சுவர்கள் இந்திர நீலக் கற்களால் இயன்றனவும் ஆகிய மாளிகைகள் பல கோடிக் கணக்கில் இருந்தன.

தூண்களின் அடிப்பகுதிகள் தாமரை வடிவமாக அமைந்தனவும், செப்பமுள்ளனவும் யாவரும் விரும்பிக் காணும் உள் வேலையுடையனவும், நடுவிடமெல்லாம் சுத்த வெளியாயுள்ளனவும், பொன்னாலாகிய வெளியமைப்பையுடையனவுமாகிய மாளிகைகள் விலை மக்ளிரை யொத்தன.

அம்மாளிகைகளைப் பார்ப்பதற்கு உட்புகுந்தவர் பெரு வியப்போடு அங்குள்ள வேலைப்பாடுகளைப் பார்த்தலால் கண்கள் இமை பொருந்தாமல், மாளிகைகளின் ஒளி தம் உடம்போடு பொருந்தப் பெற்றுத் தேவர்களைப் போல் தோன்றுவர். அவ்வாறு விளங்குதலால் அம்மாளிகைகள் 'தெய்வத் தன்மையையுடைய விமா

ஙங்களோடு ஒப்ப நின்று உயர்ச்சியாலும் ஒளி மிகுதியாலும் தேவலோகத்திலும் சென்று விளங்கும்.

மாதர்களும் வீரர்களும் கூடி விரகதாபம் ஆறப் பெற்றனவும், அவர்கள் நல்லொழுக்கத்தோடு வாழப் பெற்றனவுமாகிய மாளிகைள் யாவும் மணிகளாலும் பொன்னாலும் செய்யப்பட்டனவே யன்றி மண் முதலிய வேறு எந்தப் பொருளாலும் செய்யப்பட்டனவல்ல. ஆகையால் அம்மாளிகைகள் கதிரவனையும் தம் ஒளியால் வென்று விளங்கின.

வானளாவ உயர்ந்தனவும், அளவற்ற செல்வமுடையனவும், உயர்ந்த புகழையுடையனவும், மிக்க ஒளியுடையனவும் ஆகிய மாளிகைகளில் வாழும், அறநெறியில் செல்வனவாய் வரம்பில்லா அரசனைப் போன்ற சிறப்புடன் வாழும் மக்களின் கொள்கைகளும் மிகுந்துள்ளன.

அசைகின்ற முத்துமாலைகளை யுடையனவும், கொடிகள் மேலே பரவப் பெற்றனவும், பெரிய மணித்தொகுதிகளை யுடையனவும், பசும்பொன் திரள் உள்ளனவும், மயில் தொகுதிகளையுடையனவுமாகிய அந்நகரத்து மாளிகைகள் மலையையும் ஒத்தன.

22. துகிலொடு நெடுங்கொடி பறக்கும் காட்சியை கம்பர் எவ்வாறு விளக்குகிறர்?

அகிற்புகையுடன் கலந்து மேகங்களைப் போலத் தோன்றும் பெரிய கொடிச் சீலைகளுடன் நீண்ட கொடி மரங்களின் நுனியில் நாட்டப்பட்டுள்ள சூலங்கள் விளங்குபவை. மின்னல்களின் விரிவை ஒத்தன.

துடிபோன்ற இடையையும், பருத்த தனங்களையும் உடைய மகளிர் தமது கால்களில் சிலம்புகளையணிந்து அவை ஒலிக்கும்படி நடக்கப் பெறும் மாளிகைகளில், கொடிகளில் முத்துச் சரங்கள் தொங்கவிடப் பட்டிருப்பவை கற்பக மரங்களின் பூமாலைகளை யொக்கும்.

பெரியமலைகளிடத்துக் காணப்படும் வாழைமரக் காடுபோல நவக்கிரக மண்டலம் வரையில் உயர்ந்துள்ள பெருங்கொடிகளின் கூட்டம் மிகுந்துள்ளன. வானத்திற் செல்லும் திங்கள் தனது ஒளி குறையும்படி வடிவம் வளைந்து தேய்பிறையில் நாள்தோறும் தேய்ந்து வருவது அந்தக் கொடிகள் தேய்ப்பதனாலேயே யாகும்.

## 23. அயோத்தி நகர மாளிகைகளின் ஒளிச்சிறப்பும் மணமும் எவ்வாறு விளக்கப்படுகின்றன?

அந்த மாநகரத்தில் பொன்னால் கட்டிய மண்டபம் அல்லாதன மலர்களால் அமைத்த மண்டபங்களாம். மலர் கூடும் மன்றம் அல்லாதன மாடங்களோடு கூடிய மாளிகைகளாம். செய்குன்றுகள் அல்லாதவை மணிகளால் செய்த தலங்களாம். வீட்டின் முற்றங்களல்லாதவை முத்தின் பந்தர்களே.

பொன்னாற் செய்யப்பட்டு வேலைப் பாடுகள் நிறைந்த சிறந்த அயோத்தியாபுரியின் மின்னல் போலவும் விளக்கொளிபோலவும் கதிரவனின் ஒளித்தொகுதி போலவும் உள்ள ஒளி தன் மீது படுதலால் அந்தத் தேவலோகம் பொன்னுலகாயிற்று.

வானில் விளங்கும் கதிரவன் தோன்றும் பொழுது மிக நீளமாகக் காணப்பட்டு நடுப்பகலில் உருவத்தினளவாகப் பொருந்தி மறையும் பொழுது மீளவும் நீண்டு போதல், வட்டவடிவமான பொன்மயமான மதிலையுடைய இந் நகரத்தின் ஒளியினாலேயே யாகும்.

மகளிர் மேன் மாடங்களில் எழுப்பிய அகிற்புகையை உட்கொண்ட மேகங்கள் நீருண்ணும் பொருட்டுச் சென்று படியப் பெற்ற பெருங்கடல் அவ்வகிற்புகையின் மணம் வீசப்பெறும். அம் மேகங்களிலிருந்து கீழ் வீழ்ந்த மழைத்தாரையும் அகிற்புகை மணக்கும்.

**24. மைந்தர் பண்ணையும், மடவாரின் ஆடல்பாடல் முதலிய விளையாட்டுக்களும் எவ்வாறு சித்தரிக்கப் படுகின்றன.**

அயோத்திமா நகரில் வாழும் இளம் பெண்களின் குதலைச் சொற்கள் வேய்ங்குழலின் பாட்டிசையை யொக்கும். மங்கைப் பருவத்து மகளிரின் மழலைச் சொற்கள் மகரயாழின் இசைபோலும். பருவம் முதிர்ந்த மகளிரது இனிய சொற்கள் கூத்தரது பாட்டின் இசையை யொக்கும்.

மதம் மிகுதியால் சினங்கொண்ட ஆண்யானைகள் தமது கால்களால் பூமியில் வெட்டுவனவாயின. அழகிய பிள்ளைகள் விளையாடும் இடங்கள் அதனால் குழிகளைப் பெற்றன. அம்மைந்தர்கள் தம் உடம்பில் பூசியிருந்த மணப்பொடிகள் விளையாடும் பொழுது விழுந்து அக் குழிகளைத் தூர்த்தன.

பெண்கள் பந்துகளை ஆடுவார்கள். அவர்கள் அணிந்திருந்த முத்துக்கள் சிந்தும். ஏவல் மகளிர் அம் முத்துக்களை ஓரிடத்தில் திரட்டுவர். அக் குவியல்களி லிருந்து குளிர்ந்த வெள்ளொளி மிகும்.

நடனசாலையில் மகளிர் ஆடுவர். அவர்களுடைய கடைக்கண்களாகிய வேல்கள் மைந்தர்களின் மனத்தை உண்ணும். அதனால் அம்மைந்தர்களின் உயிர்கள் அம் மகளிரின் இடைபோல மெலியும். ஆடவர்க்கு வேட்கை வர வர மிகும்.

சில சோலைகள் தேனைச் சொரியும். தென்றல் காற்றும் வண்டும் அச்சோலைகளில் நுழையும். அதனால் தலைவரைப் பிரிந்திருக்கும் மகளிரது வேட்கையால் வெதும்பும் தனங்கள் மெலியும்.

மகரயாழிலிருந்து எழுப்பிய இனிய சுரங்கள் மகளிரின் வாய்ப்பாட்டுடனே எடுப்பாக ஒலிக்கும். அவ் விசைக்கு ஏற்ப மத்தளங்கள் ஒலிக்கும். அவ்விசையைக் கேட்டு மகளிரோடு கொஞ்சிப் பேசும் கிளிகள் கண்களை மூடிக் கொண்டு தூங்கும்.

**25. அயோத்தி நகர மக்களின் செல்வப் பெருக்கும், மாந்தரின் மகிழ்ச்சியும் எவ்வாறு விளக்கப் பெறுகின்றன.**

அயோத்தி நகரத்து மகளிர் முகத்தில் எப்பொழுதும் முறுவல் தோன்றும். அவை ஆடவர்க்குக் காம வேதனையை யுண்டாக்கும். அம்மகளிர் இடைகள் தன பாரத்தால் வருந்தி மெலியும். மேலும் அவ்விடை மெலியும்படி அம்மாதரின் தனங்களில் முத்து வடங்களும் பொன்னணிகளும் பொருந்தி விளங்கும்.

இளைய அன்னப் பறவைகளும், தாமரை மலர்களும் கயல் மீன்களும், வண்டுகளும், மதயானைகளும், பெண்களுடைய கண்களும் எப்பொழுதும் களிப்பு நீங்காமல் உள்ளன.

சிங்கங்களும் அவற்றின் பெட்டைகளும் குகைகளில் கிடக்குமாறு மலைகளையொத்த ஆண்யானைகளின் மும்மதப் பெருக்கம் விழும். அது பெருகுந்தோறும் பூமியும் ஆழமாகுமாறு குழை சேறு உண்டாகும். அந்தச் சேற்றில் வலிய தேர்கள் புதையும்.

புதுப் பூச் சூடிக் கொள்பவர் எடுத்தெறிந்த பழைய மாலைகள் ஆடுகின்ற மகளிரின் சிலம்புகளை ஒலிக்க விடாமற் கட்டும். ஊடல் கொண்ட மகளிர் தமது தனங்களிலிருந்து வழித்து எறிந்த சந்தனக் கலவை வீதியில் ஓடுபவர்களை வழுக்கி விழச் செய்யும்.

குதிரைகள் வீதிகளில் ஓடும்பொழுது தமது குளம்புகளினல் பூமியைக் கிண்டும். அதிலிருந்து எழுந்த புழுதியினுல் குதிரைகளின் மேலுள்ள மைந்தர் பூண்டுள்ள அணிகளிலுள்ள மணிகள் மறையும். அம்மைந்தர் அணிந்துள்ள பூமாலைகள் மணிகளை மறைத்துள்ள புழுதியின்மேல் தேனைச் சிந்தும்.

யானைகளின் மத நீர் வேங்கை மலர்போல் மணக்கும். உயர் குடியிற் பிறந்த மகளிரின் வாய்கள், ஆம்பல் மலர்போல் விளங்கும். அந்நகரத்தவர்களின் அணி

களில் ஒளி வீசும். மாதரின் கூந்தலில் மலர் மணம் வீசும்.

அளகாபுரியானது இந்நகரத்தின் கடைவீதியைக் கண்ட பின்பு தோல்வியே யடைந்தது. அமராவதியும் இதற்கு ஒப்பாகாது.

அந்நகரத்தில் சங்குகளின் ஓசையும், ஊது கொம்பு களின் ஓசையும், மகர யாழின் ஓசையும், மத்தளங்களின் ஓசையும், கின்னரத்தின் ஒலியும், துளைக் கருவியின் ஓசையும் மற்றும் பலவகை இசைக் கருவிகளின் ஓசை யும் கடல் ஒலிக்கு மேம்பட்டு ஒலிக்கும்.

வேறு தேயங்களின் அரசர்கள் கொடுக்கின்ற திறைப் பொருள்களை அளக்கும் மண்டபங்களும், மென்ன டை மகளிர் ஆடும் மண்டபங்களும், வேதங்களை ஓதும் மண்டபங்களும், பல்வகைக் கலைகளை ஆராயும் பட்டி மண்டபங்களும் அந்நகரத்தில் எங்கும் உள்ளன.

தோரணங்களையுடைய அந்நகரத்து வீதிகளைவிடத் திசைகள் சிறுமையுடையனவாம். யானைகளின் மதப் பெருக்குகளைவிட மிக்கவையாம். குதிரை வரிசைகள் கடலிலும் பெரியவையாம்.

26. நகர மாந்தர் பொழுது போக்கிய வகையை விளக்குக.

அந்தப் பழைய நகரத்தில் சில மகளிர்க்கு, ஊடலா லும், அவ்வூடல் தீர்ந்து கூடலாலும், அருமையான இன்னிசையைப் பாடலாலும், அப்பாடல்களைக் கேட்ட லாலும், பரந்த நீரில் குடைந்து ஆடலாலும், நீராடிய பின் அழகிய மலர்களைச் சூடலாலும் பொழுது போகும்.

சில ஆடவர்க்கு, மதயானைகளை ஏறிச் செலுத்துவ தாலும், குதிரைகளையும் தேர்களையும் ஏறி நடத்துதலா லும், இரப்பவர்களின் பரிவு தீரக் கொடுத்தலினாலும் பொழுது போகும்.

சில ஆடவர்க்கு, யானேயோடு யானேயைப் போர் செய்ய விடுவதாலும், வில் முதலிய போர்க் கருவிகளேச் செலுத்திப் பழகுவதாலும், குதிரைமீதேறிச் செண்டாடி வருவதாலும், படைக்கல நூல்களே ஆராய்வதாலும் பொழுது போகும்.

சில மங்கையர்க்கு, பூஞ்சோலேகளில் மலர்களேப் பறித்தலாலும், தமது கணவருடனே வாவிகளில் நீர் விளேயாடுதலாலும், வாயின் செம்மை நிறம் அழிய மதுவைப் பருகுவதாலும், தம் கணவரிடத்துத் தூதுவிடுவதாலும் பொழுது போகும்.

27. செல்வமும் கல்வியும் சிறந்த போகமாநகர் அயோத்தி எவ்வாறு கம்பரால் சிறப்பிக்கப்படுகிறது?

நீரைச் சொரிகின்ற மேகங்களும், அலேகளேயுடைய கடலும் அஞ்சுமாறு நாள்தோறும் முரசம் அதிர்கின்ற பெரிய அந்நகரத்தில் வாழும் மாந்தரில் களவு செய்பவர் எவரும் இல்லாமையால் பொருளே முயன்று காப்பதும் இல்லே. எப்பொருளேயும் வாங்கிக் கொள்பவர் இல்லாமையால் கொடுப்பவர்களும் இல்லே.

அந்த நகரத்தில் கல்லாது வீண் பொழுதுபோக்குபவர்கள் இல்லாமையால் படிப்பில் முழுவதும் வல்லவர்களும் இல்லே; அக் கல்வியில் வல்லவரல்லாதவர்களும் இல்லே. எல்லோரும் எல்லாப் பெருஞ் செல்வங்களேயும் பெற்றிருத்தலால் வறியவர்களும் இல்லே; செல்வர்களென்று தனியே எடுத்துச் சொல்லத் தக்கவர்களும் இல்லே.

அந்நகரம் கல்வியென்னும் ஒருவித்தானது முளேத்து எழுந்து, எண்ணற்ற கேள்விகளாகிய கிளேகளே வளரவிட்டு, அரிய தவமாகிய இலேகள் தழைத்து, அன்பாகிய அரும்பு தோன்றி, தருமமாகிய மலர் மலர்ந்து, இன்பமாகிய பழமொன்றைப் பழுக்க இடமாயிருந்தது.

## அரசியல் படலம்

28. அயோத்தியை ஆளும் தயரதனின் மாண்புகளை விளக்குக

அயோத்திமா நகர்க்கு அரசன் தயரதன். அவன் அரசர்க்கரசன். அவனது நீதி தவருத அரசாட்சி ஏழு உலகங்களிலும் தடையில்லாமல் நடக்கும்படி சிறந்து நின்ருன். இராமாயணமென்ற பெரிய வரலாற்றுக்கு ஒப்பற்ற தலைவனுகிய இராமபிரானைப் பெற்றவன்.

உண்மையறிவும் இரக்கமும் அறமும் அமைதியும் வீரமும் ஈகையும் நீதியும் ஆகிய நற்பண்புகளெல்லாம் மற்றையரசர்களுக்குப் பாதியளவேயிருந்தன. இந்தத் தயரதனுக்குத்தான் எல்லாக் குணங்களும் ஏவல் கேட்டன.

கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் தசரதன் தாரை வார்த்துக் கொடுத்த தாரை நீரிஞல் ஈரமாகாதனவாகிய அந்தணரது கைகளும் இல்லை. வேத நெறியில் நடக்கின்ற அரசர்கட்குப் பொருந்தியனவும் எவரும் செய்து முடிக்காதனவுமாகிய யாகங்களெல்லாம் இவன் செய்து முடித்தனவே.

இந்தத் தசரத மன்னன் எல்லோருக்கும் மிக்க அன்புடைமையால் பெற்றதாயை ஒத்திருப்பான். அவர்கட்கு வேண்டிய நன்மைகளையெல்லாம் செய்து தருதலால் தவத்தை ஒத்திருப்பான். அவர்கட்கு முன்நின்று செல்லுதற்குரிய நற்கதியிற் செலுத்துதலால் மகனை ஒத்திருப்பான். தீயவழியில் சென்ருேரைத் தண்டித்து வருத்துதலால் நோயை ஒப்பாஞயினும் தண்ணளி செய்தலால் மருந்தையும் ஒப்பான். நுட்பமான நூற்பொருளை ஆராயப் புகுமிடத்து ஐயந்திரிபுகளை அகற்றித் தெரிவித்தலால் அறிவை யொப்பான்.

இந்த அரசன் இரப்போர்களாகிய கடலை ஈதலாகிய புணையையடைந்தே தாண்டிஞன். கலையென்னும் கடலை அளவற்ற நல்ல நூல்களை ஆராய்தலாகிய புணையைக் கொண்டே கடந்தான். பகைவராகிய கடலை

வாளால் அழித்தலாகிய புணையைக் கொண்டே கடந் தான். செல்வத்தோடு தொடர்புடைய இவ்வுலக இன்ப மாகிய கடலை மனம் நிறையுமாறு அநுபவித்தலாகிய புணையைக் கொண்டே கடந்தான்.

இம்மன்னவன் யாற்று நீர்ப்பெருக்கும் பறவை களும் விலங்குகளும் விலைமகளிரது உள்ளமும் ஒருவழி யிலே செல்லும்படி செங்கோல் செலுத்தி நின்றவன். பெரும்புகழோடு வரையாது கொடுக்கும் தன்மை யுடையவன்.

29 'வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசையர் உள்ளமும் ஒருவழி ஓட நின்றவன்'
—இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (M. A. 1971)

தசரதனது ஆட்சியின் மாட்சியை விளக்க வந்த கம்பர் இத்தகையவன் தசரதன் என்று கூறுகிறார். யாற்றுநீர்ப் பெருக்கும் பறவைகளும் விலங்குகளும் விலைமகளிர் மனமும் ஒருவழியிலே செல்லுமாறு செங்கோல் செலுத்தியவன் தசரதன்.

விளக்கம்: வெள்ளம் ஒருவழியில் செல்லுதல்—மாதம் மும்மாரி பெய்தலால் ஆற்றொழுக்கு மிகுவதும் குறைவதும் இன்றி என்றும் ஒரே சீராக இடையறாது ஓடுதல். விலங்கும் பறவையும் ஒருவழியில் செல்லுதல்—ஒன்றற்கொன்று பகைமையுடைய விலங்குகளும் பறவைகளும் தம்முட்பகையில்லாது செல்லுதல். வேசையரது உள்ளம் ஒருவழியில் செல்லுதல்—தமக்கு முதலிற் கிடைத்த நாயகனே பெருஞ்செல்வமும் மிக்க கொடையும் கட்டழகும் இன்பச் சிறப்பும் உடைமையால் வேறொருவனை மனத்திலும் எண்ணாமல் அவனுடனே வாழ்தல்.

30. உலகம் முழுவதையும் ஒருகுடைக்கீழ் ஆளும் தசரதனின் பெருமையை விளக்குக.

பெரிய சக்கரவாள கிரியானது மதிலாகவும், நீண்ட பெரும்புறக் கடலானது அகழியாகவும், பூமியிடை யிலுள்ள குலமலைகள் அழகிய வீடுகளாகவும் அந்தத்

தசரத மன்னனுக்குப் பூமிமுழுவதும் அயோத்திமா நகரம் போலும்,

வலிய அழுக்கு நீங்குமாறு தீட்டுதலால் அவன் கையிலுள்ள வேற்படையும் தேயும். வந்து பணியும் அரசர்களின் நீண்ட மகுடங்கள் படுதலால் அவ்வரசனது சேவடியிலுள்ள பொற்கழலும் தேய்வடையும்.

*31. தசரத மன்னனது குடையும் செங்கோலும் எவ்வாறு சிறப்பித்துக் கூறப்படுகின்றன?*

தசரதனது குடையாகிய மதி தேய்வது இன்றி இவ்வுலகில் உள்ள உயிர்களிடத்துக் குளிர்ந்த நிழலைப் பரவச் செய்யவும், இருளையொழிக்கவும் போதுமாகையால் வானத்திலுள்ள மதியை வேண்டாவென்று கழித்துவிடலாம்.

வயிரத்தாலான அணிகலன்களை அணிந்த, சிங்கம் போன்ற வலிமையுடைய தசரதன், உலகத்திலுள்ள உயிர்களையெல்லாம் தன்னுயிர்போல எண்ணிப் பாதுகாத்தலால் குற்றமற்ற இந்த நிலவுலகத்தில் அசைவனவும் அசையாதனவுமாகிய எல்லா உயிரினங்களிலும் ஒருங்கே தங்குதலையுடைய உடம்பையும் போன்றான்.

அந்தத் தசரதனுடைய வெற்றி பொருந்திய ஆணைச் சக்கரமானது கதிரவனைப்போல மிக்க மேலிடத்திலே நின்றுகொண்டு உலகமுழுவதும் உலாவி எல்லா உயிர்களிடத்தும் காத்தல் தொழிலைச் செய்யும்.

வீரவாதம் செய்துகொண்டு தன்மேல் வருகின்ற பகைவர்கள் எவ்விடத்தும் இல்லாமையினால் போரைப் பெறமல் தினவுமிகுந்த திரண்ட தோள்களையுடைய தசரதன் வையகம் முழுவதையும் வறிஞனையிருப்பவன் காக்கின்ற சிறு கழனியைப்போலப் பாதுகாத்து நன்றாக அரசாட்சி செய்பவனானன்.

*32. 'செயிர் இலா உலகினில் சென்று நின்று வாழ் உயிரெலாம் உறைவதோர் உடம்பும ஆயினன்"*
*—இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.*

விடை எண் 31ல் காண்க.

33 'வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய்எனக் காத்து இனிது அரசு செய்கின்றான்'
—இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (M A. 1970)
விடை எண் 31ல் காண்க.

34. தசரதன் தனக்கு மகப்பேறு இல்லாமை குறித்து
வசிட்ட முனிவனிடம் குறைபட்டுக் கூறியதென்ன?

தசரதமன்னன் ஒருநாள் வசிட்டமுனிவனைத் தொழுது 'தாயும், தந்தையும், தவமும், சிறந்த தெய்வமும், இம்மைக்கு உறுதிதரும் பொருள்களும், மறுமைக்கு உறுதிதரும் பொருள்களும் எனக்கு நீயே யாவாய்.

எமது குலத்து முன்னோர்கள் கதிரவனைக் காட்டிலும் மிகுதியாகத் தங்கள் குலம் புகழால் விளங்கும்படி இவ்வுலகத்தைப் பாதுகாத்தார்கள். இக்காலத்தில் யானும் உனது அருளினால் இனிமையாகப் பாதுகாத்தேன்.

அறுபதினாயிரம் ஆண்டுகளாகப் பகைவர்களையடக்கி, இந்த உலகத்தைக் காத்தேன். எனது காலத்திற்குப் பிறகு இவ்வையகம் காப்பவர் இல்லாமையால் கலங்கிவிடுமே என்ற மனக்கலக்கம் எனக்கு உண்டு. இதைத் தவிர வேறு ஒரு குறை எனக்கு இல்லை.

அரிய தவத்தையுடைய முனிவர்களும் அந்தணர்களும் துன்பமின்றி இதுவரையில் வாழ்ந்தார்கள். அப்படியிருந்தவர்கள் என் காலத்திற்குப்பின்பு காப்பவரில்லாமையால் மிக்க துன்பத்தை அனுபவிப்பார்களே என்ற கவலையே என் மனத்தை வருத்துகின்றது' என்றான்.

35. 'பிறது ஒரு குறை இலை என்பின் வையகம்
மறுகுறும் என்பதுஓர் மறுக்கம் உண்டு'
—இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

தசரதன் வசிட்ட முனிவனிடம் தனக்குக் குழந்தையில்லையே என்ற கவலையை வெளியிட்டுக் கூறியதாகும் இத்தொடர். விளக்கம் 34ல் காண்க.

## அவதாரப் படலம்

36. அலைகடல் நடுவண் ஓர் அனந்தன் மீமிசை, மலை என விழிதுயில் வளரும் மாமுகிலாகிய திருமால் அமரர்க்குக் கூறிய உறுதிமொழிகளை விளக்குக. (அல்லது) தேவர்களுக்குத் திருமால் கூறியனவாக வசிட்ட முனிவன் நினைத்தவற்றை விளக்குக

தசரதன் தனக்கு மகப்பேறு இல்லாக் குறையை வசிட்ட முனிவனிடம் கூறினான். அதுகேட்ட முனிவன் தேவர்கட்குத் திருமால் அபயமளித்ததை நினைவுபடுத்திக் கொண்டான். வசிட்டமுனிவன் தன் மனத்தில் நினைத்தவை.—

இந்திரன் முதலிய தேவர்கள் அரக்கர்களால் வருந்திச் சிவபெருமானையடைந்து தமது துன்பத்தைக் கூறினர். சிவபெருமான் தம்மால் அரக்கரையழிக்க முடியாதென்று கூறி அத்தேவர்களுடன் சென்று பிரம தேவரிடம் கூறினார். தம்மால் முடியாதென்று பிரம தேவரும் கூறினார். பத்துத் தலைகளையும் இருபது கைகளையும் உடைய இராவணனது வலியைக் குறைக்க எம்மால் முடியாது; கருமுகில் வண்ணனாகிய திருமால் அவனுடன் போரிட்டுத் தேவர்களின் துன்பத்தைத் தணித்தால்தான் உண்டு என்று எண்ணித் திருமாலை மனத்தினால் தியானித்து வாயினால் துதித்தனர். திருமால் கருடன் மேல் ஏறிவந்து அந்தத் தேவர்கட்கு முன்னே காட்சி தந்தார்.

அப்பொழுது சிவனும் பிரமனும் இந்திரன் முதலிய தேவர்களுடன் எழுந்து எதிர்கொண்டு தொழுதனர். திருமாலை வணங்கிய தேவர்கள் அப்பொழுதே அரக்கர்கள் தொலைந்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்தனர். இராவணனும் அவன் தம்பிமாரும் செய்யும் கொடுமையால் தாங்கள் தவம் செய்ய முடியாத நிலையைத் திருமாலிடம் கூறினர். அரக்கர்கள் மூன்று உலகங்களையும் அழிக்கத் தொடங்கி விட்டனர் என்றும், திருமால் அவர்களை

ஒழிக்காவிட்டால் அடியோடு உலகங்களை அழித்து விடுவர் என்றும் கூறினர்.

இவ்வாறு கூறிய தேவர்களை நோக்கித் திருமால், "நீங்கள் வருந்த வேண்டாம். யாம் பூமியில் மானுடனாகத் தோன்றி வஞ்சகனான இராவணனுடைய தலைகளை அறுத்துத் தள்ளி நும் துன்பத்தைப் போக்குவேன். நீங்கள் யாவரும் குரங்குகளாகக் காடுகளிலும் மலைகளிலும் சோலைகளிலும் போய்ப் பிறவுங்கள். மாயத்தன்மையுள்ள அரக்கரின் வரத்தையும் வாழ்வையும் ஒப்பற்ற கணைகளால் பொடிபடுத்தும்படி அரசனாகிய தசரதனுக்கு மதலையாய்ப் பூமியில் யாம் பிறப்போம். சங்கமும் சக்கரமும், ஆதிசேடனும் எமது தம்பிமார்களாக வந்து எம் அடிகளை வணங்க யாம்போய் அயோத்தியாபுரியிலே தோன்றுவோம்' என்று கூறினார்.

அது கேட்ட தேவர்கள் மகிழ்ந்து துள்ளினர். மங்கல இசைகளைப் பாடினர். திருமால் கருடாழ்வான் மேல் ஏறிச் சென்றார். பிறகு பிரம தேவர் தேவர்களை நோக்கி, 'கரடிகளிற் சிறந்த சாம்பவான் என்னுடைய அமிசமே. நீங்கள் யாவரும் திருமால் கூறியவாறே போய்ப் பிறவுங்கள்' என்று கூறினார்.

இந்திரன், தனது அமிசம் வாலியும், அவன்மகனை அங்கதனும் என்று கூறினான். கதிரவன், அந்த வாலிக்குத் தம்பியாகிய சுக்கிரீவன் தனது அமிசம் என்றான். அக்கினிதேவன், நீலன் என்னும் வானரன் தனது அமிசம் என்றான். வாயுதேவன் தனது அமிசம் அநுமான் என்றான். மற்றைத் தேவர்கள் குரங்குகளின் வடிவமாகிப் பூமியில் போகத் துணிந்தனர். சிவபெருமானும் தமது அமிசம் அநுமானே என்றார். யாவரும் அவ்வாறே சென்று பிறந்தனர்.

இவ்வாறு முன்நிகழ்ந்ததை வசிட்ட முனிவர் தமது உள்ளத்தில் நினைத்துத் தசரதனை நோக்கி, 'அரசனே நீ வருந்தாதே; இந்தப் பூவுலகத்தையேயன்றிக் கீழ் ஏழ் மேல் ஏழ் என்ற பதினான்கு உலகங்களைக்கொண்ட இந்த அண்டம் முழுவதையும் காக்கவல்ல புதல்வரைக்

கொடுக்கவல்ல யாகத்தை நீ செய்து முடித்தால் நின் மனத்துயரம் நீங்கும்' என்ருன்.

37. யாகத்திற்குத் தான் செய்ய வேண்டுவது என்ன என்றுகேட்ட தசரதனுக்கு வசிட்டர் கூறிய விடை என்ன?

வசிட்ட முனிவர் தசரதனை நோக்கி, 'சிவபிரானும் புகழ்தற்கு உரியவனும், தன் தந்தையாகிய காசிப முனி வரை யொப்பவனுமான காசிப முனிவரின் மைந்தன் விபண்டகன் என்பவன். அவன் மைந்தன் ருசிய சிருங்க முனிவன். அவன் மனுநீதி நூலிலும் வேதத்தி லும் நான்முகனுக்கு ஒப்பானவன். இந் நிலவுலகத்தி லுள்ளவர்களின் தன்மைகளை அறியாதவன். ஒருமான் கொம்பை முகத்திலே உடையவன் சிறந்த தவத்தை யுடையவன். அந்த ருசியசிருங்க முனிவன் பூமியில் வாழும் மனிதர்களை விலங்குகளென்று நினைப்பவன். அவனால் இப்பொழுது நீ செய்யக் கருதியுள்ள யாகத் தைச் செய்து முடித்தால் புதல்வர்கள் தோன்றுவர்' என்று கூறினார். (ருசிய சிருங்க முனிவனுக்குக் கலைக் கோட்டு முனிவன் என்றும் பெயர்.)

38. தசரதனுக்கு வசிட்டர் உரைத்த கலைக்கோட்டு முனிவனின் வரலாற்றை விளக்குக.

வசிட்டமுனிவர் கலைக்கோட்டு முனிவரைஅழைத்து யாகம் செய்யுமாறு கூறினார். அதுகேட்ட தசரதன் அவர் வரலாறு என்ன? அவரை அழைப்பது எப்படி என்று கேட்டான். அதற்கு வசிட்டர் தசரதனை நோக்கி "மனுகுலத்தில் தோன்றிய உத்தான பாதன் என்னும் அரசன் பெற்ற மகன் உரோமபாதன் என்பவன் உள் ளான். அவ்வுரோமபாதன் ஆளும் நாட்டில் நெடுங் காலமாக மழையின்றிப் பஞ்சம் மிகுந்தது. அவ்வரசன் முனிவர்களையழைத்துத் தானம் கொடுத்த பின்னும் மழையில்லை. அதன்பின் என் செய்வது என்று முனி வர்களை வினவ அவர்கள் கலைக்கோட்டு முனிவன் இந் நாட்டிற்கு வந்தால் மழைபெய்யும் என்று கூறினர்.

அதுகேட்ட உரோமபாத அரசன் 'பூவுலகில் வாழ்கின்ற மனிதர்களை விலங்குகளென்றே யெண்ணுகின்ற அரிய தவத்தையுடைய அந்தக்கலைக்கோட்டு முனிவனை இந்த அங்கதேசத்திற்கு அழைத்து வரும் உபாயம் யாது?' என்று சிந்தித்தபொழுது விலை மகளிர் சிலர் எழுந்து 'நாங்கள் போய் அந்த முனிவனை அழைத்து வருகிறோம்' என்றனர். அதைக் கேட்ட அரசன் மகிழ்ந்து அவர்கட்குப் பொன்னும் பொருளும் மிகக் கொடுத்து அனுப்பிவைத்தான்.

அவ்விலை மகளிர், பலயோசனை தொலைவு சென்று கலைக் கோட்டு முனிவன் வசிக்கும் இடத்திற்கு ஒரு யோசனை தொலைவில் பன்னசாலை ஒன்றை அமைத்து அதில் முனிவர்களைப்போல் தங்கியிருந்தார்கள். ஒரு நாள் கலைக் கோட்டு முனிவனின் தந்தையாகிய விபண்டக முனிவன் இல்லாத சமயம் பார்த்து அங்குச் சென்றனர். கலைக்கோட்டு முனிவன் அவர்களைத் தவசிகள் என்று கருதி இனிய உபசாரங்களைச் செய்தான். பின்னர் அம்மகளிர் முனிவனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு தமது ஆச்சிரமத்திற்குச் சென்றனர்.

சில நாட்கள் சென்றபின் அவ்விலைமகளிர் பலா மா வாழை ஆகிய பழங்களையும் தேங்காய்களையும் கொண்டுபோய் அந்த முனிவனுக்குக் கொடுத்து அருந்தச் செய்தனர். பல நாட்கள் சென்றபின் அம்மகளிர் 'நாங்கள் உமது ஆச்சிரமத்திற்கு வருவதுபோல் தாங்களும் எங்கள் ஆச்சிரமத்திற்கு எழுந்தருள வேண்டும்' என்று சொல்லி வணங்கினர். முனிவனும் அவர்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு அவர்களுடன் புறப்பட்டான். 'எங்கள் ஆச்சிரமம் இதோ இதோ' என்று சொல்லிக் கொண்டே அங்கதேசத்திற்கே அழைத்து வந்து விட்டனர். அவ்வுரோமபாத அரசனின் நகரத்திற்கு வந்த மாத்திரத்தில் கருமேகங்கள் சூழ்ந்து சளசள என்ற ஓசையுடன் மழைபெய்தது. ஆறுகளும், குளங்களும் நீரால் நிறைந்தன. நாடு செழித்தது.

உரோமபாத மன்னன் ஆலோசித்து முனிவன் தன் நாட்டுக்குள் வந்திருக்க வேண்டுமென ஊகித்தான். விலைமகளிர் செய்த தந்திரத்தால் காமம் வெகுளி மயக்கம் ஆகிய முக் குற்றங்களையும் வெறுத்த கலைக் கோட்டு முனிவன் இந்நகரத்தில் வந்து சேர்ந்தானோ? என்று நினைத்து, முனிவர்கள் சூழச்சென்று கலைக் கோட்டு முனிவனை எதிர்கொண்டான். முனிவனின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். விலைமகளிர் செய்த உதவிக்கு அவர்களைப் பாராட்டினான்.

கலைக்கோட்டு முனிவன் தன்னை வஞ்சகமாக அம் மங்கையர் அழைத்து வந்தனர் என உணர்ந்து சினங் கொண்டான். உரோமபாத மன்னன் வணங்கி வேண்டியதால் சினந்தணிந்தான். பிறகு மன்னன் தன் நாட்டில் மழை பெய்யாமல் வறட்சிமேலிட்ட தன்மையையும் அம்முனிவன் வந்ததனால் மழைபெய்து துன்பம் தணிந்த வகையையும் விளங்க அம் முனிவனுக்கு எடுத்துக் கூறினான்.

கலைக்கோட்டு முனிவன் அருள் சுரந்து உரோம பாத மன்னனுக்கு ஆசீர்வாதம் செய்து முனிவர்களும் உடன்வர அரசன் கொடுத்த தேரில் ஏறி அம்மன்னவனது நகரத்திற்குவந்து அரண்மனையை அடைந்தான். அரசன் அம்முனிவனை அரியணையில் இருக்கச் செய்து சிறப்பித்தான். உரோமபாதன் தன் மகள் சாந்தையை வேதமந்திரத்துடன் அன்போடு கலைக் கோட்டு முனிவனுக்குக் கன்னிகாதானமாகக் கொடுத்தான். மழையில்லாமையால் நேர்ந்த பஞ்சம் தீரும்படி மேகம் மழையைப் பொழியவே அங்கதேசம் துன்பம் நீங்கப் பெற்றது. முனிவன் சாந்தையென்பவளால் உபசரிக்கப் பெற்று அரண்மனையில் இருக்கின்றான், தசரத மன்னனே! நீ சென்று அழைத்து வா' என்று வசிட்டமுனிவர் சொல்லி முடித்தார்.

9 'இன்று எமதுவினை முடிந்தது எனச் சொரிந்தார் மலர்மாரி இடைவிடாமல்'

— இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

தசரதன் தனக்கு மகப்பேறு இல்லாக்குறையை வசிட்ட முனிவரிடம் சொல்ல, வசிட்ட முனிவர் கலைக் கோட்டு முனியை அழைத்து வந்து யாகம் செய்யுமாறு கூறினர். கலைக் கோட்டு முனியின் வரலாறு கேட்ட தசரதனுக்கு வசிட்டர் விளக்கமாகச் சொல்லி உரோம பாத மன்னன் அரண்மனையில் இருப்பதையும் சொன்ஞர். அதைக் கேட்ட தசரதன் வசிட்டரை வணங்கி 'இப்பொழுதே சென்று அவரைஅழைத்து வருகிறேன்' என்று கூறி அமைச்சர் தொழத் தேரேறினன். தசரதன் தேரில் ஏறியபொழுது தேவர்கள் அவனை வாழ்த்தி இன்றோடு எங்களுடைய துன்பமெல்லாம் தொலைந்தது என்று மகிழ்ந்து இடைவிடாமல் மலர்மாரி சொரிந்தனர்.

தேவர்கள் அரக்கரால் அடையும் துன்பம் நீங்க வேண்டுமானல் திருமால் தசரதனுக்கு மகனுகப் பிறக்க வேண்டும். தசரதனுக்கு மகப்பேறு உண்டாக, அவன் யாகம் செய்தாகவேண்டும். அவன் யாகம் செய்யக் கலைக் கோட்டு முனிவரவேண்டும். அதனல் அந்தக் கலைக் கோட்டு முனியை யழைக்கத் தசரதன் கிளம்பிய வுடனே தங்கள் துன்பமெல்லாம் தீர்ந்தது—என்று மகிழ்ந்து மலர்மாரி சொரிந்தனர்.

40. 'யான் செய்த மாதவமோ! இவ்வுலகம் செய் தவமோ! இங்ஙன் வான்செய்த சுடர் வேலோய்! அடைந்தது?'

—இடஞ்சுட்டி விளக்குக.

கலைக்கோட்டு முனிவனை அழைத்துவர எண்ணித் தசரதன் தேர் ஏறி அங்க தேசத்திற்குச் சென்ருன். அங்கதேசத்து அரசனுகிய உரோமபாதன் அவனை எதிர்கொண்டு வரவேற்ருன். உரோமபாதனைக் கண் டதும் தசரதன் தேரினின்றும் கீழே இறங்கினுன். உரோமபாதன் தசரதனின் அடிகளில் விழுந்து வணங்க அவனை எடுத்துத் தழுவிக்கொண்டான் தசரதன். உரோமபாதன் மிகுந்த மகிழ்ச்சியால் தசர தனை நோக்கி, 'தேவலோகத்தை நிலைபெறச் செய்த

சுடர் வேலையுடையவனே! நீ இவ்விடம் வந்தது நான் செய்த தவத்தின் பயனோ? இந்த நாட்டவர் செய்துள்ள தவத்தின் பயனோ? இவ்விரண்டனுள் எதுவோ?' என்று முகமன் கூறித் தசரதனைத் தேரில் ஏற்றித் தன் நகர்க்கு அழைத்து வந்தான்.

41. கலைக்கோட்டு முனிவனைக் கொண்டு தசரதன் யாகம் செய்த வகையை விளக்குக.

தசரதன் கலைக்கோட்டு முனிவனை அழைக்க உரோமபாதன் நகர்க்குச் சென்றான். உரோமபாத மன்னன் தசரதனை வரவேற்று உபசரித்துக் கலைக் கோட்டு முனிவனை அயோத்திக்கு அழைத்து வருவதாகச் சொல்லத் தசரதன் தன் நகர்க்கு மீண்டான். உரோமபாதன் கலைக்கோட்டு முனிவனை வணங்கி ஒருவரம் வேண்டும் என்று கேட்டு அயோத்திநகர்க்குச் சென்று வரவேண்டினான். அரசனது வேண்டு கோளுக்கு இணங்கி முனிவன் தன் மனைவியுடன் தேரில் ஏறி அயோத்தி நோக்கிச் சென்றான். தசரதன் தேரேறி வந்து முனிவனை எதிர்கொண்டு வரவேற்று வணங்கித் தன் நகரத்துக்கு அழைத்துச் சென்றான், வசிட்டர் கலைக்கோட்டு முனி ஆகிய இருவரும் தசரதன் அவையைச் சிறப்பித்தனர்.

தசரதன் கலைக்கோட்டு முனிவனை உபசரித்து வணங்க, முனிவன் தன்னை அழைத்த காரணம் யாதென வினவினான். தசரதன் புதல்வனில்லாக் குறையை நீக்குமாறு முனிவனை வேண்டினான். 'மைந் தரை யளிக்கும் மாமகம் செய்க' என்று முனிவன் கூறினான். வேள்விக்கு வேண்டிய யாவும் சித்தமாயின. தசரதன் வேள்விச் சாலைக்குச் சென்றான்.

கலைக்கோட்டு முனிவன், மூன்று அக்கினிகளையும் விரைந்து வளர்த்துப் பன்னிரண்டு மாதம் யாகம் செய்தபின் தேவதுந்துபிகள் முழங்கின. தேவர்கள் வானகத்தில் வந்து நிறைந்தனர். முனிவனும் அந்த அக்கினியினிடையிலே புத்திரரைக் கொடுத்தற்குரிய ஆகுதிகளை வழங்கினான்.

அந்தச் சமயத்தில் சிவந்த தலைமயிரையும், செந்நிறக் கண்களையுமுடைய ஒரு பூதம் அழகிய ஒரு பொன் தட்டிலே இனிய அமுதத்தையொத்த ஒரு பிண்டத்தைத் தாங்கிக்கொண்டு ஓமத் தீயினின்று எழுந்தது. எழுந்து அந்தத் தட்டைப் பூமியிலே வைத்துவிட்டு மீண்டும் அத்தீயிலே பாய்ந்து சென்றது. உடனே கலைக் கோட்டு முனிவன் தசரதனை நோக்கி 'இந்த இனிய உணவை உன் மனைவிமார்கட்குக் கொடுப்பாயாக' என்றான்.

தசரதன் கோசலையின் கையில் ஒரு பாகத்தைக் கொடுத்தான். கைகேயியின் கையில் மீதியில் ஒரு பாகத்தைக் கொடுத்தான். மீதியைச் சுமித்திரைக்கு அளித்தான். பகுத்துக் கொடுக்கும்பொழுது தட்டில் சிந்தி வீழ்ந்தவற்றையும் சுமித்திரைக்குக் கொடுத்தான். வேள்வி முடிந்து தசரதன் அரசவையையடைந்தான். அந்தணர்களுக்கு முறைப்படிப் பொன்னை அளித்தான். அரசர்களுக்கும் பரிசில்களை நல்கினான். சரயு நதியில், சென்று நீராடினான். அரசவையடைந்து வசிட்ட முனிவரை வணங்கினான். கலைக்கோட்டு முனிவனை வணங்கி முகமன் கூறினான். முனிவன் தன்னுடன் வந்த முனிவர்களோடு உரோமபாத மன்னனின் நகர்க்குச் சென்றான். தேவிமார் மூவரும் கருவுற்றனர்.

42. தேவிமார் மூவரும் நால்வரைப் பெற்ற சிறப்பை விளக்குக.

இராமபிரான் தோற்றம் :—பூமிதேவி மகிழ்ச்சியால் பூரிக்கவும், புனர்பூச நட்சத்திரமும் கடக லக்கினமும் குதித்துத்துள்ளவும், சித்தர்களும் இயக்கர்களும் முனிவர்களும் தேவர்களும் நித்திய சூரிகளும் மகிழ்ச்சியினால் ஆரவாரிக்கவும், தருமதேவதை மகிழ்ச்சி மிகவும் கோசலையானவள், பிரளய காலத்தில் எல்லா உலகங்களையும் தனது வயிற்றினுள்ளே மறைத்துவைத்து, வேதங்களுக்கும் அறிதற்கு அருமையானவனும், மேகத்தின் அழகைக் காட்டும் மேனியையுடையவனும் ஆகிய திருமாலைப் பெற்றாள்.

**பரதன் தோற்றம்** :—தேவர்கள் ஆரவாரித்துப் பொங்கவும், இந்திரன் முதலிய தலைமைத்தேவர்கள் தொழுது வாழ்த்தவும், பூச நட்சத்திரமும் மீன லக்கினமும் விளங்கவும் கேகயமன்னன் மகளாகிய கைகேயி பரதனைப் பெற்றாள்.

இலக்குவன் தோற்றம்:—இந்திரனும் மற்றைத் தேவர்களும் வானத்தில் நெருங்கி ஆரவாரித்துக் குதிக்கவும், ஆயிலிய நட்சத்திரமும் கடக லக்கினமும் வாழ்வையடையவும் சுமித்திரை இளையபெருமாளைப் பெற்றாள்.

சத்ருருக்கன் தோற்றம் :— ஆதிசேடன் ஏந்துகின்ற பூமிதேவியானவள் ஆனந்தக் கூத்தாடி விளங்கவும், வேதங்கள் நடனஞ் செய்யவும், சிங்கராசியும் மகநட்சத்திரமும் உயர்ந்து வாழ்வு பெறவும் சுமித்திரை மறுபடியும் ஒரு புதல்வனை—சத்துருக்கனை ஈன்றாள்.

அப்பொழுது 'அரக்கர்கள் அழிந்தார்கள்' என்ற பூரிப்பினால் தேவமாதர்கள் வானத்திற்கூத்தாடினார்கள். ஏழிசைகளையும் பாடினார்கள். பல்லியங்களையும் ஒலித்தனர். தேவர்கள் எங்கும் ஓடியுலாவினார்கள்.

தசரதனின் ஏவற்பெண்டிர் அவனிடம் ஓடிப் புத்திரர் பிறந்ததைச் சொல்லினர். சோதிடம் வல்ல அந்தணர்கள் நட்சத்திரங்களும் கிரகங்களும் நின்ற நிலைமைகளை ஆராய்ந்து பார்த்து இனிமேல் உலகில் தீமையொழிந்துபோகும் என்று கூறினர்.

இராமபிரான் தோன்றிய காலத்தில் மாதம் சித்திரை; திதி நவமி; நட்சத்திரம் புனர்பூசம்; இலக்கினம் கடகமாம். இவற்றை ஆராயுமிடத்து நான்குபேர்களாகிய (சுக்கிரன், வியாழன், சனி, செவ்வாய்) உச்சம் பெற்றவர்களாவர். இவ்வாறு மற்றவர்களுக்கும் சாதகம் எழுதிப் படித்துக் காட்டினர்.

**43. புதல்வர் பிறந்த மகிழ்ச்சியினால் தசரதன் செய்த நற்செயல்கள் யாவை?**

புதல்வர் பிறந்த மகிழ்ச்சியான செய்தியைக் கேட்டவுடனே தசரதன் சரயு நதியில் நீராடி விதைகளையும்

இனிய செல்வத்தையும் மிகுதியாகத் தானம் செய்து மங்கலச் சங்குகள் முழங்க வசிட்டருடன் சென்று புதல்வர்களின் அழகிய முகங்களைப் பார்த்தான்.

'போர்த் தொழில் எங்கும் ஒழிக, சிறைப்பட்ட அரசர்கள் விடுதலை பெறுக, அந்தணர்களால் நடத்தப் படும் நியமங்கள் குறைவின்றி நிகழ்க, ஆலயங்களில் விழாக்கள் நடைபெறுக, பழைய தேவாலயங்களைப் புதுப்பிக்க, அந்தணர் சாலைகளையும் சதுக்கங்களையும் சந்திகளையும் ஏற்படுத்துக, காலையும் மாலையும் தெய்வங்கட்கு அழகிய மாலைகளையும் திருவிளக்குகளையும் வழங்குக, நாடு முழுவதும் ஏழாண்டுகட்கு வரி நீங்குவதாக, நிதிச்சாலைகளைத் திறந்து ஏழைகள் எல்லாப் பொருள்களையும் வாரிக் கொள்க என்று வள்ளுவர் பறையறைக' என்று கட்டளையிட்டான்.

44. மைந்தர்களுக்குப் பெயரிட்ட சிறப்பையும் அவர்கள் வளர்ந்த முறையையும் விளக்குக.

வள்ளுவர்கள் பறையறைந்து புதல்வர்கள் பிறந்த செய்தியை நகரத்திற்குத் தெரிவித்தனர். நகரமாந்தர் களிப்படைந்தனர். நால்வர்க்கும் வசிட்டர் பெயர் சூட்டினர்.

இராமன்:—முதலையுடன் போர் செய்த யானை, களைத்துப்போய் ஆதிமூலமே! என்று விளிக்க, அப்பொழுதே அங்கு வந்து அதைக் காத்தருளிய மெய்ப்பொருளாகிய நாராயணனுக்கு இராமன் என்று பெயர் ஈந்தார்.

உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விரதங்களையும் வேதங்களையும் ஐயந்திரி பறக்கற்ற வசிட்டர் இராமனுக்குப் பின் பிறந்த ஒளிமயமான குழந்தைக்குப் பரதன் என்று பெயரிட்டார்.

'இக்குழந்தை பிறந்த பொழுதே அரக்கர்கள் அழியுந்தன்மையராவர். தேவர்கள் பிழைத்தனர். பூமிதேவியும் துன்பம் ஒழிந்தாள். மிக்க வலிமைபெற்ற ஒளிமயமான இக்குழந்தைக்குப் பெயர் இலக்குவன் என்பதாகும்' என்று கூறினர்.

'செந்தாமரையில் பிறந்த முத்துப் போன்ற அழகையுடைய இந்த ஒளிமிக்க குழந்தையால் எல்லாப் பகைகளும் ஒழியும்' என்று எண்ணி சத்துருக்கன் என்று பெயரிட்டார்.

இவ்வாறு குழந்தைகளுக்குப் பெயரிட்டபொழுது தசரதன் அந்தணர்களுக்குத் தானம் வழங்கினான். தசரதன் அழகிய இராமபிரானை யல்லாமல் தனக்கு ஓருயிரும் உடம்பும் வேறில்லை யென்னும்படி தனது மூத்த மகனிடம் பேரன்பு பூண்டு ஒழுகினான். புதல்வர்கள் நால்வரும் மழலைச் சொற்களுடன் அழகிய தளர் நடையும் பழகி நான்கு வேதங்களையும் போல வளர்ந்தனர்.

வசிட்ட முனிவர் அக்குமரர்களுக்குச் சவுளத்தையும் (குடுமி வைக்கும் சடங்கு) உபநயனத்தையும் செய்வித்து வேதங்களையும் மற்றைச் சாத்திரங்களையும் சொல்லிக் கொடுத்தார். யானை யேற்றம், குதிரை யேற்றம், தேர் ஏற்றம் முதலிய எல்லாத் தொழில்களையும் கற்று வில்வித்தையும் பயின்று வளர்ந்தனர். முனிவர்களும் தேவர்களும் இவர்கள் இருக்கும் இடத்திற்கு வந்தனர். இராம லட்சுமணர் எப்பொழுதும் ஒருவரையொருவர் பிரியாதிருந்தனர். பரத சத்துருக்கனர் ஒருவரையொருவர் பிரியாதிருந்தனர். புதல்வர்கள் பகலில் முனிவர்களிடத்தில் சென்று பழகி மாலையில் நகரத்தார் மகிழ்ச்சியோடு எதிர்கொள்ள மீண்டனர். இவ்வாறு வளர்ந்தனர். தம்மை எதிர்கொண்ட நகரத்தவரை இராமபிரான் உசாவ அவர்கள் உவகையுடன் விடையளித்தனர். யாவரும் போற்ற நால்வரும் வளர்ந்தனர்.

**45. 'எதுவினை? இடர் இலை? இனிது நும்மனையும்? மதிதரு குமரரும் வலியர் கொல்?'**

**—இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

இராமபிரான் முதலிய நால்வரும் வளர்ந்து வருங் காலத்தில் இராமபிரானுக்கு எதிரில் வரும் அந்நகரத்

தவர்கள் பலரையும் நோக்கி மிக்க அருளுடன் தாமரை மலர் போன்ற தன் திருமுகம் விளங்க 'உம்முடைய தொழில் யாது? உங்களுக்குத் துன்பம் ஒன்றும் இல்லையே? உங்கள் மனைவியரும் புத்திரர்களும் நலமாக வலிமையுடன் இருக்கின்றனரா?' என்று அவரவரு டைய குடும்ப நலன்களை வினவ, அதற்கு அவர்கள், 'ஐயனே! உன்னை எங்களது அரசனுக உடையோம் நாங்கள். ஆகையால் எமக்கு எந்தக் குறையுமில்லை. எங்களுடைய உயிரையும் பூலோகம் முழுவதையும் பிரமன் அழியுங்காலம் வரையில் நீ ஆட்சி செய்தருள் வாயாக' என நன்ருக வாழ்த்தி விடையளித்தனர்.

இராமபிரான் காலையில் முனிவர்கள் உறையும் பொழில்களுக்குச் சென்று மாலைக்காலத்து மீண்டு வருங்கையில் மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ளும் நகரத்து மாந்தரை நோக்கி, அவர்கள் தன்னை வினவுவதற்கு முன்னமே தான் அவர்களின் நலங்களை வினவ, அவர் களும் நீ அரசனுக இருக்கையில் எமக்கு ஒருகுறை எங்ஙனம் நிகழும்? நீ ஊழிக்காலம் வாழ்க' என்று வாழ்த்தினர்.

இவ்வாறு உலகத்தார் புகழ, தம்பிமார் துதிக்க, இராமன் இனிதிருந்தான். தசரதன் பெருமகிழ்ச்சி யடைந்து அரசாட்சி செய்து வந்தான்.

# சிலப்பதிகாரம்

## (புகார்க் காண்டம்)

1. *சிலப்பதிகாரம் பற்றிக் குறிப்பு வரைக.*

சிலப்பதிகாரம்—இது ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று. இதனை இயற்றியவர் இளங்கோ அடிகள் ஆவார். கற்பிற் சிறந்த கண்ணகி, அவள் கணவனாகிய கோவலன் ஆகியோர் வரலாற்றை உரைப்பது. சோணாடு, பாண்டியநாடு, சேரநாடு என்ற முத்தமிழ் நாட்டின் இயல்புகளையும், முறையே அவற்றின் தலை நகர்களாகிய புகார், மதுரை, வஞ்சி என்பவற்றின் பெருமைகளையும் ஆங்கிருந்து அரசோச்சிய சோழ, பாண்டிய, சேரமன்னர்களின் அறன், மறன், ஆற்றல், ஆணை, முறைமை என்பவற்றையும், அந்நந்நாட்டுக் குடிகளின் ஒழுக்கம், ஊக்கம், ஒப்புரவு ஆண்மை முதலி யவற்றையும், அக்காலத்திய உழவு, வாணிபம், தொழில் இவற்றையும், கல்வி நிலை, சமயநிலை முதலியவற்றை யும், ஐந்திணை வளங்களையும், இன்ப நுகர்ச்சித் திறங் களான விழவு, கூத்து, பாட்டு முதலியவற்றையும் வெள்ளிடை மலையென விளக்கும் ஒப்பற்றகாவியம் இது.

மேலும் இக்காப்பியம் தொடர்நிலைச் செய்யுள் எனவும், முத்தமிழும் விரவப் பெற்றதும், பொருள் தொடர்ந்து செல்வதுமாகலின் இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள் எனவும், உரைச் செய் யுளும், இசைப்பாட்டும் இடையிடை விரவப் பெற்ற தாகலின் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனவும், பல கூத்துக்களும் அவற்றிற்குரிய பாட்டுக் களும் இடையிடை அமைந்திருத்தலின் நாடகக் காப்பி யம் எனவும் கூறப்பெறும்.

இச்சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் இயற்று தற்கான காரணத்தைப் புலப்படுத்திக் கதையைத் தொகுத்துரைக்கும் "பதிகச்" செய்யுளை முதலிற் கொண்டு மங்கல வாழ்த்துப் பாடல் முதலிய பத்துக்

காதைகளையுடைய புகார் காண்டமும், காடு காண் காதை முதலிய பதிமூன்று காதைகளையுடைய மதுரைக் காண்டமும், குன்றக்குரவை முதலிய ஏழு காதைகளையுடைய வஞ்சிக் காண்டமும் ஆக முப்பது காதைகளை உள்ளடக்கிய மூன்று காண்டங்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது.

2. "புகார்க் காண்டம்"—விளக்குக.

பாடப் பகுதியாகிய புகார் காண்டத்தில் அமைந்த பத்துக் காதைகளாவன:— 1. மங்கல வாழ்த்துப்பாடல் 2. மனையறம் படுத்த காதை 3. அரங்கேற்று காதை 4. அந்திமாலைச் சிறப்புச் செய்காதை 5. இந்திர விழா வூரெடுத்த காதை 6. கடலாடு காதை 7. கானல்வரி 8. வேனிற் காதை 9. கனாத்திற முரைத்த காதை 10. நாடு காண் காதை.

## புகார் காண்டத்தின் கதைச் சுருக்கம்

புகார் நகரிலே வண்மையிற் சிறந்த மா நாய்கனின் மகளாம் கண்ணகிக்கும், ஒப்பற்ற செல்வந்தர் மாசாத்துவானின் மகனும் கோவலனுக்கும் மணவணி காண விரும்பிய குரவர்கள், திங்களை உரோகிணி கூடிய நன்னாளில் நீலவிதானத்து நித்திலப் பந்தர்க் கீழ் தம் மக்கட்கு மறை வழிமணம் செய்வித்தனர்.

வியத்தகு சிறப்புடன் இல்லறம் நடாத்துவதில் சில ஆண்டுகள் கழிந்தன.

அந்நாளில் காவிரிப்பூம் பட்டினத்திலே கணிகையர் குலத்திற்றோன்றிய மாதவி என்பாள் ஆடல், பாடல் அழகு இம்மூன்றிலும் சிறந்து விளங்கினாள். அவள் தம் ஆடலை அரங்கேற்றி அரசனது பச்சை மாலையையும் தலைக்கோற்பட்டமும் பெற்றனள். அம்மாலையை ஓர் கூனி கையிற் கொடுத்து இதனை ஆயிரத்தெண் கழஞ்சு பொன் பெறுவோர், மாதவிக்கு மணமகனாவர் எனக் கூறக்கேட்ட கோவலன் அம்மாலையினைப் பெற்றுக் கூனியுடன் மாதவி மனையடைந்து, அவளை அணைந்த

அன்றே மயங்கி, தன் மனைவியையும் மனையையும் மறந்து, மாதவியை ஒருபொழுதும் நீங்கா விருப்புடையனாயினன்.

மாதவியாள் நிலாமுற்றத்தில் மலரமளியில் ஊடலும் கூடலும் கோவலனுக்களித்து இன்புறுகின்றாள். கண்ணகி காதலனைப் பிரிந்து வருந்தியிருக்கின்றாள்.

அந்நாளில் இந்திரவிழா சிறப்பாகப் புகார் நகரில் நடைபெறுகின்றது.

கடலாடப் புகார் நகரத்தினர் புறப்பட, மாதவி அதனைக் காண விரும்பினமையின் கோவலனும் அவளும் கடற்கரை அடைந்தனர். தோழி வசந்தமாலையின் கையிலிருந்த யாழை வாங்கி மாதவி கோவலனேடிருந்தாள்.

யாழினை மீட்டி இருவரும் வரிப்பாட்டுக்கள் பலவற்றைப் பாடினர். யாழிசைமேல் வைத்து ஊழ்வினை வந்து உருத்த தாகலின் கோவலன், மாதவி பாடியவற்றைக் கேட்டு தான் கானல் வரிபாட, அவள் மிக்க மாயமுடையளாகலின் வேருென்றின் மேல் மனம் வைத்துப் பாடினாள் என உட்கொண்டு அவளை அணைத்த கை நெகிழ்ந்தவனாய் எழுந்து பிரிந்தனன்.

இளவேனிலும் வந்தது. மாதவி வசந்தமாலை மூலமாக கோவலனுக்கு ஓலையனுப்பக் கோவலன் அதனை மறுத்து இதுநாடகமகளின் இயல்பென வெறுத்தனன்.

கண்ணகியைக் கோவலனடைந்து நாணி வருந்தினன். மாதவிக்குக் கொடுக்கப் பொருளில்லாமல் கோவலன் வருந்துகிருன் எனக்கருதி, கண்ணகி தன் காற் சிலம்புகளை அவனிடம் கொடுக்க, அவற்றை வாங்கிய கோவலன் அவற்றை முதலாகக் கொண்டு மதுரையை அடைந்து வாணிகம் செய்து இழந்த பொருளை ஈட்டத் துணிந்து கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்பட்டனன்.

கோவலனும் கண்ணகியும் புகாரை விட்டுப் புறப்பட்டுச் சென்றனர். வழியில் கவுந்தியடிகளின் தவப்பள்ளியை அடைந்து, அவருடன் உறையூர் அடைகின்றனர்.

3. ''குன்றக்குறவர்''—ஈண்டு இவ்வடியில் கூறப்படும் ''குன்றம்'' என்பது திருச்செங்கோடா? செங்குன்ற மலையா? என்பதை ஆய்ந்துரை செய்க.

''குன்றம்''—என்பது கொடுங்கோளூரையடுத்த செங்குன்ற மலையையே குறிக்கும். செங்குன்று என்பது கொடுங்கோளூர்க்கு அயலதாகிய மலையாகலானும், திருச்செங்கோடு கொடுங்கோளூராகிய வஞ்சி நகர்க்கு வடகீழ்த் திசைக் கண்ணதாய் அறுபதின் காத வழியிலுள்ளதாலும், ''அரசனும் உரிமையும் மலை காண்குவம்'' என்று வந்து கண்ட அன்றே வஞ்சி புகுதலானும், அறுபதின் காத வழி கடந்து ஒரே நாளில் வந்து, ''காண்குவம்'' என்றுரைத்தல் கூடாமையாலும், ''குன்றம்''—என ஈண்டுரைப்பது கொடுங்கோளூரை அடுத்த செங்குன்றென்னும் மலையே யாகும் என்பது தெளிவு.

4 சிலப்பதிகாரத்தால் உணர்த்தப் பெறும் மூன்று உண்மைகள் யாவை?

''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம், உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும், ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்பதூஉம்'' — சிலப்பதிகாரத்தால் உணர்த்தப்பெறும் மூன்று உண்மைகளாகும்.

5 ''சிங்கா வண்புகழ்ச் சிங்கபுரத்துச் சங்கமனென்னும் வாணிகன் மனைவி இட்ட சாபம்''—யாது?

அரும் பொருளின் மேற்கொண்ட ஆசையினல் சிறந்த அணிகலன்களைச் சுமந்தவனாகக் கபிலபுரத்து வாணிகனாகிய சங்கமன் என்பவன், சிங்கபுரத்தின் ஒரு கடை வீதியிற் புகுந்து, தான் கொணர்ந்திருந்த அருங் கலன்களை விற்றுக் கொண்டிருந்தான்.

முற்பிறப்பில் பரதன் என்னும் பெயரினனாக இருந்த கோவலன், வேந்தனுக்கு அரசகாரியம் செய்வோனாயிருந்தான். சங்கமனை ''ஒற்றன் இவன்'' எனப் பற்றி, அவனைக் கொண்டு வெற்றிவேல் மன்னனிடம் காட்டிக் கொன்றனன். கொலைக் களத்திலே இறந்துபட்ட சங்கமனின் மனைவியான நீலி என்பாள், தனக்

கொரு நிலைக்களமும் காணாது துடித்தாள், முறையிட்டாள். பதினான்கு நாட்கள் சென்றபின் தானும் தன் காதலனோடு இறந்து ஒன்று சேரக் கருதி மலையுச்சியில் நின்று "எமக்கு இத்தீங்கு செய்தவர் எவ்வகையானும் தாமும் இதே துயரை அடைவதாக" எனக்கூறி வீழ்ந்திறந்தாள். அச்சாபமே மறுபிறப்பில் கோவலன் கொலைக் களப்படக் காரணமாயிற்று.

6. திங்கள், ஞாயிறு மாமழை, பூம்புகார் இவற்றை எங்ஙனம் இளங்கோவடிகள் போற்றுகின்றார்?

பூந்தாது சொரியும் ஆத்திமாலையுடைய சோழனின் அருள் நிறைந்த வெண்கொற்றக் குடையினைப்போல் தண்ணொளி பரப்புவதால் திங்களையும்,

காவிரி நாடனின் ஆணைச் சக்கரம்போல் முகடுகள் உடைய மேரு மலையினைச் சுற்றிவலம் வருவதனால் ஞாயிற்றையும், கடல்களை வேலியாகச் சூழ்ந்துள்ள உலகத்தில்,

சோழனின் அருள்போல மேல் நின்று சுரந்து அனைத்துயிரையும் வாழ்விக்கின்ற காரணத்தால் மாமழையையும், சிறப்புடைய சோழனின் வம்சத்தினரோடு உயர்ந்து பரவிய புகழுடன் நின்றதனால் பூம்புகாரினையும் போற்றுவோம் என்று இளங்கோவடிகள் கூறுகின்றார்.

7 திருமணச் சடங்கு சிலப்பதிகாரத்தில் எங்ஙனம் பேசப்படுகிறது? (அல்லது)
பண்டைக்காலத் திருமண முறையை விளக்குக.

குறித்த ஒரு பெருநாளில் யானையின் பிடரியில் அழகிய அணிகலன்கள் புனைந்த மகளிரை ஏற்றி வைத்து நகர மக்களுக்குக் கோவலன் கண்ணகி மணவினைச் செய்தியைத் தெரிவித்தனர். திருமண நாளன்று முரசுகள் முழங்க மத்தளங்கள் அதிர, சங்கம் முதலியின முறையுடன் ஒலிக்க அரசன் ஊர்வலம் செய்வதுபோல வெண்குடையொன்று எழுந்தது. புகார் நகரின் தெருக்களில் மங்கல அணி ஊர்வலம் எழுந்தது.

மாலைகள் தொங்கும் உயர்ந்த வைரமணித் தூண்கள் விளங்கும் மண்டபத்தில் நீலநிறப்பட்டினால் அமைந்த அழகிய முத்துப்பந்தலில் வானில் தழுவும் நிலவானது உரோகிணியைச் சேரும் நல்வேளையில் வயது முதிர்ந்த அந்தணன் ஒருவன் மறைவழிகளைக் காட்டி ஒன்று சேர்க்க, அருந்ததி போன்ற கண்ணகியும் கோவலனும் தீயினை வலம் வந்தனர்.

நறுமணம் மிக்க வாசனைப் பொருட்களுடன் சிலரும் பூக்களுடன் சிலரும் அகழகாக ஆடை ஆபரணங்கள், புனைந்துகொண்டு சிலரும், மகிழ்ந்து பேசிக்கொண்டு சிலரும், பாடிக்கொண்டு சிலரும், நாணத்தினால் கடைக்கண் பார்வை பார்த்தவாறு சிலரும் பல்வேறு மகளிர் வந்தனர். சாந்து, மணப்புகை, கவர்ச்சியுள்ள மாலைகள் ஆகியவற்றுடன் வந்தனர் சிலர். இவ்வாருக ஏந்தின முலைகளுடைய மாதர்கள் பலரும் வந்தனர். மேலும் சிலர் நறுமணச்சுண்ணம் இடித்துக்கொண்டு வந்தனர். சிலர் கையில் விளக்குடன் வந்தனர். வேறு சிலர் நல்ல அணிகளோடும் புன்னகை மலர்ந்த உதடுகளுடன் முளைக்குடமும் நிறைகுடமும் கொண்டு சிலருமாக இளம் பெண்கள் வந்தனர். அப்பொழுது மலரணிந்த தழைத்த கூந்தலையுடைய பொற்கொடி போன்ற பல பெண்கள் அசைந்து வந்து இவள் தன் காதலனைப் பிரியாமலும் இவள் காதலனும் இவளுடன் கையின் இணைப்பு நெகிழாமலும் இடையூடின்றி வாழ்ந்து இன்புறுக! என்று வாழத்தி, சிற்சில மலர்களைத் தூவி அழகிய உலகின் அருந்ததிபோன்ற கண்ணகியை நல்ல மங்கல அமளியில் ஏற்றினார்கள்.

இறுதியில் மன்னனின் ஆணைச்சக்கரம் இமயத்திற்கு அப்பாலும் சென்று உலகமெல்லாம் ஆள்பவன் அவன் ஒருவனே யாகுமாறு மன்னன் உயர்க!'' என்று சோழ மன்னனையும் வாழ்த்தினார்கள்.

இவ்வாருக பண்டைக்காலத் திருமணமுறை சிலப்பதிகாரத்தில் பேசப்படுகிறது.

8. "கதிர் ஒருங்கு இருந்த காட்சிபோல்"—இடஞ்சுட்டி விளக்குக அல்லது உவமையை விளக்குக

மன்றல் கண்ட கோவலனும் கண்ணகியும் பள்ளி கொள்ளும் கட்டிலின்மேல் பரப்பப்பட்டிருந்த பதுமலர்களின் மீதிருந்த தோற்றம், ஞாயிறும், திங்களும் ஆகிய இரு கதிர்களும் ஒருங்கே கூடியிருந்த காட்சி போலிருந்தது என்பதை விளக்கப் புகுந்த இளங்கோவடிகள் "கதிர் ஒருங்கு இருந்த காட்சிபோல்" என்று வருணனை செய்துள்ளார்.

9 "கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரை" யாது?(அல்லது)'உலவாக்கட்டுரை பல பாராட்டி" —கட்டுரை யாது? கண்ணகியின் உறுப்பு, தன்மை, அணி சுவை இவற்றைப் புகழ்ந்து கோவலன் உரைத்தவற்றைத் தொகுத்தெழுதுக.

இளம்பிறைத் திங்கள் தேவர்களும் போற்றும் வண்ணம் சிவபெருமானின் சடைமுடியின்மேல் அழகுடன் சேர்த்து முடித்த அருமை உடையது ஆயினும் திருமகளான நின்னுடன் பாற்கடலில் பிறந்த உடன் பிறப்பே அது என்பதனால் நினக்கே உரிமையாக்கும் பொருட்டுப் பிறையை "நின்திரு நுதலாகுக" எனப் பெரியோனாகிய இறைவன் நினக்குத் தருவானாக! என்று கண்ணகியின் நெற்றியைப் புகழ்ந்து கூறுகிறான் கோவலன்.

பகைவர் சினந்து வரும்போது போர் செய்வதில் ஈடுபடுவோர்க்குப் படைக்கலம் வழங்குவது அரசர் முறைமை ஆதலின் உருவிலா மன்மதன் தனது ஒப்பற்ற பெரிய கரும்பு வில்லினை "நின் இரு கரும் புருவம் ஆகி அமைந்து என்னை வெல்க" என நினக்குத் தரக் கடவன் எனப் புகழ்கின்றான்.

மூவா மருந்தாகிய அமிழ்தத்திற்கு, முன்னால் திருமகளாகிய நீ தோன்றியதினால் தேவர் கோமான் ஆகிய இந்திரன் அசுரரை அழித்துத் தெய்வக் காவல் புரியக் கைக்கொண்ட வச்சிரப் படையை நின் இடையாகுமாறு

செய்து நினக்குத் வருவாளுக என கண்ணகியின் இடையை வருணிக்கின்ருன்.

ஆறு முகங்களுடன் ஒப்பற்று விளங்கும் முருகப் பெருமான் இவ்வாருன உரிமை ஒன்றும் இல்லாத போதிலும் யான் துன்புறும் நிலையினைக் காணும் இயல் பினுல் அல்லவோ அழகிய சுடரையுடைய தனது நெடிய வேலினை நின் முகத்திலுள்ள குளிர்ச்சி பொருந் திய இரண்டு கண்களாகத் தந்திருக்கின்றனன் என்று கண்களையும் புகழ்கின்ருன்.

## கண்ணகியின் தன்மையைப் புகழ்தல்

கரியபெரும் பீலியும் நீலமணியின் நிறமும்கொண்ட மயில், நின் சாயலுக்கு முன் தோல்வியுற்றுக் குளிர்ந்த காட்டிற்குச் சென்று ஒடுங்கிவிட்டது. நல்ல நெற்றி யினை யுடையவளே, அன்னம் மென்மையுடைய நின் நடைக்குத் தோற்று நல்ல நீரினையுடைய வயல்களிற் செறிந்த மலர்களிடையே சென்று ஒளிந்துகொண்டது. பசுமை நிறக் கிளிகள் குழலும், யாழும், அமிழ்தும் கலந்து குழைத்தாற்போன்ற நின் மழலைப் பேச்சுக்குத் தோற்று அவை வருந்தின வாயினும், மடப்பமுடைய நடையினையுடைய மாதரசே, நின் பேச்சின் இனிமை யைக் கற்பதற்காகவே நின்னுடனேயே தங்கியிருப்ப தன்றி நின்னை வெறுத்துப் பிரிந்து போகாதும் இருக் கின்றன என்று கண்ணகியின் தன்மையினைப் புகழ்ந்து கூறுகின்ருர்.

நின் நலம் போற்றும் மகளிர், குற்றமற்ற நின் இயற்கை அழகு இருக்கவும் பிறிது பல அணிகள் அணி வதனல் நீ பெற்ற பேரழகுதான் யாதோ?

நின் கருங்கூந்தலில் மங்கலமாகச் சிற்சில மலர்கள் சூட்டினற்போதாதென்று இதழ் விரிந்த மாலையினை ஏன் சூட்டியிருக்கின்றனரோ? மணம் வீசும் நல்ல அகிற்புகையன்றியும், மானமதச் சாந்தையும் நினது கூந்தலுக்கு ஊட்டியிருப்பதும் ஏனே? அழகிய நின் முலைத்தடங்களின் மேல் தொய்யில் எழுதியதோடு முத்து மாலையினையும் அணிந்திருப்பது ஏன்? மதி

போலும் நின் முகத்தில் முத்துப்போல் வியப்பை அரும்பநுண் இடையோ ஒடிந்து விடுவதுபோல வாட இவ்வாறுன பிற அணிகளையெல்லாம் நின்மேனியில் அணிந்தார்களென்றால் அவர்களென்ன பித்தர்களோ? என்று கண்ணகிக்குப் பிற அலங்காரங்கள் தேவை யில்லை என்பதைக் கோவலன் கூறினான்.

குற்றமற்ற பொன் போன்றவளே! வலம்புரிச் சங்கு என்ற முத்துப் போன்றவளே! குற்றமற்ற விரை போன்ற மணமுடையவளே! கரும்பை ஒத்த சுவை யுடையவளே! தேனினும் இனிய மொழியுடையவளே; பெறுதற்கு அருமையான பாவையே! அரிய உயிரை நிலைபெறச் செய்யும் அமுதம் போன்றவளே! பெருங் குடிப் பிறந்த வணிகனின் பெருமை பொருந்திய மடப் பத்தையுடைய புதல்வியே! நின்னை 'மலையிடைப் பிறவா மணியே'! என்று சொல்வேனோ? "கடலிடைப் பிறவாத அமிழ்தமே! என்று அழைப்பேனோ?" "யாழி டைப் பிறவாத இசையே!" என்று இயம்புவேனோ? "நீண்ட கூந்தலினையுடைய தையலே" நின்னை யான் எவ்வாறுதான் பாராட்டுவேனோ என்று இவ்வாறு சொல்லிக் குறைவு படாத புனைந்துரைகளால் கண்ணகி யைக் கோவலன் பாராட்டினான்.

10. *மாதவியின் குலம் தோன்றிய வரலாற்றை விவ ரிக்க. (அல்லது) "ஊர்வசியின் அவதாரமே மாதவி"—என்பதை விளக்குக. (அல்லது) 'தெய்வ மால் வரைத் திருமுனி அருள எய்திய சாபத்து" சாபம் யாது?*

தெய்வத் தன்மை பொருந்திய பொதிகை மலை யிலிருந்தோனாகிய பெருந்தவ முனிவன் அகத்தியன் இந்திரனது அவைக்கு வரும்போது இந்திரனானவன், பாடலுடன் ஊர்வசியை ஆடல் நிகழ்த்தப் பணித்தனன் ஆடலும் பாடலும் நிகழும் வேளையில், இந்திரனின் மகனான சயந்தனின் அழகில் மயங்கிய ஊர்வசியின் ஆடல் நெகிழ்ந்தது. இதனால் நாரதரின் யாழிசையும் மங்கல மிழந்தது. இவற்றை உணர்ந்த முனிவர் ஊர்வசியை "இவள் மண்மிசை சென்று மானிட மகளா

கப் பிறக்க'' எனச் சாபமிட்டார். அச்சாபத்தால் ஊர்வசி யாள் மாதவி நடனமாதாகப் பூமியிலே பிறந்தாள்—என்பது வரலாறு.

11. நடனமாதர் (கூத்தி) அல்லது மாதவியின் தன்மையை விளக்குக.

வானவர் மகளிர் நாடகத் தொழிலிலே மாறுபடுதல் என்றும் இலராகிய சிறப்பினை உடையவர். அவர் போலச் சிறப்பில் எள்ளளவும் குறையாத தொழிலில் வினையோடு பொருந்திய கலை சிறந்த மரபிலே இவளும் வந்து பிறந்தவள் என்னும் நிலையிலே, பருத்த தோள்களையுடையவளாய் ஊர்வசியின் மரபில் வந்தவளாய், தாது அவிழ்கின்ற மலர்கள் சூடிய, கடை குழன்ற சுருண்ட கூந்தலை உடையவளாய், கூத்து, பாடல், ஒப்பனை அல்லது அழகு இம் மூன்றினுள் ஒன்றினும் குறைவு படாமல் ஏழாண்டு காலம் பயிற்றுவிக்கப்பெற்று பன்னிரண்டாவது வயதில் தன் கலைத்திறனை மன்னவன் முன் அரங்கேற்றும் தன்மையதாய் (நடனமாதர்) (கூத்தி) மாதவியின் தன்மை சிலம்பில் பேசப்படுகிறது.

12. ஆடல் ஆசிரியன் அமைதி யாது? விளக்குக.

ஆடல் ஆசிரியன், அகக்கூத்து புறக்கூத்து என்ற இருவகைக் கூத்தின் இலக்கணமும் அறிந்தவனாகவும் அவற்றின் பகுதிகளான கூத்துக்களையும் விலக்கு உறுப்புக்களுடன் இணைத்து பதினொரு வகையான ஆடல்களையும் அவற்றிற்கிசைந்த பாடல்களையும் வாத்தியங்களின் கூறுகளையும் உரிய பழைய மரபுகளின்படி விளக்கமாக அறிந்தவனாகவும் ஆடலும், பாடலும், தாளங்களும் தாளங்களின் வழிவரும் தூக்குகளும் ஒன்றாக அமைய நிகழ்த்துவதில் வல்லவனாகவும் அவ்வாறு நிகழ்த்தும் போது பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கை என்ற நான்கு அபிநய வகைகளைஅறிந்து, இருவகைக்கூத்தும் நிகழுமிடத்துக் கூடைக்கதி செய்த கைவாரக் கதியுட் புகாமலும் வாரக்கதி செய்த கைகூடைக் கதியுட் புகாமலும், ஆடல் நிகழுங்கால் அவிநயம் நிகழாமலும் அவிநயம் நிகழுங்கால் ஆடல் நிகழாமலும், குரவைக்

கூத்தும் வரிக்கூத்தும் தம்முள் ஒன்றோடொன்று விர வாதபடி ஆடவும், ஆட்டுவிக்கவும் வல்லவனுகவும் அமைந்தவனுவான் என்று ஆடல் ஆசிரியன் அமைதி பற்றி விளக்கப்படுகிறது.

13. இசையாசிரியனின் அமைதியினைப் புலப்படுத்துக

யாழ்ப்பாடலும், குழல் இசையும் தாளக் கூறுபாடு களும் மிடற்றுப் பாடலும் தாழ்ந்த குரல் எழுப்பும் தண் ணுமையும் கூத்துக்களும் ஆகியவற்றில் வல்லவனுகவும் இவற்றுடன் இசைந்த இசையைக் கூத்திற்குப் பொருந்துமாறு இசையுடன் வாசிக்க வல்லவனுகவும் செந்துறை, வெண்டுறை என்னும் இருவகைப்பட்ட பாடல்களுக்கும் பொருளாக நான்கு இலக்கங்களையும் இயக்கி அழகிய தேசாந்திரங்களின் மொழியையும் அறிந்து அம்மொழிகளின் ஓசை யனைத்தையும் குற்ற மறத் தெரிந்த அறிவுடையோனுகவும் கவி இயற்றிய வன் மனக்குறிப்பு, ஆடலின் தொகுதிகளும், இன்ன பகு திக்கு இன்ன பாடல் பொருத்தமாகச் சேரும் என்ற நிலை அறிந்தவனுகவும், குற்றம் தீர்ந்த நூல் வழக்கினைக் கொண்டு அவற்றை வகுக்கவும் விவரிக்க வல்லவனுக வும் தான் அவ்வாறு கொண்ட உறுதியினின்றும் அசை யாத இயல்பினை உடையவனுகவும் இசைப்புலவன் இருக்க வேண்டும் என்று இளங்கோவடிகள் இசை யாசிரியரின் அமைதியினைப் புலப்படுத்துகின்ருர்.

14 நன்னூற் புலவனின் தன்மையாக இளங்கோ வடிகள் உரைப்பதென்ன?

ஒலிக்கும் கடல் சூழ் புவியின் கண்ணுள்ள தமிழகத் தினர் அனைவரும் அறியுமாறு முத்தமிழ் மொழி முழு வதும் அறிந்த தன்மை உடையவனுகவும் வேத்தியல், பொதுவியல் என்ற இரு திறத்தையும் விவரிக்கும் நாட் டிய நன்னூலின் மரபுகளை நன்ருகக் கடைப்பிடித்து இசைப்புலவன் ஆளத்தி வைத்த பண்ணின் நீர்மையை உணர்ந்து அதனின்றும் சிறிதும் பிறழாமல் தாள நிலை யில் எய்த வைத்த திறம் தன் கவியிலே தோன்ற வைக்க வல்லவனுகவும் மரபுகளுக்கு மாறுபட்டோர்.

செய்த வசை மொழிகளை அறிந்து அவை யில்லாதபடி வசையில்லாத மொழிகளால் நாயகக் கவியியற்றும் நாவன்மையும், நல்ல நூலறியும் மிக்க புலவனுகவும் இருத்தல் வேண்டும் என்று இளங்கோவடிகள் நன்னூற் புலவனின் தன்மைகளைப் பற்றி உரைக்கின்ருர்.

15. தண்ணுமை அருந்தொழில் முதல்வனுக்குரிய இலக்கணங்களை எழுதுக.

ஆடல், பாடல், இசை, முத்தமிழ், பண்கள் தாளங்கள் எழுவகைத் தூக்குகள் ஆகியவையும் அவற்றின் குற்றங்களும், இயற்சொல் திரிசொல், திசைச் சொல், வடசொல் என்னும் நான்கு வகைச் சொல் வழக்குகளும் ஆகிய இவற்றையெல்லாம் குற்றமற உணர்ந்தவனுகவும் ஓர் உருவை இரட்டிக்கு இரட்டி சேர்த்தல் என்ற கூடை யென்னும் முறைமை நடனத்தில் வரும் இடத்தைக் குறைவின்றி ஆவர்த்தங்கள் அமையத் துரிதமாக வாசிப்பவனுகவும் பின் பாட்டுப் பாடும் பாடலைச்சரியானபடி காதிலே வாங்கி அப்பாட்டிற் கேற்ப யாழும் குழலும் வாய்ப்பாட்டும் இசைந்து கேட்குமாறு வாசிப்பவனுகவும் நிகழ்கின்ற கூத்தின் குறிப்பினை அறிந்து விரல் நுனிகளை மத்தளத்திலே சேர்த்து இதமாக வாசிப்பவனுகவும் மற்றக் கருவிகளின் நாதக் குறைவினை நிறைவு செய்தும் மிகுதியை அடக்கியும் இனிமையாகக் கேட்குமாறு வாசிப்பவனுகவும் இவை யாவும் செய்யும் பொழுது கைத்தொழில் அழகு பெறச் செய்து காட்டலில் வல்லவனுகவும் அமைந்தவன் என்று தண்ணுமை அருந்தொழில் முதல்வனுக்கு உரிய இலக்கணங்கள் சிலம்பில் செப்பப்படுகின்றன.

16. "வழுவின்று இசைக்கும் குழலோன்"—என்று குழலாசிரியன் அமைதி பற்றிச் சிலம்பு வருணித்திருப்பது யாது?

நூல்களிற் கூறியுள்ள முறைமையின்படி சித்திரப் புணர்ப்பும், வஞ்சனைப் புணர்ப்பும் என்னும் இரு கூற்றினையும் அறிந்து இசைக்க வல்ல பாடலாசிரியனைப் போன்ற புலமையுடையவனுகவும் ஆரோகண அவரோ

கணங்களில் விரல்களை விட்டுப் பிடிக்கும் வர்த்தனை நான்கினாலும், நூற்றுமூன்று பண்களின் நீர்மைகளையும் தந்நிலை குலையாமற் காட்ட வல்லவனாகவும், அவ்விடத்தே ஏறிய குரல் இளி என்று சொல்லப்படும் இருவகை நரம்பின் இசைக்கும் ஒத்துக் கேட்குமாறு இசைக்கும் திறமையுடையவனாகவும், பண்ணின் தரம் முறைப்படி அமைந்த முழவின் கண்ணெறியினை அறிந்து தண்ணுமை முதல்வனோடும் பொருந்தி, வண்ணம் மிக்க இளியென்னும் நரம்பினை யாழ்மேல் வைத்து அதன் வழியே இசைக்காரன் பாடிய பாட்டினியல்பை ஒட்டிச் சுரங்களுக்குக் குறைவு படாமல் தனது குழல் ஒலியை நிறுத்தி, அந்தப் பண்ணிற்கு மாறுபட்டுப் போகாமல் குழல் நாதத்தை இயக்கி, பாடல் இயலின் வழக்கம் யாவும் சுவை பொருந்துமாறு நிரம்பக் காட்டி பண் இலக்கணம் பதினொன்றினையும் நிரம்பவைத்து, வாரப் பாடலை அளவு நிரம்ப நிறுத்தவல்லவனாகவும், பாடும் போது சொல் நீர்மைகளின் எழுத்துக்கள் சிதையாமலே எழுத்தெழுத்தாக இசைக்கும் இயல்புகள் உடையவனாகவும் உள்ளவன் குழலாசிரியன் என்று குழலாசிரியன் அமைதி பற்றிச் சிலம்பு வருணித்திருக்கிறது.

17. யாழ் மேற்பாலை இடமுறைமெலிய.
குழன்மேற் கோடி வலமுறை மெலிய,
வலிவும் மெலிவும் சமனும் எல்லாம்
பொலியக் கோத்த புலமை யுடையோன்''-யார்?
(அல்லது) யாழ் ஆசிரியரின் இயல்புகளை வருணிக்க.

செவ்விய முறையில் இரண்டு ஏழாகத் தொடுக்கப்பட்ட பதினான்கு ஆயப் பாலையினுள், ஓர் ஏழு பாலையாகிய 1. செம்பாலை, 2. படுமலைப்பாலை, 3. செவ்வழிப்பாலை, 4. அரும்பாலை, 5. கோடிப்பாலை, 6. விளரிப் பாலை, 7. மேற்செம்பாலை ஆகியவற்றை இணை நரம்பு தொடுத்து நிறுத்திக்காட்டுவதை விரும்பி, தாரம் பெற்ற இரண்டலகில் ஓரலகையும், குரல் நரம்பு பெற்ற நாலலகில் இரண்டலகையும், மெய்க்கிளை நரம்பில் கைக்கிளையாக நிறுத்தக் கைக்கிளை ஒழிந்த ஓரலகும், தளராத தார

நரம்பில் ஓரலகும் விளரிக்குத் தர அவ்விளரி துத்த நரம் பாயிற்று. அம்முறையே இளியும் தன் கிளையாகிய குரலின் அழிவினைக் கண்டு அதனபாற் சேரவும், ஏனைய உழை முதலாயினவும் தத்தமக்குக் கிளையாயினவற்றிற் சேரவும், இவ்வாறு அமைந்த பதினாறு வகைக்கோர்வை யிலே, உழை முதலாகக் கைக்கிளை யிறுதியாக மெலிவு நான்கும், சமம் ஏழும், வலிவு மூன்றுமாய்ப் புதுமை யுற்ற முறையாலே உழை குரலாகச் செம்பாலையாகியது. இறுதியாய் நின்ற கைக்கிளை முதலிய பிறவும் பெறு முறைப்படி வருகின்ற தன்மையினின்றும் நீங்காது, கைக்கிளை குரலாகப் படுமலைப் பாலையும் துத்தம் குரலா கச் செவ்வழிப்பாலையும், குரல் குரலாக அரும் பாலையும் என முறையே திரிந்து அமையும். இவ்வாறு திரிந்த பின், முன்னதன் வகையே தம் முறைமையினின்றும் மாறுபட்டுத் தாரம், விளரி, இளி என்பனவும், தாரம் குரலாகக் கோடுப்பாலையும், விளரி குரலாக விளரிப் பாலை யும், இளி குரலாக மேற்செம்பாலை என மாறுபடும். நொடிதாய்க் கிடந்த சுரங்களின் இடத்தே முதலும் இறுதியுமாகவுள்ள நரம்புகளைப் பொருந்தக் கொண்டு, யாழினிடத்து அரும்பாலை முதலாயின இடமுறை மெலி யனவும், குழலினிடத்தே கோடிப்பாலை முதலாயின வல முறை மெலியவும், வலிவும், மெலிவும், சமனும், விளங்க வும், நரம்புகளின் அடைவுகள் கொஞ்சமேனும் கெடாம லும், பணிகளின் நீர்மை முதலியவற்றுள் எதுவும் குறைவு படாமலும், எல்லாம் அமைந்து விளங்குமாறு பிணைத்து மிகவும் இனிதாக இசைக்க வல்லவன் யாழ் இசையாசிரியன்—என்று யாழ் ஆசிரியரின் இயல்புகள் பற்றி வருணிக்கப்பட்டுள்ளது.

18. "விருந்துபடக் கிடந்த் அருந்தொழில் அரங்கத்து"- நிலைமையின் வருணனை செய்க.

சிற்ப நூலாசிரியர் வகுத்துரைத்த நடன அரங்கு அமைப்பு இயல்புகளினின்றும் சிறிதும் பிசகாமல் அரங் கம் அமைப்பதற்கேற்ற ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து பொதியமலை போன்ற புண்ணிய மலைகளில் நீண்டு வளர்ந்த மூங்கில்களில், கணுவுக்குக் கணு ஒரு சாண்

இடைவெளியுள்ள மூங்கிலைத் தேர்ந்தெடுத்து, அதைச் ஏற்ப நூல்கள் கூறும் முறைமைக்கு ஏற்க உத்தமன் கைப் பெருவிரல் அளவிற்கேற்ப இருபத்துநான்குவிரல் அளவு கொண்டதாக நறுக்கிக்கொண்டு, அதையே பொது அளவு கோலாகக் கொண்டு அதன்படி ஏழு கோல் அகலமும், எட்டுக் கோல் நீளமும், ஒரு கோல் உயரமும் அமைய நடன அரங்கம் அமைக்கப்பட்டது. அதில் நான்கு பக்கமும் தூண்களை நிறுத்தி அதன் மேல் உத்தரப் பலகைகள் பொருத்தி அதற்கும் அரங்கின் பலகை வைத்த இடத்திற்கும் இடையில் நாலு கோல் அளவு இடைவெளி விட்டு, அரங்கத்திற்கு ஏற்றபடி போவதற்கும் வருவதற்கும் இரண்டு வாயில்கள் அமைத்து, அரங்கின் மேல் நிலைப் பகுதியில் யாவரும் தொழுது போற்றும் வண்ணம் நால்வகைப் பூதங்களின் உருவங்களை எழுதி வைத்து, தூண்களின் நிழல் அரங்கில் விழாதபடி நிலை விளக்குகளை நிறுத்தி, அதன்பின் திரைச் சீலைகளான ஒருமுக எழினியும், பொருமுக எழினியும், கரந்து வரல் எழினியும தொழிற பாட்டுடன் எழுதிக்கட்டி, சித்திரவிதானத்தையும் அமைத்து முத்து மாலைச் சரியும், தூக்கும், தாமமும் நெடுகிலும் தொங்க விட்டு, முழுதும் புதுமையுடையதாக ஆடல் அரங்கு அமைக்கப்பட்டது.

## 19. "தலைக்கோல்" பற்றிச் சிறு குறிப்பு வரைக

பெரும் புகழ் பெற்ற பகையரசர் போரில் தோற்றுப் புறமுதுகு காட்டி ஓடும்போது அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட அழகு பொருந்திய வெண்கொற்றக் குடையின் காம்பை எடுத்து கணுக்கள் தோறும் நவமணிகளையும், கணுக்களின் இடைப் பகுதிகளில் சாம்பூநதம் என்னும் பொன் தகட்டையும் கட்டி உலகினைக் காக்கும் வெண்குடையுடைய அரசனின் அரண்மனையில்-"இந்திரனின் மகனை சயந்தனை இக் கோல் விளங்குக"—என வழிபாடுகள் செய்து அதனைப் போற்றுவர். அதுவே "தலைக்கோல்" எனப் பெயர் பெறும். அத்தலைக் கோலுக்குப் புண்ணிய நீராட்டி, மலர் மாலை சூட்டி அதன்பின் சுபதினம் ஒன்றில், பட்டத்து யானையின்

கையில் வாழ்த்து ஒலிகளுடன் தலைக்கோலை வணங்கி யானையுடன் வீதிவலம் வருவர். அப்போது மூவகை முரசும் முழங்க, வாத்தியங்கள் ஒலிக்க அரசனும், ஐம் பெருங் குழுவினரும் உடன் வருவர். தேர்வீதி சுற்றி மீண்டதும், அரங்கத்தினருகே நிற்கும் கவிஞனிடம் அந்தத் தலைக்கோலை யானை கொடுக்கும். கவிஞன் அதனைப் பெற்றுச் சபையோருக்கு எதிர்முகமாக நடன அரங்கில் தலைக்கோலை வைப்பான்.

20. "ஐம்பெருங்குழு" வினர் யாவர்?

இவர்கள் அரச காரியங்களுக்குப் பக்கத்துணையாக நின்று செயல் படுபவர்களாவர். அமைச்சர், அந்தணர், சேனாதிபதியர், தூதுவர், சாரணர் ஆகிய ஐவரும் இப் பிரிவில் அடங்குவர்.

21. குறிப்பு வரைக— (1) சொல், (2) வண்ணம், (3) விலக்கு, (4) வரிக்கூத்து. (5) பாடல், (6) கொட்டு, (7) வரிப்பாடல்.

1. சொல்:—சொல் என்னும் உறுப்பு மூன்று வகைப்படும். அவை உட்சொல், புறச்சொல் ஆகாயச் சொல் என்பனவாகும், (1) உட்சொல் என்பது நெஞ் சொடு கூறல் (2) புறச்சொல் என்பது கேட்போர்க் குரைத்தல் (3) தானே கூறல் என்பது ஆகாயச் சொல் எனப்படும். மேலும் சொல் வகை நான்கு, வகைப் படும்:-அவை சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என்பனவாம். நான்கு அடிகளுடன் வருவது சுண்ணம், எட்டு அடிகளுடன் வருவது சுரிதகம்; பதினாறு அடி களுடன் வருவது வண்ணம், முப்பத்திரண்டு அடிகளு டன் வருவது வரிதகம்.

2. வண்ணம்:— இது பெருவண்ணம், இடை வண்ணம் வனப்பு வண்ணம் என மூன்று வகைப்படும். மேலும் பெருவண்ணம் ஆறாகவும், இடை வண்ணம் இருபத்தி ஒன்றாகவும், வனப்பு வண்ணம் நாற்பத்தி ஒன்றாகவும் வருமென்று கூறுவர். நூறு என்றும் சிலர் கூறுவர். தொல்காப்பியர் இருபது வண்ணம் கூறினர்.

3. விலக்கு:—இது பதினான்கு வகைப்படும். அவை யாவன:- பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவ்வ், நாடகம், குறிப்பு, சத்துவம், அவிநயம் சொல், சொல் வகைகள், சந்தப்பாட்டு, இசைப்பாட்டு, சேதம் என்பன வாகும்.

4. வரிக்கூத்து:—அவரவர் பிறந்த நிலத்தன்மை யும், பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையும் தோன்ற நடிப்பது வரிக்கூத்து என்படும். இது கண்கூடுவரி, கானல்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக் கோள்வரி என எண் வகைப்படும்.

5. பாடல்:—இது இன்பம், தெளிவு, நிறை, ஒளி, வன்சொல், இறுதி, மந்தம், உச்சம் என்னும் பயன் எட்டும் உடையதாக அமையவேண்டும்.

6. கொட்டு:—இது கொட்டப்படும் வாச்சியங்களைக் குறிக்கும். அவை கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்கம் என்பனவாகும். இவற்றுள் கீதத்திற்கு வாசிப்பது கீதாங்கம் எனவும், நிருத்தத்திற்கு வாசிப்பது நிருத் தாங்கம் எனவும், இரண்டிற்கும் வாசிப்பது உபயாங்கம் என்றும் பெயர் பெறும்.

7. வரிப்பாடல்:—வரிக் கூத்திற்குரிய பாடல் இது. "வரி" என்றும் இதனை உரைப்பர். பண்ணும் திறமும், செயலும், பாணியும் ஒரு நெறியின்றி மயங்கச் சொல்லப் பட்ட எட்டனியல்பும், ஆறனியல்பும் பெற்றுத் தன் முதலும் இறுதியும் கெட்டு, இயல்பும் முடமுமாக முடிந்து கருதப்பட்ட சந்தியும், சார்த்தும், பெற்றும், பெருதும் வரும். இந்த வரிப்பாட்டுக்கள் திணைநிலை வரி, கிணை நிலை வரி எனவும், முகமுடைவரி, முகமில்வரி, படைப்பு வரி எனவும் அவை பலவாகவும் விரியும் என்பர்.

21. (A) "மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கி"ய நிலையினை விளக்குக.

பொன்னின் இயல்பமைந்த பூங்கொடி ஒன்று அரங்கத்தில் ஆடியதுபோல, நாட்டிய அம்சங்கள்

யாவும் கடைப்பிடித்து அழகுற ஆடிய மாதவியின் ஆட்டத்தைக் கண்டு மகிழ்ந்தான் காவல் மன்னன். எனவே அரசனின் பச்சை மாலையையும், 'தலைக்கோலி'' என்ற பெயரினையும், ''ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன் ஒரு நாள் முறையாகப் பெறுபவள்'' என்ற தகைமையையும் மாதவி பெற்றனள்.

''மாதவி பெற்ற மாலையை உரிய பொன் கொடுத்து வாங்குபவர், நம் மாதவிக்கு மணமகனாதல் அமையும்'' என்று நகரத்து வீதியில் கூனி ஒருத்தி மூலம் விலை கூறினாள் மாதவியின் தாய். சிறந்த தாமரை மலர் போன்ற நீண்ட கண்களையுடைய மாதவியின் அந்த மாலையினை உரிய பொன் கொடுத்துக் கோவலன் வாங்கினான். எனவே மாதவியின் மணமனைக்குச் சென்று மாதவியைத் தழுவிக் கூடி மகிழ்வடைந்து அப்போதே அவளிடம் மயக்கமும் கொண்டு அவளைப் பிரிய இயலாத மனத்தினன் ஆகி, மனைவியான கண்ணகியையும் அறவே மறந்தான்.

**22. மாலைக் காலத்தின் வருகையை இளங்கோவடிகள் எவ்வாறு வருணனை செய்துள்ளார்?**

ஒற்றைச் சக்கரத்தினையுடைய தேரைச் செலுத்தி வருகின்ற கதிரவன் என் காதலன், அவனையும் காணவில்லை. அழகிய வானத்தில் தோன்றித் தன் நிலவுக் கதிர்களை ஒளிசெய்யும் திங்கள் எமது அழகிய செல்வன், அவனும் இவ்வேளையில் எங்கு போய்விட்டானோ?'' என எண்ணித் தனது முகமாகிய அடிவானம் பசலை படர, செவ்விய மலராகிய கண்கள் முழுவதும் நீர் சொரிய, உடல் முழுதும் நடுக்கமுற, கடலினை ஆடையாக அணிந்துள்ள நிலமடந்தை தனது கணவனாகிய கதிரவனையும் தனது மகனாகிய சந்திரனையும் காணாமல் மனம் கலங்கித் துயருறுகின்ற மாலைப்பொழுதில், நாடாளும் மன்னர் இல்லாத வேளையில், பகைவரால் கைக் கொள்ளப்பட்ட நாட்டு மக்கள் அடையும் துயரினைப் போலக் கணவரைப் பிரிந்த காரிகையர் வாடவும், காதலனை இணைந்த கன்னியர் மகிழவும், வேய்ங்குழலில்

கோவலரும் முல்லை மலரில் வண்டினமும் வாய் வைத்து ஊதவும், இவ்வாறு ஊதிக் குறும்பு செய்கின்ற வண்டுகளை ஓட்டிவிட்டு, அந்த அரும்புகளின் நறுமணத்தை இளந் தென்றலாகிய செல்வன் முகர்ந்து தெருவெல்லாம் பரப்பவும், ஒளிபொருந்திய வளையல்கள் அணிந்த மகளிர் விளக்கேற்றவும், வளம் பொருந்திய மூதூரான புகார் நகரில் மாலைப்பொழுது வந்தெய்தியது—என்று மாலைக் காலத்தின் வருணனையை இளங்கோவடிகள் வருணனை செய்துள்ளார்.

23. "இளையர் ஆயினும் பகை அரசு கடியும்"—இடஞ் சுட்டி விளக்குக.

மல்லல் மூதூர் என்ற புகார் நகரில் மாலைப் பொழுதைத் தொடர்ந்து நிலவு வந்த காட்சியை வருணிக்கும் போது, "இளையர் ஆயினும் பகை அரசு கடியும்" என்ற அடிகளை இளங்கோவடிகள் கையாண்டிருக்கின்றார். தாம் மிகவும் இளமைப் பருவத்தினரேயானாலும், பகைவர் எதிர்க்கும்போது, அவரை வென்று புறமுதுகிட்டு ஓடச்செய்யும் ஆற்றலுடையவர்களான பாண்டியர்களின் குலமுதல்வனானவன் சந்திரன். எனவே செவ்வானத்தின் கண் வெண்பிறையாகத் தோன்றிய உடனேயே மாலைப்பொழுதின் குறும்புகளை எல்லாம் ஓட்டி, இளமையிலேயே பகையை வென்ற தனது மரபினில் வழுவாமல், பால்போன்ற தனது நிலவுக் கதிர்களை எங்கணும் பரப்பி, விண்மீன்களுக்கிடையில் ஆட்சி செலுத்தித் தனது வெண்ணிலவால் உலகினை விளங்கச் செய்தான் சந்திரன். இவ்வாறாக மாலைப் பொழுதைத் தொடர்ந்து நிலவு உதயமாயிற்று.

24. மாலைப் பொழுதில் மாதவி கொண்ட கோலத்தை எழுதுக:—

மனையில் வளரும் முல்லையும், மல்லிகையும், மற்றும் பலவகைப் பூக்களும் தூவப்பெற்ற மலர்ப்படுக்கையில் கோவலனும் மாதவியும் அழகுடன் வீற்றிருந்தனர். பரந்து உயர்ந்த அல்குலினிடத்தே அணிந்த அழகிய துகில்மேல் சூழ்ந்த மேகலாபரணம் ஆடி அசைந்து வருந்த, நிலவின் பயன் முழுதும் அனுபவிக்கும் நெடிய

நிலா முற்றத்தில் ஊடியும் கூடியும் இடைவிடாத இன்பத்தை அளித்தாள் மாதவி. மேலும் ஆர்வமுடைய நெஞ்சத்துடன் கோவலனை எதிரேற்று முயங்கி அணைத்துத்தழுவி இன்பமுறுவதும் அதனால் குலைந்த அழகுக் கோலங்களை சரிசெய்து ஒப்பனை செய்வதும் மீண்டும் கோவலனுடன் கூடி மகிழ்வதும் ஆகிய இவ்வாறான கோலத்தை மாலைப் பொழுதில் மாதவி கொண்டிருந்தாள்.

25. ஆவியங் கொழுநர் அகலத்து ஒடுங்கிக், காவியம் கண்ணார் களித்துயில்எய்திய நிலையினை வருணனை செய்க. (அல்லது) "நால்வகை நாட்டுடன் நடப்பதே வாணிபம்"—என்பதை இளங்கோவடிகள் எவ்வாறு நிலைநாட்டுகிறார்?

மாதவி கோவலனுடன் மயங்கிக் கிடந்த போழ்தில் கூடியிருந்த பிறமகளிர் யாவரும், மேற்றிசை நாட்டின் "அயிர்" என்னும் வெண்மையான பொருளையும், கீழ்த்திசை நாட்டின் கருமை நிற அகிலையும் சேர்த்து நாளும் நறுமணப் புகை கொள்வதை நீக்கிவிட்டு, வடக்கேயுள்ள இமயமலையிலிருந்து வந்த வட்டக்கல்லில், தெற்கேயுள்ள பொதிய மலையில் பிறந்த சந்தனத்தை அரைத்துப் பூசிக் கொண்டனர். தாமரையின் இளந்தளிரினையும், மகரந்தம் பொருந்திய செழுமையான அதன் மலரினையும் காண்போர்க்கு விருப்பையுண்டு பண்ணும் குவளை மலரையும், செங்கழுநீர்ப் பூவையும், பச்சிலைகளுடன் இணைத்துத் தொடுத்த படலை மாலையினையும், முத்தின் கோவையையும் அணிந்து கொண்டு, அழகிய சுண்ணப் பொடியுடன் பூக்களும் சிந்திக்கிடந்த மலரணையின் மேல், மந்த மாருதத்தினால் மயங்கிக் காதல் மிகுந்தவராகத் தோன்றி உயிர் போன்ற கணவரின் அகன்ற மார்பில் நன்கு பொருந்திய நிலையில், மயங்கிக் கிடந்தனர். (மக்களின் வாழ்க்கைக்கு மேற்றிசைப் பொருளும், கீழ்த்திசைப் பொருளும் ஒன்று சேர்தலும், வடதிசைப் பொருளும், தென்திசைப் பொருளும் ஒன்று சேர்தலும் வேண்டுமென்பது பெறப்படுதலின் பல தேயத்தாரும் ஒற்றுமையுடன் வாணிகம் நடத்த

வேண்டிய இன்றியமையாமையை இளங்கோவடிகள் நிலை நாட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.)

**26. அந்திப் பொழுதில் அல்லலுற்ற கண்ணகியின் நிலையினை விளக்குக.**

கோவலன் மாதவியுடன் கூடிக்கழித்த அந்திப் பொழுதில், கணவனைப் பிரிந்த துயரில் கண்ணகி மிகவும் வாடித் தனிமையுற்றுப் புலம்பியிருந்தாள். அப்போது அவளுடைய அழகிய சிவந்த சிறிய பாதங்கள் அணியும் சிலம்பினை நீங்கித் தோன்றின. மென்துகில் உடுத்திய அல்குலினின்றும் மேகலை நீங்கியது. கொங்கையில் குங்குமம் பூசப்பெறவில்லை. மங்கல அணியன்றிப் பிற அணிகள் அணியவில்லை. காதுகளில் குண்டலங்களில்லை. மதிபோன்ற முகத்தில் அரும்பும் வியர்வையும் அகன்று தோன்றியது. கயல்போல் நீண்ட கண்களில் அஞ்சன மையைக் காணவில்லை. பவளம் போலச்சிவந்த நெற்றியில் திலகமும் இல்லை. ஒளி பொருந்திய பற்களுடைய அவள் கோவலனை இழந்த நிலையில், கரிய நீண்ட கூந்தலுக்கு உரிய நெய் பூசுவதை மறந்தாள். அவளுடைய நெஞ்சமோ செயலற்றிருந்தது.

**27. கதிரவன் தொன்றிய காட்சியை இளங்கோவடிகள் எங்ஙனம் வருணனை செய்துள்ளார்?**

மண்ணக மடந்தையான நிலமகள் கடலாகிய ஆடையை அணிந்தவள். மலையாகிய முலையினை உடையவள். அந்த மலைகளாகிய முலைகளில் ஆறுகளாகிய முத்து மாலையினை அணிந்தவள். மேகமாகிய கூந்தலையுடையவள். அவள் போர்த்தியுள்ள இருளாகிய போர்வை நீங்குமாறு உதயகிரி என்னும் மலையில் விரிந்த கதிர்களைப் பரப்பியவாறு கதிரவன் தோன்றினன்!— என்று கதிரவன் தோன்றிய காட்சியை இளங்கோவடிகள் வருணனை செய்துள்ளார்.

**28. மருஇன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கத்தின் அமைப்பினை விளக்குக.**

1. மருவூர்ப் பாக்கத்தில் நிலாமுற்றமும், பெரிய அணிகலன்கள் பெய்த அறைகளும், மானின் கண்

போல் அமைந்த சாளரங்களும் உடைய மாளிகைகள் நிறைந்திருந்தன.

2. புகார் முகப் பக்கங்களில், தம்மைக் காண்போர் கண்களை மேலே போகவிடாமல் தடுக்கும் சோனகர் இருப்பிடங்கள் அமைந்திருந்தன.

3. மரக்கலம் செலுத்திச் செல்வம் தேடும் பொருட்டு நாடுவிட்டுநாடு செல்லும் பன்னாட்டு மக்களும் ஒன்று சேர்ந்து வாழும் குடியிருப்புகள் கடற்கரைகளில் இருந்தன.

4. வண்ணக் குழம்பும், சுண்ணப் பொடியும், நறுஞ்சாந்தும், பூவும் நறும் புகைப் பொருட்களும், நறு மணப் பொருள்களான சந்தனம் போன்றவையும் விற்றுத் திரிபவர் சூழ்ந்தவண்ணம் தெருக்கள் தோன்றின.

5. பட்டு, மயிர், பருத்தி ஆகிய நூல்களால் நுண்ணிய தொழில் செய்யும் காருகர் என்பவர் வாழ்கின்ற இருக்கைகள் அமையப் பெற்றிருந்தன.

6. பட்டும், பவளமும், சந்தனமும், அகிலும், முத்தும் மணியும், பொன்னும் அளவிட இயலாத அளவில் குவிந்துகிடக்கும் வாணிக வீதிகள் பெருகி இருந்தன.

7. பகுதி வேறுபாடுகள் தெரிந்த பண்டங்களும், எண்வகைக் கூலமும் குவிக்கப்பட்டு விற்பனை செய்யும் கூலக்கடைத் தெருக்கள் இருந்தன.

8. பிட்டு விற்பவரும், அப்பம் சுடுபவரும், கள் விற்கும் வலைச்சியரும், மீன் விற்கும் பரதவரும், உப்பு விற்கும் உமணரும், வெற்றிலை விற்பவரும், பஞ்சவாசம் விற்பவரும், பலவகை ஊன் விற்பனையாளர்களும், எண்ணெய் வாணிகரும் நெருங்கியிருக்கும் கடைத்தெருக்கள் பெருகி யிருந்தன.

9. வெண்கலக் கன்னரும், செப்புப் பாத்திரம் செய்பவரும், மரவேலை செய்யும் தச்சரும், வலியகையை யுடைய கொல்லரும், சித்திரக்காரர்களும், மண் பொம்மைகள் செய்பவரும், பொன்வேலை செய்யும் தட்டார்

களும், இரத்தின வேலை செய்பவரும் தையற்காரரும், தோல் வேலை செய்யும் செம்மார்களும், துணியாலும் நெட்டியினாலும் பலவகை உருக்கள் செய்பவர்களும், குற்றமற்ற வேவ்வேறு கைத் தொழில்கள் செய்யும் இயல்புடையவர்களும், வாழ்கின்ற இடங்கள் அமைந் திருந்தன.

10. குழலாலும், யாழாலும் குரல் முதலிய ஏழிசை களையும் குற்றமின்றி இசைத்துப்பண்களையும் அவற்றின் வழி பிறக்கும் திறங்களைப் பாடவல்ல இசை மரபினை யறிந்த பெரும் பாணர்கள் இருக்குமிடங்கள் பெருகி யுள்ளன.

11. மேலும் சிறு கைத் தொழில் செய்பவர்களும், குற்றேவல் செய்பவர்களும் உறையும் இடங்களும் அமைந்திருந்தன.

29 பாடல் சால் சிறப்பின் பட்டினப் பாக்கத்தின் தோற்றம் எவ்வாறிருந்தது?

பட்டினப் பாக்கத்தில் 1. பெரிய இராஜ வீதியும், கொடியணிந்த தேர்கள் செல்லும் வீதியும் கடைத் தெரு வும், பெருங்குடி வாணிகர் மாடங்களையுடைய தெருவும், வேதியர் இருக்குமிடங்களும் அமைந்திருந்தன.

2. யாவரும் விரும்பும் குடியினராகிய உழவர்கள், ஆயுர்வேத மருத்துவர்கள், சோதிடர்கள் முதலியோர் தனித் தனியாக வாழுமிடங்கள் அமைந்திருந்தன.

3. முத்துக் கோப்பவர்களும், அழகாக வளையல்கள் அறுத்து வேலைசெய்பவர்களும் வாழும் அகன்ற பெரிய வீதிகளும் உள்ளன.

4. நின்றேத்துஞ் சூதர், இருந்தேத்தும் மாகதர், வைதாளியாடுவோர் என்பவரோடு, நாழிகைக் கணக்க ரும், கோலத்தினாலும், கூத்தினாலும் அழகுபெறும் சாந் திக் கூத்தரும், காமக்கிழத்தியர் என்னும் பரத்தையாரும் ஆடற் கூத்தியரும், பூவிலைமடந்தையரும், ஏவற்றொழில் செய்து உள் வீடு காப்பவரும் ஆகியோர் வாழும் இடங் களும் உள்ளன.

5. தமக்குரிய தொழிலிற் பயின்ற தோற் கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவி உருக்குக் கருவியாளர்களும் பலமுறை வாத்தியக்காரர்களும், விதூஷகரும் தனித் தனியே வசிக்கும் இடங்களும் அமைந்துள்ளன.

6. விரைந்து செல்லும் குதிரைகளை ஓட்டுகின்ற குதிரைக்காரர்களும், யானைப் பாகர்களும், தேர்ப்பாகர் களும், காலாட்படைத் தலைவர்களும் அரண்மனையைச் சூழ்ந்து வாழ்கின்ற இருப்பிடங்களும் அமைந்து, பெரி யோர் பலர் வாழ்கின்ற ஊராகவும் அமைந்துள்ளன.

***30. "இருபெரு வேந்தர் முனையிடம் போல நாளங்காடி அமைந்ததையும் அங்கே நடைபெற்ற பூத வழி பாட்டினையும் எழுதுக***

இரண்டு மாமன்னர்கள் தங்கியுள்ள பாசறைகளுக்கு இடைப்பட்டு விளங்கும் போர்க்களம்போல் அமைந்த மருவூர்ப்பாக்கம், பட்டினப் பாக்கம் இரண்டிற்கும் இடைப்பட்டு விளங்கும் நிலத்தில், நெருங்கிய சோலை மரங்களின் அடிகளே தூணாகக் கொண்டு கட்டப்பட்டு, பண்டங்களை விற்போர், வாங்குவோர்களின் ஓசை இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருக்கும் பான்மை யினையுடையது நாளங்காடி. அங்கே சித்திராபௌர்ணமி நாளன்று வெற்றி வேலினையுடைய முசுகுந்த மன்ன னுக்கு உற்ற துயரை நீக்கும் பொருட்டு இந்திரன் ஏவிய காவற் பூதம் வந்து சேர்ந்தது. அந்தப் பூதத்தின் கோயிலின் வாசலிற் பொருந்திய பலி பீடிகையில், அவரை, துவரை முதலிய பண்டங்களை வேகவைத்த புழுக்கலையும், எள்ளுருண்டையினையும் நிணக் சோறு, பூ, நறும் புகை, பொங்கல் ஆகியவற்றையும் படைத்து, துணங்கைக் கூத்தும், குரவைக் கூத்தும் ஆடி, "எமது வேந்தனுடைய பெரிய நிலம் முழுவதும் பசி, பிணி, பகை ஆகியவை நீங்கப் பெற்று, மழையும் வளமும் சுரப்பதாக என்று வாழ்த்தி அழகிய மரக்குடிப் பெண் டிர் பூத வழிபாட்டினை நடத்தினர்.

***31. காவற் பூதத்திற்கு மறம்கொள் வீரர் வழிபாடு செய்த முறையை விவரிக்க.***

மருவூர்ப்பாக்கத்திலுள்ள வீரமிக்க மறவரும் பட்டினப் பாக்கத்திலுள்ள படைக்கலம் கொண்டு போர்செய்யும் மறவருமாகிய இருபெரு வீரர் கூட்டங்களும் நாளங்காடியிலுள்ள காவற்பூதத்தின் பெரிய பலி பீடத்திற்கு முன்னே சென்று எம் வெந்திறல் மன்னற்கு உற்ற இடையூறுகளை ஒழித்து, வெற்றியைத் தருவாயாக" என்று வேண்டினர். பூதத்திற்கு தம்மைப் பலியாகக் கொடுத்தவர் "வலிமைக்கு எல்லையாகக்கடவர்"—என்று வஞ்சினங் கூறினர். கல்வீசும் கவணினை உடையோரும் வேல்களை மிகுதியாக உடையோரும், ஊன் பொருந்திய கரிய தோலால் செய்த பரிசை (கேடகம்)யினை அணிந்த அவர்கள் தம் தோள்களைத் தட்டி ஆரவாரஞ் செய்தனர். போர் நிகழ்ந்த காலத்துபோர்க்களத்தையே தமதாக்கிக் கொண்டு வீரமுடன் விளங்கியவரும் அரிய போர்க்களத்தையே தமதாக்கிக்கொண்டு வீரமுடன் விளங்கியவரும் அரிய போர்க்களத்திலே கண்டோர் அஞ்சும்படியான நெருப்புப்போல் சிவந்து பார்த்துப் போரிட்டவர்களுமாகிய அத்தகையோர் தமது தலைகளைக் கொய்து வேந்தன் வெற்றி கொள்ளுமாறு பலிபீடங்களில் வைத்தனர். அப்போது உயிர்ப்பலி யுண்ணும். பூதத்தின் குரல் இடிமுழக்கம் போன்று நான்கு திசைகளிலும் எதிரொலித்தது. மயிர்க்கண் முரசமும் அதனோடு சேர்ந்து அதிர்ந்தது. இவ்வாறு புகார் நகரத்தின் வீர மக்கள் பூதத்திற்கு உயிர்ப்பலி யூட்டினர்.

௨௨. திருமாவளவனின் இமய வெற்றியையும் பெற்ற பரிசினையும் எழுதுக (அல்லது) உயர்ந்தோர் ஏத்தும் அரும்பெறல் மரபின் மண்டபம் அமைந்த வரலாற்றினை எழுதுக.

கரிகாற் பெருவளத்தான் தமிழகத்தின் மேற்கு, தெற்கு ஆகிய இரண்டு திசைகளிலும் உள்ள சேரர், பாண்டியர் பணிந்ததால் தன்னோடு எதிர்த்தும் போரிடும் வேறு அரசர்களில்லாததால், வாள், குடை, முரசு ஆகியவற்றை நல்ல நாளிலே வடதிசை நோக்கிச் செலுத்தி, என்னுடைய வலியதோள்கள் இந்தத் திசையிலேனும் போரிடுவதற்கேற்ற பகைவரைப் பெற

வேண்டும், என்று வழிபடு தெய்வத்தை மனத்தில் வணங்கிப் புறப்பட்டான். அசைவில்லாத ஊக்க முடைய அவன் விருப்பம் பின்னிட்டு ஒழியுமாறு அந் நாளில் அவனைத் தடுத்து நிற்பதுபோல் நின்றிருந்த இமயமலையைக் கண்ட அவன், கோபம் கொண்டு இமை யவர் உறையும் அம்மலையின் உச்சியில் தனது புலிச் சின்னத்தைப் பொறித்துவிட்டு அப்பாற் செல்லும் கொள்கையைக் கைவிட்டு மீண்டான். அவ்வாறு அவன் திரும்பும்போதில் வடநாட்டு மன்னர்கள் பலரும் பல்வேறு பரிசுகளை அவனுக்குக் கொடுத்தனர். பெரிய கடலினை அரணாக உடைய வச்சிர நாட்டு அரசன் முத் துப் பந்தரைத் திறையாகக் கொடுத்தான். வாட்போரில் வல்ல மகதநாட்டு மன்னன் பகையுடன் முதலில் போரிட்டான். ஆயினும் பின்னர் தோல்வியுற்று வித் தியா மண்டபம் (பட்டி மண்டபம்) ஒன்றைத் திறை யாகச் செலுத்தினன். மிக உயர்ந்த வாயில் தோரணம் ஒன்றை அவந்தி நாட்டரசன் உவந்து கொடுத்தான். இவை மூன்றும் பொன்னாலும், மணியாலும் புனையப் பட்டனவாயினும், நுண்ணிய தொழில் வல்ல கம்மியரால் செய்யப்படாதன. பரிசளித்த அந்த மூன்று வேந்தர் களின் முன்னோர்களும் ஓரோர் காலத்தில் செய்த உத விக்குக் கைம்மாருகத்தேவதச்சனுகியமயன்என்பவனுல் செய்யப்பட்டவைகளேயாகும். அவற்றைக் கொண்டு வந்து புகார் நகரின் கண் வைத்தான் திருமாவளவன். பெறுதற்கரிய தன்மையுடைய இம் மூன்றும் ஒன்று சேர்ந்து அமைந்ததைக் கண்டோர் யாவரும் சித்திர மண்டபம் என்று போற்றினர்.

**33. புகார் நகரில் அமைந்திருந்த ஐவகைமன்றங்களின் அமைப்பினையும் விளக்குக.**

1. வெளிநாட்டினின்றும் வந்துள்ள புதிய வணி கர்கள் தங்கள் பெயரினை அடையாளமாக எழுதிய ஏராளமான பண்டப் பொதிகள், ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கள் குவிந்த பண்டசாலையின் வாயிலையும் கடந்து கிடந்தன. அவை தமக்குப் பாதுகாவலையும் நீங்கிக் காணப்பட்டன. எனினும் அவற்றை ஒருவரும்

களவு செய்வதில்லை. ஏனெனில் யாரேனும் ஒருவர் களவு செய்வாராயின், அவரின் கழுத்து கடுக்குமாறு பொதியைத் தலையிலேற்றி ஊரையே சுற்றிவரச் செய்வது அன்றைய பழக்கமாயிருந்தது. எனவே களவு என்பதை மனத்திலால் நினைப்பினும், நினைப்போரை நடுங்கச் செய்யும் வெளியான இடத்தையுடைய மன்றம் ஒன்று புகாரில் இருந்தது.

2. கூனும், குறளும், ஊமையும், செவிடும், அழுகிய தொழுநோயும் உடையவர்கள் வந்து முழுகி நீராடிய உடனேயே, நல்ல தோற்றத்தைப் பெற்று, வலம் செய்து தொழுது செல்கின்ற பொய்கையினையுடைய மன்றம் (இலஞ்சி மன்றம்) ஒன்றும் அங்கே இருந்தது.

3. வஞ்சனையால் சிலர் ஊட்டிய மருந்தினை உண்டு பித்தேறியவர்களும், கொடிய நஞ்சினை உண்டு நடுங்கும்படியான துன்பமுற்றோர்களும், அழல் (தீ) போன்ற நஞ்சினையுடைய பாம்பின் கூர்மையான பற்கள் நன்றாகப் பதியுமாறு கடிபட்டவர்களும், பிதுங்கிய கண்களையுடைய பேயினால் கடுந்துன்பம் உற்றவர்களும், ஒரு தடவை சுற்றி வந்து தொழுத உடனேயே அவர்களின் துன்பமெல்லாம் நீங்கக் கூடிய ஒளியினையுடைய நெடிய கல் நாட்டப்பட்டு நிற்கும் மன்றமும் அங்கே இருந்தது.

4. தவ வேடத்தில் மறைந்து கொண்டு கூடா வொழுக்கத்தில் ஈடுபடும், தன்மை கெட்டவர்களும், பிறர் காணுவண்ணம் தீய ஒழுக்கங்களில் ஈடுபடும் பெண்களும், அரசனுக்குக் கேடு நினைக்கும் அமைச்சர்களும், மற்றவர்கள் மனைவிமீது ஆசை கொண்டவர்களும், புறங் கூறிப் பொய்த்து உயிர் வாழும் இயல்பினரும் ஆகிய இவர்கள், என் கையிலுள்ள பாசத்திடத்து அகப்படுவார்கள் என்று நான்கு காத வட்டகை தூரம் கேட்கும் வண்ணம் தனது கடிய குரலையெழுப்பி அவ்வாறே அவர்களைப் பாசத்தாற் கட்டிப்பிடித்துப் பூமியில் அறைந்து உண்ணுகின்ற பூதம் நிற்கும் பூத சதுக்க மன்றம் ஒன்றும் அங்கே இருந்தது.

5. அரசர்கள் தம்து செங்கோன்மையில் சிறிது தவறினலும், அறம் கூறுவோர் ஒரு சிறிது மாறுபட்டு ஒருதலைப் பட்சமாகத் தீர்ப்பளித்தாலும், அதை வெளிப் படுத்துவதற்குத் தனது நாவினல் எதுவும் கூருமல் துன்பக் கண்ணீரைச் சொரிந்து அழுகின்ற பாவை ஒன்று நிற்கின்ற மன்றமும் அந்தப் புகார் நகரில் இருந்தது.

34. ஐம்பெருங்குழு, எண்பேராயம்—இவற்றை விளக்குக.

இவை இரண்டும் அரச காரியங்களுக்காக அரசனல் கூட்டப்படும் ஆலோசனை சபையாகும். ஐம்பெருங் குழுவில் 1. அமைச்சர் 2. புரோகிதர் 3. சேனதிபதி 4. தூதர் 5. சாரணர் ஆகியோர் அடங்குவர், இவ் வைந்து பேர்களும் கூடியது "பஞ்சாயத்து" எனப்படும்.

"அமைச்சர் புரோகிதர் சேனு பதியர்
தவாத்தொழில் தூதுவர் சாரணர் என்றிவர்
பார்த்திபர்க்(கு) ஐம்பெருங் குழு எனப்படுமே'

எண்பேராயம்

"காணத் தியலவர் 1. கரும காரர் 2.
கனகச் சுற்றங் 3. கடைகாப் பாளர் 4.
நகர மாந்தர் 5. நளிபடைத் தலைவர் 6.
யானை வீரர் 7. இவுளி மறவர் 8.
இனையர் எண்பே ராயம் என்பர்"

1. கைத்தொழில் வல்லோர் 2. அரச கருமங்கள் செய்பவர் 3. பொன் வணிகர் 4. காவலர் 5. ஊர்ப் பொதுமக்கள் 6. படைத் தலைவர் 7. யானை வீரர் 8. குதிரை வீரர் ஆகியோர் இக் குழுவில் அடங்குவர்.

35. புகார் நகர மக்கள் இந்திரவிழா எடுத்த காட்சிகளை வருணனை செய்க.

1. அவ்வூர் மக்கள், இந்திரனுடைய வச்சிரக் கோட்டத்திலுள்ள மங்கல முரசை யானையின்மேலேற்றி வெண்மை நிறமுடைய அயிராவதம் என்னும்யானையை

வாகனமாக உடைய தேவேந்திரனின் கோவிலில் நடைபெறும் விழா பற்றி முரசறைந்து ஊர் மக்களுக்குச் முரசறைந்து ஊர் மக்களுக்குச் செய்தி தெரிவித்தனர்.

2. கோயிலின்முன்னர் மங்கல நெடுங்கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

3. மரகதமணியும், வைரமும் பதித்த பலகையின் மீது செம்பவளத் தூண்கள் நிறைந்த, பசும் பொன்னாலாகிய திண்ணைகளையுடைய மாளிகைகளின் வாயில் தோறும் கிம்பிரியும் முத்தும் பொறித்த மகர தோரணங் கட்டப்பட்டன.

4. பசும் பொன்னாலாகிய நிறைகுடங்களும், முளைப் பாலிகையும், பாவை விளக்கும், பசும்பொற் கொடியும், வெண்சாமரையும், அழகிய பொற் சுண்ணங்களுடன் வீதியில் நிறைந்திருந்தன.

5. ஐம்பெருங் குழுவினரும், எண் பேராயத்தினரும், அரச குமரரும், வணிக குமரரும், திரண்டு வந்து, தம் அரசு மேம்படும் பொருட்டு "உரைசால் மன்னன் கொற்றம் கொள்கென" வாழ்த்தினர்.

6. இவ்வுலக உயிர்களனைத்தையும் காக்கும் குளிர்ந்த காவிரியின், பூந்தாது நிறைந்த சங்கமத்துறையின் நீரைப் பொற்குடங்களில் எடுத்து வந்து மண்ணிலுள்ளோர் மருளவும், விண்ணிலுள்ளோர் வியப்படையவும் விண்ணவர் தலைவனைத் திருமஞ்சன நீராட்டினர்.

7. (1) குறிப்பிட்ட ஒரு தாயின் வயிற்றிலே பிறவாத திருமேனியையுடைய மாதேவன் [சிவன்] கோயிலும், (2) ஆறு முகங்களையுடைய முருகவேளின் கோயிலும், வெண் சங்கு போன்ற நிறமுடைய பலதேவன் கோயிலும் (4) நீலமணி போலும் நிறத்தையுடைய நெடுமால் கோயிலும், முத்து மாலையணிந்த வெண் கொற்றக் குடையினையுடைய இந்திரன் கோயிலும் ஆகிய புகார் நகரிலிருந்த கோயில்கள் யாவற்றிலும் வேதங்களில் கூறியபடி வேள்விகள் நடைபெற்றன.

8. நால்வகைத் தேவர்கள், பதினெட்டு வகைப் பட்ட கணங்கள் ஆகிய வெவ்வேறு கடவுளர்களுக்கும் சிறப்புடன் விழாக்கள் நடைபெற்றன.

9. அறவோர் பள்ளிகளிலும், அறத்தினைப் பேணும் அறச் சாலைகளிலும், மதிற்புறத்தேயுள்ள புண்ணியத் தானங்களிலும் அறத்தின் கூறுபாடுகளை யுணர்ந்தோர் தரும போதனைகள் நடத்தினர்.

10. கொடியணிந்த தேரினையுடைய அரசனோடு பகை கொண்டதால் சிறைப்படுத்தப்பட்ட மன்னர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

11. கூத்தர்களும், குழல் ஊதுவோர்களும், தோற் கருவியாளர்களும் பண் இசைக்க வல்ல யாழ்ப் புலவர் களும், பாணர்களும் அளவிட முடியாத சிறப்பினை யுடைய இசையினை எழுப்பினர்.

12. இரவும் பகலும் இடைவிடாமல் முழவுகள் முழங்கின. சிறுசிறு தெருக்களும், பெரும் பெரும் வீதி களும் களிப்புடன் விழாக் கோலம் பூண்டிருந்தன.

36. குரல்வாய்ப் பாணரொடு, நகரப் பரத்தரொடு. திரிதிரு மரபின் கோவலன் போல—இளிவாய் வண்டினொடு இன்னிள வேனிலொடு-மலய மாருதம் திரிந்த காட்சியினை விளக்குக. (அல்லது) புகார் நகரின் கண் புகும் காற்றினை இளங்கோ எங்ஙனம் வருணித்துள்ளார்? அல்லது) நகரப் பரத்தரொடு திரிதருமரபின் கோவலன் போல—உவமையை விளக்குக.

தன்னாற் காதலிக்கப்பட்ட கொழுநனைப் பிரிந்தும் அலரெய்தாத அழகிய வளைந்த மகரக் குழையுடைய மாதவியோடு (மாதவி-இருபொருள் 1. மாதவி 2. குருக் கத்திப்பூ) வீட்டிலே வளர்கின்ற முல்லை, மல்லிகை, இருவாட்சி, தாழியுள் மலரும் குவளை, வண்டுகள் சூழும் செங்கழுநீர் ஆகிய பூக்கள் நெருங்கிய கோதையால் விளக்கமுற்று, கள்ளுண்டு களிப்படைந்து, அழகும், நறு மணமும் உடைய பூம்பொழிலில் விளையாடுவதை

விரும்பி, நாள்தோறும் மகிழ்ந்திருக்கும் இடமாகிய நாளங்காடியின் பூவிற்கும் இடங்களில் உள்ள பல் வகைப் பூக்களின் புதிய மணத்தினுள் யுகுந்து (அகிற் புகையும், நறுஞ் சாந்தும் சிறந்து நகையாடி மகிழும் கன்னியர் கூட்டத்தின் காமக் குறிப்பாகிய மொழிகளைக் கேட்டு மகிழ்ந்து இசையென்னும் பண்ணினைப் பாடும் வாயினையுடைய பாணரொடும், நகரிலுள்ள பரத்தைய ரொடும் திரிகின்ற கோவலனைப் போல) இளி என்னும் இசைபாடும் வண்டினொடும், இனிய இளவேனில் பருவத்தோடும் பொதிய மலையினின்று வரும் தென்றலாகிய மாருதம் புகாரின் கண்ணும் புகுந்தது. (மாருதத்திற்குக் கோவலனும், வண்டிற்குப் பாணரும், இளவேனிலுக்குப் பரத்தையரும் உவமை. பாடுதலும், கள்ளுண்டலும், பாணர்க்கும் வண்டுக்கும் ஒத்த பண்புகளாகும். கோவலன் பரத்தர் பற்றுக் கோடாகப்பாண ரொடும் திரிதல்போல, மாருதம் இளவேனில் பற்றுக் கோடாக வண்டோடும் திரிந்தது.)

37. "உருவி லாளன் ஒரு பெரும் சேனை"யைக் கண்ட ஆடவரின் கூற்றைப் புலப்படுத்துக. (அல்லது) மாருதம் வீசிய வீதிகளிலுள்ள ஆடவர்களின் நிலையை விளக்குக.

1. மாருதம் வீசிய புகார்நகரின் வீதிகளில் பரத்தை யொருத்தி உலா வரக்கண்ட இளைஞர் வானத்து நிலவு கரிய மேகத்தைச் சுமந்து, சிறிய முயற் கறையை யொழித்து இருபக்கமும் இரண்டு கருங் கயலினையும் இடையே ஒரு குமிழ் மலரையும் எழுதி, அழகிய வானத்திலுள்ள பாம்பாகிய பகைக்கு அஞ்சி, இங்கே வந்து திரிகின்றது கொல்லோ?—என்று, அவளுடைய முகத்தை நோக்கியும்,

2. பெரிய திங்களாகிய இந்த நிலத்தின்கண், அமுதகலையின் துவலைகளுடைய அழகிய நீரைப் பருகி வளர்ந்த மகரக்கொடியோனின் (காமனின்) மின்னுக் கொடியும் வந்துவிட்டதோ? என்று அவளுடைய மின்னல் போன்ற இடையை நோக்கியும்,

3. பெருநில மன்னனுக்குப் பெரும் வளம் காட்டும் பொருட்டுத் திருமகள் வந்து புகுந்தது, செழுமை மிகுந்த இந்த நகரமாகும் என்று கருதி செந்நிற இலவ மலரும், வெண்ணிற முல்லை மலரும், கரிய நீண்ட குவளை மலரும், குமிழ் மலரும் பூத்த உடனேயே உள் வரிக் கோலத்துடன் தமக்குப்பொருத்தமான திருமகளைத் தேடிக் கள்ளத்தையுடைய தர்மரை இவ்வீதியிலே திரி வதும் உண்டாயிற்றோ? என்று (தாமரைப் பூவே வேறு பல பூக்களையும் தன்னுள் பூத்து வந்ததோ? என) அவளுடைய திருமுகத்தையும் அதன்கண் உள்ள வேறு பல உறுப்புக்களையும் வியந்து கூறியும்,

4. அரசனுடைய செங்கோலினை மறுத்தாகுமென் றஞ்சி, பல உயிரையும் பருகும் கூற்றம் தன் ஆண் இயல்பினை மாற்றி, ஆனால் தனது கொலைத் தொழிலை மட்டும் மாற்றாமல் நாணம் உடைய கோலமும் நகை பொருந்திய முகமும் உண்டாக்கிக் கொண்டு, யாழின் நரம்பினைப் போலப் பண்ணாகிய மொழியைப் பேசிக் கொண்டு பெண் உருவத்துடன் வந்து திரிகின்றதோ என்று வியந்து கூறியும் காமனுடைய ஒப்புற்ற பெரிய சேனையாகிய பரத்தையரைக் கண்ட ஆடவர்கள் நிலை தடுமாறி நின்றனர். காமனின் பெரும் படையினரான மகளிர் ஊடலாகிய போரில் ஆடவரை வென்று, அவர் ஓடிவிடாமல் எதிர் நின்று தடுத்து அவர்களுடைய மார்பிலும் தோளிலும் தொய்யில் முதலியன பதியுமாறு புணர்ந்து நிற்க, அப்பதிவுகளோடு மனையகம் சென்ற ஆடவர்களிடம் அருந்ததி யொத்த கற்பினையுடைய அவரது மனைவியர் ஊடல்கொண்டு சினந்து நின்றனர். அதனால் அப்பெண்டிர்களின் கண்கள் சிவந்தன. வீட் டிற்கு வந்த விருந்தினர்கள் அதைக் கண்ணுற்ற, நீல மணி போன்ற குவளை மலர்கள் புறங் கொடுத்து ஓடச் செய்யும் கரிய கண்களின் கடைச் சிவப்பு, ஒளி பொருந் திய இம்மாதர் முகத்தினின்றும், விருந்தினாலும் நீங்கிய தில்லையாயின், இப்பெரிய நிலவெல்லை இதற்கு ஒரு மருந்தையும் தரவல்லதோ? என்று தமது நெஞ்சோடு கூறிச் செயலற்று நடுங்கும் காட்சிகளையும், புகார் நகரி னில் விழா நாட்களில் இடையிடையே காணலாம்.

88. விண்ணவர் கோமான் விழவு நாள் அகத்துக் கண்ணகி, மாதவி நிலையினை எழுதுக.

உட்பக்கத்திலே நறுந்தாதுகள் நிறைந்து உறுத்துவதால், கட்டு அவிந்து தேன் சொரியும் கழுநீர் மலரினைப் போலக் கண்ணகியின் கரிய கண்ணும், மாதவியின் சிவந்த கண்ணும் தமது உள்ளத்தின் நினைவுகளை மறைத்து மனத்தினுள் ஒளிப்பதற்கு முயன்று கண்ணீர் சொரிந்தன. கண்ணகிக்கு இடது கண்ணும், மாதவிக்கு வலது கண்ணும் துடித்தன. கலவியிற் கோவலனுடன் கூடியிருந்ததால மாதவிக்குச் செங்கண்ணும், அல்லாத கண்ணகிக்குக் "கருங்கண்ணும்" கூறினார். பிரிவினால் கண்ணகியும், மகிழ்வினால் மாதவியும் கண்ணீர் சொரிந்தனர்.

89 அவரவர் அணியுடன் அவரவர் கொள்கையின் நிலையும் படிதமும் நீங்கா மாயின் பதினோர் ஆடலும் மாதவி ஆடியதை விவரித்து எழுதுக.

முதலில் திருமாலைப் பரவுகின்ற தேவபாணியும், வருணபூதர் நால்வரையும் பரவும் நால்வகைத் தேவபாணியும், எல்லா உயிர்களும் இன்புற்றிருக்கும்படி நன்மை செய்து, வானத்தில் ஊர்ந்து செல்லும் திங்களைப்பாடும் தேவபாணியும் பாடுதல் செய்து அதன்பின் தன்னுடைய ஆடலைத் துவக்குகின்றாள் மாதவி.

1. கொடுகொட்டி :—தாளமுறைகள் சீர்பெறும் வண்ணம் பைரவி யாடிய பாரதி யரங்கமாகிய சுடுகாட்டில், திரிபுரத்தை எரிக்குமாறு தேவர்கள் வேண்டிக்கொள்ள, உமையவளை உடலின் ஒரு பக்கத்திற் கொண்டு, ஒப்பற்ற இறைவன் கைகொட்டி ஆடிய கொடுகொட்டி என்னும் ஆட்டமும்,

2. பாண்டரங்கக் கூத்து :—தேரின் முன்னர் நின்ற நான்முகன் காணும்பொருட்டுப் பைரவி (பாரதி) வடிவங் கொண்ட இறைவன் வெண்ணீற்றை அணிந்து ஆடிய பாண்டரங்கக் கூத்தும்,

3. அல்லியத் தொகுதி :—கஞ்சனுடைய வஞ்சனையை வெல்லும் பொருட்டுக் கார்நிற வண்ணனாகிய

திருமால் ஆடிய ஆடல்களுள், கஞ்சனுடைய வஞ்சத்தால் வந்த யானையின் கொம்பை ஒடிப்பதற்கு நின்றாடிய அல்லியத் தொகுதி என்னும் ஆட்டமும்,

4. மல்லாடல் :—மாயோன் மல்லனாய் அவுணனைக் கொன்ற மல்லாடல் என்ற மற்கூத்தும்.

5. துடிக்கூத்து :—பெருங்கடலின் நடுவில் நீரின் அலையினையே அரங்கமாகக் கொண்டு நின்று, எதிர்த்து முன்வந்த சூரனது வலிமையை வென்ற முருகன், துடி கொட்டி ஆடிய துடிக்கூத்தும்.

6. குடைக்கூத்து :—போர் செய்ய இயலாமல் படைக்கலங்களைப் போட்டு விட்டு வாடிய அவுணர்களின் முன்னிலையில் தன் குடையை முன்னே சாய்த்து ஆடிய குடைக்கூத்தும்.

7. குடக்கூத்து:—வாணாசுரனது "சோ" என்னும் நகர வீதியில் சென்று நெடிய பூமியைத் தாவி யளந்த மாயோன் குடங்கொண்டு ஆடிய குடக்கூத்தும்.

8. பேடிக்கூத்து :—ஆண்மைத் தன்மையினின்றும் மாறுபட்டு பெண்மைக் கோலத்துடன் காமன் ஆடிய பேடிக்கூத்தும்.

9. மரக்காற்கூத்து:—காயும் சினமுடைய அவுணர்கள் வஞ்சத்தாற் செய்யும் கொடுந் தொழிலைப் பொறாத துர்க்கை மரக்கால் கொண்டு ஆடிய மரக்காற் கூத்தும்.

10. பாவைக்கூத்து : அவுணர்களின் போர்க் கோலம் ஒழிவதற்காகச் செந்நிறமுடைய திருமகள் கொல்லிப்பாவை வடிவாய் ஆடிய பாவைக்கூத்தும்.

11. கடையக்கூத்து:-வாணாசுரனது "சோ" நகரின் வடக்கு வாயிலில் உள்ள வயலிடையே நின்று இந்திராணி யென்னும் மடந்தை கடைசியர் வடிவு கொண்டு ஆடிய கடையக்கூத்தும் ஆகிய பதினோர் ஆடலையும் முன்பு ஆடிய அவரவர் அணிகளுடனும், அவரவர் கொள்கையுடனும், நின்று ஆடுதல், வீழ்ந்து ஆடுதல் ஆகிய மரபுகளின்படியும், ஆடல்களுக்கேற்ற இசையுடனும் நன்றாக ஆடினாள்.

40. "மாதவி புனைந்த அணிகளால் பண்டை மாதணி நகைகள் இவையென விளக்குக (அல்லது);

**ஆடலும் கோலமும் அணியும் கடைக்கொள**
**ஊடற்கோலமொ டிருந்தோன் உவப்ப—**
**மாதவி தன்னை அழகுபடுத்தியதை விளக்குக.**

விண்ணுலகத் தேவர்களும் பிறர் அறியாதபடிமாறு வேடம் புனைந்து வந்து காணும் பெருமையினையுடைய இந்திர விழாவும், மாதவியின் ஆடலும், அதற்கேற்ற கோலமும், அதனாற்பிறந்த அழகும் முடிந்தமையால் வெறுப்போடிருந்த கோவலன் தன்னைக் கண்டு மகிழும் வண்ணம், மாதவி அழகு செய்து கொள்ளத் துவங்கினாள். அப்போது,

பத்து வகைப்பட்ட துவரினாலும் (துவர்=பவளம் சிவப்பு), ஐந்து வகைப்பட்ட விரையினாலும் (நறுமணப் பொருள்), முப்பத்திரண்டு வகைப்பட்ட ஓமாலிகை (நீரிலிடும் நறும்பொருள்)யினாலும் ஊறிய நன்னீரினால், நறுமண நெய்தேய்த்த மணம் வீசும் தனது கரிய கூந்தலை நீராட்டினாள். நீராட்டிய கூந்தலை (அகிற்) புகையால் ஈரம் புலர்த்தினாள், கூந்தலில் ஐந்து வகிர்கள் எடுத்து வகைதோறும் குழம்பினை ஊட்டினாள். செம்பஞ்சிக்குழம்பு பூசிய தனது திருவடிகளின் விரல்களில் நல்ல அணிகளை (மகரவாய் மோதிரம், பீலி, கால் ஆழி) அணிந்தாள்.

பாதசாலம், சிலம்பு, பாடகம், சதங்கை, காற்சரி என்னுமிவற்றைக் காலுக்குப் பொருத்தமாக அணிந்து கொண்டாள்; தொடையிலணியக்கூடிய குறங்கு சறி என்னும் அணியைத்திரண்டமைந்த தொயில் அணிந்து கொண்டாள். பருமுத்தின் கோவை முப்பத்திரண்டால் செய்த "விரிசிகை" என்னும் இடை அணியை, நீல நிறமும், பூவேலைகளும் அமைந்த தனது துகிலின்மீது அணிந்தாள். "கண்டிகை" என்னும் அழகிய அணியுடன் இணைந்த தூமணித்தோள் வளையைத் தோளுக்கு அணிந்தாள். மாணிக்கமும், வைரமும் அமைந்த சித்திரச் சூடகமும், செம்பொற்கைவளை நவமணி வளை, சங்க வளை, பவழ வளை ஆகியவற்றை மெல்லிய மயிரையுடைய முன்கைக்குப் பொருத்தமுற அணிந்தாள்.

வாளைமீனின் திறந்த வாய்போன்ற (நெளிவும்), மூடக்கு மோதிரமும், ஒளிமிக்க செந்நிறமுடைய

மாணிக்கமோதிரமும், ஒளியுடைய வயிரம் சூழ்ந்த மரகத மணித் 'தாள்செறி'' (விரலடியிலணிவது)யும் ஆகிய இவற்றைக் காந்தள் மலர் போன்ற மெல்லிய விரல்கள் முழுவதும் மறையும்படி அணிந்தாள்.

வீரசங்கிலி, நுண்ணிய சங்கிலி, பூணப்படும் சரடு, புனையப்பட்ட தொழில்களையுடைய சவடி சரப்பளி ஆகிய வற்றை அழகிய கழுத்தில் முத்தாரத்துடன் அணிந் தாள்.

இந்திர நீலமும் இடையிடையே திரண்ட வைரமும் சேர்த்துச் செய்யப்பட்ட "குதம்பை" என்னும் அணியை வடிந்த காதினிடம் அழகு மிகும்படி அணிந்தாள்.

சீதாதேவி என்னும் பணியுடனே (தெய்வ உத்தி யோடு) செழுநீர் வலம்புரி, தொய்யகம், புல்லகம் என் பனவும் தொடர்ந்து ஒன்றாக ஆன தலைக்கோலத்தை (தலையிலணியும் அணி) கரிய பெரிய கூந்தல் அழகுறும் படி அணிந்து கொண்டாள். இவ்வாறு பலவேறு அணி களும் அணிந்து தன்னை மேலும் மேலும் அழகுப்படுத் திக் கூடலும் ஊடலும் கோவலனுக்கு அளித்து படுப் பதற்கேற்ற பள்ளி அறையிலே அவனுடன் இன்ப முற்று விளங்கினாள்.

41. புகாரில் பூதம் புகுந்ததைப் புகல்க.

தேவர்களின் தலைவனான இந்திரனை, மிக்க வேக முடைய அவுணர்கள் கூட்டமாக வந்து எதிர்த்தனர். அது சமயம் கொடுங்குண வேங்கைபோல் வலிமிகும் வீரக் கழலணிந்த முசுகுந்த மன்னன் இந்திரனின் கோநகரைக் காவல் செய்து வந்தான். எனவே அவ னுக்கு எதிர் நிற்க இயலாத அவுணர்கள் அழிந்தனர். எனவே நெஞ்சிலே பகைகொண்ட அவர்கள் ஒன்று கூடித் தம் மாயையினால் இருள் செய்யும் கணையை ஏவினர். அவ்வஞ்சத்தை ஒழிக்கும் பொருட்டு மிகவும் பெரிய பூதமொன்றை முசுகுந்தனுக்காக இந்திரன் ஏவினான். அவுணர் ஏவிய கணையை அப்பூதம் போக் கியது. பின்னர் புகார் நகரின் நாளங்காடியில் தங்கியது.

**42. மாதவி நெய்தலங்கானலைச் சென்று சேர்ந்த காட்சியை வருணனை செய்க.**

புகார் நகர மக்கள் இந்திர விழா நிறைவுற்றதும், உவா நாளன்று (பௌர்ணமி) கடலாடுவதற்குச் செல்வதுண்டு. அவர்களோடு சென்று தானும் கடல் விளையாட்டைக் காண வேண்டுமென்று விரும்பிய மாதவி கோவலனிடம் விருப்பத்தைக் கூறி அவனுடன் புறப்பட்டாள். அப்போது பொய்கையிலுள்ள தாமரைகளில் துயின்ற புட்கள் வாய் புலம்பின. பொழுது விடிவதைக் காட்ட கோழிகள் கூவின. விடிவெள்ளி பூமியிலுள்ள இருளை நீக்கியது. மாலையணிந்த கோவலனுடன், பேரணிகளை அணிந்து புறப்பட்டாள். மேகம்போன்ற கொடைத் தன்மையுடைய கைகளுடைய கோவலன் அரச வாகனமாகிய கோவேறு கழுதையில் ஏறிச் செல்ல, மாதவியும் கூடார வண்டியில் ஏறிக் கொண்டாள். பற்பல கோடிக் கணக்கான பொருட் குவியலையுடைய மாடங்கள் நிறைந்த குறுந்தெருக்களையுடைய பெரிய கடைவீதியின் கண், மலர் சூடப்பெற்ற மணி விளக்குகளை ஏற்றி, மலர், அறுகம்புல், நெல் ஆகியவற்றைத் தூவி வழிபட்டுச் சென்றாள்.

மங்கலத்தாசிரியர் அணிகள் ஒலிக்க இருமருங்கும் போய்க் கொண்டிருந்தனர். இவ்வாறாகத் திருமகளுக்கு இருப்பிடமான பட்டினப்பாக்கத்தை விட்டுக் கழிந்து கடல் வளம் தருவதால் உயர்ந்து விளங்கிய மருவூர்ப்பாக்க நகரவீதியின் ஊடே சென்று, வெளிநாட்டினின்றும் கடல் வியாபாரத்திற்காக வந்திருக்கும் மரக்கல வணிகர்கள் தங்கியுள்ள, கடலின் அலைவாயிருப்பில் வெண்மணலையுடைய கூலக்கடைத் தெருவில் இன்னின்ன சரக்குகள் ஈண்டுள என்று அறிவிக்கும் கொடிகளுடன் விளங்கும் மாலைச்சேரியின் வழியாக நெய்தலங்கானலை அவர்கள் அடைந்தனர்.

**43. இடிக் கலப்பன்ன ஈர் அயிர் மருங்கில் கடிப்பகை காணும் காட்சி—எவ்வாறிருந்தது? (அல்லது) புகார் நகரத்தின் நெய்தலங்கானலை வருணனை செய்க.**

1. வண்ணக் கலவை, சாந்து, மலர், சுண்ணப் பொடி, பணியாரம் ஆகியபற்றை விற்பவர்கள் ஏற்றி வைத்துள்ள விளக்குகளும்,

2. சிறப்புடன் தொழில் செய்யும் கம்மியர் ஏற்றி யுள்ள விளக்குகளும்,

3. அப்பம் விற்பவர்கள் குடித்தண்டல் ஏற்றி வைத்துள்ள கரிய அகல் விளக்குகளும்,

4. விலை கூறி விற்கும் மகளிர், தம் கடைகளில் ஏற்றி வைத்துள்ள விளக்குகளும்,

5. இடையிடையே மீன் விலை பகர்வோரின் விளக்குகளும்,

6. கலங்கரை விளக்குகளும்,

7. மீன் பிடிக்கும் பரதவர் வைத்துள்ள விளக்கு களும்,

8. மொழி வேறுபட்ட நாட்டினர் வைத்துள்ளவிடி விளக்குகளும்,

9. பெரிய பண்டகசாலையின் காவலர்கள் வைத் துள்ள விளக்குகளும்,

10. அளவிடமுடியாதபடி எங்கும் பெருகிஇருந்தன.

இடித்தமாவு போன்ற நுண்ணிய மணலின்மீது, வெண் சிறு கடுகும் காணப்படும் காட்சியை யுடைய தாகிய, மிகுந்த நீர்ப் பரப்பில், மணமிகுந்த மலரை யுடைய தாமரையை வேலியாகவுடைய மருத நிலம் போல அழகுறத் தோன்றும் வண்ணம், தாழையை வேலியாகவுடைய நெய்தல் நிலத்தின் கழிக்கானல் அமைந்திருந்தது.

44. விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்; தண்பதம் கொள்ளும் தலைநாள் போல"— உவமையை விளக்குக.

மாதவி தன்னுடைய தோழிகளுடன் சென்று சேர்ந்த நெய்தலங்கானத்தில் புகார் மக்கள் கடலாடு வதற்காகக் கூடியிருந்த காட்சி இளங்கோவடிகளால் இவ்வாறு வருணனை செய்யப்பட்டுள்ளது. அங்கே,

நிரை நிரையாகக் குவிந்து, குற்றமற்றதாகத்தோன் றும் மலைபடு பொருள்களும், கடல் படுபொருள்களும்

வளத்துடன் கலந்து கிடக்கும் மரக்கலங்கள் அசைந்து நின்றன. அந்தத் துறைமுகங்களின் சோலை சூழ்ந்த இருப்பிடத்தில், அரசகுமாரரும், அவருடைய உரிமை மகளிர்களும், வணிகரும் ஆடல் மகளிரும், பாடல் மகளிரும் தொகுதி தொகுதியாக வீற்றிருந்தனர். அவ்விடங்களிலெல்லாம் அவரைச் சூழ்ந்துகொண்டு திரைச் சீலைகள் விளங்கின. அக்காட்சியானது விண்ணிலே சென்று பொருந்தும் புகழையுடைய கரிகால் வளவன், புதுப்புனல் விழா கொண்டாடிய தலைநாளில், வெவ்வேறுபட்ட நடையுடை பாவனை ஆரவாரம் ஆகியவற்றுடன் விழாக் களத்தில் பலர் விளங்கி வீறு பெறத் தோன்றியது போல இருந்தது, என்பது அடிகளின் வருணனையாகும்.

அங்கே கடலினது புலால் நாற்றத்தை மாற்றும் மடல், அவிழ்ந்த பூவையுடைய தாழை சூழ்ந்த ஓரிடத்தில், புன்னை நிழலில், புதுமணலில் சித்திரச் சீலையை மேற் பரப்பாக வளைத்துக் கட்டியிருப்பதனுள் தந்தக் கால் கட்டிலின் மேல் வசந்த மாலையின் யாழைக்கையில் வாங்கியவளாக மாதவி கோவலனுடன் கூடி இருந்தனள். அப்போது மாலைப் பொழுதில் துயில் கொண்ட வண்டுகள் காலைப் பொழுதின் புது மதுவும், பூந்தாதும் ஊதும் வண்ணம் வெங்கதிரோனின் தேர் கீழ் வானில் எழுந்தது,

(சிலப்பதிகாரம் — வேனிற் காதை, கனுத்திறம் உரைத்த காதை, நாடுகாண் காதை)

45. வேனிற்காதை—சிறுகுறிப்பு வரைக

ஊழ்வினை வந்துருத்தக் கோவலன் கானல் வரிப் பாடலின் காரணமாக மாதவியைப் பிரிந்தான். தன் ஏவலருடன் கடற்கரைச் சோலையிலிருந்து மாதவியைப் பிரிந்து சென்றான். அவ்வாறு பிரிந்தது வேனிற் பருவத்திலாகும். மாதவி கோவலனையின்றித் தமியளாய்த் தன் ஆயத்தோடு தன்மனை புகுந்து அவனது பிரிவாற்றாமையால் பட்ட துன்பத்தையும், அதனை ஆற்றியிருத்தற்கு அவள் செய்த செயல்களையும் கூறும் பகுதி வேனிற் காதையாகும்.

**46. வேனிற்காலம் வந்த வகையை விளக்குக.**

வடக்கின்கண் வேங்கடமலையும் தெற்கின்கண் குமரிக்கடலும் கிழக்கின்கண்ணும் மேற்கின்கண்ணும் கடல்களும் தமிழ் நாட்டிற்கு எல்லையாம் என்று சான்ருேரால் அறுதியிடப்பட்ட மூவேந்தருடைய நல்ல நாட்டிடத்தே, மாடங்களாற் சிறந்த மதுரையும், பெருமைபெற்ற உறந்தையும், மறவரின் ஆரவாரம் மிக்க வஞ்சியும், காவிரி நீரையும் கடல்நீரையும் உடைய பூம்புகாரும் என்னும் நான்கு தலைநகரங்களிலும் தனது ஆணையைச்செலுத்தி அரசனுக வீற்றிருந்தவன் சிறந்த மன்னனுகிய காமவேள் ஆவான். அவனுக்குச் சிறந்த துணைவனுகிய இன்பந்தரும் இளவேனில் என்னும் இளவரசன் இப்பொழுது இவ்விடத்தே வந்துவிட்டான் என்று பொதியமலைக்கண் வீற்றிருந்த குறுமுனிவன் ஈன்ற இளமையையுடைய தென்றல் என்னும் தூதுவன் வந்து கூறினன். ஆதலால், பூங்கொடிகள் செறிந்த தேமாஞ்சோலை யென்னும் பாசறைக்கண் இருந்த குயிலாகிய படைத் தலைவன், அத்தென்றல் தூதனின் ஆணைக்கிணங்க 'நம் மன்னனுகிய மகரமீன் கொடியுயர்த்த காமவேளின் படையிலுள்ள பெண்களாகிய நீங்களெல்லாம் போர்க்கோலங் கொள்ளுங்கள்' என்று அறிவிப்பான்போல எங்கும் கூவி அறிவிக்கின்றது. இத்தகு சிறப்புடன் வேனிற்காலம் வந்தது.

**47. வேனில் வரவுக்கேற்ப மாதவி செய்த செயல்கள் யாவை?**

கடற்கரைச் சோலையிடத்துக் கடல் விளையாட்டு நிகழும் பொழுது கோவலன் தன்னுடன் ஊடிப் பிறிந்தமையால் அவனைக்கூடும் வாய்ப்பைப் பெருமல் தமியளாய்த் தன்மனை புகுந்த கரிய மலர்போலும் நெடிய கண்களையுடைய மாதவி குயிலோன் கூறிய பணிமொழியை விரும்பி, வானளாவ உயர்ந்த மேனிலை மாடத்தின்கண் நிலாமுற்றத்தில் ஏறி, சிறந்த அணிகலன்களும் கொற்கை முத்தும் பொதியிற் சந்தனமும் அவ்வேனில் வேந்தனுக்குத்தான் கொடுக்கும் கடமைப்

பொருள்கள் ஆதலின், அவ்வேனில் வேந்தன் வீற்றிருக்கும் தனது கொங்கை முற்றத்தே குங்குமக்கோலமிட்ட பரப்பில் அப்பொருள்களை அவ்வேந்தனுக்குக் காணிக்கையாக ஏந்தினாள். பிறகு ஒன்பது வகைப்பட்ட இருப்பினுள் தாமரையிருக்கையென்னும் பதுமாசனத்தில் இருந்து தனது யாழினைக் கைக்கொண்டு மிடற்றினாலே இனிய பண்ணைப் பாடினாள். பிரிவாற்றாமையால் மிடற்றால் பாடிய இசை மயங்கியது. அதுகண்டு பின்னர் யாழ் இசைக்கத் தொடங்கினாள்.

மாதவி யாழிசைத்தல் :—மாதவி தனது வலக்கையால் யாழினது கோட்டைப் பிடித்து, இடக்கையின் நான்கு விரல்களாலும் மாடகத்தைத் தழுவி, செம்பகையும் ஆர்ப்பும் கூடமும் அதிர்வும் ஆகிய பகைகள் நீங்குதற்குரிய முறையைக் கடைப்பிடித்து, முறை பிறழாது பதினான்கு நரம்புகளையும் உழை முதலாகவும் கைக்கிளை இறுதியாகவும் கட்டி, இணை நரம்பும் கிளை நரம்பும் பகை நரம்பும் நட்பு நரம்பும் என்ற இந்த நான்கின் வழிகளிலே இசைபுணரும் குறிநிலையைப் பொருந்த நோக்கிக் குரல் நரம்பினையும் இளி நரம்பினையும் ஆராய்ந்து செவியால் ஓர்ந்து தீதின்மையை அறிந்தாள்.

அத்துடன் இசை நூல் முறைப்படி ஐந்தாம் நரம்பாகிய இளிகுரலாக ஏழு நரம்புகளிலும் வாசித்தாள். உழை குரலாகவும் உழைதாரமாகவும், குரலேகுரலாகவும் குரலே தாரமாகவும் அகநிலை மருதம் புறநிலைமருதம் அருகியல் மருதம் பெருகியல் மருதம் என்று கூறப்படும் நால்வகைச் சாதிப்பண்களையும் அழகும் இனிமையும் ஆகிய நன்மையுண்டாக இசைத்துப் பார்த்து வலிவும் மெலிவும் சமனும் என்னும் மூவகைப்பட்ட இசையியக்கங்களையும் முறைப்படி இசைத்தாள். பின்னர், திறம் என்னும் பண்களைப் பாடத்தொடங்கியவள் தான் கருதிய திறத்திற்குப் புறம்பான இசைவந்து விரவுதலாலே மாதவி மயங்கினாள். பிரிவாற்றாமையால் இந்த இசையும் மயங்கிற்று. அதனால் யாழிசைத்தலை விடுத்துக் கோவலனுக்குத் திருமுகம் வரையத் தொடங்கினாள்.

**48. மாதவி கோவலனுக்குத் திருமுகம் வரைந்த பாங்கையும் திருமுகத்திலுள்ள செய்திகளையும் விளக்குக.**

மணங்கமழும் மலர்க் கணைகளாலே எல்லா உயிரினங்களையும் அடக்கி ஆளும் தனிச்செங்கோலையுடைய வேந்தனாகிய காமவேளினது கட்டளையினால், ஒரு திசையிலன்றி நாற்றிசையிலுமுள்ள நாட்டில் வாழ்வோரெல்லாம் கைகுவித்து வணங்கி ஏற்றுக்கொள்ளுதற்குரிய அவனது அழைப்பிதழாகிய முடங்கலை வரைந்து போக்க எண்ணினாள். சண்பகப்பூவும் குருக்கத்திப்பூவும் பச்சிலையும் பிச்சிப்பூவும் மல்லிகைப்பூவும் வெட்டிவேரும் செங்கழுநீர்மலரும் உடைத்தாய்த் தான் அணிந்திருந்த கத்திகை என்னும் மலர்மாலையினது நடுவிடத்தே வைத்துக் கட்டப்பட்ட தாழை மலரின் வெள்ளிய இதழை ஏடாகக்கொண்டாள். பிச்சியின் அரும்பை எழுத்தாணியாகக் கொண்டு செம்பஞ்சுக் குழம்பில் அதைத்தோய்த்து எழுதினாள்.

'உலகத்தில் தோன்றி வாழும் உயிரினங்களை எல்லாம், மகிழ்தற்குக் காரணமான தம்தம் காதல் துணையோடு புணர்விக்கும் தொழிலையுடைய இளவேனிற் பருவத்து அரசன் மூத்த அறிவுடையனல்லன்; இளவரசனாவான். ஆதலால் அவன் நெறியறிந்து செய்யான் அவ்விளவரசனுக்குத் துணையாக அந்திமாலையென்னும் கரியயானையின் பிடரியில் ஏறிவரும் திங்களாகிய செல்வனும் நடுநிலையுடையன் அல்லன். ஆதலால் தம்முட்காதலால் கூடியிருக்கின்ற காதலர் தம்முள் ஊடிச்சிறிது பொழுதுகழிப்பினும், அன்றி ஓதல் முதலிய காரணம் பற்றிப் பிரிந்த காதலர் தாம்மேற்கொண்ட காரியத்தில் கருத்தூன்றித் தம்தம் துணையை மறப்பினும் அவ் இளவேனில் அரசன் தன்படைக்கலமாகிய மலரம்புகளாலே தனித்து உறைபவரின் உயிரைக்கைக் கொண்டுவிடுவான். இது அவனுக்குப் புதிய செயலன்று. இதனைப் பெருமானே அறிந்தருள்க'.

இவ்வாறு மாதவி, அறுபத்துநான்கு கலைகளும் தன்னிடம் பொருந்தி நடக்கவும், அவற்றுள் பண்ணும்

திறனும் உட்பகையாகிப் புறங்கூறுதற்குக் காரணமான தனது நாவினாலே, நிறையென்னும் கட்டு நெகிழ்ந் தமையாலே தன்நெஞ்சைச் சுட்டு உருக்கும் காமங் காரணமாக முதிராத தனது மழலைச் சொற்களாலே அவ்வேண்டுகோளைப் பேசிப் பேசி எழுதினாள்.

பிரிவாற்றாமையால் கவலையுற்ற மாதவி அவ்வந்தி மாலைப் பொழுதில் தன் தோழியாகிய வசந்தமாலையை அழைத்து, இந்த மலர்மாலையில் யான் வரைந்துள்ள சொற்களாலே தெளியப்படும் பொருளையெல்லாம் கோவலன் உளங்கொள்ளுமாறு எடுத்துச்சொல்லி இங்கு அழைத்து வருக என்று ஏவினாள். அம்மாலையை ஏற்றுக்கொண்டு வசந்தமாலை விரைந்துபோய்க் கடை வீதியிடத்தே அவனைக்கண்டு அம்மாலை முடங்கலையும் அதன்கண் பொதிந்த செய்திகளையும் அக்கோவலன் மனங்கொள்ளுமாறு கூறிக்கொடுத்தாள்.

49. வசந்தமாலை கொடுத்த திருமுகத்தை வாங்க மறுத்த கோவலன் கூறியவற்றைத் தெரிவிக்க (அல்லது) இளங்கோவடிகள் கோவலன் கூற்றாக வரிக்கூத்துக்களின் இயல்பினை விளக்கும்திறத்தை எடுத்துக்காட்டுக

மாதவி கொடுத்த மாலைத்திருமுகத்தை வசந்தமாலை வாங்கிவந்து கடைவீதிற் கோவலனைக்கண்டு அவனிடம் கொடுத்தாள். அவன் அதை வாங்க மறுத்தான். மறுத்ததுடன் நில்லாது மாதவியைப்பற்றிக் குறை கூறத்தொடங்கினான். 'அவள் இன்று மட்டுமன்று, பண்டுதொட்டு என்பால் நடந்த நடையெல்லாம் உண்மையல்ல; வெறும் நடிப்புக்களே என்று யான் இப்பொழுதுதான் உணர்கிறேன். அவ்வாறு அவள் நடித்த நாடகங்களில் சிலவற்றைக் கூறுகிறேன் கேள்' என்றுசொல்வான்போல் வசந்தமாலைக்குக் கூறத் தொடங்கினான். இளங்கோவடிகள் இக்கதை நிகழ்ச்சியை ஏதுவாகக் கொண்டு கோவலன் கூற்றாக வரிக் கூத்துக்களின் இயல்பினை விளக்குகிறார்.

கண்கூடுவரி :—வசந்தமாலையே! கேள். அந்த மாதவி, திலகத்தையும் கூந்தலையும் சிறியகரிய இரண்டு

விற்களையும் இரண்டு குவளை மலர்களையும் ஒரு குமிழ மலரையும் இரண்டு கொவ்வைக்கனிகளையும் தன்பாற் கொண்ட அழகிய ஒளிபொருந்திய முகத்தோடும் மதர்த்த நோக்கத்தோடும், அவள் மனையில் யான் புகுந்தபொழுது, யான் அழையாமலே முதன் முதலாக என்மேற் காதலையுடையவள்போலே என் முன்வந்து தோன்றி நடித்தது கண்கூடுவரி என்னும் நடிப்பாகும்.

காண்வரி :—கரிய நெடிய கண்ணையுடைய மாதவி தனது கூந்தலாகிய முகிலைச் சுமந்து அச்சுமையாற்ருது வருந்தி நிலாக்கதிர்களைப் பொழியும் தனது முகமாகிய திங்களிடத்தே தன் கண்களாகிய கயல்மீன்கள் மதர்த்துத் திரிகின்ற அழகிய செவ்வியுடையளாய், தனது வாலெயிற்று ஊறுகின்ற நீராகிய தேனைப் பொதிந்துள்ள தனது வாயிதழாகிய பவளப்பேழையைச் சிறிது திறந்து, ஒளியைத்தரும் எயிறுகளாகிய முத்துக்களின் பேரழகைச்சிறிது காட்டி, யான் வருக என்று அழைத்த பொழுதெல்லாம் காலந்தாழ்த்தலின்றி வந்தும், யான் செல்க என்று கூறியவுடனே தடையேதுமின்றிச் சென்றும் அவள் நடித்தது காண்வரி என்னும் கோலம் பூண்ட நடிப்பாகும்.

உள்வரி : யான் ஊடிப் பிரிந்து பின்னர் அந்தி மாலை வந்தபொழுது பிரிவாற்ருது மீண்டும் அவள் மனையில் புகுந்து ஏக்கற்றிருக்கின்ற எனது சிறுமையை அவள் அறிந்து, என்னை அசதியாடி நகைத் தற்பொருட்டுக் கிளிமொழி போன்ற மழலைச் சொல்லையும் அன்னத்தின் நடைபோன்ற அழகிய நடையையும், மயில் போன்ற சாயலையும் மறைத்தவளாய், ஏவல் மகளிர்க்குரிய கோலத்தைக் கொண்டு என் முன் வந்து நின்று நடித்தது உள்வரி என்னும் நடிப்பாகும்.

புறவரி: நுண்ணிடையை யுடையவளாகிய மாதவி தன் சிலம்புகள் வாய்விட்டு அரற்றவும், மேகலை ஆரவாரிக்கவும், காதலுடையவள்போல் நோக்கும் நோக்கத்தோடு என்பக்கத்திலே வந்து, யான்பிரிவாற்ருமையால் வருந்தியிருப்பதைக் கண்கூடாகக் கண்டிருந்தும் கூட என்னைத் தழுவாமல் ஏதிலாள் போன்று புறத்தே நின்று நடித்தது புறவரி என்னும் நடிப்பாகும்.

கிளர்வரி: யான் ஊடியிருந்தேனாக, அப்பொழுது தனது மலர்மாலையும் கூந்தலும் முத்துவடமும்கொங்கைகளும் தனது நுண்ணிடைக்குப் பொறையாகி வருத்தப் புறவாயிலிலே வந்து என்னெதிர் தோன்றிக்குற்றேவல் செய்யும் ஏவல் மகளிரே அவள் கூறும் சொற்களேஎனக்குக் கூற யான் அவற்றிற்குக் கூறும் மறுமொழிகளே அவட்குக் கூற, என்னூடல் காரணமாக யான் கூறிய அம் மறுமொழியில் இரண்டு பாலோர்க்கும் ஏற்பக்கூறும் பொருளேயுடைய மொழியாக வைத்து அதில் தன் கருத்திற்கேற்ற பொருளேக் கேட்டவள் போலக் காட்டி அப்பொருள் காரணமாக என்னுடன் புலந்து கூடாது மாறுபட்டு நடித்தது கிளர்வரி என்னும் நடிப்பாகும்.

தேர்ச்சிவரி: யான் அவளேப் பிரிந்து போய் வேறிடத்தே தங்க நேர்ந்த காலத்தில், பிரிவாற்ருது வருந்துபவளேப்போல் காட்டி, என் நெருங்கிய சுற்றத்தார்க்குத் தான் படுகின்ற மிக்க துன்பத்தைத் தன் மயக்கத்தால் ஆராய்ந்து ஆராய்ந்து சொல்பவளேப் போன்று நடித்தது தேர்ச்சி வரி என்னும் நடிப்பாகும்.

காட்சி வரி: முல்லேயரும்புகளால் புனேந்த மாலேயினேயுடைய மாதவி, காமநோய் மலரும் அந்தி மாலேப் பொழுதில் அந்நோயாற் பெரிதும் மயங்கியவள் போல என் சுற்றத்தாரைக் கண்டு அவர்களிடம் அத்துயரைக் கூறி நடித்தது காட்சி வரி என்னும் நடிப்பாகும்.

எடுத்துக்கோள்வரி: என் இளேஞர் முன்பு மேன்மேலும் என் பிரிவாற்ருது காமநோய் மிக்கு மயங்கி வீழ்வாள் போன்று வீழ்ந்து நடித்த பொய்யாய மயக்கத்தை அக்கிளேஞர் மெய்யாகக் கருதி அவளுக்கு இரங்கி எடுத்துத் தீர்த்தது எடுத்துக் கோள்வரி என்னும் நடிப்பாகும்.

இவ்வாறு கோவலன் வயந்த மாலேயிடம் கூறித் திருமுகத்தை வாங்க மறுத்தான். மறுத்து, அம்மாதவியானவள் பிறப்பினுலும் சிறப்பினுலும் நாடகம் ஆடும் ஆடல்மகளேயாதலின் அவள்பால் இந்நடிப் பெல்லாம் உண்மைபோலவே பெருமை பெற்றனவாகும், என்று இகழ்ந்து கூறினுன்.

50. 'ஆடல் மகளே ஆதலின் ஆயிழை
பாடுபெற்றன அப்பைந் தொடி தனக்கு'
—இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

விடைமேலே எடுத்துக் கோள்வரியில் காண்க. கோவலன் வயந்தமாலையிடம் மாதவியைப்பற்றி இகழ்ந்துரைத்த உரையாகும்.

51 'மாலை வாரார் ஆயினும் மாணிழை
காலைகாண் குவம்'—இடஞ்சுட்டிப் பொருள்விளக்கம் தருக

மாதவி அன்பு ததும்பத் தன் கையினால் எழுதிய அழகிய தாழை மடல் முடங்கலை வயந்தமாலை கொண்டு சென்று கோவலனிடம் கொடுக்க அதை வாங்க அவன் மறுத்து இழித்துரைத்தான். அவ்வாறு மறுத்ததனால் தன் தலைவியாகிய மாதவி எவ்வாறு ஆற்றுவாளோ என்று இரங்கி வாட்டமெய்திய வயந்தமாலை விரைந்து சென்று அச்செய்தியை மாதவிக்குக் கூறினாள். அது கேட்ட அம்மாதவி செய்வதொன்றும் தோன்றாது திகைத்த நெஞ்சினளாய் வயந்தமாலையை நோக்கி, வயந்த மாலையே! அவர் அங்ஙனம்கூறினும் இம்மாலைப் பொழுதிலேயே இங்கு வருவார். அப்படி இம்மாலையில் வாராதொழியினும் அவரை நாளைக் காலைப் பொழுதிலேயே உறுதியாக இங்கு நாம் காண்போம், என்று கூறித் தான் இருந்த அம்மலர்ப் படுக்கையிலேயே தன் கண் இமைகள் பொருந்தாமல்—உறங்காமல்—தமியளாய்க் கிடந்தாள்.

52. வேனிற்காதையின் இறுதியிலுள்ள வெண்பாக்களின் பொருளை எழுதுக

பொழில்களிடத்தே பூக்கள் நிறைதற்குக் காரணமான இளவேனில் என்னும் பெரும்பொழுது வந்தது. இப்பொழுது நீர் நிலைகளில் செந்தாமரை மலர்கள் மலரவும், மாமரங்களில் அழகிய தளிர்கள் தொங்கவும், அழகிய அசோக மலர்கள் இதழ் விரியவும் இளவேனில் வந்துற்றது. இற்றைநாளில் வேல்போன்ற அழகிய கண்களையுடைய மாதவியின் நெஞ்சம் எந்நிலையை அடையுமோ? அறியேன்.

இவ்வுலகில் காதல் வாழ்வு வாழ்ந்து இப்பொழுது ஊடியிருப்பவர்களாகிய நீங்கள் ஊடலைவிடுத்துக் கூடக் கடவீராக. காமவேள் என்னும் அரசன் கட்டளையாகும் இது என்று குயிலோன் கூவி அறிவிக்க, வந்துள்ள இவ்விள வேனிற் பொழுதின் கண் நின்னெடு கூடியிருந்த மாதவியினது தாழம்பூத்தோட்டில் எழுதப்பட்ட முடங்கலை அவள்பாடிய கானல்வரிப் பாட்டின்பொருட்டு ஊடிப் பிரிந்து வந்த கோவலனே காண்பாயாக. (இவ்விரண்டு பாடல்களின் கருத்தும் வயந்தமாலையால் கோவலன் பால் ஓலை கொடுக்கும் பொழுது கூறியதாம்.)

53 தேவந்தியின் வரலாற்றை சுருக்கி வரைக.

வேனிற் காலத்தின் ஒருநாள் மாலைப்பொழுதில் மகளிர் எல்லாம் தத்தம் மனையிடங்களில் முல்லை மலர்களை நெல்லோடு விரவித் தூவி, அழகிய விளக்குகளை ஏற்றி வைத்து இல்லுறை தெய்வத்தை வணங்கினர். பின்னர், அன்று இரவு தத்தம் கொழுநரோடு கூடி மகிழ்தற் பொருட்டு அதற்கேற்ற கோலங்களைக் கொண்டனர்.

முன்னொரு நாளில், மாலதி என்னும் பார்ப்பனி தனது மாற்ருள் ஈன்ற குழவிக்குப் பாலடையினலே பாலூட்டிய பொழுது ஊழ்வினை வயத்தால் பால்விக்கி அக்குழந்தை இறந்து பட்டது. அது கண்ட மாலதி ஐயோ! இதற்கு யான் என் செய்வேன்! இதையறிந்தால் என் கணவனும் அவன் மனைவியும் என் மேல் அடாப்பழியேற்றி என்னைத் தூற்றுவரே. அப்பழியை யான் எங்ஙனம் போக்குவேன் என்று தன்னுள் வருந்தி ஏங்கினள்.

ஏங்கி, அக்குழவியுடம்பைப் பிறர் அறியாவண்ணம் தன் கையில் ஏந்திக் கொண்டு, தேவர் தருவாகிய கற்பகம் நிற்கும் கோயில், ஐராவதம் என்னும் வெள்ளானை நிற்கும் கோயில், வெண்மையான திருமேனியையுடைய பலதேவர் எழுந்தருளியுள்ள கோயில், ஞாயிற்றுக் கோயில், அவ்வூரின் காவல் தெய்வமாகிய சம்பாபதிக் கோயில், வேற்படையேந்தும் முருகன் கோயில், வச்சிரப் படை நிற்கும் கோயில், நகர்ப்புறத்தில் வாழும்

மாசாத்தன் கோயில், அருகன் கோயில், நிலாக் கோயில் ஆகிய இக் கோயில் தோறும் சென்று புகுந்து, தெய்வங்களே எனது இத்துன்பத்தைத் தீருங்கள் என்று கூறி இரந்து நின்றாள். அவருள் ஒருவரேனும் அவளுக்கிரங்கி அவா தீர்க்கவில்லை. அதனால் பாசண்டச் சாத்தன் என்னும் ஐயனார் கோயிலுக்குச் சென்று தன் துயர் கூறி வரங்கிடந்தாள்.

அவ்வாறு வரங்கிடந்த மாலதி முன்னர், அப்புகார் நகரத்தில் சுடுகாட்டில் பிணங்களைத் தின்னும் இடாகினி என்னும் ஒரு பேய், அந்த இருளில் ஓர் இளநங்கை உருவங்கொண்டு சென்று அவளை நோக்கி, குற்றமற்ற பெண்ணே! செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரங் கொடார் என்னும் பழமொழி பொய்யன்று; ஆதலால் நீ இவ்வாறு பாடுகிடத்தல் பயனற்றது; எங்கே அந்தக் குழந்தையை இப்படிக் கொடு என்று கூறி அதை வலிந்து பறித்து விழுங்கிவிட்டாள்.

அது கண்டு மாலதி பெருந்துயர் கொண்டு, இடியோசை கேட்ட மயில்போல் ஏங்கி அழுதாள். அவளுக்குப் பரிந்து சாத்தனாகிய தெய்வம், தாயே நீ ஏங்கி அழாதே, நின் துயரத்தை யான் போக்குகின்றேன். நீ செல்லும் வழியில் அக்குழந்தையை உயிருடன் காண்பாய் என்று கூறி ஆற்றுவித்துப் பின்னர் அச்சாத்தன் இறந்துபோன குழந்தையின் உருக் கொண்டு சென்று அவள் செல்லும் வழியில் மாஞ்சோலையிற் கிடந்து அழுதான். மாலதியும் அவ்வாறே சென்று வழியிற் கிடந்து அழும் குழந்தையைக் கண்டு அது தன் குழந்தையேயென்று மகிழ்ந்து அன்புடன் எடுத்துத் தனது புடவையின் முன்றானையினால் மறைத்துக் கொண்டு போய்த் தன் மாற்றாள் கையிலே கொடுத்தாள்.

சாத்தனாகிய தெய்வம் இவ்வாறு மாலதியின் கணவனாகிய அந்தணனுக்கு மகனாக வளர்ந்து, பிரமசரிய நிலை எய்தி, கல்வி கேள்விகளில் வல்லவனாகி, அவ்வந்தணன் முதலிய முதுகுரவர்கள் இறந்தபின்னர், அவர்கட்குச் செய்யவேண்டிய இறுதிக் கடன்களைச் செய்து

முடித்தான், முடித்துப் பொருள்பற்றித் தன் தாயத்தா ரோடு உண்டான வழக்கில் வென்று தேவந்தி என்னும் பார்ப்பனியை மனைவியாகக் கொண்டு இல்லறத்தை இனிதே நடத்தினன்.

இவ்வாறு வாழும் நாளில் சாத்தன் மீண்டும் தன் தெய்வத் தன்மையை எய்த நினைத்து, அத்தேவந்தியி னுடைய மலர்போன்ற கண்கள் பொறுத்துக்கொள்ளும் அளவு தன்னொளியை அமைத்துக் கொண்டு அவள் பாற் சென்று தன் மூவா இள நலத்தைக் காட்டி இனி நீ எமது கோயிலுக்கு வந்து எம்மைக் காண்பாயாக என்று அவளைத் தேற்றி, அம்மாய உருவினின்றும் நீங்கித் தெய்வமாய் மறைந்தான்.

அத்தேவந்தியும் அத்தெய்வத்தின் செயலைப் பிறர் அறியாவண்ணம் மறைத்தற்காக, தெய்வமே! என்கண வன் இந்நாட்டில் எங்கும் சென்று ஆங்காங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஆடிவருவதற்காக என்னைத் துறந்து போயினன்; அவனை மீட்டும் இவ்விடத்தே கொண்டுவந்து தருவாயாக என்று வேண்டுதலாகிய ஒரு போலிக் காரணத்தைக் காட்டி நாள்தோறும் அச் சாத்தன் கோயிலுக்குச் சென்று வழிபட்டுக் கொண்டி ருந்தாள்.

**54. கண்ணகி தான் கண்ட கனவைத் தேவந்திக்குக் கூறியதையும் அதற்கு அவள் கூறிய ஆறுதல் மொழிகளையும் எடுத்துரைக்க.**

கண்ணகிக்குத் தோழி தேவந்தி. தேவந்தியான வள் தன் தோழி கண்ணகிக்குக் கணவன் பிரிந்ததால் துன்பமுண்டென்று வருந்தி, அவள் துயரம் தீரும் பொருட்டுச் சாத்தன் கோயிலை யடைந்து அறுகம்புல்லை யும் சிறுபூளைப் பூவையும் நெல்லோடு கலந்து அச்சாத் தன் திருவடியில் தூவி வணங்கிய பின்னர்க் கண்ணகி பாற் சென்று, அன்புடையோய் நீ நின்னைப் பிரிந்த கணவனோடு கூடி வாழ்வு பெறுவாயாக என்று வாழ்த் தினள்.

அதுகேட்ட கண்ணகி தேவந்தியை நோக்கி, தோழியே! நின் வாழ்த்துரையின் படியே யான் என்

கணவனோடு பல நலங்களையும் பெறுவேன். அதுநிற்க, என் நெஞ்சமானது நேற்று வைகறைப் பொழுதில் யான் கண்டதொரு கனவு காரணமாக அத்தகைய நலத்தை அடைவேனோ அடையேனோ என்று ஐயுறு கின்றது. அக்கனவானது, என் கணவன் அன்புடன் வந்து என் கையைப் பற்றினன். யாங்களிருவரும் சென்று ஒரு பெரிய நகரத்தில் புகுந்தோம். புகுந்த அவ்விடத்தே அவ்வூர்வாழும் மாந்தர் எமக்குப் பொருந் தாததொரு சொல்லை இடுதேள் இடுதல் போல என் மேலிட்டுப் பின்னரும் அது காரணமாகக் கோவலனுக் கும் ஒரு தீங்குற்றது என்று சிலர் சொல்லக் கேட்டேன். கேட்டு அது பொறாமல் அந்நகரத்து அரசன் முன்னர்ச் சென்று வழக்குரைத்தேன். அதனால் தீங்குற்ற அரச னோடன்றி அவ்வூருக்கு உற்ற தீங்கும் ஒன்றுண்டு. அத் தீங்கை யான் நினக்குக் கூறேன். இவ்வாறு கொடிய குற்றம் எய்திய என்னோடு பொருந்திய பெருந் தகையாளனோடு யான் பெற்ற நன்மைகளின் இயல்பை நீ கேட்பாயானால் அது நினக்கு நகைப்பையே உண் டாக்கும். ஆதலால் அவற்றையும் கூறேன் என்று சொன்னாள்.

அவ்வாறு கண்ணகி கூறிய கனவைக் கேட்ட தேவந்தி,தோழி கண்ணகியே! நீ கண்ட இக்கனவினால் நெஞ்சம் கலங்காதே! நீ நின் கணவனால் வெறுத்துக் கைவிடப்பட்டாயும் அல்லை. நின்னுடைய பழம் பிறப் பில் நீ மேற்கொள்ளத் தக்க ஒரு நோன்பில் தவறு செய்துள்ளனை போலும். அதனால்தான் நீ இப்பிறப் பில் இங்ஙனம் கணவனைப் பிரிந்து உறைகிறாய் போலும். அத்தவறு இத்துடன் தொலைந்து ஒழிவதாக. காவிரியாறு கடலோடு சேரும் இடத்தின் அயலே மணம் பரப்பும் சோலையில் இரண்டு குளங்கள் உள்ளன. சோம குண்டம், சூரிய குண்டம் என்ற அப்புண்ணிய தீர்த்தங்களில் முழுகி அங்குள்ள காமவேள் கோயிலிற் சென்று காமக் கடவுளைக் கை கூப்பி வணங்கும் மகளிர் இப்பிறவியில் தம் கணவரோடு பிரிவின்றிப் பேரின்பம் எய்துவர். மறுமையில் போக பூமியிலும் தம் கணவ

ரோடு போய்த் தேவராய்ப் பிறந்து பேரின்பம் நுகர்வர். ஆதலால் யாமும் ஒருநாள் ஆங்குச் சென்று அத்தீர்த் தங்களில் ஆடுவோம் என்று கூறினள். அதுகேட்ட கண்ணகி அங்ஙனம் துறை மூழ்கித் தெய்வம் தொழு தல் எம்மனோர்க்கு இயல்பன்று என்று கூறி மறுத்து விட்டாள்.

55. கோவலன் வருகையும், அவன் கண்ணகிக்குக் கூறியனவும், மதுரை புறப்பாடும் பற்றி விளக்குக.

தேவந்தியும் கண்ணகியும் பேசிக் கொண்டிருந்த பொழுது ஒரு குற்றேவல் செய்பவள் வந்து கண்ண கியை நோக்கி, நம் பெருமானாகிய கோவலன் இதோ வந்து நம் இல்லத்தின் வாயிலில் நிற்கிறான் என்றாள். அப்பொழுது கோவலன் இல்லத்துட் சென்று பள்ளி யறையுள் புகுந்து, தன் காதலியாகிய கண்ணகியின் மேனி வாடியிருப்பதைப் பார்த்து, எல்லாவற்றிலும் பொய்யை மெய்யாகக் கொண்டொழுகும் மாயத்தாளா கிய மாதவியோடு கூடி ஆடிய எனது தீயொழுக்கம் காரணமாக நம் குலத்து முன்னோர் தேடி வைத்த குன் றனைய செல்வமெல்லாம் தொலைந்தொழிந்தன. அத னால் உண்டான நல்குரவு எனக்குப் பெரிதும் நாணைத் தருகின்றது என்று கூறி வருந்தினான்.

கணவனுடைய துன்ப மொழிகளைக் கேட்ட கண் ணகி அவன் கருத்தை மாற்றாத கொள்கையினுடையா ளாதலின், கோவலன் மாதவிக்குக் கொடுக்கும் பொருள் முட்டுப்பாட்டினாலே இங்ஙனம் கூறினான் எனக் கருதி அத்துயரைத் துடைக்க எண்ணித் தன் முகத்திலே தோன்றிய புன்னகையைக் காட்டி, அன்புடையீர் இன் னும் என்பால் ஓர் இணைச் சிலம்பு உள; அவற்றைக் கொள்ளுங்கள் என்று கூறினாள்.

அதுகேட்ட கோவலன் அவட்குப் பரிந்து சேயி ழையே! யான் கூறுவதைக் கேள். நீ சொன்ன அச் சிலம்பை வாணிகத் தொழிலுக்கு முதலீடாகக் கொண்டு புகழ் பெற்ற மதுரைமா நகரம் சென்று வாணிகம் செய்து யான்முன் அழித்த அணிகலன்களையும் பொருள்

களையும் தேடித் தொகுக்கத் துணிந்துள்ளேன். அதற்கு நீ இப்பொழுதே என்னோடு எழுந்து வருவாயாக என்று சொல்லிக் கதிரவன் இருளைப் போக்கி எழுதற்கு முன்பாக வைகறைப் பொழுதிலே, முற்பிறப்பில் தான் செய்த தீவினை தன் நெஞ்சை ஒருப்படுத்தியதால் அவ்வினை தன் நெஞ்சத்துள் ஏவிய செயலை மேற்கொண்டு புறப்பட்டான்.

கண்ணகி கண்ட கனவானது, மாதவி வயந்த மாலைக்குக் 'காலை காண்குவம்' என்று கூறிய சொல்லைப் பயனற்றதாகச் செய்துவிட, கோவலனின் பழவினை தூண்டப் புகாரை விட்டுப் புறப்பட்டான்.

56. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

(அ) 'ஆசிலாய், செய்தவமில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்
பொய்யுரையே யன்று பொருளுரையே'

(ஆ) 'ஆர்த்த கணவன் அகன்றனன் போயெங்கும்
தீர்த்தத் துறைபடிவே னென்றவனைப் பேர்த் திங்ஙன்
மீட்டுத் தருவாய்'
(விடை எண் 53ல் ஏற்பன கொள்க)

(இ) 'உற்றேனொடுற்ற உறுவனோடியானுற்ற
நற்றிறங் கேட்கின் நகையாகும்'
(விடை எண் 54ல் காண்க)

(ஈ) 'சலம்புணர்க் கொள்கைச் சலதியோடாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத்தரும் எனக்கு'
'சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு
உலந்த பொருள் ஈட்டுத லுற்றேன்'
(விடை எண். 55ல் ஏற்பன கொள்க)

57. கோவலனும் கண்ணகியும் பூம்புகாரை விட்டுப் புறப்பட்ட நிலையை விளக்குக. (நாடுகாண் காதை)

கதிரவன் தோன்றுமுன் வைகறை யாமத்தில் திங்கள் வானத்தின் மேற்றிசையில் சென்று மறைந்து விட்டமையால் கரிய இருள் படர்ந்த இரவில், கோவலனது தீவினை செலுத்துதலால், ஆட்டுக் கிடாயும் கவரி

மானும் அன்னமும் திரிதற்கிடமான நெடிய இடை கழியைக் கடந்து சென்று, அவ்விடத்தே பாம்பணைமீது அறிதுயில் கொண்டுள்ள திருமாலினது கோயிலை வலஞ் செய்து அவ்விடத்தினின்றும் போய், புத்தப்பெருமான் அருளிய பிடக நூற் பொருள்களைச் ~~சாரணர்~~ உலக மக்களுக்கு எடுத்துரைக்கும் இடங்களான புத்தாலயத்தின் மருங்கே இந்திரனால் இயற்றப்பட்ட அரங்குகள் ஏழனையும் வலத்தே வைத்து அவ்விடத்தினின்றும் சென்று, புலால் உணவைத் துறந்து பொய் கூறுமையாகிய நோன்போடு பொருந்தி, அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் முதலிய இழுக்குகளை ஒழித்து மெய்ப் பொருளை ஆராய்ந்து, பொறிகளைப் புலன்களின்பாற் போகவிடாது அடக்கிய சிறந்தோர் கூடியுறைதற்கு இடமான அருகன்கோயில் மருங்கில் ஐந்துவகைப்பட்ட பரமேட்டிகளும் உறைதலால் ஐந்தாகிய சந்திகளும் பொருந்தியிருக்கும் மிகப் பெரிய மன்றத்திடத்தே அசோகினது அழகிய நீழலின் கண்ணே அருகக் கடவுளைத் திருமுழுக் காட்டி அழகுசெய்யும் விழாக் காலத்தும், தேரோடுகின்ற திருவிழாக்காலத்தும் சாரணர்கள் வரத்தகும் என்று கருதி உலக நோன்பிகளாகிய இல்லறத்தார் எல்லாம் கூடி அச்சாரணர்கள் வந்தால் தங்கி அறமுரைத்தற்காக அமைத்திட்ட ஒளிமிக்க சந்திரகாந்தக் கல்லாலியன்ற மேடையினை வலஞ் செய்து சென்றனர். சென்று, ஊர்ப்பொதுவாயிலை விட்டு நீங்கி, காமவேள் சோழமன்னனுக்குச் செலுத்தும் இறைப்பொருளாகிய வேனிற்பருவத்தையும் இளந்தென்றலையும் கொணர்ந்து செலுத்துமிடமாகிய அழகிய மரநிழலையுடைய இலவந்திகை எனப்படும் அரசனும் அவன் உரிமைச் சுற்றத்தாரும் ஆடுதற்கியைந்த மலர்ப்பூம் பொழிலின் மதிற்புறத்தே போய்க் காவிரியாற்றில் மாந்தர் நீராடச் செல்லுதற்கமைந்த இருமருங்கும் பூமரச்சோலை சூழ்ந்த பெரிய வழிமேற் சென்று நீராட்டு வாயிலாகிய திருமுகத் துறையிடத்தையும் கடந்து போயினர்.

அப்பால் வளவிய நீரையுடைய காவிரியினது பெரிய வடகரைக்கண்ணுள்ள பெரிய பொழிலினூடே

நுழைந்துபோய் ஒரு காவதத் தொலைவழியை நடந்து போய்ச் சோலையினூடே யமைந்த கவுந்தியடிகள் உறைகின்ற தவப்பள்ளியை எய்தினர். அப்பொழுது கண்ணகி வழிநடந்த களைப்பால் வருந்திப் பன்முறை உயிர்த்துக் கோவலனை நோக்கித் தனது பவளவாய் திறந்து மதுரை என்னும் அப்பழைய ஊர்தான் யாதோ என்று தனது பெண்மைப்பண்பு தோன்ற வினவினள். அதுகேட்ட கோவலன் அவட்குப்பெரிதும் இரங்கி மணம் வீசும் கூந்தலையுடையாய்! நம் அகன்ற சோழநாட்டிற்கு அப்பால் ஆறைங்காவதத்தில் உள்ளது மதுரை; இனி அணித்தேதான் என்று கூறி நகைத்தான்.

58. ஆறைங்காதம் நம் அகனாட்டும்பர்
நாறைங்கூந்தல் நணித்து—இடஞ்சுட்டி விளக்குக.

விடை, எண் 57ல் காண்க.

59. கோவலன் கவுந்தியடிகளைக் கண்டதையும் அவர் கூறிய பரிவுகளையும் விளக்குக.

கண்ணகியோடு கோவலன் பூமரச்சோலையில் புகுந்து தவப்பள்ளியிலிருந்த கவுந்தியடிகளைக் கண்டு அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நிற்ப, அழகும் உயர்குடிப் பிறப்பும் நல்லொழுக்கமும் அருகக் கடவுள் மொழிந்த நோன்புகளிற் பிறழாமையும் ஆகிய இவற்றையெல்லாம் உடைய மேன்மக்களாகிய நீவிர் தீவினையாளர் போன்று இல்லந்துறந்து இவ்வாறு வருதற்குக் காரணந்தான் யாதோ? என்று அடிகள் வினவினர்.

அதற்குக் கோவலன், மிக்க தவத்தையுடைய பெரியீர்! தங்கள் வினாவிற்கு விடைகூறும் நிலையில் யான் இப்பொழுது இல்லை. ஆயினும், யான் கூறுவது ஒன்று உண்டு. யான் மதுரைக்குச் சென்று வாணிகஞ்செய்து பொருளீட்ட வேண்டும் என்னும் வேட்கையுடையேன் ஆதலின் இங்ஙனம் வரநேர்ந்தது என்று கூறினன்.

அதுகேட்ட கவுந்தியடிகள் கண்ணகியைக் கூர்ந்து நோக்கி, இவளுடைய மெல்லிய சிறிய அடிகள் பருக்கை

கற்களால் உண்டாகும் துன்பத்தைப் பொறுக்கமாட்டாவே. நீர் செல்லக்கருதிய மதுரைக்குச் செல்லும் வழியோ காடும் நாடும் இடையிட்ட நெடுவழியாகும். நுங்கள் குடிப்பிறப்பிற்கும் இச்செலவு உரியதாகாது. இச்செலவை ஒழியுங்கள் என்றாலும் ஒழியீர். ஆகவே உங்கள் ஊழ்வினை என் செய்யுமோ? அதனை யாரே அறியவல்லார்? அது நிற்க; மனமாசுகள் அறுதற்குக் காரணமான அருகன் அருளிச் செய்த மெய்ந்நூலை யுணர்ந்த சான்றோரை அடுத்து அவர்பால் அறவுரைகளைக் கேட்டு உணர்ந்து இறைவனை வழிபாடு செய்தற் பொருட்டு யானும் அம்மதுரை மாநகர்க்குப் போதல் வேண்டும். ஆதலின் யானும் வருகின்றேன் நீங்களும் வாருங்கள் என்று கூறினார்.

அதுகேட்ட கோவலன் கவுந்தியடிகளைக் கைகூப்பி வணங்கி, அடிகளே நீரே இவ்வாறு எமக்கு வழித்துணையாக வந்தால், இவ்வளையலணிந்த தோளையுடையாளின் துயரெல்லாம் தீர்ந்ததன்றோ என்று மகிழ்ந்து கூறினான்.

60. தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்கு
ஒன்றிய உள்ள முடையே னாகலின்
போதுவல் யானும் போதுமின்'—இடஞ்சுட்டிப்
பொருள் விளக்கம் தருக.

விடை, எண் 59ல் காண்க.

61. கவுந்தியடிகள் வழியனது ஏதம் கூறிய வகையை விளக்குக.

மதுரைக்குக் கவுந்தியடிகளும் வருவதாகக் கூறியதைக் கேட்ட கோவலன் மகிழ்ச்சியடைந்தான். அது கண்ட கவுந்தியடிகள் கோவலனை நோக்கி யாம் போக இருக்கும் இவ்வழியில் செல்வார்க்கு வருத்தம் தருவன பல உண்டு. வெயிலின் வெப்பத்தைத் தாங்கமாட்டாத இவளை அழைத்துக்கொண்டு இவ்வடகரைப் பொழிலினூடே புகுந்து சென்றால், அவ்விடத்தே வள்ளிக் கிழங்கை அகழ்ந்துகொண்ட குழிகளைச் சண்பக மரங்களிலிருந்து உதிர்ந்த பழம் பூக்கள் நிரம்பிப் பொய்க்

குழிப்படுத்து, அவற்றை அறியாது இயங்கும் மக்களுக்குப் பெருந்துன்பத்தைச் செய்யினும் செய்யும். அத்தகைய பொய்க்குழிகளை மிதியாமல் செல்லும் பொருட்டு நிலத்தை நோக்கி விழிப்புடன் செல்வோரை முதிர்ந்த பலாப்பழங்கள் மரத்திலிருந்து தலையின்கண் மோதினும் மோதும். இனி அவற்றிற் கஞ்சி வெளியிடத்திற் செல்வோமாயின், மஞ்சள் இஞ்சி முதலியவை தம்முள் மயங்கிய தோட்டங்களில் அவற்றின் முளைகளும் பலாவின் விதைகளும் இவள் மெல்லடிக்குப் பகையாய் உறுத்தினும் உறுத்தும்.

இத்துன்பங்கட்கு அஞ்சி இவ்வழியை விடுத்து வயல் வழியே போவோமாயின், தாமரை முதலிய மலர் மணங்கமழும் குளங்களிலே மீனை வேட்டையாடும் நீர் நாய் கயல் மீன்களை ஓட்டித் தன் வாயில் கௌவிய வாளைமீன் அதன் வாயிலடங்காமல் துள்ளி அயலிலுள்ள கழனியில் நாம் செல்லும் வழிக்குக் குறுக்காகப் பாயும். பாய்ந்தால் இவள் நெஞ்சம் துணுக்குற்றுக் கலங்குதலும் உண்டு.

மேலும் அங்கு வளர்ந்துள்ள கரும்புகளில் இருக்கும் தேனடைகள் காற்றினல் சிதைவுற்றுத் தேன் ஒழுகி ஓடி நீர் நிலையின் தூய நீரோடு கலந்துவிடும். அதனை அறியாமல் தணியாத நீர் வேட்கையால் நீவிர் நுமது கையால் முகந்துகொண்டு பருகவும் கூடும்.

கழனிகளில் களைபறிப்பவர் பறித்து வரப்பிலிட்ட குவளைப்பூவுடனே அப்பூவுக்குள் இருக்கும் வண்டினமும் கிடப்பதை நீவிர் வழி நடந்ததனல் உண்டான துன்பம் காரணமாக மயங்கி அறியாமல் அவற்றின்மேல் அடியிடவும் கூடும்.

அன்றியும், யாம் நீரையுடைய பெருவாய்க்காலின் கரையின் மேற் செல்லும்பொது அக்கரையிடத்தே நண்டும் நத்தையும் ஆகிய சிற்றுயிர்கள் இருக்குமிடங்களை நோக்கி ஒதுங்கி நடத்தலின்றி அவற்றின்மேல் அடியிட்டு நடத்தலும் கூடும். அச்சிற்றுயிர்கள் நம்மாலடையும் துன்பத்தை நாம் காணின் அக்கொலைத் துன்பத்தை நம்மால் பொறுக்கவும் முடியாது.

இத்தகைய துன்பத்திற்குக் காரணமான வயல் வழியும் சோலை வழியும் அல்லது இவற்றிற்கு வேருக நாம் செல்லும் வழியும் அங்கு இல்லை. ஆதலால் யாம் செல்லும் பொழுது அத்தகைய துன்பந்தரும் இடங்களைக் குறிப்பால் அறிந்து அத்துன்பம் வராதபடி நின் மனைவியுடன் நீ விழிப்புடன் நடப்பாயாக.

இவ்வாறு கோவலனுக்குக் கூறிய கவுந்தியடிகள் பிச்சைப் பாத்திரத்தையும் தோளிலிடும் உறியையும் கையிற்கொள்ளும் மயிற்பீலியையும் எடுத்துக்கொண்டு மறைமொழிக்குப் பொருளாகிய தெய்வமே நமக்கு வழித்துணையாகுக என்று இறைவனை நினைந்து புறப்படக் கோவலனும் கண்ணகியும் அவரைத் தொடர்ந்து புறப்பட்டனர்.

**62. கவுந்தியடிகளின் சமணசமயக் கொள்கைகள் வெளிப்படுமாற்றை விளக்குக.**

**விடை, எண் 61ல் காண்க.**

**63. இளங்கோவடிகள் கூறும் காவிரி நாட்டின் வளத்தை விளக்குக. (அல்லது)**
**கவுந்தியடிகளும் கோவலனும் கண்ணகியும் கண்டுசென்ற காவிரி பாயும் சோழநாட்டின் வளத்தை விளக்குக.**

காவிரிக் கரையின் வடக்குக் கரையிலிருந்த தவப் பள்ளியிலிருந்து கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் ஆகிய மூவரும் மேற்கு நோக்கிச் சென்றனர். செல்லுங்கால் சோழநாட்டின் வளத்தைப் பார்த்துக் கொண்டே சென்றனர்.

சனிக்கோள், இடம் சிங்கம் மீனம் ஆகியவற்ரேடு மாறுபடினும், விசும்பில் தூமக்கோள் தோன்றினுலும், வெள்ளிக்கோள் தெற்கில் பெயரினும், குடகுமலையில் பருவ முகில் தன் மழை வளத்தைத் தருதலால் காவிரியில் புதுப்புனல் வெள்ளம் வரும். வாய்த்தலைக்கு இட்ட கதவின் மீது எழுந்து குதித்தலினுல் எழுகின்ற அப் புதுப்புனல் ஒலியெங்கும் எழும். அதுவன்றி ஆம்பியும் கிழாரும் ஏத்தமும் பிழாவும் என்ற நீர் இறைக்குங்கருவி

கள் ஒருநாளும் ஒலித்தல் இன்றி வாய்க்கால்களில் நீர் நீர் நிரம்பி ஓடும்.

அத்தகு சிறப்புடைய கழனிகளிடத்தே செந்நெற் பயிரும் கரும்புகளும் சூழ்ந்த மருத நிலத்தில் நீர் நிலைகளில் செழித்த தாமரைக் காட்டின்கண் சம்பங்கோழியும் நீர்க்காக்கையும் உள்ளானும் குருவையும் கணந்துட் புள்ளும் பெருநாரையும் பிறவுமாகிய நீர்ப்பறவைகள் பலவும் செய்கின்ற, பகையரசர் இருவர் போரிடுதற் கமைந்த போர்க்களத்திலெழும் ஒலிபோலப் பல்வேறு வகைப்பட்ட ஒலிகள் எழுந்தன.

உழவரால் உழப்படாமல் எருதுகளும் உழவரும் பிறரும் இயங்குதலால் பட்ட நுண்ணிய சேற்றினுள் சென்று அழுந்திச் சேறு படிந்த எருமை தனது முதுகினை உராய்தலானே வைக்கோற் புரிதேய்ந்து அற்றுப் போன நெல் கூட்டினின்றும் சரிகின்ற நெல் விளைந்து கிடக்கின்ற புதிய செந்நெற் கதிரின் மேலே சொரியும். அவ்வழியே செல்லும் உழவர்கள் அதைக் கண்டு எருமையை ஓட்டுவதற்குச் செய்யும் ஆரவாரம் ஒருபால் எழுந்தது.

கயல் போன்ற கண்களையுடைய உழத்தியர் உழவர் முடிந்து போட்ட நாற்று முடியின் கண் நாற்றை நறுக்கித் தமதுகொண்டையிலே செருகிக்கொண்டு வளையலை யணிந்த தோளிலும் கொங்கைகளிலும் சேறுபட்ட கோலத்தோடு அழகுறத் தோன்றி வெவ்விய கள்ளைப் பருகியதனால் அறிவு மயங்கிப் பாடுகின்ற பண்ணோடு பொருந்தாத பாட்டொலி ஒருபால் எழுந்தது.

பொன்னிறமான செந்நெற்கதிரோடே அறுகம் புல்லையும் குவளை மலரையும் விரவித்தொடுத்த மாலையை மேழியிலே சூட்டி நிலத்தை இரண்டாகப் பிளப்பவர் போன்று கடவுள் வாழ்த்துக் கூறித் தொழுது பொன்னேர் பூட்டி நின்ற உழவர் எருதுகளைத் தூண்டியோட்டுங்கால் பாடும் ஏர்மங்கலப் பாட்டின் ஆரவாரமும் எழுந்தது.

நெல்லையரிந்து போர் செய்தோர் சூட்டைக் கடா விட்ட பின்னர் அந்நெல்லை முகந்து தூற்றுபவர் பாடுகின்ற முகவைப் பாட்டொலியும் எழுந்தது.

தெளிந்த ஓசையெழும் தடாரியையுடைய பொருநர் கள்ளுண்ட செருக்கோடு தோற்றுவித்த மார்ச்சனையை யுடைய திரண்ட முழவினது ஒலியும் எழுந்தது.

பெரிய அக்காவிரியாற்றின் கரையிலே இத்தகைய இனிய ஒலிகளை முறையேகேட்டு மகிழ்ந்து மேலும் கேட்க ஆர்வமுற்ற நெஞ்சத்தோடு வழி நடத்தலால் உண்டாகும் துன்பத்தைக் காணாராய் நடந்து சென்றனர்.

**64. கவுந்தியடிகளும் கண்ணகியும் கோவலனும் காவேரிக் கரைவழியே நடந்தபொழுது கேட்ட பல்வேறு ஒலிகளையும் விளக்குக.**

விடை, எண் 63ல் காண்க.

**65. காவிரிக் கரையிலுள்ள ஊர்களின் சிறப்பை இளங் கோவடிகள் கூறுமாறு யாங்ஙனம்?**

புலிக்கொடியையுடைய சோழ மன்னனுக்கு வெற்றியையும், மழைக்குக் கருவையும் தோற்றுவிக்கும் வேள்விக் களத்திலே மறையோரால் உண்டாக்கப்பட்ட அவியினது நறுமணம் கமழும் புகை உயர்ந்த மாடமாளிகையெங்கும் போர்த்தலானே, முகிலால் சூழப்பட்டமலைகள் போன்று மாட்சிமையுடன் தோன்றும் அம் மறையவர்களுடைய இருப்பிடங்களாகிய ஊர்கள் பல இருந்தன.

காவிரி நங்கையின் மக்களும் உழவுத் தொழில் செய்வோரும் ஆகிய வேளாண் மாந்தர் வாழ்கின்ற, தூற்றாத பொலியாகிய நெற்குவியல்கள் கரும்பாலையின் கண் பாகு காய்ச்சுவதனால் எழுகின்ற புகையாலே பரக்கப்பட்டு முகில் தவழ்ந்த மலைகள் போல் தோன்றும் பழைய ஊர்கள் பல இருந்தன.

இவ்வகைப்பட்ட ஊர்களை இடையிட்ட காவிரி நாட்டின் அழகையெல்லாம் கண்களிக்க ஒருசேரக் கண்டு இனிதே சென்றனர். ஒருநாளில் ஒரு காவதத்

தொலையைக் கடந்துசெல்வதன்றி மிகுதியாகச் செல்லாராகி இடையிடையேஉள்ள ஊர்களில் தங்கிஇளைப்பாறி இவ்வாறு பலநாள் சென்றனர்.

66. சாரணர் வருகையும் கவுந்தியடிகள் வணங்கலும் புகழ்தலும் பற்றி இளங்கோவடிகள் கூறியுள்ளதை விளக்குக.

கவுந்தியடிகள் கோவலன் கண்ணகி ஆகிய மூவரும் மதுரை நோக்கிக் காவிரியின் வடகரை வழியே சென்றபொழுது திருவரங்கத்தின் மருங்கே சென்றனர். திருவரங்கத்தின் பக்கத்தில் வளைந்தமூங்கில் வேலியாற் சூழப்பட்ட மாவும் பலாவும் முதலிய பயன்மிக்க மரங்கள் மிகுந்த சோலையின் ஓரிடத்தே, சமயத் தலைவர்கள் பலரும் ஒருங்குகூடிச் சாரணர் வந்து தங்குதற்கு ஏற்பச் சந்திரகாந்தக் கல்லால் இயற்றிய மேடையின் மீது அமர்ந்தருளி, அருகக் கடவுளால் செய்யப்பட்ட மெய்ப் நூலின்கண் அமைந்த அறவொழுக்கங்களை யாவரும் கேட்டுணரும்படி எடுத்துரைக்கும் சாரணர் பட்டினப் பாக்கத்தைவிட்டு நீங்கி வந்து கவுந்தியடிகள் முதலிய இவர்கள் முன் தோன்றினர்.

அச்சாரணர் வருகையைக் கண்டறிந்த கவுந்திஅடிகளோடு கோவலனும் கண்ணகியும் தங்கள் பழவினை கெடுகஎன்று அச்சாரணர் திருவடியிலே வீழ்ந்து வணங்கினர். அவ்வாறு வணங்கியவர்கள் அங்கு வருதற்குரிய பழவினையையும் அவ்வினை மேலும் வந்து அவர்கட்கு ஊட்ட இருக்கும் துன்பங்களையும் அச்சாரணர் தலைவன் ஞானத்தால் நன்கு தெரிந்து கொண்டான். அங்ஙனம் தெரிந்தவனாயினும் விருப்பும் வெறுப்பும் நீக்கிய ஆண்மையாளனாகலின் அவர்களுக்காக அவன்வருந்தவில்லை.

கோவலனும் கண்ணகியும் அறியாவண்ணம் அச்சாரணர் தலைவன் கவந்தியடிகளை நோக்கி அவர் குறிப்பாக உணருமாறு, பெரியதவச் சிறப்புடைய கவுந்தியே! முன்பு செய்த பழவினையானது எத்தகையோராலும் ஒழிக்க ஒழியாது தன் பயனை நுகர்விக்கும் என்னும் வாய்மையினையும், அப்பழவினை உரியகாலத்தில்உருத்து

வந்து ஊட்டும்பொழுது அதனை எத்தகைய சூழ்ச்சியாலும் தவிர்க்க முடியாது என்னும் வாய்மையினையும் இவர்கள் வாயிலாய்க் காட்சியளவையால் நீ கண்டு கொள்வாயாக. காற்றுவீசும் வெட்டவெளியில் ஏற்றி வைத்த விளக்குப் போன்று அப்பழவினை வந்து மோதியபொழுது உயிர்கள் தாம் எடுத்த உடம்போடு கூடி நிற்கமாட்டா.

அறிவன் அறவோன் அறிவுவரம்பு இகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் தேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தில் ஒளியோன்
தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்மல் திகழ்ஒளி
இறைவன் குரவன் இயல்குணன் எங்கோன்
குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்
சங்கரன் ஈசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோன் அருகன் அருள்முனி
பண்ணவன் எண்குணன் பாத்துஇல்பழம்பொருள்
விண்ணவன் வேதமுதல்வன் விளங்கொளி

ஆகிய அருகப்பெருமான் அருளிச்செய்த ஆகமமாகிய விளக்கொளியைப் பெற்றாலல்லது பிறவியாகிய சிறையிடைப்பட்ட மாந்தர் அதனின்றும் வீடுபெறுதல் இலர் என்று சொல்லி அறிவுறுத்தினன்.

இங்ஙனம் சாரணர் தலைவன் கூறக்கேட்ட கவுந்தியடிகள் அன்பினால் நெஞ்சம் நெகிழ்ந்து தம் கைகளைக் குவித்து வணங்கிப் பெரியீர்! காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றங்களையும் கொடுத்தவனாகிய இறைவனால் அருளப்பட்ட திருமொழியைக் கேட்பதற்கல்லது பிறரால் ஓதப்பட்ட மயக்குரைகளைக் கேட்டற்கு என் செவிகள் திறக்கமாட்டா. என் நாவானது காமனை வென்ற அக்கடவுளுடைய ஆயிரத்தெட்டுத்திருப்பெயர்

களை ஓதிமகிழ்வதல்லது பிறிதொரு கடவுளின் பெயரை ஓதாது என் கண்கள் ஐம்பொறிகளை வென்ற அருகக் கடவுளுடைய திருவடிகளைக் கண்டு களிப்பதல்லது பிறிதொரு கடவுளின் அடிகள் என் கையகத்தே வந்திருப்பினும் காணமாட்டா. என் யாக்கை அருள் அறத்தைக் கொண்ட அக்கடவுளது உருவத் திருமேனியை வணங்கற் பொருட்டன்றிப் பிறிதொரு கடவுளை வணங்கற்கு நிலத்தில் பொருந்தாது. அருகத்துறவிகட்கு அறத்தைக் கூறுவோனாகிய இறைவனைத் தொழுதற் பொருட்டன்றி என் இருகைகளும் கூடித் தலைமேல் குவியமாட்டா. என் தலையுச்சி தாமரைப் பூவின்மீது நடந்தவனாகிய அக் கடவுளுடைய அழகிய திருவடிகளை அணிகலனாக அணியப் பொறுப்பதல்லது பிறிதோ ரணிகலனையும் அணியப் பொறுக்காது. என்மனம் இறுதியில்லா இன்பத்தையுடைய நம் இறைவன் கூறிய ஆகமங்களைப் பன்முறை ஓதி ஓதி நெகிழ்வதல்லது பிறசமய நூல்களை ஓதி நெகிழமாட்டாது என இவ்வாறு கூறி அவ்வருகக் கடவுளுடைய புகழ்மொழிகளாலே அக்கடவுளை வாழ்த்தினார்.

அதுகேட்ட சாரணர் அம்மேடையினின்றும் ஒரு முழம் வானத்தே உயர்ந்துநின்று கவுந்தியே! நினக்குப் பிறப்பைத் தருகின்ற பற்று அறுவதாகுக என்று கூறி வாழ்த்திப் பின்னர் வான்வழியே சென்றனர். அங்ஙனம் சாரணர் சென்ற திசைநோக்கிக்கைகுவித்துத்தொழுது நும்திருவருளால் எங்களது பற்று அற்றொழிவதாக என வேண்டி நிலத்தில் வீழ்ந்து வணங்கிக் கவுந்தியடிகள் முதலிய மூவரும் அவ்விடத்தினின்றும் சென்றனர்.

**67. ஓடமேறுதல் சாபங் கொடுத்தல் பற்றிய விளக்கத்தைத் தருக.**

கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளும் காவிரி யாற்றின் ஓடத்துறையில் வந்து பள்ளியோடத்திலேறி அக்காவிரி யாற்றைக் கடந்துபோய்த் தென்கரையிலேறி ஆங்குள்ளதொரு பூம்பொழிலில் சென்று இளைப்பாறத் தங்கினர்.

அப்பொழுது ஒரு பரத்தை மகளும் அவளைக் காமுற்ற கல்லாக் கயவன் ஒருவனும் அப்பொழிலில் புகுந்து அவர்கட்குப் பக்கத்தில் வந்து, காமவேளையும் இரதிதேவியையும் போலிருக்கும் இவர்கள் யார் என்று அறிந்து வருவோம் என்று தம்முள் கூறிக்கொண்டு வந்து, கவுந்தியடிகளை நோக்கி விரதங்களை மேற்கொண்டதால் உடம்பு மெலிந்த துறவியீரே! நும்மோடு வழிவந்த இவர்கள் யார் என வினவினர்.

அதுகேட்ட கவுந்தியடிகள் இவர்கள் என் மக்கள்; நீவிர் கூறும் காமனும் இரதியுமல்லர்; மக்கள் யாக்கை உடையவர்களே. வழிவந்த வருத்தத்தால் பெரிதும் இளைப்புற்றிருக்கின்றனர். ஆதலால் அவர்களுக்குத் துன்பம் கொடாதீர்கள், விலகிப்போங்கள் என்ருர்.

அவ்விருவரும் அதைக் கேட்டுக் கற்றறிந்த பெரியீர்! ஒருதாய் வயிற்றில் பிறந்தவர்கள் கணவனும் மனைவியுமாய் வாழ்வது உண்டென்று நீர் கற்ற நூல்களில் சொல்லியுள்ளதும் உண்டோ? என்று கூறி இகழ்ந்தனர். கண்ணகி அதைக் கேட்டுத் தன் செவிகளைப் பொத்திக்கொண்டு தன் காதலன் முன்னர் நடுங்கி நின்ருள். அதுகண்ட கவுந்தியடிகள், இக்கயவர்கள் என் பூங்கோதை போல்வாளை இகழ்கின்றனர். அதனல் இவர்கள் முட்களையுடைய காட்டில் நுழைந்து திரியும் முதுநரிகளாகித் திரிவாராக எனச் சபித்தார். தவத்தின் விளைவாகிய சாபமாதலால் உடனே தன் பயனை விளைவித்தது; ஆகவே அவர்களை அங்குக் காணவில்லை.

கோவலனும் கண்ணகியும் இந்த நிகழ்ச்சியை அறியாராயினும் குறுநரிகளின் ஊளையொலியைக் கேட்டு இது சாபத்தின் விளைவுதான் என அறிந்து அவர்களுக்காக அஞ்சி, நன்னெறியினின்று நீங்கிய மக்கள் தீமொழிகளைக் கூறினும் அது அவர்களுடைய அறியாமையாலேயென்று அறிதல் வேண்டுமன்ருே! அவ்வாறன்றி அடிகளார் சபித்தது இரங்கத்தக்கதாகும் என்று கருதி அடிகளாரை நோக்கி, முற்றிய தவத்தை

யுடையீர்! பிழைசெய்த இவர்க்கு உய்திக்காலம் எப்பொழுது என்று கேட்டனர்.

அதுகேட்ட கவுந்தியடிகள் அதற்கு இணங்கி, இவ்விருவரும் இந்த உறையூரின் மதிற்புறத்தே அமைந்த காவற்காட்டின் ஒருபக்கத்தே நரிகளாகவே திரிந்து பன்னிரண்டு திங்கள் வரையில் துன்பத்தை நுகர்ந்து பின்னர்ப் பழைய உருவத்தைப் பெறுவாராக என்று சாபவிடை செய்தார்.

பின்னர்க் கவுந்தியடிகளும் கண்ணகியும் கோவலனும், முன்னொரு காலத்தே முறம்போன்ற செவியையுடைய யானையைப் போரிலே வென்ற சிறகுகளையுடைய கோழியின் பெயரமைந்த உறையூர் நகரத்தின் கண்ணே விருப்பத்தோடு புகுந்தனர்.

68. *'என்மக்கள் காணீர் மானிடயாக்கையர்*
*பக்கம் நீங்குமின் பரிபுலம்பினர்'*
*'நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்*
*அறியாமை யென்று அறியல் வேண்டும்'*
—இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**விடை, எண் 67ல் காண்க.**

# தேம்பாவணி

பாயிரம்—13; நாட்டுப் படலம்—83; நகரப் படலம்-70; ஆக 166 பாடல்கள்;

**1. "தேம்பாவணி"—நூற் குறிப்பெழுதுக.**

தேம்பாவணி என்ற இந்நூலின் தலைப்பை இரு வகையாகப் பொருள் கொள்ளலாம். தேம்பா+அணி= வாடாதமாலை எனவும், தேம் + பா + அணி = தேன் போன்ற இனிமையானபாடல்களாலாகிய அணிஎனவும் பொருள் தரும். இத்தாலி நாட்டு அறிஞர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்ற வீரமா முனிவரால் இயற்றப் பெற்றது.

இயேசு நாதரின் தந்தையாகிய சூசை மாமுனிவரின் வரலாற்றைப் பற்றியது. இந்நூல் மூன்று காண்டங்களாகவும் முப்பத்தாறு படலங்களாகவும், மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து பாடல்களாகவும் அமைந்துள்ளது. ஒவ்வொரு காண்டமும் பன்னிரு படலங்களைக் கொண்டது. நமக்குப் பாடமாகவுள்ளது நாட்டுப் படலம்.

**2. தேம்பாவணியின் நூலாசிரியர் யார்? அவரது வரலாற்றைச் சுருக்கி எழுதுக.**

தேம்பாவணியின் நூலாசிரியர் வீரமாமுனிவர் ஆவார். இவர் இத்தாலி நாட்டில் வெனீஸ் மாகாணத்தில் மாந்துவா மாவட்டத்தில் காஸ்திக்ளியோனே என்ற சிற்றூரில் கி.பி. 1680 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8-ம் நாளில் பிறந்தார். தந்தை பெயர் கொண்டல் போபெஸ்கி. தாயார் பெயர் எலிசபெத். இவருக்குப் பெற்றோர்களிட்ட பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி. பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு 1698 அக்டோபர் 23-ம் நாள் இயேசு சபையில் சேர்ந்தார். இலத்தீன் கிரேக்கம், எபிரேயம், இத்தாலியம் ஆகிய பல மொழிகளில் தேர்ச்சியடைந்தார். 1707 செப்டம்பர் மாதம் குருப்பட்டம் பெற்றார். 1710-ல்

சமயப்பணி ஆற்றுவதற்குத் தமிழகம் நோக்கிப் புறப் பட்டு 1711-ல் கோவாத் துறைமுகத்திலிறங்கி 1711 மே மாதம் 8-ம் நாள் மதுரையை யடைந்தார். சுப்பிரமணிய தீபக் கவிராயரிடம் தமிழ் கற்ருர். தமிழகத் துறவிபோல வாழ்ந்து தமிழகமெங்கும் அலைந்து திரிந்து பல இடர் களுக்கிடையே 36 ஆண்டுகள் அரும்பணி ஆற்றினுர். விருத்தாசலத்திற்கு ஆறுகல் தொலைவிலுள்ள கோனுன் குப்பம் எனும் சிற்றூரில் ஒரு கோவில் எழுப்பி தமிழகப் பெண்ணுருவில் மரியாளின் திருவுருவைச் சமைத்து "பெரிய நாயகி" எனப் போற்றினுர். அவ்வன்னையின் அருளால் பாடிய நூலே "தேம்பாவணி" யாகும். 1726-ல் இயற்றிய அந்நூலை மதுரையில் புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றினுர். அவரது நூலில் புலமை வீரமும், சமய வீரமும் மிளிரக் கண்ட புலவர்கள் "வீரமா முனிவர்"—எனப் போற்றினர்.

கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, மற்றும் சித்தர் களின் மருத்துவ நூல்களை ஐயம் திரிபு அறக் கற்ற அவர் சித்தர்களைப் போலவே காவியுடை யணிந்து, மரக்கறி யுண்டு குண்டலம், பூணூல், பாதக் குறடு முதலியவை அணிந்து வாழ்ந்தார்.

இவர் இயற்றிய நூல்கள் :—பெருங்காப்பியம் தேம்பாவணி யொன்றே.

சிறு காப்பியங்கள் :—அடைக்கலமாலை, அன்னை யழுங்கல் அந்தாதி, கருணம்பரப் பதிகம், கலிவெண்பா, கித்தேரியம்மாள் அம்மானை, திருக்காவலூர்க் கலம்பகம்.

இலக்கண நூல்கள் :—தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம்.

உரைநடை நூல்கள் :—வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், ஞானஉணர்த்துதல், லுத்தேரினத்தாரியல்பு, பேதகமறுத்தல், திருச்சபை கணிதம், பரமார்த்த குரு கதை, வாமன் கதை.

அகராதிகளுக்கெல்லாம் முதனூலாய் விளங்கும் சதுரகராதி, தமிழ்-இலத்தீன், தமிழ்-போர்த்துக்கீசு

தமிழ்-பிரெஞ்சு அகராதிகள்-திருக்குறள் அறம் பொருள் இரு பால்களுக்கும் இலத்தீன் மொழி பெயர்ப்பு முதலியன.

மேலும் தமிழ் எழுத்துக்கள் எ, ஒ, என்பவற்றின் மேல் புள்ளி வைத்தால் குறிலெனவும் (எ, ஒ,); புள்ளியில்லையேல் நெடிலெனவும், உயிர்மெய் யெழுத்துக்களான கெ, கொ போன்றவற்றிற்கும் அதேபோல புள்ளியிட்டால் (கெ், கொ்,) குறில், புள்ளியில்லையேல் நெடில் எனவுமாக இருந்த மரபை மாற்றி எ, ஏ, ஒ, ஓ, கெ, கே, கொ, கோ, எனக் குறில் நெடில் இவற்றைப் பாகுபடுத்தி எழுதும் வரிவடிவத்தை முதன் முதலில் தோற்றுவித்துத் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உயிராய் நின்றவர் வீரமாமுனிவர் ஆவார்.

தமிழின் தலைமகனைத் திகழ்ந்த இவர் இந்துஸ்தானி மொழியையும் கற்று 1735-ல் சந்தாசாகிபு என்னும் நவாபின் நன்மதிப்பையும் பெற்றார். 1746-ல் கேரளாவிலுள்ள அம்பலக்காடு எனும் சிற்றூரிலுள்ள இயேசு சபையின் தலைவரானார். 1747-ஆம் ஆண்டில் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

பாயிரம்

3. ஆகிர்த மரியாளைப் பற்றி எழுதுக.

உலகில் உவமையில்லாத, யாவராலும் புகழப்படுகின்ற வரத்தினாலுயர்ந்தவளாகவும், கிறிதுஸ்து நாதரை ஈன்ற கன்னி மரியாளின் திருவடிகளைக் கைகளால் தடவி ஆர்வம் நிரம்பப் போற்றித்துதிப்பவளாகவும், பொழில் வளத்தாலும் அழகாலும் மேம்பட்ட ஆகிர்தம் என்னும் நகரத்தில், பொறுமையில் சிறந்தவளாகவும், ஐம்புலன் உணர்வுகளைக்கடந்து மெய்யுணர்வுடையவளாகச் சொல்லுகின்ற சொற்கள் இனிமை தோன்றக் காரணமான அருளைப் பொழியும் வாயினளாகவும், மறையறிந்த நிறைமொழி மாந்தராகிய முனிவரிடம் தோன்றிய நற்பண்புகளோடு ஒழுகியவளாகவும், மறைமொழியின் உண்மையை உலகிற்குக்காட்டும் மாண்புமிக்க அறத்தினளாகவும் விண் மீன்களின்

நடுவே வெண்ணிலவு போல மாதர்களுள் சிறந்த மாட்சியுடையவளாகவும், வானோர்க்கு இறைவன் காட்டும் மெய்யுணர்வு போன்ற உணர்வு தோன்றப்பெற்று வேதியருக்கு ஒளி போன்றும், இன்னோரன்ன மாட்சியால் கன்னிமரியாளால் தன் பெயரைக் கொடுத்து நட்புப்பாராட்டப் பெற்று அளவில்லாத வரங்களை அவள்பால் பெற்றவளாகவும், ஆகிர்தமரியாள் விளங்கினாள். அவளிடம் கன்னிமரியாள் தாயும் மகளும் போல தன் தலைவனின் பழமையான வரலாற்றைக் கூறி அதனை ஆகிர்தமரியாளை யாவரும் கேட்டுணரும் வண்ணம் வரைக என்றாள்"—அத்தகைய சிறப்பு வாய்ந்தவள் ஆகிர்தமரியாள் என்னும் மாண்புடையாள்.

4. *சீகருள் உடுக்கள் ஊடு திங்களைப் போலக் கன்னி—விளக்குக.*

கன்னி மரியாள் கூறப்பெற்ற சூசையப்பர் வரலாற்றைக் கேட்டு, அதனை உலகவர்க் குரைக்குமாறு கன்னி மரியாளால் பணிக்கப் பெற்ற "ஆகிர்த மரியாள்" என்பாள் விண்மீன்களிடையே விளங்கும் வெண்ணிலவு போல் மாதர்களிடையே மாட்சியாய்ச் சிறந்தவளாய் விளங்கினாள்.

5. *வீரமாமுனிவர் பரமதாயை எங்ஙனம் போற்றுகின்றார்?*

விளங்குகின்ற சூரியனின் ஒளி சூழ்ந்த திருமேனியையும், வெண்ணிலவின் மேல்மிதித்த திருவடிகளையும், வட்டவரம் பொழுங்காக அமைந்த விண்மீன்கள் சூட்டப்பெற்றத் திருமுடியையும் உடையவளாகிய பரமதேவதாயே என வீரமாமுனிவர் போற்றுகின்றார்.

## "நாட்டுப் படலம்"

இப்படலம் நாட்டின் வளப்பத்தை விளக்கும் பகுதியாக அமைந்துள்ளது. தேம்பாவணி காப்பியத் தலைவனாகத்திகழும் சூசையப்பராகிய வளனாரது நாடாகிய யூதேய நாட்டின் வளம் இப்படலத்தில் கூறப்படுகின்றது.

6. முகிலின் தோற்றம், மின்னல், முகில் முழக்கம், மழைபொழிதல் இவற்றை வீரமாமுனிவர் எங்ஙனம் வருணிக்கின்றார்?

வானவெளியில் உலாவும் முகிற்கூட்டங்கள் போர்ப் படைகளைப் போல ஓடி, வெண்ணிறக் கொடி போல் வடிவம் கொண்டு, கடல் நீரை நிறைய உண்டு எழுந்து கறுத்து கருமையான மதயானைக் கூட்டங்கள் போலத் தோற்றமளித்தன.

போரில் பகைவரின் மார்பில் தேய்ந்து ஒளிரும் வேற்படைகள் போல மேகங்கள் திசைகள் தோறும் இருளற மின்னின.

வாரால் கட்டப்பட்ட முரசுகளின் ஒலி போல நீரால் நிறையப்பெற்ற நீல முகிலின் கூட்டங்கள் இடி முழக்கின.

வேனிலோடு போரிடவே மேகங்கள்படைகள்போல் சென்றனவேயன்றிப் பின்பு அருளின்றிப் போரிடுதல் கீழ்மையென எண்ணி அருள் நிறைந்த வள்ளல்களின் கொடைச் செயல்போல் மலைகளெல்லாம் குளிரும் வண்ணம் நெருக்கமாகப் பெரிய மேகங்கள் மழையைப் பொழிந்தன, என வீரமாமுனிவர் வருணிக்கின்றார்.

7. "படித்த நூலவை பயன்பட விரித்துரைப்பவர் போல்" — உவமையை விளக்குக.

8. அருவி புறப்படும் தன்மையினை வீரமாமுனிவர் எங்ஙனம் வருணனை செய்கின்றார்?

தாம் கற்ற நூற்பொருள்களை, அவையோர்க்குப் பயன்படத் தக்கவகையில் ஓசைத்தெளிவோடு விரித் துரைப்பவரைப் போல் மேகங்கள் தவழும் மலைகள்தாம் குடித்த நீரையெல்லாம் கொப்பளித்ததனால் அமுதம் போன்ற அருவிகள் மலையில் மோதி மாறாத ஒலியைக் கிளப்பி உருண்டோடின.

9. மழைத்தாரைகள் ஒழுகுதல், அருவியின் தோற்றம் இவற்றை வீரமாமுனிவர் எங்ஙனம் விவரிக்கின்றார்?

10. வான்விடும் வடம்; வெள்ளி நீடொடர் இவ்வுவமை களை விளக்குக.

பெரிய மலையைத் தன்னுலகிற்குக் கட்டி இழுத்துச் செல்ல எண்ணி வானுலகம் விடுகின்ற வெள்ளி வடங்கள் போல மழைத்தாரைகள் ஒழுகின. அதனைப் பொறுக்க மாட்டாது நிலவுலகமானது மலையைச் சுற்றி வெள்ளி சங்கிலியால் கட்டிப்பிடிப்பது போல மலையைச் சுற்றிலும் துள்ளி விழும் அருவிகளின் தோற்றம் அமைந்துள்ளது.

11. அருவியின் தோற்றத்தை விளக்குக.

வினவெண் 7 to 10ன் விடைகளைத் தொகுத்தெழுதுக.

12. "புண்ணுரைத்தடக் கொள்ளை செய் பொருந்தலர் போன்ற"—உவமையை விளக்குக.

13. வெள்ளம் முல்லை நிலத்தில் பாய்ந்தவற்றை விளக்குக.

அலைகளையுடைய வெள்ளமானது எல்லாவிடங்களிலும் புகுந்து, பிறரைப் புண்படுத்திக் கொன்று கொள்ளையடிக்கும் பகைவர்களைப்போல ஒளி வீசும் மாணிக்கம் போன்ற பலவகை மணியினங்களை அள்ளிக் கொண்டு, எதிர்ப்பட்ட மரஞ்செடி புதர் எல்லாவற்றையும் சாய்த்து அவற்றை இழுத்துக் கொண்டு சென்றது.

14. "திரை கிடந்துயிர் சீர்த்துறுப்புலாவிய போன்றே"—உவமையை விளக்குக.

15. வெள்ளம் பரவிய தன்மையினை விளக்குக.

மலையினின்று வந்த வெள்ளமானது மலர்கள் சிந்திய தேனொடு கலந்து பெருகி ஆனிரை கிடந்து எழும் சோலைகளையும், வயல்களையும், நிறைக்கும் பொருட்டு எல்லாவிடங்களிலும் உலாவிய தன்மையானது, பருகப்பட்ட நீரானது குடலில் சென்று தங்கி உயிரைச் செழிக்கச் செய்து உடல் உறுப்புகளெல்லாம் பரவும் செயலைப் போன்று விளங்கிற்று.

16. "விஞ்சையாரெலாம் வெறுத்து விடிவறிய போன்றே"—உவமையை விளக்குக.

17. வெள்ளம் கடலையடையும் தன்மை எங்ஙனம் வருணிக்கப் படுகின்றது?

அச்சமில்லாமல் எதிர்பட்ட அடுக்கிய கல்லையெல்லாம் கடந்து குறைவிலாத அழகொழுகும் வயற்புறங்களை கைவிட்டுத் தளர்விலாத ஆருனது தொடர்ந்து சென்று அகன்ற கரிய கடலை அடைவதானது அறிவுடையார் அறம் பொருளின்பங்களைக் கடந்து வீடுப்பேற்றையடைய விரும்புகின்ற தன்மையைப் போன்றிருக்கின்றது.

18. "விஞ்சுபால் முடுகலிலுடுத்த கலையினேருநீ இக்களிப்பொடு சிந்துதல் போன்றே" — உவமையை விளக்குக.

19. நாற்றிணையிலும் ஓடிய வெள்ளம் கடலடையும் தன்மையை வீரமாமுனிவர் எங்ஙனம்வருணிக்கின்றார்?

மலையிலிருந்து வருகின்ற தண்ணீரை, குறிஞ்சி முல்லை, மருதம் நெய்தலாகிய நாற்றிணையும் அருந்திய பின்னும், அந்நீர் கடலை அடைவதானது நிலமடந்தையெனும் தாயின் முலையிற் சுரந்த பாலானது (மலையிற் சுரந்த நீர்) தன்மக்கட்கெல்லாம் விரும்பியூட்டிய பின்பும் (நாற்றிணையும் குடித்தபின்) அவளின் மார்பைத் தழுவும் நீல ஆடையில் (நீலக்கடலில்) சிந்துவது போன்றிருக்கிறது.

20. வெள்ளம் மலையினின்றிழிந்து கடலடையும் தன்மையினை வீரமாமுனிவர் எவ்வெவ்வாறு புலப்படுத்துகின்றார்?

வினவெண்கள் 12 to 19ன் விடைகளைத் தொகுத்தெழுதுக.

21. "நெறியுலாவு அறம் நேரவை நிறுத்தினர் போன்றே" — உவமையை விளக்குக.

22. நீரைத்தேக்கி வாய்க்கால் வழியொதுக்கும் தன்மையினை வீரமாமுனிவர் எதற்கொப்பிடுகின்றார்?

செறிந்தோடும் நீர்ப்பெருக்கை ஏரியில் தேக்கி வைத்து வயலுக்குப் பயனுறும் வண்ணம் வாய்க்கால்

வழியாக ஒழுங்குபடுத்தி யொதுக்கி வயல்கள் தோறும் பாயவிடுவார்கள் உழவர்கள். அஃதானது ஐம்புலன் களின் வழிச்செல்லும் புல்லுணர்வுகளை அவற்றின் வழியே செல்லவிடாது அடக்கி அறநெறியில் செலுத் தும் சான்றோர்கள் தன்மையினத்தை ஒத்திருந்தது.

23. நோய் செய்தார்க்குதவி தவர்க்குந்தாவாந் தருமம் என்றியற்றுதல்போன்றே—உவமையை விளக்குக.

கடலாடையுடுத்த நிலமகளைத் தாயென எண்ணு மல் நெஞ்சு கிழிபட உழுபவர்க்கும் மற்றையோர்க்கும் நிலமகள் உணவு வழங்குதலானது, அறநெறியாளர் தமக்குத் துன்பம் செய்தார்க்கும் உதவி செய்து, தவ முனிவர்க்கும் அரிய அறத்தை என்றும் செய்வது போன்றிருக்கிறது.

24 "கூர் விளைத்த அருட்குரு விதி போன்றென்று கோடி"—உவமையை விளக்குக.

25. உழத்தியர் குரவையாடிய தெவ்வாறிருந்தது? ஏன் ஆடினர்?

அருட் குருவின் மொழியானது ஒன்று கோடியாகப் பெருகி ஞானத்தைத் தருவதுபோல நீரால் விளையப் பெறும் நெல்லும் "ஒன்று கோடியாக விளைக" என விதைத்தவர் முழங்க, உழத்தியர் குரவைக் கூத்தாடும் இயல்பானது தேர்த் திருவிழாவைப் போன்று சிறப்பாக விளங்கிற்று.

26. ஆக்கமாக்கினும் அறனிழந்தாவது கேடென்று ஊக்க மாண்பினர் ஒருங்கவை யொழிக்குதல் போன்றே—உவமையை விளக்கு.

அறநெறி தவறிய செல்வமானது இன்பத்தைத் தருமென்றாலும் அறவோர் அச்செல்வத்தைக் கொள்ள மாட்டார்கள். அதுபோல காண்பதற்கு அழகுடைய தாகவும் நுகர்வதற்கு மணமுடையதாகவும் நெல்லிடை முளைத்த நீர் மலர்களான ஆம்பல் தாமரை ஆகிய வற்றை களையெனக் களைந்தெடுப்பார்கள் உழவர்கள்.

**27. சிறியோர், பெரியோர் பண்பு, நெற்கதிர்களோடு எங்ஙனம் ஒப்பு நோக்கப்படுகிறது?**

செல்வச் செருக்குற்ற சிறியோரைப் போன்று பச்சைநிற நெற்பயிர் கதிர்களை ஈன்று தலை நிமிர்ந்து நின்று பின்பு பண்பால் நிறைந்த பெரியோர் அடக்கமாக முன்னோக்கிப் பணியும் தன்மைபோல் நெற்கதிர்கள் முற்றித் தலை சாய்ந்திருந்தன.

அக்கதிர்களை அறுத்து அதுவே போராகுமென்று உழவர்கள் போர்கள் பலவற்றை அடைவாராயினர்.

28 "மெய் கலந்த பொய் விலக்கி மெய்கொள்பவர் வினை போல்"—உவமையை விளக்குக.

உண்மையுடன் கலந்த பொய்ம்மையினை விலக்கி, மெய்யாகிய உண்மையை மட்டும் கொள்பவரின் செயலைப் போலவே, வைக்கோலுடன் கலந்த நெல்லை எருதுகளின் பிணையலினால் துவைத்து வைக்கோலை விலக்கி நெல்லை எடுப்பர் உழவர்.

அந்நெல்லை இரந்தார்க்கீய்ந்து, பின் தாம் உண்பதற்கும் ஈவதற்குமாகச் சேமிப்பர்.

29. நீர்ப் பாய்ச்சுதல், உழுதல், விதைத்தல், களையெடுத்தல் அறுவடை செய்தல் ஆகிய உழவுப் பணிகளைவீரமாமுனிவர் எங்ஙனம் விவரிக்கின்றார்

வினா எண்கள் 21 to 28ன் விடைகளைத் தொகுத்தெழுதுக.

**30. "வீதலோடுறும் வீட்டில் வாழ்வாரே" யாவர்?**

ஈதலும், இசைபட வாழ்தலும் ஆகிய வாழ்வுகள் நடாத்துதலோடு, அழிவிலாத அறத்தினையும் செய்தவர்கள் விருப்புடன் தம்முடலை நீக்குதற்குரிய நாள் வரவும் தாம் மறைவதோடல்லாமல் மேலான வீட்டுலகில் சென்று வாழ்வர்.

**31. "கடியிலார் மரம் வளைதல்"—எக்காரணம் பற்றி வளைகின்றது?**

தாம் வறுமையுற்றிருந்த போழ்தில் தம் துயர்மாற்ற வழங்கிய வகையாற் செய்த நன்றிச்கு ஈடாகத் தாம் பொருள் பெற்றுயர்வுற்ற நாளில் கொடைக் கடனை மாற்றும் முறையால், தன் உச்சியிற் செறிந்த பழங்களின் சுமையைத் தாங்சாமால் முயன்று, தன் மடியிலிருந்து முன்னர் துயர்மாற்றித் தமக்கு உயிராக அமைந்த தண்ணீரைத் தொழுவதற்காக (கடியலார் மரம் வளைதல்) வனத்திற் செறிந்த மரம் வளைந்து நிற்றலாகக் காணப்படுகின்றது.

32. சூதேயநாட்டில் மயில் ஆடவும் குயில் வாடவுமாக நிகழ்ந்த தென்ன?

33. "மாலை ஆரிருள் விரும்பும் மாக்கள் காண்மேலையார் என"—இடஞ்சுட்டி விளக்குக.

சூதேய நாட்டிலுள்ள கரும்பாலையிலிருந்து எழும் புகையை மேகங்களென எண்ணி மயில்கள் துள்ளி ஆர்க்கின்றன. அவ்வேளையில் இருளை விரும்புகின்ற கள்வ மாக்களைக் கண்டு நல்லோர் தளர்வடைவதுபோல் குயில்கள் வருந்துவனவாயின.

34 சூதேய நாட்டில் போர் (அமர்) களவு சிறை ஆகியவை எங்ஙனம் இருந்தன? எங்ஙனமில்லை?

சூதேய நாட்டிலமைந்திருந்த மலர்மலிந்த காடுகள் தோறும் போரிடக் காரணமில்லாத திருக்கவும் காடைகள் புணர்தற் பொருட்டு ஒன்ரேடொன்று போரிடும் போரன்றி வேறு ஓர் (அமர்) பேோர் அந்நாட்டில்இல்லை

பாலுண்டு மிகுதியால் பொழிந்த பாலை அன்னங்கள் குடித்தலே அங்கு காணப்பட்டதாக அமைந்த களவு. அஃதன்றி வேறு களவில்லை.

சோலைகளின் நிழல் கண்களைக் கவர்ந்து சிறை செய்யும். கோதையார் தம் கூந்தலில் பூக்களை முடித்துச் சிறைப்படுத்துவர். ஆடவர் வீரக் கழல்களை அணிந்து கால்களைச் சிறைப்படுத்துவர். மருத நிலமானது தம்மிடம் வந்து விழும் தண்ணீரை வரம்புகளால் தடுத்துச் சிறைப்படுத்தும். இவையன்றி சிறை செய்யப்படு

வோரும் கால் தளையிடப் படுவோரும் இல்லை. அந் நாட்டில் அன்னப் பறவைகள் சிறைப்பட்டிருத்தலைத் தவிர (சிறகுகளோடு பொருந்தி யிருத்தலன்றி) வேறு சிறை இல்லை.

35. சூதேய நாட்டின் தன்மையினை வீரமாமுனிவர் எங்ஙனம் புலப்படுத்துகின்றார்?

சூதேய நாடு வன்செயலும் துன்பமும் மிகுந்த தீமை யாவும் இல்லாத நாடு. அறத்தோடு பொருந்திய அறிவுத்திறமும், ஆண்மைத் திறமும் உடையது. அந் நாட்டிலுள்ள பழ மரங்கள் தமக்குயிரா யமைந்த நீருக்கு நன்றி செலுத்துவதுபோல் கனிகளின் செறிவால் விளைந்த சுமையால் தலைவளைந்து நிற்கின்றன. அங்கு ஆலைப் புகையை மேகங்களென எண்ணி மயிலினங்கள் ஆடும். இருள் விரும்பும் கள்ளர்களைக் கண்டு நல்லோர் அஞ்சுவதுபோல் குயில்கள் தளர்ந்து வருந்தும். புணர்தற் பொருட்டு காடைகள் செய்யும் போரன்றி அந் நாட்டில் வேறு போர்களில்லை. பகைவர் தம் வாய்ச் சொல்லில் மட்டும் வணக்கம் காட்டுவதுபோல் சினங் கொண்டு மோதும் கடாக்கள் பின்வாங்கும் காட்சியும், அறம் மோலோங்க ஆரவாரமும் துயரமும் குறைவது போன்று, கயல்விழி மாதர் தயிர் கடையும்போது தயிரிடையே வெண்ணெய் மேலோங்க, மேலோங்க, ஆச்சியர் தயிர் கடைவதால் எழுகின்ற வளையொலியும் அவர் உடலில் ஏற்படும் வியர்வும் குறைவடைகின்ற காட்சியும் உடைய நாடு. கரும்பு, தேன்கூடு, பனை, கனிகள், தென்னை, மலர் இவற்றில் பாய்ந்து தேனுண்டு நீரில் பாய்ந்தோடிப்பறந்து அத்தேனினும் இனிமையாக பறவைகள் பாடும் நாடு. கன்றை நினைந்து எருமை பொழிந்த பாலை அன்னங்கள் கவர்ந்து குடிக்கின்ற களவன்றி வேறு களவு அந்நாட்டிலில்லை. குயிலும் கிளியும் வண்டும் பாட, மயிலினத்தோடு மகளிரும் ஆடுவர். சோலைப் பறவைகள், மல்ரை நெருங்கும் தும்பிகள், ஆகியவை ஒலிக்கவும், பாடுகின்ற பாடலும், பண்ணொலியும், புகழ் பாடலும் ஒலிக்கும் நாடு. கடாக்கள் முட்டும் ஒலி, குயிற் சேவல் பெடையை கூவியழைக்கும்

ஒலி, கரும்பிலிருந்து முத்துக்கள் தெறிக்கும் ஒலி, மலர்கள் தேன் சிந்தும் ஒலி, நிறைந்த நாடு. சோலை நிழல் கண்களைக் கவர்ந்து சிறைப்படுத்தும். மகளிர் தம் கூந்தலில் பூக்களை முடித்துச்சிறைப்படுத்துவர்; ஆடவர் கழலை யணிந்து காலைச் சிறைப்படுத்துவர், மருத நிலம் தண்ணீரை வரம்புகளால் சிறைப்படுத்தும்; இவையோடு அன்னப்பறவை சிறைப் பட்டிருத்தலன்றி (சிறகுகள் பொருந்தி யிருக்குமாறிருப்பதன்றி) வேறு சிறைகள் அந் நாட்டிலில்லை.

வண்டிகள் :—நெல் ஏற்றிச் செல்லும் வண்டிகள், வெற்றிலை ஏற்றிச் செல்லும் வண்டிகள், கமுகம் பழங்களைச் சுமந்து செல்லும் வண்டிகள், கனிகளைச் சுமந்து செல்லும் வண்டிகள், இளநீர், கரும்பு, மலர்கள், மணிகள், இவற்றைத் தனித்தனியே சுமக்கும் வண்டிகள் ஆகிய வண்டிகளெல்லாம் ஒன்றோடொன்று நெருங்கித் தேய்வனவாக எருதுகளால் இழுத்துச் செல்லப்படும் காட்சி நிறைந்த நாடு. அந்நாடு அந்நாட்டின் தென்னையிலிருந்து தேங்காய் விழும்போது அதனால் தாக்கப்பட்ட ஆசினிப்பலா, மா, வாழைக் கனிகளிலிருந்து வடிந்த தேன் நீர் தோய்ந்த இடமெல்லாம் இனிமை உண்டாக்கின. கடல் முத்து முதலியவற்றை அந்நாட்டு மக்கள் மிகுதியாய் மற்றவர்களுக் கொடையளிப்பர். அது இறைவன் வழங்கியவையெல்லாம் பிறர்க்கு வழங்கும் விருந்தாக அந்நாட்டவர் எண்ணுவர் என்பதைக் காட்டுகிறது பொன் மணிக்குவியல் மாலையை இகழத் தக்கனவாயும், அந்நாட்டவர் செய்யும் கொடை மழையை மிஞ்சுவதாயும், முனிவரின் நற்பண்புகள் வேதத்தை மிஞ்சுவதாயும், மக்கள் நீதியானது வானநீதியையும் மிஞ்சும் தன்மையதாயும் அமைந்த நாடு.

தடாகம் தேன் மலரைத் தழுவியும் சோலைப் பூமலரைத் தழுவியும் வயல் நீர் தூமலரைத் தழுவியும், அன்னசேவல் பெடையைத் தழுவியும் கண் துயிலும் நாடு.

இத்தகையத் தன்மையினையுடையது சூதேய நாடு.

36. சூதேய நாட்டுச் சோலையிலிருந்த மரங்களை எழுதுக.

சூதேய நாட்டுச் சோலையில், ஓலைகளையுடைய கமுகு, பனை மரங்களும், பாலை, மா, மகிழ், பலவு, மரா, இலந்தை, சந்தனம், குங்குமம், முதலான பல மரவகைகளுமிருந்தன. அவை தொகுத்துக் கூறும் அளவைவிட மிக அதிகமாயிருந்தன.

37. சோலைகளின் தன்மை கூந்தல்கள், மேகங்கள், மங்கையர் முகம், நீலவானம் இவற்றையொத்திருந்த வாற்றை எழுதுக.

சண்பகப் பூக்கள் மலர்ந்த செண்பகச் சோலை. பூமாலைகள் அணிந்த கூந்தல்களையும், வண்டுகள் இரைகின்ற ஒலியோடு தேன்சிந்தும் சோலைகள் வான்மழைத் துளியாகிய பயனைத் தரும் மேகங்களையும், கிளைகளில் மலர்ந்த பூக்களும், தொங்குகின்ற தோடுகளும், குண்டலங்களும் அணிந்த மதிமுக மங்கைமலர்களையும் சோலை வேலியின் மேல் பரந்து, தளிர்ந்துள்ள தளிராகிய நீல ஆடையின் மேல் தேன் துளிர்க்கும் மலர்கள் மிக்க சோலைகள், நீல நிற ஓவியத்தின் மேல் எழுதிய விண்மீன்கள் மலர்ந்த நீல வானவெளித் தோற்றத்தையும் ஒத்திருந்ததென வீரமாமுனிவர் சூதேய நாட்டுச் சோலையின் தன்மையினைக் கூறுகின்றார்.

38 சோலை சித்திரக்கூடத்தை ஒத்திருந்தவாறெங்ஙனம்?

சோலையின் உட்புறத்தில் கனியமுதுண்ணும் பறவைக்கூட்டங்கள், காண்கின்ற முன்புறத்தில் மலர்பறிக்கும் இளைஞர்களின் ஒளி நிறைந்த முகங்கள், மற்ற முப்புறங்களிலும் வரையப்பட்ட மலர் முகைகளும் காட்டிய சோலையானது, இவற்றையெல்லாம் வரைந்த சித்திர கூடத்தைப் போன்றுள்ளது.

39. சோலையை களி மணப்பந்தருக்குப் எங்ஙனம் வீரமாமுனிவர் ஒப்பிடுகிறார்?

பூங்கொம்பில் தொங்குகின்ற பூக்கள் குயிற் பேடைக்கு குயிற்சேவல் பூச்சரத்தால் பூட்டிய மங்கல

நாண்போலவும், வண்டு குழலூதவும், துணை மயில்கள் உலாவிவந்து அகவவும், மற்றப் பறவைகளெல்லாம் தம் துணையோடு வந்து அகவவுமாக விளங்கிய சோலை களி மணப்பந்தரைப் போன்றிருந்தது.

40. "துறவிடம் போலும் சோலையே"-விளக்குக.

சோலையில் உதிர்ந்து கிடக்கின்ற கனிகளும், பூங் கொத்துக்களும் ஒளிபொருந்திய குப்பைகளாய்க் கிடக் கும் காட்சி அரசர்கள் துறவுகொண்ட போதில் களைந்த முடிகள் அணிகலன்களை ஒத்தும், மற்றும் பல கொம்பு களில் கனியும் மலரும் மிகுந்திருக்கும் காட்சி, துறவாத வர் முடிசூடி அணிபூண்ட தன்மையினை ஒத்திருந்ததென சோலை வருணனையில் வீரமாமுனிவர் கூறுகின்றார்.

41. "கோல்நிறச்சிலம்ப நற்கூடம் சோலையே" சிலம்ப நற்கூடம் ஆவை வாற்றை விளக்குக

வெள்ளாட்டுக்கடாக்களின் கூட்டமும், கலைமானின மும், தூயநிறப்பொலி எருதுகளின் கூட்டமும், கரிய எருமைக் கடாக்களின் கூட்டமும் சோலையில நெடிது நாள் போர் செய்தலால் சோலையானது சிலம்பக் கோல் களின் வண்ணமாகக் காணப்படுகின்ற சிலம்பநற்கூடத் தைப் போன்றிருந்தது.

42. சோலைகள் பாலர் அரங்கத்தைப் போன்று விளங் கிய தன்மையினை விவரிக்க.

சோலையில் கரு கரு வெனக் காடைகள் ஒருபுறம் இசைக்க, ஞரு ஞரு வென மயிலினம் ஒருபுறம் அகவ, புருக்கள் குருவவும், மற்றும் பல பறவைகள் ஒலியெழுப் பவுமாக அமைந்த மிகுந்த ஒலியின் காரணமாக, கல்வி கற்றலின் பொருட்டு இடையறாது ஓதுகின்ற பாலர் அரங்கத்தைப் (பள்ளியைப்) போன்று சோலைகள் விளங்கின.

43. சோலை, நாடகசாலையை ஒத்திருந்த தெங்ஙனம்?

சோலைகளில் கிளைகளின்மேல் பூக்கள் விரிந்து படாம் போல விளங்க, வண்டுகள் வீணையிசை எழுப்ப, மாங்குயில்கள் இசைபாட, தோகை மயில்கள் நடனமாட

மற்றப் புள்ளினங்கள் பார்க்க சோலைகள் நாடகக் கலைகள் மிகுதியாய் விளங்கும் நாடக சாலையை ஒத்திருந்தது.

44 சோலை வருணனையாக வீரமாமுனிவர் கூறியவற்றைத் தொகுத்தெழுதுக.

வினவெண்கள் 37 to 43ன் விடைகளைத் தொகுத்தெழுதுக.

45. சோலையுள் நடந்த கூத்தும் அக்கூத்தினைக் கண்டு களித்த மலரின் தன்மையையும் விவரிக்க.

கலாப மயில்கள் தம் தோகையை விரித்துக் காலையெடுத்து வைத்து, ஒன்றையொன்று அடுத்தும் எதிர்த்தும் ஆட, அஞ்சன மையொத்த கரிய கோலங்கொண்ட கருங் குரங்குகள் கோலெடுத்துக் கொம்புகளின் மேலேறி மாறி மாறி யாடிய ஆரியக் கூத்தும் ஆடின. அக்கூத்தினைப் பார்ப்பதற்கு இடந்தேடிப் புறப்படுவதுபோல அந்தச் சோலையைச் சார்ந்த தடாகமும் தனது குவளை மலராகிய கணகளைத் திறந்து அங்குமிங்குமலைந்து ஒருமைப்பட்டுச் சோலையில் ஓரிடத்தைத் தேடுவதைக் கண்டு ஏற்கெனவே இடமாகக் கரையைப் பெற்ற முல்லையானது சிரிப்பதைப் போல மலர, நீண்ட நேரமாக ஆடலைக் கண்டு கொட்டாவி விடுவது போன்று காந்தள் மலர்கள் மலர்ந்தன.

46. ஆடலின் ஆவித் தென்றலர்ந்த காந்தளே"— இடஞ்சுட்டி விளக்குக.

வின எண் 45ன் விடையை எழுதுக.

47. சோலையுள் புகுந்த மங்கையர் தன்மையினையும் அவர் அச்சோலையினுள் செய்த செயல்களையும் விவரித்தெழுதுக.

மயிலியல் மங்கையர் சோலைக்குள் வரவும் அவர் தம் அழகுத் தோற்ற மயிலினங்கள், மங்கையர் வென்றாரெனத் தோற்று நாணியொடுங்க அதனைக் கண்டு மற்றப் பறவைகள் சிரிப்பதுபோல மகிழ்ச்சி கொண்டு பறவைகள் ஒலித்தன. மங்கையர் வந்ததனல் சோலையுள் ஞாயிறே தோன்றியதென மகிழ்ந்து மாங்குயில்கள்

பாட அன்னம் நடையை பழிப்பிப்பதுபோல நடக்க, அந்நடையையே பழிப்பதுபோல் நடந்தனர் கோதையர். பிறை நிலவின் கதிர் திரண்ட தொகுதியைப்போல் மலர்ந்த பூக்களை "இவை வீணை நிறத்தொடு மலர்ந்தன" என்று மின்னல் போன்ற நிறத்தோடு கூடிய மங்கையர் அம்மலர்களைக் கொய்தனர். மலர்களை மங்கையர் கொள்ளையிடுகின்றனர் என வண்டுகளின் கூவென்றொலியும், அதனோடு வருந்திய கிளிகளின் கீ என்ற ஒலியும், கலக்கும்படி மகளிர் பூப் பறித்துக் கொண்டே வள்ளைப் பாடலை இனிது பாடினர். மணியும், பவளமும், முத்தும், பொன்னும் கோத்ததுபோல அழகிய பூக்களையெல்லாம் நூலினால் தம்மழகுக்கு இணையாக மாலையாக மங்கையர் கட்டினர். கட்டிய மாலையை விரல்களில் சுற்றிக் காட்டி உனது மாலையினழகு போதாதென மற்றவரோடு முரண்பட ஆரவாரித்து, அணிகள் சூடிய ஒளியுடைய தம் மார்பிலும் மணிக்கட்டிலும், கூந்தலிலும் மங்கையர் சூடினர். மணம் நிரம்பிய மலரின் தேனையுண்டு பசியாறிய வண்டு பாடுவதுபோல உளமுருகிக் களிப்பு மிகவாகி மங்கையர் பாடினர்; தாமரை மலராகிய மெத்தையின்மேல் இருக்கின்ற அன்னப் பறவைகளின் நாவிற் பிறந்த இசையும் நாணும்படியாக மங்கையர் மலர் பரந்த மெத்தையின் மேலிருந்து அறத்தைப் போற்றிப் பாடினர். தேன் வழியாக மணத்தைப் பரப்பும் ஆம்பல் மலர் போன்ற வாயுள்ள மங்கையர் வீணையிசைக்கு நிகராக ஆராய்ந்து வெண்ணிலவின் ஒளி போல தெளிந்த உணர்வுகளைப் பாடினர்.

48. "ஆம்பல்வாய் நறும்விரை அவிழ்த்து விள்ளிய
ஆம்பல்வாய் மலர்ந்தன அணங்கை யாரினிது
ஆம்பல் வாய்க் குரலுடனைந்து வெண்மதி ஆம்
பல் வாய் திருந்துணர்வறைந்து பாடுவார்?"—
இப்பாடலைப் பதம் பிரித்து பொருள் எழுதுக.

ஆம்பல்—தேனின், வாய்—வாயிலாக, நறும்விரை நறுமணத்தை, அவிழ்த்து விள்ளிய—பரப்பிப்பூத்த, ஆம்பல்வாய்—ஆம்பல் மலர்போன்ற வாய்கள், மலர்ந்தன—மலர்ந்தன, அணங்கையர்—மங்கையர், இனிது—இனிமையாக, ஆம்பல்வாய்—வீணையிலுண்டாகும் குர

லுடன்—ஒலியைப்போல், ஆய்ந்து—ஆராய்ந்து, வெண் மதி—வெண்ணிலவின், ஆம்பல்—ஒளி, வாய்—பொருந்திய, திருந்துணர்வு—செப்பமான உணர்ச்சிகளை, அறைந்து பாடுவார்—விளக்கிப் பாடுவர்

(பொ—ரை) தேனின் வாயிலாக நறுமணத்தைப் பரப்பியவாறு பூத்த ஆம்பல் மலர்ந்த வாயினரான மங்கையர் இனிமையாக வீணையொலிபோன்ற குரலால் நிலவொளியன்ன செப்பமான உணர்வுகளை விளக்கிப் பாடினர்.

(குறிப்பு) ஆம்பல் என்ற சொல் நான்கடிகளிலும் முறையே தேன், ஆம்பல் எனும் நீர்த்தாவர மலர், வீணை, ஒளி, என நான்கு பொருளில் அமைந்துள்ளது.

49. அணங்கையார் அறைந்து பாடிய திருந்துணர்வுகளைத் தொகுத்தெழுதுக.

50. கண்கனிந்த கவின்நல்லார் களிகூர்ந்து தேனிசையால் சாற்றிய பாடற் கருத்தை தொகுத்தெழுதுக.

44 வினாவின் கடைசி 10 வரிகளையும், 48ன் விடையையும் தொகுத்து எழுதவும்.

51. மண்ணுலகின்றும் வானுலகம் விரும்பத் தக்கதென வீரமாமுனிவர் நிறுவதற்குக் கூறுகின்ற காரணங்களை எழுதுக.

விண்ணை மறைக்கும் மலர்களையுடைய கிளைகளிலிருந்து நறுமணம் கலந்த தேனை ஒழுகுமாறு கண்களை மறைக்குமாறு இருண்ட சோலைகள் கொண்ட நாடு இதுவென்றால் கண் கடந்த அழகை விரும்பச் செய்து, பேரின்பத்தை நல்கும் வானுலகத்தை விரும்பமாட்டோமோ? (விரும்புவோம் என்று)

மெய்க்கு நிழலையும், வாய்க்குத் தேனையும், கண்ணுக்கு நிறத்தையும், மூக்கிற்கு மணத்தையும், செவிக்குப் பறவை யொலியையும் ஆக ஐம்புல இன்பத்தையும் நல்கும் சோலைகளையுடைய நாடு இதுவென்றால் கோள் மீன் இமைக்கின்ற வாடாத சிறப்பு மிகுந்த வானுலகை விரும்பமாட்டோமோ? விரும்புவோம் (எ—று)

பட நாகம் தோலுரித்த பான்மையைப் போலகற் களினூடு உரிஞ்சப்பட்டு மலையிலிருந்து தொங்குகின்ற அருவி தாவிவரும் அழகுமிக்க நாடு இதுவென்ருல் அலை களில்லாத அருளாகிய கடலின் அழகு நிறைந்த, செல் வம் நிறைந்த வானுலகை விரும்பமாட்டோமா? (விரும்புவோம் (எ—று)

திருடர் பயமின்றி சண்பக மரக் குளிர் நிழலில் துயில்கொள்ளும்படியாகத் துன்பம் நீங்கிப் புறநாட்டி லுள்ளவர்களுக்கும் விருப்பத்தை யுண்டாக்கும் நாடு இதுவென்ருல் எவர்க்காலத்தும் இன்பம் குறையாத வாழ்வைத் தரும் வானுலகை விரும்பமாட்டோமோ? (விரும்புவோம் எ—று)

சிற்றின்பம் கொண்ட இந்நாட்டின் நலத்தையும் ஓர் பயனென்று விரும்பியபோதில், மக்களாசைக்கும் மேற்பட்ட பேரின்பமான வானுலகை விரும்பமாட் டோமோ? அவ்வாறு விரும்பாவிடில் நிலைத்தவுயிர், நிலையான இன்பம் ஆகியவற்றை விரும்புகின்ற கவ லையை இக்காட்டுலகம் மாற்றவல்லதோ(இல்லை எ—று)

52 விண்கனிந்த இன்ப விழைவு ஓங்க உண்பார் பாடிய பாடல்களின் கருத்தைத் தொகுத்து எழுதுக.

கண்களில் கனிவு கொண்ட அழகு மங்கையர் இவ் வாருன தன்மையுடையதும் மற்றும் பலவுமாகிய பாடல் களைப் பண்ணிசை போன்று ஒத்த யாழிசையுடன், தேனிசைபோல் பாடுவதுடன் வானுலகில் நீண்டநாள் கனிந்த இன்பம் போன்ற இன்பத்தை நுகர்ந்தனர்.

53. சூதேய நாட்டுச் சிறப்புக்களாகத் தேம்பாவணி யினின்றும் அறிவன யாவை?

1. சூதேய நாட்டில் ஆலைகள், வண்டிகள், பாடும் மகளிர், சங்குகள், ஆட்டுக்கடா மோதுதல், மின்னலு டன் கூடிய இடி, மழை, மகளிர் நீராடுதல். எருமைகள், பாயும் தடாகம் ஆகியவற்றின் முழக்கங்கள் எங்கும் பெருகியிருந்தன.

2. மணம் பரப்பும் சோலைகள், மலர் சிந்தும் செறிந்த கிளைகள், தேன்சிந்தும் மலர்கள், முத்துக்கள்

போல் மழை பொழியும் முகில்கள், விண்மீன் போல் முத்துக்கள் சொரியும் மூங்கில்கள், பால் பொழியும் பசுக்கள், நெருங்கியமைந்த சோலைகள் யாவும் ஆங்கே பெருகியிருந்தன.

3, அந்நாட்டில் கரும்புகளிலுள்ள தேன், மரங்களிலுள்ள மலர்த்தேன், சோலைகளிலுள்ள தேன், கனிகளிலுள்ள தேன், பூமாலைகளிலுள்ள தேன், தேன் அடைகளிலுள்ள தேன் ஆகிய பலவகைத் தேன்கள் பாய்ந்து நெற் பயிரை வளர்த்து வந்தன,

4. கதிரவனின் அழகைத் தாமரை மலர்களும், விண் மீன்களின் அழகை மலரினங்களுக்கும், மழைத் துளிகளின் அழகைத் தேன் துளிகளும் காட்டுகின்ற தன்மையால் சூதேய நாட்டு நீர்த்தடாகம் வானவெளியின் அழகினைக் காட்டும் கண்ணாடியைப்போல் விளங்கிற்று.

5. மலைமேகத்தோடும், பொழிகின்ற மேகங்களோடு கைகளும், அணிகள் மாலைகளோடும், மாலைகள் மார்போடும், வண்டிகள் பூமியொடும், பாடல்கள் பாலோடும், நாடு சிறப்போடும், செல்வம் வீட்டுச் செல்வங்களோடும் பொருதுகின்ற சிறப்பினையுடையது.

6. தாமரைப் பூவில் சங்கு முத்துக்களை ஈன்று வைத்திருக்க மாலையில் அன்னம் வந்து தன் முட்டையெனக் கருதி அடை காத்துக் கொண்டு கரும்பின் சாற்றினினிமையுடன் இசைபாடின.

7. சூதேய நாட்டுச் சோலைகளில் முனிவர்களும், தாமரைப் பூவில் அன்னமும், மலரில் வண்டுகளும், கிளைகளில் கிளிகளும், நாவில் பாடல்களும், மங்கையர் கையில் வீணைகளும் இறைவன் வாழ்த்துப் பாடியவாறிருந்தன.

8. அறத்தால் வருவது நற்புகழ், கொலையால் வருவது வஞ்சனை, பாவத்தினால் வருமின்பம் துன்பமேயாகும். இதனை யுணர்ந்து எல்லாக் குற்றமுமகல அழிதலில்லாத இன்பத்தை நுகர நாடாகப் புகழில் சிறந்து விளங்கியது சூதேய நாடு.

9. இறை நெறியாகிய நல்லறத்தைக் கொண்ட சூதேய நாட்டு மக்களின் மனத்திலுள்ள செல்வங்களை

கற்றவரும் உணர மாட்டார். அந்நாட்டின் தருமம், இன்பம், புகழ் இவற்றை சொல்வளம் மிக்க தமிழாலும் சொல்லுதல் இயலாதாம்.

10. உலகின் அழகெல்லாம் அந்நாட்டிற்கமைந்துள்ளமையால் அந்நாடு உவமை கூறவியலாத நாடாகும். அம்பினால் ஏற்படும் புண்ணும் குற்றத்தால் ஏற்படும் மன மயக்கமும் இல்லாத நாடு.

11. முழுமதியை வென்ற முகமுள்ள, முல்லைப் பூவை வெல்லும் மன அழகுள்ள கற்புள்ள மங்கையர்கள் உள்ள நாடு.

12. வீரர்கள், பகைவரின்மையால் கொடை வீரர்களாகத் திகழும் நாடு. அந்நாட்டில் செல்வ வாழ்வு, தவம், வளம், அறம் முதலியவை நிறைந்திருந்தமையால் தீயவொழுக்கம், வறுமை, சிறுமை, கீழ்மை, இல்லை. இல்லத்தாருள் கருமிகள் இல்லை. எல்லோரும் வள்ளல்களே. மூங்கிலிலும், நெல்லிலும் முத்துக்கள் கிடைக்கும். அவற்றை வள்ளல்கள் மழை போல் வழங்குவார்கள். அந்நாட்டுக் குருக்கள் தேன் மழைபோல் மறைவிதிகளைக் கூறுவர்.

நீர் மலர்போல் கோட்டுப் பூக்களும் அங்குக் குளிர்ச்சியுடையனவா யிருக்குமெனில் அந்நாட்டின் சிறப்பை மேலும் வருணிக்கவியலுமோ?

54. "மாலை மாறி வயங்கிய மாமதி
மாலை மாறி வயங்கிய மாதர்கள்
மாலை மாறிய கற்புடைய மார்புறை
மாலை மாறிய கற்புடை மாண்பரோ"

—உரை எழுதுக

மாலை மாறி—சாயங்கால வேளையிலுள்ள இருளை நீங்கச் செய்து, வயங்கிய மாமதி—விளங்கிய முழுநிலவின், மாலை மாறி—இயல்பினை மாறச் செய்து வென்று, மாலை மாறிய—மயக்கம் நீங்கி, வயங்கிய கற்புடை மாதர்கள்—விளங்குகின்ற கற்புடைய மாதர்கள், மார்புறை—மார்பில் தங்கியிருக்கும், மாலை மாறிய—மலர் நிலையிலிருந்து மாலையாகத் தொடுக்கப்பட்டு மாறிய முல்லை மாலையைப் போன்று, கற்புடைய மாண்பர்—அழகுள்ள மாட்சிமையுடையவராயினர்.

## ORIENTAL TITLE EXAMINATION MARCH 1975

### Madras—Pulavar—Final

### PRESCRIBED TEXT-BOOKS—II

Time : Three hours Maximum : 100 marks

முதல் ஐந்து வினாக்களுக்கு எவையேனும் இரண்டு உட்பிரிவுகட்கு விடை தருக,

1. (அ) இறைமாட்சி என்னும் அதிகாரத்தில் இறைவனது இலக்கணமும் அதனாலாய பயனும் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன?

(ஆ) இன நலம் மன நலத்தினும் மாண்புடைத்து என்பதனைப் புலப்படுத்துக.

(இ) 'கற்றலின் கேட்டல் நன்று' என்பதை வள்ளுவர் வழி நின்று நிறுவுக.

(ஈ) பின்வரும் குறட் பாக்களில் எவையேனும் இரண்டனுக்குப் பொருள் கூறி விளக்கம் தருக.

(1) தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுற
வும் தீரா இடும்பை தரும்.

(2) காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

(3) ஒற்றொற் றுணராமை யாள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப்படும். [14]

2. (அ) வஞ்சிக் காண்டத்தால் அறியப்படும் பழந்தமிழர் தம் போர் முறையினை விளக்குக.

(ஆ) 'மாதவி மடந்தை கானற் பாணி
கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது'

என்ற மாடலன் கூற்று எவ்வாறு சிலப்பதிகாரத்தின் கட்டுக் கோப்பினை உணரத் துணைபுரிகின்றது?

(இ) 'வஞ்சினம் வாய்த்தபி னல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்தர்'

என்பதற்கு இலக்கியமாகச் சேரன் செங்குட்டுவன் இருந்தமையைப் புலப்படுத்துக.

(ஈ) பின் வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக:

(1) அஞ்சலோம் பென்று நலனுண்டு நல்காதான்
மஞ்சுசூழ் சோலை மலையருவி யாடுதுமே

(2) இமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய
இதுநீ கருதினை யாயி னேற்பவர்
முதுநீ ருலகின் முழுவது மில்லை.

(3) செங்கோல் வளையவுயிர்வாழார் பாண்டியரென்
றெங்கோ முறைநா வியம்பவிந் நாடடைந்த
பைந்தொடிப் பாவையைப் பாடுதும்,

(4) மறையோ னுற்ற வான்று யர் நீங்க
உறைகவுள் வேழக் கையகம் புக்கு
வானோர் வடிவம் பெற்றவன். [14]

3. (அ) திருத்தக்கதேவரின் உவமை நயத்தினைச் சான்றுகள் தந்து விளக்குக.

(ஆ) 'தெரிவில் தீத்தொழில் சிந்தையின் மேயினார்க்கு'ச் சீவகன் கூறிய அறிவுரைகளை எழுதுக.

(இ) சீவகனைப் பிரிந்து அலமரும் கேமசரியின் அவல நிலையை ஆசிரியர் எங்ஙனம் வருணிக்கின்றார்?

(ஈ) பின் வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக:

(1) போதுவாய் திறந்த போதே பூம்பொறி
வண்டு சேர்ந்தாங்
கூதுமே மகளிர்க்கொத்த போகமு மன்ன
தொன்றே

(2) சாதலும் பிறப்பு மில்லாத் தன்மைபெற்
றவர்க ளொத்தார்

(3) கொல்சின மடங்க லன்னான் கொழுநிதி மாட
நீந்திப்
பல்கதிர்ப் பருதி போலப் பாயிரு ளேகினானே

(4) .......................ஊன் செய்கோட் டக்குக்
கழுகுண்ண வள்ளூர மேசுமந்து புள்ளிற்கே
புறஞ்செய் கின்றார் [12]

4. (அ) திலகவதியாரின் பண்பு நலன்களைச் சேக்கிழார் எங்ஙனம் சிறப்பிக்கின்றார்?

(ஆ) 'நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு'—என்ற நாவுக்கரசரின் உளநிலையை விளக்குக,

(இ) அப்பூதி அடியவரை 'அந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகளார்' எனச் சேக்கிழார் சிறப்பித்துக் கூறுவதன் காரணத்தினை விளக்குக.

(ஈ) திருமறைக்காட்டு நிகழ்ச்சி தொல்லை வேதந் திருக்காப்பு செய்த வாயில் தொடர்வகற்ற வல்ல அன்பராய் நாவுக்கரசர் திகழ்ந்தார் என்பதை எங்ஙனம் மெய்ப்பிக்கின்றது? [14]

5. (அ) திரிசடை கண்ட கனவு சிறைவைக்கப்பட்டிருந்த சீதையின் உள்ளத்திற்கு ஆறுதல் அளித்த வகையினைக் கூறுக.

(ஆ) இராமனது ஆழியைப் பெற்ற சீதையின் மனநிலையைக் கம்பர் எவ்வாறு வருணிக்கின்றார்?

(இ) 'மருளும் மன்னவற்கு யான் சொல்லும் வாசகம் அருளுவாய்' என்று அனுமனிடம் சீதை சொல்லிய செய்திகள் யாவை?

(ஈ) பின் வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு இடஞ்சுட்டி விளக்கம் தருக:

(1) காசுண்ட கூந்தலாள் கற்பும் காதலும்
ஏசுண்ட தில்லையால் அறத்துக்கு ஈறு
உண்டோ?

(2) உடுத்த துகிலோடும் உயிர்உக்க உடலோடும்
எடுத்த முனிவோடும் அயல்நின்றதும் இசைப்
பாய்

(3) ………………… இளவல் இயற்றிய
நீண்ட சாலையொடு நிலைநின்றது
காண்டி ஐயநின் மெய்யுணர் கண்களால்

(4) பராவரும் பழியொடும் பாவம் பற்றுதற்கு
இராவணன் அவன் இவன் இராமன் [14]

6. தேவகுமாரனை 'ஈண்டிவரே யுலகினுக்கோர் இரட்சகரென்று' எடுத்துரைக்கும் சான்றாக ஆசிரியர் எதனைக் கொள்கின்றார் என்பதனை விளக்குக.

[அல்லது]

தேவகுமாரனது உடலைத் திருவடக்கம் செய்த பின்னர் வந்துற்ற இரவுக்காலம் எங்ஙனம் வருணிக்கப் பட்டுள்ளது? [8]

7. மணிவாசகர் ஐம்புலனாலரிப்புண்டு அலந்த தம் நிலையை எங்ஙனம் எடுத்தியம்புகின்றார்?

[அல்லது]

'இருதலைக் கொள்ளியினுள் ளெறும்பொத்து' 'ஆனை வெம் போரிற் குறுந்தூறெனு'—இவ்வுவமைகளால் விளக்கப் பெறுவன யாவை? [8]

8. மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளேன் என்பதைக் குலசேகரப் பெருமாள் எவ்வாறு எடுத்துக் கூறுகிறார்?

[அல்லது]

வெங்கட்டிண் களிறடர்த்தாய்வித்துவக்கோட்டம்மானே
எங்குப்போ யுய்கேன்உன் இணையடியேயடையலல்லால்
எங்கும்போய்க் கரைகாணாது எறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே
—பொருள் விளக்கம் தருக. [8]

9. பாரதிதாசனின் முற்போக்குக் கருத்துக்கள் 'பெண் குழந்தைத் தாலாட்டில்' இடம்பெற்றுள்ள சிறப்பினை எழுதுக.

[அல்லது]

'இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை'

என்பதனைப் பாரதிதாசன் எடுத்துரைக்கும் நயத்தினைப் புலப்படுத்துக. [8]

# திருக்குறள்

## காமத்துப்பால்

1. திருக்குறள் பற்றிக் குறிப்பு வரைக.

பதினெண் கீழ்க்கணக்கைச் சார்ந்த பதினெட்டு நூல்களுள் திருக்குறளும் ஒன்று. திருக்குறள் ஒரு சிறந்த நீதி நூல். திரு+குறள் = திருக்குறள். மேன்மை பொருந்திய குறள் வெண்பாக்களால் ஆகிய நூல் என்பது பொருள். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பால்களையும், 133 அதிகாரங்களையும், 1330 குறள் வெண்பாக்களையும் கொண்டு விளங்குகிறது. அறத்துப்பாலில் 37 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 25 அதிகாரங்களும் உள்ளன. அறத்துப்பாலில் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழ் இயல் என்பனவும், பொருட்பாலில் அரசியல், அங்கவியல் (அமைச்சியல்), ஒழிபியல் என்பனவும், காமத்துப்பாலில் களவியல், கற்பியல் என்பனவும் அமைந்துள்ளன.

இதன் ஆசிரியர் திருவள்ளுவர். இவர் காலம் கி. பி. 3ஆம் நூற்ருண்டிற்கு முன்னதாக இருக்க வேண்டும். திருக்குறளையும், திருவள்ளுவரையும் சான்ருேர் பலர் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். இது ஒரு காலங்கடந்த நூல்; இதை உலகப் பொதுமறை என்று சிறப்பித்துக் கூறுவர். ‘ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி’ என்பதனுலும், ‘பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்’ என்பதனுலும், ‘இதில் இல்லாததில்லை, இணையில்லை முப்பாலுக்கு இந்நானிலத்தே’ என்பதனுலும் இதன் சிறப்பு விளங்கும்.

2. காமத்துப்பால் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

திருக்குறளிலுள்ள மூன்று பால்களில் காமத்துப்பாலும் ஒன்று. இம்மை, மறுமை, வீடுபேறு ஆகிய

மூன்றையும் பயப்பது அறம். இம்மை, மறுமை ஆகிய இரண்டையும் பயப்பது பொருள். இம்மையே பயப்பது இன்பம். இன்பத்தைக் கூறுவது காமத்துப்பால். இன்பம் என்பது ஒரு காலத்து ஒரு பொருளால் ஐம்புல நுகர்ச்சியும் பெறப்படும் காம இன்பத்தினையாகும். இன்பமாவது புணர்ச்சி பிரிவென இரண்டுவகைப்படும். இருத்தல், இரங்கல், ஊடல் ஆகியவற்றைத் திருவள்ளுவர் பிரிவின்கண் அடக்கினார். தமிழ் நூல்களோடு பொருத்தப் புணர்ச்சியைக் களவென்றும், பிரிவைக் கற்பென்றும் வள்ளுவர்பெருமான் வகுத்தார். அவற்றுள் களவு என்பது, 'பிணி மூப்பு இறப்புக்கள் இன்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமையுடையராய தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் அன்றிப் பால் (ஊழ்) வகையால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது' என்று பரிமேலழகர் கூறுகிறார். கற்பு என்பது தலைவனும் தலைவியும் வரைந்து கொண்டு (திருமணம் செய்து கொண்டு) ஊரார் அறிய இல்லறம் நடத்துதல். களவியலில் ஏழு அதிகாரங்களும், கற்பியலில் பதினெட்டு அதிகாரங்களும் அடங்கியுள்ளன.

3. தகையணங் குறுத்தல் என்றால் என்ன?
(அதிகாரம் 109)

தலைவி பொழில் விளையாட்டை விரும்பிப் பொழிலுக்குச் சென்று ஆயம் நீங்கத் தனித்து நின்றாள். தலைவன் வேட்டையாடுதலை விரும்பிப் பொழிலுக்குச் சென்று இளையார் நீங்கத் தமியனாய் வந்து அங்கு தனித்து நின்ற தலைமகளைக் கண்ணுற்று அவள் வனப்புத் தன்னை வருத்தமுறுவித்ததைத் தலைவன் கூறினான். இதுவே தகையணங்குஉறுத்தல் ஆகும். தகை—அழகு. அணங்கு உறுத்தல்—வருத்தமுறச் செய்தல்.

4. தலைமகள் உருவு முதலியன முன்கண்டறிவன அன்றிச் சிறந்தமையின் அவளைத் தலைமகன் ஐயுற்றுக் கூறியது என்ன? (குறள் 1081)

இந்தப் பாரமான குழையை யணிந்தவள் இப் பொழிற்கண் உறையும் தெய்வ மகளோ? அன்றி ஒருமானுட மாதோ? இவளை இன்னள் என்று துணிய மாட்டாது என் நெஞ்சு மயங்குகின்றது என்று தலைவன் ஐயுற்றுக் கூறினான்.

5 மானுட மாதராதல் தெளிந்த தலைமகன் அவள் நோக்கினால் ஆகிய வருத்தத்தை எவ்வாறு கூறினான். தொகுத்துரைக்க.

(குறள் 1082 1086)

இத்தன்மை வாய்ந்த வனைப்பினையுடையவள் என் நோக்கிற்கு எதிர் நோக்குதல், தானே தாக்கி வகுத்து கின்ற அணங்கு தாக்குதற்குப் படையையும் கொண்டு வந்தாற்போலும் தன்மையை யுடைத்து. கூற்று என்று நூலோர் சொல்வதனைப் பண்டு கேட்டறிவதல்லது கண்டறியேன். இப்பொழுது யான் கண்டறிந்தேன். அது நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும்குணங்களை யும் பெரிய போர் செய்யும் கண்களையும் உடையதா யிருந்தது. பெண்மைக் குணங்களையுடைய இப்பே தைக்கு இருக்கும் கண்கள், தம்மைக் கண்டவர்களின் உயிரையுண்ணும் தோற்றத்துடனே கூடிப் போர் செய் யும் குணத்தினைப் பெற்றிருந்தன. என்னை வருத்து கின்றமையின் கூற்றமோ? என்மேல் ஓடுதல் உடை மையின் கண்ணோ? இயல்பாக வெருவுதல் (அஞ்சுதல்) உடைமையின் பெண்மானோ? அறியேன். இம் மடவ ரலின் கண்களின் நோக்கம் இம்மூன்று தம்மைகளையும் பெற்றிருக்கின்றது. இவள்கண் இன்பமும் துன்பமும் ஒருங்கு செய்கின்றது. கண்ணுக்குப் பிரியா நட்பாகிய கொடும் புருவங்கள் செப்பமுடையவாய் இருந்து விலக்கி யிருந்தால் அவற்றைக் கடந்து இவள்கண் எனக்கு நடுங்கத்தக்க துயரைச் செய்யமாட்டா என்று கூறினான்.

6 'கடாஅக் களிற்றின்மேற் கட்படாஅ மாதர் படாஅ முலைமேற் றுகில்'

—இது யார் கூற்று? இக் குறளுக்குப் பொருள் கூறி விளக்கம் தருக. (குறள் 1087)

இது தலைவன் கூற்று. தலைவியைக் கண்ணுற்ற தலைவன் அவள் கொங்கைகளைக் கண்டதனால் தனக் குண்டான வருத்தத்தைக் கூறியதாகும். பொருள் : இம்மாதரின் முகஞ் சாயாத முலைகளின் மேலிட்ட துகில் அவை என்னைக் கொல்லாமல் காத்தலினால் கொல்லுந் தன்மை வாய்ந்த மதக் களிற்றின்மேல் இட்ட முகபடாத் தினை யொக்கும். யானையின் கண்ணை முகபடாம் மறைத் தல் பற்றிக் 'கட்படாம்' என்றும், முலைகளைத் துகிலால் மறைத்தல் நாணுடை மகளிர்க்கு இயல்பாகலின், அத்து கிலூடே அவற்றின் வெம்மையும் பருத்திருக்கும் தன் மையும் கண்டு இத்துணை யாற்றலுடையவை இனி எப் பொழுதும் சாய்வில எனக் கருதி 'படாமுலை' என்றும் கூறினான் தலைவன். படாம் யானையின் கண்ணை மறையா வழி எதிர் வருவாரைக் கொல்லும் என்னும் உவமை, முலைகளைத் துகில் மறையாவழி என்னைக் கொல்லும் என்ற பொருள் தோன்ற நின்றது.

7. நுதல், அணிகலன் ஆகியவற்றால் தலைவனுக்கு நேர்ந்த வருத்தத்தை விளக்குக. (குறள் 1088, 1089).

போர்க்களத்து வந்து நேராத பகைவரும் நேர்ந் தார் வாய்க்கேட்டு அஞ்சுதற்கு ஏதுவாகிய என்வலி இவ்வழகிய பெண்ணின் ஒளிபொருந்திய நுதல் ஒன் றற்கே அழிந்துவிட்டது! புறத்தில் மான்பிணையொத்த மடநோக்கினையும், அகத்தில் நாணினையும் உடையவ ளாகிய இவளுக்கு ஒற்றுமையுடைய இவ்வணிகளே அமைத்திருக்க வேற்றுமையுடைய அணிகளை (அணி கலன்களை)ப்படைத்து அணிதல் என்னபயனுடைத்து என்று தலைவன் கூறினான்.

8. 'கண்டார் மகிழ்செய்தல் இன்று'—எது? இதற்கு எடுத்தாண்ட உவமை எது? விளக்குக. (குறள். 1090).

கண்டவர் பால் மகிழ்ச்சியைச் செய்யாதது அடப் படும் கள்; அதாவது காய்ச்சி வடித்த கள். இதற்கு

எடுத்தாண்ட உவமை காமமாகும். காய்ச்சி வடித்த கள் அதை உண்டவர்களுக்குத்தான் மகிழ்ச்சியைத் தரும். காமமோ கண்டார்பால் மகிழ்ச்சியைச் செய்யும். காமத்தைப்போல் கண்டவர்களையே மயக்கும் தன்மை கள்ளுக்கில்லை என்பதாம். மகிழ் செய்தலில் காமம் கள்ளினும் சிறந்ததேயெனினும், இவள் குறிப் பாராய்ந்து அறியாமையின் யான் அது பெற்றிலேன் என்ற குறிப்பில் தலைவன் இதைக்கூறினான்.

9 குறிப்பறிதல் பற்றிச் சிறு குறிப்புவரைக.

(அதிகாரம் 110)

தலைமகன் தலைமகள் குறிப்பினையறிதலும், தோழி குறிப்பினையறிதலும், தோழியானவள் தலைமகன், தலைமகள் ஆகிய இருவர் குறிப்பினையும் அறிதலும் ஆகும். தகையணங்குற்ற தலைமகன் தலைமகளைக் கூடுங்கால் குறிப்பறிய வேண்டுதலின் இது தகையணங்குறுத் தலின் பின்வைக்கப்பட்டது.

10. தலைமகன் தலைமகள் உளப்பாட்டுக் குறிப்பினை அவள் நோக்கினால் அறிந்ததை விளக்குக.

(குறள் 1091, 1092)

இவளுடைய உண்கண்ணின் அகத்ததாய நோக்கு அப்பொழுது என்மேல் இரண்டு நோக்காயிற்று. அவற்றுள் ஒரு நோக்கு (பார்வை) என்பால் நோய் செய்யும் நோக்கு; ஏனையது அந்நோய்க்கு மருந்தாய நோக்கு. இவள் கண்கள் யான் காணாமல் என்மேல் நோக்குகின்ற அருகிய (சிறிது காலமேயுள்ள) நோக்கம் மெய்யுறு புணர்ச்சியின் ஒத்தபாதியளவன்று; அதனினும் மிகுதியாகும். தலைவன் நோக்கியபொழுது நாணியிறைஞ்சியும், நோக்காவழி உற்று நோக்கியும் வருதலால் 'களவு கொள்ளும்' என்றும், அவ்வாறு உற்று நோக்குங்காலம் சிறிதாகலின் 'சிறுநோக்கம்' என்றும், அஃது உளப்பாடு உள்வழி நிகழ்வதாகலின் இனிப் புணர்தல் உறுதியென்பான் 'செம்பாகமன்று பெரிது' என்றும் கூறினான் தலைவன்.

11. தலைமகள் உளப்பாட்டுக் குறிப்பை அவள் நோக்கினாலும் நாணினாலும் மகிழ்ச்சியினாலும் தலைவன் அறிந்ததை விளக்குக (குறள் 1093—1095)

யான் நோக்காதபொழுது அவள் என்னை அன்போடு நோக்கினாள்; நோக்கி ஏதோ ஒன்றை உட்கொண்டு நாணி இறைஞ்சினாள். அக்குறிப்பு எங்கள் இருவரிடையேயும் தோன்றிய அன்பாகிய பயிர் வளர அதன்கண் அவள் வார்த்த நீராயிற்று. யான் அவளை நோக்குங்கால் அவள் எதிர்நோக்காது இறைஞ்சி நிலத்தை நோக்கி நிற்பாள். அஃதறிந்து யான் நோக்காக்கால் அவள் என்னை நோக்கித் தன்னுள்ளே மகிழ்வாள். அவள் நேரே குறிக்கொண்டு நோக்கவில்லையே தவிர ஒரு கண்ணைச் சிறங்கணித்தாள்போல (சுருங்கினாள்போல) என்னை நோக்கிப் பின் தன்னுள்ளே மகிழ்வாள். இனி இவளையெய்துதல் உறுதி என்று எண்ணினான்.

12. தோழி சேட்படுத்தவழி அவள் குறிப்பறிந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியதைத் தொகுத்துத் தருக. (குறள் 1096, 1097)

புறத்து நொதுமலர் போலக் கடுஞ்சொற்களைச் சொன்னாராயினும், அகத்துச் சினமில்லாதவர் சொல் பிற்பயத்தல் குறையுற்றூரால் விரைவில் அறியப்படும். கடுஞ்சொல்லாவது, 'இவ்விடம் காவல் மிகுதியுடைத்து. நீர் வர வேண்டாம்' என்றல் முதலாயின. சேட்படை = காப்பு மிகுதி சொல்லித்தலைவனை அகலுமாறு செய்தல். பின் இனிதாய் முன் இன்னாதாய சொல்லும், அகத்தில் சினவாதிருந்தே புறத்துச்சினந்தவர் போன்ற வெகுளி நோக்கும் அயலார் போன்று நட்பாயினார்க்கு ஒரு குறிப்புப்பற்றி வருவனவாகும். இவை உள்ளே ஒரு பயன் குறித்துச் செய்வனவாதலின் இவற்றிற்கு நாம் அஞ்சவேண்டுவதில்லை என்று தலைவன் எண்ணினான்.

13. தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைக் கண்டு தலைமகன் கூறியது என்ன? (குறள் 1098;

என்னை அகற்றுகின்ற சொற்கு ஆற்ருது யான் இரந்து நோக்கியவழி, அஃதறிந்து நெகிழ்ந்து உள்ளே மெல்ல நகுவாள். அதனுல் நுடங்கிய இயல்பினை யுடையவட்கு அந்நகையின் கண்ணே தோன்றுகின்ற நன்மைக்குறிப்பு ஒன்று உண்டு என்ருன். அக்குறிப்பு இனிப் பழுதாகாது என்று எண்ணினுன்.

14. தோழி மதியுடம்பறிவாள் தன்னுள்ளே சொல்லியது என்ன? (குறள் 1099, 1100)

முன்னறியாதவர்போல ஒருவரையொருவர் பொது நோக்கத்தால் நோக்குதல் இக் காதலையுடையார் கண்ணே உளவாகின்றன. காமத்திற்குரிய இருவருள் ஒருவர் கண்களோடு ஒருவர் கண்கள் நோக்கால் ஒக்குமாயின் அவர் வாய்மை தோன்றச் சொல்லுகின்ற வாய்ச் சொற்கள் ஒரு பயனுமுடையவல்ல.

15. புணர்ச்சி மகிழ்தலில் இயற்கைப்புணர்ச்சி யிறுதிக்கண் சொல்லியதை விளக்குக (குறள் 1101)

இயற்கைப்புணர்ச்சியிறுதிக்கண் தலைவன் தனக்குள், கண்ணுற் கண்டும் செவியாற்கேட்டும், நாவாலுண்டும் மூக்கால் மோந்தும் மெய்யால் தீண்டியும் அனுபவிக்கப்படும் ஐம்புலனும் இவ்வொளி பொருந்திய தொடியையுடையவள் கண்ணே உளவாயின என்று கூறிக்கொண்டான். வேறு வேறு காலங்களில் வேறு பொருள்களால் அனுபவிக்கப்படுவன ஒரு காலத்து இவள் கண்ணே அனுபவிக்கப்பட்டன என்ற கருத்தில் தலைவன் இவ்வாறு கூறினுன்.

16. 'பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை தன்னேய்க்குத் தானே மருந்து'—இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (குறள் 1102)

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனுர் இயற்றிய திருக்குறளில் காமத்துப்பாலில் புணர்ச்சி மகிழ்தல் என்ற அதிகாரத்தில் இக்குறள் வந்துள்ளது. களவொழுக்கத்தில் இடந்தலைப்பாட்டின் கண் தலைமகன்

சொல்லியதாகஅமைந்துள்ளது. தலைவன்முன்னாட்கூடிய இடத்திலே வந்து தலைவியை எதிர்ப்பட்டான். அதனால் மகிழ்ந்து, வாதம் முதலிய பிணிக்கு மருந்தாவன அவற்றிற்கு ஆதிகாரணமாயினவன்றி மாறுய இயல்பினை யுடையனவாம். அவ்வாறன்றி இவ்வணியிழையினை யுடையாள் தன்னினாகிய பிணிக்கு மருந்தும் தானே யாயினான்.

17. 'தாமரைக்கண்ணான் உலகை' விட இனிதாகத் தலைவன் எதைக் கருதினான்? (குறள் 1103)

தலைவியைக்கூடப் பெருமையால் தலைவன் வருந்தி மெலிந்தான். பாங்கன் இந்நிலை உனக்கு எற்றினானு யது என்று வினவினான். தலைவியாலாயது என்று தலைவன் கூறக்கேட்ட பாங்கன், 'நிரதிசய இன்பத்திற்கு (பேரின்பத்திற்கு) உரிய நீ இச்சிற்றின்பதற்கு இத்தன்மையுடையையாதல் தகாது' என்று இடித்துக் கூறினான். அது கேட்ட தலைவன், ஐம்புலன்களையும் நுகர்வார்க்குத் தாம் விரும்பும் மகளிரின் மெல்லிய தோளின் கண்துயிலும் துயில்போல, அவற்றைத் துறந்த தவயோகிகளெய்தும் செங்கண்மால் உலகம் (மோட்சலோகம்) வருந்தாமல் எய்தமுடியுமா? என்று கேட்டான். இத்தன்மை வாய்ந்த துயிலைவிட்டுத் தவ யோகங்களான் வருந்த வேண்டுதலின் எம்மனோர்க்கு ஆகாது என்னும் கருத்தில் 'இனிது கொல்' என்றான்.

18. பாங்கற் கூட்டத்து இறுதிக்கண்ணும், தோழியிற் கூட்டத்து இறுதிக்கண்ணும் தலைவன் சொல்லிய வற்றைக் கூறுக. (குறள் 1104, 1105, 1106)

பாங்கற்கூட்டத்து இறுதியில் தலைவன், தலைவியை அகன்றபொழுது சுடுகிறது; அணுகுங்கால் குளிர்கிறது. இத்தன்மை வாய்ந்த தீயை என்னிடம் தருதற்கு இவள் எவ்வுலகத்தில் பெற்றாள்? என்று வியந்து கூறினான். இத்தகைய தீ உலகத்து இல்லையாகலின் 'யாண்டுப் பெற்றாள்' என்று வியந்தான். அவளால் காமத்தீ வெளிப்படுதலின் அதை அவள் தந்தாள் என்றும் கூறினான்.

பாங்கற்கூட்டம் நிகழ்ந்தபின், தோழியைக் குறையிரந்து அவள் வாயிலாகத் தலைவியைக் கூடினன். தோழியிற் கூட்டத்து இறுதியில் தலைவன், மிக இனிய பொருள்களைப்பெருது அவற்றின்மேல் விருப்பம்மிகுந்த பொழுதில் அவையவை தாமே வந்து இன்பம் செய்தால் எப்படி இருக்குமோ அப்படி, எப்பொழுதும் பெற்றுப் புணரினும் பூவினை அணிந்த தழைத்த கூந்தலினையுடையவளின் தோள்கள் இன்பம் செய்யும்.

தலைவியைப் பெருது வாடிய என்னுயிர் அவளைப் பெற்று உறுந்தோறும் தளிர்க்கும் வகையில் தீண்டுதலால் இப்பேதைக்குத் தோள்கள் தீண்டப்படுவதோர் அமிழ்தினால் செய்யப்பட்டனவாகும் என்ருன்.

19. புணர்ச்சி மகிழ்தலில் தலைவன் தோழிக்குக் கூறியவற்றைத் தொகுத்துரைக்க. (குறள் 1107—1109)

அழகிய மாமை நிறத்தையுடைய அரிவையது முயக்கம் இன்பம் பயத்தற்கண், தமக்குரிய இல்லின்கண் இருந்து உலகோர் தம்தாளான் வந்த பொருளைத் தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்கட்குப்பகுத்துத் தம் கூற்றை உண்டாற்போலாகும். இவளை வரைந்து கொண்டு இல்லறம் நடத்தல் வேண்டும் என்று சொன்ன தோழிக்குத் தலைவன் இவ்வாறு கூறினன். தோழி தலைவனை நோக்கி, ஒத்த அன்புடைய நுமக்கு ஒருபொழுதும் விடாத முயக்கமே இனியது என வரைவு கடாவினள். அதற்குத் தலைவன் தோழியை நோக்கி, நீ சொல்லுகின்றதொக்கும். ஒருபொழுதும் நெகிழாமையின் காற்றால் இடையறுக்கப்படாத முயக்கம் ஒருவரை யொருவர் விழைவாரிருவர்க்கும் இனிதே என்ருன்.

வரைந்துகொண்டு வாழுங்கால் கரத்தல் வேண்டாமையின் இடையறவில்லாத கூட்டமே இன்பப்பயன் உடைத்து என வரைவுகடாவினள் தோழி. அதற்குத் தலைவன், புணர்ச்சி இனிதாதற் பொருட்டு வேண்டுவதாய ஊடலும் அதனை அளவறிந்து நீங்குதலும்

அதன்பின் நிகழ்வதாய அப்புணர்ச்சியும் என இவை யல்லவா வரைந்துகொண்டு காமத்தை இடைவிடாது எய்தியவர் பெற்ற பயன்கள்? என்று சொன்னான்.

20. புணர்ந்து உடன் போகின்றான் தன்னுள்ளே சொல் லியதைக் கூறுக. (குறள் 1110)

நூல்களாலும் நுண்ணுணர்வாலும் பொருள்களை அறிய அறிய முன்னைய அறியாமை காணுதல்போல், சிவந்த இழையினையுடையாளை இடைவிடாது செறியச் செறிய இவள்பால் காதல் காணப்படுகின்றது என் றான். அறிவிற்கு எல்லையில்லாமையால் மேன்மேல் அறிய அறிய முன்னை அறிவு அறியாமையாய் முடியு மாறுபோலச் செறிவிற்கு எல்லையின்றி மேன்மேல் செறியச் செறிய முன்னைச் செறிவு செறியாமையாய் முடிந்தது எனத் தன் ஆராமை கூறினான் தலைவன்.

21. தலைமகன் தலைமகள் நலத்தைப் புனைந்து சொல்லிய தாகிய நலபுனைந்துரைத்தலில் அமைந்துள்ள கருத்துக்களைத் தொகுத்துரைக்க (குறள் 1111—1120)

இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கண் தலைமகன், அனிச்சமலரைப்பார்த்து, அனிச்சப்பூவே! வாழ்வாயாக. மென்மையால் நீ எல்லாப் பூவைக் காட்டிலும் நல்ல இயற்கையையுடையை. அங்ஙனமாயினும் எம்மால் விரும்பப்பட்டவள் நின்னைவிட மெல்லிய இயற்கையை யுடையவள் என்று கூறினான்.

இடந்தலைப்பாட்டின்கண் தலைமகன் தன்நெஞ்சைப் பார்த்து நெஞ்சே! யானே காணப்பெற்ற இவள் கண் களைப் பலராலும் காணப்படும் பூக்கள் ஒக்குமென்று கருதித் தாமரை குவளை நீலம் முதலிய மலர்களைக் கண் டால் மயங்குகின்றாய். நின்னறிவு இருந்தவாறு என்னே! என்றான்.

கூட்டுதலுற்ற பாங்கனுக்குத்தலைமகன் தலைமகளது இயல்பைக் கூறும்பொழுது, வேய் போலும் தோளினை

யுடையவட்கு நிறம் தளிர் நிறமாயிருக்கும். பல் முத்தமாயிருக்கும். இயல்பாய நாற்றம் நறுநாற்றமாயிருக்கும். உண்கண்கள் வேலாயிருக்கும் என்று கூறினான்.

பாங்கற் கூட்டத்துச் சென்று சார்தலுற்ற தலைவன் குவளைப்பூக்கள் காணுந்தொழிலையுடையவாயின் மாட்சிமைப்பட்டஇழையினையுடையாள் கண்களை யாம் ஒவ்வேமென்று கருதி அந்நாணினால் கவிழ்ந்து நிலத்தினை நோக்கும் என்றான்.

பகற்குறிக்கண் பூவணி கண்டு தலைவன், இவள் தன்மென்மை கருதாமல் அனிச்சப்பூவை முகிழ்களையா சூடினாள். இனி இவள் இடைக்கு நல்ல பறைகள் ஒலியா என்றான்.

இரவுக் குறிக்கண் மதியைக் கண்டு, வானத்து மீன்கள், தம்மதியினையும் எம்மடந்தையின் முகத்தினையும் இதுமதி, இதுமுகம் என்று வேறுபடுத்தி அறியமாட்டாமல் தம் நிலையினின்றும் கலங்கித் திரிகின்றனவே என்று தலைவன் கூறினான். மேலும் தலைவன், அம் மீன்கள் அங்ஙனம் கலங்குதற்குக் காரணம் யாது? கலங்க வேண்டியதில்லையே! முன் குறைந்த இடம்வந்து நிரம்பி விளங்கும் மதியைப்போல இம்மாதர் முகத்தில் மறுவுண்டோ? இல்லையே! தேய்தலும், வளர்தலும், மறுவுடைமையும் முகத்திற்கு இல்லாமையால் திங்களுக்கும் இதற்கும் வேறுபாடு அறியலாயிருக்க மீன்களால் அறிய முடியவில்லையேயென இகழ்ந்தான். மதியைப் பார்த்து மதியே! வாழ்வாயாக. இம்மாதர் முகம்போல யான் மகிழுமாறு ஒளிவீச வல்லையாயின் நீயும் என் காதலைப் பெறுவாய் என்றான். மேலும் மதியே! இம் மலர் போலும் கண்ணினையுடையவளின் முகத்தை நீ ஒத்திருக்கவேண்டுமாயின் இதுபோல யான் மட்டுமே காணத் தோன்று; பலர் காணத் தோன்றாதே, என்றான். தலைவியின் முக அழகை முழுதுமாகக் கண்டு அனுபவித்தான் ஆதலின் நிலவு பலர் காணத் தோன்றுதலை இழித்துக் கூறினான்.

உடன்போக்கு உரைத்த தோழிக்கு அதனருமை கூறி மறுத்த பொழுது தலைவன், உலகத்தாரால் மென்மைக்கு எடுக்கப்பட்ட அனிச்சப்பூவும் அன்னப் பறவையின் சிறகும் ஆகிய இரண்டும், மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்போல வருத்தஞ் செய்யும் என்றான்.

2. காதற்சிறப்பு உரைத்தலில் உள்ள தலைவன் கூற்றுக்களைத் தொகுத்துரைக்க.

(குறள். 1121—1125)

இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் தலைமகன் தன் நயப்பை உணர்த்தும்பொழுது, இம் மெல்லிய மொழியினை உடையாளது வெண்ணிறமுள்ள எயிற்றில் ஊறிய நீர் பாலுடனே தேனைக் கலந்த கலவைபோன்ற இன்சுவைத்தாய் இருந்தது. என்று கூறினான்.

பிரிவச்சம் கூறும்பொழுது, உடம்போடு உயிரிடை உண்டான நட்புக்கள் எத்தன்மை வாய்ந்தனவோ அத்தன்மை உடையனவாக இம் மடந்தையோடு எம் மிடை உளவாய நட்புக்கள் இருந்தன, என்று கூறினான்.

இடந்தலைப் பாட்டின்கண் தலைமகள் நீக்கத்து, என் கண்ணில் கருமணியின்கண் உறையும் பாவாய் நீ அங்கு நின்றும் போய் விடுவாயாக. நீ போகாதிருந்தால் எம்மால் விரும்பப்பட்ட திருநுதலை உடையாளுக்கு இருக்க இடமில்லையாம் என்றான். யான் காணாது அமையாமையின் இவள் புறத்துப் போகாமல் என் கண்ணுள் இருக்கவேண்டியவள். இருக்குங்கால் நின்னோடு ஒருங்கி இருக்க இடம் போதாமையின் நின்னைக் காட்டிலும் சிறந்த இவளுக்கு அவ்விடத்தைக் கொடுத்து நீ வெளியில் போவாயாக என்று கூறினான்.

பகற்குறிக் கண் புணர்ந்து நீங்கும் தலைமகன் தெரிந்த இழையினை உடையவள் எனக்குப் புணருமிடத்து உயிர்க்கு உடம்போடு கூடி வாழ்தல் போலும், பிரியுமிடத்து அவ்வுயிர்க்கு உடம்பிலிருந்து நீங்கிப் போதல் போலும், எனக் கூறினான்.

ஒருவழித் தணந்து வந்த தலைமகன் நீயிர் தணந்த பொழுது எம்மை நினைந்தீரோ என்ற தோழிக்கு, ஒளி பொருந்திய போரைச் செய்யும் கண்ணினை உடையாள் குணங்களை யான் மறந்தேனாயின் நினைப்பேன். ஒரு பொழுதும் அவளை மறத்தலை அறியேன். ஆகலான் நினைத்தலையும் அறியேன் என்றான்.

23. காதற்சிறப்பு உரைத்தலில் தலைமகளின் கூற்றுக் களைத் தொகுத்துரைக்க. (குறள் 1123—1130

ஒழிவழித் தணப்பின்கண் தலைமகனைத் தோழி இயற் பழிப்பாள். என்றஞ்சி அவள் கேட்பத் தன்னுள்ளே, தாம் காணாமை பற்றிச் செய்மைக் கண்போயினரென்று கருதுவார் கருதுக. எம்முடைய காதலர் எம் கண்ண கத்து நின்றும் போகார். யாம் அறியாது இமைத் தோமாயினும் அதனால் வருந்தவும் மாட்டார். ஆதலால் காணப்படா நுண்ணியராவார் என்று தலைவி சொல்லிக் கொண்டாள். காதலர் எப்பொழுதும் எம் கண்ணில் உள்ளார் ஆகலான் கண்ணினை அஞ்சனத்தால் எழுது வ்தும் செய்யேன். எழுகின்ற அத்துணைக் காலமும் அவர் மறைவர் என்று அறிந்து எழுதேன். காதலர் என் நெஞ்சில் உள்ளார் ஆகலான் யான் உண்ணுங் கால் வெய்தாக உண்டால் அவர் வெம்மை உறுவரென் றஞ்சி வெம்மை உள்ள உணவுகளை உட்கொள்ளு தற்கும் யான் அஞ்சுகின்றேன்.

வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தலைமகள் ஆற்றுதற் பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித் தாள். அப்பொழுது தலைவி இயற்பட மொழியக் கருதி, என் கண் இமைக்குமாயின் உள்ளிருக்கின்ற காதலர் மறைதலையறிந்து இமையேன். அவ்வளவிற்கு அவ ரைத் துயிலாநோய் செய்தார் அன்பிலர் என்று இவ்வூர் சொல்கின்றது. காதலர் எப்பொழுதும் என் உள்ளத் துள்ளே உவந்து உறைகின்றார். அதனையறியாது அவரைப் பிரிந்து உறைகிறார்; அன்பிலர் என்று இவ்வூர் சொல்கின்றது; இது என்ன அறியாமை? எனத் தலைவி கூறினாள்.

24. **நாணுத் துறவுரைத்தல் என்ற அதிகாரம் ஓரங்க நாடகம்போல் அமைந்திருக்கும் பாங்கினை எடுத்துக் காட்டுக. (குறள் 1131—1140)**

தோழி தலைவனைச் சேட்படுத்தினாள். சேட்படுக்கப் பட்டு ஆற்றாய் தலைமகன், அரியராய மகளிரொடு காமத்தை அனுபவித்துப் பின் அதுபெறாது துன்புற்ற ஆடவர்க்குப் பண்டும் ஏமமாய் வருகின்ற மடலேறு தலைத் தவிர இனி எனக்கு வலியாவது இல்லை என்றான்.

அதுகேட்ட தோழி நாணுடைய நுமக்கு அது முடியாது என மடல் விலக்கினாள். விலக்கிய தோழிச்குத் தலைவன், மடலேறுதலை விலக்குவதாய நாணினை யகற்றி, பிரிவுத் துன்பத்தைப்பொறாத உடம்பும் உயிரும் துன்பத்திற்கு ஏமமாகிய மடல்மாவினை ஊரக் கருதுகின்றன என்றான்.

இதைக்கேட்ட தோழி உனக்கு நாணமேயன்றி நல்லாண்மையும் உண்டன்றோ? அதனால் உன்னால் மடலேறமுடியாது என்றாள். அதற்குத் தலைவன், நாணத்தையும் மிகுந்த ஆண்மையையும் யான் பண்டு உடையவனாய் இருந்தேன். அவை காமத்தால் நீங்கி விட்டபடியால் அக்காமம் மிக்கவர் ஏறும் மடலினை மட்டுமே இன்று யான் உடையவனாயிருக்கிறேன் என்றான்.

அதுகேட்ட தோழி நாணும் நல்லாண்மையும் காம வெள்ளத்திற்குப் புணையாகலின் நீ கூறியவாறு காமத்தால் அவை நீங்குவன அல்ல என்றாள். அதற்குத் தலைவன், யான் காமக்கடும்புனலைக் கடத்தற்குக் கொண்ட நாணும் நல்லாண்மையும் ஆகிய புணைகளை என்னிடமிருந்து பிரித்துக் காமமாகிய கடும்புனல் கொண்டு போகின்றது என்றான்.

இதைக் கேட்டவுடன் தோழி இவ்வாற்றாமையும் மடலும் நுமக்கு எவ்வாறு வந்தன? என்று கேட்டாள். அதற்குத் தலைவன், மாலைப் பொழுதின்கண் அனுபவிக்கும் துயரினையும், அதற்கு மருந்தாகிய மடலினையும்

முன்புயான் அறியேன். இப்பொழுது எனக்கு மாலை போலத் தொடர்ந்த சிறுவளையினையுடையவள் தந்தாள் என்று கூறினான். இத்துயர் நின்னால் நீங்கும் என்ற கருத்தில் இதைக் கூறினான்.

தோழியானவள் அதைக் கேட்டவுடன் இன்றைக்கு மடலூரும் நேரம் கழிந்துவிட்டது என்றாள். அதற்குத் தலைவன், நின்பேதை காரணமாக என் கண்கள் ஒரு காலும் தூக்கத்தைப் பெறவில்லை. அதனால் எல்லாரும் துயில்கின்ற இடையாமத்திலும் யானிருந்து மடலூர் தலையே கருதிக்கொண்டிருப்பேன் என்றான்.

பேதைக்கு என்கண் படல் ஒல்லா என்பதைக் கேட்ட தோழி, அறிவில்லாதவராகிய மகளிரைவிட அறிவுடையராகிய ஆடவரல்லவா ஆற்றியிருக்கத் தக்க வர்? என்றாள். அதற்குத் தலைவன், கடல்போலக் கரை யற்ற காமநோயினையனுபவித்தாலும் மடலூர்தலைச் செய்யாமல் ஆற்றியிருக்கும் பெண் பிறப்புப்போல மிக்க தகுதியினையுடைய பிறப்பு உலகத்தில் இல்லை. ஆணாய்ப் பிறந்த எனக்கு அவ்வடக்கம் இல்லை; நீ இதை அறிந் திலையே யென்றான். இதுவரையில் தலைமகன் தோழி இவர்களுக்குள் நடந்த உரையாடலைக் கண்டோம். இனித் தலைவி கூற்றுக்களைக் காணலாம்.

காப்புச் சிறைமிக்குக் காமம் பெருகிய வழி தலைவி, இவர் நிறையால் நாம் மீதூர்தற்கு அரியர் என்று அஞ் சாமல், மிகவும் அளிக்கத்தக்கவர் என்று இரங்குதல் செய்யாமல், மகளிரின் காமம், அவர் மறைத்தலைக் கடந்து மன்றின் கண்ணே வெளிப்படுவதாயிருந்தது என்றாள். இதில் உலகத்துப் பெண்பாலரின் காமத் தியல்பு கூறுபவளைப் போன்று தன் காமம் பெருகியதை யும், இனி அறத்தொடு நிற்றல்வேண்டும் என்பதையும் குறிப்பால் கூறினாள் ஆயிற்று. மேலும் தலைவி, யான் முன் அடங்கி நிற்றலால் எல்லாரும் என்னை அறிதல் இலர்; இனி அவ்வாறு அடங்கி நில்லாது யானே வெளிப்பட்டு அறிவிப்பேன் என்று கருதி என் காமம் இவ்வூர் வீதியின் கண்ணே மயங்கிச் சுழல்கின்றது.

தோழி செவிலிக்கு அறத்தொடு நின்ருள். அது தலைவிக்குத் தெரியாது. அந்நிலையில் தோழி தலைவியிடம் சென்று யான் நிற்கவேண்டிய விதம் யாது? என்று நகையாடினுள். அதற்குத் தலைவி, யாம் கேட்குமாறு மட்டுமன்றிக் கண்ணுற் காணுமாறு எம்மை அறிவிலார் நகைக்கின்றனர். அவர் அங்ஙனம் நகைக்கின்றது யாமுற்ற நோய்கள் தாமும் உருமையினுலே யாகும் என்று கூறினுள். இதில், தோழி அறத்தொடு நின்றமையறியாது வரைவுமாட்சிமைப் படுகின்றிலள் எனப் புலக்கின்ருள் ஆகலின் தோழியை ஏதிலாளாக்கிக் கூறினுள்.

### 25. அலரறிவுறுத்தல் என்ருல் என்ன?

களவொழுக்கம் வேண்டிய தலைமகன் பிறர் கூறுகின்ற அலர் தனக்கு ஆகின்றவற்றைத் தோழிக்கு அறிவுறுத்தலும், வரைதல் அல்லது உடன்போக்கு இவற்றுள் ஒன்று வேண்டிய தலைமகளும் தோழியும் அவ்வலரைத் தலைமகனுக்கு அறிவுறுத்தலுமாம்.

### 26. அலர் அறிவுறுத்தல் என்ற அதிகாரத்தில் அமைந்துள்ள தலைமகன் கூற்றுக்களைத் தொகுத்துத் தருக. (குறள் 1141—1145)

அல்லகுறிப்பட்ட மறுநாள் வந்த தலைமகனைத் தோழி அலர் கூறி வரைவு கடாயபொழுது அவன், மடந்தையொடு எம்மிடை நட்பு ஊரின்கண் அலர் எழுதலால், அவளைப் பெருது வருந்தும் என் அரிய உயிர் அவளைப்பெற்றது போன்று நிலைபெறும். அந்நிலை பேற்றைத் தெய்வத்தால் யானே அறிவதல்லது கூறுகின்ற பலரும் அறியார் என்ருன்.

மலர்போலும் கண்ணையுடையாளது எய்தற்கருமையறியாது இவ்வூர் அவளை எளியளாக்கி அவளோடு அலர் கூறுதலை எமக்கு உபகாரமாகச் செய்தது. எங்கட்குக் கூட்டமுண்மையை இவ்வூர் அறிதலால் விளைந்த அலர் எனக்குக் கிடைத்தற்கரியது ஒன்று அன்ருே? அதுகேட்ட என்மனம் அக்கூட்டத்தைப்

பெருதிருந்தே பெற்ருற் போலும் தன்மையையடைந்தது. என் காமம் இவ்வூர் எடுக்கின்ற அலரானே அலர்தலைப் பெற்றது. அவ்வலர் இல்லையாயின் தன் இயல்பிழந்து (காமம்) சுருங்கும். கள்ளுண்பார்க்குக் களிக்குந்தோறும் கள்ளுண்டல் இனிதாமாறுபோல எனக்குக் காமம் அலராகுந்தோறும் இனிதாகின்றது என்று கூறினன்.

27. **'திங்களைப் பாம்பு கொண்டற்று'—இவ்வுமையால் வள்ளுவர் விளக்கும் பொருளைத் தெளிவுபடுத்துக.**
(குறள். 1146)

இடையீடுகளானும் அல்லகுறியானும் தலைமகனை யெய்தப் பெருத தலைவி அவன் சிறைப்புறத்தானுகத் தோழிக்குச் சொல்லுவாளாய் அலரை அறிவுறுத்தி வரைவு கடாவினுள். அப்பொழுது, யான் காதலரைக் கண்ணுறப் பெற்றது (கண்டது) ஒரு நாளேயாகும். அதனுல் எழுந்த அலர் அவ்வளவிற்றன்றித் திங்களைப் பாம்புகொண்ட அலர்போன்று உலகெங்கும் பரந்தது என்ருள். இதில், காட்சியின்றியும் அலர் பரக்கின்ற இவ்வொழுக்கம் இனியாகாது, வரைந்து கோடல் வேண்டும் என்னும் கருத்து வெளிப்படுகிறது.

23. **அலரறிவுறுத்தலில் தலைமகள் கூற்றுக்களைத் தொகுத்துரைக்க.** (குறள். 1146—1149.)

மேலேகண்ட குறள் 1146-ன் கருத்தையும் இனி வருவனவற்றுடன் சேர்த்துக் கொள்க. தலைமகன் வரைவு நீட்டியதால் தலைமகள் ஆற்ருள் ஆயினுள். தலைமகன் சிறைப்புறத்தானுதலையறிந்த தோழி தலைவியிடம், ஊரவர் அலரும் அன்னை சொல்லும் நோக்கி நீ ஆற்றல் வேண்டும் என்று கூறினுள். அதற்குத் தலைவி, இக்காம நோயாகிய பயிர், இவ்வூர் மகளிர் எடுக்கின்ற அலர் எருவாக, அது கேட்டு அன்னை வெகுண்டு சொல்கின்ற வெஞ்சொல் நீராக வளர்கின்றது. ஏதிலார் எடுக்கின்ற அலரால் நாம் காமத்தை அவிப்போம்

என்று கருதுதல் நெய்யால் எரியை அவிப்போம் என்று கருதுதலோடு ஒக்கும் என்றாள்.

தலைவன் வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிந்தான். தலைவி ஆற்றாளாயினள், பின்பு தலைவன் சிறைப்புறத்தில் வந்து நிற்பதைத் தோழி அறிந்து கொண்டு தலைவியிடம் அலருக்கு அஞ்சி நீ ஆற்றல் வேண்டும் என்றாள். அதற்குத் தலைவி யாம் எதிர்ப் பட்டபொழுது நின்னிற் பிரியேன்; அஞ்சலோம்பு என்றார். அவரே இன்று கண்டார் பலரும் நாணுமாறு நம்மைத் துறந்தபின், நாம் ஏதிலார் கூறும் அலருக்கு நாணக் கூடுமோ? கூடாது என்றாள்.

29. அலரறிவுறுத்தலில் தோழி கூற்றைத் தெரிவிக்க. (குறள். 1150)

தலைமகன் சிறைப்புறத்தில் வந்து நின்றான். அப் பொழுது தோழி தலைமகளுக்குச் சொல்லுவாளாய் அலரை அறிவுறுத்தித் தலைமகன் உடன் போக்கை நயக்குமாறு சொன்னாள். உடன் போதலுக்கு ஏது வாகல் நோக்கி யாம் பண்டே விரும்புவதாகிய அலரை இவ்வூர் எடுக்கின்றது. இனிக்காதலர் தாமும் யாம் வேண்டியக்கால் அதனை (உடன்போக்கை) இனிதின் நேர்வர். அதனால் இவ்வலர் நமக்கு நன்றாய் வந்தது என்றாள்.

30. பிரிவாற்றாமை—சிறு குறிப்புவரைக. (அதிகாரம். 116)

திருக்குறள் காமத்துப்பாலில் கற்பியலின் முதல் அதிகாரம் பிரிவாற்றாமையாகும். வரைந்து எய்தியபின் தலைமகன் அறம் பொருள் இன்பங்களின் பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினும் (அண்மையான இடம்) தலைமகளைப் பிரிந்து செல்வான். செல்லும்பொழுது அப்பிரிவினை ஆற்றாளாகிய தன்மையே பிரிவாற்றாமை யாகும். பிரிவாற்றாமையாவது நான்கு வகைப்படும். அவை, பிரிவுணர்த்திய தலைமகனுக்குத் தோழிகூறலும், தோழிக்குத் தலைமகள் தானே அவன் குறிப்பாலு

ணர்ந்து கூறலும், பிரிவுணர்த்திய வழித்தலைவி கூறலும், தலைமகன் பிரிந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் மறுத்துக் கூறலும் என்பனவாகும்.

31. 'செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின் வல்வரவு வாழ்வார்க் குரை.'—இக்குறளைப் பொருள் கூறி விளக்குக. (குறள். 1151)

பிரிந்து விரைவில் வருவேன் என்ற தலைமகனுக்குத் தோழி கூறியதாக இக்குறட்பா வந்துள்ளது. இதில் தோழி தலைமகனை நோக்கி, நீ எம்மைப்பிரியாமை உண்டாயின் அதனை எனக்குச்சொல். அஃதொழியப்பிரிந்து போய் விரைவில் வருவதாகச் சொல்வாயானால் அதனை அப்பொழுது உயிர் வாழ்வார்க்குச் சொல் என்றாள். தோழியும் தலைவியும் 'தான் அவள்' என்ற வேற்றுமையின்றியுள்ளனர் ஆதலின் தோழி 'எனக்கு' என்றாள். தலைவன் திரும்பிவரும் வரையில் ஆற்றியிருந்து அவன் வரவைக் காணவல்லமையில்லாதவள்; அவன் பிரிந்த பொழுதே இறந்துபடுவாள் என்ற கருத்தில் இவ்வாறு தோழி கூறினாள். இக்குறள் தோழி கூற்று என்பது பரிமேலழகர் உரை. இதைத் தலைவிகூற்று என்று உரைப்பாருமுளர்.

32. தலைமகன் குறிப்பால் அவன் பிரிந்து செல்வான் என்பதை அறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியதைத் தொகுத்துரைக்க. (குறள். 1152—1155)

தலைமகன் பிரிவைக் குறிப்பாலறிந்த தலைவி தோழியை நோக்கி, தழையும் கண்ணியும் கொண்டு நம்பால்வந்து நின்றபொழுது அவர் நோக்கு மட்டுமே புணர்ச்சி குறித்தமையால் நமக்கு இன்பமுடைத்தாயிருக்கும். இன்று அப்புணர்ச்சியே நிகழ்ந்தும்கூட அவர் பிரிவர் என்று அஞ்சும் அச்சத்தை அது அடைந்துள்ளது. அவர் அன்பின்நிலை இவ்வாறுள்ளது. பிரியேனென்ற அவர் சொல்லும், நம் பிரிவாற்றாமையும் அறித

லுடையராய காதலரிடத்தும் ஒரோவழிப் பிரிவு நிகழ்த லால் அவர் சொல்லும் தலையளியும் பற்றி நம்பால் அவர் அன்புடையர் எனத்தேறும் தேற்றம் அரிதாயிருந்தது. அவரை எதிர்ப்பட்ட பொழுதே தலையளி செய்து நின் னிற் பிரியேன் அஞ்சேல் என்றவர் தாமே பின் பிரிவரா யின் அவர்க்கன்றி அவர் தெளிவித்த சொல்லை மெய் யெனத் தெளிந்தார்க்குக் குற்றமுண்டோ? என்றாள். இதில், சொல்லும் செயலும் ஒவ்வாமையாகிய குற்றம் அவர்க்கு எய்தும். அஃது எய்தாவாறு அவரைச் செல வழுங்குவி என்ற கருத்தில் தலைவி கூறினாள். மேலும், என்னுயிரைச் செல்லாமல் காத்தியாயின் அதனையாகு தற்கு அமைந்தவருடைய செலவினை அழுங்குவிப்பா யாக. அவ்வாறு அழுங்குவிப்பாரின்றி அவர் செல்வா ராயின் அவரால் ஆளப்பட்ட என் உயிரும் செல்லும். சென்றால் பின் அவரைக் கூடுதல் எனக்கு அரிதாகும் என்றாள்.

33. தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்து சொல்லிய தோழிக்குத் தலைவி சொல்லியதைத் தொகுத்துக் கூறுக. (குறள். 1156—1158)

தலைமகன் தான் பிரிந்து செல்ல இருப்பதைத் தோழியிடம் கூறினான். தோழி அதைத் தலைவியிடம் தெரிவித்தாள். அதற்குத் தலைவி, நம் விருப்பத்தின் முதிர்வையறிந்த தலைவர் தாமே நம்முன் நின்று தம் பிரிவினை உணர்த்தும் கொடுமையுடையவர் ஆயின், அத்தன்மையார் பின்பு நம் ஆற்றாமையறிந்து வந்து மிக்க அன்பு (தலையளி) செய்வர் என்றிருக்கும் ஆசை விடப்படும்; அதனாற்பயனில்லை. கூடியிருந்தே அன் பின்றிப் பிரிவெண்ணுதலும் அதை உணர்த்தலும் வல்லவர் பிரிந்துபோய் அன்புடையராய் நம்மை நினைத்து வந்து நல்குதல் எவ்வாறு பொருந்தும்?

கடல்துறைக்கு உரியவன் என்னைப் பிரியலுற்ற மையை அவன் உணர்த்தாமல் தாமேயுணர்ந்து என் முன்கையினின்றும் கழல்கின்ற வளைகள் எனக்கு அறி வியாவோ? அவன் உணர்த்த உணர்ந்து வந்து நீ அறி

வித்தல் வேண்டுமோ? அவனை அழுங்குவித்து வந்து என்னிடம் கூறவேண்டியவளாகிய நீயும் இவ்வளைகள் செய்தவற்றையே செய்தாய்.

மகளிர்க்குத் தம் குறிப்பு அறியும் தோழியரில்லாத வேற்றூரின்கண் வாழ்தல் இன்னாது (கொடியது). அதன் மேலும் தம் காதலரைப் பிரிதல் அதனினும் இன்னாதாகும் என்றாள். இதில், தலைவன் செலவினை யழுங்குவித்து வராமல் உடன்பட்டு வந்தமைபற்றித் தலைவி தோழியைப் புலக்கின்றாள். ஆதலின் உலகியல் கூறுவாள் போன்று கூறினாள்.

34. 'தொடிற் சுடினல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ'—துறையும் பொருளும்
கூறி விளக்குக. (குறள். 1159)

துறை : 'காமம் தீயே போன்று தான்நின்ற இடத்தைச் சுடுமாகலான் நீ ஆற்றல் வேண்டும்' என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது ஆகும்.

பொருள் : தீயானது தன்னைத்தொட்டால் மட்டுமே சுடும். ஆனால் காமமாகிய நோய் தன்னைவிட்டு அகன்றால் தப்பாமல் சுடும். காமத்தைப்போன்ற தன்மை தீயினுக்கு இல்லை.

விளக்கம் : மந்திரத்தினாலும் மருந்தினாலும் தீயைத் தம்பிக்க (தடுக்க) முடியும். காமநோயை அவற்றாலும் தடுக்க இயலாது. தீயினும் கொடியதாகிய காமநோயை யான் ஆற்றுமாறு எங்ஙனம் என்று தலைவி கூறினாள்.

35. 'அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்'—துறையும் பொரு
ளும் கூறி விளக்குக. (குறள். 1160)

துறை :—'தலைவியர் பலரும் பிரிவாற்றியிருப்பர்; அது நீ செய்கின்றிலை' என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது என்பதாகும்.

பொருள் :—தலைவி தோழியை நோக்கி, நீ சொல்லு கின்றது ஒக்கும். பிரிவு உணர்த்திய வழி அதற்கு உடம்பட்டுப் பிரியுங்கால் நிகழும் அல்லல் நோயினை யும் நீக்கிப், பிரிந்தால் அப்பிரிவையும் ஆற்றிப், பின் னும் இருந்து உயிர்வாழும் மகளிர் உலகத்துப் பலர் உண்டு.

விளக்கம் :—பண்டையினும் சிறப்பத் தலையளி பெற்று இன்புறுகின்ற எல்லைக் கண்ணே அஃது இழந்து துன்புறுதற்கு உடம்படுதல் அரியதொன்று ஆகலின் அரிதாற்றி என்றும், செல்லும் தேயத்து அவர்க்கு யாது நிகழும் என்றும், வருந்துணையும் யாம் ஆற்றியிருக்குமாறு எவ்வாறு என்றும், அவ்வரவுதான் எப்பொழுது வந்தெய்துமென்றும், இவ்வாற்றால் நிகழும் கவலை மனத்து நீங்காது ஆகலான் 'அல்லல் நோய் நீக்கி' என்றும், பிரிந்தால் வருந்துணையும் அகத்து நிகழும் காமவேதனையும் புறத்து நிகழும் யாழிசை, மதி, தென்றல் என்று இவைமுதலாக வந்து, அதனை வளர்ப்பனவும் ஆற்றல் அரிய வாகலின் 'பிரி வாற்றி' என்றும், தம் காதலரை இன்றியமையா மகளி ருள் இவையெல்லாம் பொறுத்துப் பின்னும் இருந்து உயிர் வாழ்வார் ஒருவருமில்லை என்பது குறிப்பால் தோன்றப் 'பின்னிருந்து வாழ்வார் பலர்' என்றும் கூறினாள்.

**36. படர் மெலிந்திரங்கல்—சிறு குறிப்பு வரைக.**

படரால் மெலிந்து இரங்கல் எனப்படும். படர்— துன்பம். அதாவது, பிரிவாற்றுளாய தலைமகள் தான் உறுகின்ற துன்பத்தினை எப்பொழுதும் நினைத்தலின் அந்நினைவால் மெலிந்து இரங்குதல் எனப்படும்.

**37. படர் மெலிந்து இரங்கல் தலைவியின் கூற்றுக்களைத் துறைகளோடு தொகுத்துக் கூறுக.**

**(குறள் 1161—1170)**

தோழி தலைவியை நோக்கி, காமநோயை வெளிப் படுத்தல் நின் நாணுக்கு ஏலாது என்றாள். அதற்குத்

தலைவி, இந்நோயைப் பிறர் அறிதலுக்கு நாணியான் மறையா நின்றேன். நிற்பவும், இஃது (காமநோய்) அந்நாணின் எல்லையில் நில்லாது நீர் வேண்டுமென்று இறைப்பவர்க்கு ஊற்று நீர்மிகுமாறுபோல் மிகாநின்றது; மறைத்தலால் பயனென்ன? ஒன்றுமில்லை என்றாள்.

தோழி தலைவியை நோக்கி, இங்குள்ளவர்கள் அறியாமல் மறைக்கவேண்டும். அல்லது அங்குள்ள தலைவர் அறியத் தூதுவிடவேண்டும். இரண்டனுள் ஒன்று செயல் வேண்டும் என்றாள். அதற்குத் தலைவி, இக்காம நோயை இங்குள்ளார் அறியாமல் மறைக்கவும் என்னால் இயலவில்லை. ஆகாக்கால் இந்நோயைச் செய்தவருக்கு உரைக்கலாம் என்றால் அதுவும் எனக்கு நாணத்தைத் தருகின்றது. இனி யான் என்செய்வேன்? என்னால் இயலவில்லை. ஆகாக்கால் இந்நோயைச் செய்தவருக்கு உரைக்கலாம் என்றால் அதுவும் எனக்கு நாணத்தைத் தருகின்றது. இனி யான் என்செய்வேன்? என்றாள். இதில், காமநோய் ஒருகாலைக் கொருகால் மிகுதலின் 'கரத்தலும் ஆற்றேன்' என்றும், சேயிடைச் சென்றவர்க்கு இது சொல்லித் தூது விட்டால் இன்னும் யான் உயிரோடிருந்தேன் என்பது பெறப்படும் என்னும் கருத்தால் 'நாணுத்தரும்' என்றும் கூறினாள். மேலும், காமநோயும் அதனைச் செய்தவர்க்கு உரைக்கவிடாத நாணும், தம்மைப்பொறாத என் உடம்பின் கண்ணே உயிர் காத்தண்டாக (காவடித் தண்டாக) அதன் இரு தலையினும் தூங்கா நின்றன (தொங்குகின்றன) என்றாள். இதில், என்னுடலால் தாங்கமாட்டாத நிலையில் உயிரையே காவடித் தண்டாகக் கொண்டு அதன் ஒரு புறத்துக் காமமும் மற்றொரு புறத்து நாணமும் தொங்குகின்றன என்றாள். தூதுவிடப் பண்ணும் காமமும், அதை ஒழியப் பண்ணும் நாணமும் தம்முள் ஒத்து உயிரினைப் பாரத்தால் முறியும்படி அழுத்துகின்றன; யான் அவற்றுள் ஒன்றின் கண் நிற்கமாட்டாமையால் என் உயிர் இற்றே விடும் என்ற கருத்தில் கூறினாள்.

தோழி தலைவியை நோக்கி, 'தலைவியர் காமக்கடற் படார்; படினும், அதனை ஏற்ற புணையால் நீந்திக் கடப்பர்' என்ருள். அதற்குத் தலைவி, யாவர்க்கும் உளவாய் வருகின்ற காமக்கடல், அதனை நீந்தும் புணை என்ற இரண்டனுள்ளும் எனக்கு உண்டாகின்றது காமக் கடலே; அதனை நீந்தும் அரணுகிய புணை இல்லை என்ருள். இதில், தூதாகச் செல்லுதற்கு உரிய நீயும் இக்காலத்து உதவுகின்ருயில்லையே என்ற கருத்தில் கூறினுள். (குறள். 1164)

தோழி தூதுவிடாதிருந்தாள். அதற்குத் தலைவி தோழியோடு புலந்துகொண்டு, இன்பஞ் செய்தற்குரிய நட்பின் கண்ணே துன்ப வரவினைச் செய்யவல்லவர், துன்பஞ் செய்தற்குரிய பகைமைக் கண் என் செய்வர் கொல்லோ என்று கூறினுள். இதில், துயர் வருதலை விலக்கவேண்டியவளாய் நீ இருக்க அது செய்கின்றிலையே எனப் புலக்கின்ருளாதலின் துயர்வரவு செய்தாளாக்கியும் பிறளாக்கியும் கூறினுள். (குறள். 1165)

தோழி தலைவியிடம், காமத்தால் இன்பமுற்ருர்க்கு அக் காமத்தாலாகிய துன்பமும் வரும் என்ருள். அதற்குத் தலைவி, காமம் புணர்வால் இன்பஞ் செய்யுங்கால் அவ்வின்பம் கடல்போலப் பெரிதாம். இனி அது தானே பிரிவால் துன்பம் செய்யுங்கால் அத்துன்பம் அக்கடனும் பெரிதாம் என்ருள்.

தோழி, 'காமக்கடல் நிறை புணையாக நீந்தப்படும்' என்ருள். அதற்குத் தலைவி, காமமாகிய கடலை நீந்தாதேனல்லேன்; நீந்தியும் அதற்குக் கரை கண்டிலேன். அக்காணுக் காலந்தான் எல்லாரும் துயிலும் யாமமாயிற்று, அவ்வரையிருட் கண்ணும் அதற்கு ஒரு துணையின்றி யானேயாயினேன். ஆகியும் இறந்துபடாமல் உளேனுயினேன். ஈதொரு தீவினைப்பயன் இருந்தவாறு என்னே என்ருள். இதில், நீ துணையாக வில்லையே என்னும் குறிப்பில் தலைவி கூறினுள் என்க.

தலைவி இரவின் கொடுமையைச் சொல்லி இரங்கும் பொழுது, இவ்விரா இரங்கத்தக்க தாயிருந்தது. உலகத்து உயிர்களையெல்லாம் தானே துயிலச் செய்த லால் என்னையல்லது வேறு துணையுடையதாக இருக்க வில்லை என்ருள். இதில், துணையோடு பொருந்தி யிருக்கும் உயிர்களையெல்லாம் விட்டு, இறந்து படும் நிலையிலுள்ள என்னையே துணையாகக் கொண்டதால் இவ்விரவுக்கு அறிவில்லை என்ற கருத்தில் 'அளித்து' என்ருள்; இது இகழ்ச்சிக் குறிப்பு. மேலும், காதல ரொடு நாம் இன்புற்ற முன்னுட்களில் குறியவாய், அவரது பிரிவை ஆற்றேமாய் இருக்கும் இந் நாட்களில் நெடியவாய்ச் செல்கின்ற இரவுகள் அக்கொடியாரது (தலைவரது) கொடுமைக்கு மேலே தாம் (இரவுகள்) கொடுமை செய்கின்றன என்ருள்.

தோழி தலைவியை நோக்கி, 'நின் கண்களின் பேரழகு அழிகின்றன வாகலின் நீ அழக்கூடாது' என்ருள். அதற்குத் தலைவி, மனம்போலக் காதலருள்ள தேயத்து விரைந்து செல்ல வல்லனவாயின், என் கண்கள் இவ்வாறு வெள்ளமாகிய கண்ணீரில் நீந்தா என்ருள். இதில், மனத்திற்குச் செலவாவது நினைவே யாகலின் 'உள்ளம் போன்று' என்றும், மெய்க்கு நடந்து செல்லவேண்டுதலின் கண்கள் அதனோடு சென்று காதலரைக் கண்டால் முடியாது என்னும் கருத் தால் 'செல்கிற்பின்' என்றும் கூறினுள். (குறள். 1170)

*38.* **கண்விதுப்பழிதல் —சிறுகுறிப்பு வரைக.**

**(*அதிகாரம். 118*)**

கண்கள் தம் காட்சி விதுப்பால் வருந்துதல். காட்சி விதுப்பு—தலைமகனைக் காணுதற்கு விரைதல். இது படரால் மெலிந்தவழி நிகழ்வதாகலின் படர் மெலிந்து இரங்கலின்பின் அமைந்துள்ளது.

*39.* **நின் கண்கள் கழலுழ்ந்து தம்மழகிழவா நின்றன; நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலை மகள் சொல்லியவற்றைத் தொகுத்துரைக்க.**

**(குறள். 1171—1177)**

தோழி தலைவியை நோக்கி, நீ அழுதழுது கண்ணீர் வடித்ததால் நின் கண்கள் அழகிழந்து விட்டன. அதனால் நீ ஆற்றியிருக்கவேண்டும் என்றாள். அதற்குத் தலைவி, இத்தணியா நோயை யாம் அறிந்தது இக்கண்கள் எமக்குக் காதலரைக் காட்டியதனால் அன்றோ? அன்று அத்தொழிலைச் செய்த கண்கள் இன்று எம்மைக் காட்டச் சொல்லி அழுகின்றது எதனால்? மேல் விளைவதனை ஆராய்ந்து அறியாமல் அன்று காதலரை நோக்கி நின்ற கண்கள், இன்று இது நம்மால் வந்ததாகலின் நாம் தாமே பொறுத்தல் வேண்டும் என உணராமல் துன்பம் உழப்பது என் கருதி? இக் கண்கள் அன்று காதலனைத் தாமே விரைந்து நோக்கி இன்றுந் தாமே இருந்து அழுகின்ற இது நம்மால் சிரிக்கத்தக்க இயல்பினையுடைத்து. மையுண்ட கண்கள் அன்று யான் உய்யமாட்டாமைக்கு ஏதுவாகிய ஒழிவில்லாத நோயை என்பால் நிறுத்தித் தாமும் அழமாட்டா வண்ணம் நீர்வற்றி விட்டன. கடலும் சிறிதாகும் வண்ணம் பெரிதாகிய காமநோயை எனக்குச் செய்த என் கண்கள் அத்தீவினையால் தாமும் துயிலாமல் துன்பத்தையும் அடைகின்றன. எமக்கு இக்காம நோயினைச் செய்த கண்கள் தாமும் இத்துயிலாது அழுதற்கண்ணேபட்டது. இது மிகவும் இனிதாயிற்று. விழைந்து உள்நெகிழ்ந்து அன்று அவரை விடாமல் கண்ட கண்கள், இன்று இத்துயிலாது அழுங்கல் ஆகிய துன்பத்தினை உழந்து தம் அகத்துள்ள நீர் அற்றே போவதாகுக என்று கூறினாள்.

40. 'பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க் காணாது அமைவில கண்'—இக் குறளுக்குப் பொருள் கூறி விளக்கம் தருக. (குறள். 1178)

துறை:—காதலர் பிரிந்து போயினாரல்லர்; அவர் ஈண்டு உளர்; அவரைக் காணுமளவும் நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைவி சொன்னது என்பது துறையாகும்.

பொருள்:—நெஞ்சால் விழையாது சொல் மாத்திரத்தால் விழைந்தவர் இவ்விடத்தேயுளர். அதனல் பயன் யாது? அவரைக் கண்கள் காணது அமையவில்லையாயின.

விளக்கம்:—செயலாற் பிரிந்து நின்றமையின் பேணது என்றும், முன்பு நலம் பாராட்டிப் பிரிவச்சமும் வன்புறையுங் கூறினராகலின் பெட்டார் என்றும் கூறினள். யான் ஆற்றவும் கண்கள் அவரைக் காண்டற்கு விரும்புகின்ற என்ற கருத்திற் கூறினள்.

41. நீயும் ஆற்றி நின் கண்களும் துயில்வனவாதல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைவி சொல்லியதென்ன? (குறள். 1179)

தலைவி தோழியை நோக்கி, காதலர் வாராத பொழுது அவர் வரவு பார்த்துக் கண்கள் துயிலா. அவர் வந்த பொழுது பிரிவஞ்சித் துயிலா. ஆகலான் அவ்விருவழியும் என் கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்தினையுடையன என்ருள். இனி அவற்றிற்குத் துயில் ஒருநாளும் இல்லையென்ற கருத்தில் கூறினள்.

42. காதலரை இவ்வூர் இயற்பழியாமல் அவர் கொடுமையை மறைக்கவேண்டும் என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது யாது? (குறள். 1180)

தலைவி தோழியிடம், எம்மைப்போலும் அறைபறையாகிய கண்ணினையுடையார் தம் நெஞ்சின் கண் அடக்கிய மறையை அறிந்து கொள்ளுதல் இவ்வூரின் கண் உள்ளார்க்கு எளிது என்று கூறினள். அகத்து நிகழ்வதனைப் புறத்துள்ளார்க்கு அறிவித்தலாகிய தொழிலால் அறையும் பறைக்கும் கண்ணுக்கும் ஒற்றுமையுள்ளமையால் அறைபறையாகிய கண் என்ருள்.

43. பசப்புறு பருவரல்—சிறு குறிப்பு வரைக. (அதிகாரம் 119)

பசப்புறு பருவரல் என்பது பசப்புற்ற பருவரல் என விரியும். அதாவது பசப்புறுதலால் ஆகிய வருத்தம்

என்பதாம். பசப்பாவது பிரிவாற்ருமையால் வருவதோர் நிற வேறுபாடு. இது, தலைமகனைக் காணப் பெருத வழி நிகழ்வது ஆகலின் கண் விதுப்பு அழிதலின் பின் அமைக்கப் பெற்றது.

44. 'நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென் பண்பியார்க் குரைக்கோ பிற' (குறள் 1181) —இக்குறளுக்குத் துறைகூறி இதன் பொருளை விளக்குக.

துறை:—முன் பிரிவுடம்பட்ட தலைமகள் அஃதாற்ருது பசந்தவழித் தன்னுள்ளே சொல்லியது.

பொருள்:—என்னை நயந்தவர்க்கு அதுபொழுது பிரிவையுடம்பட்ட யான் அதனையாற்ருது இதுபொழுது பசந்த என் இயல்பினை யார்க்குச் சொல்வேன்.

விளக்கம்:—உடம்படா வழிப் பிரிந்து செல்லுதலைத் தவிர்த்துவிட எண்ணிப் பிரிவுணர்த்தினராகலின் அவர் அன்புடையர் என்னும் கருத்தால் நயந்தவர் என்றும், இதுவே உடம்பாடாகக் கொண்டு மேலும் பிரிவு நிகழு மாகலின் இனி அவரைக் கூடுதல் அரிது என்னும் கருத்தால் நல்காமை யென்றும், முன்னர் உடம்படுதலும் பின்னர் ஆற்ருது பசத்தலும் பிறர் செய்தன அல்ல என்பவள் பசந்த என் பண்பு என்றும், யான் செய்து கொண்ட துன்பத்தினை யொருவர்க்குச் சொல்லலும் பழி யாம் என்னும் கருத்தால் யார்க்கு உரைக்கோ என்றும் கூறினுள்.

45. தோழிக்குத் தலைவி சொல்லியதாக உள்ள கருத்துக் களைப் பசப்புறு பருவரல் என்ற அதிகாரத்தினி ருந்து தொகுத்துத் தருக. (குறள். 1182—1190)

ஆற்ருளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடத் தலைவி, யான் ஆற்றியுளேனுகவும், இப் பசப்புத்தான் என்னையுண்டாக்கினுர் அவர் என்னும் பெருமிதத்தால் என் மேனியை மேல் கொண்டு செலுத்துகின்றது என்று கூறினுள்.

அழகும் நாணும் அழியாமல் நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைவி, அவர் பிரிகின்ற பொழுதே அவ்விரண்டற்கும் தலைமாருக இக்காம நோயினையும் பசலையையும் எனக்குத் தந்து என்மேனி அழகினையும் நாணினையும் அவர் கொண்டு போயினுர் என்ருள்.

பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர் நற்றிறங்களையும் நீ அறிவாயாகலின் நீட்டியாது வருவர் என்று தோழி கூறினுள். அதற்குத் தலைவி, அவர் சொற்களை யான் மனத்தால் நினைக்கின்றேன். வாக்கால் உரைப்பதும் அவர் நற்றிறங்களையே. அங்ஙனம் செய்தும்கூட இப்பசப்பு வந்து நின்றது; இது வஞ்சனையாயிருக்கிறது என்ருள்.

காதலர் பிரிந்து அணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலையென்று தோழி கூறினுள். அதற்குத் தலைவி, பண்டும் நம் காதலர் அதோ அங்கே செல்வாராக, இங்கே என்மேனியில் பசப்பூர்ந்துவிட்டது. அத்தன்மையது இன்று பிறிதொன்று ஆகுமோ? என்று முன்னிகழ்ந்ததைக் கூறினுள். மேலும் விளக்கினது, மறைவைப் பார்த்து நெருங்கிவரும் இருளேபோலத் தலைவனுடைய முயக்கினது சேர்வைப் பார்த்து இப்பசப்பானது நெருங்கி வருகின்றது முன்னொரு நாள் காதலரைப் புல்லிக்கிடந்த யான் அறியாது சிறிது புடைபெயர்ந்தேன். அவ்வளவிலே பசப்பு அள்ளிக்கொள்வது போல வந்து செறிந்தது என்ருள்.

நீ இங்ஙனம் பசக் கற்பாலையல்லை யென்ற தோழியோடு தலைவி புலர்ந்து, இவள் ஆற்றியிராது பசந்தாளென்று என்னைப் பழி கூறுவது அல்லது இவளை அவர் துறந்துபோயினுர் என்று அவரைக் கூறுவார் ஒருவருமில்லை என்று கூறினுள். மேலும், இப்பிரிவை யானே உடம்படுமாறு சொல்லியவர் இன்று நின் கருத்துப்படி நல்ல நிலையினர் ஆவராயின் என்மேனி உள்ளபடி பசலை நிறம் அடைவதாக என்ருள்.

தலைமகள் ஆற்றுதற் பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்தாள். அதற்குத் தலைவி, அன்று தாம் குறை

நயப்பித்துக் கூடினவர்க்கு இன்று நல்காமையை நட்டோர் தூற்றாராயின் பசப்புற்றாள் என வேற்றுமையாலன்றிப் பசப்புத்தான் ஆயினாள் என ஒற்றுமையால் தாம் சொல்ல அப்பெயரைப் பெறுதல் எனக்கு நன்று என இயற்பட மொழிந்தாள்.

46. எதிர் நிரனிறையணிக்கு எடுத்துக்காட்டுத் தருக.
**சாயலும் நாணும் அவர் கொண்டார் கைம்மாறு**
**நோயும் பசலையும் தந்து** —குறள் 1183.

இக் குறளில் எதிர் நிரல் நிறையணி அமைந்துள்ளது. சாயலும் நாணும் என்பவற்றுடன் நோயும் பசலையும் என்பதை நேர் நேராக நிறுத்திவைக்காமல் எதிராக நிறுத்திவைத்து நோயைத் தந்து நாணைக் கொண்டார் என்றும், பசலையைத் தந்து சாயலைக் கொண்டார் என்றும் கொள்க.

**47.** தனிப்படர் மிகுதி என்பதன் பொருள் என்ன?
(அதிகாரம் 120)

தனியாகிய படர்மிகுதிஎன்பதாகும். படர்—துன்பம். படர்மிகுதி தலைவன் கண் இன்றித் தன் கண்ணதே யென்று தலைவி கூறுதல். அறமும் பொருளும் நோக்கித் தலைவன் பிரிதலின் அவன்கண் படர் மிகுதியில்லையாயிற்று. பசப்புற்று வருந்தும் தலைவிக்கே தனிப்படர் மிகுதியுரித்தாயிற்று.

48 காதலரும் நின்னினும் ஆற்றாராய்க் கடிதின் வருவர். நீ அவரோடு பேரின்பம் நுகர்வாயாக என்ற தோழிக்குத் தலைவி கூறியவற்றைத் தொகுத்துக் கூறுக. (குறள் 1191—1193)

தலைவி தோழியை நோக்கி, தம்மால் காதலிக்கப் படும் கணவர் தம்மைக் காதலிக்கப் பெற்ற மகளிர் (தாம் விரும்பும் காதலர் தம்மை விரும்புகின்ற பேறு பெற்றவர்) காம நுகர்ச்சி என்னும் விதையில்லாத கனியைப் பெற்றவராவர். அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்தால் தம்மை இன்றியமையா மகளிர்க்கு அவரை இன்றியமையாக் கணவர் அளவறிந்து வந்து செய்யும் தலை

யளி. தன்னையே நோக்கி உயிர் வாழ்வார்க்கு வானம் அளவறிந்து பெய்தாற் போலும். தாம் விழையும் கணவரால் விழையப்படும் மகளிர்க்கு, நம் காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து விரைவில் வருவர்; வந்தால் நாம் இன்புற்று வாழ்வோம் என்று இருக்கும் செருக்கு ஏற்புடையதேயாகும் என்றாள்.

49. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம் வீழ்வார்
வீழப் படாஅ ரெனின்—துறையும் பொருளும்
(குறள் 1194)

துறை : காதலரை இயற்பழித் தலையஞ்சி அவர் அருளின்மை மறைத்த நீ கடவுட் கற்பினை யாகலின் கற்புடை மகளிரால் நன்கு மதிக்கப் படுவாய் என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

பொருள் : கற்புடை மகளிரால் நன்கு மதிக்கப்படு வாரும், தாம் விரும்பும் கணவரால் விரும்பப்படாராயின் தீவினையாட்டியராவர்.

50. அவர் மேல் காதலுடைமையின் அவர் கருத்தறிந்து ஆற்றிஞய் என்ற தோழிக்குத் தலைவி சொல்லிய தைத் தொகுத்துக் கூறுக. (குறள் 1195—1197)

தலைவி தோழியை நோக்கி, நம்மால் காதல் செய் யப்பட்டவர், அவ்வாறேதாமும் நம்பால் காதல் செய்யா வழி நமக்கு என்ன இன்பத்தைச் செய்வர். மகளிர் ஆடவர் என்னும் இருதலையினும் வேட்கை ஒருதலைக் கண்ணேயாயின் அஃது இன்னது. காவடித் தண் டினது பாரம்போல இருதலைக் கண்ணும் ஒப்பின் அஃது இனிது ஆகும். காம நுதர்தற்குரிய இருவரிடத்தும் ஒப்ப நிற்றல் ஒழிந்து ஒருவரிடத்தே நின்று போரிடும் காமக் கடவுள் அவ்விடத்துப் பசப்பாலாகிய பருவரலும் படர் மிகுதியும் அறியானே? என்று கூறினாள்;

51. தலைமகனிடமிருந்து தூதுவரக் காணுது தலைவி சொல்லியதைத் தொகுத்துரைக்க.
(குறள் 1198—1199)

தம்மால் விரும்பப்படும் காதலரிடத்தினின்றும் ஓர் இன் சொல்லேனும் பெருமல் பிரிவாற்றி உயிர்வாழ் கின்ற மகளிர்போல, வன்கண்மை (கொடுமை)யுடைய வர் இவ்வுலகத்தில்லை. என்னல் விரும்பப்பட்ட காதலர் என்பால் அன்பிலரே யாயினும் அவரிடமிருந்து யாதா னும் ஓர் சொல்லும் என் செவிக்கு இனியவாம் என்ருள் தலைவி.

**52. தலைமகன் தூதுவரப் பெருது தான் தூதுவிடக் கருதிய தலைவி தன் நெஞ்சொடு கூறியது என்ன? (குறள் 1200)**

தலைமகள் தன் நெஞ்சை நோக்கி, நின்னேடு பொருந்தாதவர்க்கு நின்மிக்க நோயை உரைக்கலுற்ற நெஞ்சே, நீ ஆற்ருய் ஆயினும் அரிதாய அதனைவிட்டு நினக்குத் துயரம் செய்கின்ற கடலைத் தூர்க்க முயல் வாயாக; அஃது எளிது என்று கூறினுள்.

**53. நினைந்தவர் புலம்பல் — சிறு குறிப்பு வரைக.**

முன்பு கூடிய பொழுது அடைந்த இன்பத்தினை நினைந்து தலைமகள் தனிமை எய்துதலும், பாசறைக் கண் தலைமகன் தனிமை எய்துதலும் நினைந்தவர் புலம் பல் ஆகும். இவ்வாறு இருவர்க்கும் பொதுவாதல் பற்றியே நினைந்தவர் எனப்பன்மைப் பாலாற் கூறப் பட்டது.

**54. தூதாய்ச் சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல் லியவற்றைத் தொகுத்துத் தருக. (குறள் 1201, 1202)**

முன்பு கூடிய பொழுது அடைந்த இன்பத்தினைப் பிரிந்த பொழுது நினைந்தாலும் அதுபொழுது பெற்ருற் போல நீங்காத மகிழ்ச்சியைத் தருதலால், உண்ட பொழுதல்லது மகிழ்ச்சி செய்யாத கள்ளைவிடக் காமம் இன்பம் பயத் தலையுடையதாகும். தம்மால் விரும்பப் படுவாரைப் பிரிவின் கண் நினைத்தால் அந்நினைவார்க்கு அப்பிரிவால் வருவதோர் துன்பமில்லையாம். அதனுல்

காமம் எத்துணையேனும் இனிதே யாகும். என்று தலைவன் பாங்கனிடம் கூறினான்.

55. தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியதை விளக்குக.
(1203 1205)

தலைவி தோழியை நோக்கி, எனக்குத் தும்மல் எழுவது போன்று தோன்றிக் கெடுகின்றது. அதனால் காதலர் என்னை நினைப்பார் போன்று நினையாமல் விடுகின்றார் போலும். எம்முடைய நெஞ்சத்து அவர் எப்பொழுதும் உள்ளாராகவே இருக்கிறார். அவ்வகையே அவருடைய நெஞ்சத் துயரமும் உள்ளேமோ? அல்லேமோ? தம்முடைய நெஞ்சின் கண்ணேயாம் செல்லாமல் எம்மைக் காவல் கொண்ட காதலர், எம்முடைய நெஞ்சின் கண்ணே அவர் ஓயாமல் வருதலுக்கு நாணாரோ? என்றாள்.

56. அவரொடு புணர்ந்த ஞான்றை இன்பத்தை நினைந்து இறந்துபாடு, எய்தாநின்றாய்; அதுமறத்தல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைவி கூறியதை விளக்குக. (குறள் 1206, 1207)

தலைவி தோழியை நோக்கி, யான் அவரோடு புணர்ந்தபொழுது அடைந்த இன்பத்தை நினைதலால் இத்துன்ப வெள்ளத்தும் உயிர் வாழ்கின்றேன். அது இல்லையாயின் வேறு எதனால் உயிர் வாழ்வேன்? அவ்வின்பத்தை மறத்தல் அறியேனாய் இன்று நினைத்தாலும் பிரிவு என்னுள்ளத்தைச் சுடுகின்றது. அங்ஙனம் பிரிவாற்றாத யான் மறந்தால் இறந்துபடாது உளேனாவது எதனால்? என்றாள்.

57 பிரிவுத் துன்பமறிந்து வந்து காதலர் நினக்கு இன்பம் செய்வர் என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது என்ன? (குறள் 1208)

தலைவி தோழியை நோக்கி, அவரை யான் எவ்வளவு மிகுதியாக நினைந்தாலும் அதற்கு வெகுளார்.

என் காதலர் எனக்குச் செய்யும் இன்பம் அத்துணைப் பெரிதன்றே? என்றாள்.

**58. தலைமகன் தூதுவரக் காணாது வருந்தும் தலைவி வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியதென்ன? (குறள் 1209)**

முன்பெல்லாம் நாம் இருவரும் வேறல்லம் என்று சொல்வார். இப்பொழுது அவரது அளியின்மையை மிகவும் நினைந்து எனது இனிய உயிர் கழிகின்றது.

*59. வன்புறை எதிரழிந்தாள் காமமிக்க கழிபடரால் சொல்லியதென்ன? (குறள் 1210)*

தலைவி திங்களை நோக்கி, மதியே, என் நெஞ்சில் இடைவிடாது இருந்தே விட்டுப் போயினரை யான் என் கண்ணளவானாயினும் எதிர்ப்படும்வகை நீ படா தொழிவாயாக என்று கூறினாள். இதில் தலைவி கண்ணளவான் எதிர்ப்படும் வகை என்றது, மதி இருவராலும் நோக்கப்படுதலின் இருவர் கண்ணும் அதன் கண்ணே சேர்தல்.

*60. தலைமகள் தான்கண்ட கனவின் நிலைமையைத் தோழிக்குச் சொன்னவாற்றைத் தொகுத்துக் கூறுக. (குறள் 1211 1220)*

தலைமகனிடமிருந்து தூதுவரக் கண்ட தலைமகள், யான் வருந்துகின்றதையறிந்து அது தீரக் காதலர் விடுத்த தூதுமொழியை எடுத்துக்கொண்டு என்பால் வந்த கனவினுக்கு யான் விருந்தாக எதனைச் செய் வேன்?

தலைவனுக்குத் தூதுவிடக்கருதிய தலைவி, துஞ்சாது வருந்துகின்ற என் கயல்போலும் உண் கண்கள் யான் இரந்தால் துஞ்சுமாயின் கனவிடைக் காதலரைக் காண் பேன். கண்டால் யான் ஆற்றியுளேனாய தன்மையை யானே அவர்க்கு விரியச் சொல்வேன் என்றாள்.

ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என் பதுபடத் தலைவி, நனவின்கண் வந்து தலையளி செய்யா

தாரை யான் கனவின்கண் கண்ட காட்சியாலே என்னுயிர் இன்னும் இருக்கின்றது. நனவின்கண் வந்து தலையளி செய்யாதாரை அவர் சென்ற இடத்தை நாடிக்கொண்டு வந்து கனவு தருதலால் அக்கனவின் கண்ணே எனக்கு இன்பம் உண்டாகின்றது. முன்பு நனவின்கண் அவரைக்கண்டு நுகர்ந்த இன்பம் அப் பொழுதே இனிதாயிற்று. இன்று கனவின்கண் கண்டு நுகர்ந்த இன்பமும் அக்கண்டபொழுதே இனிதாயிற்று. அதனால் எனக்கு இரண்டும் ஒத்தனவேயாகும். நனவென்று சொல்லப்படுகின்ற ஒரு பாவி இல்லையாயின் கனவின்கண் வந்து கூடிய காதலர் என்னைப் பிரியார். என்று கூறினாள்.

கண்விழித்துக் காணாதவளாகிய தலைவி கனவிற் கூட்டத்தை நினைந்து ஆற்றாளாய், ஒருபொழுதும், நனவின்கண் வந்து தலையளி செய்யாத கொடியவர் நாள்தோறும் கனவின்கண் வந்து நம்மை வருத்துவது எவ்வியைபு பற்றி? என்றாள்.

தலைவியாற்றுதற் பொருட்டுத் தலைமகனை இயற்பழித்தாள் தோழி. அதற்குத்தலைவி, என் நெஞ்சை விடாது உறைகின்ற காதலர் யான் துஞ்சும் பொழுது வந்து என் தோள் மேலராய், பின் விழிக்கும்பொழுது விரைந்து பழைய நெஞ்சின் கண்ணராவர். தமக்கொரு காதலரின்மையின் அவரைக் கனவிற் கண்டறியாத மகளிர் தாமறிய நனவின்கண் வந்து நல்காத நம் காதலரை அன்பிலரென நோகின்றனர். இவ்வூரின் மகளிர் நனவின்கண் நம்மை நீத்தாரென்று நம் காதலரைக் கொடுமை கூறுகின்றனர். அவர் கனவின்கண் நீங்காது வருதல் கண்டறியாரோ என்று இயற்பட மொழிந்தாள்.

**61.** மாலைப்பொழுது கண்டு தலைமகள் இரங்குதலைத் தொகுத்துத் தருக. (குறள் **1221, 1222**)

மாலைப்பொழுது வந்ததும் அதைக்கண்டு புலந்த தலைவி, பொழுதே, நீ முன்னாள்களில் வந்த மாலையோ எனில் அல்ல. இருந்தவாற்றால் அந்நாள் காதலரை

மணந்த மகளிர் உயிரை உண்ணும் இறுதிக்காலமாய் இருந்தாய் என்று கூறினாள்.

தலைவி தன்னுட்கையாற்றை மாலைப்பொழுதின் மேலிட்டு, மயங்கியமாலையே, நீயும் எம்போலப்புன்கண் உடையையாய் இருந்தாய். நின்துணையும் எம்துணை போல வன்கண்மை யுடையதோ கூறுவாயாக என்றாள்.

62. ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைவி சொல்லியதை விளக்குக. (குறள் 1223, 1225)

காதலர் கூடிய நாளெல்லாம் என்முன் நடுக்க மெய்திப் பசந்துவந்த மாலை, இந்நாள் எனக்கு இறந்து பாடு வந்து தோன்றி அதற்கு உளதாம் துன்பம் ஒரு காலைக்கு ஒருகால் மிகுதியாய் வருகின்றது. காதலர் உள்ள பொழுதெல்லாம் என்னுயிர் தளிர்ப்ப வந்த மாலை அவர் இல்லாத இப்பொழுது அஃது ஒழிந்துநிற்ற லேயன்றிக் கொலைக்களத்தில் கொலைஞர் வருமாறு போல அவ்வுயிரைக் கவர்ந்து கொள்ளுதற்கு வருகின் றது. காலையும், மாலையும் அவர் கூடியபொழுது போலன்றி இப்பொழுது வேறுபட்டு வருகின்றன. அவற்றுள், யான் காலைக்குச் செய்த உபகாரம் யாது? மாலைக்குச் செய்த அபகாரம் யாது?

63. இன்று இத்தன்மையுடைய நீ அன்று அவர் பிரி விற்கு உடம்பட்டது எவ்வாறு என்று கேட்ட தோழிக்குத் தலைவி கூறியது என்ன? (குறள் 1226)

முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ்செய்து வந்த மாலை இன்று பகையாய்த் துன்பம் செய்தலைக் காதலர் பிரிதற்கு முன்னே அறியப்பெற்றிலேன் என் றாள். அறிந்தேனாயின் அவர் பிரிவிற்கு உடம்பட்டி ருக்க மாட்டேன் என்ற கருத்தில் இதைத்தலைவி கூறினாள்.

64. 'காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலருமிந் நோய்'—இக்குறளுக்குப் பொருளும் விளக்கமும் எழுதி இதிலமைந்துள்ள அணியையும் குறிப்பிடுக. (குறள் 1227)

துறை :—மாலைப்பொழுதின்கண் இவ்வாறு நீ வருந்துதற்குக் காரணம் என்ன? என்று கேட்ட தோழிக்குத் தலைவி கூறியது.

பொருள் :—இக்காம நோயாகிய பூ, காலைப்பொழுதின்கண் அரும்பி, பகற்பொழுதெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து, மாலைப்பொழுதின் கண் மலரும்.

விளக்கம் :—துயிலெழுந்த பொழுது ஆகலின் கனவின்கண் கூட்டம் நினைந்து ஆற்றுதல் பற்றிக் 'காலையரும்பி' என்றும், பின் பொழுது செல்லச்செல்ல அது மறந்து பிரிவை எண்ணி ஆற்ருளாதல் பற்றிப் 'பகலெல்லாம் போதாகி' என்றும், தம்தம் துணையை நினைந்து வந்துசேரும் விலங்குகளையும் மக்களையும் கண்டு தலைவியானவள்தான் அக்காலத்தில் நுகர்ந்த இன்பம் நினைந்து ஆற்ருமை மிகுதிபற்றி 'மாலைமலரும்' என்றும் கூறினுள்.

அணி :—இக்குறளில் அமைந்துள்ள அணி ஏக தேச உருவகமாகும். காமநோய்க்கு அரும்பு ஆதல் பெரும்போது ஆதல் மலராதல் என்ற நிலைகளைக் கூறியதற்கு ஏற்ப, அக்காம நோயைப் பூவாக உருவகிக் காததால் இது ஏகதேச உருவகமாயிற்று.

65. மாலைப்பொழுதில் ஏன் வருந்துகிருய் என்று கேட்ட தோழிக்குத் தலைவி கூறியதைத் தொகுத்துத் தருக (குறள் 1227—1230)

குறள் 1227ன் உரையை மேலே எண் 64ல் உள்ள படியே எடுத்துக்கொள்க. 1228—1230முடிய உள்ளதை அடியிற் காண்க.

தலைவி தோழியை நோக்கி, முன்னெல்லாம் இனிய தாய் வந்த ஆயன் குழல், இப்பொழுது அழல் போலச்

சுடுவதாய மாலைக்குத் தூதுமாய் அது வந்து என்னைக் கொல்லுங்கால் கொல்லும் படையுமாயிற்று. இதற்கு முன்னெல்லாம் யானே மயங்கி நோயுழந்தேன். இனிக் கண்டாரும் மதிமருளும் வகையில் மாலை வரும்பொழுது இப்பதியெல்லாம் மயங்கி நோயுழக்கும். காதலர் பிரிவைப் பொறுத்து இறந்துபடாதிருந்த என்னுயிர், இன்று பொருளியல்பே தமக்கு இயல்பாக உடையவரை நினைந்து இம்மயங்கும் மாலைக்கண்ணே இறந்துபடுகின்றது என்று கூறினாள்.

66 ஆற்றாமை மிகுதியால் உறுப்பு நலனழிந்து வேறுபட்ட தலைமகளுக்குத் தோழி சொல்லியதைத் தொகுத்துரைக்க. (குறள் 1231—1235)

தோழி தலைவியை நோக்கி, இவ்வாற்றாமை நம் கண்ணே நிற்பத்தாம் சேணிடைச் சென்ற காதலரை நீ நினைந்து அழுதலால் நின் கண்கள் ஒளியிழந்து முன் தமக்கு நாணிய நறுமலர்களுக்கு இன்று தாம் (கண்கள்) நாணிவிட்டன. பசப்பு எய்தியதோடு நீர் ஒழுகும் நின்கண்கள் நம்மால் நயக்கப்பட்டவருடைய நல்காமையைப் பிறர்க்குச் சொல்லுவபோலும். இனி நீ ஆற்றல் வேண்டும். காதலர் மணந்த பொழுது இன்பமிகுதியால் பூரித்த நின் தோள்கள் இன்று அவர் பிரிந்தமையை விளங்க உணர்த்துவதுபோல மெலிகின்றன; இது தகாது. அன்றும் துணைவர் நீங்குதலால் அவரால் பெற்ற செயற்கையழகேயன்றிப் பழைய இயற்கையழகும் இழந்த இத்தோள்கள் இன்று அதற்கு மேலே தம் பெருமையிழந்து வளை கழலுகின்றன; இவை இங்ஙனம் செயற்பாலவல்ல. தழுவியகை நெகிழினும் ஆற்றாதாட்கு இக்கால் நீட்டத்து என்னுமென்று நினையாத கொடியாரது கொடுமையைத் தாமே சொல்லா நின்றன; வளைகளும் கழன்று பழைய இயற்கையழகும் இழந்த இத்தோள்கள், இனி, அதனை யாம் மறைக்குமாறு எங்ஙனம்? என்றாள்.

67. தான் (தலைவி) ஆற்றுதற்பொருட்டு இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியதென்ன? (குறள் 1236

யான் ஆற்றவும் என் வயத்தவன்றித் தொடிகள் கழலுமாறு தோள்கள் மெலிய அவற்றைக் கண்டு நீ அவரைக் கொடியர் எனக்கூறுதலைப் பொருது யான் என்னுள்ளே போகின்றேன் என்றாள்.

*68. தோழி இயற்பழித்தலைப் பொருது தலைவி தன் நெஞ்சிற்குச் சொல்லிய தென்ன?* (குறள் 1237)

நெஞ்சே! இவள் கொடியார் என்கின்றவர்க்கு நீ சென்று என் மெலிகின்ற தோளினால் விளைகின்ற ஆரவாரத்தைச் சொல்லி ஒரு மேம்பாடு எய்தவல்லையோ? வல்லையாயின் அதனை ஒப்பது இல்லை என்றாள்.

*69. வினைமுடித்து மீடலுற்ற தலைமகன் முன்னிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியதைத் திரட்டுக.* (குறள் 1238—1240)

தலைவன் தனக்குள் கூறிக்கொண்டவை :—தன்னை இறுக முயங்கிய கைகளை இவளுக்கு நோமென்று கருதி ஒருபொழுது யான் நெகிழ்த்தேனாக, அத்துணையும் பொருது பைந்தொடிகளை யணிந்த பேதையது நுதல் பசந்தது. அத்தன்மையுடைய நுதல் இப்பிரிவிற்கு யாது செய்யுமோ? (இனிக்கடிதிற் செல்லவேண்டும் என்பது கருத்து). அங்ஙனம் கைகளை நெகிழ்த்தலால் அம்முயக்கிடையே சிறுகாற்று நுழைந்ததாக, அத்துணை இடையீடும் பொருது பேதையுடைய பெரிய மழைக்கண்கள் பசப்புற்றன. அத்தன்மையவான கண்கள் மலைகளும் காடும் நாடும் ஆகிய இவ்விடையீடுகளையெல்லாம் யாங்ஙனம் பொறுத்தன? தனக்கு அயலாக ஒளிபொருந்திய நெற்றிவிளைத்த பசப்பைக்கண்டு சிறுகாற்று நுழையவந்த கண்ணின்பசப்பானது துன்பமுற்றது. இதன் நயம்: கைகளை நெகிழ்க்க அவ்வளவில் நுதல் பசந்தது; யான் (கண்) கைகளையும் நெகிழ்த்து மெய்களும் நீங்கிச் சிறுகாற்று ஊடறுக்குந் துணையும் பசந்திலேன் எனக் கண் தன் வன்மையையும் நுதலின் மென்மையையும் கருதி வெள்கிற்றும். ஆகவே அவள் உறுப்புக்கள் ஒன்றைக் காட்டிலும் ஒன்று முற்

பட்டு நலனழியும், யாம் (தலைவன்) விரைந்து செல்வோம் என்று தலைவன் எண்ணினான். என்ற நயம் இப்பாடலில் தோன்றுகிறது.

**70. நெஞ்சொடு கிளத்தல் என்றால் என்ன?**
**(அதிகாரம் 125)**

ஆற்றாமை மிகத் தனக்கோர் பற்றுக்கோடு காணாத தலைமகள் தன் நெஞ்சொடு செய்திறனறியாது சொல்லுதல் நெஞ்சொடு கிளத்தல் ஆகும்.

**71. தலைவி தன் ஆற்றாமை தீரும் திறனை நாடி நெஞ்சொடு கிளத்தலைக் கூறுக. (குறள் 1241)**

தலைவி தன் நெஞ்சிற்குக் கூறுவாளாய், நெஞ்சே! இந்த ஒன்றாலும் தீராத நோயினைத் தீர்க்கும் மருந்து ஒன்றனை யான் அறியும் ஆற்றல் இலன். எத்தன்மையது யாதொன்றாயினும் நீ அறிந்து எனக்குச் சொல் என்றாள்.

**72. தலைமகனைக் காண்டற்கண் வேட்கை மிகுதியாற் சொல்லியதைத் தொகுத்துத்தருக**
**(குறள் 1242—1245)**

தலைவி தன் நெஞ்சை நோக்கி, என் நெஞ்சே! நீ வாழ்வாயாக. அவர் நம்பால் காதல் இலராகவும் நீ அவர் வரவு நோக்கி வருந்துதற்குக் காரணம் நின் பேதைமையேயன்றிப் பிறதில்லை. அவர்பால் செல்வதும் செய்யாமல் ஈண்டு இறந்துபடுவதும் செய்யாமல் இருந்து அவர் வரவு நினைந்து நீ வருந்துகின்றது ஏன்? இப்பையுள்நோய் செய்தார் மாட்டு நமக்கு இரங்கிவரக் கருதுதல் உண்டாகாது. நீ அவர்பால் செல்லலுற்றாயாயின் இக்கண்களையும் உடன்கொண்டு செல்வாயாக. அன்றி நீயேசெல்வதாயிருந்தால் இக்கண்கள்அவரைக் காணவேண்டுமென்ற துடிப்பால் அவரைக் கண்டால் வேண்டி நீ காட்டு என்று என்னைத் தின்பனபோன்று நலிவு செய்யும். யாம் அவரிடத்து அன்புற்றிருக்க, நம்மிடத்து அன்பு செலுத்தாத நம் காதலரை, வெறுத்

தார் என்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும் வலிமை நமக்கு உண்டோ? இல்லை என்று கூறினாள்.

**73 தலைமகன் கொடுமை நினைந்து செலவு உடன்படாத நெஞ்சினைத் தலைவி கழறியதைக் கூறுக. (குறள் 1246)**

என் நெஞ்சே! யான் தம்மொடு புலந்தால் அப் புலவியைக் கலவிதன்னாலே நீக்கவல்ல காதலரைக் கண்டால் பொய்யாகவேனும் ஒருகால் புலந்து பின் அதனை நீக்கமாட்டாய். அதுவும் மாட்டாத நீ இப் பொழுது அவர் கொடியர் எனப் பொய்க்காய்வு காய் கின்றாய். இனி இதனையொழிந்து அவர்பால் செல்லத் துணிவாயாக என்றாள்.

**74. நாண் தடுத்தலின் அச்செலவு ஒழிவாள் சொல்லி யதைத் தெரிவிக்க (குறள். 1247)**

தலைவி தன் நெஞ்சை நோக்கி, நல்லநெஞ்சே! ஒன்று நாணினைவிட மாட்டாயாயின் காமவேட்கையை விட்டுவிடு. ஒன்று அதைவிட மாட்டாயாயின் நாணினை விட்டுவிடு. அன்றி இரண்டையும் விடாமை நின் கருத் தாயின் ஒன்றற்கொன்று மறுதலையாகிய இவ்விரண் டனையும் உடன்தாங்கும் வலிமை எனக்கு இல்லை. அவர் இவ்வாற்றாமையை அறியாமையின் நொந்து வந்து தலையளி செய்யார் ஆயினர் என்று கருதி, அதனை அறிவித்தற் பொருட்டு, நம்மைப் பிரிந்து சென்றவர் பின் ஏங்கிச் செல்லலுற்ற நீ பேதையேயாவாய். காத லர் நின் அகத்தராக முன்பெல்லாம் கண்டுவைத்து இப் பொழுது நீ புறத்துத் தேடிச் செல்கின்றது யாரிடத்து? என்று கூறினாள்.

**75. அவரை மறந்து ஆற்றல் வேண்டும் என்பது படத் தலைவி தன் நெஞ்சிற்குக் கூறியதைத் தெரிவிக்க. (குறள் 1250)**

நம்மைக் கூடா வண்ணம் துறந்து போயினாரை நாம் நம் அகத்து உடையேமாக முன்னிகழ்ந்த புறக்

கவினேயன்றி நின்ற அகக்கவினும் இழப்பேம் என்றுள். இதில், அவர் நம்மை வந்தடையாமல் துறந்தாராகவும் நாம் அவரை மறத்தல் மாட்டேமாகவும், போன மெய்க் கவினேயன்றி நின்ற நிறையும் இழப்பேம் என்ற கருத்தில் கூறினுள் என்க.

76. *நிறையழிதல் என்றுல் என்ன? (அதிகாரம். 126)*

நிறையழிதல் என்றுல் தலைமகள் தன் மனத்து அடக்கற்பாலனவற்றை வேட்கை மிகுதியால் அடக்க மாட்டாது வாய்விடுதலாகும்.

77. *நிறையழிதல் என்ற அதிகாரத்தில் தலைவி தோழிக்குக் கூறியவற்றைத் தொகுத்துரைக்க.*
*(குறள். 1251—1260)*

தோழி தலைவியை நோக்கி, நாணும் நிறையும் அழியாமல் நீ ஆற்றல் வேண்டும் என்றுள். அதற்குத் தலைமகள், நாணுகிய தாழினைக் கோத்த நிறை என்னும் கதவினைக் காமவேட்கையாகிய கணிச்சி (கோடரி) முறிக்கின்றது. இனி அவை (நாணும் நிறையும்) நிற்றலும் இல்லை; யான் ஆற்றலும் இல்லை என்று கூறினுள்.

நெஞ்சின்கண் தோன்றிய காமம் நெஞ்சால் அடக்கப்படும் என்று தோழி கூறினுள். அதற்குத் தலைவி, எல்லாரும் தொழிலொழியும் இடையாமத்தும் என் நெஞ்சத்தை ஒறுத்துக் காமம் தொழில் கொள்ளா நின்றது. ஆகலான், காமமென்று சொல்லப்பட்ட ஒன்று கண்ணேட்டமில்லாததாய் இருந்தது என்றுள்.

மகளிர் காமம் மறைக்கப்படும் என்றுள் தோழி. அதற்குத் தலைமகள், இக்காமத்தை யான் என்னுள்ளே மறைக்கக் கருதுவேன். அதனுல் இது என் கருத்தின் வாராது தும்மல்போல் வெளிப்பட்டே விடுகின்றது. இதற்கு முன்பெல்லாம் யான் என்னை நிறையுடையேன் என்று கருதியிருந்தேன். அதனுல் என்ன பயன்?

இன்று என் காமம் மறைத்தலைக் கடந்து மன்றின் கண் வெளிப்பட்டு நின்றது என்றாள்.

நம்மை மறந்தாரை நாமும் மறக்கற் பாலம் என்றாள் தோழி. அதற்குத் தலைவி, தம்மையகன்று சென்றார் பின் செல்லாது தாமும் அகன்று நிற்கும் நிறையுடைமை காமநோயினை உறாதார் அறிவது ஒன்று அன்றி அதனையுற்றார் அறிவதென்று அன்று. என்னை அகன்று சென்றார் பின்னே யான் செல்லுதலை வேண்டு தலான் என்னை உற்றதுயர் எத்தன்மையது! சால நன்று என்று கூறினாள்.

பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனோடு நிறையழி வாற் கூடினாள் தலைமகள். நீ தலைமகனோடு புலவா மைக்குக் காரணம் யாது என்று தோழி கேட்டாள். அதற்குத் தலைவி, நம்மால் விரும்பப்பட்டவர் வந்து காமத்தால் நாம் விரும்பியவற்றைச் செய்யுமளவில் நாண் என்று ஒன்றையும் அறியமாட்டேமாயிருந்தேம். நம் நிறையாகிய அரணையழிக்கும் தானை, பல பொய் பேசுதலில் வல்ல கள்வனுடைய தாழ்ந்த சொற் களன்றோ! ஆனபின் அது நிற்குமாறு என்னை? அவர் வந்தபொழுது புலக்கக் கடவேன் என்று கருதி முன் நில்லாது பிறதோரிடத்தே போயினேன். போயும் என் நெஞ்சம் நிறையில் நில்லாது அறைபோய் (தலைவர் வசப்பட்டு) அவரொடு கலத்தல் தொடங்குதலையறிந்து இனி அது இயலாதென்று அவரைப் புல்லினேன். நிணத்தைத் தீயின் கண்ணே யிட்டால் அது எவ்வாறு உருகுமோ அவ்வாறு தம் காதலரைக் கண்டால் நிறை யழிந்து உருகும் நெஞ்சினையுடைய மகளிர்க்கு, அவர் புணர யாம் ஊடிப் பின்பு உணராது அந்நிலையே நிற்கக் கடவோம் என்று கருதுதல் உண்டாகுமோ? ஆகாது என்றாள்.

78. **'பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோ நம் பெண்மையுடைக்கும் படை'-துறையும் பொருளும் கூறி விளக்குக.** (குறள். 1258)

துறை:—பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனேடு தலைமகள் நிறையழிவால் கூடினுள். தோழி தலைவியை நோக்கி, நீ தலைமகனேடு புலவாமைக்குக் காரணம் யாது என்றுகேட்டாள். அதற்குத் தலைவி சொல்லியது.

பொருள்:—பல பொய்ம் மொழிகளைக் கூறுதலில் வல்ல கள்வனுடைய தாழ்ந்த சொற்களன்றே நம் நிறையாகிய அரணையழிக்கும் படையாகும்.

விளக்கம்:—தலைவன் வந்தால் புலக்கக் கடவேம் என்றும், புலந்தால் அவன் சொற்களாலும் செயல் களாலும் நீங்கேம் என்றும், இவை முதலாக எண்ணிக் கொண்டிருந்தன யாவும் மறைந்து கலவிக்கண் தன்னைக் (தலைவனை) காட்டிலும் (தலைவி) முற்படும் வகையில் அவன் வந்து தோன்றினுன் என்பாள், பன் மாயக்கள்வன் என்ருள். பணிமொழி — தலைவியைக் காட்டிலும் தலைவன் அன்பு மிகுதியுடையனுகச் சொல் லும் சொற்கள், அவன் அத்தன்மையுடையவனுகவும், அவன் சொற்கள் அத்தகையனவாகவும் இருந்தால் நம் நிறை அழியாது நிற்குமோ என்ற கருத்தில் கூறி னுளாம்.

**79. அவர்வயின் விதும்பல் என்பதன் பொருள் என்ன?**
**(அதிகாரம். 127)**

சேயிடைப் பிரிவின் கண் தலைமகனும் தலைமகளும் வேட்கை மிகுதியினுல் ஒருவரையொருவர் காண்டற்கு விரைதல் அவர்வயின் விதும்பல் என்பதன் பொரு ளாகும்.

***80. தலைமகள் காண்டல் விதுப்பினுல் சொல்லியது என்ன? (குறள் 1261)***

அவர் நம்மைப் பிரிந்து போய நாட்களைச் சுவரின் கண் இட்ட அடையாளங்களைத் தொட்டு எண்ணுதலால் என் விரல்கள் தேய்ந்தன, அதுவேயன்றி அவர் வரும் வழியைப் பார்த்து என் கண்களும் ஒளியிழந்து புல்லிய வாயின. இவ்வாருயும் அவர் வரவு உண்டாயிற்றில்லை என்ருள். இதில், நாள் எண்ணுதலும் வழிபார்த்தலும்

ஒருகால் செய்தொழியாது இடையின்றிச் செய்தலான் விதுப்பாயிற்று.

**81. அவர்வயின் விதும்பல் என்ற அதிகாரத்தில் தலைவி தோழிக்குக் கூறியவற்றைத் தொகுத்துரைக்க. (குறள். 1262—1267)**

தோழி தலைவியை நோக்கி, ஆற்றுமை மிகுதலின் இடையின்றி நினைக்கற் பாலையல்லை; சிறிது மறக்கல் வேண்டும் என்றாள். அதற்குத் தலைவி, மறப்பேனுயின், அழகு என்னை நீப்ப என்தோள் வளை கழல்வனவாம். (இப்பொழுது நினைந்தால் மறுமைக்கண் அவரை எய்தியின் புறலாம். அதனுல் மறக்கற்பாலேன் அல்லேன் என்ற கருத்தில் கூறினுள்,)

இன்பம் நுகர்தலை விரும்பாமல் பகைவெல்லுதலை விரும்பி, நம் துணையையிகழ்ந்து, தம் ஊக்கத்தையே துணையாகக் கொண்டு சென்றவர், அவற்றையிகழ்ந்து இங்கு வருதலை விரும்புதலால் யான் இன்னமும் உயிரோடு இருக்கிறேன். நீங்கிய காமத்தராய் நம்மைப் பிரிந்து போனவர், மேல் கூடிய காமத்துடனே நம்பால் வருதலை நினைந்து என் நெஞ்சு வருத்த மொழிந்து மேன்மேல் பணைத்து எழுகின்றது என்று கூறினுள்.

தலைமகன் வரவு கூறி, ஆற்றுயாய்ப் பசக்கற் பாலையல்லை என்று கூறிய தோழிக்குத் தலைவி, என் கண்கள் ஆரும்வகை என் கொண்கனை யான் காண்பேனுக, அங்ஙனம் கண்டபின் என் மெல்லிய தோளின்கண் பசப்புத்தானே நீங்கும். இத்துணை நாளும் வாராக் கொண்கன் (தலைவன்) ஒருநாள் என்கண் வருவானுக. வந்தால் துன்பத்தைச் செய்கின்ற இந்நோயெல்லாம் கெட அவ்வமிழ்தத்தை வாயில்கள் ஐந்தானும் (ஐந்து பொறிகளாலும்) பருகக் கடவேன். கண்போற் சிறந்த கேளிர் வருவராயின் அவர் வரவு நீட்டித்தமை நோக்கி யான் புலக்கக் கடவேனே? அன்றி என் ஆற்றுமை நோக்கிப் புல்லக் கடவேனே? அவ்விரண்டும் வேண்டுதலால் அவ்விரு செயல்களையும் கலந்து செய்யக் கடவேனே? யாது செய்யக் கடவேன் என்றாள்.

82 **வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் வினை முடிவு நீட்டித்த பொழுது தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியதைத் தொகுத்துத் தருக.**
**(குறள் 1268—1270)**

வேந்தன் வினை செய்தலைப் புரிந்து வெல்வானாக, யாமும் மனைவியைச் சென்று கூடி அங்கு மாலைப் பொழுதிற்கு விருந்து அயர்வோமாக. சேணிடைச் சென்ற தம் காதலர் மீண்டு வரக் குறித்த நாளை உட்கொண்டு அது வருந்துணையும் உயிர்தாங்கி வருந்தும் மகளிர்க்கு ஒரு நாள் பலநாள் போல நெடிதாகக் காட்டும். காதலி நம் பிரிவினையாற்றாது உள்ளம் உடைந்து இறந்து பட்ட வழி நம்மைப் பெறக் கடவள் ஆனாலென்ன? அதுவன்றியே பெற்றாலென்? அதுவன்றியே மெய்யுறக் கலந்தால் தான் என்ன? இவையொன்றாலும் பயனில்லை என்று தலைமகன் தன்னுள்ளே கூறிக்கொண்டான்.

83. **குறிப்பறிவுறுத்தல் என்றால் என்ன?**
**(அதிகாரம் 128)**

தலைமகன், தலைமகள், தோழி என்ற இவர்கள் ஒருவர் குறிப்பினை யொருவர்க்கு அறிவுறுத்தல். இது பிரிந்துபோன தலைமகன் வந்து கூடிய வழி நிகழ்வதாகும்.

84. **'கரப்பினும் கையிகந்து ஒல்லாநின் உண்கண் உரைக்க லுறுவதொன் றுண்டு.—துறையும் பொருளும் கூறுக.**
**(குறள். 1271)**

துறை:—பிரிந்துகூடிய தலைமகன் வேட்கை மிகவினால் புது வது பன்னாளும் பாராட்ட, தலைமகள் இது ஒன்று உடைத்து என அஞ்சியவழி அதனை அவள் குறிப்பாலறிந்து அவன் அவருக்குச் சொல்லியது.

பொருள்:—நீ சொல்லாது மறைத்தாயாயினும் அதற்கு உடம்படாதே நின்னைக் கைகடந்து நின் உண்கண்களே எனக்குச் சொல்லத்தக்க காரியம் உண்டாயிருந்தது. இனி அதனை நீயே தெளியச் சொல்வாயாக. என்று தலைவன் கூறினான்.

**85. நாணுல் தலைவி சொல்லாதபொழுது தலைவன் தோழிக்குக் கூறியவற்றைத் திரட்டுக.**

(குறள் 1272—1275)

தலைமகன் தோழியை நோக்கி, என் கண்நிறைந்த அழகினையும், மூங்கிலையொத்த தோளினையும் உடைய நின் பேதைக்குப் பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை அளவுக்கு மேல் மிகுந்துள்ளது. கோக்கப்பட்ட பளிக்கு மணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுகும் நூல்போல, இம்மடந்தையது அணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுகும் குறிப்பு ஒன்று உண்டு. (அதனை யான் அறியேன், நீ அறிந்து கூறுதல் வேண்டும் என்ற கருத்தில் இதைக் கூறினுன்). முகையினது முகிழ்ப்பில் உள தாய்ப் புறத்துப் புலனுகாத நாற்றம்போல நின்பேதை என்னெடு நகக்கருதும் நகையினது முகிழ்ப்பில் உள்ள தாய்ப் புறத்துப் புலனுகாதது ஓர்குறிப்பு உண்டு. நெருங்கிய வளைகளையுடையாள் என்பால் இல்லாதது ஒன்றனை உட்கொண்டு ; அது காரணமாக எனக்கு மறைத்துப் போன குறிப்பு, என்மிக்க துயரத்தைத் தீர்க்கும் மருந்தாவது ஒன்றனை யுடைத்து என்று கூறினுன். (தலைவியிடம் பிரிவின்மையைக்கூறி நீதான் தெளிவிக்க வேண்டும் என்ற கருத்தில் இதைக் கூறினுன்.)

**86. தலைமகன் குறிப்பறிந்த தலைமகள், அதனை, அது தெளிவிக்கச் சென்ற தோழிக்குச் சொல்லியதாக உள்ள கருத்துக்களைத் திரட்டுக.**

(குறள் 1276—1278)

தலைமகள் தோழியை நோக்கி, காதலர் வந்து தம் பிரிவினுல் ஆகிய துன்பத்தினை மிகவும் ஆற்றி நாம் மகிழும் வண்ணம் கலக்கின்ற கலவி, முன்பு இருந்ததற்கு மேலும் அத்துன்பத்தினை அரிதாக ஆற்றியிருந்து அவர் அன்பின்மையை நினையும் தன்மையையுடைத்து. குளிர்ந்த துறையையுடையவன் நம்மை மெய்யாற் கூடியிருந்தே மனத்தாற் பிரிந்தமையை அவன் குறிப்பால் அறிதற்குரிய நம்மினும் இவ்வளைகள் முன்னேயறிந்தன. எம் காதலர் நேற்றே பிரிந்து போயினுர். அப்

பிரிவிற்கு யாமும் ஏழு நாட்களுக்கு முன்பே மேனி பசத் தலை யடைந்து விட்டோம். இதில், இன்னும் தலைவர் பிரிந்து செல்லவில்லையாகவும், அவர் நேற்றுச் செய்த தலையளியால் இனி விரைவில் பிரிவர் என்று முன்னமே தலைவி தெளிந்திட்டாள் ஆதலால் அத்தெளிவை விளக்க 'நெருநற்றுச் சென்ருர்' என்று கூறிளுள். பிரி வைப்பற்றி ஐயுற்று ஏழுநாளாயிற்று என்பதை விளக்க 'யாமும் எழுநாளேம் மேனிபசந்து' என்ருள். மேனி பசப்பு அடைந்ததால் தலைவன் குறிப்பு ஏழுநாட்களுக்கு முன்னமே அம்மேனி யுணர்த்தி நின்றது என்ருள்.

87. தலைமகள் குறிப்பு அறிந்த தோழி அதனைத் தலை மகனுக்கு அறிவித்தது எவ்வாறு? (குறள் 1279)

தோழி தலைமகனை நோக்கி, யான் தலைவியைத் தெளிவித்தும் அவள் தெளியாது, அவர்பிரிய யான் இங்கிருப்பின் இவை நில்லா எனத் தன் தொடியை நோக்கி, பின் இவ்விரண்டும் நிகழாமல் நீர் நடந்து காத்தல் வேண்டும் எனத் தன் அடியையும் நோக்கி, அங்ஙனம் அவள் செய்த குறிப்பு உடன் போக்காயிருந் தது என்ருள்.

88. தலைமகன் பிரியாமைக் குறிப்பைத் தோழிக்கு அறி வித்தது எவ்வாறு? (குறள் 1280)

தலைமகன் தோழியை நோக்கி, மகளிர் தம் காம நோயினைத் தோழியர்க்குக் கூட வாயாற் சொல்லாமல் கண்ணினுற் சொல்லி, அது தீர்க்க வேண்டுமென்று அவரையிரவரமல், உடன்போதல் குறித்துத் தம் அடி யினை இரத்தல், தமக்கியல்பாகிய பெண்மைக்கு மேலும் ஓர் பெண்மையை யுடைத்து என்று அறிந்தோர் சொல்லுவர் என்ருன்.

89. புணர்ச்சி விதும்பல் என்ருல் என்ன? (அதிகாரம் 129)

தலைமகனும் தலைமகளும் புணர்ச்சிக் கண்ணே விரை தல் என்பதே புணர்ச்சி விதும்பல் ஆகும்.

**90. புணர்ச்சி விதும்பலில் தலைமகள் தோழிக்குச் சொல்லி யன யாவை? தொகுத்துரைக்க.**

(குறள் 1281—1287)

தோழி தலைவியை நோக்கி, தலைவன் பிரிதல் குறிப் பினனுய் உள்ளான்; நீ அவனேடு புலவாமைக்குக் காரணம் யாது? என்று கேட்டு நகையாடினுள். அதற் குத் தலைவி, நினைந்த மாத்திரத்திலேயே களிப்பெய்த லும், அவனைக் கண்ட மாத்திரத்தில் மகிழ்வெய்தலும் கள்ளுண்டார்க்கு இல்லை; காமமுடையார்க்கு மட்டுமே உண்டு. (களித்தல்— உணர்வு அழியாதது. மகிழ்தல் —உணர்வு அழிந்தது.) மகளிர்க்குக் காமம் பனையள வைக் காட்டிலும் மிகவுண்டாமாயினும் அவரால் தம் காதலரோடு, தினையளவு கூட ஊடுதல் செய்யாமை வேண்டப்படும். நம்மை அவமதித்துத் தான் வேண்டி யனவே செய்யுமாயினும் கொண்கனை (கணவனை) என் கண்கள் காணுது அமைகின்றன இல்லை. காதலரைக் காணுமுன் அவர் செய்த தவற்றைத் தன்னெடு நினைந்து யான் அவரோடு ஊடுதற்கண்ணே சென் றேன். அவரைக் கண்டபின் என் நெஞ்சு அதனை மறந்து அவரைக் கூடுதற்கண்ணே சென்றது. முன் னெல்லாம் கண்டிருந்தும் எழுதுங்காலத்து அஞ்சனக் கோலின் இயல்பை (கருமையைக்) காணமாட்டாத கண்ணேபோலக் கொண்கனது தவற்றை அவனைக் காணுதபொழுதெல்லாம் கண்டிருந்து அவனைக் கண்ட விடத்துக் காணமாட்டேன். கொண்கனை யான்காணும் பொழுது அவன் தவருயவற்றைக் காண்கிலேன். அவனைக் காணுதபொழுது அத்தவறுகளையே யல்லது பிறவற்றைக் காண்கிலேன். தம்மை இழுத்து கொண்டு போதலை அறிந்த பின்னும் ஓடுகின்ற புனலுள் பாய் பவரின் செயலைப்போலப் புலவி முடிவு பெருமை அறிந் திருந்தும் கொண்கனேடு புலந்து பெறுவதென் என்றுள்.

*91 தலைமகளின் புணர்ச்சி விதுப்பு அறிந்த தோழி தலைமகனுக்குச் சொல்லியது என்ன? (குறள் 1288)*

தோழி தலைவனை நோக்கி, கள்வனே! கள்ளை உண்டு களித்தவர்க்கு அது இளிவரத்தக்க (எளிமை

யுண்டாக்கத்தக்க) இன்னுதவற்றைச் செய்யினும் அவரால் மேன் மேலும் அக்கள் விரும்பப் படுவதைப் போன்றது எங்கட்கு நின் மார்பு என்ருள்.

**92. உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியதை விளக்குக.** (குறள். 1289, 1290)

காம இன்பம் மலரினும் மெல்லியதாயிருக்கும். அங்ஙனம் மெல்லியதாயிருத்தலை அறிந்து அதன் செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலரே யாவர் என்ருன்.

விளக்கம்:—குறிப்பும், வேட்கையும், நுகர்ச்சியும், இன்பமும் ஒரு காலத்தின் கண்ணே ஒத்து நுகர்தற்குரியார் இருவர் அதற்கேற்ற இடனும் காலமும் உபகரணங்களும் பெற்றுக் கூடி நுகரவேண்டுதலின் 'அதன் செவ்வி தலைப்படுவார் சிலர்' என்றும், அவற்றுள் யாதானும் ஒன்றனல் சிறிது வேறுபடினும் வாடுதலின் 'மலரினும் மெல்லியது' என்றும் கூறினன். குறிப்பு ஒவ்வாமையின் யான் அது பெற்றிலேன் என்ற கருத்துப்பட இதைக் கூறினன். (குறள். 1289)

காதலின் முன்னொரு காலத்தில் புல்லல் விதுப்பினல் சென்ற என்னேடு தன் கண்ணினல் மட்டும் ஊடிப் புல்லுதலை என்னைவிட அவள் விதும்பலால், ஊடியதையும் மறந்து கூடிவிட்டாள். அதனல், யான் இப்படி வருத்தமுற்று இருப்பவனுக இருக்கவும் விதுப்பின்றி ஊடி நிற்கின்ற இவள் அவளல்லள் என்ருன். அவளாயின் இங்ஙனம் ஊடற்கண் நீடாள் என்ற கருத்தில் இதைக் கூறினன். (குறள். 1290)

93. நெஞ்சொடு புலத்தல் என்ருல் என்ன?
(அதிகாரம் 130)

புலந்து கொள்வதற்குக் காரணமுண்டாய வழியும் புலக்கக் கருதாது புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும், தலைமகன் புலத்தலும் நெஞ்சொடு புலத்தல் ஆகும்.

94. தலைமகன்கண் தவறுண்டாயவழியும் புலவி கருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொன்னவற்றைத் திரட்டுக. (குறள் 1291—1294)

நெஞ்சே! அவருடைய நெஞ்சு நம்மை நினையாது அவர்க்கு ஆகி நிற்றலைக் கண்டிருந்தும், நீ எமக்காக நில்லாது அவரை நினைத்தலுக்குக் காரணம் யாது? மேலும், நம்மாட்டு அன்புடையர் ஆகாதவரை உள்ள வாறு அறிந்த விடத்தும் நாம் சென்றால் வெகுளார் என்பதுபற்றி நீ அவர்பால் செல்கின்றாய். இத்தன் மைக்கு மேல் ஓர் அறியாமையுண்டோ? என்மாட்டு நில்லாது நீ விரும்பியவாறே அவர் மாட்டுச் செல்லு தற்குக் காரணம் கெட்டார்க்கு நட்டார் உலகத்து இல்லை யென்னும் நினைவோ? நின் இயல்போ? கூறுவாயாக. நீ அவரைக் கண்டபொழுதே இன்பம் நுகரக் கருதுவது அல்லது அவர் தவறு நோக்கி முன் புலவியை உண் டாக்கி அதனை அளவறிந்து பின் நுகரக் கருதாமல் இருக்கிறாய். ஆதலால், இனி அத்தன்மையவற்றை நின்னோடு எண்ணுவார் யார்? யான் அது செய்யேன்.

95: **வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியதைத் திரட்டிக் கூறுக.**

(குறள். 1295—1298)

காதலரைப் பெறாதபொழுது அப்பெறாமைக்கு அஞ்சியது. பெற்றக்கால் வர இருக்கும் பிரிவினை உட் கொண்டு அதற்கு அஞ்சுகின்றது. ஆதலால் என் நெஞ்சம் எப்பொழுதும் நீங்காத இடும்பையையுடைத் தாயிற்று. என் நெஞ்சு அவருடன் சொல்லாமல் இங்கு என் உடலில் இருந்தது எதற்கென்றால், காதலரைப் பிரிந்திருந்து அவர் கொடுமைகளை யான் அந்நெஞ் சொடு நினைத்தக்கால் அவ்வளவறிந்து என்னைத் தின்பது போன்று துன்பஞ் செய்தற்கேயாகும். தன்னை மறந்த காதலரைத்தான் மறக்கமாட்டாத என் மாட்சிமையில்லாத மடநெஞ்சுடனே கூடி என் உயிரி னும் சிறந்த நாணையும் மறந்துவிட்டேன். உயிர்மேல் காதலையுடைய என் நெஞ்சு, நம்மை எள்ளிச் சென்றார் என்று நாமும் எள்ளுவேமாயின் பின் நமக்கு இளிவா மென்று கருதி, அவர் திறத்தினையே நினைக்கின்றது. (எள்ளுதல்—வாயில் மறுத்தல். இளிவு—வழிபடாமை யாலும், பிரிவாற்றாமையாலும், நாணும் நிறையும்

முதலியன இழத்தலாலும் உளதாவது. திறம்—வாயில் நேர்தலும் வருதலும் கூடலும் முதலாயின.)

96. உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியதைத் தெரிவிக்க. (குறள். 1299,1300)

ஒருவர்க்குத் துன்பம் வந்தபொழுது அது நீக்குதற்குத் தாம் உரித்தாகப் பெற்ற தம்முடைய நெஞ்சம் துணையாகா வழிவேறு துணையாவார் ஒருவருமில்லை. தாம் உரித்தாக உடைய நெஞ்சம் ஒருவர்க்குச் சுற்றமாக அமையாதபொழுது அயலார் சுற்றமாக அமையாததைச் சொல்லவேண்டுமோ? என்று கூறினான்.

97. புலவி என்றால் என்ன? (அதிகாரம் 131)

தலைவன் தலைவி ஆகிய இருவர் நெஞ்சும் புணர்ச்சி விரும்பாது புலக்கக் கருதியபொழுது ஒருவரோடு ஒருவர் புலத்தல் புலவி ஆகும்.

98. வாயிலாகச் சென்ற தோழி தலைமகள் வாயில் நேர்தற் பொருட்டு அவளோடு நகையாடிச் சொல்லியதைக் கூறுக (குறள் 1301)

தோழி தலைவியை நோக்கி, தலைவரோடு புலந்தால் அவர் எய்தும் அல்லல் நோயினை யாம் சிறிது காணலாம். நீ அவரை விரைந்து சென்று புல்லாமல் புணர்ச்சிக்கு இடங்கொடாமையாகிய இச்செயலை மேலிட்டுக் கொண்டு இருந்து புலப்பாயாக என்றாள்.

99. புலவியொழிந்து வாயில் நேரும் வகையில் தோழி சொல்லியதைக் கூறுக (குறள் 1302)

புலவியானது கலவி இன்பம் செயற்கு வேண்டுமளவில் அமைதல், உப்பானது உண்ணும் உணவுகளை இன் சுவையவாக்கற்கு வேண்டும் அளவிற்றாதல் போலாகும். இனி அதனை (புல்வியை) அவ்வளவிற் சிறிது மிகவிடுதல் அவ்வுப்பு அளவைவிட மிகுதியானாற் போலும். (உப்புமிக்க வழித் துய்ப்பது சுவையின்றாய்ப் போகும். அதுபோலப் புலவி மிக்கவழிக் கலவி, இன்பமின்றாய்ப் போகும் என்பது கருத்து.)

100. பரத்தையரிடத்தினின்றும் வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியதை விளக்குக. (குறள் 1303, 1304)

தம்மைப் பெருது புலந்த மகளிரைப் புலவி நீக்கி கலவாது ஆடவர் வேறிடத்துச் செல்லுதல், பண்டே துன்பமுற்று அழிந்தாரை அதற்கு மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தாற் போலும். நும்மோடு ஊடிய பரத்தையரை ஊடலுணர்த்திக் கூடாது ஒழிதல், பண்டே நீர் பெருது வாடிய கொடியை அடியிலே அறுத்தாற் போலும் என்று தலைவி கூறினாள். (நீர் பரத்தையர் இடத்திலேயிருப்பவராதலின் எம் புதல் வரைக் கண்டு ஆற்றியிருக்கற் பாலமாயயாம் நும்மோடு ஊடுதற்கு உரியமல்லம். அன்மையின் எம்மை உணர்த் தல் வேண்டா. உரியராய் ஊடிய பரத்தையரையே உணர்த்தல் வேண்டுவது. அதனால் அங்குச் செல்மின் என்பது கருத்து.)

101 தலைமகளைப் புலவி நீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியதைத் தொகுக்க. (குறள் 1305—1307)

நற்குணங்களால் தகுதியுடையராய தலைவர்க்கு அழகாவது, தம் பூப்போன்ற கண்ணுரின் நெஞ்சின் கண் நிகழும் புலவி மிகுதியன்றே. முதிர்ந்த கலாமாகிய துனியும் இளையகலாமாகிய புலவியும் இல்லையாயின் காமம் செவ்வி முதிர்ந்த பழமும் இளங்காயும் போலும். (மிக முதிர்ந்து விழும் நிலைமையையுடைய கனி, நுகர் வார்க்கு மிகவும் இனிமை செய்யாது ஆகலின் துனி இல்லையாயின் கனியற்று என்றும்; கட்டிளமைத் தூய காய் நுகரும் செவ்வித்து அன்று ஆகலின் புலவி யில்லையாயின் கருக்காயற்று என்றும், கூறினான்.) இனிப்புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோ என்று கருதலால் இன்பத்திற்கு இன்றியமையாத ஊடலின் கண்ணேயும் ஒரு துன்பம் நிகழும் என்று கூறினான்.

102. உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியதைத் தொகுத் துத் தருக. (குறள். 1308—1310)

இவர் நம் பொருட்டாக நொந்தார் என்று அந் நோவினை அறியும் அன்புடையாரைப் பெருவழி ஒருவர் நோகின்றதனாற்பயனென்? (இவள் நம் காதலியல்லள்;

அன்மையின் இந்நோவறியாள்; அறியாமையின் நாம் புலக்கின்றதனால் பயனில்லை எனத் தன் ஆற்ருமையை உணர்த்திஞன் தலைவன்.) உயிர்க்கு இன்றியமையாத நீரும் நிழலில் இருந்தால்தான் இனிதாயிருக்கும். ஏனை வெயிலில் இருப்பது இனிதாயிருக்காது. அதுபோலக் கலவிக்கு இன்றியமையாத புலவியும் அன்புடையாரிடமே இனிதாயிருக்கும். ஏனை அன்பில்லாரிடம் இனிதாகாது. (இவள் நம்பால் ஆற்ருமைக்கு நோதலும் கூடுதற்கண் வேட்கையும் இல்லாதவளாதலின் இப் புலவி தானும் இன்னுததாயிற்று என்ற கருத்தில் இதைக் கூறிஞன்.) தாம் ஊடற்கண்ணே மெலியவும், விட்டிருக்கவல்லாரோடு கூடக்கடவேம் என்று என் நெஞ்சம் முயலுதற்குக் காரணம் தன் அவாவே தவிரப் பிறிதில்லை என்ருன்.

103. புலவிநுணுக்கம் என்பதன் பொருளைத் தெரிவிக்க. (அதிகாரம் 132)

புலவிநுணுக்கம் என்ருல் புலவியது நுணுக்கம் என விரியும். தலைமகனும் தலைமகளும் ஒரு படுக்கையில் கூடியிருக்கும்பொழுது அவன்பால் புலத்தற்குக் காரணமில்லையாகவும், காதல் கைம்மிகுதலால் நுண்ணியதோர் காரணம் உளதாக உட்கொண்டு, அக்காரணத்தை அவன்மேல் ஏற்றி அவள் புலத்தலாகும்.

104. உலாப்போய் வந்த தலைமகன் பள்ளியிடத்தானுகத் தலைமகள் சொல்லியது என்ன? (குறள். 1311)

பரத்தைமையுடையாய்! நின்னைப் பெண் தன்மையுடையார் யாவரும் தம் கண்ணுல் பொதுவாக உண்பர். அதனுல் அவர் மிச்சிலாகிய நின்மார்பினை யான் பொருந்தேன் என்று தலைவி கூறிஞள். (கற்பு நாண் முதலிய நற்குணங்கள் பரத்தையர்க்கு இல்லாமல் பெண் தன்மை மாத்திரமே உண்டு என்னும் கருத்தால் ‘பெண்ணியலார்’ என்ருள். பொதுவாக உண்டல்—பரத்தையர் யாவரும் ஒருகாலத்து ஒருங்கு நோக்குதல். தான் நோக்கி இன்புற்றவாறே பரத்தையரும் நோக்கி இன்புறுவர் என ஐயுற்று அவர்பால் பொருமையடைதலின் புலவி நுணுக்கமாயிற்று.)

**105. தலைமகன் நீக்கத்துச் சென்ற தோழிக்குத் தலைமகள் பள்ளியிடத்து நிகழ்ந்ததை எவ்வாறு கூறினாள்? (குறள் 1312)**

தலைமகள் தோழியை நோக்கி, யாம் காதலரோடு ஊடி உரையாடாதிருந்தேம். அப்பொழுது அவர் தும்மினர். யாம் ஊடலினின்று நீங்கி அவரை நீடு வாழ்க என்று கூறி உரையாடுவேம் என்று கருதி அவ்வாறு அவர் தும்மினர் போலும் என்றாள். (தும்மியக்கால் வாழ்த்துதல் மரபாதலின் உரையாடல் வேண்டினன் என்றாள். அவனுக்கு இயல்பாக நிகழ்ந்த தும்மலைக் குறிப்பால் நிகழ்ந்ததாகக் கொண்டதால் புலவி நுணுக்கமாயிற்று.)

**106. தலைமகளது புலவிக் குறிப்பினைக் கண்டு நீயிர் கூடியொழுகா நிற்கவும் புலவி நிகழ்தற்குக் காரணம் யாது? என்ற தோழிக்குத் தலைமகன் சொன்னவற்றைத் தொகுத்துக்கூறுக. (குறள் 1313—1320)**

தலைமகன் தோழியிடம் கூறியவை:—யான் வளைய மாலையை (கோட்டுப்பூ)ச் சூடினேனாயினும் நும்மால் காதலிக்கப்பட்டவள் ஒருத்திக்கு இப்பூவணியைக்காட்ட வேண்டிச் சூடினீர் என்று வெகுள்கிறாள். இத்தன்மையாட்கு ஒரு காரணம் வேண்டுமோ?

காமம் நுகர்தற்குரிய இருவராயினர் யாவரினும் யாம் மிக்க காதலையுடையேம் என்று கருதி யாரினும் காதலம் என்றேன். நின்தோழி அதன் பொருளைக் கருதாமல் என்னால் காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளும் நின்பால் காதலுடையேன் என்றுயான் கூறியதாகக் கருதி, அம் மகளிர் யாரினும் யாரினும் (யாரைவிட) என்பால் காதலுடையர் ஆயினீர் என்று சொல்லிப் புலந்தாள். (யான் அன்பு மிகுதியால் சொன்னதைக் கருத்து வேறுபடக் கொண்டதைத் தவிரப்பிறிது காரணம் இல்லை என்ற கருத்தில் கூறினன்.)

காதல் மிகுதியால் இம்மையாகிய பிறப்பில் யாம் பிரியேம் என்று சொன்னேன். அதனால் ஏனை மறுமையாகிய பிறப்பின்கண் பிரிவல் என்னும் குறிப்பில் யான்

கூறியதாகக் கருதி அவள் தன்கண் நிறைந்த நீரினைக் கொண்டாள். (வெளிப்படு சொல்லைக் குறிப்புச் சொல்லாகக் கொண்டதல்லது என்பால் தவறில்லை என்ற கருத்தில் கூறினான்.)

பிரிந்த காலத்து நின்னை இடையின்றி நினைந்தேன் என்னும் கருத்தில் யான் உள்ளினேன் என்று கூறினேன். யான் அவ்வாறு கூறவே அதனை, ஒருகால் மறந்து பின் நினைந்தேன் என்றதாகக் கருதி, என்னை இடையே மறந்தீர் என்று சொல்லி முன்புல்லுதற்கு அமைந்தவள் அஃதொழிந்து புலத்தற்கு அமைந்தாள்.

கூடியிருக்கின்றவள், யான் தும்மினேனாக, தன் இயற்கைபற்றி வாழ்த்தினாள். அங்ஙனம் வாழ்த்திய அவளே உடனே மறித்து நும்மை நினைத்து வருந்துகின்ற மகளிருள் யாவர் நினைத்தலால் நீர் தும்மினீர் என்று சொல்லிப்புலந்து அழுதாள். (இல்லாததை உள்ளதாக எண்ணிப் புலந்தாள் என்ற கருத்தில் இதைக் கூறினான்.)

எனக்குத்தும்மல் தோன்றிய வழி யாரை எண்ணித் தும்மினீர் என்று புலந்துகொள்வாளே யென்று அஞ்சி அதனை யான் அடக்கினேன். அங்ஙனம் அடக்கவும், நும்மைச் சேர்ந்த மகளிர் நும்மை நினைத்தலை மறைக்கவே தும்மலை அடக்கினீர் என்று சொல்லிப்புலந்து அழுதாள். (தும்மினும் குற்றம், ஒழியினும் குற்றம் ஆயக்கால் செயற்பாலது யாது? என்று வருந்திக் கூறினான்.)

இவ்வாற்றான் ஊடிய தலைவியை யான் பணிந்து உணர்த்தும் பொழுதும் வெகுளுவாள். பிற மகளிர்க்கும் நீர் அவர்கள் ஊடிய பொழுது இவ்வாறே பணிந்து உணர்த்தும் தன்மையை யுடையவராய் இருப்பீரோ என்று சொல்லிப் புலந்தாள். (இவள் தெளிவித்தாலும் தெளியாள் என்பதுபற்றி என்மேல் ஏற்றிய தவற்றை உடம்பட்டுப் பணிந்தேன். பணியவே அதுவே இவள் புலத்தற்குக் காரணமாய் முடிந்தது. இனி இவள் பால் செய்யத்தகுவது யாது? என்று வருந்தினான்.)

என் சொற்களும் செயல்களும் பற்றி அவள் வெகுளுதலால் அவற்றை ஒழிந்திருந்து அவளுடைய உறுப்புக்களின் ஒப்பின்மையை நினைந்து அவற்றையே நோக்கினாலும், என்னை வெகுண்டு கொள்கிறாள். நீர் என் உறுப்புகள் அனைத்தும் நோக்கினீர், அவற்றது ஒப்புமையான் எந்த மகளிரை நினைந்து என்று சொல்லிப்புலந்து கொள்கிறாள் என்றான். (இதனால் வாளா இருத்தலும் குற்றமாயிற்று என்றான்).

107. ஊடலுவகை என்பதன் பொருள் என்ன?

(அதிகாரம் 133)

ஊடலால் தமக்குக் கூடலின்பம் சிறந்தபொழுது அச்சிறப்பிற்கு ஏதுவாகிய அவ்வூடலைத் தலைமகள் உவத்தலும், தலைமகன் உவத்தலும் ஊடலுவகை யாகும்.

108. தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி அங்ஙனம் நீ புலக்கின்றது ஏன் என்று கேட்கத் தலைவி சொல்லியதைத் தெரிவிக்க.

(குறள் 1321)

தலைவி தோழியை நோக்கி, அவர்பால் தவறு இல்லையாயினும் நமக்கு அவர் தலையளி செய்கின்ற தன்மை அவரோடு ஊடுதலை விளைவிக்கத்தக்காதாயுள்ளது என்றாள். (அளவிறந்த இன்பத்தர் ஆதலின் யான் எய்தத் தக்க இத்தலையளியை என்னைத் தவிர்ந்த மகளிரும் எய்துவர் எனக்கருதி, அது பொறாமையால் ஊடல் நிகழ்கின்றது என்ற கருத்தில் கூறினாள்.)

109. புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க அஃது இழந்து புலவியால் வருந்துவது ஏன்? என்றாட்குத் தலைவி சொல்லியதைத் தெரிவிக்க.

(குறள் 1322, 1323)

தலைவி தோழியை நோக்கி, ஊடல் காரணமாக நம்மிடம்தோன்றுகின்ற சிறிய துனிதன்னால், காதலர் செய்யும் நல்லதலையளிவாடுமாயினும் பெருமையெய்தும் (தவறு இன்றி நிகழ்கின்ற ஊடல் விரைவில் நீங்கலின் அத்துன்பமும் நில்லாது என்பாள் 'சிறுதுனி' என்றும், ஆராமை பற்றி நிகழ்தலின் அதனால் நல்லளிவாடாது என்பாள் என்றும், 'வாடினும்' என்றும், பின்னே

பேரின்பம் பயக்கும் என்பாள் 'பாடுபெறும்' என்றும் கூறினாள். அது வருத்தம் எனப்படாது என்பதாம்.

நிலத்தொடு நீர் கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலர் பால் புலத்தல் போல நமக்கு இன்பம் தருவதொரு புத்தேள் உலகம் உண்டோ? இல்லை என்றாள் (நீர் தான் நின்ற நிலத்து இயல்பை அடைவதுபோலக் காதலரும் தாம் கூடிய மகளிர் இயல்பினர் ஆதலால் அதுபற்றி அவரோடு புலவி நிகழும் என்பாள் 'நிலத்தொடு நீர் இயைந்த அன்னாரகத்து' என்றும். அவர் நமக்கும் அத்தன்மையர் ஆகலின் அப்புலவி பின்னே பேரின்பம் பயக்கும் என்பாள் 'புலத்தலின் புத்தேள் நாடு உண்டோ' என்றும் கூறினாள்.

110. அப்புலவி இனியாதால் நீங்கும் என்று கேட்ட தோழிக்குத் தலைவி யாது கூறினாள்?
(குறள். 1324)

காதலரைப் புல்லிக்கொண்டு பின் விடாமைக்கு ஏதுவாகிய அப்புலவிக் கண்ணே, அதன்மேற் சென்ற என் உள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம் உளதாம் என்றாள். (என் உள்ளம் உடைக்கும் படைக்கலம் என்றது வணக்கத்தையும் பணிமொழியையும், அவற்றால் அப்புலவியுள்ளம் அழிதலின் படைக்கலம் என்றாள்.

111. தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன் கழி உவகையனாய்த் தன்னுள்ளே சொல்லியதைத் தொகுக்க. (குறள். 1325—1330)

ஆடவர் தம்பால் தவறிலர் ஆயினும் உடையார் போல ஊடப்பட்டுத் தாம் விரும்பும் மகளிருடைய மெல்லிய தோள்களைக்கூடப் பெறாத எல்லைக்கண் அவர்க்குஅத்தன்மையதோர் இன்பம் பயத்தலுடைத்து. (தவறின்றி ஊடியதும் எனக்கு இன்பமாயிற்று என்ற கருத்தில் கூறினான்.)

உயிர்க்கு இனிமேல் உண்பதைவிட முன்உண்டது அறுதல் இன்பந்தரும். அதுபோலக் காமத்திற்கு இனிமேல் புணர்தலைவிட முன்னைத் தவறுபற்றி ஊடுதல் இன்பம் தரும். (அகன்றுகூடும் வழிப் போதுமென்ற நிறைவு பிறவாததாய்ப் பேரின்பம் தருவதும் ஆகும் எனத் தன் அனுபவம் பற்றிக் கூறினான்.)

காமம் நுகர்தற்குரிய இருவருள் ஊடலில் தோற்ற வர் வென்றவராவார். அஃது அப்பொழுது அறியப் படார்தாயினும் பின்னைப் புணர்ச்சியின் கண் அவரால் அறியப்படும்.

இதுபொழுது இவள் நுதல் வியர்க்கும் வகையில் கலவியின் கண் உள்ளதாய இனிமையை இன்னும் ஒரு கால் இவள் ஊடி யாம் பெறவல்லேமோ?

ஒளியிழையினையுடையாள் இன்னும் எம்மோடு ஊடு வாளாக. அங்ஙனம் அவள் ஊடி நிற்றற்கும் காலம் பெறுமாறு இவ்விரவு விடியாது நீட்டித்தல் வேண்டும்.

காம நுகர்ச்சிக்கு இன்பமாவது அதனை நுகர்தற்குரி யார் ஆராமைபற்றித் தம்முள் ஊடுதல் ஆகும். அவ்வூடு தற்கு இன்பமாவது அதனை அளவறிந்து நீங்கித் தம்முட் கூடி முயங்குதல் கூடுமாயின் அம்முயக்கம் ஆகும். முதிர்ந்த துனியாய வழித்துன்பம் பயத்த லானும், முதிராத புலவியாயவழிக் கலவியின்பம் பயவாமையானும் இரண்டற்கும் இடையாகிய அள வறிந்து நீங்குதல் அரிது என்பது பற்றிக் கூடி முயங்கப் பெறின்' என்று கூறினன்.)

## சென்னைப் பல்கலைக் கழக வினுக்கள்.

1. காமத்துப்பாலில் குறிப்பறிதல், குறிப்பறிவுறுத்தல் என்ற அதிகாரம் இரண்டனுள்ளும் திருவள்ளுவர் காட்டும் குறிப்புக்களை மாத்திரம் தொகுத்து எழுதுக. (M. A. 1970) அதி. 110, 128.

2. 'ஊடுதல் காமத்திற்கின்பம்' என்ற திருவள்ளுவர் 'கூடி முயங்கப்பெறின்' என்பதன் கருத்தை நன்கு விளக்குக. (M. A. 1970) அதி. 133.

3. திருவள்ளுவர் காமத்துப்பாலில் எந்த அளவு சங்க அகத்திணை மரபைப் பின்பற்றுகிறார்? (M.A. 1971)

4. மருதத்தின் உரிப்பொருளை வள்ளுவர் எவ்வாறு கையாளுகிறார்? அவர் இலக்கியத்திறனையும் உள இயல் நுட்பத்தினையும் அப்பாடல்களை ஆராயும் போக்கில் விளக்குக. (M. A. 1972)

5. குறிப்பறிதல் அல்லது குறிப்பறிவுறுத்தலில் வள்ளுவர் கூறும் செய்திகளை இலக்கியச் சுவைபட எடுத்துக் காட்டிப் பாராட்டுக, (M. A. 1973) அதி. 110, 128.
6. பண்டைப் புலவர்கள் மருதத்திணையைப் பரத்தையர் பிரிவு கொண்டு அழகு செய்ய, வள்ளுவர் அத்தகைய உத்தியைக் கையாளாமல் மருத வாழ்வினைக் காதலுக்கு உரந்தரும் ஊடல் வாழ்வின் வளர்ச்சியாய்க் கூடல் வாழ்வின் இனிமையைப் புனைந்துரைக்கும் புரட்சிப் போக்கினைப் புலப்படுத்துக. (M. A. 1974 New)
7. உண்மை இன்பத்தின் உயர்ந்த நிலையைக் காதலரது பேச்சாகவே பாடிக்காட்டும் பண்டைய தமிழ் மரபினை வள்ளுவரின் காமத்துப்பால் வழி நின்று புலப்படுத்துக. (M. A. 1974 New)
8. காமத்துப்பாலில் குறிப்பறிதலுக்கும் குறிப்பறிவுறுத்தலுக்கும், அல்லது புலவிக்கும் புலவி நுணுக்கத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை வள்ளுவர் வழிநின்று புலப்படுத்துக. (M. A. 1973 New) அதி. 110, 128; அதி 131, 132.
9. தலைவியின் நோக்கு வகைகளையும் அவற்றால் தலைவன் அறியும் குறிப்புகளையும் திருவள்ளுவர் எவ்வெவ்வாறு எடுத்துக் கூறுகின்றார்? அதி. 110.
(அல்லது)
தலைவனைக் காண்டற்கு விரையும் கண்கள் தனக்குப் புரியும் கொடுமைகளைச் சுட்டித் தலைவி தன் ஆற்றாமையைப் புலப்படுத்தும் குறட்பாக்களில் அமைந்துள்ள இலக்கிய அழகைப் பாராட்டுக.
(M. A. 1974 Old) அதி. 118
10. திருவள்ளுவர் கனவைக் கருவியாகக் கொண்டு காதல் உணர்வுகளை விளக்கும் நுட்பத்திறனைப் புலப்படுத்துக. அதி. 122. (அல்லது)
வரைவின் மகளிரைப் பழித்துரைத்த திருவள்ளுவர் அவர் இன்றியே ஊடல் துறையை விளக்கக் கையாண்ட உத்தி முறைகளைத் தெளிவுறுத்துக. (M. A. 1975 New) அதி. 133.

# ORIENTAL TITLE EXAMINATION MARCH 1974

## Pulavar—Final

## PRESCRIBED TEXT-BOOKS—II

Time : Three hours Maximum : 100 marks

முதல் ஐந்து வினுக்களுக்கு எவையேனும் இரண்டு உட்பிரிவுகட்கு விடை தருக.

1. (அ) பெரியாரைத் துணைக்கோடலின் இன்றியமையாமையைப் புலப்படுத்துக.

(ஆ) காலத்தால் மேற்கொள்ளப்படும் செயல்கள் வெற்றியுறும் என்பதனை வள்ளுவர் எங்ஙனம் விளக்குகிறார்?

(இ) மணற்கேணி, ஊற்றுக்கோல், வைத்தூறு, பீலிபெய் சாகாடு—இவற்றால் விளங்கப் பெறும் உண்மைகள் யாவை?

(ஈ) பின்வரும் குறட்பாக்களில் எவையேனும் இரண்டினைப் பொருள்கூறி விளக்குக:—

(1) பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்

(2) காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு.

(3) கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை. (14)

2. (அ) வஞ்சிக் காண்டம் உணர்த்தும் வீரச்சுவையினைப் புலப்படுத்துக.

(ஆ) செங்குட்டுவனின் வீரச் செயல்களை வில்லவன் கோதை எங்ஙனம் எடுத்துக் கூறுகிறான்?

(இ) வடதிசை வணங்கி வஞ்சி மாநகர் மீண்ட செங்குட்டுவனை நால்வகைநில மக்களும் வாழ்த்தி இசை எழுப்பிய செய்தியை இளங்கோவடிகள் எங்ஙனம் கூறுகிறார்? இரண்டிற்கு இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக:—

(1) "வேலன் மடவன் அவனினும் தான்மடவன்
ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின்"

(2) "பகைப்புலத் தரசர் பலரீங் கறியா
நகைத்திறங் கூறினே நான்மறை யாள"
(3) "தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன் கோயில்
நல்விருந் தாயினன் நானவன் தன்மகள்"
(4) "பருவ மன்றியும் பைந்தொடி நங்கை திரு
விழை கோலம் நீங்கினளாதலின் அரற்றி
னென்". (14)

3. (அ) திருத்தக்கதேவர் இயற்கைக் காட்சிகளை எழி லுற வருணிப்பதில் வல்லவர் என்பதனைச் சான்றுகள் தந்து புலப்படுத்துக.

(ஆ) கேமமாபுரத்தின் சிறப்பினை ஆசிரியர் எங்ங னம் எடுத்தியம்புகிறார்?

(இ) 'தாய்படுந் துயர மெல்லாந் தாரவனீக்கி னனே'—தாய்பட்ட துயரம் யாது? தாரவன் நீக்கியது எவ்வாறு?

(ஈ) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண் டிற்கு இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக:—

(1) "ஓங்குநீண் மரத்திற் றூங்கு
மொண்சிறை யொடுங்கல் வாவல்
பாங்கரிற் பழங்க டுய்ப்பப்
பழவினை பரியுமன்றே"
(2) "எரிதலைக் கொண்ட காமத் தின்பநீர்ப்புள்ளி
யற்றால்
பிரிவின்கட் பிறந்த துன்பம் பெருங்கடலனைய
தொன்றால்"
(3) "கூற்றங் கொண்டோடத் தமியே
கொடுநெறிக்கட் செல்லும் போழ்தி
னற்றுணைக் கொள்ளீ ரழகலா
லறிவொன்று மிலிரே போலும்"
(4) "ஐயா விளாம்பழமே யென்கின்றீ
ராங்கதற்குப் பருவ மன்றென்
செய்கோ." (12)

4. (அ) திருமுனைப் பாடி நாட்டின் வளத்தைச் சேக்கிழார் எவ்வாறு சிறப்பிக்கின்றார்?

(ஆ) நாவுக்கரசர் திருவையாற்றில் கண்ட கயிலைக் காட்சியின் சிறப்பியல்பினை விவரிக்க.

(இ) அப்பர்பெருமானுக்கு இறைவன் ஏற்படுத்திய சோதனைகளையும் அவர் எவ்வாறு அவற்றில் வெற்றி கண்டார் என்பதனையும் விளக்கி எழுதுக.

(ஈ) அப்பர் ஓர் அறப்போர் வீரராவார் என்பதனை அவர் தம் செயல்களைக் கொண்டு புலப்படுத்துக. (14)

5. (அ) அசோக வனத்தில் இராமனையே நினைந்து ஏங்கும் சீதையின் உள்ளத்தினைக் கம்பர் எவ்வாறு எடுத்தியம்புகிறார்?

(ஆ) சீதையை அரக்கியரிடைக் கண்ட அநுமன் அறத்தின் ஆற்றல் பற்றித் தன்னுளே கூறியவற்றை எழுதுக.

(இ) தனது தோளில் ஏறும்படி வேண்டிய அநுமனுக்குச் சீதை உரைத்த மாற்றத்தினை எழுதுக.

(ஈ) பின் வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு இடஞ்சுட்ட விளக்கம் தருக:—

(1) "ஆண்டகை நெஞ்சி னின்று மகன்றிலை
யழிவுண் டாமோ?
ஈண்டுநீ யிருந்தா யாண்டங் கெவ்வுயிர்
விடுமி ராமன்?"

(2) "குண்டல மிரண்டுமக் கோளின் மாச்சுடர்
மண்டல மிரண்டொடு மாறு கொண்டவே?"

(3) ————————"மன்னரு ளாலெனைக் காத்
திருந்தவற்கே கடனேன்றிடை
கோத்த வெஞ்சிறை வீடென்று கூறுவாய்".
(14)

6. தேவர்பிரான் சிலுவையைச் சுமந்து தள்ளாடி நடந்தது கண்ட எருசலேம் நகரத்து ஆயிழையார்

இரங்கிக் கூறியவற்றைக் கவி எங்ஙனம் வருணிக்கின்றார்?

[அல்லது]

"இத்தகைய குணமிலருங் கிருஸ்வதரென்
றிசை பெறுதல்
செத்தவரைத் துஞ்சினவரெனவுரைக்கும்
சீர்மைத்தால்"

—இங்கு இத்தகைய குணம் எனப் பாராட்டப்பெறும் குணம் எது என்பதைப் புலப்படுத்துக. (8)

7. இறைவன் தன்னைப் பிரிய நேர்ந்தமைக்கு தனது உலகப்பற்றே காரணம் என மணிவாசகர் எடுத்தியம்பும் நயத்தினைப் புலப்படுத்துக.

[அல்லது]

"வெள்ளத்து ணுவற்றியாங்கு; எறும்பிடை
நாங்கூழெண"

—இவ்வுவமைகளால் விளக்கப் பெறுவன யாவை? (8)

8. குலசேகரப்பெருமாள் அரங்கத்தம்மானைச் சென்னியால் வணங்கி, நெஞ்சால் நினைந்து கண்களால்காணத் துடிக்கும் தனது வேட்கையைப் புலப்படுத்தும் நயத்தினை எழுதுக.

[அல்லது]

"ஆடிப் பாடி அரங்க வோஎன் றழைக்கும்
தொண்டர டிப்பொடி
ஆடநாம்பெறில் கங்கை நீர்குடைந் தாடும்
வேட்கைஎன் னுவதே"

—பொருள் விளக்கம் தருக. (8)

9. பாரதிதாசனின் புதுமைக் கருத்துக்கள் 'சஞ்சீவி பர்வதத்தின் சார'லில் இடம் பெற்றுள்ள நயத்தினை எழுதுக.

[அல்லது]

அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ் என்னுவி
அழிவதற்குக் காரணமாயிருந்ததென்று சமுதாயம்
நினைத்திடுமோ"?

—இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (8)

# திருக்குறள்: (பொருட்பால்)

(அங்கவியல் [அமைச்சியல்] ஒழிபியல் என்பன:

64 முதல் 108 அதிகாரங்கள் முடிய)

1. (அ) திருக்குறள் நூல்பற்றிக் குறிப்பு ஒன்று வரைக.

திரு+குறள்=திருக்குறள். மேன்மை பொருந்திய குறள் வெண்பாக்களாகிய நூல் என்பது இதன் பொருள். தலை சிறந்த நீதி நூலாக விளங்கும் இந்நூல் பதினெண் கீழ்க் கணக்கு வகையைச் சார்ந்தது. திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பகுதிகளால் அமைந்தது. அறத்துப்பாலில் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழ் இயல் என்பனவும். பொருட்பாலில் அரசியல், அங்கவியல் (அமைச்சியல்) ஒழிபியல், என்பனவும் காமத்துப்பாலில் களவியல், கற்பியல் என்பனவும் உள்ளன. மேலும் அதிகாரம் ஒன்றுக்குப் பத்துப் பாடல்கள்வீதம் 133 அதிகாரங்களில் 1330 பாடல்களைப் பெற்று விளங்குகின்றன. அறத்துப்பால் 38 அதிகாரங்களுக்கு 380 பாடல்களையும், பொருட்பால் 70 அதிகாரங்களுக்கு 700 பாடல்களையும், இன்பத்துப்பால் 25 அதிகாரங்களுக்கு 250 பாடல்களையும் பெற்றுள்ளன. நூலின் பெரும் பகுதி பால் எனப்படும்; இயல், அதிகாரம் என்பன சிறு பகுதிகள்.

திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர். இவரது வரலாறு தெளிவாக விளங்கவில்லை. திருக்குறள் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றது. தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய மிகச் சிறந்த தமிழ் நூல் என்று இதனைச் சொல்லலாம். கி. பி. 3 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இந்நூல் தோன்றியிருக்க வேண்டும். திருக்குறளின் கருத்துக்களைச் சாத்தனார் முதலான தமிழ்ப் புலவர்கள் தங்களின் நூல்களிலும்

செய்யுட்களிலும்எடுத்தாண்டுள்ளதாலும், உலகிலுள்ள பல வேறு மொழிகளிலும் இது மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாலும், 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்னும் பழமொழி நிலவுவதாலும், ஔவைப் பிராட்டியார் 'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என்று கூறுவதாலும் இதன் பெருமை நன்கு விளங்கும்.

வழி வழியாகத் தமிழர் மேற்கொண்ட அற ஒழுக்கங்கள், அரசியல் நெறி, அகவாழ்வு ஆக மூன்று இன்றியமையா வாழ்வு வகையினை அறிந்தே திருவள்ளுவர் தமது நூலை இயற்றினர் எனலாம். திருக்குறள் கூறும் கருத்துக்கள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. மக்களாய் பிறந்தவர்களுக்குக் கல்வி கற்றல், சமுதாயத்தில் பழகுதல், மனைவாழ்க்கை முதலியன இன்றியமையாதவை. இவற்றையும் உழு தொழில், வாணிகம் போன்றவற்றையும் திருக்குறள் எடுத்து இயம்புகின்றது. திருக்குறள் கூறும் கருத்துக்கள் அனைத்து நாட்டார்க்கும், மொழியினர்களுக்கும், இனத்தவர்களுக்கும், மதத்தவர்களுக்கும் பொருந்துவன. ஆதலால் இந்நூலை உலகினர் அனைவரும் உச்சிமேற் கொண்டு போற்றுகின்றார்கள். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் மனிதனுக்கு இன்றியமையாதவை. மனிதன் ஆன்றோர் ஒழுக்கங்களை அறிந்து கல்விகற்று வாழ்க்கை நடத்தச் சில பண்புகள் அவனுக்குத் தேவைப்படுகின்றன. அறத்துப்பால் இப் பண்புகளை வரையறுக்கின்றது. பலதுறை அலுவல்களில் ஈடுபடும் இளைஞன் சமுதாயம், நாடு, அரசியல் ஆகியவற்றையும் அறிய வேண்டும். அதற்கு வேண்டிய செய்திகளைப் பொருட்பால் கூறுகின்றது. மனைவியுடன் காதல் வாழ்க்கை நடத்திச் செல்ல சில உண்மைகள் தேவை. இதனைக் காமத்துப்பால் விவரிக்கின்றது. முதுமையில் பற்று நீங்கித் தூய உள்ளத்துடன் வாழ்நாளைக் கழிப்பதை வீடு என்று கூறலாம். இல்லறம் துறவறம் என்னும் இவ்விரு நெறிகளும் திருக்குறளில் இடம் பெற்றுள்ளன.

திருக்குறளில் அனிச்சம், மூங்கில் மரம், முள் மரம், வற்றல் மரம், மருந்து மரம், பழமரம், முதலிய மரவகைகளும், தாமரை, குவளை முதலிய நீர்ப் பூக்களும், நெருஞ்சி, பசும்புல் முதலிய படர் செடிகளும், கரும்பு எள் முதலிய செடி வகைகளும், யானை, பசு, காளை, ஆடு, நரி, புலி, மான் முதலிய மிருகங்களும், ஆமை, முதலை, மீன் முதலிய நீர் வாழ்வனவும், கோட்டான், காகம், கொக்கு முதலிய பறவைகளும் கூறப்பட்டுள்ளன. ஆண் பெண் இயல்புகள், பழக்க வழக்கங்கள், உழவு, வாணிபம், உணவு, போர்க்கருவிகள், ஊர்திகள், விளையாட்டுக்கள் ஆகியவையும், இசை, ஓவியம், சிற்பம் முதலிய கலைகளும் கூறப்பட்டுள்ளன. கருத்துக்களை உவமைகள் வாயிலாகவும் நகைச்சுவையாகவும் திருவள்ளுவர் விளக்கிச் சொல்கின்றார். திருமால் உலகளந்த வரலாறும் ததீசி வரலாறும் இதன் கண் இடம் பெற்றுள்ளன. மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பரிப்பெருமாள், பரிமேலழகர் முதலியோர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளனர், அவற்றுள் பரிமேலழகர் எழுதிய உரையே சிறந்தது என்பது அறிஞர் துணிபு. திருக்குறளைப் புகழ்ந்து பல புலவர்களும் பாடிய செய்யுட்டொகுதிக்குத் "திருவள்ளுவ மாலை" என்று பெயர் வழங்கப்படுகின்றது. முப்பால், தெய்வநூல் போன்ற வேறு பெயர்களும் இந்நூலுக்கு (திருக்குறளுக்கு) வழங்கப்படுகின்றது. நாவலர், முதற்பாவலர், செந்நாப்போதர், மாதாநுபங்கி, பொய்யில் புலவர் போன்ற வேறு பெயர்கள் திருவள்ளுவருக்கு வழங்கப்படுகின்றன.

(ஆ) அமைச்சரது குணத் தன்மையைக் குறளாசிரியர் யாங்ஙனம் கூறுகின்றார்?

ஒரு செயலை இயற்றும்பொழுது அதற்குவேண்டிய கருவிகளும், ஏற்ற காலமும், அதனைச் செய்யுமாறும், செய்யத்தகுந்த அச்செயலும் வாய்ப்பாகுமாறு எண்ண வல்லவனே அமைச்சனாவான்.

செயலைச் செய்வதில் உறுதிப்பாடும், குடிமக்களைக் காத்தலும். நீதி நூற்களைக் கற்றுச் செய்யத்தக்கன,

நீக்கத் தக்கன ஆகியவற்றை அறிதலும், முயற்சியும், முதலில் கூறப்பட்ட அந்நான்கு தன்மைகளுடன் இவ் வைந்து தன்மைகளையுடையவனே அமைச்சனாவான்,

ஒரு செயலைச் செய்கின்றபோது பகைவர்க்குத் துணையாயினாரைப் பகைவர்களினின்றும் பிரிக்கவேண்டியது நேரிட்டால் அவர்களைப் பிரித்தலும், தம்மைச் சார்ந்தவர்களைப் பகைவர்கள் பிரித்துவிட இடம் கொடுக்காதவாறு கொடை, இன்சொல் ஆகியவற்றால் பேணிக் கொள்ளுதலும், இதற்குமுன் தம்மைவிட்டுப் பிரிந்து சென்றவர்களைத் தமக்குத் துணையாய்ச் சேர்த்துக் கொள்ளுதலும் வல்லவனே அமைச்சனாவான்.

ஒரு செயல் பலவாறு தோன்றின் அவற்றுள் ஆவது எதுவோ அதனை ஆராய்ந்து அறிதலும், அதனைச் செய்யுமிடத்து வாய்க்கும் திறன் நாடிச் செய்தலும், ஒரு சிலரைச் சேர்த்தலும் பிரித்தலும் செய்கின்றபோது அவர்களுக்கு யாம் செய்வதே சிறந்தது என்று துணிவு பிறக்கும்படியாகச் சொல்லுதலில் வல்லமை உடையவனே அமைச்சனாவான்.

அறத்தை அறிந்து, கல்வியால் நிறைந்து நலம் சான்ற சொல்லை உடையவனாய், எக்காலத்திலும் வினை செய்யும் திறங்களை அறிந்த அமைச்சனே அரசனின் சூழ்ச்சிக்கு ஏற்ற நல்ல துணைவனாவான்.

(இ) அமைச்சரது சிறப்பும், செயல் திறமும் பற்றிக் கூறுக.

இயற்கையறிவுடன் செயற்கை அறிவும் உடைய அமைச்சர்கள் எத்தகைய சூழ்ச்சிகளையும் எளிதாகச் செய்வர்.

அமைச்சனானவன் அவ்வப்போது நடக்கின்ற உலக இயற்கையை அறிந்து அதற்கு ஏற்றாற்போல வினைகளைச் செய்யவேண்டும். தானும் தனக்குத் தகுதியாவன அறியாதவனாய், அறிந்து உரைத்தாரின் கூற்றையும் அறிவையும் அழித்து இகழ்கின்றவனாய்

அரசன் விளங்கினாலும், அக்குற்றத்தால் அவனைவிட்டு நீங்காது அவனுக்கு உறுதியாவன கூறுதல் அமைச்சனுக்குக் கடனாகும்.

2. (அ) 'கேட்டார் பிணிக்கும்தகை அவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்'-விளக்கம் தருக.

நட்பாக ஏற்றுக் கொண்டவர்களைப் பின்னர் வேறுபடாமல் பிணிக்கின்ற குணங்களை அவாவி பகையாகி ஏற்றுக்கொள்ளாதவர்களும் அப்பகைமையை ஒழிந்து நட்பினை விரும்பும் வண்ணம் கூறப்படுவதே அமைச்சர்க் கேற்ற சொல்லாகும்.

கேட்டார்ப் பிணிக்கும் தகையாவன :— வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல். 'அவாய்' என்பது செய்தென் எச்சம். அது 'மொழிவது' என்னும் செயப்பாட்டு வினை கொண்டது. சொல்லுகின்றவன் குறிப்பைத் தவிர வேறு நுண்ணுணர்வுடையோர் கொள்பவற்றின் மேலும் நோக்கினை உடையதால் அவாவுதல் எனப்படும்.

'நூலினைக் கேட்டோரை வயப்படுத்தும் தன்மையுடையவராய் நூலினைக் கேளாதாரும் விரும்பும்படிக் கூறப்படுவதே சொல்லாகும்' என்றும், வினவியவர்களை வயப்படுத்துகின்ற தகுதியுடையவாய் வினவாதவரும் விரும்பும் வண்ணம் கூறப்படுவதே சொல்லாகும்' என்றும் பிறர் இக் குறட்பாவிற்கு உரை கூறினர். அவரெல்லாம் தகை அவாய் என்பதற்கு 'தகுதி யுடையவாய்' என்று உரை கூறினர்.

(ஆ) 1. 'சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மை அறிந்து'
2. 'இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர் கற்றது
உணர விரித்துரை யாதார்'
- இச்செய்யுட்களின் பொருள்கூறி இவற்றுள் பயின்று வரும் அணியையும் சுட்டுக.

(1) தாம் சொல்லக் கருதிய சொல்லைப் பிறிதோர் சொல்லாய் வெல்லவல்லதொரு சொல் இல்லாமையை அறிந்து பின் அச்சொல்லைச் சொல்ல வேண்டும் என்பது இச் செய்யுளின் பொருளாகும். பிறிதோர் சொல் என்பது மற்றவர்களின் மறுதலையான சொல்லாகும். குணங்களால் மிக்குத் தோன்றுதல் வெல்லுதல் எனப் படும். இச்செய்யுளில் 'சொல்' என்னும் சொல்லும் அதன் பொருளும் மீண்டும் மீண்டும் வந்து அச்செய் யுட்கு நயம் தந்து நிற்றலின், இது சொற் பொருட்பின் வருநிலை யணியின் பாற்படும்.

(2) தாம் கற்றுணர்ந்த நூற்பொருளைப் பிறர் அறியுமாறு விரித்து உரைக்க மாட்டாதவர்கள் கொத் தினிடத்தில் மலர்ந்தாலும் நாருத பூவைப் போன்றவ ராவர் என்பது இதன் பொருள். இச் செய்யுள் 'அழகு பெற மலர்ந்தாலும் மணமில்லாத மலர் சூடப்படாத தைப் போன்று நூல்களைக் கற்ருலும் விளங்க எடுத்துக் கூருதார் நன்கு மதிக்கப்பட மாட்டார்கள்' என்று விளக்குகின்றமையால் இது தொழில் பற்றி வந்த உவமை அணியின் பாற்படும்.

(இ) சொல்வன்மையின் சிறப்பினைத் தொகுத்துத் தருக.

அமைச்சர்க்கு இன்றியமையாத குணச் சிறப்பாவது நாநலம் என்று சொல்லப்படும் நலத்தினை உடையவ ராய் இருத்தலாகும். அந் நலமானது பிற நலங்கள் எல்லாவற்றுள்ளும் மேலானதாகும்.

அமைச்சர் கூறும் சொல்லால் அரசர்க்குச் செல்வ மும் அழிவும் உண்டாவன, ஆதலால் அத்தகையசொல் லில் சோர்வு அடைதல் நிகழாதவாறு அமைச்சர் போற் றிக் காக்க வேண்டும்.

நட்பாய் ஏற்றுக் கொண்டவர்கள் பின்னர் வேறு படாதவாறு பிணிக்கின்ற குணங்களை அவாவி, பகை யாய் ஏற்றுக்கொள்ளாதவர்களும் அப்பகையை விட்டு நீங்கி நட்புச் செய்ய விரும்பும் வண்ணம் கூறப்படுவதே சொல்லாகும்.

அமைச்சர் தம்முடையவும் மாற்றாருடையவுமாகிய திறங்களை அறிந்து அதற்கு ஏற்றாற் போலச் சொற்களைக் கூற வேண்டும்.

தாம் கூறக் கருதிய சொல்லைப் பிறிதோர் சொல்லாய் வெல்லவல்லதொரு சொல் இல்லாமையை அறிந்து அச் சொல்லைக் கூற வேண்டும்.

மற்றவர்களுக்குத் தாம் கூறுமிடத்து அவர் பின்னும் கேட்டலை விரும்புமாறு கூறி, அவர் தமக்குச் சொல்லியவிடத்து அச் சொல்லின் பயனைக் கொண்டொழிதல் அமைச்சியலுள் மாசற்றாரின் துணிபாகும்.

தான் எண்ணிய காரியங்களைப் பிறர்க்கு ஏற்றாற் போல் சொல்லுதலில் வல்லவனாய், அவை மிகப் பல வாய் விடத்து எவற்றிலும் தளர்ச்சி இல்லாதவனாய், அவைக்கு அஞ்சாதவனாய் இருக்கின்றவனை மாறுபாட்டில் வெல்லுதல் யார்க்கும் அரிது.

சொல்லுவனவற்றை நிரல்படக்கோத்து இனிதாகச் சொல்லுதலில் வல்லவரைப் பெற்றால் உலகம் அவற்றை விரைவினில் ஏற்றுக் கொள்ளும்.

குற்றமற்றதான சிலவாய சொற்களைச் சொல்ல அறியாதவர் பலவாய் வார்த்தைகளைத் தொடுத்துச் சொல்லி விரும்புவர்.

தாம் கற்றுணர்ந்த நூற் பொருளைப் பிறர் அறியும்படி விரித்துரைக்க முடியாதவர்கள் கொத்தில் மலர்ந்தாலும் நாறாத மலரைப் போன்றவராவர்.

3. (அ) "வினைத் தூய்மை" என்னும் அதிகாரத்தில் கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக.

ஒருவனுக்குத் துணையால் உண்டாகும் நன்மை, செல்வத்தை மட்டும் கொடுப்பது தான்; ஆனால் வினையின் நன்மை அவன் வேண்டிய எல்லாவற்றையும் கொடுக்கும். இம்மையில் புகழும், மறுமையில் அறமும் பயவாத வினைகளை எக்காலத்தும் ஒழிதல் வேண்டும்.

மேலானவர்களாய் உயர்வடைவோம் என்று கருது கின்றவர்கள் தமது புகழ் கெடுவதற்குக் காரணமான வினைகளைச் செய்தலைத் தவிர்த்தல் வேண்டும்.

துளக்கம் நீங்கிய தெளிவினையுடையவர்கள் தாம் துன்பம் அடைய நேரிட்டாலும் அதனைத் தீர்த்துக் கொள்வதற்காக முன்னர் தமக்கு நன்மைகளைச் செய்த வர்களுக்கு இனி வந்த வினைகளைச் செய்யமாட்டார்கள்.

யாம் எத்தன்மைத்தான செயல்களைச் செய்து விட்டோம் என்று பின்னர்த்தானே இரங்கத்தக்க வினைகளை ஒரு காலும் செய்தலாகாது; ஒருகால் மயங்கி அவற்றைச் செய்யும்படி நேரிட்டாலும் பின் இருந்து அவ்விரங்கல் களைச் செய்யாது விடுவது நன்று.

வறுமையின் மிகுதியால் ஒருவன் தன்னைப் பெற்ற வளின் பசித் துன்பத்தைக் கண்டு இரங்குகின்ற நிலை மையை யுடையவனுயினுலும் அதனைக் காரணமாகக் காட்டி சான்றோர் பழிக்கின்ற தீய வினைகளைச் செய்யா தொழிய வேண்டும்.

தீய வினைகளைச் செய்து அதனுல் பழியைத் தம் மேற் கொண்டு பெற்ற செல்வத்தைக் காட்டிலும் அத் தீய வினைகளை மேற்கொள்ளாத சான்றோர்களின் மிகுதி யான வறுமையே உயர்ந்தது.

ஒருவன் தீவினைகளைச் செய்து பிறர் இரங்குமாறு கொண்ட பொருளெல்லாம் இம்மையில் அவன் தான் இரங்கும் வண்ணம் போகா நிற்கும்; ஆனுல் தூய செயல்களால் வந்த பொருள்கள் முன்னர் இழந்தா னெனினும் பின்னர் வந்து நற்பயன் நல்கும்.

அமைச்சனுவன் தீயவினைகளைச் செய்து அதனுல் பொருள் படைத்து அரசனுக்குப் பாதுகாப்புச் செய்வ தானது, பசிய மட்கலத்தினுள் நீரைப்பெய்து அதற்குப் பாதுகாப்புச் செய்வதனோடு ஒக்கும்.

(ஆ) ''ஈன்ருள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்ரோர் பழிக்கும் வினை''

— பொருளும் விளக்கமும் தருக.

''தன்னைப் பெற்ற தாயின் பசித் துன்பத்தைத் தனக்குள்ள வறுமையின் மிகுதியால் கண்டு இரங்குகின்ற தன்மையுடையவனாயினான் என்றாலும் அதனைக் காரணமாகக் கொண்டு அறிவுசான்ற பெரியோர் பழிக்கின்ற தீயவினைகளை ஒருவன் செய்யாது ஒழியக்கடவானாக'' என்பது இதன் பொருள்.

இறந்த மூப்பினை உடையவரான இரு முதுக் குரவரும் கற்புடைய மனைவியும் குழவியும் பசியால் வருந்தும் சமயத்தில் தீய செயல்கள் பலவற்றைச் செய்தாயினும் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பது அறநூல் பொதுவிதியாகும். அரசர் .தொழிற்கு உரியராதலும் நன்கு மதிக்கற்பாடும் உடைய அமைச்சர்க்கு இத்தகைய அறநூல் பொதுவிதி பொருள் நூல் வழி ஒழுகுதலும் பொருந்தாது.

> [இ] 'பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர் கழி நல்,குரவே தலை''-பொருள் தந்து இதன் கண் பயின்றுள்ள அணியினையும் சுட்டுக.

''தீய வினைகளைச்செய்து அதன் பழியைத் தம்மேற் கொண்டு பெற்ற செல்வத்தைக் காட்டிலும் அத் தீய செயல்களை மேற்கொள்ளாத சான்றோர் அனுபவிக்கின்ற மிக்க வறுமைத் துன்பமே சிறந்தது'' என்பது இதன் பொருள். செல்வம் நிலையற்றது; பழியோ நிலைத்து நிற்பது. ஆதலால் நிலையற்ற செல்வத்தின் பொருட்டு நிலைத்து நிற்கும் பழியை மேற் கொள்ளுதல் தகாது; ஆதலால் 'சான்றோர் கழி நல்குரவே தலை' என்றார்.

இச் செய்யுள் அணி 'தெரியதருதேற்ற உவமையணியாகும்.

> [ஈ] ''பசுமட் கலத்துள் நீர் பெய்து இரீ இயற்று'- இஃது எதனை விளக்க வந்தது?

''பசிய மட்கலத்தின் உள்ளே நீரைப் பெய்து அதற்கு ஏமம் (பாதுகாப்பு) செய்வதனோடு ஒக்கும்'' என்பது இதன் பொருள். இது அமைச்சனானவன் தீய

வினைகளைச் செய்து பொருள் படைத்து அதனால் அரசனுக்கு ஏமம் செய்தலை விளக்க வந்தது. பசு மட்கலத்துள் பெய்த நீர் புறம் பொசிந்து காட்டுவதைப்போன்று தீயவினைகளால் பொருள் படைத்தலும் பிறர்க்குப் புலனாகும். அதனால் பழியே ஏற்படும் என்பது இதன்கண் விளக்கப்பட்டது.

4. [அ] 'வினைத் திட்பம்' என்னும் அதிகாரத்தில்கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக.

வினையின் கண் திண்மை என்று சொல்லப்படுவது அவ்வினையை முடிப்பதற்கு உரிய ஒருவனது மனத் திண்மைதான்; அது நீங்கிய ஏனைய படை, அரண், நட்பு என்பனவெல்லாம் திண்மை ஆகா.

அமைச்சரின் துணிபாவது குற்றம் நேரும் வினைகளைச் செய்யாமையும் செய்கின்ற வினைகள் தெய்வத்தால் பழுதுபடின் அதற்காகத் தளராமையும் என்பர் நூலுடையார்.

செய்கின்ற வினையை முடிவில் புலப்படுமாறு முன்னர் மறைத்துச் செய்வதே திட்பம் எனப்படும்; அவ்வாறின்றி இடையில் புலப்படின் அது செய்வானுக்குத் தீராத துன்பத்தைக் கொடுக்கும்.

யாம் இவ்வினையை இதனால் செய்தும் என்று கூறுதல் யார்க்கும் எளிது. சொல்லியவாறு செய்தல் யார்க்கும் அரிது.

எண்ணத்தால் சிறப்புப்பெற்று ஏனைய இலக்கணங்களாலும் மாட்சிமைப்பட்ட அமைச்சரின் வினைத் திட்பம் அரசனிடத்தில் உறுதலை, எய்தலால் எல்லாராலும் நன்கு மதிக்கப்படும்.

தாம் செய்ய நினைத்த வினைகளின் திண்மையுடையவரானால் தாம் அடையக் கருதிய பொருள்கள் எல்லாவற்றையும் எண்ணியவாறே எய்துவர்.

உருள்கின்ற பெரிய தேர்க்கு அச்சினிடத்து ஆணியைப் போன்று செய்கின்ற வினைகளில் திண்மை

உடையவர்களை இவ் உலகம் உடையது; அதனால அவர் களை வடிவின் சிறுமை நோக்கி இகழ்தலாகாது.

செய்யத் துணிந்த வினையில் அசைதலின்றி நீட்டித் தலையொழிந்து செய்ய வேண்டும். துணிவுடன் செய்து முடித்த பின்னால் இன்பம் தரத்தக்க வினைகளை முதலில் மெய்ம் முயற்சியால் துன்பம்உற நேர்ந்தாலும் திட்பமுடையவராய்ச் செய்ய வேண்டும்.

வினைத்திட்பத்தை விரும்பாத அமைச்சரை, உயர்ந் தோர் நன்கு மதியார்.

(ஆ) ''ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறு என்பர் ஆய்ந்தவர் கோள்''

—பொருள் கூறி விசேட உரை தருக. இதன்கண் அதிகாரத்திற்கு இயல்பில்லாததாய்க் கூறியது எது? அஃது எங்ஙனம் அமைதியாயிற்று?

'முன் நீதி நூல் ஆராய்ந்த அமைச்சரின் துணிபு, குற்றம் நேரிடும் வினைகளைச் செய்யாமையும், செய்த வினைகள் தன்னாலன்றித் தெய்வத்தால் பழுதுபட்டவழி அதற்குத் தளராமையும் ஆகிய இரண்டின் வழி என்று நூலோர் கூறுவர்' என்பது இதன் பொருள். உறுதலு டையது இச் செய்யுள் 'ஊறு' எனப்பட்டது. ஆத லால் 'உற்றபின்' என்று கூறினர். இவ்விரண்டின் பட்டது என்கின்றவர் 'இரண்டின் ஆறு' என்று எடுத் துரைத்தார்.

இதன்கண் அதிகாரத்திற்கு இயைபில்லாததாய் 'வினைத் தூய்மை'யும் உடன் கூறினர். தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ, வெள்ளிகளின் துணிபினைத் தொகுத்துப் பின்னர் நீதிநூல் உடையவர் கூறிய முறைப்படி கூறுவதால் இஃது அமைதியாயிற்று.

5. ''உறை சிறியார் உள் நடுங்கல் அஞ்சிக்குறை
பெறின் கொள்வர் பெரியார்ப் பணிந்து''

பொருள் கூறி விளக்குக.

'சிறிய இடத்தை ஆளுகின்ற அமைச்சர் தம்மைக் காட்டிலும் வலியவரால் எதிர்க்கப்பட்டவிடத்துத் தம் பகுதியில் வாழ்வார் நடுங்குவதற்கு அஞ்சி அதற்கேற்ற சந்து கூடுமாஞல் அவரைத் தாழ்ந்து அதனை ஏற்றுக் கொள்வர்' என்பது இச் செய்யுளின் பொருளாகும். ஆளும் இடம் என்பது நாட்டையும் அரணையும் குறித்து நின்றது. வலியார் மெலியாருடன் சந்து செய்தலுக்கு உடன்பட்டார்; ஒருவேளை உடன்பட்டால் என்பதைத் தெரிவிப்பதற்காக 'குறைபெறின்' என்றுகுறிப்பிட்டார். தம் பகுதிக்கண் வாழ்வர் உள் நடுங்குதற்கு அஞ்சி மெலியார் இருக்கும் சிறியஇடத்தையும் இழந்துசெல்லக் கூடாது என்பதனை உணர்த்தி வலியார்க்குச் சிறிது கொடுத்தாயினும் சந்தினை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதைப் பெறவைத்தார்.

6. (அ) "தூது" என்னும் அதிகாரத்தில் கூறப்படும் கருத்துக்கள் யாவை? [அல்லது] தூது செல்வார் இருவகையினரின் இலக்கணம் எவ்வாறு கூறப் பட்டுள்ளது?

சந்து செய்யும் பொருட்டு வேற்று வேந்தரிடைச் செல்வாரது தன்மை தூது எனப்படும். தான் வகுத்துக் கூறுவான் என்றும், கூறியது கூறுவான் என்றும் தூது இருவகைப்படும். தான் வகுத்துக் கூறுவான் அமைச்சனேடு ஒப்பான்; கூறியது கூறுவான் அவனில் காற்கூறு குணம் குறைந்தவஞவான்.

இருவகையினர்க்கும் பொது இலக்கணம்: சுற்றத்தாரிடத்தில் அன்புடையவஞதலும் அமைச்சுப் பூண்பதற்குத் தகுதிவாய்ந்த குடியின்கண் பிறத்தலும், அரசர் விரும்பும் பண்பினை உடையவஞதலும் தூது செல்கின்றவனுக்குப் பொது விலக்கணமாகும்.

தன் அரசனிடம் அன்புடைமையும் அவனுக்கு ஆவன அறியும் அறிவுடைமையும், வேற்று அரசனிடம் சென்று தூது உரைக்கின்றபோது ஆராய்ந்து சொல்லுதலில் வல்லவன் ஆதலும் தூது செல்வார்க்கு இன்றியமையாத மூன்று குணங்களாகும்.

தான் வகுத்துக் கூறுகின்றவனின் இலக்கணம்: வேல் வேந்தனிடம் சென்று தன் அரசனுக்கு வெற்றி தரும் வினையைச் சொல்லுகின்றவனுக்கு இலக்கணமாவது, நீதி நூலை உணர்ந்த அமைச்சரிடைத் தான் அந்நூலை வல்லவனாதலாகும்.

வேற்று அரசனிடம் சென்று தூது வினைபற்றிச் சொல்லுமிடத்துக் காரண வகையால் தொகுத்துச் சொல்லியும் இன்னாத செயல்களைச் சொல்லுமிடத்து வெய்ய சொற்களை நீக்கி இனிய சொற்களை அவ்வரசரின் மனம் மகிழும்படிச் சொல்லியும் தன்னுடைய அரசனுக்கு நன்மையைத் தருகின்றவனே தூதுவனாவான். கற்கத்தக்க நீதி நூல்களைக் கற்று, தான் மேற்கொண்டு சென்ற செயலைப் பகைவேந்தர் மனம் கொள்ளும்படிச் சொல்லி அவர் சினந்து நோக்கினால் அந்நோக்கிற்கு அஞ்சாது அதனை முடிக்கத் தகுந்த உபாயத்தை அறிகின்றவனே தூதனாவான்.

தகுந்த காலத்தை அறிந்து தான் மேற்கொண்டு சென்ற செயலைக் கூறுதற்கு ஏற்ற இடம் அறிந்து சொல்லும் முறையை அறிந்து கூறுகின்றவன் தூதரில் சிறந்தவனாவான்.

கூறியது கூறும் தூதுவனின் இலக்கணம்:—தன் அரசன் கூறிய வார்த்தையை அவன் சொல்லியவாறே வேற்று அரசருக்குச் சென்று சொல்லுகின்றவனது இலக்கணமாவது, தான் தூயவனாதலும் தமக்கு அவ்வரசரின் அமைச்சர் துணையாகும் தன்மையும் துணிவுடைமையும் ஆகிய இம் மூன்றுடன் கூடிய வாய்மையும் ஆகும்.

தன் அரசன் கூறிவிட்ட வார்த்தையை வேற்று அரசனுக்குச் சென்று சொல்லுதற்குரிய தூதுவன் தனக்கு வரும் துன்பத்திற்குப் பயந்து அவனுக்குத் தாழ்வான வார்த்தையை வாய் சோர்ந்தும் கூறாத மனத்திண்மையையுடையவனாவான்.

வேற்றரசனிடம் சென்று தூது உரைக்கின்ற போது தன் அரசன் கூறிய வார்த்தை தன் உயிர்க்கு இறுதி தருவதாயிருந்தாலும் அதற்கு அஞ்சி அதனை ஒழியாது தன் அரசன் கூறியபடியே வேற்று அரசனிடம் சொல்லுகின்றவனே தூதுவனாவான்.

(ஆ) தூதின் இலக்கணம் கூறுமிடத்து,
'அன்பு உடைமை ஆன்ற குடிப் பிறத்தல்'
'அன்பு அறிவு ஆராய்ந்த சொல் வன்மை'
'அறிவுஉரு ஆராய்ந்த கல்வி'

—என்று அன்பும் அறிவும் இருமுறை கூறப்பட்டிருத்தல் மிகையாகாதா? ஆராய்க.

முதற்கண் கூறப்பட்ட அன்பு உடைமை என்பது தூது செல்வான் தன் சுற்றத்தார் மாட்டு அன்புடையவனுதலைக் குறித்தது; இரண்டாவது கூறப்பட்ட அன்பாவது தூது செல்வான் தன் அரசனிடத்தில் அன்புடையவனுதலைக் குறித்தது.

முதற்கண் கூறப்பட்ட அறிவு என்பது தூது செல்வான் தன் அரசனுக்கு ஆவன அறிகின்ற அறிவுடைமையைக் குறித்தது; இரண்டாவது கூறப்பட்ட அறிவு என்பது தூது சென்றுரைப்பானின் இயற்கையறிவைக் குறித்தது. ஆகையால் அன்பு, அறிவு என்பன இருமுறை கூறப்பட்டிருத்தல் மிகையாகா; வெவ்வேறு பொருள் உணர்த்தும் இன்றியமையாகக் கருதிக் கூறினர். அஃதேல் அறிவு என்பது இருவகைத் தூதினார்க்கும் பொது வகையால் இலக்கணம் கூறுமிடத்தும், சிறப்பு வகையான் தான் வகுத்துத் தூது உரைப்பானின் இலக்கணம் கூறுமிடத்தும் வெவ்வேறு பொருளில் விளக்கினர் என்க.

7. (அ) மன்னரைச் சேர்ந்தொழுகுவார் கடைப்பிடிக்கவேண்டியன யாவை?

மாறுபடுதலையுடைய அரசரைச் சேர்ந்து ஒழுகும் அமைச்சர் அவரை விட்டு மிகவும் நீங்குவதும் மிகவும்

நெருங்குவதும் செய்யாது தீக்காய்வாரைப்போல் இடை நிலத்தில் நிற்க வேண்டும். (இது உவமை அணி).

தம்மால் சேரப்பட்ட மன்னர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பலாகாது; அவர்க்கு அரசரால் அதுவே நிலை பெற்ற செல்வத்தைக் கொடுக்கும்.

அமைச்சர் தம்மைக் காக்க எண்ணினால் அரிய பிழைகள் தம்மிடம் வராமல் காக்க வேண்டும். அவை அமைச்சனிடம் வந்தனவாகக் கேட்டு அரசர் ஐயுறுவார் எனில் அவரைத் தெளிவித்தல் யாவர்க்கும் அரிது.

அரசர் பக்கத்தில் இருந்தால் அவர் காணுமாறு ஒருவன் செவிக்கண் சொல்லுதலையும் ஒருவனது முகம் நோக்கி நகுதலையும் தவிர்க்க வேண்டும்.

அரசனுக்கு மற்றவருடன் மறை நிகழ்ந்தவிடத்து யாதொரு பொருளையும் செவி கொடுத்துக் கேளாது அவனை முடுகி வினவவுஞ் செய்யாது அம்மறைப் பொருளை அவன் தானே கூறியவிடத்துக் கேட்க வேண்டும்.

தன் அரசனுக்கு ஒரு செயலைச் சொல்லுகின்ற பொழுது அப்பொழுது நிகழ்கின்ற அவன் குறிப்பை அறிந்து சொல்லுவதற்கு ஏற்ற காலத்தை அறிந்து வேண்டத் தக்க காரியங்களை மட்டும் அவனது மனம் விரும்புகின்ற வகையில் சொல்ல வேண்டும்.

பயன் பெரிதாய் அரசன் விரும்புவதான காரியங்களை அரசன் கேட்கவில்லை யெனினும் அவனுக்குச் சொல்லி, எக்காலத்திலும் பயன் தராதவற்றை அரசன் விரும்பிக் கேட்டாலும் சொல்லாது விடவேண்டும்.

'இவர் எம்மைக் காட்டிலும் இளையர்' என்றும் 'இவர் எமக்கு இன்ன முறையினை யுடையர்' என்றும் அரசரை இகழாது அவரிடத்து நின்ற ஒளியுடன் பொருந்த ஒழுகுதல் வேண்டும்.

நிலையான அறிவினையுடையோர் அரசனால் யாம் நன்கு மதிக்கப்பட்டோம் என்று கருதி அவர் வேண்டாதவற்றைச் செய்யற்க.

அரசர்க்கு யாம் பழையம் என்று கருதித் தமக்கு இயல்பு இல்லாதவற்றைச் செய்யும் உரிமை அமைச்சர்க்குக் கேட்டினைக் கொடுக்கும்.

8. [அ] 'குறிப்பு அறிதல்' என்றால் என்ன? குறிப்பு அறிவாரது சிறப்பு யாது?

அரசர் கருதியதனை அவர் கூறாமலே அவரது முகக் குறிப்பால் அறிந்து கொள்ளுதல் குறிப்பு அறிதலாகும்.

அரசன் தன் மனத்தினுள் எண்ணிய செயலை அவன் கூறாது அவனது முகத்தாலும் கண்ணாலும் நோக்கி அறியும் அமைச்சன் இவ்வுலகிலுள்ளார்க்கு ஓர் அணிகலமாவான்.

ஒருவனது மனத்தின்கண் நிகழ்வதனைச் சந்தேகத்திற்கு இடமில்லாது உணரவல்லவனை மகனே என்றாலும் தெய்வத்திற்கு சமமாக மதிக்கவேண்டும்.

தம் குறிப்பு நிகழுமாற்றை அறிந்து அதனால் பிறர் குறிப்பையும் தன்மையுடையவரை அரசர் தம் உறுப்புக்களுள் அவர் வேண்டுவதொன்றைக் கொடுத்தாவது நமக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

[ஆ] குறிப்பறியும் கருவி முகம் என்பது எதனால் விளங்குகிறது?

தன்னை அடுத்துள்ள பொருளின் நிறத்தைதானே கொண்டு காட்டும் பளிங்கைப் போன்று, ஒருவனது மனத்தில் நிறைந்ததனை அவனது முகமே காட்டும்.

உவத்தலும் காய்தலும் செய்தலும் முகமானது தான் அறிந்து அவற்றில் அதனின் முற்பட்டு நிற்கும்; ஆதலால் முகம்போல அறிவு மிக்கது பிறந்தது உண்டோ? இல்லை.

பிறரது மனக் குறிப்பை அறிந்துதான் உற்றகுறையைத் தீர்ப்பாரைப் பெற்றால் அவர் தன் முகம் நோக்கும் வகைதானும் அவரது முகத்தை நோக்கி அவ்வெல்

லையில் நிற்க அமையும். ஆதலால் குறிப்பறியும் கருவி முகம் என்பது இதனால் விளங்குகிறது.

[இ] 'அடுத்தது காட்டும் பளிங்கு' என்று உவமை எதனை விளக்கிற்று? அச்செய்யுளில் பயின்ற அணியினைச் சுட்டுக.

ஒருவனது மனத்தில் நிறைந்துள்ள கருத்தினை அவனது முகம்தானே கொண்டு காட்டும் என்னும் கருத்தை அடுத்தது காட்டும் பளிங்கு என்னும் உவமை விளக்க வந்தது. தன்னை அடுத்துள்ள பொருள்களின் நிறத்தைத் தானே கொண்டு காட்டும் பளிங்கைப்போல் ஒருவனது மனத்தில் நிறைந்ததனை அவனது முகம் தானே கொண்டு காட்டும் என்பது.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"

—என்னும் குறள் ஒரு பொருள் மற்றொரு பொருளின் பண்பைக் கொண்டு தோற்றுகின்ற தொழில் பற்றி வந்தது. ஆதலால் இதன் செய்யுள் தொழில்பற்றி வந்த உவமை அணியின் பாற்படும்.

9. [அ] "அவை அறிதல்' என்னும் அதிகாரத்தில் கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக.

சொற்குழுவினை அறிந்த தூய்மையினையுடையவர் தாம் ஒன்றினைக் கூறுமிடத்து அப்பொழுதுள்ள அவையினை அறிந்து ஆராய்ந்து சொல்லவேண்டும்.

சொற்களின் நடையறிந்த நன்மையினையுடையவர் அவையில் ஒன்றினைக் கூறுங்கால் அதன் செவ்வியை ஆராய்ந்து தெளிந்து சொல்லவேண்டும்.

அவையறியாது ஒன்று சொல்லத் தொடங்குபவர் அச் சொல்லின் கூறுபாட்டினையும் அறியாதவர்; கற்று வல்ல கலையும் அவரிடமில்லை.

அறிவில் ஒள்ளியராயினர் அவையிலே தாமும் ஒள்ளியராக வேண்டும்;

தம்மைக் காட்டினும் அறிவில் மிகுந்தார் வீற்றிருக்கும் அவையில் அவரைக் காட்டிலும் முற்பட்டு ஒன்றினைச் சொல்லாத அடக்கமானது நன்று என்று சொல்லப்பட்ட குணங்கள் எல்லாவற்றுள்ளும் மேலானதாகும்.

மிகுதியான நூற்பொருள்களை உட்கொண்டு அவற்றின் மெய்ம்மையை உணரவல்லாரின் அவையில் வல்லவன் ஒருவன் சொல் இழுக்குப்படுதல், வீடு பேற்றை அடையும் பொருட்டு நன்னெறியில் நின்றவன் ஒருவன் அந்நெறியினின்றும் நிலை தளர்ந்து வீழ்ந்தது போலாகும்.

குற்றம் நீங்கும்படிச் சொற்களை ஆராய்தலில் வல்லவர்களின் அவையில் கூறினால் பல நூல்களையும் கற்று அவற்றால் உண்டாகிய பயனை அறிந்தவர்களின் கல்வியானது யாவருக்கும் விளங்கித் தோன்றும்.

பிறர் உணர்த்த உணராது பொருள்களைத் தாமே உணரவல்ல அறிவினையுடையாரின் அவையில் கற்றவன் ஒருவன் கூறுதல் தானே வளர்கின்ற ஒரு பயிர் நின்ற பாத்தியில் நீரினைச் சொரிந்தது போன்றதாகும்.

நல்லார் இருக்கும் அவையில் நற்பொருள்களை அவர் மனம் கொள்ளும்படிச் சொல்லுதற்கு உரியவர், புல்லர் இருக்கும் அவையில் அவற்றை மறந்தும் சொல்லுதலாகாது.

நல்லவர்கள் தம் இனத்தாரல்லாதாரின் அவையில் ஒன்றனையும் சொல்லுதல் கூடாது.

10. (அ) அவை அஞ்சாரது சிறப்பு யாது?

சொல்லின் தூய்மையினையுடையார், கற்றுவல்ல அவை, அல்லார் அவை, வகையினை அறிந்து வல்லார் அவையில் ஒன்றினைச் சொல்லுங்கால் அச்சத்தால் வழு உண்டாகுமாறு சொல்லமாட்டார்கள்.

நூல்களை நன்கு கற்றாரின் அவையில் அஞ்சாது தாம் கற்றவற்றை அவர் மனம் கொள்ளுகின்ற வகை

யில் சொல்லுதலில் வல்லவர் கற்ருர் எல்லாரையும்விட இவர் நன்கு கற்ருர் என்று உலகத்தாரால் கூறப் படுவர்.

பகையின் மத்தியில் அஞ்சாது புகுந்து உயிரை இழக்கவல்லார் உலகத்துப் பலராவர்; ஆனல் அவை யில் அஞ்சாது புகுந்து சொல்லவல்லார் மிகச் சிலரே.

(ஆ) அவை அஞ்சுவாரின் இழிபு எங்ஙனம் கூறப் பட்டது.

வன்கண்மையல்லாதார்க்கு வாளுடன் தொடர்பு இல்லை; அதுபோல் நுண்ணறி உடையோரின் அவையை அஞ்சுகின்றவர்க்கு நூலுடன் எவ்விதத் தொடர்பும் இல்லை.

சொல்லப்படுகின்ற அவையின் நடுவில் அதனை அஞ்சுகின்றவன் கற்ற நூலானது, எறியப்படும் பகை யின் நடுவில் அப்பகைக்கு அஞ்சுகின்ற பேடி தன் கையில் பிடித்த கூர்மையான வாளைப்போன்றதாகும்.

நல்லவர்கள் வீற்றிருக்கும் அவையில் நல்ல சொற் பொருளைத் தம் அச்சத்தால் அவர்க்கு ஏற்ருற்போல் கூறமாட்டாதவர்கள் பல நூல்களையும் கற்றுள்ளனர் என்ருலும் உலகிற்குப் பயன் படாதவரே.

நூல்களைக் கற்று அறிந்தும் நல்லவர் இருந்த அவையினை அஞ்சி அவ்விடத்தில் கூறமாட்டாதவர்களை கல்லாதவரினும் கடையர் என்றே கூறுவர்.

அவைக் களத்திற்கு அஞ்சி தாம் கற்றவற்றை அதற்குத் தகுந்தாற்போல் ஏற்ற வகையில் கூறமாட் டாதவர்கள் உயிருடன் வாழ்கின்றனர் என்ருலும் இறந்தவர்க்குச் சமமானவரே யாவர்.

11. (அ) நாட்டின் இலக்கணம் வள்ளுவரால் எங்ங னம் கூறப்படுகிறது? அல்லது நாடு என் னும் அதிகாரத்தில் கூறப்பட்ட கருத்துக் களைத் தொகுத்து எழுதுக.

குறைதலில்லாத விளையுளைச் செய்யும் உழவர்களும் அறவோர்களும், கேடு இல்லாத செல்வம் உடையவர் களும் ஒன்று சேர்ந்து வாழ்வதே நாடாகும்.

அளவற்ற பொருள்கள் உடைமையால் பிற நாட்ட வரும் விரும்பத் தக்கதாய் கேடின்மையோடு கூடி மிகுதி யாக விளைவதே நாடாகும்.

பிற நாடுகள் தாங்கியுள்ள பாரமெல்லாம் ஒன்று சேர்ந்து தன்னிடம் வந்தாலும் அவற்றையெல்லாம் தாங்கி, தன் நாட்டை ஆளும் அரசனுக்குக் கொடுக்க வேண்டிய இறைப் பொருள் முழுவதையும் உடன் பட்டுக் கொடுப்பதே நாடாகும்.

மிகுந்த பசியும், நீங்காத நோயும், அழிவு செய்யும் பகையும் இல்லாமல் இனிது நடப்பதே நாடாகும்.

சாதி, கடவுள் ஆகிய கொள்கைகளில் மாறுபட்டுக் கூடும் பல கூட்டமும் உடனுறைந்தே பாழாகச் செய்யும் உட்பகையும் காலம் வந்தால் வேந்தனை அலைக்கும் கொல்வினைக் குறும்பரும் இல்லாததே நாடாகும்.

பகைவரால் கெடுதல் அறியாததாகவும் அரிதில் கெட்டாலும் தன் வளம் குன்றாததாகவும் விளங்குகின்ற நாட்டினை, நாடுகள் எல்லாவற்றுள்ளும் தலை என்று நூலோர் கூறுவர்.

(மேலே ஆறு பத்திகளிலும் நாட்டிற்கு இலக் கணம் கூறப்பட்டது; அவற்றுடன் இனி வருகின்ற நான்கு பத்திகளையும் சேர்க்க 'நாடு' என்னும் அதிகா ரத்தில் கூறப்பட்ட மொத்தக் கருத்துக்களாகும்.)

கீழ் நீரும், மேல் நீரும் வாய்ப்புடையதான மலையும் அதனின்றும் வரும் நீரும் அழியாத அரணும் நாட்டிற்கு உறுப்புக்களாகும்.

நோயின்மை, செல்வம், விளைவு, இன்பம், பாது காப்பு ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அழகு ஆகும்.

தம்மிடத்து வாழ்கின்றவர்கள் தேடி வருந்தாமல் அவரிடம்தானே வந்தடையும் செல்வத்தை உடையன

வற்றையே நாடுகள் என்பர்; தேடிவருந்திய பின் செல்வத்தைத் தரும் நாடுகள் நாடுகளாகா.

மேலே கூறிய குணங்கள் எல்லாம் நிறைந்திருந்தாலும் அரசனோடு மேவுதல் இல்லாத நாடு பயனுடையதன்று.

(ஆ) "உறு பசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு"—விசேட உரை தருக.

பசித் துன்பமும் தீராத நோயும் புறத்து நின்று வந்து அழிவு செய்யும் பகையும் இல்லாது இனிது நடப்பதே நாடு. உழவர் மிகுதியாக இருத்தலாலும் மிகுதியாக விளைவதாலும் உறுபசி சேராதாயிற்று. தீக்காற்று மிகுதியான குளிர் வெப்பங்களும் நுகரப்படும் பொருள்களின் தீமையும் இல்லாமையால் ஓவாப் பிணி சேராதாயிற்று. நாட்டை ஆளும் அரசனின் வலிமையாலும் நிலைப்படை, அடவி, அரண் ஆகியவை உடைமையாலும் செறுபகை சேராதாயிற்று.

(இ) "அணி என்ப நாட்டிற் கிவ் வைந்து"
— இதில் கோடிட்ட தொகைச்சொல் எவற்றை உணர்த்துகின்றது? விளக்குக.

இங்குக் கோடிட்ட தொகைச்சொல் பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், காவல் ஆகிய ஐந்தினையும் குறித்தது. நிலத்தின் நலத்தினால் பிணிகள் தோன்றா. இருபுனல், மலை, வருபுனல் போன்ற இயற்கைச் செல்வமே செல்வம் எனப்பட்டது. விழவும் வேள்வியும் சான்றோர் உடைமையானும் நுகர்வன உடைமையானும், நிலம் நீர் ஆகியவற்றின் நன்மையாலும் நாட்டகத்தே வாழ்கின்ற மக்கட்கு உள் நிகழ்வது இன்பமாகும். மக்களால் நுகரப்படுவன விளைதல் விளைவு; அது நிலவளம் நீர் வளத்தாலும் உழவராலும் உண்டாவது. ஏமம்=காவல். அரசனின் காவலும் வாழ்வோர் காவலும் அரண் அடவி உடைமையாலும் உளதாவது.

12. (அ) அரணின் இலக்கணம் யாது?

மணிபோன்ற நிறத்தையுடைய நீரும் வெள்ளிடை நிலமும் மலையும் குளிர்ந்த நிழலையுடைய காடும் உடையதே அரணாகும். உயர்வு, அகலம், திண்மை, அருமை என்ற இந்த நான்கின் மிகுதியுடைய மதிலை அரண் என்று நூலோர் உரைப்பர்.

தான் காக்க வேண்டிய இடம் சிறியதாய் அகன்ற இடத்தை உடையதாய் தன்னை வந்து முற்றிய பகைவரின் மன எழுச்சியைக் கெடுப்பதே அரணாகும்.

பகைவரால் கொள்ளுதற்கு அரியதாய் உட்கொண்ட பலவகை உணவிற்றாய் அகத்தேயுள்ளாரின் போர் நிலைக்கு எளிதான நீர்மையையுடையதே அரண்.

அகத்தோர்க்கு வேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும் உள்ளே உடையதாய் புறத்தோரால் அழிவு எய்தும் எல்லையில் அஃது எய்தாவாறு உதவிக் காக்கும் நல்ல வீரர்களையும் உடையதே அரணாகும்.

நெருங்கிச் சூழ்ந்தும், சூழாது நெகிழ்ந்த இடன் நோக்கி ஒரு முகமாகப் பொருதும், அகத்திலுள்ளோரை அவர் தெளிந்தோரை விட்டுக் கீழறுத்துத் திறப்பித்தும் புறத்தோரால் கொள்ளுதற்கு அரியதே அரணாகும்.

தானையின் மிகையால் சூழ்தல் வல்லரால் வந்து சூழ்ந்த புறத்தோரையும் தன்னைப் பற்றிய அகத்தோர் தாம் பற்றிய இடம் விடாது நின்று பொருது வெல்வதே அரணாகும்,

போர் தொடங்கிய அளவிலேயே பகைவர் கெடும்படி அகத்தோர் செய்கின்ற வினைத் திறங்களால் வீறு பெற்று வேண்டும் ஆட்சியையுடையதே அரணாகும்.

அரணானது மேலே கூறப்பட்ட சிறப்புக்கள் எல்லாவற்றையும் உடையது என்றாலும் வினை செய்வதில் சிறப்பில்லாதாரிடம் அவை இலவாய் நீங்கும்.

(இ) "இந்நான்கின் அமைவு அரண்என்று உரைக்கும் நூல்"-இதில் கோடிட்ட தொகைச் சொல் குறித் தன யாவை? விளக்குக.

இங்குக் கோடிட்ட தொகைச் சொல் உயர்ச்சி, அக லம், திண்மை, அருமை ஆகிய நான்கினையும் குறித்தது. இந்நான்கின் மிகுதியை யுடைய மதிலை அரண் என்று நூலோர் கூறுவர்.

உயர்வு = மாற்றாரின் ஏணியாலும் எய்தாத உயரம்; அகலம் = புறத்தோர்க்குத் தோண்ட முடியாத அடியின் அகலமும் அகத்தோர்க்கு நின்று வினை செய்யும் தலையகலமும்; திண்மை = கல் இட்டிகைகளால் செய்தலின் குத்தப்படாமை; அதாவது கருவி கொண்டு தகர்த்தாலும் தகராத வலிமை; அருமை = பொறிகளைத் தன்னிடத்தே பெற்றுள்ளமையால் அணுகுதற்கு அருமை.

13. (அ பொருளின் சிறப்பு யாது?

ஒரு பொருட்டாக மதிக்கப்படாதவரையும் மதிக்கப் படுமாறு செய்யவல்ல பொருளைத் தவிர ஒருவனுக்குப் பொருளாவது வேறு ஒன்றுமில்லை.

எல்லா நன்மையும் உடையராயினும் பொருளில்லாதவர்களை யாவரும் இகழ்வர்; எல்லாத் தீமையும் உடையவராயினும் அப்பொருள் உடையாரை யாவரும் உயரச் செய்வர். பொருள் என்று அனைவராலும் சிறப்பித்துச் சொல்லப்படும் நந்தா விளக்கு தன்னைச் செய்தவர்க்கு அவர் நினைத்த தேயத்துச் சென்று பகை என்னும் இருளைக் கெடுக்கும்.

(ஆ) அரசன் பொருளை ஈட்டும் நெறி யாது?

பொருள் செய்யும் திறத்தினை அறிந்து, அரசன் கொடுங்கோன்மையின்றிச் செங்கோல் வழியில் உண்டாக்கிய பொருள் அவனுக்கு அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும்.

தாம் குடிகளிடத்தில் செய்யும் அருளுடன் அவர் தம்மிடத்துச் செய்யும் அன்புடன் கூடிவராத பொருளின் ஈட்டத்தை அரசர் பொருந்தாது கழியவிடல் வேண்டும்: உடையார் இல்லாமையால் தானே வந்து சேர்ந்த பொருளும் சுங்கமாகிய பொருளும் தன் பகைவரைத் திரையாகக் கொள்ளும் பொருளும் அரசனுக்கு உரிய பொருள்களாம்.

[இ] பொருளால் வரும் பயன் யாது?

அன்பிஞல் ஈனப்பட்ட அருள் என்னும் குழவி, பொருள் என்று உயர்த்துச் சொல்லப்படும் செல்வத்தையுடைய செவிலியான் வளரும்.

தன் கைத்தலத்தில் பொருள் உண்டாக ஒரு வினையை எடுத்துக் கொண்டான் அதனைச் செய்தல் ஒருவன் குன்றின்மீது ஏறி நின்று யானைப் போரைக் காண்பதைப் போன்றதாகும்.

தமக்கு ஒன்று உண்டாகக் கருதுவார் பொருளை உண்டாக்குக; தம் பகைவரின் செறுக்கினை அறுக்கும் படைக்கலம் அதுவேயாகும்.

நன்னெறியால்வரும் பொருளை மிகுதியாகப் படைத்தவர்க்கு அறனும் இன்பமும் எளிய பொருள்களாம்.

14. (அ) அரசனது அங்கங்களுள் படையே சிறந்தது என்பதும், அவற்றுள்ளும் மூலப்படை சிறந்தது என்பதும் அது தன்னுள்ளும் வீரன் சிறந்தான் என்பதும் எவ்வாறு கூறப்பட்டன?

யானை, தேர், குதிரை, காலாள் முதலிய நான்கு உறுப்பாலும் நிறைந்து போரினில் ஊறுபடுவதற்கு அஞ்சாது நின்று பகையை வெல்லுகின்ற படை அரசனது செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் மேலான செல்வமாகும். அரசனது அங்கங்களுள் படையே சிறந்தது என்பது விளங்கும்.

தான் சிறியதாய விடத்தும் அரசர்க்குப் போரின்கண் உலைவு வந்தால் தன்மேல் உறுவதற்கு அஞ்சாது

நின்று தாங்கும் வன்கண்மை அவன் தன் முன்னோரைத் தொடங்கிவரும் படைக்கன்றி ஏனையவற்றுக்கு உளதாகாது. இப்பொருளை விளக்கி நிற்கும், "உலைவிடத்து ஊறு அஞ்சா" என்று தொடங்கும் குறட்பாவினால் மூலப்படை, கூலிப்படை, நாட்டுப் படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என்னும் அரசனது அறுவகைப் படையுள்ளும் மூலப்படையே சிறந்தது என்பது பெறப்பட்டது.

எலியாகிய பகை திரண்டு கடல்போல ஒலித்தால் நகரத்திற்கு வரும் ஏதம் இல்லை; அந்நாகம் உயிர்த்த துணையானே அதுதானே கெடும். இப் பொருளைத் தந்து நிற்கும், "ஒலித்தக்கால் என்னும்" என்று தொடங்கும் பாடலால் உண்மை வீரனே சிறப்புடையான் என்பது பெறப்படும்.

(ஆ) "ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்"

--இச்செய்யுளின் பொருள் கூறி விளக்குக. இதில் பயின்றுள்ள அணியினையும் சுட்டுக.

எலியாகிய பகையானது திரண்டு கடல்போல் ஒலித்தால் நகரத்திற்கு என்ன துன்பம் வரும்? ஒரு துன்பமும் வாராது. அந்நாகம் உயிர்த்த துணையானே அப்பகை தானே கெடும் என்பது இச் செய்யுளின் பொருளாகும். வீரரல்லாதார் பலர் திரண்டு ஆர்த்தால் அதற்கு வீரன் அஞ்சான். அவன் கிளர்ந்த அளவிலே அவர் தாம் கெடுவர் என்னும் பொருளை இச் செய்யுள் ஒட்டி விளக்கியதால் இஃது ஒட்டணி என்றும், பிறிது மொழிதல் அணி என்றும் வழங்கப்படும்.

[இ] படையின் இலக்கணம் யாது?

போரின் கண் கெடுதலின்றிப் பகைவரால் கீழறுக்கப் படாததாய் தொன்று தொட்டுவந்த தறுக்கண்மையை உடையதே படையாகும்.

கூற்றுவன் தானே வெகுண்டு மேல் வந்தாலும் நெஞ்சு ஒத்து எதிர்நின்று தாங்கும் ஆற்றலையுடையதே படையாகும். வீரம், மானம், முன் வீரராயினார் சென்ற நன்னெறிக்கண் சேறல், அரசனால் தேறப்படுதல், இந் நான்கு குணமே படைக்கு அரணாகும்.

பகைவரால் வகுக்கப்பட்டுத் தன் மேல்வந்த படையின் போரை விலக்கும் வகுப்பினை அறிந்து வகுக்கப்பட்டு, அவர் தூசியைத் தன்மேல் வராமல் தடுத்துத் தான் அதன் மேற் செல்வதே படையாகும்.

(ஈ) "என நான்கே ஏமம் படைக்கு"-இங்குக் கோடிட்ட தொகைச்சொல் எவற்றைக்குறித்தன?

இங்குக் கோடிட்ட தொகைச் சொல் மறம், மானம், மாண்ட வழிச் செலவு, தேற்றம் ஆகிய இந்நான்கினையும் குறித்தன. மறம் = தறுகண்மை; மாண்ட வழிச் செலவு = முன் வீரராயினார் சென்ற நன்னெறிக்கண் சேறல்; தேற்றம் = அரசனால் தேறப்படுதல் இங்குக் கூறப்பட்ட இந்நான்கு குணமே படைக்கு அரணாவது.

(உ) படைக்குத் தாழ்வு எவற்றால் தோன்றுவன?

தானை பகைமேல் தான்சென்று அடும் தறுகண்மையும், அது தன்மேல் வந்தால் பொறுக்கின்ற ஆற்றலும் இல்லையென்றாலும் தன் தோற்றப் பொலிவாலே பெருமை பெறும். தான் தேய்ந்து சிறிதாகலும் மனத்தினின்றும் நீங்காத வெறுப்பும் நல்குரவும் தனக்கு இல்லையெனில் படையானது பகையை வெல்லும்.

போரின்கண் நிலையான வீரரை மிகவும் உடையதே என்றாலும் தனக்குத் தலைவராகியவீரர் இல்லாதவிடத்து தானை நில்லாது. இதனால் தோற்றப் பொலிவு இல்லாதவிடத்தும் தேய்ந்து சிறிதாதல், நீங்காத வெறுப்பு, நல்குரவு ஆகியவற்றாலும், தலைவர் இல்லாதவிடத்தும் படைக்குத் தாழ்வு தோன்றும்.

15. "படைச் செருக்கு" என்னும் அதிகாரத்தில் கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

பகைவர்களே! என் தலைவனின் எதிரில் நின்று போர் மலைந்து அவன் வேல்வாய் வீழ்ந்தமையால் கல்லின்கண் நின்ற வீரர் பலராவர்; ஆதலால் நீவிர் உம் உடற்கண் நிற்றல் வேண்டின் எம் தலைவனின் எதிரில் போரேற்று நிற்றலை ஒழிமின்.

காட்டின்கண் ஓடும் முயலைப் பிழையாமல் எய்த அம்பை ஏந்துவதைக் காட்டிலும் வெள்ளிடை நின்ற யானையை எறிந்து பிழைத்த வேலை ஏந்தல் நன்று.

பகைவர்மீது கண்ணோட்டமின்றிச் செய்யும் மறத்தை ஆண்தன்மை என்று கூறுவர். பகைவர்க்கு ஒரு தாழ்வு வந்தாயின் கண்ணோட்டம் கொண்டு அதனைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு ஊராண்மை செய்தலை நூலோர் அதற்குக் கூர்மை என்று கூறுவர்.

தன் கையின்கண் உள்ளதாகிய வேலைத் தன்மேல் வந்த களிற்றுடன் போக்கி, வருகின்ற களிற்றுக்கு வேல் நாடித் திரிபவன் தன் மார்பின்கண் நின்ற வேலைக் கண்டு பறித்து மகிழ்வான்.

பகைவரை வெகுண்டு நோக்கிய பார்வை, அவர் வேலால் எறிய அஃது அப்பார்வையை அழித்து இமைக்கும்படிச் செய்யுமானால் வீரர்க்கு அது தோல்வி.

தனது கழிந்து சென்ற நாட்களை எடுத்து எண்ணி அவற்றுள் விழுப்புண் படாத நாட்களையெல்லாம் பயன்படாது கழிந்த நாட்களுள் வைத்து எண்ணுவான் உண்மை வீரன்,

துறக்கத்தில் தம்முடன் செல்லாது வையத்தைச் சூழ்ந்து நிற்கும் புகழை விரும்பி உயிர்வாழ்தலை வேண்டாத வீரர், தங்களது கால்களில் கழலைக் கட்டுதல் அலங்காரத் தன்மையை உடையதாகும்.

போரினைப் பெற்றால் தம் உயிரின் பொருட்டு அஞ்சாது அதன்மேற் செல்லும் வீரர், தம் தலைவன் (அரசன்) அதனை வேண்டாமென்று முனிந்தாலும் அவ்வீரத்தின் மிகுதியில் குன்றார்.

தாம் கூறிய வஞ்சினம் தப்பாமற் பொருட்டுச் சென்று சாவவல்ல வீரரை அது தப்பியவாறு சொல்லி நகைப்பதற்குரியோர் ஒருவருமில்லை.

தம்மைக் காப்பாற்றிய அரசரின் கண்கள் நீர்மல்கு மாறு போரிட்டுச் சாவப் பெற்றால் அச்சாக்காடு இரந்தாவது கொள்ளும் தகுதியையுடையது.

(ஆ) "பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால் ஊராண்மை மற்று அதன் எஃகு"
--இச் செய்யுளின் பொருள் கூறி விளக்குக.

பகைவரின்மீது கண்ணோட்டமின்றிச் செய்யும் போர் மறத்தை நூலோர் மிகுந்த ஆண்தன்மை என்று கூறுவர். அப்பகைவர்க்கு ஒரு தாழ்வு நேர்ந்ததாயின் கண்ணோட்டம் கொண்டு அதனைத் தீர்த்துக் கோடற் பொருட்டு ஊராண்மை செய்தலை அதற்குக் கூர்மை என்று நூலோர் கூறுவர். ஊராண்மை = உதவிபுரியும் தன்மை. (இலங்கையர் வேந்தனாகிய இராவணன் போர்க்களத்தில் தன் தானை முழுதும் இறந்துபடத் தான் மட்டும் தமியனானான். அவனது அத்தகைய நிலைமையை நோக்கி அயோத்தி மக்களின் அரசனான இராமன் போர்மேற் செல்லாது அவனை நோக்கி, "இன்றுபோய் நாளை நின் தானையோடு வா" என்று கூறி விடுத்தான்.) இதுவே ஊராண்மை எனப்படும்.

(இ) "படைச் செருக்கு" என்னும் அதிகாரத்தினின்றும் நெடுமொழி வஞ்சி, தழிஞ்சி, நூழிலாட்டு என்னும் துறைகளுக்கு எடுத்துக் காட்டுத் தருக:—

"என் ஐமுன் நில்லன்மின் தெவ்வீர் பலர் என்ஐ முன் நின்று கல் நின்றவர்"

—இச் செய்யுள் பகைவர்களே! என் தலைவனின் எதிரில் போரேற்று நின்று அவனது வேல்வாய் வீழ்ந்தமையால் பின்னர்க் கல்லின்கண் நின்ற வீரர் பலராவர் நீவிர். கல்லின் கண் இன்றி நும் உடற்கண் நிற்றலை வேண்டின் எம் தலைவனின் எதிரிலே போரேற்று நிற்

றலை ஒழிமின்'' என்று இச் செய்யுள் வீரன் ஒருவன் தனது வீரத்தை அரசன் மேல் வைத்துக் கூறியுள்ளமை யால் இது ''நெடு மொழி வஞ்சி'' என்றும் துறையின் பாற்படும்.

''கான முயல் எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது''

இச் செய்யுள் ''காட்டின்கண் ஓடும் முயலைப் பிழை யாமல் எய்த அம்பை ஏந்துவதைக் காட்டிலும், வெள் ளிடை நின்ற யானையை எறிந்து பிழைத்த வேலை ஏந்துதல் நன்று'' என்று மாற்றரசன் படையுடன் பொருதானோர் வீரன் அது புறங் கொடுத்ததாக நாணிப் பின் அவன் தன் மேல் கூறியதாக இப்பாடல் விளக்குவ தால் இச் செய்யுள் தழிஞ்சி என்னும் துறையின் பாற் படும்.

''பேராண்மை என்ப தறுகண் ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றும் அதன் எஃகு''

என்னும் குறட்பாவும் தழிஞ்சி என்னும் துறைக்கு எடுத் துக் காட்டாகும்.

''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்''

இச் செய்யுள் நூழிலாட்டு என்னும் துறைக்கு எடுத்துக் காட்டாகும்.

தன் கையின்கண் உள்ளதாகிய வேலைத் தன்மேல் வந்த களிற்றுடன் போக்கி, வருகின்ற களிற்றுக்கு வேல் நாடித்திரிபவன் தன்மார்பின் கண் நின்றவேலைக் கண்டு பறித்து மகிழுவான் என்பது பொருள். இதனுள் இவ்வீரன் களிற்றையே எறிவான் என்றும், சினமிகுதி யால் வேலானது தன் மார்பிடைப் போழ்ந்ததை அறிந் திலன் என்றும், மேலும் போரின் மீதே விருப்பம்உடை யவன் என்றும், கூறப்பட்டிருத்தலால் இச்செய்யுள் நூழிலாட்டு என்னும் துறைக்கு உதாரணம்.

16. (அ) ''நட்பு' என்னும் அதிகாரத்தில் கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

நட்பினைப்போல் செய்து கொள்வதற்கு அரிய பொருள்கள் ஒன்றுமில்லை; அதனைப் போன்று செய்து கொண்ட பின் பகைவர் செய்யும் வினைக்குப் புகுதற்கு அரிய காவல் ஒன்றுமில்லை.

அறிவுடையாரின் நட்புக்கள் பிறையானது நிறையும் தன்மையைப் போன்று நாள்தோறும் வளரும் பேதமையுடையாரின் நட்புக்கள் நிறைந்த மதி பின்னர்க் குறைவதைப் போல் நாள்தோறும் குறையும்.

நற்குணம் வாய்ந்த பெரியோர் தம்முட் செய்து கொண்ட நட்புப் பயிலுந்தோறும் அவர்க்கு இன்பமளித்தல், நூற்பொருளைக் கற்கும் தோறும் கற்றூர்க்கு இன்பமளிப்பதைப் போன்றதாகும்.

ஒருவனோடு ஒருவன் நட்புச் செய்து கொண்டதானது தம்முள் இயைபுடையனவற்றைக் கூறி நகையாடுதற்கு அன்று; அவர்க்கு வேண்டாத செய்கை உண்டான விடத்து இடித்துக் கூறும் பொருட்டாகும்.

ஒருவனுடன் ஒருவன் நட்புச்செய்து கொள்ளுதற்கு புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை; இருவர்க்கும் ஒத்த உணர்ச்சியே நட்பாகும் உரிமையைக் கொடுக்கும்.

அகம் நீங்க முகம்மட்டும் மலரும் வகையில் நட்புச் செய்வது நட்பாகாது; அன்பினால் அகமும் மலர நட்புச் செய்வதே நட்பாகும்.

கேடு தரும் தீயவழிகளில் செல்லும்போது விலக்கி, நன்னெறிகளில் செல்லாக்கால் செலுத்தி, தெய்வத்தால் கேடு வந்து சேர்ந்தால் அத்துன்பத்தை உடன் அனுபவிப்பது தான் நட்பாகும்.

அவையிடை ஆடை குலையப் பெற்றவனுக்கு அப்பொழுதே அவனது கைகள் சென்று உதவி, அவனுக்கு நேர இருந்த இளிவரவினை நீக்குவது போல நட்புச் செய்து கொண்டவனுக்குத் துன்பம் வந்தால், அப்பொழுதே சென்று அதனை நீக்குவதுதான் நட்பாகும்.

நட்பினுக்கு அரசிருக்கை எதுவெனில் அஃது எல்லாக் காலத்திலும் மாறுபாடு இல்லாமல் இயலுகின்ற இடங்களிலெல்லாம் அறம், பொருள்களில் தளர்ந்து விடாதவாறு தாங்குகின்ற திண்மையாகும்.

இவர் நமக்கு இத்துணையன்புடையார்; யாம் இவர்க்கு இத்துணையன்பினேம் என்று ஒருவரையொருவர் புனைந்துகூறினாலும் நட்புப்புல்லிதாய்த் தோன்றும்.

(இறுதி ஐந்து பத்திகளில் நட்பின் இலக்கணம் கூறப்பட்டது)

(ஆ) "நவில் தொறும் நூல் நயம்போலும்"
"உடுக்கை இழந்தவன் கைபோல"
-இவ்உவமைகளைப் பொருளுடன் பொருத்திக்காட்டுக.

நவில் தொறும் நூல் நயம் போலும்:—நூற் பொருளானது கற்கும் தோறும் கற்றார்க்கும் இன்பம் செய்யும். அதுபோல நற்பண்புடைய மக்கள் தம்முட் செய்து கொண்ட நட்பானது பயிலுந்தோறும் அவர்க்கு இன்பம் செய்யும் என்னும் கருத்து விளக்கப்பட்டது. பண்புடையார் தொடர்பு இன்பஞ் செய்தலுக்கு நூற்பொருள் கற்கும் தோறும் இன்பஞ் செய்தல் உவமையாகும்.

உடுக்கை இழந்தவன் கைபோல:—அவையிட ஆடை குலையப் பெற்றவனின் கையானது அப்பொழுதே சென்று உதவி அவனுக்கு நிகழவிருந்தஇளிவரவினைப் போக்கும்; அதுபோல நட்புச் செய்து கொண்டவனுக்குத் துன்பம் வந்து சேர்ந்தவிடத்து அப்பொழுதே சென்று உதவி, அதனைக் களைய வேண்டும்; அதுவே நட்பு எனப்படும் என்னும் கருத்து விளக்கப்பட்டுள்ளது. நண்பனுக்கு ஏற்பட்ட துன்பத்தைச் சென்று நீக்குவதற்கு அவையிடை ஆடை குலையப் பெற்றவனின் கை சென்று உதவுவது உவமையாகும்.

17. "நட்பு ஆராய்தல்" என்னும் அதிகாரத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் யாவை?

நட்பை விரும்பி அதன் கண் நிற்கின்றவர்க்கு ஒருவ ஞேடு நட்புச்செய்தபின் அவனை விடுதல் உண்டாகாது; ஆகையால் ஆராயாமல் நட்புச் செய்வதைப் போன்று கேடு தருவது வேறில்லை.

குணம் செயல்ஆகியவற்ருலும் ஆராய்ந்து ஒருவனு டன் நட்புக்கொள்ளாதவன் முடிவில் தான் சாவதற்குக் காரணமான துன்பத்தைத் தன் பகைவர் விளைக்க வேண்டாது தானே விளைக்கும்.

ஒருவனது குணத்தையும் குடிப் பிறப்பினையும் குறைவற்ற சுற்றத்தையும் குற்றத்தையும் ஆராய்ந்த பின்னரே அவனுடன் நட்புக்கொள்ள வேண்டும்.

உயர்ந்த குடியில் பிறந்து தன்னிடத்து உலகத் தோர் கூறுகின்ற பழிக்கு அஞ்சுகின்றவனை சிலகொடுத் தாவது நட்புச் செய்து கொள்ளல் மேலானது.

தாம் உலக நியதிக்கு மாருகச் செய்ய நினைத்தால் சோகம் உண்டாகுமாறு எடுத்துக் கூறி விளக்கியும், செய்தவிடத்து மேலும் செய்யாதவாறு நெருக்கியும், வழக்கினைச் செய்யாத விடத்துச் செய்விக்கவும் வல்ல வரை ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும்.

ஒருவனுக்குக் கேடாவது தன்னுடன் நட்புச்செய்து கொண்டவராகிய புலங்களை எஞ்சாது அளக்கின்ற தோர் கோலாகும். ஆகையால் அதனிடத்தும் அவனுல் பெறப்படுகின்ற ஒரு நல்லறிவு உண்டு.

ஒருவன் அறிவில்லாதவருடன் நட்புச் செய்து கொண்டாஞயின் அதனை ஒழித்து அவனைவிட்டு நீங்கு வதே அவனுக்கு ஊதியம் என்று கூறுவர்.

தன் ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல் களைச் செய்ய நினையா தொழிக; அது போல் தமக்கு ஒரு துன்பம் வந்தவிடத்துக் கைவிடுகின்றவர்களின் நட் பினைக் கொள்ளாது நீங்குக.

ஒருவன் கெடுகின்ற காலத்தில் அவனை விட்டு நீங்குகின்றவர்களின் நட்பானது தன்னைக் கூற்று அடுகின்ற காலத்தில் ஒருவன் நினைத்தாலும் அது நினைத்த அவனது உள்ளத்தைச் சுடும்.

உலகியலுடன் ஒத்துக் குற்றமற்றோரின் நட்பினைப் பயில்க; உலகியலுடன் ஒத்து வாழ்தலில்லாதவரின் நட்பினை அறியாது கொண்டார் என்றாலும் அவர் வேண்டியதொன்றைக் கொடுத்தாயினும் கைவிடுக.

(ஆ) 1. "கேட்டினும் உண்டு ஓர் உறுதி கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல்"

2. "உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு"

இக் குறட்பாக்களை விளக்கி இவற்றுள் பயின்றுள்ள அணியையும் சுட்டுக.

(1) ஒருவனுக்குக் கேடு என்பது தன்னுடன் நட்புச் செய்து கொண்டவர்களாகிய புலங்களை எஞ்சாமல் அளிக்கின்ற ஒரு கோலாகும்; ஆதலால் அதனிடத்தும் அவனால் பெறப்படுவதோர் நல்லறிவு உண்டு என்பது இதன் பொருளாகும். செல்வம் மிகுந்த காலத்தில் நட்புச் செய்து கொண்டாரின் செயல் வேறுபடும். ஆகையால் அக்கேட்டால் அவை வரையறுக்கப்படும். எனவே கேட்டினைக் கோலாக உருவகப்படுத்தியும், அதனால் அவரை அளந்தறிந்தால் ஆவாரையே கோடலின் அவ்வறிவை 'உறுதி' என்றும் கூறினர். ஆதலால் இச்செய்யுள் ஏகதேச உருவக அணி.

(2) தம் ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களைச் செய்ய நினையாதே; அதுபோலத் தமக்கு ஒரு துன்பம் வந்தவிடத்துக் கை விடுகின்றவர்களின் நட்பினைக் கொள்ளாது நீங்கவேண்டும் என்பது இதன் பொருள். அல்லற்கண் ஆற்றறுப்பாரின் நட்பினை விடல் வேண்டும். எடுத்துக் காட்டி விளக்கியுள்ளமை

யால் இச்செய்யுள் எடுத்துக்காட்டு உவமையணியின் பாற்படும்.

இ) ஒருவற்கு ஊதியம் என்பது யாது? ஏன்?

ஒருவன் அறிவில்லாதவருடன் நட்புச் செய்து கொண்டானாயின் அதனை ஒழிந்து அவரை விட்டு நீங்குதலை ஒருவற்கு ஊதியம் என்பர். செய்துகொண்ட நட்பு ஒழிந்தாலும் நீங்காவிடில் தீங்கு வரும்; ஆதலால் 'விடல்' என்றார். நீங்கியவிடத்து தீங்கு ஒழிதல்மட்டு மன்றி இருமை இன்பத்திற்கும் உரிமை எய்தல்உண்டு. ஆதலால் அதனை 'ஊதியம்' என்றார்.

ஈ] 'கொடுத்தும் கொளல் வேண்டும்'', ''ஒன்று ஈத்தும் விடுதல் வேண்டும்'' என்று கூறப்பட்டன யாவை? அவற்றை அங்ஙனம் கூறக்காரணம் என்ன?

உயர்ந்த குடியின் கண் பிறந்து தன்னிடம் உலகினர் கூறும் பழிக்கு அஞ்சுகின்றவனின் நட்பினைச் சில கொடுத்தாவது கொள்ளுதல் சிறந்தது. உயர்குடியில் பிறந்தான் தான் பிழை செய்யான்; பழிக்கு அஞ்சுவான் பிழைத்தன பொறுப்பான். இவ்விரண்டும் உடையவனைப் பெறுதல் அரிது. ஆதலால் அத்தகையவனின் நட்பினை விலை கொடுத்தாவது கொள்ளவேண்டும் என்றார்.

உலகியலோடு ஒத்தலில்லாரின் நட்பினை அவர் வேண்டியதொன்றைக் கொடுத்தாவது விட்டுவிடல் வேண்டும். இவர்களின் நட்பு துன்பத்தை மட்டுமே தரும்; ஆதலால் ''ஒன்று ஈத்தும் ஒருவுக'' என்றார்.

18. ''பழமை'' என்பது பற்றி அறியக் கிடப்பன யாவை?

நம்முடன் நட்புச் செய்துகொண்டவர்களின் பழையராந் தன்மைபற்றி அவர் செய்த பிழைகளைப் பொறுத்துக் கொள்ளுதல் பழமை எனப்படும்.

பழமை என்று சொல்லப்படுவது எதுவெனில் பழமையோர் உரிமையால் செய்வனவற்றைச் சிறிதும் சிதையாது அவற்றிற்கு உடம்படும் நட்பாகும்.

நட்பிற்கு உறுப்பாவது நட்டார் உரிமையால் செய்வனவே; ஆகையால் அவ் உரிமைக்கு இனியாராவது சான்ருேர்க் கடனுகும்.

தாம் உடம்படாதனவென்ருலும் நட்டார் உரிமையால் செய்வனவற்றிற்குத் தாம் செய்ததுபோல் உடம்படவில்லை என்ருல் அவருடன் பழையதாய் வந்த நட்பு ஒரு பயனேயும் செய்யாது.

தமது செயலே நட்புச் செய்தார் உரிமையால் கேளாது செய்தார் எனில் அச் செயலின் விரும்பப்படும் தன்மைபற்றி அறிவுடையார் அதனே விரும்புவர்.

தாம் வெறுக்கத்தக்க செயல்களே நட்டார் செய்தனர் என்ருல் அதற்குக் காரணம் பேதைமை என்ருவது ஒன்றில் மிக்க உரிமை என்ருவது கொள்ளவேண்டும்.

நட்பு என்னும் எல்லேயை மீருது அதில் நின்றவர் தம்முடைய பழமையின் திரியாது நின்றவரின் நட்பினே அவரால் தொலேவு வந்தவிடத்தும் விடார்.

அன்புடன் பழையதாய் வந்த நட்பினே உடையவர் நண்பர்கள் தமக்கு அழிவு வந்தவற்றைச் செய்தனராயினும் அவரிடம் அன்பினே ஒழியார்.

நண்பர்கள் செய்த பிழையைத் தாமாகவேயன்றிப் பிறர் கூறினும் கொள்ளாத உரிமை அறிய வல்லார்க்கு அவர் பிழை செய்தார் எனின் அது பயனுடைய நாளாம்.

உரிமை நீங்காது பழையதாய் வந்த நட்பினே உடையவரின் நட்பை அவர் செய்த பிழையை நோக்கி விடாதவரை உலகம் நட்புச் செய்து கொள்வதற்காக விரும்பும்.

பழைமையாய் நட்டவர் பிழை செய்தனர் எனினும் அவரிடம் தம் முன்னேய அன்பினின்றும் நீங்காதவர் பகைவராலும் விரும்பப்படுவர்.

19. "தீ நட்பு" என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டன யாவை?

அன்பின் மிகுதியால் பருகுவார் போன்றார் எனினும் தீயகுணமுடையவர்களின் நட்பானது வளர்வதைக் காட்டிலும் தேய்வதே நல்லது.

தமக்குப் பயன் ஏற்பட்டவிடத்து நட்புச் செய்து அப்பயன் இல்லாதவிடத்து ஒழிகின்ற ஒப்பிலாரின் நட்பைப் பெற்றால் அடைகின்ற ஆக்கமும் இல்லை; பெறாவிடில் உறுகின்ற கேடும் இல்லை.

நட்பின் அளவினைப் பாராது அதனால் வரும் பயனின் அளவைப் பார்க்கும் நட்டவர்களும், கொடுப்பாரைக் கொள்ளாது விலையைக் கொள்ளும் பொது மகளிரும், பிறர் சோர்வு நோக்கும் கள்வரும் தம்முள் நிகராவர்.

போர் நிகழாத முன்பெல்லாம் நமக்கு உதவியாய் முன்வந்து தாங்கி, போர் வந்தவிடத்துக் களத்திலே நம்மை வீழ்த்திவிட்டுச் செல்லும் கல்வி அறிவில்லாத குதிரையைப் போன்றவர்களின் நட்பைக் காட்டிலும் தனிமை சிறந்ததாகும்.

செய்து வைத்தும் பாதுகாப்பற்ற கீழ்மக்களின் தீ நட்பானது ஒருவர்க்கு உண்டாவதைக் காட்டிலும் இல்லாதிருத்தல் நல்லது.

அறிவற்றவனின் மிகவும் நிறைந்த நட்பைக் காட்டிலும் அறிவுடையனின் பகைமை கோடி மடங்கு நல்லது.

நகுதல் வகையர் ஆவதற்கு ஏற்ற நட்பால் வருவனவற்றைக் காட்டிலும் பகைவரால் வருவன பத்து கோடி மடங்கு நல்லன.

தம்மால் முடிகின்ற செயல்களை முடியாதாக்கிச் செய்யாதவருடன் செய்துகொண்ட நட்பை அது காணின் அவர் அறியுமாறு சொல்லாது சோரவிடுதல் வேண்டும்.

செயலும் சொல்லும் ஒவ்வாது வேருயினரின் நட்பானது நனவில் அன்றிக் கனவிலும் துன்பமே தரும்.

தனி மனையில் இருந்தவிடத்து நட்புச் செய்து உறவாடி பலருடன் மன்றின்கண் இருந்தவிடத்துப் பழித்துரைப்பாரின் நட்பானது சிறிதே எனினும் தம்மை நெருங்குவதைப் பரிகரிக்க வேண்டும்.

20. (அ) "கூடா நட்பு" பற்றி அறிவுறுத்தப்படும் கருத்துக்களைத் தருக.

நம்முடன் கூடாதிருந்து தமக்கு வாய்க்கும் இடத்தைப் பெறுகின்ற அளவும் கூடியொழுகுவாரின் நட்பானது அது பெற்ருல் அற எறிதற்குத் துணையாகின்ற பட்டையைப் போன்றதாகும்.

தமக்கு உற்றவரைப்போன்று உருதவர்களின் நட்பானது இடம்பெற்ருல் மகளிர் மனம் மாறுபடுவதைப் போன்று வேறு படும்.

நல்ல பல நூல்களைக் கற்ற காலத்தும் மனம் திருந்தி நட்பாதல் பகைவர்க்கு உளதாவதில்லை.

நம்மைக் காண்கின்ற பொழுது முகத்தால் இனியதாகச் சிரித்து எக்காலத்தும் மனத்தில் இன்ஞராகிய வஞ்சகரைக் கண்டு அஞ்சுதல் வேண்டும்.

உள்ளத்தால் தம்முடன் பொருந்ாதவரை எக்காரியத்திலும் சொல்லால் தெளிதல் முறைமையன்று, என்பது நீதி நூற் கொள்கை.

பகைவர்கள் நட்டாரைப் போன்று நன்மை தரும் சொற்களைக் கூறினுராலும் அச்சொற்கள் நன்மை பயவாமையைச் சொல்லியபொழுதே அறியலாம்.

வில்லின் வணக்கம் ஏற்ருர்க்குத் தீமை செய்யும்; ஆதலால் பகைவரிடம் தோன்றுகின்ற சொல்லின் வணக்கத்தையும் நமக்கு நன்மை செய்யக் குறித்தது என்று கருதலாகாது.

பகைவர்கள் நம்மை நோக்கி வணங்குகின்ற கையகத்தும் நம்மைக் கொல்லப் படைக்கலத்தை மறைத்து வைத்திருப்பர்; அவர் அழுதகண்ணீரும் அத்தகையதே.

தம் பகைமையானது வெளியில் தோன்ருதபடிப் புறத்தில் நட்பினை மிகச் செய்து உள்ளத்தில் தம்மை இகழுகின்ற பகைவரைத் தாமும் அத்தகைய நட்பிலே நின்று வெளியில் அவர் மகிழும்படிச் செய்து உள்ளத்தில் அத்தன்மை சாகுமாறு செய்து விடுவதுதான் அரச நீதியாகும்.

தம் பகைவர் தமக்கு நண்பராய் ஒழுகுகின்ற காலம் வந்தால் தாமும் அவருடன் முகத்தால் நட்புச் செய்து மனத்தால் அதனைத் தவிர்ந்து,பின் அதனையும் தவிர்க்க வேண்டும்.

[ஆ] திருவள்ளுவர் நீதிநூற் கருத்துக்களை உடன்பட்டும், மறுத்தும் கூறுகின்ற இடங்களைச்சுட்டி விளக்குக.

கூடா நட்பு என்னும் அதிகாரத்தில்,

"மிகைச் செய்து தம் எள்ளுவாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற்பாற்று"

என்னும் குறட்பா கூறப்பட்டுள்ளது. தம் பகைமைத் தன்மை தோன்ருமல் வெளியில் நட்பினை மிகச் செய்து அகத்தின் கண் தம்மை இகழும் பகைவரை தாமும் அத்தகைய நட்பின்கண் நின்று வெளியில் அவர் மகிழும்படிச் செய்து உள்ளத்தில் அது சாகும்படி பொருந்தற்பான்மை உடையதுதான் பொது நீதி என்பது இதன் பொருள். அகமொன்று வைத்துப் புறமொன்று செய்தல் ஒருவற்குத் தகாது; என்ருலும் பகைவரிடத்தில் அவ்வாறு செய்தல் பொருந்தும் என்பதே 'நீதிநூல்' துணிபாகும். ஆகையால் இந்நீதி நூல் துணிபை இக்குறட்பாவில் திருவள்ளுவர் உடன்பட்டுக் கூறினாராயிற்று.

வினைத்தூய்மை என்னும் அதிகாரத்தில்,

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

என்னும் குறட்பா கூறப்பட்டுள்ளது. தன்னைப்பெற்ற வளின் பசியை வறுமையால் கண்டு இரங்கும் நிலைமை யுடையவனாயினும் அதனைக் காரணமாகக் கொண்டு அறிவுடையார் பழிக்கும் தீயவினைகளை ஒருவன் செய்ய லாகாது என்பதே இதன் பொருள். இறந்த மூப்பின ரான இரு முதுகுரவரும் கற்புடைய மனைவியும் குழவியும் பசியால் வருந்தும் நிலைமை ஏற்பட்டால் தீயன பலவும் செய்தாவது அவர்களைக் காக்கவேண்டும்' என்பது அறநூல் பொதுவிதியாகும். இக்கொள்கை மேலே காட்டிய செய்யுளில் மறுக்கப்படுகிறது. ஆதலால் திருவள்ளுவர் நீதிநூற் கருத்தை மறுத்துரைத்தாரா யிற்று.

21. [அ] "பேதைமை"யின் இலக்கணம் யாது? அது பற்றிக் கூறப்பட்டன யாவை?

பேதைமை என்று சொல்லப்படுவது ஒருவனுக்கு ஏனைக் குற்றங்கள் எல்லாவற்றினும் மிக்கதொன்றாகும்; அது யாதென வினவினால் தனக்குக் கேடு தருவனவற் றைக் கைக்கொண்டு ஆக்கம் தருவனவற்றைக் கை விடுதலாகும்.

ஒருவனுக்குப் பேதைமை எல்லாவற்றுள்ளும் மிகுந்த பேதைமையாவது தனக்குத் தகாத ஒழுக்கத்தில் விருப்பம் கொள்ளுதலாகும்.

பழி பாவங்களுக்கு வெட்கப்படாமையும் தேட வேண்டியவற்றைத் தேடாமையும் யாவரிடத்திலும் முறிந்த செயலுடைமையும், பேண வேண்டிய குடிப் பிறப்பு, கல்வி, ஒழுக்கம் ஆகியவற்றைப் பேணாமையும் பேதையின் தொழிலாகும்.

மனம் மொழி மெய்கள் அடங்குவதற்குக் காரண மான நூல்களை ஓதியும், அடக்கத்தால் உளதாகும்

பலனே உணர்ந்தும், அதனைப் பிறர்க்கு எடுத்துரைத்தும் தான் அவையடங்கி ஒழுகாத பேதையைப்போல் பேதையர் இவ் உலகத்தில் இல்லை.

பேதை ஏழு பிறவிகளிலும்தான் புகுந்து அழுந்துகின்ற நிரயத்துன்பத்தினை இவ்வொரு பிறவியிலேயே செய்ய வல்லவனவான்.

செய்யும் முறை தெரியாத பேதை ஒரு செயலைச் செய்ய மேற்கொள்வானாயின் அச்செயலும் களங்கம் உடையதாகும். தானும் கெடுவான்.

பேதை பெருஞ் செல்வத்தைத் தெய்வத்தால் அடைந்தவிடத்து தன்னுடன் ஒரு தொடர்பும் இல்லாதார் வயிறு நிறைவடைய, தன்னுடன் எல்லாத் தொடர்பும் உடைய சுற்றத்தார் பசித்து நிற்பர்.

பேதை தன் கையினில் ஒன்றனை உடைமையாகப் பெற்றால் அவன் மயங்குதல், முன்னே பித்தினையுடைய ஒருவன் அம்மயக்கத்திற்கு மேலும் மதுவுண்டு மயங்கினாற் போன்றதாகும்.

பிரிந்து சென்றவிடத்து இருவர்க்கும் துன்பம் இல்லையாதலால் பேதையாயினார் தம்முட்செய்து கொண்ட நட்புமிக இனிதாகும்!

சான்றோரின் அவைக்குள் பேதை சென்று புகுதல் தூயதல்லனவற்றை மிதித்த காலை இன்பம் தரும் அமளிக் கண்ணே வைத்தது போன்றதாகும்.

22. (அ) "புல்லறிவாண்மை" என்றால் என்ன? அதன் இழிவைத் திருவள்ளுவர் எவ்வாறு விளக்குகின்றார்?

புல்லிய (கீழான) அறிவினை ஆள்கின்ற தன்மை புல்லறிவாண்மையாகும். சிற்றறிவினனான ஒருவன் தன்னைப் பேரறிவினனாக மதித்துக்கொண்டு, உயர்ந்தோர் கூறுகின்ற உறுதிச் சொற்களைக் கொள்ளாமையாகும்.

ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிகுந்த இல்லாமையாவது அறிவில்லாமையாகும். பொருள் இல்லாமையை உலகத்தார் இல்லாமை என்று கொள்ளார்.

புல்லறிவுடையவன் மனம் உவந்து ஒன்றைக் கொடுப்பது நேர்ந்ததாயின் அதற்குக்காரணம் அதனைப் பெறுகின்றவனின் நல்வினையே; வேறு ஒன்றுமில்லை.

புல்லறிவுடையவர் தாமே தம்மை வருத்தும் வருத்தம், தம் பகைவராலும் செய்தல் அரிது.

புல்லறிவுடைமை என்று கூறப்படுவது எது வென்றால் அது தம்மைத்தாமே யாம் நல்லறி வுடையேம் என்று மதிக்கும் மயக்கமாகும்.

புல்லறிவுடையோர் தாம் கற்காத நூல்களையும் கற்றாராக எண்ணிக்கொண்டு ஒழுகுவதானது குற்றம் நீங்கக் கற்ற ஒரு நூல் உண்டாகுமானால் அதனிடத்தும் பிறர்க்குச் சந்தேகத்தை விளைக்கும்.

புல்லறிவுடையோர் தம்மிடத்து நிகழும் குற்றங்களை மறையாதவிடத்து ஆடையால் அற்றம் மறைத்தவ ராகத் தம்மை எண்ணுவதும் புல்லறிவேயாகும்.

பெறுவதற்கு அரிய உபதேசப் பொருளைப் பெற்றா லும் உட்கொள்ளாது போக்குகின்ற புல்லறிவாளன் அவ்வுறுதிப் பாட்டை அறியாமையால் தானே தனக்கு மிகுந்த வருத்தத்தைச் செய்து கொள்வான்.

உறுதி தருவனவற்றை அறிவுடையார் எடுத்துக் கூறவும் புல்லறிவுடையவன் அவற்றைச் செய்யான்: மேலும் தானாகவும் இவை செய்வன என்று அறியான்; அவனது உயிர் உடம்பை விட்டு நீங்குமளவும் அவன் நிலத்திற்குப் பொறுக்கமுடியாத அரிய நோயாவான்.

தன்னை எல்லாம் அறிந்தவனாக மதிப்பால் பிறரால் ஒன்றை அறியும் தன்மை இல்லாதவனை அறிவிக்கப் புகுந்தவன் அவனால் பழிக்கப்பட்டுத்தான் அறியாத

வனாக முடியும்; அவ்வறியும் தன்மை இல்லாதவன் கொண்டதை விடாமையால் தான் அறிந்தவாற்றால் அதனை அறிந்தவனாய் முடியும்.

உலகத்தார் பலரும் உண்டு என்று கூறுகின்ற ஒரு பொருளைத் தன் புல்லறிவால் இல்லை என்று கூறுகின்றவன் மகன் என்று கருதப்படானாய் உலகத்துக் காணப்படுகின்ற ஒரு பேய் என்று கருதப்படுவான்.

(ஆ) "அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு"

- இதற்குப் பொருந்தும் உரை எது? ஏன்?

பெறுவதற்கு அரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும் அதனை உட்கொள்ளாது போக்கும் புல்லறிவுடையவன் அவ்வுறுதியை அறியாமையால், தானே தனக்கு மிகுந்த வருத்தத்தைச் செய்து கொள்ளுவான் என்பதே இதற்குப் பொருந்தும் உரையாகும். உள்ளத்து அடக்கப்படும் எண்ணத்தை வாய் சோர்ந்து பிறர்க்கு உரைக்கும் புல்லறிவாளன் தானே தனக்குப் பொறுக்க முடியாத துன்பத்தைச் செய்து கொள்வான் என்றும் உரை கூறுவர். அவ்வாறு கூறினால் அது பேணாமை என்னும் பேதைமையே யாகும்; புல்லறி வண்மையாகாது.

23. (அ) இகல் என்றால் என்ன? அதன் குற்றம் எவ்வாறு கூறப்பட்டது?

இருவர் தம்முள் பொருது வலி தொலைவதற்குக் காரணமாகிய மாறுபாடு இகல் எனப்படும்.

எல்லா உயிர்கட்கும் பிற உயிர்களோடு கூடாமை என்னும் தீயகுணத்தை வளர்க்கும் குற்றம் இகல் என்றே நூலோர் கூறுவர் என்றும் இகலினால் உளதாகும் குற்றம் கூறப்பட்டது.

[ஆ] இகல் இல்லாதார்க்கு வரும் நன்மை யாது?

தம்முடன் கூடாமையைக் கருதி ஒருவன் வெறுக்கத்தக்கனவற்றைச் செய்தாலும் அவனுடன் மாறுபடுதலைக் குறித்துத் தாம் அவனுக்கு இன்னாதன வற்றைச் செய்யாமை சிறந்தது.

இகல் என்று கூறப்படும் துன்பத்தைச் செய்யும் நோயை ஒருவன் தன் மனத்தினின்றும் நீக்குவானானால் அஃது அவனுக்கு எக்காலத்திலும் உண்டாவதற்குரிய புகழைக் கொடுக்கும்.

இகல் என்று சொல்லப்படும் துன்பங்கள் எல்லா வற்றுள்ளும் மிகுந்த துன்பம் ஒருவனுக்கு இல்லை என்றால் அஃது இன்பங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்த இன்பத்தைக் கொடுக்கும்.

தம் உள்ளத்தில் இகல் தோன்றினால் அதனை ஏற்றுக் கொள்ளாது சாய்ந்து ஒழுகல் வல்லவரை வெல்லுவதற்கு எண்ணுவார் ஒருவருமில்லை.

[இ] இகல் உடையார்க்கு வரும் தீங்கு யாது?

மற்றவர்களுடன் இகல்மிகுதல் தனக்கு இனிது என்று அதனைச் செய்கின்றவனின் உயிர் வாழ்க்கை பிழைத்தலும் முழுதும் கெடுதலும் சிறிது பொழுதின் கண்ணே உள்ளது.

இகலுடன் மேவுகின்ற இன்னாத அறிவையுடையார் வெற்றி பொருந்திய நீதி நூற்பொருளை அறியார்.

[ஈ] இகல் உடைமையாலும் இன்மையாலும் வரும் துன்ப இன்பங்களை இணைத்துக் கூறும் குறட்பாக்களின் கருத்துக்களை வரைக.

தன் உள்ளத்தில் இகல் தோன்றியவிடத்து அதனை ஏற்றுக் கொள்ளுதலை ஒழிதல் ஒருவனுக்கு ஆக்கம் ஆகும். அதனைச் செய்யாது அதனை மிகுதலை மேற்கொள்வான் எனில் கேடும் அவனிடத்தில் வருதலை மேற்கொள்ளும்.

ஒருவன் தன்னிடம் ஆக்கம் வரும் வழிக்காரணமாய் உண்டாயினும் இகலை நினையான்; தனக்குக் கேடு செய்து கொள்ளுதலில் காரணமின்றியும் அதனிடத்து மிகுதலை நினைப்பான்.

ஒருவனுக்கு இக்ல் ஒன்றினாலே இன்னாதன எல்லாம் உளவாம்; நட்பு ஒன்றினால் நல்ல நீதி என்னும் பெருஞ் செல்வம் உளதாம்.

24. ''பகைமாட்சி'' பற்றிக் கூறப்பட்ட பல்வகைத் திறங்களை இயல்புக.

தம்மைவிட வலியவர்க்குப் பகையாய் எதிர்ப்பதை ஒழியவேண்டும்; மெலியார்க்குப் பகையாதலை ஒழியாது விரும்ப வேண்டும்.

ஒருவன் தன் சுற்றத்தின் மேல் அன்பில்லாதவனாகவும் வலிய துணை இலாதவனாகவும் தான் வலியிலாதவனாகவும் இருப்பானேயானால் அத்தகையவன் தன் மேல் வந்த பகைவரின் வலிமையை எங்ஙனம் தொலைப்பான்?

ஒருவன் அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சுகின்றவனாகவும், அறிய வேண்டுமவற்றை அறியாதவனாகவும், பிறரோடு பொருத்தம் இல்லாதவனாகவும், யாவரிடத்திலும் இவறன் மாலையனாகவும் உருப்பானேயானால் அவன் தன் பகைவர்க்கு மிக எளியன்.

ஒருவன் வெகுளியின் நீங்காதவனாய், நிறையுடையன் அல்லனாய் இருப்பானேயானால் அவன் மேற்சேறல் எக்காலத்தும் எவ்விடத்தும் யார்க்கும் எளிது.

ஒருவன் நீதி நூல்களை ஓதாதவனாகவும், அது விதித்த தொழில்களைச் செய்யாதவனாகவும், தனக்கு வரும் பழியைப் பாராதவனாகவும், பண்பு இல்லாதவனாகவும் இருப்பானே யானால் அவனது பகைமை பகைவர்க்கு இனிது.

தன்னையும் பிறரையும் தான் அறியாமைக்குக் காரணமாகிய வெகுளியை உடையவனாகவும் மேலும்

மேலும் வளர்கின்ற மிகுந்த காமத்தை உடையவனாக வும் இருக்கின்றவனின் பகைமை விரும்பிக் கொள்ளப் படும்.

வினையைத் தொடங்கி அதற்கு ஏலாதனவற்றைச் செய்கின்றவனின் பகைமையைச் சில பொருள்களை அழியக் கொடுத்தாயினும் கோடல் ஒரு தலையாக வேண்டும்.

ஒருவன் குணம் ஒன்றும் இல்லாதவனாய் உடைய குற்றம் பலவாய் விடத்து அவன் துணையிலனாவான்; அங்ஙனம் அவன் ஆவது அவன் பகைவர்க்குத் துணை யாதலை யுடைத்து.

நீதியை அறியாத அஞ்சும் பகைவரைப் பெற்றால் அவரை செறுகின்றவர்க்கு உயர்ந்த இன்பங்கள் விலகிச் செல்லா.

நீதி நூல்களைக் கல்லாதவனோடு பகைத்தலால் வரும் எளிய பொருளை மேவாதவனை எக்காலத்தும் புகழ் மேவாது.

25. (அ) பகைத்திறம் தெரிதல் என்றால் என்ன?

மாணாத பகையை ஆக்குவதால் உளதாகும் குற்ற மும் முன்னரே ஆகி நின்ற பகையை நட்பாக்கற் பாலதும், நொதுமலாக்கற் பாலதும், அவற்றின் கண் செய்வதும், ஏனைக்களைதற் பாலதன்கண் செய்வனவும் களையும் பருவமும் களையவில்லை யெனில் உண்டாகும் இழுக்கும் ஆகிய இத்திறங்களை ஆராய்தல் பகைத்திறம் தெரிதல் எனப்படும். பகையின் திறமும் பகையிடத்து ஆக்கும் திறமும் எனலாம்.

(ஆ) பகை கோடற்கண் உளதாகும் குற்றம்யாது?

பகை என்று கூறப்படும் தீமை பயப்பதனை ஒருவன் விளையாட்டினிடத்தே யாயினும் விரும்புதல் கூடாது என்பது நீதிநூற் கொள்கையாகும்.

வில்லை ஏராகக் கொண்ட உழவருடன் பகையைக் கொண்டாலும் சொல்லை ஏராகக்கொண்ட உழவருடன் பகை கொள்ளல் ஆகாது.

தான் தனியனாகுமாறு பலரிடத்தும் பகை கொள்கின்றவன் பித்துற்றாரைக் காட்டிலும் அறிவற்றவனே.

(இ) நட்பாக் கற்பாலதும், நொதுமலாக் கற்பாலதும் பற்றிக் கூறப்பட்டுள்ளதை எழுதுக.

வேண்டிய விடத்துப் பகையை வேறுபடுத்தித் தனக்கு நட்பாகச் செய்துகொண்டு ஒழுகும் இயல்பினையுடைய அரசனின் பெருமையுள் இவ்வுலகு அடங்கிற்று.

தனக்கு உதவி செய்யும் துணை இல்லாமலும் நலிவு செய்யும் பகை இரண்டாகவும் இருக்குமானால் அவ்விரு பகையுள் பொருந்துவ தொன்றை அப்பொழுதைக்கு இனிய துணையாகச் செய்துகொள்ள வேண்டும்.

தன் பகைவனை முன்னர்த் தெளிந்தானாயினும் தெளியானாயினும் தனக்கு வெளியே ஒரு வினையால் தாழ்வு வந்த விடத்துக் கூடாதும் விட்டு நீங்காதும் இடையில் விட்டு வைக்கவேண்டும்.

(ஈ) பகைத் திறம் தெரிதலில் நட்டார், பகைவர் ஆகிய இருபகுதிக் கண்ணும் செய்வதும், களைதற்பால்தன் கண் செய்வதும் பற்றிக் கூறப்பட்டன யாவை?

நாம் துன்புற்றதனைத் தாமாக அறியாத நட்டார்க்குத் தன் நோவினைச் சொல்லலாகாது; நமது வலிமையின்மையைப் பார்த்திருக்கும் பகைவரிடத்தில் அவ்வலிமையின்மையை மேலிட்டுக் கொள்ளலாகாது.

தான் வினை செய்யும் வகையை அறிந்து அதனை முடிப்பதற்கு ஏற்பத் தன்னைப் பெருக்கி, மறவி புகுந்து விடாதபடி தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்; அங்ஙனம் காக்கவே தன் பகைவரிடத்தில் உண்டான களிப்புக் கெடும்.

(உ) பகையைக் களையும் பருவமும் களையாக்கால் உளதாகும் இழுக்கும் பற்றி எழுதுக.

களைய வேண்டுவதாகிய முள் மரத்தை இளையதான நிலைமையிலேயே களையவேண்டும்; முதிர்ந்த நிலையில்

களைந்தால் களைகின்றவரின் கையினை அது களையும். அதுபோல் களையக் கடவதான பகையை அது மெலி தான காலத்திலே களையவேண்டும்; அது வலிமை பெற்றபின் களைந்தால் களையமுயல்வாரை அது களையும்.

தம்முடன் பகைக்கின்றவரின் செருக்கைக் கெடுக்க வேண்டியதிருக்க அதனை இகழ்ச்சியினால் செய்யாது இருக்கின்ற அரசர் பின்னர் ஒரு தலையாக உயிர்க்கு மாத்திரம் உளரல்லர்.

(ஊ) 1. "வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை"

2. "இளைதாக முள்மரங் கொல்கவளையுநர்
கை கொல்லும் காழ்ந்த இடத்து"

-இச்செய்யுட்களின் பொருள் கூறி விளக்குக. இவற் றுள் பயின்றுள்ள அணியினையும் சுட்டுக.

(1) ஒருவன் வில்லை ஏராக உடைய உழவருடன் பகை கொண்டானெனினும் சொல்லை ஏராக உடைய உழவருடன் பகை கொள்ளலாகாது என்பது இதன் பொருள். வீரம், சூழ்ச்சி என்னும் ஆற்றல்களில் வீரம் உடையாருடன் பகை கொண்டால் கேடுவருதல் ஒரு தலையன்று; வந்தாலும் தனக்கு மட்டுமே யாகும். சூழ்ச்சி வல்லாருடன் பகை கொண்டால் தன் வழியி லுள்ளார்க்கெல்லாம் தவறுது கேடு வரும். ஆதலால் அது கொள்ளினும் இது கொள்ளற்க என்றார். உம்மை யால் இருவகைப் பகையும் ஆகாமை பெறப்பட்டது. இக் குறட்பாவில் வீரர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் உழவுத் தொழில் செய்பவராக உருவகப்படுத்தி வில், சொல் என்று அவர்களின் கருவியாகிய காரணத்தைக் காட்டியுள்ளமையால் இஃது ஏது உருவகமாயிற்று. ஆனால் ஒரு சாரார் வில்லை ஏராக உடைய உழவர் என் றும், மற்றொரு சாரார் சொல்லை ஏராக உடைய உழவர் என்றும் உருவகமாக்கி இருவரையும் பொருளின் தெளி வால் உவமித்ததினால் இச்செய்யுள் உருவக உவமை அணியின் பாற்படும்.

(2) களையவேண்டியதாகிய முள் மரத்தை இளையதான நிலைமையிலேயே களைய வேண்டும்; அன்றி முதிர்ந்த நிலைமையில் களைய முற்பட்டால் அது களைவாரின் கையினைக் களையும் என்பது இதன் பொருள். அதுபோல் களையப்படுவதான தம் பகையை அது மெலிதான காலத்திலேயே களைந்து விடவேண்டும். அன்றி வலிமை பெற்ற காலத்தில் களைய முற்பட்டால் தம்மையே அது களையும் என்னும் கருத்து இதனால் விளக்கப்பட்டது. இச்செய்யுள் உவமையை மட்டும் கூறி உவமேயத்தைப் பெற வைத்தமையால் பிறிது மொழிதல் என்னும் அணியின் பாற்படும். இதனை ஒட்டணி என்றும் கூறுவர்.

26. (அ) உட்பகை ஆகாது என்பது எவ்வாறு கூறப்பட்டது?

ஒருவனுக்கு அனுபவிக்கவேண்டுவனவாய நிழலும் நீரும் முன் இனியனவாய் இருந்தாலும் பின்னர் நோய் செய்வதால் இன்னாதனவே யாம்; அதுபோலத் தழுவ வேண்டுவனவாய தமரின் இயல்புகளும் முன் இனியன வென்றாலும் பின்னர் இன்னாத செய்வதால் இன்னாதன வென்றே கருதப்படும்.

வாளைப்போல் எறிவோம் என்று வெளிப்பட்டு நிற்கும் பகைவரின் பகையை அஞ்சாதொழிக; அங்ஙனமின்றி நட்பைப்போல் மறைந்து நிற்கும் பகைவரின் நட்பினை அஞ்சுக.

இவ்வாறு உட்பகைஆகாது என்பதுகூறப்பட்டது.

(ஆ) உட்பகையால் அரசனுக்கு வரும் தீங்கு யாது?

அரசன் உட்பகையாயினரை அஞ்சித் தன்னைக் காத்துக் கொண்டு ஒழுகவேண்டும். அவ்வாறு ஒழுகாதவிடத்துத் தனக்கு ஒரு தளர்ச்சி நேர்ந்தால் குயவன் மட்கலத்தை அறுக்கும் கருவிபோல் அவர் தப்பாமற் கெடுப்பர்.

புறத்தே திருந்தியது போன்று அகத்தே திருந்தாத உட்பகை அரசனுக்கு உண்டானால் அஃது அவ

னுக்குச் சுற்றம் வாயாமைக்குரிய குற்றங்கள் பலவற்றையும் கொடுக்கும்.

புறத்து உறவுமுறைத் தன்மையுடன் கூடிய உட்பகை அரசனுக்கு உண்டானால் அஃது அவனுக்கு இறத்தல் முறையோடு கூடிய குற்றங்கள் பலவற்றையும் கொடுக்கும்.

பகைமையானது தனக்கு உள்ளாயினாரிடத்தே தோன்றுமானால் அரசனுக்கு இறவாமை கூடுதல் எக்காலத்தும் அரிது.

(இ) உட்பகையால் குடிக்கு வரும் தீங்கு யாது? உட்பகை சிறிது என்று இகழலாகாது என்பதும், மனப் பொருத்தம் இல்லாதவருடன் வாழலாகாது என்பதும் எவ்வாறு உரைக்கப் பட்டன?

செப்பின் புணர்ச்சியைப் போன்று புறத்தே வேற்றுமை தெரியாமல் கூடினர் எனினும் உட்பகை உண்டாகிய குடியிலுள்ளவர்கள் அகத்தே தம்முட் கூடினர்.

முன்னர் வளர்ந்து வந்ததென்றாலும் உட்பகை உண்டாகிய குடி அரத்தால் பொரப்பட்ட இரும்பைப் போல அதனால் பொரப்பட்ட வலி தேயும்.

இவற்றால் குடிகட்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

அரசனின் உட்பகையானது அவனது பெருமையை எண்ணிப் பார்க்குமிடத்து எள்ளின் பிளவைப் போன்ற சிறுமை உடையதே என்றாலும் அப்பெருமை அனைத்தும் அழியுமாறு வரும்கேடு அதன் அகத்ததாம். எனவே பகை சிறிது என்று கருதி இகழலாகாது.

மனப் பொருத்தம் இல்லாதவருடன் ஒருவன் வாழும் வாழ்க்கை ஒரு குடிலுள்ளே பாம்புடன் கூட உறைந்தாற் போன்றதாகும்.

(ஈ) 1. 'மட்பகையின் மாணத் தெறும்'
2. 'அரம் பொருத பொன்போலத் தேயும்'
3. 'குடங்கருள் பாம்போடு உடன்உறைந்தற்று'

**இவ் உவமைகளை விளக்கிப் பொருளுடன் பொருத்துக.**

(1) குயவன் மட்கலத்தை அறுக்கும் கருவியைப் போலத் தப்பாமற் கெடுப்பர் என்பது இதன் பொருள். மண்ணைப் பகுக்கின்ற கருவியே மட்பகை எனப்படும். அது பகைமை தோன்ருமல் உள்ளிருந்தே கீழறுக்கும். அது போல் உட்பகையாயினர் தம் பகை வெளியே தோன்ருமலே தப்பாது கேடு செய்வர் என்னும் கருத்து பெறப்பட்டது. உட்பகையாயினர் புறத்தே தோன்ருது அகத்திருந்தே அரசனுக்குத் துன்பம் செய்வதற்குக் குயவன் மட்கலத்தை அறுக்கும் கருவி உவமையாகக் கூறப்பட்டது.

(2) அரத்தால் பொரப்பட்ட இரும்புபோல் என்பது இதன் பொருள். அரத்தால் பொரப்பட்ட இரும்பு தேயும். அதுபோல முன்னர் வளர்ந்து வந்ததே என்ருலும் உட்பகை தோன்றிய குடி தேயும் என்னும் கருத்து இதனுல் விளக்கப்பட்டது. உட்பகை உண்டான குடி தோன்றுவதற்கு அரத்தால் பொரப்பட்ட இரும்பு தேய்வது உவமையாகும்.

(3) ஒரு குடிலுள்ளே பாம்புடன் கூட வாழ்ந்தாற் போலும் என்பது இதன் பொருள். சிறிய இடத்தைக் கொண்ட குடிலுள் பாம்பால் கோட்படல் உறுதி. அது போல் மனப் பொருத்தம் இல்லாதவருடன் கூடி ஒருவன் வாழும் வாழ்க்கை அவனுக்கு இறுதி பயக்கும் என்னும் கருத்து விளக்கப்பட்டது. மனப் பொருத்தம் இல்லாதவருடன் கூடி ஒருவன் வாழும் வாழ்க்கை அவனுக்கு இறுதி தருவதற்கு ஒரு குடிலுள் பாம்புடன் வாழ்பவன் அப்பாம்பினுல் துன்பப்படுதல் உவமையாகும்.

27. (அ) பெரியாரைப் பிழைப்பதன் குற்றம் எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டது?

**தாம் எடுத்த காரியம் அனைத்தையும் முடிக்கவல்லவர்களின் ஆற்றல்களை அவமதியாதிருத்தலே தங்களி**

டம் தீங்கு வராமல் காப்பாற்றுவோர் செய்யும் காவல்கள் எல்லாவற்றிலும் மிக்கதாகும்.

ஆற்றல்களால் பெரியவராயினவர்களே அரசன் நன்கு மதியாது அவமதித்து ஒழுகினுல் அவ்வொழுக்கம் அத்தகைய பெரியாரால் அவர்க்கு எக்காலத்தும் நீங்காத துன்பங்களை நல்கும்.

(ஆ) வேந்தரைப் பிழைப்பதன் குற்றம் எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டது?

பகை வேந்தரைக் கோறல் வேண்டிய விடத்து அதனை அப்பொழுது செய்யவல்ல அரசரிடம் பிழையைத் தான் கெடுதல் வேண்டினுன் என்ருல் ஒருவன் நீதி நூல்களைக் கடந்தே செய்யவேண்டும்.

மூவகை ஆற்றலும் உடையார்க்கு அவ்வாற்றல் இல்லாதார் தாம் முற்பட்டு இன்னுதவற்றைச் செய்தல் தானுக வரக்கூடிய கூற்றுவனை முன்னரே கைகாட்டி அழைப்பதைப் போன்றதாகும்.

பகைவர்க்கு வெவ்விய வலிமை வாய்ந்த வேந்தனுல் செறப்பட்ட அரசர் அவனை விட்டுத் தப்பி எங்குச் சென்று உளராவர்? ஓரிடத்துமில்லை.

(இ) முனிவரைப் பிழைத்தலின் குற்றம் யாது?

ஒருவன் தீயினுல் சுடப்பட்டான் எனினும் ஒரு வாறு உய்தி பெறுதல் கூடும்; தவத்தில் சிறந்தாரைப் பிழைத்து ஒழுகுவார் எவ்வகையிலும் உய்யார்.

சாப அருளுக்கு ஏதுவாகிய பெருமை சிறந்த அரிய தவத்தையுடையோர் அரசனை வெகுண்டால் உறுப்பழகு பெற்ற அவனது அரசாட்சியும் ஈட்டி வைத்த பெரும் பொருளும் வெந்துபடும்.

மலையைப்போன்ற அரிய தவத்தையுடையோர் கெட நினைப்பர் எனின் அப்பொழுதே இந்நிலத்துநிலை பெற்ருற் போன்ற செல்வர் தம் குடியொடும் மாய்வர்.

காப்பற்கு அருமையான உயர்ந்த விரதங்களையுடையார் வெகுண்டால் அவர்தம் ஆற்றலினால் இந்திரனும் இடையே தன்பதம் இழந்து கெடுவான்.

சிறந்து அமைந்த தவத்தையுடையார் வெகுண்டால் அவரால் வெகுளப்பட்டார் மிகச் சிறந்த சார்பினை உடையவராயினும் அதனால் உய்யார்.

(ஈ) "கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்"
—இவ் உவமையை விளக்கிப் பொருளுடன் பொருத்திக் காட்டுக.

தானே வரக்கூடியதான கூற்றுவனை வருவதற்கு முன்னரே கைகாட்டி அழைப்பதைப் போன்றது என்பது இதன் பொருள். மூவகை ஆற்றலும் உடையார்க்கு அவ்வாற்றல் இலாதார்தாம் முற்பட்டு இன்னாதவற்றைச் செய்தல் தம் உயிர்க்கு இறுதி தரும் என்ற கருத்தை விளக்க இவ் உவமை வருவிக்கப்பட்டது. ஆற்றல் இலாதார் ஆற்றலுடையார்க்குத் தீமை செய்வதற்குக் கூற்றுவனைக் கைகாட்டி அழைப்பது உவமையாகும்.

"கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்"

என்னும் இப்பாடல் இகழ்ச்சிக் குறிப்பிற்கு எடுத்துக் காட்டாகும்.

28. [அ] 'பெண்வழிச் சேறல் என்றால் என்ன? அஃது எங்ஙனம் கடியப்பட்டது?

ஆடவன் தன் வழி ஒழுகற் பாலளாய இல்லாள் வழியே தான் ஒழுகுதல் பெண் வழிச்சேறல்எனப்படும்.

இன்பம் காரணமாக ஆடவர் தம் மனையாளை விரும்பி அவள் தன்மையராய் ஒழுகின் தமக்கு இனிய துணையான அறத்தை அடையார்; இனி அப்பொருள் செய்தலை முயல்வார். அதற்கு இடையீடென்று இகழும் பொருளும் அவ்வின்பமே.

தன் ஆண்மையைவிட்டு மனையாளின் பெண்மையை விரும்புகின்றவன் பெற்றுள்ள செல்வம் இவ்வுலகத்து ஆண்பாலர்க்கெல்லாம் பெரியதோர் நாண் உண்டாகத் தனக்கும் நாணுதலைக் கொடுக்கும்.

ஒருவன் தன் இல்லாளிடத்துத் தாழ்வதற்குக் காரணமாகிய அச்சம் அஃதில்லாத நல்லவரிடத்துச் செல்லுகின்றபோது அவனுக்கு எக்காலத்தும் நாணுதலைக் கொடுக்கும்.

தன் மனையாளுக்குப் பயந்து ஒழுகும் மறுமைப் பயன் இல்லாதவனுக்கு வினையை ஆளும் தன்மை உண்டான விடத்தும் நல்லோரால் கொண்டாடப் படாது.

தன் மனையாளுக்கு அஞ்சுகின்றவன் தான் தேடிய பொருளே யென்றாலும் அதனால் நல்லவர்க்கு நல்லன செய்வதற்கு எக்காலத்தும் அஞ்சுவான்.

தம் இல்லாளின் மூங்கிலைப் போன்ற தோளுக்கு அஞ்சுகின்றவர் வீரத்தால் துறக்கம் அடைந்த தேவரைப்போல இவ் உலகத்தில் வாழ்ந்தாலும் ஆண்மையிலாதவரே யாவர்.

தனது இல்லாளின் ஏவல் தொழிலைச் செய்து திரிகின்றவனின் ஆண் தன்மையைக் காட்டிலும் நாணினை உடைய அவளது பெண் தன்மையே மேம்பாடு உடையது.

தாம் வேண்டியவாறின்றித் தம் மனையாள் வேண்டியவாறு ஒழுகுகின்றவர் தம்முடன் நட்புச் செய்தார் அடைந்த குறையை முடிக்கமாட்டார்; அஃதன்றியும் மறுமைக்குத் துணையான அறத்தையும் செய்யார்.

அறச் செயலும் அதனை முடிப்பதற்கு ஏதுவான பொருட் செயலும் இவ்விரண்டின் வேறாய இன்பச் செயலும் தம் மனையாளுக்கு ஏவல் செய்வாரிடம் உளவாகா.

கருமச் சூழ்ச்சியினிடத்துச் சென்ற உள்ளத்தையும் அதனிலாய செல்வத்தையும் உடைய வேந்தர்க்கு

மனையாளைச் சேர்தலால் விளையும் பேதமை எக்காலத்தும் உண்டாகாது.

[ஆ] "பெண் ஏவல் செய்வார் கண் இல்'' —எவை?

அறச் செயலும் அதனை முடிப்பதற்கு ஏதுவாகிய பொருட் செயலும் இவ்விரண்டின் வேருன இன்பச் செயலும் தன் மனையாளுக்கு ஏவல் செய்வாரிடம் உளவாகா.

29 [அ] வரைவின் மகளிரின் சொல்லும் செயலும் பொய் என்பது எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டது?

ஒருவனை அன்பு பற்றி விரும்பாது பொருள் பற்றி விரும்பும் மகளிர் அப்பொருள் தம் கைக்குக் கிட்டும் துணையும் தாம் அன்பு காரணமாக விரும்பினராகச் சொல்லும் இனிய சொல் அவனுக்குப் பின்னர்த் துன்பத்தையே நல்கும்.

ஒருவனிடமுள்ள பொருளை அளந்தறிந்து அதனை அடைவது வரைத் தன் பண்புடைமையினைச் சொல்லும் பண்பற்ற மகளிரின் ஒழுகலாற்றினை ஆராய்ந்தறிந்து அவரைப் பொருந்தாது விடவேண்டும்.

பொருள் கொடுப்பவரை விரும்பாது பொருளையே விரும்புகின்ற பொது மகளிரின் பொய்மை வாய்ந்த முயக்கம், பிணமெடுப்பார் இருட்டறையில் முன்னர் அறியாத பிணத்தைத் தழுவிஞற் போன்றதாகும்.

இங்ஙனம் வரைவின் மகளிரின் சொல்லும் செயலும் பொய் என்று எடுத்துரைக்கப்பட்டது.

[ஆ] வரைவின் மகளிரை உயர்ந்தோர் தீண்டார் என்பது எங்ஙனம் கூறப்பட்டது?

இன்பம் என்ற பொருளை இழந்து பொருள் என்ற பொருளை விரும்பும் மகளிரின் புன்மை வாய்ந்த நலத்தை அவளுடன் கூடிய பொருளை ஆராய்ந்து செய்யும் அறிவினையுடையார் தீண்டார்.

மதி நலத்தால் சிறந்த அறிவினையுடையவர் பொருள் கொடுப்பார்க்கெல்லாம் பொதுவாகிய ஆசையினையுடைய மகளிரின் புல்லிய நலத்தைத் தீண்டார்.

ஆடல், பாடல், அழகுகளால் களித்துத் தம் புல்லிய நலத்தை விலைகொடுப்பார் யாவரிடமும் பரப்பும் மகளிரின் தோளினை அறிவொழுக்கங்களாலாய தம் புகழை உலகத்தில் பரப்புவதற்குரிய உயர்ந்தோர் தீண்டார்.

[இ] வரைவின் மகளிரைச் சேர்வார் இழிந்தோர் என்று எங்ஙனம் கூறப்பட்டது?

மனத்தால் பிறவற்றை விரும்பி அதன் காரணமாகக் கொடுக்கின்றவர்களை மெய்யினால் புணரும் மகளிர் தோள்களை நிறையால் திருந்திய நெஞ்சம் இல்லாதவர் தோய்வர்.

உருவு, சொல், செயல் ஆகியவற்றால் வஞ்சிப்பதில் வல்ல மகளிரின் முயக்கத்தை அதனை ஆராய்ந்தறியும் அறிவுடையார் அல்லார்க்கு அணங்கின் தாக்கு என்று கூறுவர்.

உயர்ந்தோர் இழிந்தோர் என்று பாராது விலை கொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரின் மெல்லிய தோள்கள், அத்தவற்றினை அறியும் அழிவற்ற கீழ் மக்கள் புகுந்து அழுந்துகின்ற நரகமாகும்.

புணர்தலும் புணராமையும் என்று கூறப்பட்ட இருவகையான மனத்தையுடைய மகளிரும், கள்ளும், சூதும் ஆகிய இம்மூன்றும் திருமகளால் துறக்கப்பட்டார்க்கு நட்பாகும்.

இங்ஙனம் வரைவின் மகளிரைச் சேர்வார் இழிந்தோர் என்பது கூறப்பட்டது,

(ஈ) "இருட்டறையில் ஏதில் பிணந்தழீ இயற்று" — இதனை விளக்கிப் பொருளுடன் பொருத்திக் காட்டுக.

இருட்டறையில் முன்னர் அறியாத பிணத்தைப் பிணமெடுப்பார் தழுவினாற்போலும் என்பது இதன் பொருள். பொருள் கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் வரைவின் மகளிரின் பொய்மையையுடைய முயக்கம் இத்தகையதே என்னும் கருத்து இதனால் விளக்கப்பட்டது. பொருட்கு முயங்கும் மகளிர் கருத்தையும் செயலையும் ஆராயாது சாதியும் பருவமும் பொருந்தாத ஒருவனை முயங்குகின்றபோது அவர் தம் குறிப்புக் கூலிக்குப் பணத்தை எடுப்பார் காணப்படாத ஓர் இடத்தில் இயைபில்லாத ஒரு பிணத்தை எடுக்கின்றபோது அவர் தம் குறிப்புடன் ஒக்கும். பொருள் கருதி முயங்கும் வரைவின் மகளிரின் பொய்மைவாய்ந்த முயக்கத்திற்கு, பிணமெடுப்பார் இருட்டறையில் முன்னர் அறியாத பிணத்தைத் தழுவியது உவமையாகக் கூறப்பட்டது.

[உ] திருநீக்கப்பட்டார் தொடர்பு யாவை?

ஒருவனுடன் புணர்கின்றபோது புணர்தலும் புணராமையுமாகிய இரு திறப்பட்ட மனத்தையுடைய மகளிரும், குடித்தால் அறிவை மயக்கும் கள்ளும், சூதும் திருமகளால் துறக்கப்பட்டவர்க்கு நட்பாகும்.

30. [அ] "கள் உண்ணாமை" என்னும் அதிகாரத்துள் கூறப்பட்ட கருத்துக்களை தொகுத்து எழுதுக.

கள்ளின்மேல் விருப்பம் கொண்டொழுகும் அரசர் எக்காலத்தும் பகைவரால் அஞ்சப்படார்; அன்றியும் முன்னர்ப் பெற்று நின்ற புகழையும் இழப்பர்.

அறிவுடையார் அறிவிலார்க்கு ஏதுவான கள்ளை உண்ணாதொழிக; உண்ண வேண்டுவார் உளர் என்றால் நல்லோரால் எண்ணப்படுதலை வேண்டாதார் உண்க.

தாயின் முகத்தேயும் கள்ளுண்டு களித்தல் துன்பம் தரும்; அவ்வாறிருக்கச் சான்றோர்க்கு முன்னால் கள்ளுண்டு களித்தல் என்ன பயனைத் தரும்? ஒரு பயனையும் தராது.

கள் என்று கூறப்படுகின்ற யாவரும் இகழும் மிக்க குற்றத்தையுடையவரை நாண் என்று கூறப்படும் நல்லாள் பார்ப்பதற்கு அஞ்சி அவர்க்கு எதிர் முகமாவாள்.

ஒருவன் விலைப் பொருளைக் கொடுத்துக் கள்ளால் தனக்கு மெய் மறப்பினைக் கொள்ளுதல் அவனது பழவினைப்பயனாகிய செய்வதறியாமையைத் தனக்குக் காரணமாக உடையதாகும்.

அறிவின்மையால் உறங்கினவர்கள் செத்தவரைக் காட்டிலும் வேற்றுமையுடையரல்லர். அங்ஙனமே கள்ளுண்பார் நஞ்சுண்பாரின் வேற்றுமை உடையாரல்லர்.

கள்ளை மறைந்து உண்டு அக்களிப்பால் தம் அறிவு தளர்கின்றவர் உள்ளூரில் வாழ்கின்றவர்களால் உள் நிகழ்கின்றதை உயர்ந்துணர்ந்து எக்காலத்தும் நகுதல் செய்யப்படுவர்.

மறைந்து கள்ளினை உண்டு வைத்து, உண்ணாத பொழுது யான் கள்ளுண்டறியேன் என்று தன் ஒழுக்கங்களைக் கூறுதலை விடுக; அதனை உண்டபொழுதே மற்றவர் அறிந்தால் இழுக்காகும் என்று முன்னர் நெஞ்சத்தில் மறைத்த குற்றமும் முன்னையளவின் மிகுந்து வெடுப்படும். ஆதலால் அங்ஙனம் கூறுதே.

கள்ளுண்டு களித்தவன் ஒருவனை இஃது ஆகாது என்று மற்றொருவன் காரணம் காட்டித் தெளிவித்தல் நீருக்குள் மூழ்கிய ஒருவனை மற்றொருவன் விளக்கினால் தேடுவதைப் போன்றதாகும்.

கள் உண்கின்றவன் ஒருவன் தான் அதனை உண்ணாது தெளிந்திருந்த பொழுதில் உண்டு களித்த மற்றவனைக் காண்பானல்லவா? காண்கின்றபோது தான் கள்ளுண்டபோது உண்டாகும் சோர்வினை அவன் சோர்வினால் அஃதும் இத்தகையது என்று கருதமாட்டான் போலும்!

(ஆ) "துஞ்சினர் செத்தாரின் வேறு அல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார்கள் உண்பவர்"

இதற்குப் பொருந்தும் உரை எது? பொருந்தா உரை எது? ஏன்?

உறங்கினர் செத்தாரினும் வேறு ஆதல் உடையரேனும் அக்காலத்தில் அறிவில்லாமையால் வேறு எனப்பட்டார்; அங்ஙனமே கள்ளுண்பவர் நஞ்சு உண்பவரினும் வேறு ஆதல் உடையரேனும் எக்காலத்தும் அறிவின்மையால் வேறு எனப்படார்; அவர் தாமே யாவர். இதுவே பொருந்தும் உரையாகும்.

இச் செய்யுளை நிரல் நிரையாக்கி, "திரிக்கப்படுதலால் உறங்கினரும் நஞ்சுண்பாரும் ஒப்பர்; கைவிடப்படுதலான செத்தாரும் கள் உண்பாரும் ஒப்பர்," என்றும் உரை கூறுவர். அதிகாரப் பொருள் பின்னதே; அங்ஙனமிருக்க யாதும் இயைபில்லாத நஞ்சுண்பார்க்கு உவமை கூறுதல் பயனற்றதே; மேலும் இச்செய்யுளின் சொற்கிடக்கை நிரல் நிரைக்குப் பொருந்தாது. ஆதலால் இப்பொருளும் பொருந்தாது என்று உணர வேண்டும்.

(இ) "கீழ் நீர்க் குளித்தானைத் தீத்துரீ இயற்று"
—இதனை விளக்கிப் பொருளுடன் இணைக்க.

நீருள் மூழ்கியவன் ஒருவனை மற்றொருவன் விளக்கினால் தேடுவதைப் போன்றது என்பது இதன் பொருள். கள்ளுண்டு களித்தவன் ஒருவனை மற்றொருவன் இஃது ஆகாது என்று காரணம் காட்டித் தெளிவித்தல் நீருக்குள் மூழ்கியவன் ஒருவனை மற்றொருவன் விளக்கினால் தேடுதலைப் போன்றதாகும். கள்ளுண்டு களிப்பவனைக் காரணம் காட்டித் தெளிவித்தலுக்கு நீருக்குள் மூழ்கியவனை மற்றொருவன் விளக்கினால் தேடுதல் உவமை. நீருள் விளக்குப் புகாது; அதுபோல் கள்ளுண்பான் தெளியான் என்பது கருத்து.

**31.** (அ) "தூண்டிற் பொன்மீன் விழுங்கியற்று" இவ் உவமையை விளக்கிப் பொருளுடன் பொருத்திக் காட்டுக.

இரையினால் மறைத்த தூண்டிலிரும்பினை இரை என்று கருதி மீன் விழுங்கினாற்போலும் என்பது இதன் பொருள். ஒருவன் தான் வெல்லும் ஆற்றல் உடையவனாயினும் சூதாடலை விரும்பலாகாது; வெற்றிபெற்ற பொருளும் முதலில் மகிழ்ச்சியைத் தந்து பின்னர்ச் சூதாடுவார் அழுந்துமாறு துன்பத்தைத்தரும் என்னும் கருத்து இதனால் விளக்கப்பட்டது. சூதாடிப் பெற்ற பொருள் துன்பம் தருவதற்கு தூண்டிலிரும்பில் வைத்த இறையை விழுங்கித் தூண்டிலை விழுங்கும் மீன் துன்பப்படுவது உவமையாகும்.

(ஆ) "<u>ஐந்தும்</u> அடையாவாம் ஆயம் கொளின்"
—இங்குக் கூறப்பட்ட தொகைச் சொல் எவற்றைக் குறித்தது? விளக்குக.

இங்குக் கூறப்பட்ட தொகைச் சொல் உடை செல்வம், ஊண், ஒளி; கல்வி இவ் வைந்தையும் குறித்தது. அரசன் சூதினைத் தனக்கு விளைதத் தொழிலாக விரும்புவானாயின் அவனை உடையும் செல்வமும் ஊனும் புகழும் கல்வியும் சாராவாம்.

(இ) சூது வயப்பட்டார் உறும் துன்பம் யாது?

ஒருவன் தான் வெல்லும் ஆற்றல் உடையவனாயினும் சூதாடலை விருப்பலாகாது; சூதினால் வெற்றி கொண்டு பொருள் பெறுவார் உளர் எனில் அவ்வாறு வென்ற பொருளும் இரையினால் மறைத்த தூண்டி லிரும்பினை இரை என்று கருதி மீன் விழுங்கினாற் போன்றதாகும்.

ஒரே பொருளை முதற்கண் பெற்று இன்னும் பல பெறுதும் என்னும் அவாவினால் நூறு பொருள்களை இழந்து வறியவராகும் சூதர்க்கும் பொருளால் அறமும் இன்பமும் பெற்று வாழ்கின்றதோர் வழி உண்டாகுமோ? உண்டாகாது.

உருள்கின்ற கவற்றில் பட்ட ஆயத்தை இடை விடாது கூறிச் சூதாடுவானாயின் அரசன் ஈட்டிய பொருளும் அவனது பொருள் வருவாயும் அவனை விட்டுச் சென்று அவனது பகைவரிடத்தே தங்கும்.

தன்னை விரும்பியவர்க்கு முன்னர் இல்லாத பல துன்பங்களையும் உண்டுபண்ணி இருக்கின்ற புகழையும் கெடுக்கின்ற சூதினைப் போன்று வறுமைத் துன்பத் தைக் கொடுக்க வல்லது வேறொன்று மில்லை.

கவற்றினையும் அஃது ஆடுங்களத்தினையும் அவ் வாறு ஆடுதற்கு வேண்டிய கைத்தொழிலினையும் மேற் கொண்டு கைவிடாத வேந்தர் படைக்காலத்துத் தாம் உளராகியே இலராகி ஒழுகினராவர்.

(ஈ) சூதானது சிறுமை பல செய்து அவற்றால் இருமை யும் கெடுக்கும் என்பது எங்ஙனம்?

சூது என்று சொல்லப்பட்ட முகமூடியால் மூடப் பட்டவர் இம்மையில் தம் வயிறு நிரம்பப் பெறார்; மறுமை யிலும் நிறையத் துன்பத்தை அடைவர்.

அறம் பொருள் இன்பம் ஆகியவற்றுக்கு உரித் தான காலத்தை ஓர் அரசனானவன் சூதாடு களத்தின் கண்ணே கழிப்பானாயின் அஃது அவனுக்குத் தொன்று தொட்டுவந்த அவனது செல்வத்தையும் நற்குணங்களை யும் அழிக்கும்.

சூதானது தன்னைப் பயின்றவனின் பொருளைக் கெடுத்துப் பொய்யை மேற்கொள்ளச் செய்து உள்ளத் தில் எழுகின்ற அருளைக் கெடுத்து இங்ஙனம் அவனை நிறையத் துன்பம் உறச் செய்யும்.

அரசன் சூதினைத் தனக்குத் தொழிலாகக் கொள் வானாயின் அஃது அவனிடத்திலுள்ள உடை, செல்வம், ஊன், புகழ், கல்வி ஆகியவற்றைக் கெடுத்துவிடும்.

32. [அ] உடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு— எது?

ஒருவன் தான் முன் உண்டது அவற்ருல் பின்னர் உண்பதனை அளவு அறிந்து அவ்வளவிற்கு ஏற்ருற் போல் உண்ணவேண்டும். மிகப் பலவாகில் பிற உடம்புகளில் பிழைத்துப் பெறுவதற்கு அரிய இந்த மனித உடம்பைப் பெற்ருன் அதனை நெடுங்காலம் கொண்டு செலுத்தும் நெறி அதுவேயாகும்.

(ஆ) "இழிவு அறிந்து உண்பான் கண் இன்பம்போல்" --இவ்உவமையை விளக்கிப் பொருளுடன் பொருத்திக் காட்டுக:

தன் பசிக்குச் சிறிது குறைவான உணவினை நன்று என்று அறிந்து உண்பவனிடத்தில் இன்பமானது நீங்காமல் நிலை பெற்றிருப்பதைப் போன்று என்பது இதன் பொருள். அதுபோல் மிகப் பெரிய உணவை விழுங்குவானிடத்தில் நோய் நீங்காது நிலை நிற்கும் என்னும் கருத்து விளக்கப்பட்டது. மிகப் பெரிய உணவை உண்பவனிடத்தில் நோய்நிலைபெற்று நிற்றலுக்கு, குறைவாக உண்பவனிடத்தில் இன்பம் நிலை பெற்று நிற்றல் உவமையாகக் கூறப்பட்டது. ஒருவன் தான் உண்ணவேண்டிய அளவைவிடச் சிறிது குறைய உண்டால் வாதம் முதலான நோய்கள் தத்தம் நிலையில் திரியாமையால் மனம் மொழி மெய்கள் அவன் வயத்தவாகி அறம் முதலிய நான்கையும் அவன் அடைவான்.

(இ) 1. "மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று"

2. "அற்றது அறிந்து கடைப் பிடித்து மாறல்ல துய்க்க துவரப் பசித்து"

"உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச் செல்வான் என்று
அப்பாற் நாற்கூறே மருந்து"

கோடிட்ட சொற்களை நன்கு விளக்குக.

(1) ஆயுள் வேதமுடையரால் வாதம் முதலாக எண்ணப்பட்ட மூன்று நோயும் துன்பம் செய்யும். நூலோர் நோயினை வாதப்பகுதி, பித்தப்பகுதி, ஐப்பகுதி என்று மூன்ருகப் பிரித்தனர். உணவும் செயல்களும் ஒருவனது உடலின் பகுதிக்கு ஒத்த அளவு அன்றி அதனைவிட மிகுந்தாலும் குறைந்தாலும் இம்மூன்று நோயும் உண்டாகும் என்பது. சுவை வீரியங்களாலும் அளவாலும் பொருந்துதல் உணவு ஒத்தலாகும். மனம் மொழி மெய்களால் செய்யும் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னே ஒழிதல் செயல்களை ஒத்தலாகும். இதனுல் உடலுக்கு இயல்பான நோய் மூன்று வகைப்படும் என்றும் அவை துன்பஞ் செய்கின்ற காரணம் இருவகைப்படும் என்றும் அறியலாம்.

(2) மாறல்ல=மாறு கொள்ளாமை. அது உண்கின்றவனின் பகுதியுடன் மாறு கொள்ளாமையும் கால இயல்போடு மாறு கொள்ளாமையும் சுவை வீரியங்களாலும் மாறுகொள்ளாமையுமாகும். அவை வாத பித்தங்களின் பகுதிகளுக்கு ஏற்காதவற்றைச் செய்வன வாதலும் பெரும்பொழுது சிறுபொழுது என்னும் காலவேறுபாடுகளுள் ஒன்றற்கானவை மற்ருென்றுக்காகமையும் தேனும் நெய்யும் தம்முள் அளவொத்து நஞ்சாதல் போல்வனவும் என்பர் பரிமேலழகர். துவரப்பசித்து= மிகப் பசித்து முன் உண்டது அற்ருலும் அதன் பயனுகிய இரதம் அருது; ஆதலால் அதுவும் அறல்வேண்டி 'துவரப்பசித்து' என்ருர்.

(3) பிணிக்கு மருந்தாவது பிணியுற்ருன், அப்பிணியைத் தீர்ப்பான். தீர்ப்பதற்குரிய மருந்து அதனைத் தவருமல் செய்வான் என்று கூறப்பட்ட நான்கு பகுதியையுடைய நான்கு திறத்தையுடையது. இங்குக கூறப்பட்ட நான்கும் ஒவ்வொன்றும் நான்காகப் பிரியும். பொருளுடைமை, மருத்துவன் வழிநிற்றல், நோய் நிலையை உணர்த்துதல் வன்மை, மருத்துவத் துன்பத்தைப் பொறுத்தல், இவை உற்றவன் வகைநான்காயின. நோய்கண்டு அஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டுக் கற்ற

கல்வியும் நுண்ணறிவும் உடைமை, பலகாலும் தீர்த்து வருதல், மனமொழி மெய்கள் தூயவாதல் இவை தீர்ப்பான் வகை நான்காயின. பலபிணிகட்கும் ஏற்றல் சுவை வீரியம் விளைவாற்றல்களான் மேம்படுதல், எளிதில் பெறப்படுதல், பகுதியுடன் பொருந்துதல் இவை மருந்தின்வகை நான்காயின. நோயாளினிடத்து அன்புடைமை, மனமொழி மெய்கள் தூயவாதல், சொல்லியவாறே செய்யும்திறமை, அறிவுடைமை இவை இயற்றுவான் வகை நான்காயின. இவை அனைத்தும் ஒன்றுகூடியவிடத்தே பிணி தீரும். ஆதலால் இத்தொகுதியையும் மருந்து என்றார்.

(ஈ) "மருந்து" என்னும் அதிகாரத்துள் கூறப்பட்டன யாவை?

உண்ணும் உணவும் செய்யும் செயல்களும் ஒருவனது பகுதிக்கு ஒத்த அளவின்றி அதனைவிட மிகுந்தாலும் குறைந்தாலும் ஆயுள் வேதமுடையவரால் வாத முதலாக எண்ணப்பட்ட மூன்று நோயும் அவனுக்குத் துன்பஞ் செய்யும்.

ஒருவன் தான் முன் உண்டது தீர்ந்து விட்டதனை குறிகளால் தெளிவாக அறிந்து பின்னர் உண்பானாயின் அவனது உடம்புக்கு மருந்து என்று வேறு வேண்டியதில்லை.

யாக்கையுட் சிறந்த மனித உடம்பைப் பெற்றவன் அதனை நீண்டகாலம் கொண்டு செலுத்தும் வழியாவது முன்னுண்டது தீர்ந்துவிட்டால் பின்னுண்பதனை அளவு அறிந்து உண்பதேயாகும்.

ஒருவன் தான் முன்னர் உண்டது அற்றபடியை அறிந்து பின் மிகப் பசித்து உண்ணுகின்றபொழுது வேறுபடாத உணவுகளைக் குறிக்கொண்டு உண்ண வேண்டும்.

மூவகை மாறுபாடும் இல்லாதஉணவைத் தன் உள்ளம் வேண்டிய அளவினால் அன்றி நோய்வராத அளவினால் ஒருவன்உண்பானானால் அவனது உயிர்க்குப் பிணிகளால் துன்பம் உண்டாகாது.

பசிக்குக் குறைவான உணவை நன்று என்று அறிந்து அளவுப்படி உண்பவனிடத்தில் இன்பமானது நீங்காது நிலை நிற்பதைப் போன்று மிகவும் அதிகமான உணவை விழுங்குகின்றவனிடத்தில் நோய் நீங்காது நிலை நிற்கும்.

தன் பகுதியும் அதற்குத் தகுந்த உணவும் காலமும் ஆராயாது வேண்டிய தீயின் அளவன்றி மிகுதியாக ஒருவன் உண்பானாயின் அவனிடத்தில் எல்லையற்ற நோய்கள் வளரும்.

மருத்துவன் நோயாளனிடத்தில் நிகழ்கின்ற நோயை அதன் குறிகளால் இன்னது என்று துணிந்து பின் அந்நோய் வருவதற்குக் காரணத்தை ஆராய்ந்து அதனைத் தீர்க்கும் உபாயத்தினை அறிந்து அதனைச் செய்யும் வழியினைப் பிழையாமல் செய்யவேண்டும்.

மருத்துவ நூலைக்கற்ற மருத்துவன் பிணிக்கு ஏற்ற உபாயத்தினைச் செய்யுங்கால் நோயாளனின் அளவினையும் அவனிடம் நிகழ்கின்ற நோயின் அளவினையும் தன் செயலுக்கு ஏற்ற காலத்தினையும் அந்நூல் வழியில் நோக்கி அவற்றுடன் பொருந்தச் செய்யவேண்டும்.

நோய்க்கு மருந்தாவது நோயுற்றவன், அதனைத் தீர்க்கும் மருத்துவன், அவனுக்குக் கருவியாகிய மருந்து அதனைத் தவறாது செய்கின்றவன் என்று கூறப்பட்ட நான்கு பகுதியையுடைய நான்கு திறத்தது.

———

## திருக்குறள் (ஒழிபியல்)

33. (அ) உயர்குடியில் பிறந்தாரின் குணங்கள் யாவை?

எண்ணமும் சொல்லும் செயலும் தம்முள் மாருத செம்மையும் பழி பாவங்கட்கு வெட்கப்படுதலும் குடிப் பிறந்தாரிடமின்றிப் பிறரிடம் இயற்கையாக உளவாகா.

உயர்ந்த குடியின்கண் பிறந்தார் தமக்கு உரிய நல்லொழுக்கம், மெய்மை, நாணம் எனப்பட்ட மூன்றனிடத்தும் வழுவார்.

எக்காலத்திலும் திரிபில்லாத உயர்ந்த குடியின் கண் பிறந்தவர்க்கு வறியாரிடத்து முகமலர்ச்சியும் உள்ளனவற்றைக் கொடுப்பதும், இன்சொற் கூறுதலும் இகழாமையும் ஆகிய இந்நான்கும் உரிய கூறு என்று சொல்லுவர்.

பலவாக அடுக்கிய கோடி அளவிற்ருன பொருளைப் பெற்ருராயினும் உயர்ந்த குடியின் கண் பிறந்தார் தம் ஒழுக்கம் குன்றுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யார்.

பழங்கால முதல் சிறப்பு அமைந்த குடியின் கண் பிறந்தவர் தாம் கொடுக்கின்ற பொருள் முன்பிருந்ததைவிடச் சுருங்கிய காலத்தும் தம் பண்புடைமையினின்றும் நீங்கார்.

வறுமை அடைந்தவிடத்தும், குற்றமற்ற குடிமரபுடனும் ஒத்து வாழ்வோம் என்று கருதி வாழ்வோர் வஞ்சனை செய்தலைப் பொருந்தி அமைவிலவான தொழில்களைச் செய்யமாட்டார்கள்.

(ஆ) குடிப்பிறந்தார் வேறுபட்ட விடத்து உண்டாகும் இழுக்கு யாது?

உயர்ந்த குடியின்கண் பிறந்தாரிடத்திலே உண்டாகும் குற்றம் சிறிதாயினும் விசும்பினிடத்து உள்ள மதியினிடம் காணப்படும் மறுவைப் போல் ஓங்கித் தோன்றும்.

குலத்தால் நலம் உடையவனுய் வருகின்றவனிடத்தில் ஈரமின்மை தோன்றினுல் அவனது உயர்குலப் பிறப்பின் கண்ணே உலகத்தார் சந்தேகப்படுவர்.

(இ) குடிமைக்கு வேண்டியதென்ன?

நிலத்தின் தன்மையை அதனிடத்தில் முளைத்த முளையானது காட்டும். அதுபோலக் குலத்தின் இயல்பை அதன்கண் பிறந்தாரின் வாய்ச் சொல் காட்டும்.

ஒருவன் தனக்கு நலனுடைமையை விரும்புவானாயின் தான் நாணுடையவனாதலை வேண்டுக; குலனுடைமையை விரும்புவானாயின் பணியப்படுவார் யாவரிடத்திலும் பணிதலை வேண்டுக.

(ஈ) "இம் மூன்றும் இழுக்கார் குடிப் பிறந்தார்"
"நான்கும் வகை என்ப வாய்மைக் குடிக்கு"
—இங்குள்ள தொகைச் சொற்கள் எவற்றைக்குறித்தன?

மூன்று என்னும் தொகைச் சொல் ஒழுக்கம், வாய்மை, நாண் ஆகியவற்றைக் குறித்தது. உயர்ந்த குடியின்கண் பிறந்தார் நல்லொழுக்கமும் வாய்மையும் நாணும் எனப்பட்ட மூன்றனிடத்தும் வழுவார்.

நான்கு என்னும் தொகைச் சொல் நகை, ஈகை, இன்சொல், இகழாமை ஆகியவற்றைக் குறித்தது. எக்காலத்தும் திரிபற்ற உயர்ந்த குடியின் கண் பிறந்தார்க்கு வறியார் தம்மிடம் வந்தால் முக மலர்ச்சியும், அவர்க்குத் தம்மிடம் இருப்பனவற்றைக் கொடுத்தலும், இனிய சொற்களைக் கூறுதலும், இகழாமையும் ஆகிய நான்கும் உரிய கூறு என்று கூறுவர்.

(உ) "விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து"
—இவ் உவமை நயத்தை விளக்கிப் பொருளுடன் பொருத்திக் காட்டுக.

வானிலுள்ள மதியினிடம் காணப்படும் மறுவைப் போல் உயர்ந்து என்பது இதன் பொருள். உயர்ந்த குடியின்கண் பிறந்தாரிடத்தில் குற்றம் ஏற்படுமானால் அது விசும்பினிடத்துள்ள மதியினிடம் காணப்படும் மறுவைப்போல யாவரும் காணுமாறு விளங்கித் தோன்றும் என்பது இதனால் விளக்கப்படுகிறது. உயர் குடிப் பிறந்தாரிடம் காணப்படும் குற்றத்திற்கு மதியினி

டம் காணப்படும் மறு உவமையாயிற்று. உயர்குடிக்கு ஏற்றாற்போல் விசும்பும், அக்குடியின்கண் பிறந்த நல்லோர்க்கு மதியும், அவரிடம் ஏற்படும் குற்றத்திற்கு மதியினிடமுள்ள களங்கமும் பொருத்தமான உவமைகளாயின. மதியின் களங்கம் அனைவர்க்கும் தெரிவது போல் பெரியோரிடமுள்ள குற்றமும் அனைவர்க்கும் புலப்படும்.

(ஊ) "நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்"

இச் செய்யுளின்கண் பயின்றுள்ள அணியை விளக்குக.

நிலத்தின் இயல்பை அதனிடத்து முளைத்த முளையானது காட்டும்; அதுபோலக் குலத்தின் இயல்பை அதனிடத்துப் பிறந்தாரின் வாய்ச்சொல் காட்டும் என்பது இதன் பொருள். இச்செய்யுளில் 'நிலத்தில் கிடந்தமை கால் காட்டும் என்று முதற்கண் வைத்த பொருட்டு நிகராகின்ற பொருளைப் பின் வைத்துள்ளமையால் இது பொருள் உவமைக்கு உதாரணமாகும். இதனை எடுத்துக்காட்டு உவமைஅணி என்றும் கூறுவர்.

34. (அ) "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்"

இச் செய்யுள் என்ன அணியாகும்?

தன் மயிர்த் திரளில் ஒரு மயிர் நீங்கினும் உயிர் வாழாத கவரிமானைப் போன்ற மானமுடையவர் உயிர் நீக்கத்தால் மானம் எய்தும் எல்லை வந்தால் அதனைத் தாங்காது இறப்பர் என்பது இதன் பொருள். உயிரும் மானமும் உடன் நில்லாமை வந்துற்றால் பின்னர்ப் போவதாய உயிரை நீத்து எக்காலத்தும் நிற்பதாய மானத்தை எய்துவர். இவ் உவமையானது அவர்க்கு அஃது இயல்பு என்பதை விளக்கி நிற்பதால் இச் செய்யுள் பண்புபற்றி வந்த உவமை அணியாகும்.

[ஆ] 'தலையின் இழிந்த மயிர்' — இவ் உவமை எதனை விளக்கிற்று?

தலையை விட்டு அதனில் நின்றும் வீழ்ந்த மயிர் என்பது பொருள். உயர் குடியில் பிறந்த சான்றோர் தம் உயர்ந்த நிலையை விட்டு அதனின்றும் தாழ்ந்த விடத்து அவர்கள் தலையைவிட்டு அதனில் நின்றும்

வீழ்ந்த மயிரைப் போன்றவராவர் என்பது திரண்ட பொருள். மயிரானது தலையில் இருந்தால் தலை அழகிது: நீங்கினுல் தலையின் அழகும்போகும்; மயிரும் சிறப்பு நீங்கி இகழப்படும். அதுபோல் உயர் குடிப்பிறந்தோர், மானம் உடையவராயின் பெருமையடைவர்; மானம் இழந்தவராயின் தலையினின்றும் நீக்கப்பட்ட மயிரைப் போல் இகழப்படுவர். குடிப்பிறந்தார் உயர்ந்த நிலையை விட்டும் தாழ்கின்ற நிலையை விளக்க இவ் உவமை எடுத்தாளப்பட்டது.

[இ] "மானம்" என்னும் அதிகாரத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் யாவை?

செய்யாத விடத்துத் தாம் அமையாத சிறப்பினை உடையவே யெனினும் தம்குடிப் பிறப்புத் தாழ்வதற்குக் காரணமான செயல்களை ஒருவன் செய்யலாகாது.

புகழுடன் மானத்தையும் நிறுத்த விரும்புவார் புகழீட்டுமிடத்துத் தம் குடிப் பண்புக்குப் பொருந்தாத இளிவரவுகளைச் செய்யார்.

குடிப்பிறந்தார் மிகுதியான செல்வம் உண்டான போது யாவரிடத்தும் பணிவு வேண்டும்; குறைந்த நல்குரவு உண்டானபோது பணியாமைவேண்டும்,

குடிப்பிறந்தார் உயர்ந்த தம் நிலையை விட்டும் தாழ்ந்த விடத்துத் தலையினின்றும் நீங்கி விழுந்த மயிரினைப் போன்றவராவர்.

தாம் தாழ்வு அடைவதற்குக் காரணமான செயல் களை ஒரு குன்றியளவு செய்தாலும் மலையைப் போல் உயர் குடியில் பிறந்தவரும் தாழ்வு அடைவர்.

மானத்தை விட்டுத் தன்னை இகழ்கின்றவரின் பின்னே ஒருவன் சென்று நிற்கும் நிலையானது இவ்வுல கில் புகழையும் பயவாது; புத்தேளுலகத்திலும் செலுத் தாது. இனி அவனுக்கு அது செய்வதுதான் யாது? ஒன்றுமில்லை.

தன்னை அவமதிப்பார்க்குப் பின்னே சென்று பொருள் பெற்று அதனுல் ஒருவன் உயிர் வாழ்வதைக் காட்டிலும் அதனைச் செய்யாது இறந்தான் என்று கூறப்படுதல் அவனுக்கு நன்ருகும்.

உயர் குடிப் பிறப்புத் தன் வலியாகிய மானம் அழிந்தவிடத்து இறப்பதைவிட்டுப் பயனில்லாத உடம்பினைக் காக்கும் வாழ்க்கை மேலும் இறவாமைக்கு மருந்தாகுமோ? ஆகாது.

தன் மயிர்க் கூட்டத்தில் ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாத கவரிமானைப் போன்ற மானமுடைய வர்கள் உயிர் நீக்கத்தால் மானத்தைப் பெறும் எல்லை வந்தாலும் உயிர் தாங்காது இறப்பர்.

தமக்குஇழிவு வந்தவிடத்துப் பொறுத்துக்கொண்டு உயிர் வாழாது உயிர் நீத்த மானமுடையாரின் புகழ்வடி வத்தை உலகத்தார் எக்காலத்தும் தொழுது துதிப்பர்.

35. (அ) "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பு ஒவ்வா
செய்தொழில் வேற்றுமையான்"—

இச்செய்யுளின் பொருள் கூறிக் கோடிட்டதொடர்களை விளக்குக.

எல்லா மக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப்பு இயல்பு ஒக்கும் என்றாலும் அவரவர் செய்யும் தொழில் களின் வேறுபாட்டால் பெருமை சிறுமை என்று கூறப் பட்ட சிறப்பு இயல்புகள் ஒவ்வாவாயின என்பது இச் செய்யுளின் பொருளாகும். தொழில் வேற்றுமை என் பது நல்லனவும், தீயனவும், இரண்டுமாயினவும் இரண் டும் அல்லாவாயினவும் ஆகிய அளவற்ற பாகுபாடு கள் வினை வயத்தால் பஞ்சபூத பரிணாமமாகிய உடலைப் பொருந்தி நின்று அதன் பயனை அனுபவித்தல் எல்லா வருணத்தார்க்கும் ஒக்கும்; ஆதலால் 'பிறப்பு ஒக்கும்' என்று கூறினார். மக்கள் அடையும் பெருமைக்கும் சிறு மைக்கும் அவரவர் செய்கின்ற தொழிற்பாகுபாடுகளே காரணம். அத்தொழில் வருணந்தோறும் யாக்கை தோறும் வேறுபடுகின்றது. ஆதலால் 'சிறப்பு ஒவ்வா' என்று கூறினர்.

(ஆ) "பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து"

— இதற்குக் கூறப்பெறும் உரைகள் யாவை?

பெருமையுடையார் சிறப்பு உண்டான காலத்தும் தருக்கதலின்றி அமைந்து ஒழுகுவர்; சிறுமை யுடையார் அஃதில்லாத காலத்தும் தம்மை வியந்து புனைவர்" என்றும், "உயர்ந்தார் தாழ்வார், தாழ்ந்தார் உயர்வர். இஃதொரு விரோதம் இருந்தவாறுதான் என்ன?" என்றும் இதற்கு உரைகள் கூறப்பட்டுள்ளன. இரண்டாவது, உலகியலை நோக்கி வியந்து கூறியதாகும்.

(இ) "பெருமை" என்னும் அதிகாரத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் யாவை?

ஒருவனுக்கு ஒளி என்பது மற்றவர்களால் செயற்கரிய செய்வோம் என்று கருதும் ஊக்க மிகுதியாகும். அவனுக்கு மாசு என்பது அச்செயலை யொழிந்து உயிர் வாழக் கடவேம் என்று கருதலாகும்.

எல்லா மக்களுயிர்க்கும் பொதுவான பிறப்பியல்பு ஒக்கும்; என்றாலும் பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பு இயல்புகள் அவற்றைச் செய்யும் தொழில்களின் வேறுபாட்டினால் ஒவ்வாவாயின.

செயற்கரிய செய்யாத சிறியோர் உயர்ந்த அமளி முதலியவற்றின்கண் இருந்தாராயினும் பெரியவராகார். செயற்கரிய செய்த பெரியார் தாழ்வான வறுநிலத்திலே இருந்தார் என்றாலும் சிறியராகார்,

கவராத மனத்தினையுடைய மகளிர் கற்பினின்றும் தவறாமல் தம்மைத் தாம் காத்துக்கொண்டு ஒழுகுதைப் போன்று பெருமைக் குணமும் ஒருவன் நிறையினின்றும் தவறாமல் தன்னைத்தான் காத்துக்கொண்டு ஒழுகினால் அவனிடத்தில் உண்டாகும்.

பெருமையுடையவர் தாம் வறியரானபோதும் மற்றவர்களால் செய்வதற்கு அரியவாய தம் செயல்களை விடாது அவை செய்யும் நெறியால் கடைபோகச் செய்தலில் வல்லவராவர்.

செயற்கரிய செய்யும் பெரியாரை வழிபட்டு அவரது இயல்பினை யாம் கொண்டுள்ளோம் என்னும் கருத்து சிறியராயின் மனத்தில் உளதாகாது.

தனக்கு ஒத்த பெரியாரிடம் அமைந்திருத்தலைச் செய்கின்ற சிறப்பும் தனக்கு ஒவ்வாத சிறியாரிடத்திலே

தோன்றுமானால் அதனை நீக்கித் தருக்கினிடத்துமிகுந்த செயலை உடையதாம்.

பெரியார் சிறப்பு உண்டான காலத்தும் தருக்கின்றி அமைந்து ஒழுகுவார்; சிறுமையுடையார் சிறப்பில்லாத காலத்தும் தம்மை வியந்து புனைவர்.

பெருமைக் குணம் என்பது காரணமுண்டான விடத்தும் அஃது இயல்பாதலை நோக்கித் தருக்கில்லாமல் இருத்தலாகும். சிறுமைக் குணம் என்பது காரணமில்லாதவிடத்தும் அதனை ஏற்றுக்கொண்டு தருக்கின் முடிவில் நின்றுவிடுதலாகும்.

பெருமையுடையார் பிறரது மானத்தையே கூறி அவமானத்தை மறைப்பர்; சிறுமையுடைார் பிறர் குணத்தை மறைத்துக் குற்றத்தையே கூறுவர்.

36. "<u>ஐந்து</u> சால்பு ஊன்றிய தூண்"

இங்குக் கூறப்பட்டுள்ள தொகைச் சொல் எவற்றைக் குறித்தது?

இங்குக் கூறப்பட்ட தொகைச்சொல் அன்பு, நாண் ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, ஆகிய ஐந்தையும் குறித்துள்ளது. இவ்வைந்தும் சால்பு என்னும் பாரத்தைத் தாங்கி நிற்கும் தூண்களாம். அன்பு=சுற்றத்தார் மேலன்றிப் பிறர் மேலும் உளதாகிய அன்பு. நாண்=பழிபாவங்கள் செய்ய நாணுதல்; ஒப்புரவு=யாரவரிடத்திலும் ஒப்புரவு செய்தல்; கண்ணோட்டம்=பழகியவரிடத்தில் இரக்கப் பார்வை உடையவராய் இருத்தல்; வாய்மை=எவ்விடத்திலும் மெய்மை கூறுதல்.

(ஆ) (1) "அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்"

(2) "கொல்லா நலத்தது நோன்மை பிறர் தீமை
கொல்லா நலத்தது சால்பு"

(3) "ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படுவார்"—

--இச்செய்யுட்களில் பயின்றுள்ள அணிகளைக் கூறுக.

(1) அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை இவ்வைந்தும் சால்பு என்னும்பாரத்தைத்தாங்கிய தூண்கள் என்பது இதன் பொருள். இக் குணங்கள் இல்லையெனில் சால்பு நிலைபெறாது; ஆகையால் இக்குணங்கள் தூணாக உருவகப்படுத்தப்பட்டன. எனவே இச்செய்யுள் ஏகதேச உருவக அணி.

(2) தவம் என்பது ஓர் உயிரையும் கொல்லாத அறத்தின்கண் பட்டது. அதுபோலச் சால்பானது பிறரது குற்றத்தைச் சொல்லாத குணத்தின்கண் பட்டது என்பது இதன் பொருள். இதில் உவமையையும் பொருளையும் அடுக்கிக் கூறியிருப்பதனால் இச் செய்யுள் எடுத்துக் காட்டு உவமையணியாகும்.

(3) சால்பு என்னும் கடலுக்குக் கரை என்று கூறப்படுவார் மற்றக் கடல்கள் கரையுள் நில்லாது காலந் திரிந்தாலும் தாம் திரியார் என்பது இதன் பொருள். சான்றாண்மைக்குப் பெருமை தோன்ற அதனைக் கடலாக உருவகப்படுத்தினார். சால்பாகிய கரையைத் தாங்கியமையால் அஃதுடையாரைக் கரை என்றார். எனவே இச் செய்யுள் ஏகதேச உருவக அணி.

(இ) "சான்றாண்மை" என்னும் அதிகாரத்துள் கூறப்பட்ட கருத்துக்கள் யாவை?

தமக்குத் தகும் என்று சான்றாண்மையை மேற்கொண்டு ஒழுகுகின்றவர்க்கு நல்லனவாகிய குணங்கள் அனைத்தும் இயல்பாய் அமைந்திருக்கும் என்பர்.

சான்றோர் நலம் என்பதுகுணங்களாலாகிய நலமே. ஏனைய உறுப்புக்களாகிய நலம் ஒரு நலத்தினும் உள்ளதன்று.

சுற்றத்தார் மேலன்றிப் பிறரிடத்து உண்டாகும் அன்பும், பழிபாவங்கள் செய்வதற்கு நாணமடைதலும் யாவரிடத்திலும் ஒப்புரவு செய்தலும், பழகியவரிடத்தில் இரக்கப் பார்வை உடையவராய் இருத்தலும், எவ்விடத்திலும் மெய்ம்மை கூறலும் என்பன சால்பு என்னும் பாரத்தைத் தாங்கிய தூண்கள் ஐந்து.

பிற அறங்களும் வேண்டியன என்றாலும் தவம் என்பது ஓர் உயிரையும் கொல்லாத அறத்தின் கண்

பட்டதாகும். அதுபோலப் பிற குணங்களும் வேண்டியன் என்றாலும் சால்பானது மற்றவரின் குற்றத்தைச் சொல்லாத குணத்தின் பாற்பட்டதாகும்.

ஒரு செயலைச் செய்து முடிப்பாரின் ஆற்றல் என்பது அதற்குத் துணையாகின்றவரைத் தாழ்ந்து கூட்டிக் கொள்ளுதலாகும்; சால்பு உடையவர் தம் பகைவரைப் பகைமை ஒழிக்கும் கருவியும் அதுவே யாகும்.

தம்மைக் காட்டிலும் உயர்ந்தவரிடத்திலே கொள்கின்ற தோல்வியை இழிந்தவரிடத்திலும் கொள்ளுதலே சால்பு என்ற பொன்னின் அளவை அறிவதற்கு உரைகல்லாகிய செயலாகும்.

தமக்கு இன்னாதவற்றைச் செய்தவர்க்கும் இனியவற்றைச் செய்யவில்லை என்றால் சான்றாண்மை என்ன பயனை உடையதோ? ஒரு பயனையும் உடையதன்று.

சால்பு என்று கூறப்படும் வலிமை உண்டாகுமானால் ஒருவனுக்கு நல்குரவு இளிவாகாது.

சால்புடைமை என்னும் கடலுக்குக் கரை என்று கூறப்படுவார் ஏனைக் கடல்கள் தத்தம் கரையுள் நில்லாமல் காலம் திரிந்தாலும் தாம் திரியார்.

நற்குணங்களால் நிறைந்த சான்றோர் தம் தன்மை குன்றுவர் என்றால் மிகப் பெரிய பூமியும் தன் பொறையைத் தாங்காததாய் முடியும்.

**37.** (அ) "<u>இவ்விரண்டும்</u> பண்புடைமை என்னும் வழக்கு"

—இங்குக் கூறப்பட்ட தொகைச் சொல் எவற்றைக் குறித்தது?

இங்கு வந்துள்ள தொகைச் சொல் அன்பு உடைமை, ஆன்ற குடிப்பிறத்தல் ஆகிய இரண்டையும் குறித்தது. பிறரிடத்தில் அன்பு உடையவனாதலும் உலகத்தோடு அமைந்த குடியின் கண் பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும் ஒருவனுக்குப் பண்புடைமை என்று உலகத்தார் கூறுவர்.

(ஆ) "நன் பால் கலந்தீமையால் திரிந்தற்று"—இவ் உவமையை விளக்கிப் பொருளுடன் பொருத்துக.

நல்ல ஆன் பாலானது ஏற்ற கலத்தின் குற்றத்தால் இனிய சுவையை இழந்து கெட்டதுபோல் பண்பில்லாதவன் முன்னைய நல்வினைப் பயனால் அடைந்த பெரிய செல்வம் ஒருவர்க்கும் பயன்படாது கெடும். இதனை விளக்க இதற்கு உவமையாய் 'நன்பால் கலந்தீமையால் திரிந்தது எடுத்துக் காட்டப்பட்டது. பண்பில்லாதவன் முன்னைய நல்வினைப்பயனால் பெற்ற பெருஞ்செல்வமானது ஒருவற்கும் பயன்படாது கெடுதல். நல்ல பசுவின் பால் ஏற்ற கலத்தின் குற்றத்தால் இன்சுவைத்தாகாது கெடுவது போன்றதாகும். இச்செய்யுளில் பொருளுக்கு ஒத்த தொழில் வருவித்துக் கூறப்பட்டுள்ளது. ஆதலால்.

"பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று"

என்னும் இச் செய்யுள் தொழில்பற்றி வந்த உவமை அணியின் பாற்படும்.

[இ] "பண்பு உடைமை" என்றால் என்ன? பண்புடையார் ஆதற் காரணம் யாது?

'பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல், என்பது கலித்தொகை. எல்லா இயல்புகளையும் அறிந்து ஒத்து ஒழுகுதல் பண்புடைமை எனப்படும்.

யாவரிடத்திலும் எளிய செவ்வியராதலால் அரிய பண்புடைமை என்னும் நல்லனெறியை எய்துதல் எளிது என்று நூலோர் கூறுவர். பிறரிடத்து அன்பு உடையனாதலும் உலகத்துடன் அமைந்த குடியின் கண் பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும் ஒருவனுககுப் பண்பு உடைமை என்று உலகத்தார் சொல்லுவர்.

(ஈ) பண்பு உடையாரின் உயர்வு யாது?

செறியத்தகாத உடம்பினால் ஒத்தல் ஒருவனுக்கு நன் மக்களுடன் ஒப்பாகாது; ஆதலால் அது பொருந்தாது. பொருந்துவதான ஒப்புச் செறியத்தக்க பண்பினால் ஒத்தலாகும். நீதியையும் அறத்தையும் விரும்புதலாற் பிறர்க்கும் தமக்கும் பயன்படுதல் உடையாரின் பண்பினை உலகத்தார் பாராட்டுவர்.

தன்னை இகழ்தல் ஒருவற்கு விளையாட்டின் கண்ணும் இன்னாது. ஆதலால் மற்றவர் பாடு அறிந்து

ஒழுகுவாரிடம், பகைமை உண்டானபோதும் அஃது உள்தாகாது இனியவான பண்புகளே உள்ளனவாவன.

பண்புடையாரிடம் படுதலால் உலகியல் எக்காலத்தும் உண்டாய் வாரா நின்றது; அங்ஙனம் படுதலில்லையாயின் அது மண்ணினிடத்தில் புகுந்து மாய்ந்து போகும்.

38. (அ) 1. 'மிகுநலம் பெற்றாள் தமியள் மூத்தற்று
2. 'நடுஊருள் நச்சுமரம் பழுத்தற்று'

—இவ் உவமைகளை விளக்கிப் பொருளுடன்பொருத்திக் காட்டுக.

(1) பெண்டிரின் மிக்க நலத்தினைப் பெற்றாளொருத்தி கொடுப்பாரின்மையின் கொழுநன் இன்றித் தமியளாய் மூத்த தன்மை வாய்ந்தது என்பது இவ் உவமையின் பொருள். அதுபோல ஒரு பொருளுமில்லாத ஏழைகளுக்கு அவர் வேண்டிய ஒரு பொருளைக் கொடுக்காதவனின் செல்வம் வீணே கழியும் என்பது விளக்கப்பட்டது. ஏழைகளுக்கு ஈயாதவனின் செல்வம் வீணில் கழிதலுக்கு, மிகுநலம் பெற்றாளொருத்தித் தமியளாய் மூத்தது உவமையாயிற்று.

(2) ஊரின் நடுவே நிற்கின்றதோர் நச்சு மரம் பழுத்தாற் போன்றது என்பது இவ் உவமையின் பொருளாகும். இது வறியார்க்கு ஒன்றும் கொடாததினால் அவரால் விரும்பப்படாதவன் செல்வத்தைப் பெற்றிருத்தலை விளக்கிற்று. ஈயாதான் செல்வத்திற்கு நச்சு மரம் பழுத்தல் உவமை. நச்சு மரத்தை மக்கள் விரும்பாததுபோல் ஈயாதானையும் மக்கள் விரும்பார்.

(ஆ) "சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங் கூர்ந்தனையது உடைத்து"

- இதற்குக் கூறப்பெறும் உரைகள் யாவை? பொருந்தும் உரை, பொருந்தா உரை இவற்றை வரைக.

புகழுடைய செல்வத்தையுடையவரின் நிற்குங் காலம் சிறியதாகிய வறுமை உலகை நிலை நிறுத்தும் மேகம் வறுமை மிகுந்தாற் போன்ற இயல்பினையுடையது என்பது இதன் பொருள். இதுவே இதற்குப் பொருந்தும் உரையுமாகும். இங்ஙனம் பொருள் கூறவே

யாவர்க்கும் பயன் பட்டார் வறியரான போதும் அவ் வறுமை கடிதின் நீங்குதலின் பின்பும் செல்வராய்ப் பயன்படுவர் என்று உவமையால் பெறப்பட்டது. ஆதலால் நன்றி இல்லாதானின் செல்வம் பயன் படாது எனவும் அறியலாம்.

"சீருடைச் செல்வர் இரவலருடன் வெறுக்கும் நிலையில் வெறுப்பு மாரி வறங் கூர்ந்தனைய தன்மையை உடைத்து" என்றும் இச் செய்யுட்குப் பொருள் கூறுவர். இங்ஙனம் உரைப்பது அதிகாரத்தோடு பொருந்தாமையால் இவ்வுரை பொருந்தாது.

(இ) "நன்றியில் செல்வம்" தன்னை ஈட்டியவனுக்கும் பிறர்க்கும் பயன்படாது என்பது எவ்வாறு கூறப் பட்டது?

தன்மனை அகலமெல்லாம் நிறைவதற்குக் காரண மான பெரும் பொருளை ஈட்டிவைத்து உலோபத்தினால் அதனை உண்ணுதவன் உயிருள்ளவன் என்ருலும் செத் தவனே யாவான்; அப்பொருளிடத்து அவனால் செயக் கிடந்ததோர் உரிமை இல்லை. பொருள் ஒன்று மாத் திரமே உண்டாக அதனால் எல்லாம் உண்டாகும் என்று அறிந்து அதனை ஈட்டி, பின்னர்ப் பிறர்க்கு ஈயாது பற்றுள்ளம் செய்யும் மயக்கத்தால் ஒருவனுக்கு நிறைதலற்ற பேய்ப் பிறப்பு உண்டாகும்.

யாம் மற்றவர்களைக் காட்டிலும் மிகுதியாகச் சம்பா திப்போம் என்று பொருளை ஈட்டுவதனை மட்டும் விரும்பி அதன் பயனாகிய புகழை விரும்பாத மக்களின் பிறப்பு நிலத்திற்குப் பாரமாகும்.

ஒரு பொருளும் ஈயாமையால் ஒருவராலும் விரும்பப் படுதல் இல்லாதவன் தான் இறந்த விடத்து இவ் உலகில் எஞ்சி நிற்பதாக எதனைக் கருதுவர்?

பிறர்க்கு ஈவதும் தாம் அனுபவிப்பதுமாகிய இரண்டு செயல்களும் உடையரல்லாதார்க்குப் பலவாக அடுக்கிய கோடிப் பொருளுண்டாயினும் அவற்ருல் ஒரு பயனுமில்லை,

தான் அனுபவியாதவனாய், தகுதியுடையார்க்கு அவர் வேண்டிய தொன்றை ஈயும் இயற்கை இலாத

வனாய் இருக்கின்றவன் இரண்டும் செய்வதற்கு இடனு டையதாகிய செல்வத்திற்கு ஒரு நோயாவான்.

(ஈ) நன்றியில் செல்வத்தால் வரும் குற்றம் யாது?

ஒரு பொருளுமில்லாதவர்க்கு அவர் வேண்டிய ஒரு பொருளைக் கொடுக்காதவனின் செல்வமானது வீணே கழிதல், பெண்டிரின் மிகுந்த நலத்தினைப் பெற்றவ ளொருத்தி கொடுப்பாரின் மையின்கொழுநன் இன்றித் தமியளாய் மூத்த தன்மை வாய்ந்தது.

ஏழைகளுக்கு நெருங்கியவனாக இருந்தும் அவர்க்கு ஒன்றும் கொடாமையால் அவரால் விரும்பப்படாதவன் செல்வத்தை அடைவது ஊரின் நடுவே நிற்கின்ற ஒரு நச்சு மரம் பழுத்ததைப் போன்றதாகும்.

39. (அ) 1. "ஊனைக் குறித்த உயிரெல்லாம்"

2. "மரப்பாவை நாணால் உயிர் மருட்டியற்று"

—இவ் உவமைகளை விளக்கிப் பொருளுடன் இணைத்துக் காட்டுக.

(1) 'எல்லா உயிர்களும் உடம்பினைத் தமக்கு நிலைக் களனாகக் கொண்டு அதனை விடா' என்பது இதன் பொருள். அதுபோலச் சால்பு என்பது நாண் என்னும் நன்மைக் குணத்தைத் தனக்குநிலைக்களனாகக் கொண்டு அதனை விடாது. உயிர்களுக்குச் சால்பும் உடம்பிற்கு நாணும் உவமை.

(2) மரத்தால் செய்த பாவை இயந்திரக் கயிற்றினா லாய தன் இயக்கத்தால் உயிருடைத்தாக மயக்கினாற் போன்றது என்பது பொருள். தம் மனத்தின் கண் நாண் இலலாத மக்கள் உயிருடையாரைப் போன்று இயங்குகின்ற இயக்கம் மரப் பாவையின் இயக்கத்தைப் போன்றதாகும். நாணில்லாதாரின் இயக்கத்திற்கு மரப்பாவையின் இயக்கம் உவமை.

(ஆ) நாணின் இலக்கணம் யாது? அதன் சிறப்பையும் அதனை உடையாரின் சிறப்பையும் கூறுக.

இழிந்த கருமங் காரணமாக நாணுதலை நன் மக் களுக்கு நாணாகும். மனமொழி மெய்களின் ஒடுக்கத் தால் வருவன குலமகளின் நாண்களே.

ஊணும் உடையும் பிறவும் மக்களுயிர்க்கெல்லாம் பொது; நன்மக்கட்குச் சிறப்பாவது நாணுடைமையே;

எல்லா உயிர்களும் உடம்பினைத் தமக்கு நிலைக்களனாகக் கொண்டு அதனை விடா; அதுபோன்று சால்பு நாண் என்ற நன்மைக் குணத்தைத் தனக்கு நிலைக்களனாகக் கொண்டு அதனை விடாது.

சான்றோர்க்கு நாண் உடைமையே ஆபரணமாகும்; அவ்வாபரணம் இல்லையெனில் அவரது பெருமிதமுடைய நடை கண்டார்க்குப் பிணியாகும்.

பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வரும் பழியையும் சமமாக மதித்து நாணுகின்றவரை உலகத்தார் நாணுக்கு உறைவிடம் என்று கூறுவர்.

(இ) நாணுடையாரின் செயல் யாது?

உயர்ந்தவர் தமக்குப்பாதுகாப்பாக நாணினைக்கொள்வரன்றி பெரிய உலகத்தையும் கொள்ள விரும்பார்.

நாணின் சிறப்பை அறிந்து அதனைவிடாது ஒழுகுவார் நாணமும் உயிரும் தம்முள் மாறுபட்ட வழி நாணது சிதையாமலிருப்பதற்காக உயிரை நீப்பர்; உயிர் சிதையாமலிருக்க நாணினை நீக்கார்.

40. (அ) "இரண்டின் நீள் வினையான் நீளும் குடி"
—எவ்விரண்டு? அவற்றை விளக்குக.

ஆள் வினை, ஆன்ற அறிவு ஆகிய இரண்டனையுமுடைய இடைவிடாத கருமச் செயலால் ஒருவனது குடியானது உயரும். ஆள்வினை = இடைவிடாது முயலும் மெய்ம் முயற்சி; ஆன்ற அறிவு = நிறைந்த அறிவு.

(ஆ) "அமரகத்துவன் கண்ணீர் போல"—இவ் உவமையை விளக்கிப் பொருளுடன் பொருத்துக.

களத்தினிடத்துச் சென்றார் பலராயினும் போரினைத் தாங்குதல் வன்கண்மையினையுடையவரின் மேலதாற்போல என்பது இதன் பொருள். அதுபோன்றே குடியின் கண்பிறந்தார் பலராயினும் அதன் பாரமானது பொறுக்கப்படுதல் அதனை வல்லாரின் மேலதாம். குடிக்குப் போர்க் களத்தில் போரிடும் வீரரும், குடும்ப பாரத்தைப் பொறுக்கின்றவனுக்குப் போர் தாங்கும் வன் கண்ணரும் உவமையாகும்.

(இ) "இடுக்கண் கால் கொன்றிட வீழும் அடுத்து
நல்லாள் இல்லாத குடி" ஊன்றும்
—இச் செய்யுள் என்ன அணியாகும்?

பற்றுனவற்றைக் கொடுத்தாங்கவல்ல நல்ல ஆண் மகன் பிறவாத குடியாகிய மரமானது துன்ப மாகிய நவியம் புகுந்து தன் முதலை வெட்டிச் சாய்க்க ஒரு பற்றின்றி வீழும் என்பது இதன் பொருள். குடியானது தன்னை உயரச் செய்வாரைப் பெற்றால் உயரும்; இல்லாத விடத்துக் கெடும். வளர்ப்பாரைப் பெற்ற விடத்து வளர்ந்து பயன்படுதலும் இல்லாதவிடத்துக் கெடுதலும் உண்டாதலால் குடியை மரமாக உருவகித் தார். உருவகம் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளதால் இச் செய்யுள் குறிப்பு உருவக அணியின் பாற்படும்.

[ஈ] "குடி செயல் வகை" என்னும் அதிகாரத்துள் கூறப்பட்ட கருத்துக்கள் யாவை?

தன் குடியை உயரச் செய்யும் பொருட்டுத் தொடங் கிய செயலானது முடியாமையால் நினைத்த காரியத் தைச் செய்வதற்கு யான் கை யொழியேன் என்று கூறுகின்ற ஆள்வினைப் பெருமையைப் போன்று ஒருவ னுக்கு மேம்பட்ட பெருமை வேறு இல்லை.

முயற்சியும் நிறைந்த அறிவும் என்று கூறப்பட்ட இரண்டினையுமுடைய இடைவிடாத கருமச் செயலால் ஒருவனது குடியானது உயரும்.

என் குடியினை உயரச் செய்வேன் என்று கூற அதற்குத் தகுந்தசெயல்களில் முயல்கின்ற ஒருவனுக்கு உதவி செய்யத் தெய்வமானது ஆடையை உடுத்துக் கொண்டு தான் முடிவெய்தும்,

தம் குடிக்கு உரிய வினையை விரைந்து முயல்கின்ற வர்க்கு அவ்வினை முடிக்கும் திறம் அவர் சூழவேண்டா மல் தானே முடிவெய்தும்.

குற்றமுடைய செயல்களைச் செய்யாது தன்குடியை உயரச்செய்து ஒழுகுகின்றவனை உலகத்தார் அவனுக் குச் சுற்றமாக வேண்டித் தாமே சென்று சூழ்வர்.

தான் பிறந்த குடியினை ஆளும் தன்மையைத் தனக்கு உளதாக ஆக்கிக் கோடலே ஒருவனுக்கு நல் லாண்மை என்று உயர்த்திச் சொல்லப்படும்.

களத்தின் கண் போரிடச் சென்றார் பலர் என்று லும் போரினைத் தாங்குதல் வன் கண்ணர் மேலதே யாகும்; அதுபோலக் குடியின்கண் பிறந்தார் பலராயி

னும் அதன் பாரத்தைப் பொறுத்தல் அது வல்லாரின் மேலதாம், தம் குடியினை உயரச் செய்வார் அச்செயலை நோக்காது காலத்தை நோக்கி மடியினைச் செய்து கொண்டு மானத்தையும் கருதுவராயின் குடிகெடும்; ஆதலால் அவர்க்கு கால நியதி இல்லை.

மூவகைத் துன்பம் உறற்பாலதான தன்குடியை அவை உறாதபடிக் காக்க முயல்கின்றவனின் உடம்பானது முயற்சித் துன்பத்திற்குக் கொள்கலமாவது மட்டுந்தானா? அஃதொழிந்த இன்பத்திற்கு ஆதல் இல்லையோ? ஆதல் உண்டு. பற்றுனவற்றைக் கொடுத்துத் தாங்கவல்ல நல்ல ஆண்மகன் பிறவாத குடியாகிய மரம், துன்பம் என்ற நவியம் புகுந்து தன் முதலை வெட்டி வீழ்ந்த ஒரு பற்றில்லாமல் வீழா நிற்கும்.

41. "உழவு" என்னும் அதிகாரத்துள் கூறப்பட்டவற்றைத் தொகுத்து எழுதுக.

உழுவதனுல் உண்டாகும் மெய் வருத்தத்தை நோக்கி ஏனைய தொழில்களைச் செய்து திரிந்தும் உலகமானது முடிவில் ஏருடையாரின் வழியதாயிற்று.

உழுதொழில் தவிர ஏனைய தொழில்களைச் செய்வார் எல்லாரையும் தாங்குதலால் உழு தொழில் செய்தல் வல்லார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவர்.

யாவரும் உண்ணுமாறு உழுவதைச் செய்து அதனுல் தாமும் உண்டு வாழ்கின்றவரே தமக்குரியராய் வாழ்கின்றவராவர்; மற்றையா ரெல்லாம் பிறரைத் தொழுது அதனுல் தாம் உண்டு அவரைப் பின் செல்கின்றனவராவர்.

உழுதலால் பெற்ற நெல்லினை உடையவராகிய தண்ணளியுடையோர் பல அரசர்களின் குடை நிழலதாய மண் முழுவதினையும் தம் வேந்தர் குடைக் கீழே காண்பர். தம் கையால் உழுது உண்பதனை இயல்பாக உடையோர் பிறரிடம் தாம் சென்று இரவார்; தம்மை இரக்கின்றவர்க்கு அவர் வேண்டியதொன்றைக் கரவாது கொடுப்பர். உழுதலையுடையவரின் கை அதனைச் செய்யாது மடங்கினுல் யாவரும் விரும்பும் உணர்வும் யாம் துறந்தேம் என்பார்க்கு அவற்றின் கண் நிற்றலும் உளவாகா.

ஒரு பலம் புழுதியைக் கால்பலம் ஆகும்படிக் காய விட்டால் அந்நிலத்திற்கு ஒரு பிடி எருவும் இடவேண்டாமல் அந்நிலம் பணைத்து விளையும்.

நிலத்தில் விளையும் பயிர்க்கு உழுதலினும் எருவிடுதல் நன்று; இரண்டும் செய்து களைகட்டால் அதனைக் காத்தல் அதற்கு நீர்விடுவதின் நன்ருகும்.

நிலத்திற்கு உரியவன் நிலத்தையும் பயிரையும் நாள் தோறும் சென்று பார்த்து அடுத்தது செய்யாது சோம்பி இருப்பானுயின் அஃது அவனது மனைவியைப்போன்று தனக்குள் வெறுத்துப் பின் அவனுடன் ஊடிவிடும்.

யாம் ஏழ்மையுடையேம் என்று கருதி, சோம்பி இருப்பவரைக் கண்டால் நிலமகள் என்று உயர்த்துக் கூறப்படுகின்ற நல்லாள் தன்னுள்ளே நகும்.

(முதற்பத்தி உழவின் சிறப்பையும், அடுத்த ஐந்து பத்திகள் அத்தொழிலைச் செய்வாரின் சிறப்பையும், அடுத்த மூன்று பத்திகள் அத்தொழிலைச் செய்யும்விதத்தையும், இறுதிப்பத்தி உழு தொழில் செய்யாதவிடத்து உண்டாகும் இழுக்கையும் எடுத்துரைத்தன.)

[அ] நல்குரவின் கொடுமைபற்றிக் கூறுக.

ஒருவனுக்கு வறுமையைப் போல் இன்னுதது அவ் வறுமையே; பிறிதில்லை. வறுமை என்று கூறப்படுகின்றதொரு பாவி ஒருவனிடத்தில் வருங்கால் அவனுக்கு மறுமை இன்பமும் இல்லையாகுமாறு வரும்.

நல்குரவு என்று கூறப்படும் ஆசை தன்னுல் பற்றப் பட்டாரின் பழைய குடி வரவினையும் அதற்குத் தக்க சொல்லினையும் கெடுக்கும். நல்குரவானது உயர் குடிப் பிறந்தாரிடத்தும் இளி வந்த சொல் பிறப்பதற்குக் காரணமாகிய சோர்வினை உண்டாக்கும்.

நல்குரவில் பல துன்பங்களும் வந்து விளையும்.

(ஆ) நல்கூர்ந்தார்க்கு உளதாகும் குற்றத்தையும் அந்நல்குரவு உண்டானுல் செய்யக் கடவதையும் கூறுக.

மெய்ந் நூற்பொருளைத் தெளிவாக அறிந்து கூறினுரெனினும் நல்கூர்ந்தார் கூறும்சொல் பொருளின்மையினை உண்டாக்கும்.

அறத்துடன் பொருந்தாத நல்குரவினை உடையவன் தன்னை ஈன்ற தாயாலும் பிறனைக் கருதுமாறு போலக் கருதி நோக்கப்படுவான்.

நேற்றுக் கொன்றது போன்ற துன்பத்தைச் செய்த நல்குரவு இன்றும் என்னிடம் வருமோ? வந்தால் யாது செய்வேன்? மந்திரம் மருந்து முதலியவற்ருல் ஒருவனுக்கு நெருப்பினிடைக் கிடந்து உறங்கலும் முடியும்; ஆனுல் நிரப்புத் துன்பம் வந்தவிடத்து யாதொன்ருலும் உறக்கம் இல்லை.

நுகரப்படும் பொருள்களில்லாதார் தம்மாற் செயக்கடவது முற்றத்துறத்தலாகும். (உடம்பினைத்துறத்தல்) அதனைச் செய்யா தொழிதல் பிறரது வீட்டிலுள்ள உப்பிற்கும் காடிக்கும் கூற்ருகும்.

43. [அ] நல்குரவான் உயிர் நீங்கும் எல்லைக்கண் இளிவில்லா இரவு விளக்கப்படாது என்பது எவ்வாறு இயம்பப்பட்டது?

நல்கூர்ந்தார் இரப்பதற்கு ஏற்புடையாரைக் கண்டால் அவரிடம் இரங்கவேண்டும்; இரந்தால் அவர் கரப்பார் எனில் அவர்க்கே பழி ஏற்படுமின்றித் தமக்கில்லை. இரந்த பொருள் ஈசுவரன் உணர்வு உடைமையால் தான் துன்புருவகையில் வரும் என்ருல் ஒருவர்க்கு இரத்தலும் இன்பத்திற்கு ஏதுவாகும்.

இவ்வாறு நல்குரவான் உயிர் நீங்கும் எல்லையில் இளிவில்லா இரவு விலக்கப்பட்டது என்பது இயம்பப்பட்டது.

[ஆ] இரத்தக்காரரது இயல்பு எவ்வாறு கூறப்பட்டது?

தன்னிடமுள்ள பொருள்களைக் கரத்தல் செய்யாத நெஞ்சினையுடைய மானம் அறிவார் முன்னர் நின்று அவரிடம் ஒன்றினை இரத்தலும் நல்கூர்ந்தார்க்கு ஓர் அழகைத் தரும்.

தன்னிடமுள்ள பொருளைக் கனவின் கண்ணும் காத்தல் அறியாதாரிடம் சென்று ஒன்றனை இரத்தலும் வறியார்க்கு ஈதலைப் போன்றதே யாகும்.

இரப்பார் உயிரை ஓம்பும் பொருட்டு இரத்தலை மேற்கொள்வதானது இருப்பதனைக் கரவாது கொடுப்பார்

சிலர் உலகத்தில் இருக்கின்றனர் என்ற காரணத்தாலேயே. உள்ளத்தைக் கரத்தல் என்ற நோயில்லாரைக் கண்டால் மானத்தை விடாது இரக்கின்றவர்க்கு நிரப்பினால் வரும் துன்பங்களெல்லாம் சேரக் கெடும்.

தம்மை அவமதித்து இழிந்தன கூறாது பொருள் கொடுப்பாரைக் கண்டால் இரப்பாரின் உள்ளம் மகிழ்ந்து உள்ளுக்குள்ளே உவக்கும் தன்மையுடையது.

[இ] உலகிற்கு இரப்பார் வேண்டும் என்ற கருத்தை திருவள்ளுவர் எவ்வாறு விளக்குகின்றார்?

இரப்போர்க்கு இன்றியமையாத இயல்பு யாது?

வறுமையடைந்து இரப்பார் இல்லையென்றால் குளிர்ந்த இடத்தையுடைய பெரிய இவ் உலகில் உள்ளாரின் செலவு வரவுகள் உயிரற்ற மரப்பாவை இயந்ரக் கயிற்றால் சென்று வந்தாற் போன்றதேயாகும்.

இரந்து பொருள் கோடலை விரும்புவார் இல்லாதவிடத்து கொடுப்பார்க்கு ஒரு புகழுமில்லை.

இவ்வாறு கூறுமுகத்தான் உலகிற்கு இரப்பார் வேண்டும் என்ற கருத்தை விளக்குகின்றார்.

கொடுப்பான் பொருள் உதவாதவிடத்து எனக்கு இவன் ஈகின்றிலன் என்று அவனை இரப்பான் வெகுளாது நீங்குதல் வேண்டும். அது வேண்டியபொழுது உதவாது என்பதற்கு வேறு சான்று வேண்டியதில்லை. நிரப்பாகிய தனது துன்பமே சான்றாக அமையும்.

44. (அ) "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகு இயற்றியான்"

--பொருளும் விளக்கமும் தருக.

"உலகத்தைப் படைத்த இறைவன் இதனிடத்து வாழ்கின்றவர்க்கு முயன்று உயிர் வாழ்தலையன்றி இரந்து உயிர் வாழ்தலை விதித்தானென்றால் அக்கொடியவன் தானும் அவரைப்போன்று எங்கும் அலமந்து கெடுவானாக' என்பது இச்செய்யுளின் பொருள். மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்கு வேண்டிய உண்டியும் அதற்கு ஏதுவாகிய செய்தொழிலும் பழவினைவயத்தால் கருவுடன் கலந்த பொழுதிலே அவன் அமைத்து வைப்பான் அப்படியாயின் அவற்றுள் சில உயிர்க்கு இரத்தலையும் ஒரு செய் தொழிலாக அவன்

கற்பித்தானென்றால் அத் தீவினையால் தானும் அத் துன்பத்தை அடையவேண்டுமென்று ஆசிரியர்கூறினர்.

(ஆ) "ஆவிற்கு நீர் என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளி வந்ததில்"

—பொருளும் விளக்கமும் தருக.

'தண்ணீரைப் பெருது இறக்கும் நிலைமையையுடைய ஓர் ஆவினைக் கொண்டு தருமத்தைக் கருதி இதற்குத் தண்ணீர் தரல்வேண்டுமென்று இரந்து கூறுமிடத்து அவ்விரவுபோல் ஒருவனது நாவிற்கு இளி வந்தது பிறிதில்லை' என்பது இதன் பொருள். ஆவினைக் காத்து ஓம்புதல் பேரறமாகும். நீரானது பொருள் கொடுத்து வேண்டப்படாததாய் யாவர்க்கும் எளிதில் கிடைக்கும் பொருளாகும். கேட்பவனின் இளிவு அச் சொல்லளவாய் நாவினிடத்து நிற்கும். எல்லா இளிவினும் இவ்விளிவு மேம்பட்டது. எனவே தருமத்தைக் கருதி ஆவிற்கு என்று எளிதான நீரைக்கூட நாவினல் இரத்தல் கூடாது என்பது விளக்கப்பட்டது.

(இ) "இரவு என்னும் ஏமாப்பு இல்தோணி கரவு
என்னும்
பார்தாக்கப் பக்குவிடும்"

--இச்செய்யுளில் பயின்ற அணி யாது?

வறுமை என்னும் கடலை இதனல் கடப்போம் என்று எண்ணி ஒருவன் ஏறிய இரவு என்னும் பாது காப்பற்ற தோணி, அதனிடத்து ஓடும்போது கரத்தல் என்னும் வன்னிலத்தோடு தாக்குமானல் பிளந்து போகும் என்பது இச்செய்யுளின் பொருள். வறுமையை முயற்சியால் கடக்கவேண்டும்; இரவால் கடக்கத் தொடங்கியதனல் வறுமைக் கடலின் கரையைக் காணுதவனய் துன்புறுவான். ஆதலால் இரவை ஏமாப்பு இல்தோணி என்று உருவகித்தார். அவயவம் உருவகப்படுத்தப்பட்டிருப்பதால் இச்செய்யுள் அவயவ உருவக அணியின் பாற்படும்.

(ஈ) "இரவு அச்சம்" என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டன யாவை?

தன்னிடமுள்ள பொருளைக் கரவாது இவர் வரப் பெற்றேம் என்று உள்ளம் மகிழ்ந்து கொடுக்கும் கண்

போலச் சிறந்தாரிடத்திலும் இரவாமல் ஒருவன் வறுமை கூர்தல் இரந்து செல்வதைப் பெறுவதைக் காட்டிலும் கோடி மடங்கு நல்லது.

உலகைப்படைத்த இறைவன் இதனிடத்து வாழ் வார்க்கு முயன்று உயிர் வாழ்வதன்றி இரந்து உயிர் வாழ்வதை விதித்தான் என்றால் அக்கொடியவனும் அவரைப் போன்று எங்கும் அலமந்து கெடுவானாக.

வறுமையால் உளதாகும் துன்பத்தை முயன்று நீங்குவாம் என்று நினையாது இரந்து நீக்கக் கடவாம் என்று எண்ணும் வன்மைபோல வலிமை வாய்ந்தது வேறு ஒன்றுமில்லை.

அனுபவிக்க வேண்டுவன இல்லாகி வறுமை யடைந்த விடத்தும் பிறரிடம் சென்று இரப்புதற்கு உடன்படாத அமைதியானது அனைத்து உலகும் ஒன்று சேர்ந்தாலும் கொள்ளாத பெருமையுடையது.

அறநெறியில் முயன்ற முயற்சியானது கொண்டு வந்து தந்தது தெளிந்த நீரைப்போன்ற அடுபுற்கையே என்றாலும் அதனை உண்பதற்குமேல் இனியது இல்லை.

தண்ணீரைப் பெறாமல் இறக்கும் நிலைமையுடைய ஓர் ஆவினைக் கண்டு தருமத்தை நோக்கி இதற்குத் தண்ணீர் தரல் வேண்டும் என்று இரந்து சொல்லும் பொழுது அவ்விரவுபோல ஒருவனது நாவிற்கு இளி வந்தது வேறில்லை. இரப்பாரை எல்லாம் நுமக்கு இரக்க வேண்டுமென்றால் தமக்குள்ளது கரப்பாரை இரவாது நீங்குவீர் என்று கூறி இரவா நின்றேன்.

வறுமைக் கடலை இதனால் கடப்போம் என்று எண்ணி ஒருவன் ஏறிய இரவு என்னும் பாதுகாப்பற்ற தோணி அதனிடம் ஓடும்பொழுது கரத்தல் என்ற வலிய நிலத்துடன் தாக்குமானால் பிளந்து போகும்.

உடையவரின் முன்னால் இல்லாதவர் சென்று இரந்து நிற்கின்ற கொடுமையை நினைத்தால் என் உள் ளம் கரைந்து உருகா நிற்கும்; அதனைக் கண்டும் இல்லை என்று கூறுகின்ற கொடுமையை நினைத்தால் உருகு மளவன்றிப் பொன்றிவிடும். கரப்பார் இல்லை என்று கூறிய அளவிலே இரப்பார்க்கு உயிர் போகா நின்றது; சொல்லாடும் அவர் தமக்கு உயிர் பின்னும் நிற்றலால் அப்பொழுது எவ்விடத்துப் புக்கொளித்து நிற்கும்?

**45.** (அ) ''நன்று அறிவாரின் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர்''
— பொருள் தந்து விளக்குக.

தமக்கு உறுதி தருகின்றவற்றை அறிகின்ற மேலோரைக் காட்டிலும் அவற்றை அறியாத கீழ் மக்கள் நெஞ்சத்தில் கவலை இல்லாமையால் நன்மையுடையவரே யாவர் என்பது இதன் பொருள். உறுதிகளாவன: இம்மை மறுமை வீடுகளுக்கு உரியவாகிய புகழ், அற, ஞானங்கள். உறுதியயக்கும் இவற்றை அறிகின்றவர் அவற்றைச் செய்துகொண்டு மிகவும் செய்கின்றிலேம் என்றும், செய்கின்றபோது இடையூறு வருமோவென்றும், பழிபாவம் அறியாமை ஆகியவற்றுள் எஃது உண்டாகுமோ வென்றும் கவலையுறுவர். கயவரோ புகழை ஒழித்துப் பழி முதலியவற்றைச் செய்தும் கவலையிலராய்த் திரிவர். ஆதலால் நன்றறிவாரின் கயவர் திருவுடையார் என்று ஆசிரியர் குறிப்பால் இகழ்ந்தார். புகழ்ந்ததுபோல் பழித்தமையால் இச் செய்யுள் வஞ்சகப் புகழ்ச்சி அணியின் பாற்படும்.

(ஆ) வள்ளுவரின் நகைச்சுவைத்திறனைப் புலப்படுத்துக.

வள்ளுவர் பேதைமை என்னும் அதிகாரத்தில்,

''பெரிது இனிது பேதையார் கேண்மைபிரிவின்கண்
பிழைதருவது ஒன்று இல்''—என்று கூறியுள்ளார்.

பிரிந்து சென்றவிடத்து அஃது இருவர்க்கும் தருகின்றதொரு துன்பமில்லை யாதலால் பேதையாயினர் தம்முட் செய்துகொண்ட நட்பு மிகவும் இனிது என்பது இதன் பொருள். பேதையாயினர் செய்துகொண்ட நட்பு நாள்தோறும் தேய்வதனல் துன்பம் தராதாதாயிற்று. பேதையாயினர் நட்பு சிறந்ததல்ல என்பர் இங்ஙனம் 'பெரிது இனிது' என்று நகைச்சுவைப்படக் கூறினர்.

மேலும்வள்ளுவர்''கயமை'' என்னும் அதிகாரத்தில்

''தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுகலான்''

என்று கூறியுள்ளார். தேவரைப் போன்று கயவரும் தம்மை நியமிப்பாரின்றித் தாம் விரும்புவனவற்றைச் செய்து ஒழுகுவதால் தேவரும் கயவரும் ஒரு தன்மையுடையவராவர் என்பது இச் செய்யுளின் பொருள்.

கயவரைத் தேவரைப் போன்றவர் என்று கூறுமுகத் தான் உயர்வும் இழிவுமாகிய காரண வேறுபாட்டினைக் குறிப்பால் விளக்கி, நகைச்சுவை பட மொழிந்தார்.

இச் செய்யுள் புகழ்வதுபோல் பழித்தமையால் வஞ்சப் புகழ்ச்சி அணியின் பாற்படும்.

[இ] "கயமை" என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டன யாவை?

கயவர் வடிவத்தால் முழுதும் மக்களைப் போன்றவ ராவர்; அவர், மக்களை யொத்தாற்போன்ற ஒப்பினை வேறு இரண்டு சாதிக் கண்ணும் யாம் கண்டதில்லை.

தமக்கு உறுதி பயப்பனவற்றை அறிகின்ற மேலோரைக் காட்டிலும், அவற்ருல் தம் நெஞ்சத்தில் கவலையிலராகலான் அவற்றை அறியாத கீழ்மக்கள் நன்மையுடையவரே யாவர்.

தேவரைப்போன்று கயவரும் தம்மை நியமிப்பா றின்றித் தாம் விரும்புகின்றவற்றையே செய்து வாழ்வ தால் தேவரும் கயவரும் ஒரு தன்மையுடையவராவர்.

கீழோன் தன்னைக் காட்டிலும் சுருங்கிய பட்டியாய் வாழ்கின்றவனைக் கண்டால் அவ்வொழுகலாற்றில் அவரைக் காட்டிலும் தான் மேம்பட்டு அதனுல் தன் மிகுதியைக் காட்டி இறுமாப்பான்.

கயவரால்* ஆசாரம் கண்டது உண்டென்ருல் அதற்கு அரசரால் ஏதம்வரும் என்று அஞ்சும் அச்சமே காரணமாகும்.

தாம் கேட்ட மறைகளை இடங்கள் தோறும் சென்று பிறர்க்குக் கூறுவதால் கயவர், அறையப்படும் பறை யினைப் போன்றவராவர்.

கயவர் தம் கதுப்பை நெரிப்பதாக வளைந்தகையினை உடையரல்லாதார்க்குத் தாம் உண்டு பூசிய கையைத் தெரித்தல் வேண்டுமாய் இரந்தால்கூடத் தெறியார்.

மேலோர், வறுமையுடையவர் சென்று தம் குறை யைக் கூறிய அளவிலே இரக்கம் கொண்டு பயன் படுவர்; கீழாயினர் கரும்பைப்போல வலியார் நைய நெருக்கியவிடத்துப் பயன்படுவர்.

பிறர் செல்வத்தால் பட்டும் துகிலும் உடுத்தலையும் பாலுடன் அடிசில் உண்டலையும் காண்பானென்ருல்

அவற்றைப் பொறுக்காது அவரிடம் வடுவில்லையாகவும் உண்டாக்க வல்லனும்.

கயவர் தம்மை ஏதேனும் ஒரு துன்பமுற்றவிடத்து அதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு விரைவில் தம்மைப் பிறர்க்கு விற்றற்கு உரியர்; அதுவன்றி அவர் எத்தொழிலுக்கும் உரியாரல்லர்.

46. (அ) நடுக்கு அற்ற காட்சியவர், துளக்கு அற்ற காட்சியவர் — ஆகியோரின் செயல்களாக எவ்வெவ்வதிகாரங்களில் எவை எவை கூறப்பட்டன?

'நடுக்கம் இல்லாத தெளிவான அறிவையுடையோர் தாம் அடுக்கணிலேபட வந்தாலும் அதனைத் தீர்க்கும் பொருட்டு முன் செய்தவர்க்கு இளிவந்த செயல்களைச் செய்யார் என்று நடுக்கற்காட்சியவரின் செயலாக வினைத் தூய்மை அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

'நிலைபெற்ற அறிவினையுடையார் அரசனால் யாம் நன்கு மதிக்கப்பட்டோம் என்று கருதி அவன் விரும்பாதவற்றைச் செய்யார்' என்று துளக்கற்ற காட்சியவரின் இயல்பு மன்னரைச் சேர்ந்து ஒழுகல் என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

[ஆ] சொல்லின் தொகை அறிந்த தூய்மையவரைப் பற்றி எவ்வெவ்வதிகாரங்களில் என்னென்ன கூறப்பட்டுள்ளன?

சொல்லின் தொகையறிந்த தூய்மையவரைப்பற்றி அவை அறிதல் என்னும் அதிகாரத்தில், "சொல்லின் குழுவினை அறிந்த தூய்மையினையுடையார் தாம் ஒன்றினைக் கூறுமிடத்து அப்பொழுதை அவையினை அறிந்து அவைக்கண் சொல்லும காரியம் இது, சொல்லுமாறு இது, சொன்னால் அதன் முடிவு இது என்று ஆராய்ந்து சொல்லவேண்டும்". அவை அஞ்சாமை என்னும் அதிகாரத்தில், "கற்றுவல்ல அவை, அல்லாதார் அவை வகையினை அறிந்து, சொலலின் தொகையெல்லாம் அறிந்து தூய்மையினையுடையார், வல்லார், அவைக்கண் ஒன்றினைக் கூறுமிடத்து அச்சத்தால் வழுப்படுமாறு கூறார்" என்றும் கூறப்பட்டுள்ளது.

ஞாயிறு 7-3-76 அன்று.
புனித அந்தோனியார் [illegible] [illegible]
[illegible] [illegible] Father's Bungalow [illegible]
[illegible]. இரவு 2 மணிக்குத் [illegible]
திங்கள் 8-3-76 - நேராக [illegible] [illegible]
[illegible]

## OUR PUBLICATIC S

**Tamil Pulavar Preliminary & Final for Madras & Madurai Un[illegible]rsities**

| | Madras. | Madura. |
|---|---|---|
| முதனிலை | | |
| 1. செய்யுள் I [பேரிலக்கியம்] வினுவிடை | — | 7-00 |
| 2. செய்யுள் II [சிற்றிலக்கியம்] ,, | 7-00 | 7-00 |
| 3. தென்னிந்திய வரலாறு | 8-00 | 5-00 |
| 4. உரை நடை நூல் வினு விடை | 2-50 | 1-75 |
| 5. கட்டுரைத்திரட்டு [பொதுப் புத்தகம்] | [illegible]-00 | 5-00 |
| 6. தண்டியலங்காரம் வினு விடை | [illegible]-50 | 2-5[illegible] |
| 7. யாப்பருங்கல காரிகை ஷை | 2-50 | [illegible] |
| 8. நன்னூல் காண்டிகை உரை ஷை | 4-00 | 4-00 |
| 9. அகப் பொருள் விளக்கம் ஷை | 2-00 | 2-00 |
| 10. புறப் பொருள் வெண்பா மாலை ஷை | 2-50 | 2-50 |
| இறுதி நிலை | | |
| 1. செய்யுள் I [பேரிலக்கியம் வினுவிடை | 7-00 | 6-00 |
| 2. செய்யுள் II [சிற்றிலக்கியம்] Part I | 6-00 | 4-00 |
| ,, ,, Part II | 6-00 | 6-[illegible] |
| 3. மொழி இலக்கிய இலக்கண வரலாறு I | 6-00 | 3-00 |
| 4. மொழி இலக்கிய இலக்கண வரலாறு II | | 3-50 |
| 5. சாசனவழி காட்டி வினுவிடை | 2-50 | 3-[illegible] |
| 6. தொல்காப்பியம் பொருளதிகாரம் வினுவிடை — நச்சினார்க்கினியம் | [illegible] | — |
| 7. மாறன் அலங்காரம் வினுவிடை I & II Parts | | 4-00 |
| 8. தஞ்சைப் பெருவுடையார் கல்வெட்டு வினுவிடை | | 3-00 |
| 9. மதுரை B.A., XII தமிழ் செய்யுள் I | | 6-00 |
| 10. மதுரை B.A., XII தமிழ் செய்யுள் II | | 7-00 |
| 11. சென்னை B.A., XII தமிழ் செய்யுள் I | [illegible]-00 | |
| 12. சென்னை B.A., XII தமிழ் செய்யுள் II | 6-00 | |
| 13. History of Tamil Nadu & Culture | 6-00 | 6-00 |

* [புத்தகங்களின் விலை மாறக்[illegible]கூடியது]

KAIAT & [illegible] MADRAS-[illegible] (66[illegible]